

If you want more free e-Books
https://telegram.me/tamilbooksworld
Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

http://www.pustaka.co.in

# கங்காபுரிக் காவலன் பாகம் – 2

# Gangapuri Kavalan

# Part - 2

## Author:

கலைமாமணி விக்கிரமன்

## Kalaimamani Vikiraman

For more books

http://www.pustaka.co.in/home/author/vikaraman

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.

All other copyright © by Author.

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

47. உமக்கே அடைக்கலம்

48. வாழ்க பேரரசர்!

49. இராசராச விஜயம்

50. தந்தையும் மகனும்

51. பேரரசரின் அருளாசி

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

52. ஒரு சகாப்தம் முடிந்தது

53. நானா? வீரம்மாளா?

54. அரிந்தவன்தேவி தந்திரம்

55. சலனமும் சபதமும்

56. வீரமாதேவியின் சபதம்

57. சித்தரைத் தேடி....

58. கங்கை நீரும் கண்ணீரும்

59. கங்கைக் கரை நோக்கி...

60. சோழநாட்டில் கங்கை

61. ஏரியா? கோயிலா?

62. ஆதித்தன் என்ன செய்யப் போகிறான்?

63. வீரமாதேவி போகாதே நில்

64. ஓலையில் வந்த செய்தி

65. பயணத்தில் மாற்றம்

66. அதென்ன முடிவு?

67. சித்தரின் சித்தம்

68. பஞ்சவன்மாதேவி யாத்திரை

69. பிரிந்தவர் கூடியபோது

70. பெயரும் புகழும்

71. திறந்த விழிகளும் கலங்கிய விழிகளும்

72. மனித திட்டம் இறைவன் செயல்!

73. தீர்த்த யாத்திரையா? திடீர்ப் படையெடுப்பா?

74. மன்னனின் நோக்கமும் மாதேவியின் திட்டமும்

75. அரசியின் சீற்றம்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

76. வீரமாதேவியின் சிந்தனை அலைகள்

77. அரசரின் முடிவு?

78. கருவூராரின் கட்டளை

79. கங்கை வரும்

80. சித்தர் சிரித்தார்

81. நடத்த விடமாட்டேன்

82. கங்கை நீருடன்... புதுநகரம் புறப்பட்டார்

83. என்ன பெயர் இடுவது?

84. எனக்கு வேண்டாம் புகழ்

85. வீரமாதேவியின் எண்ண அலைகள்

86. இனி அங்கே எனக்கென்ன வேலை?

87. இறைவனின் சித்தம்

88. விருப்பு வெறுப்பற்றவன் விருப்பம்

89. இராசேந்திர சோழர் - வீரமாதேவி வாழ்க! வாழ்க!

## 47

# உமக்கே அடைக்கலம்

வீரம்மாளின் முகத்தில் தோன்றிய சினத்தைக் கண்டு இராசேந்திரன் ஒரு கணம் நடுங்கிவிட்டார். போர்க்களங்களில் பாய்ந்து வரும் குதிரைகளையும், துதிக்கையை மேல் தூக்கிப் பிளறிக் கொண்டு ஓடிவரும் யானைகளையும் கண்டெல்லாம் அஞ்சாத மாவீரன் வீரம்மாளின் விழிகளில் தோன்றிய மாறுதலைக் கண்டு நடுங்கினார்.

உள்ளத்தில் கொழுந்துவிட்ட காமவெறியால் அவளை அணைக்க நெருங்கிய இராசேந்திரன் நீட்டிய கரங்கள் நீட்டியவாறு திகைத்து நின்றார்.

வீரமாதேவி தஞ்சைக் கோட்டைக் காளியைப் போல் ஒரு கணம்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

காட்சியளித்தாள். தில்லையின் எல்லையில் உள்ள காளியாகத் தோன்றினாள். வாதாபி நகரத்தில் வெற்றி பெற்றுத் திரும்பியபோது கண்டு வணங்கிய நகரக் காவல் தெய்வமாம் வனதுர்க்கையைப் போல் எதிரே நின்றாள்.

ஒரு கணம் ஏதும் செய்யத் தோன்றாமல் ஆடாது அசையாது சிலைபோல் நிலைத்து நின்ற இராசேந்திரன் வீரமாதேவியிடம் சரண் அடைந்துவிட விரும்பினார்.

“இங்கிருந்து போய் விடுங்கள், இங்கிருந்து போய்விடுங்கள்” என்று வீரமாதேவி முணுமுணுத்தாள். கூவி ஆர்ப்பாட்டம் செய்யக்கூடிய நிலையின் முதல்படி: தன் விரதத்தைப் பங்கமடையச் செய்ய முயன்ற அரக்கனைச் சபிக்கும் முனிவரின் சீற்றம் அவளிடம் அப்போது குடிகொண்டது. அவள் உடலில் இப்போது நூறு பிடிகளின் வலிமை புதைந்து நின்றது. முழு வலிமையைச் செலுத்தி அணைத்துத் தனி தாபத்தைத் தீர்த்துக் கொள்ள முயன்ற அரசரை அந்தக் கணத்தில் தடுத்து நிறுத்தி நிலை குலைந்து தள்ளி விடுமளவுக்கு வலிமை அவளிடம் நிறைந்திருந்தது.

அவள் விழிகளில் ஆவேசத்தைக் கண்டார். ‘இங்கிருந்து போய்விடுங்கள்’ என்று பல்லைக் கடித்துக் கொண்டு அவள் மெல்லவே பேசினாலும் அந்தச் சொற்களில் கடுமை கலந்திருந்ததை அவர் உணர்ந்தார். அவள் இருகரங்களும் தற்காப்பு நிலையில் ஆயத்தமாக இருந்தன.

அவளுடைய நாட்டியத்தைத் தனிமையில் கண்டு பலமுறை ரசித்திருக்கிறார். நாட்டியத்தில் காதலை வெளிப்படுத்தும்போது அவளுடைய முகமும், கரங்களும், உடல் முழுமையும் அதன் அடையாளமாக இயங்கியதைக் கண்டு ரசித்திருக்கிறார்.

‘காதல் மடப்பிடியோடு களிறு வருவன கண்டேன்’ என்ற பதிகத்திற்கு அபிநயம் செய்தபோது அவள் விழிகளில், கரங்களில், நடையில் ஏற்பட்ட பாவங்களைக் கண்டு மகிழ்ந்திருக்கிறார்.

‘என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே திருவலஞ்சுழி வாணனை வாயாரப் பன்னி ஆதரித் தேத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே....’ என்று சம்பந்தப் பெருமான் கசிந்துருகி எவ்வாறு பாடியிருப்பாரோ, அதைப் புலப்படுத்தும் வகையில் தன்னையே போற்றிக் கொள்வது போல் உள்ளத்துணர்வை வெளிப்படுத்தப் புலப்படுத்திய பாவம் கண்டு வியந்திருக்கிறார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

ஒரு சமயம் தான் கண்டு மகிழ்ந்ததை இப்போது நினைத்துப் பார்க்கிறார். தலைவியிடம் கண்ட மன மாறுபாடுகளைக் கண்ட தோழி பாடுவது போன்ற கருத்தைக் கூறும் திருமங்கை மன்னரின் பதிகமான,

‘சிலையிலங்கு பொன் ஆழி’

திண்படைதண்(டு)ஒண்

சங்க மென் கின்றாளால்

மலையிலங்கு தோள் நான்கே

மற்றவனுக் கெற்றே

தான் என்கின்றாளால்

முலையிலங்கு பூம்பயலை

முன்போட அன்போடி

யிருக்கின்றாளால்

கலையிலங்கு மொழியாளர்

கண்ணபுரத்து அம்மானைக்

கண்டாள் கொல்லோ?’

என்ற பாடலைப் பாடி அபிநயித்தபோது வெளிப்படுத்தியதைப் பாராட்டி, பாட்டிலும் அவள் நடனத்திலும் மயங்கி அவளை அணைக்க முயன்றிருக்கிறார்.

சுந்தரருடைய பாடல் ஒன்றைப் பாடும்போது வீரம்மாளுக்கு ஏற்பட்ட பக்திப் பரவசமான குதூகலம் இன்னும் அவர் கண்முன் நிற்கிறது.

‘சிவபெருமானுடைய திருவடிகளில் அன்புடையவர்களே, அத்திருவடிகளுக்கு ஆளான தொண்டர்களுடைய பாததூளியில் முழுகுங்கள்’ என்று கோஷமிட்டவாறு அவள் குதூகலத்துடன் கூத்தாடிய காட்சியை அவரால் இன்றளவும் மறக்க முடியவில்லை.

ஆடுமின் அன்புடையீர்

அடிக்காட்பட்ட தூளி கொண்டு

சூடுமின் தொண்டர் உள்ளீர்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

உமரோடு எமர் சூழவந்து

வாடுமின் வாழ்க்கை தன்னை

வருந்தாமல் திருந்தச் சென்று

பாடுமின் பத்தர் உள்ளீர்

பழமண்ணிப் படிக்கரையே....

என்ற பாடல் அவர் செவிகளில் இப்போதும் ஒலிக்கிறது. இனிய குரல், இனிய நடனம், இனிய இளமை....

ஐயோ அந்த இளமைதானே என்னைத் தடுமாறச் செய்துவிட்டது!

ஒருநாள், முழுமதி நிறைந்த நாள். மாணிக்கவாசகரின் ஒரு பதிகத்தை அவள் பாடினாள்.

ஆகா, அந்தப் பாடலின் பொருள் உணர்ந்து அதை முக உணர்வுகள் மூலம் வெளிப்படுத்தி ஆடியபோது அவள் விழிகளிலும் கண்ணீர் கோத்து நின்றது.

‘இருந்து என்னை ஆண்டுகொள்

விற்றுக்கொள் ஒற்றிவை என்னின் அல்லார்

விருந்தினனேனை விடுதிகண்டாம்

மிக்க நஞ்சு அமுதா

அருந்தின னேமன்னும் உத்தரகோச

மங்கைக்கு அரசே

மருந்தினனேபிறவிப்பிணிபட்டு

மடங்கினர்க்கே....

கொடிய நஞ்சை அமுதாய்க் கொண்டவனே, உத்தரகோச மங்கையில் எழுந்தருளியுள்ள தலைவனே! பிறப்பெனும் பிணியில் சிக்கியிருப்பவருக்கு மருந்து ஆனவனே! என் எதிரே தோன்றி என்னை அடிமைப்படுத்திக் கொள். உன்னுடைய உடைமையாகக் கொண்டு என்னை ஏற்றுக் கொள். ஒத்தி வைத்துக் கொள். உன்னிடம் விருந்தினனாக வந்தவனைக் கைவிட்டு விடாதே-

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books




**Click Here to join our Telegram Group**

**For free eBooks, join us on Telegram**

**https://t.me/tamilbooksworld**

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

ஏன் - இந்தப் பதிகத்தில் தன்னைக் குறித்துப் பாடப்பட்டது என ஏன் கொள்ளக் கூடாது? அந்தப் பதிகத்தின் பொருளை ஒருமுறை நினைத்துப் பார்த்தார்.

வீரம்மா உன்னைக் கைவிடுவேனா?

வீரம்மா உன்னைக் கைவிட்டு உன்னை மறந்து சோழ அரியணையில் பட்டத்து அரசியுடன் வீற்றிருப்பேன் என்று நீ எண்ணிவிட்டாயா? வீரமாதேவியாக, ஓர் அரசியாகவே நீ வாழ்கிறாய், வீரமாதேவி! என் இனியவளே! என் உடலில் ஏற்பட்டுவிட்ட தாபத்தை நீ தணிக்காமல் வேறு யார் தணிப்பார்கள்? உன்னை அணுகாமல் வேறு யாரை அணுகுவேன்? இளமை ததும்பும் உன்னிடம் சுகம் காணாமல் முதுமையின் தலைவாசலுக்கு வந்துவிட்ட மற்ற இளவரசியரிடம் காண முடியுமா?

உனக்கும் அப்படித்தான் இருந்திருக்க வேண்டும். உன் உணர்வைப் புலப்படுத்த அந்தப் பதிகத்தைப் பாடியிருக்கலாம். உன் எதிரே தோன்றுமாறு நீ சிவபெருமானை அழைப்பது என்னை அழைப்பதாக உணர்கிறேன். உன்னை உடைமையாக்கிக் கொள்ளுமாறு கேட்கிறாயே? நீ என்றும் என் உடைமைதான்: நீ எனக்கே: எனக்குச் சொந்தம். சொந்தக்காரனின் ஆசையை நிறைவேற்றாமல் மறுக்கிறாயே, உனக்கே நியாயமா? வா வா, என் அருகே வா, தேவி!

இராசேந்திரன் இவற்றையெல்லாம் பேச நினைத்தார். வார்த்தைகள் வரவில்லை. ஒவ்வொரு கணமாகக் கழிகிறது. நீண்டிருந்த அவர் கரங்கள் தழையவில்லை. அவர் மெல்ல அடி எடுத்து வைத்தார். துணிவுடன் நகர்ந்தார். முன்னேறினார்.

வீரமாதேவி பின்னுக்கு நகர்ந்தாள். என்றாலும் இராசேந்திரன் கரங்கள் அவள் தோளை நெருங்கின.

வீரம்மாள் அந்தக் கரங்களை வேகமாக விலக்கினாள். இமைக்கும் நேரத்தில் இராசேந்திரனை நெருங்க விடாமல் தள்ளினாள்.

கம்பீரமான தோற்றமுடைய அந்த மாமன்னன் தடுமாறினார். போர்க்களத்தில் உறுதியுடன் அஞ்சாமல் நின்று வாளைச் சுழற்றிய வேங்கை இப்போது திகைத்துத் தடுமாறியது.

வீரமாதேவிக்கு இவ்வளவு பலம் எப்படி வந்தது? அல்லது என் வலிமைதான் சரிந்துவிட்டதா? இதுவரை, பெண் அழகுக்கு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அடிமையாகாத நான், என் உயர் குணத்திலிருந்து சற்று நழுவிவிட்டேனா?

அல்லது வீரமாதேவி தன் உறுதியான கொள்கையால் மேருபோல் வலிமை கொண்டுவிட்டாளா?

தன் பெண்மையைக் காத்துக் கொள்ள ஆயிரம் யானைச் சக்தியைப் பெற்று விட்டாளா? இணங்காதவளை இணங்க வைக்க நான் எடுக்கும் முயற்சி தவறா?

“வீரம்மா....” இராசேந்திரன் கூவினார்.

விடியச் சிறிது நேரமே இருக்கும் அந்த அமைதியான வேளையில் அவருடைய குரல் அவர்கள் தங்கியிருந்த அறையில் எதிரொலித்தது. வெளியேயும் பரவி இருக்க வேண்டும்.

அருகே இருந்த சோலையிலிருந்து திடீரெனத் துயில் கலைந்த பறவைகள் சடசடவெனச் சிறகுகளை அடித்துக் கொண்டு பறந்தன. திரைச் சீலைகூட நடுங்கி ஒரு கணம் அசையாது நின்றது.

அறையிலிருந்து தூண்டா விளக்கு எண்ணெய் இல்லாததால் அணைந்திருந்தது. மேற்கே மறையவிருந்த சந்திரனின் மங்கின நிலவொளி அந்த அறையில் நுழையலாமா வேண்டாமா என்பதுபோல் எட்டிப் பார்த்தது.

அடுத்து அங்கே என்ன நேரப்போகிறது என்று ஆவலுடன் எதிர்பார்த்து, அறையின் சுற்றுச் சுவர்களும் சித்திரக் கதவுகளும் சிங்காரச் சாளரங்களும் ஜடமாக இருந்தாலும் உயிர் பெற்றுக் காத்திருந்தன.

காலை இளங்காற்று காலதர் வழியே அறைக்குள் அச்சத்துடன் மெல்ல நுழைந்தது.

‘தஞ்சைப் பெரிய கோயிலின் கால அறிவிப்பு வட்டிலிலிருந்து எழுந்த மணி ஓசை எங்கும் எதிரொலித்தது.

மாளிகைக்கு அருகே இருந்த தேவாரப் பாடசாலை மாணவர்கள் விழித்து எழுந்து விட்டனர். அவர்கள் பாடும் திருவாசகப் பாடல் அமைதியான அந்த வேளையில் தெளிவாகக் கேட்டது.

யானே பொய் என் நெஞ்சும் பொய்

என் அன்பும் பொய்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

ஆனால் வினையேன் அழுதால்

உன்னைப் பெறலாமே

தேனே அமுதே கரும்பின்

தெளிவே தித்திக்கும்

மானே அருளாய் அடியேன்

உனைவந்து உறுமாறே

தமிழ் வேதம் பயிலும் மாணவர்கள் இணைந்து பாடும் திருவாசகப் பாடல் தெளிவாகக் கேட்டது.

பாடலின் கருப்பொருள் இராசேந்திரன், வீரமாதேவி இருவர் இதயத்திலும் எதிரொலித்தது.

‘அப்படியா? அப்படியா? நான் என்பதே பொய்யா? என் ஒழுக்கமும் பொய்யா? என் நெஞ்சமும் வஞ்சகமானதா? என் அன்பும் போலியானதா? ஐயோ, நான் இப்போது என்ன செய்வேன்! மாணிக்கவாசகர் சொல்வது போல் அழுதால்தான் உன்னைப் பெற முடியும் என்றால் அழுகிறேன், வீரம்மா, நான் அழுது அழுதுக் கண்ணீர் சிந்துகிறேன். மாவீரன் அழலாமா? சோழ மண்டலாதிபன் அழலாமா? உலகின் மாபெரும் சக்கரவர்த்தியான இராசகேசரி இராசராச சோழ தேவரின் திருக்கரத்தால் மகுடம் சூட்டப்பட்ட பரகேசரி இராசேந்திர சோழனாகிய நான், பண்டித சோழனாகிய நான் அழுவதா? சீச்சீ, என்ன செய்கை செய்யத் துணிந்து விட்டேன்? என்ன தவறு? இதுவரையில் நான் அவளிடம் கொண்டிருந்த அன்பு போலியானதன்று: நெஞ்சத்தில் வஞ்சகமில்லை. நான் மெய் ஒழுக்கமுடையவன் என்பதை மெய்ப்பிக்க இதயத்தை உடைத்துக் கதறிக் கதறி அழுவது ஒன்றே மருந்து.

சிவபெருமான் தேனும் அமுதமும் கருப்பஞ்சாறும் போன்றவர் என்று மாணிக்கவாசகர் சொல்கிறார். அடியார்கள் மனத்தில் இனிக்கின்ற பெருமான் என்று பகர்கிறார். வீரமாதேவியின் காதலுக்கு நான் அடிமை. காதல் அடிமையான நான் உன்னிடம் சேரவேண்டும் என்றால் மனம் விட்டு நான் அழவேண்டும் - அப்படித்தானே?

”வீரம்மா! என்று கூவிய இராசேந்திரன் இதய ஒலி எட்டுத் திக்கும் ஒலித்தது.

ஐயோ – அவர் என்ன செய்யத் துணிந்து விட்டார்? அவர் செய்ய

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

முற்பட்டிருக்கும் செயலை நான் உணர்ந்து விட்டேன். வீரமாதேவி பதறினாள்.

“சுவாமி, சக்கரவர்த்தி, என்னை ஆண்டவனே” என்று பரபரப்புடன் வீரமாதேவி குரல் கொடுத்தாள்.

இராசேந்திரனை முந்திக் கொண்டு அவரது திருப்பாதத்தில் நெடுஞ்சாண் கிடையாக வீழ்ந்தாள். பாதத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். அவர் சேவடியைக் கண்ணீரால் அவள் நனைத்தாள்.

இராசேந்திரன் எதிர்பார்க்கவில்லை. அவள் அப்படிச் செய்வாள் என்று.

சற்றும் எதிர்பாராத இந்த நிகழ்ச்சியால் நெகிழ்ந்து போன இராசேந்திரன் வீரமாதேவியைத் தூக்கி நிறுத்தி அணைத்துக் கொண்டார்.

எந்த அணைப்பிற்காக அவர் சற்று முன்பு ஏங்கினாரோ அந்த அணைப்பு இப்போது நேர்ந்துவிட்டது.

அவளுடைய கண்ணீர் மாலைகள் அவர்கள் தோளை நனைத்தன. அவரது நெடிய கரம் இரண்டும் மாறி மாறி அவள் தோள் தொட்டு, பின் இடைவரைத் ‘தட்டிக் கொடுத்தன. இருவரின் மெய்ச் சிலிர்ப்புகளும் ஒன்றோடொன்று சிரித்துப் பேசிக் கொண்டன. நாம் நெருங்கி விட்டோமா என்று கேட்டுக் கொண்டன.

“என் பிழையைப் பொறுத்துக் கொள்ளுங்கள். என் தவறான செயலுக்கு ஏதும் தண்டனை தராது ஏற்றுக் கொள்ளுங்கள்”– விம்மியவாறு வீரமாதேவி பேசினாள். பேசும்போது விரிந்து சுருங்கும் அவள் இதழ்கள் அவரது இடப் புஜத்தில் ஓவியம் வரைந்தன.

“என் ஆருயிர் தலைவனே! என் உடல் பொருள் ஆவியை தங்களுக்கு அர்ப்பணிக்கவே நான் வாழ்கிறேன். உடல் என்பது அழியக் கூடியது என்பதைத் தாங்கள் அறிய மாட்டீர்களா? அழியாத ஆத்மாவாகிய மெய்ப்பொருளைத் தங்களைத் தவிர வேறு யாரிடம் நான் அர்ப்பணிக்க முடியும்? மோகத்தின் அடிப்படையில் பொங்கி வரும் ஆசையை நான் வெறுத்தே ஓர் உறுதி எடுத்தேன். அந்த உறுதியை, சபதத்தை உயிருள்ள வரையில் கடைப்பிடிக்கவே விரும்பினேன்! தாங்களும் அதை முழுமனத்துடன் ஆதரித்தீர்கள். ஆனால் ஏனோ இன்று அந்தத் தவத்தைக் குலைக்க முடிவெடுத்தீர்கள்…” விம்மலும், வார்த்தையும் மாறி மாறி வந்ததால் அவளைச் சமாதானப்படுத்த விரும்பி

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

இராசேந்திரன் அவள் முதுகைத் தட்டிக் கொடுத்தார். சிறிது நேரம் அங்கே விம்மலின் ஒலி மட்டுமே கேட்டது.

வீரமாதேவி தொடர்ந்தாள். “ஏனோ இன்று தங்கள் தூய மனத்தில் காமதேவன் குடிபுகுந்தான்… சிவனின் உறுதியைக் குலைத்தவன் அவன்”.

இராசேந்திரன் மெல்ல நகைத்து, மஞ்சத்தில் அமர்ந்து அவளையும் தன் அருகே உட்கார வைத்துச் சிறு குழந்தையைப் போல் அரவணைத்து,“அதற்கு நீதான் காரணம் வீரமாதேவி” என்றார்.

“நானா?”

“உயிர் பெற்ற ரதி ஓவியம்போல் நீ என் எதிரே நின்றாய். தஞ்சைப் பெருவுடையார்க் கோயில் சித்திரத்திலே அழகிய மங்கை ஆடுவதுபோன்ற ஓவியத்தைப் பார்த்திருக்கிறாயா? அந்த ஓவியத்தை வரைந்த ஓவியன் மனித உணர்வைத் தூண்டும் வகையில் வண்ணங்களைக் குழைத்துத் தீட்டியிருக்கிறானே பார்த்தாயா? ஒவ்வொரு முறையும் நான் அந்தச் சித்திரத்தைப் பார்த்து வியப்பேன். அந்த ஆடலணங்கு உயிர் பெற்று என் முன் நிற்பதைப் போல் நீ தோன்றினாய். பேசாப் பொற்சித்திரத்தின் எதிரே என் உறுதி தவிடு பொடியாகியது. அழகும், அறிவும், கலைச் சிறப்பும் ஒருங்கே அமையப் பெற்ற நீ ஆண் குழந்தையை உன் மணிவயிற்றில் வைத்துப் பத்து மாதங்கள் காப்பாற்றி, சோழ நாட்டிற்கு அளித்தால் எவ்வளவு சிறப்பாக இருக்கும் என்று நான் கற்பனை செய்து கொண்டேன். என் நியாயமான ஆசைக்கு நீ ஒப்புதல் அளிப்பாய்: இணங்குவாய் என்று எண்ணினேன்…”

அவர் தன் பேச்சை முடிக்கவில்லை. “சக்கரவர்த்தி அவர்களே! நான் அறியாமை மிகுந்த பெண். சோழநாட்டின் அரசு உரிமையைத் தொடர்ந்து ஏற்க வீர வாரிசுகளைத் தாங்கள் முன்பே பெற்றிருக்கிறீர்கள். தங்கள் திருக் குமாரர்கள் தங்களைப் போன்று கலை, வீரம் அனைத்தும் நிரம்பப் பெற்றவர்கள். அப்படியிருக்கும் போது மற்றொரு வாரிசுக்கு அவசியமே இல்லை. பேரரசர் அவர்களே! இந்த அறிவிலி சொல்வதில் தவறிருந்தால் பொறுத்தருளுங்கள். என் வயிற்றில் உதிக்கும் செல்வக் குமரனுக்குச் சோழ நாட்டு வாரிசு உரிமை கிடைக்கும் என்பது என்ன உறுதி? தங்கள் திருக்குமாரருடைய வாரிசு தான் சோழ நாட்டின் அரசராக வேண்டும் என்பது தாங்கள் அறியாததா?” என்றாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

இராசேந்திரன் அவள் முகத்தை நிமிர்த்தி,“வீரமாதேவி! உன் கவலை நியாயமானதே. எந்த ஓர் அரசகுல மங்கையும் தன் மகன்தான் அரியணை ஏற வேண்டும் என்று ஆசைப்படுவாள். இறைவனின் திரு உள்ளம் என்று ஒன்றுண்டு. விதி என்றும் ஒன்றிருக்கிறது. அவற்றின் மீது திடமான நம்பிக்கை உடையவன். நான் கற்ற பல சாத்திரங்களுள் சோதிட சாத்திரமும் ஒன்று. சோதிட சாத்திரத்துடன் வான சாத்திரமும் நான் அறிவேன். இரண்டும் பிரிக்க முடியாதவை. என் அருமை வீரமாதேவியே! இதுவரை என் பட்டத்து அரசியிடம் சொல்லாத ஓர் உண்மையை உன்னிடம் சொல்லும் தருணம் வந்துவிட்டது. என் தந்தை இராசகேசரி இராச ராச சோழ தேவர் இன்னும் சில நாள்களுக்குத்தான் ஜீவியவந்தராய் இருப்பார். ஒருவருடைய ஆயுள் காலத்தைப் பற்றி மற்றவரிடம் சொல்லக்கூடாது என்று சோதிடக் கலை கூறுகிறது. ஆனால் நான் துல்லியமாகக் கணக்கிட்டு வைத்துள்ளேன்...”

இராசேந்திரன் இவ்வாறு சொன்ன போது வீரமாதேவி குறுக்கிட்டு,“என்னைச் சந்திப்பது பற்றியும் என்னை ஏற்றுக் கொள்வது பற்றியும் தாங்கள் முன்னமே அறிவீர்களா?” என்று கேட்டாள். இப்போது அவருடைய அணைப்பிலிருந்து மெல்லத் தன்னை விடுவித்துக் கொண்டாள்.

இராசேந்திரன் மெல்ல நகைத்து,“பல்வேறு காரணங்களுக்காகப் பல பெண்களின் தொடர்பும், பல தாரங்களை மணந்து கொள்வதும் அரசர் குலத்துக்கு இயற்கை வகுத்த சட்டம். ஆனால், என் மனத்துக்கு மிகவும் ஏற்ற ஒருத்தி எனக்கு அமைவாள் என்பதை நான் கணித்து அறிந்திருக்கிறேன்” என்றார்.

“ஓ! இதற்கெல்லாம்கூட தங்களுக்கு நேரம் காலம் இருக்கிறதா? சோதிட சாத்திரப்படி நடப்பவரா தாங்கள்?” குறும்புத் தனம் மிளிரக் கேட்டாள், வீரமாதேவி!

“பயணம் செல்லும்போது, ஓய்வு எடுக்கும்போது மனத்திலேயே கிரகங்களின் சஞ்சாரங்களைக் கணக்கிடும்போது, இரவில் தெளிந்திருக்கும் வானத்தில் ஏற்படும் கோள்களின் மாறுதலை உன்னிப்பாகக் கவனிப்பேன். என் மனத்துக்குகந்தவள் அமைவாள்: அவளால் எனக்குப் பேரும் புகழும் ஏற்படும் என்பதை அறிந்தேன். அதனால் எப்போதும் சோதிடம் பார்த்தே நடப்பவன் என்பது பொருளன்று” என்றார், இராசேந்திரன்.

“அப்படியா? அந்த மங்கை நல்லாள் வயிற்றுதிக்கும் செல்வன்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சோழநாட்டின் வாரிசாக அமைவான் என்பதையும் அறிந்தீர்களா? ஒருவேளை செல்வன் உதிக்காமல் செல்வி பிறந்துவிட்டால்...?"

வீரமாதேவியின் இந்தக் கேள்விக்கு உடனே மறுமொழி கூற அவரால் இயலவில்லை.

அவர் மறுமொழி கூற எடுத்துக் கொண்ட சில கண நேரத்தை, சிறு இடைவெளியைப் பயன்படுத்தி,"ஒருவேளை அந்த வாரிசு உருவாகாமலே போனால்.... அல்லது என் சபதத்தால் நான் வீரமகனைப் பெற்றுத் தர இயலாததால் வேறு ஒருத்தி தங்கள் கோரிக்கையை நிறைவேற்றக் கூடுமல்லவா?" என்று கேட்டாள், வீரமாதேவி.

இராசேந்திரன் அவள் கேட்டதைக் கவனிக்காதவர் போல்,"இறைவன் வகுத்த விதியை யாராலும் மாற்ற இயலாது என்பதை நான் அறிவேன். விதியை மதியால் வெல்லலாம் என்பதன் பொருள், விதியை உணர்ந்து அதன்படி நடப்பதே" என்றார்.

"பட்டத்தரசியிடம் தெரிவிக்காத ஓர் உண்மையை என்னிடம் சொல்வதாகக் கூறினீர்களே?"– வீரமாதேவி தூண்டினாள்.

"தேவி, இன்னும் இருபத்தைந்து அல்லது முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு சோழ நாட்டிற்குக் கடுமையான சோதனைக் காலம் ஏற்படப் போகிறது. அந்தப் போதில் சோழநாட்டைக் காப்பாற்ற மெய்யான வாரிசு தேவைப்படும். அப்போது வீரமாதேவி பெற்றெடுக்கும் செல்வன் நாட்டைக் காப்பாற்றுவான். அந்த எண்ணத்தில்தான் நான் உன்னை நெருங்கினேன்".

இராசேந்திரன் சொல்லி நிறுத்தியபோது வீரமாதேவி குலுங்கக் குலுங்கச் சிரித்தாள். சற்று முன்பு விம்மி விம்மி அழுத வீரமாதேவியா குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கிறாள்? என்று வியப்புடன் அவள் செழுமையான கன்னத்தை மெல்ல வருடிய இராசேந்திரன்,"தேவி! எதற்காக இப்படிச் சிரிக்கிறாய்?" என்று கேட்டார்.

"அதுவா....? சட்டத்திற்குச் சம்மதம் தெரிவித்தவரே உடைக்கச் சொல்கிறாரே என்றுதான்...."என்று கூறியவள், எழுந்து நின்று,"சுவாமி, என்னைப் பொறுத்தருளுங்கள். இந்த எளியவள் மீது காதல் கொண்டு, ஏற்று, கலைச் செல்வியாக்கி, அரச குடும்பத்தில் ஒருத்தியாக்கி, கானகத்தில் கலைக்கூடம் அமைக்கத் திட்டமிட்டு அங்கே நான் தங்கியிருந்து கலைக்கோயில் அமைக்க வாய்ப்பளித்தீர்கள். திடீரென்று

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

என்மீது தங்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. அதனால் சிற்பியின் மீதே தங்களுக்கு ஐயம் ஏற்பட்டது. சந்தேகம் நீங்கியதோ இல்லையோ நான் அறியேன். இப்போது என் உறுதிப்பாட்டைக் குலைக்க முயல்கிறீர்கள். சுவாமி, நான் தங்களிடம் அடைக்கலம். என்னைக் காப்பது தங்கள் கடமை. என் உடல் தங்களுக்கே. நான் என்றுமே தங்களைத் தவிர வேறு ஒருவரையும் கண்ணால்கூடப் பார்க்க மாட்டேன். கருத்தாலும் நினைக்க மாட்டேன்.

“தாயின் மடியில் இருக்கும் சிறு குழந்தை தனக்கு வேண்டியதைத் தாய் செய்வாள் என்றுதானே நினைக்கும்? எனக்கு வேண்டியதை, தாங்கள் விரும்பியதை தாங்களே ஏற்றுச் செய்யுங்கள்” என்று கூறும்போது அவள் குரல் தழுதழுத்தது.

கீழ்வானத்து ‘இரசவாதத்தால்’ வண்ணப் பூக்கள் மலரத் தொடங்கி விட்டன. வீரமாதேவி எழுந்து நின்று ஆடையைச் சரி செய்து கொண்டாள். இராசேந்திரரின் பாதம் தொட்டாள்.

பாடி ஆட வேண்டும் என்று தோன்றியது. இனிய குரலில் பாடினாள். ஆடிக் கொண்டே பாடினாள்.

“உம்கையிற் பிள்ளை உனக்கே

அடைக்கலமென்று

அங்கு அப்பழஞ்சொல் எம் அச்சத்தால்

எங்கள் பெருமான் உனக்கு

ஒன்று உரைப்போம் கேள்:

எம் கொங்கை நின் அல்லால் வேறு தோள் சேரற்க

எம்கை உனக்கு அல்லாது எப்பணியும் செய்யற்க

கங்குல் பகல் எம் கண் மற்றொன்றும் காணற்க

இங்கு இப்பரிசே எமக்கு எங்கோன்!”

இதுவரையில் காணாத புது ஒளி அவள் முகத்தில் ஒளிர்ந்தது. கீதம் இனிய குயிலின் குரலை அவள் குரல் வென்றது. கரங்களும், பாதங்களும், இடையும், விழியும் பாடலின் பொருளை உணர்த்த விரைந்து இயங்கின. அவள் எடுத்து வைத்த ஒவ்வோர் அடியும் பொருள் உணர்த்தின.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அறையின் வெளியே மத்தளம் முழங்கியது. வீணையும் குழலும் ஒலித்தன.

அரசரைப் பல்லாண்டு பாடி பள்ளி எழுப்ப கீதமிசைப்பவர்கள் வந்து நின்றிருந்தனர். அறையின் உள்ளேயிருந்து எழுந்த வீரமாதேவியின் பாடல் கேட்டு, அதற்கேற்ப வாத்தியக் கருவிகளை இசைத்து, அரசரை மகிழ்விக்க முயன்றனர்.

பொழுது புலர்ந்துவிட்டது அறிந்து வீரமாதேவியும், இராசேந்திரனும் திகைத்தனர்.கதவின் தாள் திறக்கும் முன்பு இராசேந்திரன், வீரமாதேவியை அணைத்துக் கொண்டார்.

"என் ஆருயிரே! உன் சபதத்தைக் குலைக்க மாட்டேன். எனக்குப் பிறகு சோழ நாட்டிற்கு நீதான் வாரிசு! என்று சொல்லி அவள் உச்சி முகர்ந்து, கன்னம் தடவி, கரங்களை எடுத்துத் தன் விழிகளில் சேர்த்தார்.

கீழே குதிரை மீதிருந்து இறங்கிய வீரர்கள் மிக வேகமாக அரசர் இருப்பிடம் நோக்கித் தாவி வந்தனர்.

இராசராச சோழர் உடல்நிலை திடீரென்று கவலைக்கிடமாகி விட்டது என்ற செய்தியைத் தெரிவிக்க அவர்கள் ஓடி வந்தனர்.

# 48

# வாழ்க பேரரசர்!

தஞ்சைப் பெருநகர் பரபரப்பு மிகுந்து காணப்பட்டது. அந்தப் பரபரப்பில் மகிழ்ச்சி காணப்படவில்லை

சந்திக்கும் மக்கள் ஒருவரோடொருவர் மெல்லிய குரலில் பேசிக் கொண்டனர்.

பெண்கள் தங்கள் அண்டை வீட்டுப் பெண்ணோடு பேசும்போது, எதிர்வீட்டிலிருப்பவரும் வந்து சேர்ந்தனர்.

குழந்தைகள் வீதிகளில் புழுதியில் விளையாடாமல், பேசிக் கொண்டிருக்கும் தங்கள் தாயின் முகத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்தனர்.

தஞ்சை அரச வீதியில் இரட்டைக் குதிரை பூட்டிய ரதங்கள் மாளிகையை நோக்கி விரைந்து கொண்டிருந்தன. அவற்றினின்று எழுந்த புழுதி

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தணியாமல் வானத்தில் மேகங்களை எட்டிக் கொண்டிருந்தன.

“நம் சக்கரவர்த்திக்குத் திடீரென்று உடல் நலம் சரியாய் இல்லையாமே?”

“இரண்டு நாள்களாக விழிக்காமல் படுத்துக் கொண்டிருக்கிறார்” என்ற உரையாடல்கள் எங்கும் மெல்ல எழுந்தன.

அரசருடைய உரிமை மகளிர் வாழ்ந்த பகுதிகளான வேளத்தில் உள்ளவர்கள் கவலை நிறைந்தவர்களாகக் காணப்பட்டனர்.

மூதாட்டியும், நடுத்தர வயதுப் பெண்டிரும் கண்ணீர் மல்கக் குரல் தழுதழுக்கப் பேசிக் கொண்டனர்.

அவர்களுக்குப் பணியாளர்கள் ஏதும் பணி செய்வதறியாது தூண்கள் அருகே நின்று கொண்டிருந்தனர். சுந்தர சோழ விண்ணகர ஆதுரச் சாலையிலிருந்து மருத்துவர்கள், மாளிகையை நோக்கி விரைந்தனர். பச்சிலைச் சாற்றைக், கலயத்திலிட்டு வேறு சில மூலிகைகளுடன் சேர்த்துக் கலக்கிக் கொண்டிருந்தனர்.

திடீரென அங்கே பரபரப்புக் காணப்பட்டது. கருவூர்த் தேவர் வருகிறார் என்ற செய்தி பரவியது.

வெண்தாடியுடன், வெண்ணிற ஆடையை முழங்கால் வரையில் உடுத்தியிருக்க அந்த முதுமைப் பிராயத்திலும் கம்பீரமாக ஆதூர சாலைக்குள் நுழைந்த கருவூர்த் தேவர், தலைமை மருத்துவரை அழைத்து ஏதோ கூறினார்.

ஆதுரச் சாலைப் பணியாட்கள், பெருவுடையார் கோயிலை அடுத்து இருக்கும் நந்தவனத்திற்கு விரைந்தனர்.

தேடிச் சென்ற மூலிகைக் கொடி உடனே கிடைத்து விட, அதைக் கருவூர்த் தேவரிடம் கொண்டு கொடுத்தனர்.

“இராசராசன் உயிருக்கு இன்று ஆபத்து இல்லை! என்று அவர் முணு முணுத்தார்.

“இன்னும் இந்த உயிர்க் காக்கும் கொடியைத் தேடிக் கொண்டு வாருங்கள்! என்று கூறி கருவூர்த் தேவர் மாளிகையை நோக்கி விரைந்தார்.

மாளிகையின் உள்ளும் வெளியும் அதிகாரிகளும், பெருந்தலைவர்களும் கூடியிருந்தனர்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சக்கரவர்த்தியின் உடல்நிலை குறித்து, தவறான செய்திகள் பரவாமலிருக்க, மாளிகையின் வெளியே மூத்த அதிகாரி கிருஷ்ணன் ராமன் மேடை ஒன்றின் மீது ஏறி நின்று, அரசர் உடல்நிலை குறித்து அவ்வப்போது தெரிவித்துக் கொண்டிருந்தார்.

“இவர் யார், அண்மையில் நாம் இவரை வெளியே எங்கும் காணவில்லையே? என்று இளைஞர் ஒருவர் கேட்டார்.

அவன் அருகே நின்று கொண்டிருந்த பெரியவர்,“தம்பி! இவர்தான் சோழ நாட்டின் படைத்தளபதியாக இருந்தவர். சோழர்களின் வெற்றிகள் பலவற்றிற்கு இவர்தான் காரணம். சக்கரவர்த்தி இராசராசர் அன்பை மிகவும் பெற்றவர்” என்று கூறினார்.

“ஓ…. தளர்ந்து போன வயதானவர்கள் படைத்தலைவராக இருந்தால் இளைஞர்களின் திறமைக்கு வாய்ப்பளிப்பது எப்படி?” என்று அவன் அருகே இருந்த மற்றொரு இளைஞன் கேட்டான்.

“தம்பி, அப்படிச் சொல்லாதே. சோழர்ப் படைகளுக்குப் பல தலைவர்கள் உள்ளனர். கிருஷ்ணன் ராமன் உன்னைப் போல் இளைஞனாக இருக்கும்போது தான் படையில் சேர்ந்தார். திறமையால், உண்மையான உழைப்பால் உயர்ந்தார். அதனால்தான் சக்கரவர்த்தி இவரைத் தன் நம்பிக்கைக்கும் உரிய பொறுப்பான பதவியை அளித்துள்ளார். திருமந்திர ஓலை நாயகம் இவர்தான்!

முதியவர் கூறியதைக் கேட்டுத் திருப்தி அடைந்தவனாக இளைஞன் அங்கிருந்து மெல்ல நகர்ந்தான்.

மாளிகைக்குள்ளே செல்லத் தகுதியுடையவர்கள் உரிமையுடையவர்கள் ஒவ்வொருவராக வரத் தொடங்கினர். வெளியேயுள்ள திறந்த வெளியில் கூடி இருந்தவர்கள், வருபவரை ஒவ்வொருவராக அடையாளங் கண்டு வாழ்க வாழ்க என்று கோஷமிட முயன்றனர். அவ்வாறு வாழ்க ஒலி எழுப்புபவர்களைப் பார்த்து,“தம்பிகளா! வாழ்த்தொலி எழுப்பி மகிழ்ச்சியைத் தெரிவிப்பதற்கு ஏற்ற சமயமா இது? அமைதியாக இருங்கள். மௌனமாக இருங்கள். ஆடவல்லானை மனத்திற்குள்ளே தொழுது பிரார்த்தனை செய்யுங்கள். மனத்திற்குள்ளே சொல்லிக் கொள்ளுங்கள். உதடுகள் மெல்ல அசையட்டும். பட்டமேறியுள்ள எங்கள் பேரரசர் இராசேந்திர சோழ சக்கரவர்த்திக்கு உதவியாக இன்னும் பல ஆண்டுகள் ஜீவித்து இருங்கள் என்று பிரார்த்தனை செய்யுங்கள். எங்கள் அரசியார் சக்தி விடங்கன் தேவியார் கழுத்தில் துலங்கும் பொற்றாலிக்கு எந்தப் பங்கமும் வரக்கூடாது என்று இறைவனை வேண்டுதல்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

செய்யுங்கள்!” என்று உணர்ச்சி வயப்பட்டுக் கூறினார் ஒருவர். அமைதி நிலவியது.

மலையமானும், கொடும்பார் வேளிரும், சம்புவரையரும், நடுக்காட்டுக் காவல் பெருந்தலைவரும், கொங்கு வேளிரும் விரைந்து வந்ததைக் கண்ட மக்கள் “பேரரசர் வாழ்க்! சக்கரவர்த்தி இராசராசர் வாழ்க, வாழ்க்!” என்று குரல் எழுப்பினர்.

முண்டாசு கட்டி, கழுத்தில் மணி மாலைகள் அணிந்து, மேலே பட்டாடை போர்த்திய புலவர் ஒருவர் மக்கள் கூட்டத்தை விலக்கிக் கொண்டு வந்து, உரத்த குரலில் “ஐயா! எங்கள் மாமன்னரின் உடல்நிலை இப்போது எவ்வாறு உள்ளது? கந்தவேள்போல் அழகான எங்கள் பேரரசர், உடல் மெலிந்து பிரண்டைக் கொடிபோல் கிடப்பதாக அறிகிறேன். தமிழ் மொழியின் காப்பாளராக விளங்கிய எங்கள் பேரரசர் தமிழ்த் தாயின் அருந்தவத் திருமகனார் புலவர்களை அழைத்துப் பாராட்டாத நாளே இல்லை. கடந்த ஒரு திங்களாக பேரரசரைச் சந்திக்க இயலாமல் இருந்ததே வாழ்க்கையில் ஒளி குன்றியது போலிருந்தது” என்று கூறிய புலவர், உரத்த குரலில்,“எங்கள் சக்கரவர்த்தி இராசகேசரி இராசராச சோழ தேவரைப் போல் இனி இந்த உலகில் பேரரசர் ஒருவர் தோன்றுதல் இயலுமோ!

”திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்

தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளக்

காந்தர்ச் சாலைகல மறுத்தருளி

தடிகை பாடியும்

நுளம்பபாடியும்

குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும்

முரட்டொழிற் சிங்கள ரீழமண்டலமும்

இரட்டபாடி யேழரை யிலக்கமும்

முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும்

திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட தன்

எழில் வளருழியு ளெல்லா யாண்டுஞ்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தொழுதக விளங்கும் யாண்டே

செழியரைத் தேசுகொள் ஸ்ரீகோராச கேசரி வன்மரான

உடையார் ஸ்ரீராச ராச தேவர்.... வாழ்க, வாழ்கவே!"

புலவர் உணர்ச்சிப் பெருக்கால் இராசராசன் புகழ் பாடிக் கொண்டு போகும் போது அவர் தோளின் மீது ஒரு கரம் பதிந்தது.

"புலவரே! சற்று அமைதியாய் இருங்கள், என்றார்! கம்பீரமான அந்த உருவத்துக்கு உடையவர்.

"ஏன், ஏன்? என் உள்ளத்தில் பொங்கி வரும் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அதனால் சக்கரவர்த்தியின் புகழ்ப் பரணி பாடுகிறேன்" என்று கூறி அவர் கரத்தைத் தள்ளினார்.

"ஆமாம் ஐயா – சக்கரவர்த்தியின் பெருமையை, புகழைப் பாடியவர்களே புலவர்கள்தாமே? அவர்கள் வழி வந்த இந்தப் புலவரை ஏன் தடுக்கிறீர்கள்? அரசர் வாழ்க! அரசர் வாழ்க!" என்று வாழ்த்தொலி கூற, அந்தக் குரல் வானை எட்டினால் ஒருவேளை இறைவன் மனங்குளிர்ந்து, அரசரைக் காப்பாற்ற ஓடிவரலாம்!" என்றார் அருகிருந்த ஒருவர்.

'ஆமாம், ஆமாம். சக்கரவர்த்திகளின் பெருமையைப் பேசுவதைத் தடுக்காதீர்கள்' என்று கூடியிருந்த மக்கள் குரல் எழுப்பினர்.

"புலவரைத் தடுக்கவில்லை, ஐயன்மீர்! தன்னுடைய சொந்தக் கவிதை நயம்போல் பாடுகிறாரே! இது சக்கரவர்த்தியின் மெய்க்கீர்த்தி ஐயா!" என்றார் கம்பீரத் தோற்றமுடைய அதிகாரி. அவர் பேச்சு எடுபடவில்லை.

"அமைதி! அமைதி...! என்று கிருஷ்ணன் ராமன் கையசைத்துப் பலனில்லை.

திடீரென மாளிகை மேல் மாடத்திலிருந்து முரசு அதிர்ந்தது.

முரசு அதிர்ந்தால் முக்கியமானவர் மாளிகைக்கு வருகிறார் என்று அடையாளம்.

சில நொடிகளில் கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது. சேவகர்கள் கூட்டத்தினரை வழிவிட்டு நிற்குமாறு கேட்டுக் கொண்டனர்.

"பரகேசரி இராசேந்திர சோழர் வாழ்க, வாழ்க!" என்ற வாழ்த்தொலி

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

எங்கும் எழுந்தது. காற்றிலும் வேகமாகப் புரவியொன்றின் மீது அமர்ந்து இராசேந்திரன் மாளிகை வாசலுக்கு வந்தார். புலிக்கொடி தாங்கிய வீரர்கள் அவரைத் தொடர்ந்தனர்.

இராசராச சோழ தேவரின் திருமகனார் இராசேந்திர சோழர், குதிரையினின்று துள்ளிக் குதித்து காற்றினும் மிக வேகமாகத் தன் தந்தை படுத்திருக்கும் இடம் நோக்கி விரைந்தார்.

இராசராச சோழ தேவர் மஞ்சத்தில் படுத்திருந்தார். அவர் அருகே சென்றார், இராசேந்திரன்.

சிறிது நேரம் தந்தையை உற்று நோக்கியவாறிருந்த இராசேந்திரன் சிறு குழந்தைபோல் விம்மி விம்மி அழுதார்.

இராசராசன், தன் மகனை இன்னும் மிக அருகே வருமாறு சைகை செய்தார்.

அருகிருந்த பட்டத்தரசிக்கும் வியப்பாக இருந்தது. சென்ற சில நாள்களாக, கண் விழிக்காதிருந்த பேரரசர், கண் விழிக்கிறார். தன் வலத் திருக்கரத்தைத் தூக்கி மகன் இராசேந்திரனை அருகழைக்கிறார். முதுமையும், நோயும் ஒன்று சேர்ந்ததால் ஒளி குன்றியிருந்த முகத்தில் புதிய பிரகாசம் ஏற்படுகிறது. கடுமையான காய்ச்சலால் காய்ந்திருந்த உதடுகளில் மகிழ்ச்சியின் கோடுகள். புன்முறுவல் மூன்றாம் பிறைச் சந்திரனைப் போல் மெல்ல மலர்கிறது.

பட்டத்தரசி பரபரப்புடன் அருகே நெருங்குகிறாள். தங்கக் கிண்ணத்தில் இருக்கும் பாலை எடுத்து அவருக்குக் கொடுக்க.

வழியும் விழிநீரைத் துடைத்துக் கொண்டு இராசேந்திரன் அவர் அருகே நெருங்குகிறார். இராசேந்திரன் கரத்தை எடுத்துத் தன் கரங்களுடன் இணைத்துக் கொள்கிறார். மெல்லிய அழுத்தத்தை உணர்கிறார். இராசராசரின் உள்ளத்தில் பொங்கி நிற்கும் அன்பும் பாசமும் அந்தக் கரங்களின் வழியே இராசேந்திரன் உடலில் பாய்கிறது.

“மகனே! நலமாக இருக்கிறாயா?” என்று இராசராசர் கேட்கிறார்.

பேச இயலாமல் இருந்த இராசராசரிடமிருந்து மெல்லிய குரல் வெளிப்படுகிறது.

அவர் படுத்திருந்த கூடத்திற்கு வெளியே முக்கிய அதிகாரிகள் நிற்கிறார்கள். உள்ளே வருவது மரியாதைக் குறைவு என்ற வகையில்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அவர்கள் கூடத்துக்கு வெளியே நிற்கிறார்கள். மிக முக்கிய அதிகாரியான திருமந்திர ஓலை நாயகமும் அங்கேயே நிற்கிறார்.

‘அரசர் பேசுகிறார் - கரம் தூக்கி இராசேந்திரனை ஆசி கூறுகிறார்’ என்ற செய்தி, மாளிகைக்கு வெளியே கூடி இருந்தவர்களுக்குப் பரவுகிறது.

“அப்பாடா, அரசர் உயிர் பிழைத்து விட்டார்! என்ற நிம்மதி பெருமூச்சு விடுகிறார்கள் கூடியிருந்தவர்கள்.

“இராசராச சோழ சக்கரவர்த்தி வாழ்க! வாழ்க்!” என்ற கோஷம் வானை எட்டுகிறது. சிறிது சிறிதாக மெல்லக் கலைகிறார்கள்.

“மகனைப் பார்த்தவுடன், சக்கரவர்த்திகளுக்கு இருந்த நோய் மறைந்துவிட்டது”.

“மனநோய் என்று சொல்கிறாயா? தன் தந்தை அருகே இராமல் இராசேந்திர சோழர் வேறு எங்கே சென்று விட்டார்?”

“அது தெரியாதா சேதி? தந்தைக்கும் மகனுக்கும் சில காலமாகவே கருத்து வேற்றுமை. சில போது கடுமையாகவும் மாறியது. கலைக்கோயில் அமைக்கப் போவதாக ஒரு காட்டுப் பகுதியில் தங்கியிருக்கிறார் தன் மகன் என்ற செய்தி அரசருக்கு அதிர்ச்சியை அளித்தது. வெளியே புலப்படுத்தாமல் உள்ளுக்குள்ளேயே அடக்கி வைத்திருந்ததால் நோயாக மாறிவிட்டது!

“ஆமாம்: நானும் கேள்விப்பட்டேன். அங்கே அவருடைய புதிய துணைவிக்கு மாளிகை கட்டிக் கொடுத்திருக்கிறாராம்”.

“துணைவி என்றோ மனைவி என்றோ சொல்லாதீர்கள். பட்டத்து அரசியைவிடச் சக்தி வாய்ந்தவர்கள். எளிய குடும்பப் பெண் வீரம்மாளின் அதிர்ஷ்டத்தைப் பார்த்தீர்களா? இளமையின் மோகத்தில் மயங்கி விட்டார் இராசேந்திரர்”.

“உச்.... பெயரைச் சொல்லிச் சாதாரணமாக அழைக்கிறீர்களே! நம் பேரரசர் ஐயா, அவர் நம் பேரரசர். இராசராசர் மனமுவந்து தன் வாழ்நாளிலேயே தன் மகனைப் பேரரசராக்கினார்”.

“பேரரசர் - ஆமாம். இராசராச சோழரைப் போல் மகத்தான பேரரசர் என்பது நமக்குப் பெரும் அதிர்ஷ்டம், பெருமை”.

“அப்படிச் செய்தாலாவது தன் மகன் தன் பிடிவாதத்தை மாற்றிக்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கொள்வான் என்று இராசராசர் நினைத்திருக்கலாம்".

"எல்லாம் சரிதான், ஆனால் தன் தந்தையைவிடத் தனக்குப் புகழ் அதிகமாக வேண்டும் என்று அவர் விரும்புவதைத்தான் என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை".

"அதில் என்ன தவறு? இராசராசர் அடையாத புகழ் இல்லை. தன் மகனுக்கு என்று அவர் எதையும் விட்டு வைக்கவில்லை. எவ்வளவு வெற்றிகள்! புலிக் கொடியை எட்டுத் திக்குகளிலும் பறக்க விட்டவர்..."

"சரி... தந்தையின் வெற்றியில் மகன் பங்கும் இருக்கிறதே? தனக்கு எனத் தனிப் பெருமை அடைய நினைப்பது நியாயம் தானே?"

"ஓ! அழியாப் புகழைத் தருவது கலை ஒன்றுதான் - அதனால் கலைக்கூடம் ஒன்றைப் படைக்கத் திட்டமிட்டிருக்கிறார்".

"அதற்கு வீரம்மாள்தான் காரணம்".

"இராசராச சோழ சக்கரவர்த்தி தன் மகனுடைய எண்ணத்தை ஏற்கவில்லை".

"அது மட்டுமா? தஞ்சைப் பெரிய கோயிலைவிட மகத்தான கோயில் ஒன்றைக் கட்டவேண்டும் என்று தன் மகன் சிற்பிகளை அழைத்து ஆலோசனை கேட்டிருப்பது சக்கரவர்த்திக்குப் பெரும் அதிர்ச்சியை அளித்திருக்கிறது".

"ஒரு நாளும் முடியாது. பெரிய கோயிலைவிட மற்றொரு கோயிலா? தக்ஷிணமேருவைவிட மற்றொரு மேருவா? ஹுஹும் நடக்கவே நடக்காது. இராசேந்திரன் வீண் கனவு காண்கிறார். அவரைத் தூண்டிவிட்ட வீரம்மாள் மீதும் சக்கரவர்த்திகளுக்குக் கோபம்... மகன் மனத்தை மாற்ற முடியவில்லையே என்ற கவலை".

"இராசேந்திர சோழரின் பட்டத்தரசியும், மற்ற இளவரசிகளும் வீரம்மாளை வெறுக்கிறார்கள். விரமாதேவி என்று அழைக்காமல் வீரம்மா என்றே ஒருமையில் அழைத்து அவமானப்படுத்துகிறார்கள்".

"அதனால் வந்த வினைதான். தன்னை அலட்சியப்படுத்திய, அவமானப்படுத்திய மாளிகைப் பெருமாட்டிகள் எதிரே வீரமாதேவி ஒரு சபதம் செய்துவிட்டாள். அதன் விளைவுதான் காட்டுப் பகுதியில் ஒரு கலைக்கோயில் உதயமாவதற்கான திட்டம்!"

"ஓ! அப்படிப் போகிறதா கதை! அரசாங்கக் குடும்பச் செய்தியே

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

விசித்திரம்தான்! வீரமாதேவியின் சபதம், இராசேந்திரனின் புகழ்ப் போதை இரண்டும் சேர்ந்து, சோழ நாட்டில் பெரிய கலைக்கோயில் உருவாகப் போகிறது”.

“அது இராசராச சோழச் சக்கரவர்த்தியின் உயிரைக் குடிக்கும் கொடிய விஷமாகவும் அமைந்துவிடப் போகிறதே. இராசராசர் படுத்த படுக்கையாகி, பேச இயலாமல் போனதற்கு இராசேந்திரனின் திட்டம் தான் காரணம். என்ன நேரப் போகிறதோ?”

“கவலைப்படாதே! இன்று இராசேந்திரனைப் பார்த்தவுடன் இராசராசர் புதிய தெம்பைப் பெற்று விட்டாராம். தன் மகனிடம் அவர் மனம் திறந்து பேசினாராம்”.

“ஓ! அதன் விளைவுதான் நாளைக்கு இராசராச விஜயம் நாட்டிய நாடகம் நடக்கப் போகிறதா? வீரமாதேவியும் வருகிறாள். அதைவிட முக்கிய செய்தி: அந்தக் காட்டுப் பகுதியில் உள்ள நடனப்பள்ளி நடத்தி வரும் பெண் ஒருத்தி தான் இராசராச விஜயம் நாடகத்தை நடத்துகிறாளாம்”.

“ஆகா! அவள் வருகிறாளா? அந்தப் பெண் - ஒரு பெரிய இரகசியமே மறைந்திருக்கிறது”.

இவர் இப்படிக் கூறியவுடன் சுற்றிலுமுள்ளவர்கள் அந்தச் செய்தியைக் கேட்க ஆவல் கொண்டனர்.

## 49

# இராசராச விஜயம்

பேரரசர் இராசராசன் நோய்வாய்ப் பட்டுப் படுத்த படுக்கையாகக் கிடக்கும் செய்தி தஞ்சைமாநகர் எங்கும் பரவியது. சுற்றுப்புறம் பட்டி தொட்டிகளெல்லாம் பரவியது.

இன்னும் அந்தச் செய்தி உரையூரை எட்டியது.

நாகைப்பட்டினத்தைச் சென்றடைந்தது.

காஞ்சியினுள் பலரைக் கலக்கச் செய்தது.

வடக்கே திருக்காளத்தியிலும் திருவேங்கட மலையில் உள்ளவர்களும் செய்தி கேட்டுத் திகைத்தனர். கருவூரில் உள்ளவர்கள் கலங்கினர். திருவஞ்சைக் களத்திற்கும் அந்தச் செய்தி கிடைத்தபோது அவர்கள்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

நம்பவில்லை.

மதுரையில் அந்தச் செய்தி சோழர்ப் பிரதிநிதிகளைத் துயர் அடையச் செய்தது. பாண்டிய ஆதரவாளர்களுக்கு மகிழ்ச்சியை அளித்தாலும் மனிதாபிமான அடிப்படையில் அவர்கள் வருந்தினர்.

இராசேந்திர சோழரின் முடிசூட்டு விழாக் கோலாகலத்தில் திளைத்தவர்களுக்கு உடனே கிடைத்த இந்தச் செய்தி அதிர்ச்சியை அளித்தது. முடிசூட்டு விழா வைபவத்தைக் காண வராதவர்கள்கூட, இராசராச சோழ தேவரைக் காண தஞ்சைக்கு விரைந்துவர விரும்பினார்கள். வண்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. வசதி படைத்தவர்கள் உயர்தரக் குதிரைகள் பூட்டிய தேர்களைத் தேடினர்.

பெரியவர்களும், இளைஞர்களும் தஞ்சைக்கு அருகிலுள்ள ஊர்களிலிருந்து நடைப் பயணமாக தஞ்சைக்கு வரத் தொடங்கினர். வீட்டுப் பெண்டிரும் உடன் வருவதாகப் பிடிவாதம் பிடித்தனர். அவர்களுள் சிலரை மட்டும் அழைத்துச் செல்லப் பெரியவர்கள் ஒப்புதல் அளித்தனர்.

ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஒன்றும் புரியாமல் விழித்தார்கள். என்ன நடக்கிறது: ஏன் பரபரப்புடன் பெரியவர்கள் உட்கார்ந்து இருக்கிறார்கள் என்று வியப்புடன் பார்த்தார்கள். சின்னஞ் சிறுசுகள் தங்களையும் தூக்கிச் செல்ல வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தார்கள். சிலர் தோளில் அவர்களைச் சுமந்து கொண்டும், பெண்டிர் இடுப்பில் சுமந்து கொண்டும், இளைஞர்கள் வழிப் பயணத்திற்கான உணவு மூட்டையைத் தலையில் சுமந்து கொண்டும் விரைந்து நடக்கலாயினர்.

“நாம் தஞ்சைக்குச் செல்வதற்குள் அரசருக்கு ஏதும் நடக்காதிருக்க வேண்டும்” என்று தங்கள் குலதெய்வத்தை வேண்டிக் கொண்டனர். அரிசிலாற்றங்கரையிலும், மண்ணியாற்றங்கரையிலும், குடமுருட்டிக் கரையிலும், காவிரிக் கரையிலும் குடும்பத்தோடு இரவில் மக்கள் தங்கி, பொழுது புலர்ந்ததும் புறப்பட்டனர். வழிக் களைப்பு தெரியாதிருக்க அவர்கள் தேவாரப் பதிகங்களைப் பாடிக் கொண்டு சென்றனர்.

குரல் இனிமை உடைய குமரர்கள் பாடியதைத் தொடர்ந்து கூட்டத்தினர் பாட, கைத்தாளம் தட்டப் பெரியவர்களும், பெண்களும், இளைஞர்களும் ஓட்டமும் நடையுமாகப் பயணத்தைத் தொடர்ந்தனர்.

பூசுவதும் வெண்ணீறு**:** பூண்பதுவும் பொங்கரவம்**:**

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடீ

பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை

ஈசன் அவன் எவ்வுயிர்க்கும்இயல்பு ஆனான் சாழலோ –

இந்தப் பாடலின் முதல் இரண்டு அடிகளை இளைஞர்கள் பாட, பின் இரண்டு அடிகளை மகளிர் பாட ஒரே கும்மாளம்தான்.

இளவட்டங்களின் சிரிப்பும், கும்மாளமும் பெரியவர்களுக்கு எரிச்சலை அளித்தன.

“நாம் எதற்காகச் செல்கிறோம் என்பதுணராமல் இப்படிக் கும்மாளமிட்டு வருகிறீர்களே?” என்று அவர்கள் கடிந்து கொண்டனர்.

பாடி ஆடிக் கொண்டிருந்தவர்களுள் இளம்பெண் ஒருத்தி துணிவுடன்,“என்ன தாத்தா? நாங்கள் பாடியது என்ன தெரியுமா? மாணிக்கவாசகரின் திருச்சாழல்” என்றாள்.

”எதுவாக வேனும் இருக்கட்டுமே? பாடி ஆட இதுவா நேரம் காலம்? நாங்கள் எல்லாம் கவலை கலந்த மனத்துடன் செல்கிறோம்: எங்கள் மன்னருக்கு என்ன நேருமோ என்ற கவலை எங்கள் இதயத்தை அழுத்துகிறது. உங்களுக்கு எல்லாம் கவலை, வருத்தம் ஏதுமில்லையா?” என்று பெரியவர் ஒருவர் கேட்டார்.

“ஏனில்லை? கவலையை மறக்கத்தான் நாங்கள் பாடுகிறோம். வேடிக்கைப் பாட்டில்லை, தாத்தா. எங்கே சொல்லுங்கள்… இந்தப் பாட்டிற்கு என்ன அர்த்தம்?” என்றாள் குறும்புத்தனம் மிளிரும் விழிகளுடன் ஒரு பெண்.

கேள்வி கேட்டவர்கள் ஒருவரையொருவர் பார்த்து விழித்தனர்.

“யார் பாடிய பாட்டு என்றாவது தெரியுமா?” இளைஞன் ஒருவன் கேட்டான்.

கேள்வி கேட்பதை விரும்பாத ஒருவர்,“என்னடா கேள்வி கேட்கிறாய்?” என்று கையை ஓங்கினார்.

மற்றொருவர் தடுத்து,“சின்னவர்கள் தாமே, உங்களை வேடிக்கை செய்கிறார்கள்” என்றார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“வேடிக்கை இல்லை, தாத்தா. மெய்யாகவே கேட்கிறோம். இந்தப் பாடலை எங்களுக்கு விளையாடக் கற்றுக் கொடுத்தார்கள். யாருடைய பாடல் என்று சொல்லித் தரவில்லை” என்றாள் ஓர் இளம்பெண்.

பெரியவர் ஒருவர் அவளைத் திரும்பிப் பார்த்தார். “இந்தக் காலத்திலே எதையும் ஆழமாகத் தெரிந்து கொள்வதில் உங்களுக்கு ஆர்வமில்லை. அதைப் பாடியவர் திருநாவுக்கரசர்” என்றார்.

அங்கு சிரிப்பு வெடித்தது.

“ஓ, அதை எழுதியவர் திருநாவுக்கரசர் இல்லை தாத்தா! மாணிக்கவாசகர்” என்று ஓர் இளம் குரல் எழுந்தது.

கைகொட்டிச் சிரிப்பு மீண்டும் பூப்பூவாய்க் கொட்டியது.

“விளையாட்டுப் பாடல் அது. பாடிக் கொண்டே விளையாடுவது. விளையாடிக் கொண்டே பாடுவது! திருச்சாழல் என்று பெயர்” என்றபோது கண்டிப்புடன் பேசிய பெரியவர்,“என்ன பாடலோ, எந்த வேளையில் என்ன பாடுவது என்று இல்லாமல் போய்விட்டது. இப்படியே நடந்து சென்றால் ஒரு வாரங்கூட ஆகிவிடும்” என்று முணுமுணுத்துக் கொண்டே வேகமாக நடக்கலானார்.

தஞ்சை மாநகரத்து வீதிகளிலுள்ள மாந்தர்கள் ஒவ்வொரு கணமும், மாளிகையிலிருந்து செய்தி வருவதை எதிர்பார்த்து வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தனர்.

உள்ளாலை எனப்படும் பகுதியில் கோயிலும், மன்னர் வதியும் மாளிகையும் இருந்தன. நகரத்தின் நடுநாயகமாக அவை இருந்தன.

கொலுமண்டபம் இருந்தது. ஆவணக் களரி, அறச் சாலை இருந்தன. அருகருகே அரசியல் அதிகாரிகள், படைத்தலைவர் மாளிகைகளும் இருந்தன.

விழாக் காலங்களில் நாட்டியம் நாடகம் நடைபெற ஆடலரங்கும் நாடக சாலையும் மாளிகையை ஒட்டி இருந்தன. பெருவுடையார் கோயிலின் திருச்சுற்றில் உள்ள விசாலமான இடத்திலும் விழாக் காலங்களில் நாடகம், நாட்டியம் நடைபெறும்.

வெளியூர்களிலிருந்து நகரத்திற்கு வந்தவர்கள் எங்கெங்கு முடியுமோ அங்கெல்லாம் தங்கினர். முன்பே கலகலப்பாகவும், மக்கள் வருகை அதிகமாகவும் இருக்கும் கடை தெருவில் இன்று நெருக்கடி

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அதிகமாகியது.

தஞ்சை புரியைப் பார்த்திராதவர்கள் நகரின் மையப் பகுதியிலேயே சுற்றிச் சுற்றி வந்தார்கள். எப்பொழுதோ தஞ்சையைக் கண்டிருந்த பெரியவர்களுக்கு அந்தக் கடைத் தெருவின் வளர்ச்சி பிரமிப்பாக இருந்தது.

ஒவ்வொரு கடைவீதிக்கும் ஒவ்வொரு பெயர் சூட்டப்பட்டிருந்தது.

'திருபுவனமாதேவிப் பேரங்காடி','கொங்காள்வார் அங்காடி','இராசராச பிரம மாராயன் அங்காடி' என்று அழைக்கப்பட்ட கடை வீதிகளுக்குள் இன்று மெல்லத்தான் நகர முடிந்தது. வணிகர்களும் தம் அங்காடிகளை உடனே மூடிவிட்டு அரசரின் உடல்நிலையைக் காணச் செல்லவேண்டும் என்ற பரபரப்புடனிருந்ததால் வியாபாரத்தில் அதிகம் ஈடுபாடு கொள்ளவில்லை.

அங்காடிகள்நிறைந்த வீதிகளுக்கருகே நகரத்தில் முக்கியமான வீதிகள் இருந்தன. வீரசோழர்ப் பெருந்தெரு, இராசவித்தியாதரப் பெருந்தெரு, சயங்கொண்ட சோழர்ப் பெருந்தெரு, சூரசிகாமணிப் பெருந்தெரு என்ற பெயரில் பெருந்தெருக்கள் மக்கள் வெள்ளத்தைத் தாங்கின. "இதுதான் வானவன்மாதேவிப் பெருந்தெரு, சில நாள்கள் முன்பு முடிசூட்டிக் கொண்டாரே இராசேந்திர சோழர் அவரைப் பெற்றெடுத்த பாக்கியசாலி" என்று இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் விளக்கினார் முதியவர்.

முதியவர்களைக் கேலியும் கிண்டலுமாகப் பேசி வந்த இளைஞர்களுக்குப் பெரியவர்கள் மீது மதிப்பும் மரியாதையும் அதிகரித்தன.

"நீங்கள் வானவன்மாதேவியைப் பார்த்திருக்கிறீர்களா?"

"இன்று நாம் இராசேந்திர சோழ தேவரைப் பார்க்க முடியுமா?"

"நானும் படையில் சேர்ந்து என் நாட்டிற்குத் தொண்டாற்றப் போகிறேன். படை வீரனானால் சக்கரவர்த்திகளை அடிக்கடிச் சந்திக்க முடியும் அல்லவா?" என்றனர், சில இளைஞர்கள்.

"மிக சீக்கிரம் போர் ஒன்று மூளப்போகிறதாமே? போர்க்களத்தில் வீரதீர சாகசங்களைச் செய்ய வேண்டும் என்று ஆசை".

"ஓ! வீரனுக்குத்தான் மாலை இடப்போவதாக உன் மாமன் மகள் முடிவு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

செய்திருப்பதால் படைவீரனாகச் சேரப் போகிறாய். அப்படித்தானே?” என்று அருகே இருந்த இளம் பெண் ஒருத்தி அவனைச் சீண்டினாள். சிரிப்பு அலை ஓய நெடுநேரம் பிடித்தது.

தஞ்சை நகருக்கு வந்தவர்கள் தங்கள் உறவினர் வீடுகளிலும், தெரிந்தவர்கள், அறிந்தவர்கள் வீடுகளிலும் தங்குவதற்கு அவர்கள் முகவரி கேட்டு அலைந்தனர்.

தொழிலாளர்கள் குடியிருப்புகளான அந்த வேளங்கள் தஞ்சைக் கோட்டைக்கு வெளியே இருந்தன.

அபிமான பூஷணத் தெரிந்த வேளம், அருண்மொழித் தேவர் தெரிந்த திருபரிகளத்தார் வேளம், இராசராசத் தெரிந்த பாண்டித் திருமஞ்சனத்து வேளம், உத்தம சீலியார் வேளம், பஞ்சவன்மாதேவியர் வேளம் என்று அழைக்கப்பட்ட வேளத்து வீடுகளில் அவர்கள் தங்க இடம் பிடித்தனர்.

கோட்டைக்கு வெளியே புற நகர்ப் பகுதியில் அவை இருந்ததால், நகரத்திற்குள் வந்தவர்கள் மீண்டும் புறநகர்ப் பகுதியை நோக்கி விரைந்தனர். கூட்ட நெரிசலில் ஊர்ந்தவண்ணம் சென்றதால் சிலர் பொறுமை இழந்தனர்.

கலைஞர்களின் இல்லங்களிலும் நிற்க இடம் இல்லை.

தஞ்சை மாநகரில் தாங்க முடியாத அளவுக்கு மக்கள் நிறைந்து விட்ட செய்தியும், மேலும் மேலும் பல திசைகளிலிருந்து மக்கள் வெள்ளம் போல் வந்து கொண்டிருக்கும் செய்தியும் இராசராசனுக்கு அறிவிக்கப்பட்டது.

இராசராசர் உடல் நிலையில் சிறந்த முன்னேற்றம் காணப்பட்டது.

அவர் அருகே கருவூர்த் தேவரும் இராசேந்திரனும், பட்டத்தரசியும், திருமந்திர ஓலை நாயகமாக இப்போது பணி ஏற்றிருக்கும் முதியவர் கிருஷ்ணன் ராமனும் மட்டுமே இருந்தனர்.

தன் அன்புப் புதல்வர் இராசேந்திரன் திருக்கரத்தைத் தன் கரத்துடன் பிணைத்துக் கொண்ட இராசராசன் மெல்லப் பேசினார்.

“பரகேசரி இராசேந்திர சக்கரவர்த்தியே!” என்று அவர் அழைத்தபோது இராசேந்திரன் நெகிழ்ந்து விட்டார்.

“தந்தையே, தந்தையே! தாங்கள்தான் இந்தக் கணம் இந்தப் பொழுது வரை சக்கரவர்த்தி. என்றுமே நான் தங்கள் அருமைப் புதல்வன்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

மதுரன்தான்” என்றார் இராசேந்திரன்.

புன்முறுவலுடன் தலை அசைத்த இராசராசன் சொல்லுவார்,“அருமை மகனே! எப்பொழுதோ பிரிந்திருக்க வேண்டிய இந்த உயிரை இந்தக் கூட்டிற்குள் தங்க வைத்திருக்கும் பெருமை கருவூர்ச் சித்தருடையது. அவர் அருகே இருக்கும்போது இயம பயம் ஏது? அவர் நேற்று இரவு மூலிகை மருந்தைக் கொடுத்தார். என் பிணிகள் ஓடோடி விட்டன. உடல் கனம் குறைந்தது. பார்வை தெளிவாகிவிட்டது.

“மகனே! கருவூர்த் தேவர் நமக்கு ஆதரவாக, உதவியாக இருப்பது ஆடவல்லான் நமக்களித்த பரிசு. அதற்காக ஏழேழு பிறவிக்கும் நாம் இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். என் அருகே இருந்து சோழ நாடு வாழ வாழ்த்திக் கொண்டே இருப்பதுபோல், உன்னுடன் அவர் என்றைக்கும் இருக்க வேண்டும். நாடு நகரம் எங்கும் அவர் சுற்றி வருகிறார். தெற்கே அகத்திய மலைக்குச் சென்றுவிடப் போகிறாராம். இராசேந்திரா! நீ அவர் பாதங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அவர் உன்னை விட்டுப் பிரியாமல் இருக்க வேண்டிக் கொள்ள வேண்டும்.

“இராசேந்திரா! வடக்கே வனப்பு மிக பெரிய நதி இருக்கிறது. புனிதமான அந்த நதியின் பெயர் கங்கை என்பதை நீ அறிவாய். சிவபெருமான் சடை முடியினின்று இந்தப் புண்ய பூமிக்கு இறங்கி வந்து வளம் பெருக்கும் தெய்வ நதி. அந்த மாபெரும் நதியை நம் சோழநாட்டிற்குக் கொண்டுவர வேண்டும். என் ஆசைகளுள் அதுவும் ஒன்று.

“இராசேந்திரா! நீ கங்கை நதிக்குச் சென்று நீராட வேண்டும். அந்த நதியிலிருந்து லட்சம் லட்சம் குடங்களில் கங்கை நீரைக் கொண்டு வரவேண்டும். கங்கை நீரைக் கொண்டு பெருவுடையாரை திருமுழுக்காட்ட வேண்டும் என்பது என் பேரவா.

“என் ஆசை நிறைவேறப் போவதில்லை: இறைவன் என்னை அழைத்துக் கொண்டிருக்கிறான். எந்தக் கணமும் கைலாயபதியின் கணங்கள் என்னை அழைத்துச் செல்ல விமானங்களுடன் வருவார்கள். பெருவாழ்வு வாழ்ந்துவிட்டேன். நம் புலிக்கொடி திக்கெட்டும் பறக்கிறது. அதில் பெருமை இல்லை.

“நான் வென்ற நாடுகளைப் பற்றி, வெற்றிகளைப் பற்றி மட்டுமே வருங்காலத்தவர் பேசிக் கொண்டிருக்கப் போவதில்லை. ஆடவல்லான் அருளால் தட்சிண மேருவாய் விளங்குகிறதே. அந்தப் பெருவுடையார்த்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

திருக்கோயில் தான் அழியாது இருக்கப் போகிறது. என் அருமை இராசேந்திரா! தஞ்சைக் கோயிலைப் போன்று பெரிய, மிகப் பெரிய கோயிலைக் கட்டு. அங்கே பெரிய லிங்கம், பெரிய நந்தி, பெரிய விமானம் எல்லாம் உருவாக்கு”.

இராசராசர் மெல்லப் பேசினார். தொடர்ந்து பேசியதால் களைப்படைந்தார். விழிகளை மூடிக் கொண்டார்.

அருகே இருந்தவர் பதறினர். கருவூர்த் தேவர் நாடியைச் சோதித்தார். ‘பயமில்லை’ என்றார்.

சிறிதுநேரம் கழித்து இராசராசர் கண் திறந்தார்.

மீண்டும் அதே புன்னகை. முகத்தில் தனி ஒளி.

“இராசேந்திரா! இராச இராசேசுவர நாடகத்தைக் கடைசியாகக் காண வேண்டும் என்று ஆவல். சென்ற வைகாசித் திங்களில் அந்த நாடகத்தைக் கண்டு மகிழ்ந்தேன். சாந்திக் கூத்தன் தன் தள்ளாத வயதிலும் மிகச் சிறப்பாக அந்த நாடகத்தை நடத்தினான். அவன் நலமாக இருக்கிறானா? அவனுடைய குடும்பத்தினர் எந்தவித வறுமையும் இல்லாமல் வாழ ஏற்பாடு செய்ய வேண்டும்” என்று கூறிச் சற்று நிறுத்தினார்.

“தந்தையே! திருப்பந்தணை நல்லூருக்குச் செய்தி அனுப்பி சாந்திக் கூத்தனை உடன் அழைத்து வரச் செய்கிறேன்” என்றார்.

“அவரை அழைப்பதும் நடக்கட்டும். மற்றொரு செய்தி: மிக முக்கியமானது” என்று கூறி அவனிடம் மெல்லிய குரலில் தெரிவித்தார்.

இராசேந்திரன் முகத்தில் புதிய ஒளி பிறந்தது.

# 50

## தந்தையும் மகனும்

மாளிகை நிலா முற்றத்தில் இராசராச தேவர் சாய்ந்தவாறு அமர்ந்து இராசராசேச்வர நாடகத்தை வசதியாகக் காண ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தஞ்சைப் பெரிய கோயில் நாடகசாலை மண்டபத்தில் தான் பொதுவாக அந்த நாடகம் நடைபெறுவது வழக்கம். மாளிகையிலுள்ள கோயில்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

நாடக சாலையிலும் நாடகங்கள், கூத்துகள் நடைபெறுவது வழக்கம். உடல் நலம் மிகவும் சீர் குலைந்த நிலையில், அந்த நாடகத்தைப் பார்ப்பதற்காகவே இதுநாள் வரை உயிர் அவர் உடலில் இருப்பதுபோல் தோன்றியது.

தன் வீர தீரப் பிரதாபங்களை மீண்டும் நாடகத்தின் மூலம் காண்பதற்கு அவர் ஆவல் கொண்டுள்ளார் என்று சொல்ல முடியாது. அவர் ஆவலுடன் எதிர்பார்த்த ஒரு நிகழ்ச்சிக்காகத்தான் அன்றைய நாடக ஏற்பாடு என்றும் சொல்லலாம்.

நிலவு ஒளியும்,கள்ளி போன்ற செடிகளால் ஆக்கப்பட்ட தீப்பந்தங்கள் சுழுந்துகளின் வெளிச்சமும் நிறைந்த அந்த முற்றத்தில் சோழர் குலத்திற்கு மிகமிக நெருக்கமானவர்கள் மட்டுமே கூடியிருந்தனர்.

அரசருக்கு எதிரே அரைவட்ட வடிவமான மேடையில் ஓர் ஓரத்தில் இசைக் கருவிகளை இயக்கும் கலைஞர்கள் அமர்ந்திருந்தனர்.

கொட்டி, மத்தளம், ஒடுக்கை, சகடை, கரடிகை, உவச்சப் பறை போன்ற தோல் கருவிகளைத் தட்டுபவர்களும், வங்கியம், பாடலியம், குழல் போன்ற துளைக் கருவிகளை இசைப்பவர்களும், வீணை போன்ற நரம்புக் கருவிகளை மீட்பவர்களும் சுருதி சேர்த்துக் கொண்டிருந்தனர்.

பல ஆண்டுகளாக இராசராசேச்வர நாடகம் நடிப்பதில் திறமை நிலைநாட்டியவரான விசயராசேந்திர ஆசாரியன் என்ற பெயருடைய கூத்தில் வல்லவன் மெல்ல நடந்து நாட்டிய அரங்கேறினார். இன்னும் இராசராசர் வந்து அமரவில்லை என்பதை அறிந்தார். ஏறத்தாழ எழுபது அகவையை நெருங்கும் அவரால் முதுமை காரணமாக நாடகத்தை நடித்துக் காட்ட முடியுமா என்ற ஐயம் மாளிகையில் இருப்போரிடம் எழுந்தது.

வெற்றிலையை எப்போதும் குதப்பிக் கொண்டிருக்கும் மத்தளம் கொட்டும் ஹாஸ்யன் விக்கிரமாதித்தனும் வந்து விட்டார். பட்டுப் பட்டாடை உடுத்தி சவ்வாது நறுமணத் திரவியங்கள் பூச்சுடன், பெரும் குங்குமப் பொட்டுத் துலங்க அவர் கம்பீரமாக அனைவரையும் ஒரு தடவை பார்த்தார்.

ஏறத்தாழ நான்கு நாழிகை நேரம் நடத்தப்படும் அந்த நாடகத்தை இராசராசர் அமர்ந்து முழுமையும் காண முடியுமா என்று அதிகாரிகள் கவலை கொண்டனர்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அரண்மனைக் காரியங்களை மேற்பார்வை செய்யும் மாளிகை நாயகத்துடன் கலந்தாலோசித்து, யார் யார் அந்த நிலா முற்றத்தில் இருக்கலாம் என்ற முடிவெடுத்தனர். யாரையும் அழைக்க வேண்டாம் என்று கண்டிப்பாக இராசராசர் கூறியது இராசேந்திரனுக்கு வியப்பாக இருந்தது.

பொதுவாக இதுபோன்ற நிகழ்ச்சிகளில் சக்கரவர்த்தி நடுநாயகமாக வீற்றிருக்க, அரசி உடனிருக்க, மற்ற உரிமை இளவரசிகள் நிகழ்ச்சியைக் காண வசதியாக மேல் மாடத்தில் வீற்றிருக்க, கட்டியங்காரர், அரசர் அவ்வப்போது மலர்ந்தருளும் ஆணைகளைக் கேட்டு வந்து திருமந்திர ஓலை நாயகத்திடம் அறிவிக்கும் அதிகாரியான திருவாய்க் கேள்வி, மிகவும் முக்கிய அதிகாரியான திருமந்திர ஓலை நாயகம், நாள்தோறும் நடக்கும் நிகழ்ச்சிகளை நிகழ்ச்சிப் புத்தகத்தில் குறித்து வைக்கும் பட்டோலைப் பெருமாள், எப்போதும் அரசர் அருகே இருந்து நாட்டுச் செய்திகளை மன்னருக்கு அறிவிக்கும் அரசாங்கச் செயலாளர், நகர மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நகர நிர்வாகத்தைக் கவனிக்கும் சபையின் தலைவர், அரசர் மெச்சி அழைக்கும் பெரும் புலவர், படைத்தலைவர் போன்றோர் அரங்கில் அவரவர்க்கு உரிய இடத்தில் அமர்ந்திருப்பது வழக்கம். மாளிகையில் நடைபெறும் பிறந்தநாள் விழா போன்ற முக்கிய நிகழ்ச்சியின் போது மன்னர் பெரிதும் போற்றி வணங்கும் சிவாச்சார்யார்களான ஈசானிய சிவன் மன்னருக்கு அருகே வீற்றிருப்பார்.

போர்க் காலங்களில் உதவியவர், நல்லாட்சிக்கு உறுதுணையாயிருந்தவர், நிர்வாகத் திறமை பெற்ற அரசு அதிகாரிகள், நம்பிக்கையுடன் பல்லாண்டு பணிபுரிந்தவர்கள், வீரப் போர் புரிந்தவர்கள், ஆகியோருக்குப் பட்டம் வழங்கிச் சிறப்பிப்பது சக்கரவர்த்திகளின் வழக்கம். மூவேந்த வேளான், பூவேந்த வேளான், கேரள ராசன், காலிங்கராயன், கச்சி ராயன், வாணவ கோவரையன், பல்லவராயன், சேதிராயன், காடவ ராயன், தொண்டையன், விழுப்பரயன்,ஈழங்கொண்டவர், இளங்கோவன், களத்தில் வென்றோர் போன்ற சிறப்புப் பட்டங்களைப் பெற்றவர்கள் சபையின் அரங்கில் கம்பீரமாக இருப்பது வழக்கம்.

இன்று அவர்களுள் ஒருவரும் அழைக்கப்படவில்லை.

இராசராசர் மெல்லிய குரலில் இராசேந்திரனிடம் சொல்வார். “மகனே! இந்த நாடகம் என் பெருமைகளைப் பறை சாற்றுவதன்று. நான் அடைந்த வெற்றியை நானே பார்த்து, கேட்டு மகிழ்வதற்காக நடிக்கப்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பெறுவதன்று. சோழ நாட்டுப் பெருமக்கள் மனத்தில் நம்பிக்கையையும் உற்சாகத்தையும் தம் நாட்டைப் பற்றிய பெருமையையும் வளர்ப்பதற்காகத்தான் இந்த நாடகத்தை என் பிறந்த நாளான ஐப்பசி சதய நாளன்று கோயிலில் நடக்குமாறு செய்தேன்.

“அருமை மகனே! இந்த நாடகத்தை நீ பல தடவைகள் பார்த்திருப்பாய். நான் அரியணை ஏறியவுடன் பாண்டிய மன்னனுடன் போர் புரிந்ததும், சேர நாட்டு உதகைக் கோட்டையை வென்றதும், கடமலையைக் கொண்டதும், சாளுக்கிய சத்யாச்ரயனுடைய நாட்டில் புலிக்கொடியை ஏற்றியதும் நாட்டிய நாடகமாக நடிக்கப் பட்டதைக் கண்டு மகிழ்ந்திருப்பாய். நாட்டியப் புலமை பெற்ற விஜய ராசேந்திர ஆசாரியன் என்னைப் போன்று நடித்து மக்களிடம் பாராட்டுதல் பெற்றதையும் நீ அறிவாய்.

“நான் அரியணை ஏறுவதற்கு முன்பு கடல் கடந்த நாடுகளுக்குச் சென்ற செய்தி உனக்குத் தெரிந்திருக்கலாம். அந்த நிகழ்ச்சியை விசய இராஜேந்திரன் இந்த நாடகத்தில் சேர்ப்பதில்லை!

இராசராச சோழர் மெல்லப் பேசினாலும் அவருக்கு மூச்சு வாங்கியது.

இளம் பருவத்திலே கடல் கொள்ளையர்களை எதிர்த்துத் தன் தந்தை போரிட்டதை இராசேந்திரன் அறிவார். அவர் சென்ற கலம் பழுதடைந்ததும், முல்லைத் தீவில் கலத்தைப் பழுதுபார்க்க நங்கூரம் பாய்ச்சி கலம் நின்றபோது தன் தந்தை, தீவிற்குள் சென்று அந்தத் தீவின் தலைவரைச் சந்தித்ததும், அவரது மகள் இன்பவல்லி அறிமுகமானதும், அவளுடன் முதல் கை கொடுத்து ஆடிய நிகழ்ச்சியும் அவருக்குத் தெரியும்.

இராசராசனே இப்போது சொல்ல ஆரம்பித்தார்.“இராசேந்திரா! தமிழ்நாட்டிலிருந்து வெகு தொலைவில் முல்லைத் தீவிலிருக்கும் இன்பவல்லி நாட்டியக் கலையில் சிறந்திருந்தாள். கூத்தன் விசய ராசேந்திரன் அந்தச் சம்பவத்தை ஆடுவதில்லை. அந்தச் சம்பவத்தை நேரே கண்டதுபோல் ஆட ஒருவருக்குத்தான் தெரியும். நடனப் புலமை பெற்றவர் ஆணா, பெண்ணா என்பது உனக்குத் தெரியுமா?” என்று கேட்டார்.

நடந்த கதை ஓரளவுக்கு இராசேந்திரனுக்குத் தெரியும். “அத்தை குந்தவ்வை பிராட்டி எனக்குச் சொல்லியிருக்கிறார்” என்றார், இராசேந்திரன்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சிறிது நேரம் மௌனமாயிருந்த இராசராசர்,"இளைய பிராட்டிக்குத் தெரியாததா? அவர்கள் உனக்குக் கதை போல் எல்லாவற்றையும் சொல்லியிருப்பார்கள் அப்படித் தானே?" என்று கேட்டார்.

"ஆமாம், ஆமாம்! இளைய பிராட்டியார் எனக்கு எல்லாவற்றையும் சொல்லி இருக்கிறார். எனக்குத் தாயாயும், தந்தையாயும், ஆசானாயும் விளங்கியவர் அவர். தக்க சமயத்தில் அவர் எச்சரித்திராவிடில் மாபெரும் பிழையை நான் செய்திருப்பேன்" என்று இராசேந்திரன் மெல்லிய குரலில் பேசினார்.

இராசராசன் தன் மகனைப் பார்த்து மெல்லப் புன்னகை புரிவது தெரிந்தது. ஆனாலும் அவர் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருப்பது மற்றவருக்குத் தெரிய வாய்ப்பில்லை. அவர் உதடுகள் 'சிவசிவ' என்று உச்சரித்த வண்ணம் இருந்தன. சில நாள்களுக்கு முன் அவர் உடல்நலம் விசாரிக்க வந்த இளையபிராட்டியின் கரத்தைப் பற்றியபோது இளையபிராட்டி சொன்னாள்:

"தம்பி! தேக்கு போன்ற உன் கரங்கள் எலும்புகள் மட்டும் நிறைந்த கூடாகிவிட்டனவே. உனக்குப் பிறகும் நான் இந்த உலகில் வாழ வேண்டும் என்பது இறைவன் சித்தம் போலும்" என்றாள். அவள் கூறும்போது குரல் தழுதழுத்தது.

ஏன் அவ்வாறு சொன்னோம் என்று அவளுக்குத் தோன்றிவிட்டது. இராசராசன் இந்த உலகில் இனி அதிக நாள்கள் வாழமாட்டார் என்பதும், அவருக்குப் பிறகும் தான் வாழப் போவதாகவும் அவள் எண்ணியிருக்கலாம்.

இராசராசர் மெல்லப் பேசினார். ஆனால் அதில் தெளிவு இருந்தது. "என் அருமைச் சகோதரியே! என்னை உருவாக்கினீர்கள். என் மகனை வீர தீரனாக, அறிவாளியாக வளர்த்துச் சோழ நாட்டின் சக்கரவர்த்தி ஆக்கினீர்கள். நீங்கள் இன்னும் பல ஆண்டு வாழ்ந்து என் மகனுக்கு வழி காட்டியாகவும் சோழர் குலத்திற்கு உறுதுணையாகவும் இருக்க வேண்டும்".

இளைய பிராட்டியின் முகத்தில் பூத்த புன்னகையில் விரக்தி தெரிந்தது.

"தம்பி! இப்பொழுது எனக்கு என்ன வயது என்று நினைக்கிறாய்? உன்னைவிட ஆறு ஆண்டுகள் மூத்தவள். சோழ நாட்டின் பெருமையும் புகழும்தாம் எனக்கு மன வலிமையை அளித்து வருகின்றன. இப்போதெல்லாம் பழையாறைக்கும், தஞ்சைக்கும் வந்துசெல்வதால்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

உடல் களைப்பு ஏற்படுகிறது. நான் பழையாறையிலிருந்து புறப்பட்டுப் பிரம்மதேயம் செல்லப் போகிறேன். உனக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால் உன் உடல் அடக்கம் செய்வதற்கு முன்பு வருவேனா என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியவில்லை. சோழர் குலத்துக்குத் தோன்றாத் துணையாக உள்ள கருவூர்த்தேவரிடம், தஞ்சையில் உன் அருகேயே இருக்குமாறு வேண்டிக் கொண்டிருக்கிறேன். எப்போதும் சிவபெருமான் நாமத்தை உச்சரித்துக் கொண்டு, ஆடவல்லான் நினைவாக எஞ்சிய பொழுதைக் கழிக்குமாறு சொல்லி இருக்கிறார். உன்னைப் பார்க்க வருவது இதுவே கடைசி முறையாக இருக்கலாம்" - இளைய பிராட்டியின் விழிகள் கலங்கின.

இராசராசன் விழிக் கோடியிலிருந்து நீர்த்துளிகள் உருண்டன. குரல் தழுதழுக்கக் கூறினார். "என்னை விட்டு நீங்கள் ஒரு கணமும் பிரியக்கூடாது. என் கட்டளை நீங்கள் அருகிலிருந்தால் நான் இன்னும் பல ஆண்டுகள் வாழ்வேன். எங்களைவிட்டு விரைவில் பிரிந்து செல்ல விரும்புகிறீர்களா?"

அவர் விழியிலிருந்து வடியும் கண்ணீரைத் தன் நடுங்கும் கரத்தால் மெல்லத் துடைத்த இளையபிராட்டி,"தம்பி, அதெப்படி முடியும்? வல்லவரையரை நான் உடனே சந்திக்க வேண்டும். அவர் உடல் நலமில்லாமல் இருப்பதாகத் தகவல் கிடைத்தது. எனக்கும் அவருக்கும் நூறு கருத்து வேற்றுமைகள் இருக்கலாம். என்றாலும் அவர் அருகே இறுதிவரை இருக்க வேண்டும் என்ற எண்ணம் அழுத்தமாக என் மனத்தில் பதிந்துவிட்டது. அவருக்குப் பணிவிடைகள் செய்ய வேண்டும் என்ற ஆவல் என்னை ஒரு கணம்கூட இங்கே நிற்கவிடவில்லை. இராசராசா! எதற்கும் அஞ்சாதே. 'சிவசிவ' என்று எப்போதும் சிவபெருமான் திருநாமத்தை உச்சரித்துக் கொண்டே இரு. நமசிவாய என்ற நாதன் திருநாமம்தான் உறுதுணை" என்று கூறிவிட்டுப் புறப்பட்டாள்.

தன் சகோதரி இளையபிராட்டி கூறியபடி அந்தக் கணம் முதல் 'சிவசிவ' என்று மனத்திற்குள்ளேயே சொல்லலானார். பிறகு மெல்ல உச்சரிக்கலானார். அதனால் அவருக்கு மன அமைதி ஏற்பட்டது. காலை வேளையில் திருநாவுக்கரசர் தேவாரப் பதிகங்களை மட்டும் தன்னருகே இருந்து பாடுமாறு செய்தார்.

இராசேந்திரனிடம் இராசராசர் சொன்னார்: "மகனே, இளைய பிராட்டியாரையும் வல்லவரையர் வந்தியத் தேவரையும் இனி கண்ணெனக் காப்பது உன் கடமை. ஒரு பெரிய இரகசியம் - தன்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பெயரைக் காலகாலத்திற்குச் சொல்ல உன் அத்தை வாரிசை உருவாக்கிக் கொள்ளவில்லை. வல்லவரையர் இளைய பிராட்டியின் பாசப் பிணைப்பு மகத்தானது என்பது உனக்குத் தெரிந்திருக்கும். அமர காதலர்கள் வரிசையில் சேர்க்கப்படவேண்டிய அவர்கள் சோழ நாட்டிற்குச் செய்திருக்கும் தொண்டும், பணியும் ஆயிரம் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட வேண்டியவை. உண்மையைச் சொல்லப் போனால் உன்னைத் தன் மகனைப் போல் கருதி அன்பைப் பொழிந்தார். வல்லவரையருடன் சேர்ந்து வாழ்ந்த நாள்கள் மிகக்குறைவு. அவர்களுக்கு எந்தவித இடர்ப்பாடும் நேராமல் நீ பார்த்துக் கொள்ள வேண்டும். வல்லவரையருக்கு நாம் உரிமை செய்து கொடுத்துள்ள மகத நாட்டில் வாரிசுரிமைக்காக எந்தப் போட்டியும் போரும் பிற்காலத்தில் நேர்ந்துவிடக்கூடாது. உன் அத்தை தனக்கு வாரிசை உருவாக்கிக் கொள்ளவில்லை. 'மதுராந்தகன் தான் என் வாரிசு' என்று அடிக்கடி உன்னைக் குறிப்பிட்டுச் சொல்வார்கள். அது எப்படி இயலும்? வல்லவரையர் பல ஆண்டுகளுக்குப் பிறகு குந்தள நாட்டு இளவரசியைத் திருமணம் செய்து கொண்டதையும் நீ அறிந்திருக்கலாம். அவர்களுக்கு ஒரு மகள். திருமண வயதுடைய அவளை நீ மணந்திருந்தால் பிறகு ஒரு காலத்தில் வந்தியத் தேவனுக்குப் பிறகு ஏற்படப் போகும் வாரிசுரிமைப் பிரச்னையைத் தீர்த்திருக்கலாம். உம்…" என்று கூறிப் பேச்சை நிறுத்தினார்.

இராசேந்திரனுக்கு இந்தச் செய்தி புதிதாக இருந்தது. வல்லவரையருக்கு ஒரு மகளா? இதுவரையில் அவருக்குத் தெரியாது. தன் தந்தை கூறுவதில் தீர்க்க தரிசனம் இருக்கிறது. சோழ நாட்டின் மிக முக்கியமான பகுதிகள் அடங்கிய மகத நாட்டு வாரிசுரிமை குறித்துப் பிணக்குகள் ஏற்பட்டால் சோழ நாட்டின் ஒற்றுமை குலையக் கூடுமல்லவா? கடுமையாக நோய்வாய்ப்பட்டிருக்கும் இந்த நிலையில் தன் தந்தை, இவ்வளவு முக்கியச் செய்தியைத் தனக்குச் சொல்கிறார். அதை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். இதுபோன்ற முக்கியமான செய்தியைச் சொல்லத்தானோ என்னவோ, இராசராச விஜய நாட்டிய நிகழ்ச்சியைக் காணும் ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறாரோ? நிகழ்ச்சியைக் காண முக்கியமான அதிகாரிகள் ஒருவரும் அழைக்கப்படாததற்கு இதுவும் ஒரு காரணமோ? என்று இராசேந்திரன் எண்ணினார்.

"வல்லவரையர் பிரச்னையைத் தீர்க்க நான் என்ன செய்ய வேண்டும்?" என்று அவர் அருகே சென்று கேட்டார், இராசேந்திரன்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

மீண்டும் ஒரு முறுவல், இராசராசன் வதனத்தி “மிகவும் தாமதமாக நான் சிந்திக்கிறேன்: வல்லவரையர்மகளை நீ மணந்து கொண்டிருக்கலாம். மணஉறவில் வயது இடைவெளி அதிகம் என்று நீ சொல்லக்கூடும்” என்று கூறி இராசேந்திரனை நோக்கினார்.

‘ஆம் ஆம்’ என்பது போல் இராசேந்திரன் தலையசைத்தவுடன், மீண்டும் ஒரு குறும்புச் சிரிப்பு முகிழ,“வீரம்மாளுக்கு என்ன வயது?” என்று கேட்டார்.

இராசேந்திரனுக்குப் புரிந்து விட்டது. காதலுக்கும், காமத்துக்கும் கண், வயது ஏதுமில்லை என்பதை அவர் அறியமாட்டாரா?

வயதையும் மீறி வீரம்மாளுக்கும் தனக்கும் உள்ள உறவைத் தந்தையிடம் எப்படி விவரிப்பது? இராசேந்திரன் பரபரப்படைந்தார்.

”இராசேந்திரா! ஒரு முக்கியமான செய்தியைத் தெரிவிக்கவே இன்று இராசராச விஜய நாடகம் காண விரும்பினேன். நாடகம் தொடங்கும் நேரம் வந்துவிட்டது. அதற்காகத்தான் நான் வீரமாதேவியையும், அவளுடன் சேர்ந்து கலைப்பணி செய்யும் கலைத்தேவியையும் இங்கே அழைக்குமாறு சொன்னேன். அந்தக் கானகத்தின் நடுவே நாட்டிய சாலை ஏற்படுத்தித் தொண்டாற்றி வரும் கலைத் தலைவியைப் பற்றி உனக்குத் தெரியுமா?” என்று கேட்டார்.

இராசேந்திரனுக்குத் தெரியும். தன் தந்தையின் இளமைக் காதல் கதை தெரியும். தன் தந்தை முல்லைத் தீவில் தங்கியபோது இன்பவல்லி என்ற மங்கையிடம் மனத்தைப் பறி கொடுத்ததும் தெரியும். இராசேந்திரன் தலையசைத்தார்.

அந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு தன் வாழ்க்கையில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் அவர் மனக் கண்முன்னால் தோன்றின. அவருக்கு நாணமாகக் கூட இருந்தது, இளமையில் தான் நடந்து கொண்டவிதம்.

இராசராசர் புரிந்து கொண்டார். இன்றும் சற்று நேரத்தில் நாட்டிய நாடகம் தொடங்கப் போகிறது.

உடனிருந்து இசைக்கும் வாத்தியக்காரர்கள் ஆயத்தமாக இருந்தனர். இராசராச விஜயம் நாடகத்தில் முக்கியப் பொறுப்பேற்றிருக்கும் விஜயராசேந்திர ஆசாரியர் வேட மணியாமல் மேடையின் ஒருபுறம் அமர்ந்திருந்தார். யார் ஆடப் போகிறார்கள்? இராசேந்திரனுக்குப் புரிந்து

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

விட்டது, ஆடப்போகிறவர் யார் என்று.

கானகத்தில் உள்ள கலைக்கூடத்தலைவியும் வீரமாதேவியும் ஆடப் போகிறார்கள். சோழச் சக்கரவர்த்தி இராசராசன் சரித்திரத்தை ஆடிக் காட்டப் போகிறார்கள்.

மேடையின் ஓர் ஓரத்தே அமர்ந்து ஒருவர் பாடுவார். அதற்கேற்ப ஆசாரியன் ஆடுவான். மத்தளமும்,குழலும் யாழும், வீணையும் பின்னணியில் ஒலிக்கும்.

இராசராச சோழர் மெல்லச் சாய்ந்து படுத்தவாறு நாடகத்தைக் காண ஆயத்தமானார். இராசேந்திரன் அவர் அருகே அமர்ந்திருந்தார்.

கட்டியக்காரன் நாடகம் தொடங்கும் முன்பு இராசகேசரி இராசராசர் பெருமை பேசினான்.

“திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந்

தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளல்

காந்தர்ச் சாலை கலமறுத்தருளி”

என்று அவன் விரிவாகத் தனக்கே உரிய குரலில் ஏற்ற இறக்கத்துடன் பேசிச் சென்றான். அவன் கூறுவதே வாழ்க்கைச் சரிதத்தை விவரிப்பது போல் தோன்றியது. அமைதியாக இருந்த வாத்தியங்கள் முழங்கின.

பிறகு வாத்ய ஓசை நின்றது. எங்கும் அமைதி. நிலாமுற்றத்தருகே உள்ள நந்தவனத்திலிருந்து பூத்துக் கொண்டிருக்கும் மலர்களின் நறுமணம் தென்றல் காற்றோடு கலந்து வந்தது. ஓர் புறத்திலிருந்து அகிலின் புகை மெல்லப் பரவியது. நீல வானத்தைக் கூரையாகக் கொண்ட அந்த முற்றம் கந்தர்வலோகம் போல் காட்சியளித்தது.

திடீரெனப் பாதச் சலங்கை ஒலி கேட்டது. தொடர்ந்து இனிய பாடல் எழுகிறது.

‘குன்றெறிந்து குலம் காத்த குமரன்வந்து

காவானோ தோழி? காவானோ தோழி?

மன்றமும் பொதியிலும் மகிழ்ந்தே விளங்குவான்

மலையிடைப் பொழிலிடை மலர்ந்தே வாழ்வான்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

இன்றிங்கு வந்தெனக் காறுதல் கூறியே

இடரொழித் தினிமை கூட்டுவனோ தோழி...

வீரமாதேவி பாடிக் கொண்டே ஆடுகிறாள். இது என்ன? இராசராச விஜயம் நாடகத்தில் வரும் காட்சியா? இதுவரைப் பார்த்ததில்லையே. பாடலைக் கேட்டதில்லையே.

இராசராசனும், இராசேந்திரனும் நிமிர்ந்து பார்க்கின்றனர்.

பல ஆண்டுகளுக்கு முன்பு அரியணை ஏறுவதற்கு முன்பு இராசராச சோழருக்கு அருண்மொழி என்ற பெயர்.

பட்டத்துக்கு உரிமையுடைய ஆதித்த கரிகாலன் படுகொலை செய்யப்பட்ட பிறகு தான் ஏற்க வேண்டிய சோழநாட்டு மணி முடியை யாரும் எதிர்பாராத வகையில் உத்தம சோழருக்குக் கோலாகலமாக அணிவித்து விழா நடத்திவிட்டு, தன் சகோதரி இளைய பிராட்டியாரின் யோசனைப்படி கடல் கடந்த நாடுகளுக்கு நாகைப் பட்டினத்திலிருந்து கிளம்பிய கலிங்கத்துக் கலம் ஏறிப் புறப்பட்டார். கலிங்கத்துக் கலம் மிகப் பெரியது. அதில் மூன்று அடுக்குகள் இருந்தன. மேல்தளம், இடைத்தளம், அடித்தளம், அடித்தளத்தில் வணிகர்களின் பண்டங்கள் சேமிக்கப்பட்டிருந்தன. இடைத் தளத்தில் கலத்தில் பயணம் செய்வோர் தங்கியிருந்தனர். பல நாள்கள் பயணத்திற்குப் பிறகு கலிங்கத்துக் கலம் முல்லைத் தீவை அடைந்தது. கலத்திற்குத் தேவையான பொருள்களை முல்லைத் தீவில்தான் சேகரிப்பது வழக்கம். தவிர மரக்கலத்தின் இருபுறமும் படிந்திருக்கும் கனமாக பாசிகளை அகற்றிப் பழுதுபார்க்கவும் அத்தீவில் சில நாள்கள் தங்க விரும்பினார், கலபதி.

முல்லைத் தீவில் உட்புறத்தே வளைந்து செல்லும் ஆழமான கழிக்குள் கலிங்கத்துக் கலம் நங்கூரம் பாய்ச்சி நின்றது. மூன்று நாள்கள் கலம் அந்தத் தீவில் தங்குமென்றும், மூன்றாவது நாள் பொழுது சாயுமுன்னர் கலம் புறப்படுமென்றும் கலபதி அறிவித்திருந்தார். கலத்தில் வந்த வணிகர்கள் கடற்கரையின் வெண்மணல் பரப்பில் கூடாரமடித்துத் தங்கினர். மாறு வேடத்திலிருந்த அருண்மொழி தீவிற்குள் சென்றார்.

வணிகர்கள் தங்கியிருந்த கூடாரத்தை நோக்கி அருண்மொழி மெல்ல நடந்தார். மற்றவர்கள் முன்னதாகவே உறங்கச் சென்றுவிட்டனர். அவரைத் தொடர்ந்து யாரோ வரும் காலடி ஓசை.... அருண்மொழி திரும்பினார். அவ்வுருவம் மர நிழலோடு நிழலாக மறைந்தது. வேறு எவராக இருக்க முடியும்? ரவிதாசன்தான்! அவன் ஏன் தன்னைத்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தொடர்கிறான்? தன் உண்மைத் தோற்றத்தைக் கண்டு கொண்டானா? ஆடையைச் சரிப்படுத்திக் கொண்டார், அருண்மொழி. தலை முண்டாசை ஒழுங்குபடுத்திக் கொண்டார்.

கூடாரத்தில் அவர் படுத்து உறங்குவதற்குக் கண்களை மூடிக்கொண்டார். துயில் அவரை வந்து அடையவில்லை. பல நினைவுகள். அலை கடலின் ஒலி, காற்றின் ஓசை, கலத்தின் காவலர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து தத்தம் மொழியில் பாடும் ஓசை, சில வணிகர்கள் வாய்ப்பிதற்றலால் ஏற்படும் புரிய முடியாத சப்தம் எல்லாமாக வந்து அவரைச் சூழ்ந்தன. 'யார் அது'...அருண்மொழி துள்ளி எழுந்தார். கூடாரத்து வாயிலில் யாரோ வந்து சென்றது போன்ற ஓசை. மெல்ல எழுந்த அருண்மொழி வெளியே வந்தார்.

எங்கிருந்தோ மெல்லிய இசை காற்றில் மிதந்து வந்தது.

'குன்றெறிந்து குலம்காத்த குமரன் வந்து

காவானோ தோழி? காவானோ தோழி?

மன்றமும் பொதியிலும் மகிழ்ந்தே விளங்குவான்

மலையிடைப் பொழிலிடை மலர்ந்தே வாழ்வான்

இன்றிங்கு வந்தெனக் காறுதல் கூறியே

இடரொழித் தினிமை கூட்டுவனோ தோழி'.

ஆகா, நம் கையில் சுருதியெழுப்ப இசைக்கருவி இல்லையே: உடன் பாட இசை கற்றோமா? அதுவும் இல்லையே. இதுவரை நாம் கண்டதென்ன? அரண்மனை வாழ்வு.... போர்க்களத்துச் சூழ்நிலை. இதுதான் வாழ்க்கையா? இசையில் உயிரைப் பறிகொடுக்க மாட்டோமா? இனிய நடனத்தில் சிந்தையைச் செலுத்த மாட்டோமா? இவற்றை இப்படியே இதயச் சுவரில் ஓவியமாகத் தீட்டி வைத்துக் கொள்ள மாட்டோமா!

'இளைய பிராட்டியாரே! நீங்கள் நீடூழி வாழவேண்டும். நீங்கள் என்னை வெளிநாட்டிற்கு அனுப்பாவிடில் இந்த மரகத பூமியின் சௌந்தர்யம் காண்பேனா? நீலவானத் தடாகத்தில் பூத்த வெண்தாமரை மதியின் குளிர்க் கிரணச் சூழலில் தேவமாதரைப் போல இசை பாடும் மகளிரைக் காண்பேனா....?

மறுநாள் இப்படிச் சிந்தித்தபடியே அருண்மொழி காற்றிலே இசை வந்த

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

திக்கு நோக்கி இரண்டடி எடுத்து வைத்தார்.

அருண்மொழி வெண்மணற் பரப்பில் நடந்து கடற்கரையை அடைந்தார். தாழை சூழ்ந்த தடாகத்துக் கரையில் நீண்டு நிமிர்ந்த பாறையின் மேல் இன்பவல்லி அமர்ந்து வானத்தைப் பார்த்துப் பாடிக் கொண்டிருந்தாள். அவள் பாடலுக்கு மினு மினுக்கும் தாரகைகள் தாளம் போட்டன. காற்றில் அசைந்தாடும் தென்னைக் கீற்றுகள் சுருதி மீட்டின. உதிரும் புன்னை மலர்கள் கைகொட்டி ஆரவாரித்தன. வெண்நுரை கக்கி விரைந்து வந்து கரையைத் தழுவும் வெண்திரைகள் ஆடிப்பாடின.

# 51

# பேரரசரின் அருளாசி

அருண்மொழி தன் தலைப்பாகையை மெல்லக் கழற்றினார்.

“ஆஹா....” என்று மெல்லக் கூறினார்.

இன்பவல்லி திடுக்கிட்டு எழுந்தாள், பாட்டை நிறுத்தினாள்.

“ஏன் நிறுத்தி விட்டாய்? பாடு! ‘குமரன் வரக்கூவுவாய் குயிலே’ என்று பாடேன்”.

இன்பவல்லி மெல்ல நகைத்தாள், வெட்கத்தால் அவள் தலை குனிந்தாள்.

“பெண்ணே, ஏன் நிறுத்திவிட்டாய்?”

“பெண்ணா? இன்பவல்லி என் பெயர்”.

“இன்பமாக இருக்கிறது”.

“உங்கள் பெயரை அறிவது தவறாகுமா?”

“தவறென்ன? என் பெயர் சித்திரசேனன்”.

“ஊர்?”

“என் ஊர் காந்தார தேசம்”.

“இல்லை இல்லை: இல்லவே இல்லை!”

“பிறகு....?”

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“எனக்குத் தெரியாது…”

அருண்மொழி அவள் கண்களை நோக்கினார். அந்தப் பேச்சை மாற்ற விரும்பி,“இன்பவல்லி! நீ இவ்வளவு அழகாகப் பாடுகிறாயே! நீ ஏன் குரவைக் கூத்தில் கலந்து கொள்வதில்லை?” என்றார்.

இன்பவல்லியின் கண்களில் கண்ணீர் தளும்பியது. “என் தந்தை என்னை அனுமதிப்பதில்லை”.

“உனக்குக் குரவைக் கூத்து நல்ல பாடமா?”

“ஆகா! அதை நான் யாரிடமாவது ஆடிக் காட்டாவிடில் என் நெஞ்சு வெடித்துவிடும் போலிருக்கிறது. யாரிடமாவது ஆடிக் காட்டாவிடில் கால்கள் முரிந்துவிடும் போலிருக்கின்றன!”

“எனக்கு ஆடிக்காட்டேன்”.

“ஆட்டுவித்தால் ஆரோருவர் ஆடாதாரே?”

“இன்பவல்லி! நீ தமிழ் இலக்கியம் படித்திருக்கிறாயா?”

“எதையும் நான் கற்றதில்லை: கேட்டிருக்கிறேன்”.

“இந்தத் தீவில் உனக்கு இவற்றைக் கற்றுக் கொடுத்தது யார்?”

இன்பவல்லி மௌனமாக இருந்தாள். அவள் இப்போது அருண்மொழியையே உற்று நோக்கினாள். அவளுடைய கண்கள் ஒளி வீசின.

“நான் கேட்டது உனக்குப் பிடிக்கவில்லையென்றால், நீ மறுமொழி கூற வேண்டாம்” என்று அருண்மொழி கூறினார்.

“அப்படியெல்லாம் எண்ணிவிடாதீர்கள். என் மௌனம் தவறுதலாகப் பட்டால் பொறுத்துக் கொள்ளுங்கள். என் பிறப்பின் இரகசியம், நான் வளர்ந்த இரகசியம் யாருக்கும் தெரியாது. இதுவரை என் தந்தையோ நானோ யாருக்கும் கூறியதுமில்லை. உங்களிடம் என் இதயத்தையே ஒப்படைத்துவிட வேண்டும் எனும் எண்ணம் எனக்கு ஏனோ ஏற்பட்டுவிட்டது! என் இதயம் உங்களை வேண்டியவர் எனக் கூறிக்கொண்டிருக்கிறது. விட்ட குறை ஏதேனும் இருக்கும்போல் தோன்றுகிறது”. இன்பவல்லி உணர்ச்சி வசப்பட்டுப் போனாள்.

அருண்மொழிக்கே அந்த நிலை மிகப் புது அனுபவமாக இருந்தது. சோழ நாட்டிலிருந்து பல காத தொலைவுக் கப்பால் கடல் சூழ்ந்த தீவொன்றில்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

இப்படி ஒட்டி உறவாடும் நிலை தனக்கு எப்படி வந்தது! முன்பின் அறியா மங்கை ஒருத்தியின் எதிரே அவளது தந்தையின் சம்மதம் பெறாமல் தனித்துப் பேசத் துணிவு எப்படி வந்தது? இளவரசன் எனும் எண்ணம் - துணிவு உள்ளத்தில் இருப்பதால் இப்படித் திடீரெனப் பழகுகிறோமா? அவர் தன்னையே சோதித்துக் கொண்டார்.

இன்பவல்லி இப்பொழுது எழுந்து நின்றாள். “என் கதையை மற்றொரு நாள் கூறுகிறேன். இப்போது வேளை வந்துவிட்டது. இது காறும் நான் கற்றிருந்த கலையையெல்லாம் எவரெதிரேயாவது அரங்கேற்ற வேண்டிய போது ஏற்பட்டுவிட்டது. என் ஆட்டத்தில் தவறிருந்தால் பொறுத்தருளுங்கள்” என்று கூறினாள். கால்களில் சதங்கையை அணிந்தாள்.

அகக் கூத்து ஆடத் தொடங்கினாள். பாடியவாறு ஆடினாள், ஆடியவாறு பாடினாள். மாயவன் ஆடும் அல்லி ஆடினாள். முக்கண்ணன் ஆடும் பாண்டரங்கமாடினாள். நெடியோன் ஆடும் துடியாடினாள். திருமகள் ஆடும் பாவைக் கூத்தாடினாள். ஆட்டத்துக்கு உறுதுணையாகக் கலீர் கலீரெனச் சதங்கை ஒலி மட்டுமே எழுந்தது. கடற்கரைப் பகுதி முழுமையும் அமைதியுடன் அவள் ஆட்டத்தை ரசித்தது. புள்ளினங்கள் உறங்கியவாறே கனவிலே அவள் கூத்தைக் கேட்டு மகிழ்ந்து மறுநாள் பொழுது விடியும்போதே உற்சாகமாகச் செல்ல வழி கோலின. வெண்திரை தன் கரங் கொட்டி ஆர்ப்பரித்தது.

அருண்மொழிக்கு அத்தீவில் இருப்பது போன்ற உணர்வே இல்லை. இன்பவல்லி தேவ கன்னிகையாகவும் தான் தேவராஜனாகவும் ஒரு கணம் மாறிவிட்டது போன்று உணர்ந்தார். அவள் இப்போது பாவைக் கூத்தாடத் தொடங்கினாள். அவளுக்கு முதற் கை கொடுக்க இப்போது அருண்மொழி முன் வந்தார். முதல் நாள் கண்ட ஆட்டத்தை நொடியில் கற்றுக் கொண்ட அவர் ஆடுவதைக் கண்டு அவள் அதிசயித்தாள்.

முதற் கை கொடுக்க அவள் கரத்தை அவர் பிடித்த போது அவள் உடல் சிலிர்த்தது.

அவள் கை விரல்களுடன் அவரது விரல்கள் பிணைந்த போது அவளது உடல் சிலிர்த்தது.

இன்பவல்லி பாத்திரம், வீரமாதேவி ஏற்றிருந்தாள். கலைக்கூடத் தலைவி அருண்மொழியாக நடித்தாள். அவள் கம்பீரமாக வரும்போது இராசராசன் மெய் சிலிர்த்தது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

இராசராசனும், இராசேந்திரனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். ஆயிரமாயிரம் செய்திகளை அவர்களுடைய விழிகள் பரிமாறிக் கொண்டன.

மீண்டும் கட்டியங்காரர் தன் குரலில் கூறினான்:

“நமது மதிப்புமிகு சக்கரவர்த்தியின் தந்தையார் இராசகேசரி இராசராச சோழ தேவர் தம் இளவயதில் முல்லைத் தீவில் இன்பவல்லியைச் சந்தித்த கதையை இதுவரையில் கண்டீர்கள். இராசகேசரி இராசராச சோழ தேவர் பாத்திரத்தை ஏற்று நடிக்க வல்லவர் யார் இருக்கிறார்கள்? முல்லைத் தீவு சம்பவத்தை முற்றிலும் ரசித்துணர்ந்தவர்களால்தான் முடியும். பாத்திரமாக மாறுபவர்களின் முகபாவம், அபிநயம்தான் முக்கியம். அதற்குத் தகுதியானவர் இதோ அருண்மொழியாக வருகிறார்!”

கலைக்கூடத் தலைவி இன்பவல்லியின் மகள் என்பதை இராசேந்திரன் அறியவில்லை. பல ஆண்டுகளுக்கு முன்பு பூங்கொடி என்ற பெயரில் தஞ்சை மாளிகையில் பணிப்பெண்ணாக இருந்த போது அவள் மீது இளம் வயதில் மதுராந்தகனாக விளங்கிய இராசேந்திரன் அவள் நாட்டியத் திறமையில் மோகங்கொண்டதும் சிறிது சிறிதாக அவளிடம் தன் மனத்தைப் பறிகொடுக்க முயன்றதும், அதை அறிந்த இளைய பிராட்டி குந்தவ்வை தேவியார் இன்பவல்லியின் மகள் பூங்கொடி என்பதறிந்து திடுக்கிட்டாள். அருண்மொழியின் மூலம் இன்பவல்லிக்குப் பிறந்த பூங்கொடியை மதுரன் காதலிப்பதா? சகோதரியைக் காதலிப்பதா! ஐயோ என்ன கொடுமை?

இளைய பிராட்டி மிக மன வேதனையுடனே பூங்கொடியை மதுரனிடமிருந்து பிரித்தாள். இன்பவல்லியையும் அருண்மொழியுடன் சேராமல் செய்தாள். எல்லாம் சோழ நாட்டு நன்மைக்குத்தான் என்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டாள். எவ்வளவு பெரிய அபாயத்திலிருந்து மதுரனை மீட்டாள்! இராசராசன் இதை அறிந்தபோது திடுக்கிட்டார். சோழர் குலத்துக்கு ஏற்பட இருந்த பெரும் அவமானத்திலிருந்து காப்பாற்றியதற்காக இளைய பிராட்டிக்கு ஓராயிரம் நன்றி தெரிவித்தார்.

இன்பவல்லியைத் தன்னிடமிருந்து பிரித்ததற்காக இளைய பிராட்டியிடம் இராசராசனுக்கு வருத்தம் இருந்தாலும், இன்பவல்லி தன் வாழ்நாளில் இறுதிக் காலம் வரையில் காவியப் பணியில் ஈடுபட்டிருக்க வழி செய்தார். அவள் பெற்றெடுத்த அழகிய பெண்தான், பூங்கொடி.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சோழப் பேரரசருக்குப் பிறந்தவள் என்ற செய்தி வெளி உலகத்துக்குத் தெரியாதவாறு பார்த்துக் கொண்ட இளைய பிராட்டியின் திறமையைக் கண்டு அவர் வியப்படைந்தார்.

அருண்மொழியாகவும் - இன்பவல்லியாகவும், பூங்கொடியும், வீரமாதேவியும் வேடம் பூண்டு இராசராச விஜயம் நாடகத்தை நடித்தபோது இராசராசனுக்கு மனநிறைவு ஏற்பட்டது.

முல்லைத் தீவிலிருந்து அருண்மொழி சோழ நாடு திரும்புகிறார். அதற்கு முன்பு இன்பவல்லியைச் சந்திக்கிறார். இந்த நிகழ்ச்சி நடந்து பல ஆண்டுகள் ஓடி மறைந்து விட்டன. அவர் மனதில் அந்த நிகழ்ச்சி பசுமையாக இருக்கிறது. அவருடைய சோர்வு எல்லாம் பறந்தோடியது போன்ற உணர்வு.

அதற்கு மேல் அவரால் அங்கு இருக்க முடியவில்லை. சில்லென்ற காற்று அவர் உடலில் மெல்லிய நடுக்கத்தை ஏற்படுத்தியது. இதயப் படபடப்பு அதிகமாகியது. அவர் இராசேந்திரனை மிக அருகே அழைத்தார். நாட்டிய நிகழ்ச்சியை உடனே நிறுத்துமாறு சொன்னார்.

“இந்த நாடகத்தை நான் எதற்காக இன்று நடத்தச் சொன்னேன் என்று நீ கேட்கவில்லையே?” என்று தன் மகனை நோக்கிக் கேட்டார்.

மிகப் பணிவான குரலில்,“நான் எப்படிக் கேட்க முடியும் தந்தை அவர்களே! இராசராச விஜயம் நாடகத்தைத் தாங்கள் காண விரும்பும்போது, எதற்கு, ஏன் என்று நான் கேட்பது மரியாதையா? ஆனால் ஒரே ஒரு சந்தேகம். முல்லைத் தீவிற்குத் தாங்கள் சென்றதும், இன்பவல்லியைச் சந்தித்ததும் இராசராச விஜய நாடகத்தில் எழுதப்பட்டுள்ளதா என்பது எனக்குத் தெரியவில்லை. இன்று பழைய சம்பவங்களை நடத்திக் காட்டச் சொன்னதற்கு என்ன காரணம் என்பதுதான் எனக்குத் தெரியவில்லை. அதற்காகத்தான் காட்டுப் பகுதியிலிருந்து வீரமாதேவியையும் தலைவியாக விளங்கும் கலைச் செல்வியையும் உடனே அழைத்து வருமாறு கூறினீர்கள் என்பதை நான் இப்போதே புரிந்து கொண்டேன். முல்லைத் தீவு சம்பவங்கள் முழுமையும் அவர்கள் எப்படி அறிந்திருந்தார்கள் என்பதுதான் எனக்கும் புரியவில்லை” என்றார் இராசேந்திரன்.

“என் அன்புள்ள இராசேந்திரா! என் மனதில் இதுவரை புதைந்துள்ளவற்றை வெளிப்படுத்த வேண்டிய காலகட்டம் வந்துவிட்டது. அதை விவரிக்கவே நான் அவர்களை வருமாறு கூறினேன். பூங்கொடி உன் சகோதரி என்பதைப் புரிந்து

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கொண்டிருப்பாய். மிகவும் கட்டுப்பாடாக இதுவரை நடந்து கொண்டிருக்கும் கலைக்கூடத் தலைவியாகத் தியாக மங்கையாகக் கழித்து வரும் அவள்தான் நாட்டியக் கலையில் திறமை உடையவர்களை உருவாக்கி வரும் பணியைச் செய்து வருகிறாள். தஞ்சைக் கோயிலிலும் மற்றும் சோழ நாட்டுக் கோயில் ஒவ்வொன்றிலும் கலையை வளர்க்கும் பெண்களை உருவாக்கி வருகிறாள். தன்னைப் போன்று பதி இல்லாத பெருமகள்களாக அந்தப் பெண்களை உருவாக்கி வரும் சிறந்த கலைப் பணியாற்றி வருகிறாள்.

“வருங்காலத்தில் நீ செய்ய வேண்டிய மகத்தான பணியை விளக்கவே இராசராச விஜயம் நிகழ்ச்சி. இன்றே, இன்று இரவே, நான் உன்னிடம் என் மனதில் உள்ளவற்றைச் சொல்லிவிட வேண்டும்” என்றார்.

“சக்கரவர்த்திகளே! இன்றே, இந்த இரவிலா? தங்கள் உடல்நிலை இடம் கொடுக்குமா?” இராசேந்திரன் கவலையுடன் கேட்டார்.

“ஆம்.... ஒருநாள்கூடத் தாங்க முடியாது” என்றார் இராசராசன் கண்டிப்பு நிறைந்த குரலில்.

அன்று இரவு அவர் கூறியவை, இராசேந்திரனுக்கு ஒருபுறம் வியப்பையும் மறுபுறம் மகிழ்ச்சியையும் அளித்தது. தந்தையின் திருவடிகளைத் தொட்டு வணங்கினார்.

இராசராச சோழர் சயனித்திருக்கும் அந்த அறை மிகவும் விசாலமானது. அதை ஒரு சித்திர விசித்திரமான கூடம் என்றே சொல்வார்கள். அந்தக் கூடத்துச் சுவர்களில் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. தஞ்சைப் பெருவுடையார் கோயில் கருவறையின் திருச்சுற்றில் வண்ண ஓவியங்கள் வரைந்த அதே ஓவியர்தான் தன் மாணாக்கருடன் ஓவியங்களை வரைந்து அந்த அறையின் எழிலை மேலும் கூட்டியிருந்தார்.

திருவலஞ்சுழிக் கோயிலிலிருக்கும் சாளரம் போன்று பெரிய சாளரங்கள் வெளிச்சத்தை அளவோடு அளித்துக் கொண்டிருந்தன. காலதர் வழியே நந்தவனத்து நறுமணத்தைச் சுமந்து காற்று வீசிக் கொண்டிருந்தது. அன்று சாளரத்தை திரைச்சீலைகள் மூடி மறைத்தன. காற்று அளவோடு வருவதற்குக் காலதர்கள் பல மூடப்பட்டன. அவ்வப்போது மூச்சுத் திணறும் அரசருக்குச் சிகிச்சை செய்ய அரச வைத்தியர் கூடத்திற்கு வெளியே ஆயத்தமாக இருந்தார்.

வெண் சாமரம் வீசும் பணிப்பெண்கள்கூட அங்கே

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அனுமதிக்கப்படவில்லை. இராசேந்திரன் உடன் பிறந்தவர்களான இராசராசன் புதல்வியரும் அங்கே முறை போட்டுக் கொண்டு அரசர் அருகே இருந்தனர். ராஜமாதா கவலையே உருவாக மஞ்சத்தில் அமர்ந்திருந்தார்.

இராசராச விஜயம் நாடகத்தை முற்றிலும் அரசர் பார்க்கவில்லை. அவர் குறிப்பறிந்து நாட்டிய நாடகம் நிறுத்தப்பட்டது. பக்கவாத்தியக்காரர்கள் வணங்கி விடை பெற்றுச் சென்றனர்.

பூங்கொடியும் வீரமாதேவியும் தங்கள் வேடத்தைக் கலைக்காமல், அரசர் எதிரே மிக்க மரியாதையுடன் நின்று கொண்டிருந்தனர். கைத்தாங்கலாக இருவர் பிடித்துக் கொள்ள அரசர், சயன மண்டபத்திற்குச் சென்றார்.

அவரைத் தொடர்ந்து இராசேந்திரனும், பூங்கொடியும், வீரமாதேவியும் மெல்ல நடந்தனர்.

இராசராசர், இராசேந்திரனையும், வீரமாதேவியையும், பூங்கொடியையும் அருகே அழைத்தார்.

நடுச்சாமம் நெருங்கிக் கொண்டிருந்தது. ஓய்வின்றி அரசர் இவ்வேளையிலும் பேச முற்படுகிறாரே என்று மாளிகை நாயகம் கவலைப்பட்டார்.

மெல்லிய குரலில் மாளிகைப் பணியாட்கள் பேசிக் கொண்டனர். ‘இனி பயமில்லை என்றே மருத்துவர் சொல்கிறார்’ என்ற செய்தி மெல்ல மெல்லப் பரவியது.

திருவாய்க் கேள்வி மிகவும் மரியாதையுடன் மன்னர் அருகே நின்று கொண்டிருந்தார்.

இராசேந்திரன் தந்தை அருகே வந்தார்.

நடுநிசியைத் தாண்டிவிட்டது என்றும், சக்கரவர்த்திகள் இப்போது ஓய்வு எடுத்துக் கொள்வது நல்லதென்றும் மருத்துவர் கண்டிப்பாகக் கூறுவதாகவும், காலையில் சந்திக்கலாம் என்றும் இராசேந்திரன் தந்தையிடம் மெல்லக் கூறினார்.

அவரால் மிகவும் மெல்லிய குரலில்தான் பேச முடிந்தது என்பதால், இராசராசர் தலையசைத்து மறுத்தார். “இராசேந்திரா! ஒரு நொடி கூட என்னால் இனி காத்திருக்க முடியாது. என் அருகே வா!” என்று அழைத்தார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

இராசேந்திரன் அவர் அருகே சென்று குனிந்து பயபக்தியுடன் நின்றார். அவர் அருகே வீரமாதேவியும் சென்று வணங்கி நின்றாள். பேரரசரை மிக அருகே அவள் காண்கிறாள். சில நாள்களுக்கு முன்பு, இவ்வளவு நெருக்கமாக இல்லாவிடினும் சற்றுத் தொலைவில் பார்த்திருக்கிறாள்.

ஆகா, அந்தப் பொன்னிற மேனி, சுருங்கிய மாங்கனியைப் போல் ஆகிவிட்டதே!

அவர்கள் செவிக்கு மட்டுமே கேட்கும் வகையில் இராசராசர் மெல்லப் பேசினார்.

அவர் கூறியவை கேட்ட இராசேந்திரன் மெய் சிலிர்த்தது. விழிகளில் நீர் ததும்பியது. உணர்ச்சி மிகுதியால் அவர் உடல் மெல்ல நடுங்கியது.

“தந்தையே!” எனக் கூறி அவர் காலடியில் வீழ்ந்தார். வீரமாதேவியும் வணங்கினாள்.

வீரமாதேவியும், இராசேந்திர சோழரும் அன்று நடுச்சாமத்திற்குப் பிறகு தம் மாளிகையில் தங்குவதற்குச் சென்றனர். பின்னிரவு நேரத்தில் அவர்களுக்கு உறக்கம் பிடிக்கவில்லை. சக்கரவர்த்தியின் சொற்கள் அவர்கள் இதயத்தில் ஒலித்தவாறு இருந்தன.

“சக்கரவர்த்தியின் அருகிலேயே இன்னும் சிறிது நேரம் இருக்கமாட்டோமா என்று தோன்றுகிறது” என்றாள், வீமாதேவி. இரவு நடைபெற்ற நாட்டிய நாடகத்தில் அவள் ஒன்றிவிட்டாள். இராசராச சோழரின் மனங்கவர்ந்த இன்பவல்லியாகத் தான், நடிக்க வாய்ப்புக் கிடைத்ததற்காக அவள் இறைவனுக்கு நன்றி தெரிவித்தாள்.

“இறைவனுக்கு நன்றி கூறுவதைவிட, பூங்கொடிக்குத் தான் நீ நன்றி தெரிவிக்க வேண்டும்” என்றார் இராசேந்திரன்.

“பூங்கொடிக்கா, ஏன்? சக்கரவர்த்தியாக வேடம் பூண்டதற்காகவா?”

“அதற்காகவும் - அத்துடன் முல்லைத் தீவில் நடைபெற்ற சம்பவத்தை விவரித்ததற்காகவும் - இன்பவல்லியைப் பற்றிய வரலாற்றை விவரித்ததற்காகவும் நீ நன்றி தெரிவிக்க வேண்டும்” என்று கூறிவிட்டு, இராசேந்திரன் சொன்னார்.

“வீரமாதேவி! இளைய பிராட்டியார் குந்தவ்வை தேவியாரில்லாவிட்டால் நானில்லை. ஏற்படவிருந்த பெரும் ஆபத்திலிருந்து அவர்கள் என்னைக் காப்பாற்றினார், தெரியுமா?”

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“ஆகா, நன்றாகத் தெரியும். வரவிருந்த பெரும் ஆபத்து என்பதைவிட அவமானத்திலிருந்து என்று சொல்லுங்கள். நடந்த கதை எல்லாம் எனக்குத் தெரியும். இன்பவல்லியின் மகள் பூங்கொடி. இந்த நாட்டை ஆள ஒரு பெண்ணுக்கு உரிமை உண்டென்றால் பூங்கொடிதான் சோழ அரியணையில் அமர்ந்திருக்க வேண்டும். அவள் உரிமை பெற்றுவிடப் போகிறாளென்று இளைய பிராட்டி தடுத்து விட்டார். நாட்டைவிட்டே வெளியேறி விடுமாறு இன்பவல்லியிடம் சத்தியம் பெற்றாள். அது நியாயமான செயலா சொல்லுங்கள். பிறகு இன்பவல்லியின் வயிற்றில் பிறந்த பூங்கொடி மீது தாங்கள் அறியாது காதல் கொண்டதைத் தடுத்து அவளைக் கண்காணாமல் செல்லுமாறு செய்தாள்.

இளைய பிராட்டிக்கு அளித்த வாக்குறுதியை இன்பவல்லி நிறைவேற்றினாள். அவள் அழகிய குழந்தையைப் பெற்றெடுத்தாள். தாயும் சேயும் எந்தவிதக் குறையுமின்றி அந்த சின்னஞ்சிறு கிராமத்தில் வாழ்ந்து வந்தனர். அந்தக் கிராம மக்கள் நகரத்தைக் கண்டறியாதவர்கள். பூங்கொடியையும், இன்பவல்லியையும் கிராம மக்கள் மிகவும் மதித்தார்கள். இன்பவல்லியின் இனிய குரல் அவர்களைக் கவர்ந்தது. தேவாரத் திருப்பதிகங்களை அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தாள். வேல் ஒன்றை நட்டு அதை வழிபடும்படிச் சொன்னாள்.

‘குமரன் வரக் கூவுவாய் குயிலே’ என்ற பாடலைப் பாடி, அந்தப் பாடலை அனைவரும் பாடுமாறு கற்றுக் கொடுத்தாள்.

பல தினங்களுக்குப் பிறகு ஒரு நாள் குந்தவ்வை அந்தக் கிராமத்திற்கு வந்தாள். அவள் திடீரென்று வந்தாள். அப்போது இன்பவல்லி இனிய குரலில் இந்தப் பாடலைப் பாடிக் கொண்டிருந்தாள். முல்லைத் தீவில் நடைபெற்ற சம்பவங்கள் குந்தவ்வைக்குத் தெரியும். இந்தப் பாடல் மூலம்தான் அருண்மொழி இன்பவல்லியிடம் மிகவும் ஈடுபாடு கொண்டார் என்பதையும் அறிவாள்.

இன்பவல்லியிடம், இளையபிராட்டி மீண்டும் வேண்டிக் கொண்டாள். ‘உன் மனதில்கூட என் இளவலின் நினைவு எழக்கூடாது. இந்தப் பாடலைப் பாடக் கூடாது’ என்று அன்பாகவும் எச்சரிக்கையாகவும் கூறினாள். இதுவரையில் இளையபிராட்டியிடம் மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்த இன்பவல்லி இப்பொழுது பெண்புலியெனச் சீறினாள்.

“தங்கள் இளவலுக்கும் சோழ நாட்டிற்கும் எந்தவிதத் தொல்லையும் ஏற்படாது என்று நான் உறுதிமொழி கொடுத்திருந்தேன் என்பது

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

உண்மைதான். ஆனால், ஒரு பெண்ணின் நெஞ்சில் குடிகொண்டிருக்கும் அவள் தெய்வத்தை அகற்றிவிடு, அழித்துவிடு என்று கூறுவதும் ஒரு பெண் என்றால் அதை உலகம் பொறுத்துக் கொள்ளாது. நான் இந்தக் கானகச் சூழலிலிருந்து விடுபடுவேன். நந்திபுரத்துக்கு வருவேன். நந்திபுரத்து நாயகியான தங்கள் மாளிகை வாயிலில் நின்று பெரிதாக ஒலிக்கப் பாடுவேன்...”

இன்பவல்லியின் விழிகளில் கனல் வீசுவதைக் கண்ட இளைய பிராட்டி நடுநடுங்கிவிட்டாள். விரைந்து தன் கரத்தால் அவள் வாயைப் பொத்தி, அவளை அணைத்துக் கொண்டு,“இன்பவல்லி! உணர்ச்சி வசப்படாதே. ஒரு பெண்ணுக்குப் பெண் தீங்கிழைத்தாள் என்ற அவப்பெயர் வரலாற்றில் நிலைத்துவிடக் கூடாது. சோழ நாட்டின் நலனுக்காகவே, நான் உன் சொந்த வாழ்க்கையில் குறுக்கிட்டேன். இப்போது உன்னிடம் கேட்பதுகூடஅதற்காகத்தான். ஒருவர் உருவம் மற்றவர் மனத்தில் அழியாது பதிந்து இருப்பதை மாற்ற முடியாது என்பதும் எனக்குத் தெரியும். இந்தச் சின்னஞ்சிறு ஊர் மக்களை நீ மாற்றிவிட்டதை அறிந்தேன். நீ கற்றறிந்த நடனக்கலை வீணாகப் போய்விடக்கூடாது. இங்கு ஒரு நடனப்பயிற்சிச் சாலையை ஏற்படுத்தி, உனக்கு வேண்டிய உதவி செய்கிறேன். கலையில் பெண்களுக்குத் தேர்ச்சி ஏற்படுமாறு நீ செய்ய வேண்டும். என் இளவல் ஒரு திட்டத்தை மனத்தில் கொண்டுள்ளான். ஒவ்வொரு கோயிலிலும் இறைவன் திருமுன்பு இறைவன் புகழைப் பாடி நாள்தோறும் நடனமிட வேண்டும் என்று கலைஞர்களை வளர்க்க, ஊக்குவிக்க ஏற்ற நல்ல திட்டம். அதற்கு வடக்கே காளத்தி நகரத்திலிருந்து ஆடற்கலையில் சிறந்தவர்களை இங்கே அழைத்துவரப் போகிறானாம். நீ இந்தக் கிராமத்திலிருக்கும் இளம் பெண்களுக்கு நாட்டியம் கற்றுத் தந்து அவர்களை நடனக் கலையில் பயிற்றுவித்து சிறப்படையுமாறு செய்!

இன்பவல்லியின் கண்கள் கலங்கின. இளைய பிராட்டியின் பாதங்களைத் தொட்டு வணங்கி அவ்வாறே செய்வதாக வாக்களித்தாள்.

சில திங்கள் சென்றன. அங்கேயே தங்கி நடனம் பயில ஒரு பள்ளி உருவாகியது. பூங்கொடியும் தாயிடம் நடனம் கற்றாள். அவளுடைய நடனத்தில் இளைஞனாயிருந்த மதுராந்தகன் மயங்கினான். பூங்கொடி தங்கை என்பதறியாது காதல் கொண்ட மதுராந்தகனை இளைய பிராட்டி தடுத்தாள். மீண்டும் சோழ நாட்டின் நலனுக்காகவும் சோழ அரசர்குல நலனுக்காகவும் இளைய பிராட்டி இளம் காதலைத் தடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அவை பழைய கதை. இன்பவல்லி இறந்த பிறகு தாயின் பணியை, பூங்கொடி தொடர்ந்தாள். இறைவனுக்குத் தன்னையும் நாட்டியக் கலையையும் அர்ப்பணித்துக் கொண்டாள். உணவும் உறைவிடமும் பெற்று நாட்டின் பல பகுதிகளிலிருந்து இளம் பெண்கள் நாட்டியம் பயில வந்தனர். அங்கே தங்கி நாட்டியக் கலையை முறையாகப் பயின்றனர். கன்னிமாடமாகத் திகழும் அந்த இடத்திற்கு வீரமாதேவியும் வந்து சேர்ந்தாள்.

வீரமாதேவி எல்லாச் செய்திகளையும் அறிந்திருந்தாள். தன் காதலையும் இளைய பிராட்டி தடை செய்து விடுவாள் என்றும் பயந்திருந்தாள். அந்த நிலை மாறி, தன்னை இராசேந்திரன் மணம்புரிந்து கொண்ட பிறகு, தானே ஓர் உறுதியான முடிவுக்கு வந்தாள். தன்னால் சோழர் குலத்தில் எந்தக் காலத்திலும் வாரிசு உரிமைக்காகப் போட்டியும், சச்சரவும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக மகத்தான தியாகம் செய்ய முன்வந்தாள். தன்மீது இராசேந்திரனுக்கு ஏற்பட்டுள்ள அழிக்க முடியா காதலை உடல் மீதில்லாமல் கலைமீது ஏற்படுமாறு செய்தாள். உலகத்துக்கே ஓர் எடுத்துக்காட்டாக வாழ்வேன் என்று மனதில் சபதம் செய்த வீரமாதேவி அதை உறுதியாகக் கடைப்பிடித்து வந்தாள். எளிய குடியில் பிறந்த தன்னை மற்றவர்கள் ஏளனமாகப் பார்க்கிறார்கள் என்பதையும் வீரமாதேவி அறிவாள். இராசேந்திரனின் கனவுக்கு மகத்தான இலட்சியத்திற்குத் தான் உறுதுணையாக இருக்கப் போகிறோம் என்ற மகிழ்ச்சியில் இருந்தபோது, மாமன்னர் இராசராசன் தன் மகனுடைய விருப்பத்திற்கு மாறாக எண்ணுகிறார் என்ற செய்தி வருத்தத்தை அளித்தது.

ஆனால் அன்று அவர் நடுநிசியில் கூறிய வார்த்தைகள், வழங்கிய ஆசிகள் எதிர்பாராதவை.

இராசேந்திரனும், வீரமாதேவியும் விடியும் வரையில் இராசராச சோழ தேவர் கூறியவற்றை எண்ணி எண்ணி மகிழ்ந்து கொண்டிருந்தார்கள். விடிவெள்ளி முளைக்கும் நேரத்திற்குச் சற்று முன்பு தங்களை அறியாமல் கண்ணயர்ந்தார்கள். திடீரென ஒரு கனவு. மகிழ்ச்சியாகவும் இருந்தது. பெரும் அதிர்ச்சியையும் அளித்தது.

இராசேந்திரனும், வீரமாதேவியும் ஒருவருக்கொருவர் தாங்கள் கண்ட கனவை விவரித்துக் கொண்டிருந்த போது மாளிகைக் காவல் தலைவர் பரபரப்புடன் அழைப்பது கேட்டது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

# 52

# ஒரு சகாப்தம் முடிந்தது

இராசேந்திரனும், வீரமாதேவியும் தாங்கள் கண்ட கனவினை ஒருவருக்கொருவர் விவரித்துப் பேசிக் கொண்டனர். இருள் விலகா வேளை.

“நம் இருவர் கனவிலும் என் தந்தையார் வந்தார் என்றால் அவருடைய ஆசி நமக்கு இருக்கிறது என்று தானே பொருள்?” என்று கூறிக்கொண்டே இராசேந்திரன் வீரமாதேவியை மெல்ல நெருங்கி மெல்ல அணைக்க முயன்றார். அந்த இளங்குளிர் வேளையில் அவளுடைய நெருக்கம் அவருக்குத் தேவையாக இருந்தது.

விழிகளில் கோபமும், இதழ்களில் குறும்புப் புன்னகையும் கொண்டு, வீரம்மாள் இராசேந்திரன் கரத்தை விலக்கி,“நம் இருவர் உள்ளத்திலும் மகிழ்ச்சி நிறைந்திருக்கிறது. இருவரிடையே உள்ள பாசப்பிணைப்பு வலுப்பெற்றுவிட்டது. காற்றும் நுழைய முடியா நெருக்கம் அதிகரித்துவிட்டது.

“சோழ நாட்டுச் சக்கரவர்த்தியான பிறகு தங்கள் பரிவும் பாசமும் மேலும் அதிகமாகிவிட்டன என்பது உறுதி. சோழ அரச குடும்பத்துள் ஒருவராக என்னைப் பேரரசர் ஏற்றுக் கொண்டு விட்டார் என்பதும் நேற்று இரவுநடந்த நிகழ்ச்சி தெளிவாக்கிவிட்டது. அரச குடும்பத்து நிகழ்ச்சிகளை விவரிக்கும் நாட்டிய நாடகத்தில் என்னைப் பங்கேற்க அழைத்ததன் மூலம் என் நிலையை உயர்த்தி உறுதிப்படுத்திவிட்டீர்கள்.

“தங்கள் தந்தை எனக்கு ஆசி வழங்கி விட்டார். அதுமட்டுமா? இரவு கனவில் வந்தார். எனக்குப் பல அறிவுரைகளை வழங்கினார். கனவு போலவே தோன்றவில்லை. என் அன்புக்கரசரே! அவர் கூறிய அறிவுரைகளில் முக்கியமானது, தங்கள் சொற்படி நடப்பதும் ஒன்றாகும். என்னைப் பற்றி முழுமையாக அவர் தெரிந்திருக்கவில்லை என்றே நினைக்கிறேன். நான் தங்கள் விருப்பம் அறிந்து, சொல்லைத் தட்டாமல் நடப்பேன் என்பது உங்களுக்குத் தெரியாதா?”

வீரமாதேவி கூறிவரும்போது, இராசேந்திரன் குறுக்கிட்டார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

விழிகளிலும் இதழ்களிலும் குறும்புப் புன்னகையுடன்,"பொய்... என்று அவருக்குத் தெரிந்திருப்பதால் தான் அவர் அந்த அறிவுரையைக் கூறினார்" என்றார்.

வீரமாதேவி ஒரு கணம் திடுக்கிட்டாள். பொய்க் கோபத்துடன் அவர் மார்பிலே சித்திரம் வரைவதுபோல் தன் நுனி விரலைத் தவழவிட்டு,"பொய்யா? என்ன சொல்கிறீர்கள்? தங்கள் சொல்லை எப்போது தட்டியிருக்கிறேன்?" என்று கேட்டாள். தொடர்ந்து....

"தாங்கள் கூறுவதை மீறி ஒரு வார்த்தை பேசியிருக்கிறேனா? முதன் முறையாக என்னைச் சிதம்பரத்தில் சந்தித்தீர்கள். நாட்டியம் பயிலுமாறு கட்டளையிட்டீர்கள். பிறகு என் நாட்டியத்தில் மயங்கினீர்கள். தங்கள் விருப்பப்படி தங்கள் எதிரே நான் ஆடினேன். பிறகு என்னை மணக்க விரும்பினீர்கள். தங்கள் தந்தை மற்றும் அரச குடும்பத்தார், குறிப்பாக இளவரசிகளின் விருப்பத்துக்கு மாறாக என்னைத் தாங்கள் ஏற்றபோது கிராமத்திலிருந்து என்னைப் பழையாறையில் குடியேற்றினீர்கள். பிறகு தஞ்சை மாளிகைக்கு வரச் செய்தீர்கள். அங்கே தங்களுடைய மற்ற மனைவியரின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளானேன். என்னை ஓர் இளவரசி என்பதை மறந்து அவர்கள் எதிரே ஆடச் செய்தனர். பொறுத்துக் கொள்ளுமாறு சொன்னீர்கள். எதிர்த்தேனா? தங்கள் தமக்கையாரின் அச்சமும் மற்றவர்களின் பயமும் எனக்குப் புரிந்தது. காட்டுப்பகுதிக்குச் சென்று கலைப்பணி புரியுமாறு கட்டளையிட்டீர்கள். ஏன் என்று கேட்டேனா? தங்களுக்கு மகுடாபிஷேகம் நடைபெற்ற செய்தி எனக்குத் தெரிவிக்கப்படவில்லை. நான் மனம் வருந்தினேனா? ஒரே ஒருமுறை நான் அதுபற்றிக் கேட்டேன். தங்கள் மௌனத்தை ஏன் என்று வினவவில்லை. ஏன்,எதற்கு என்று இதுவரையில் கேட்டேனில்லை!" சொல்லி வரும்போதே வீரம்மாளின் விழிகள் கலங்கின. குரல் தழுதழுத்தது.

இராசேந்திரன் திகைத்தார். அவள் விழிநீரைத் துடைத்து,"ச்ச்சீ... என்ன சொல்லிவிட்டேன் என்று துயரப்படுகிறாய். விளையாட்டுக்காகக் கூறினேன். பொழுதைச் சற்று இன்பமாகக் கழிப்போம் என்று எண்ணி நான் கேட்டதைக் கொடுக்காதது, சொன்னதைச் செய்யாதது - இது ஒன்றுதான்" என்று, தன் மிக அருகே மார்பில் முகம் புதைத்திருந்த அவளை இறுக அணைத்து, தன் முகத்தை அவள் முகத்தோடு அழுத்தி ஆலிங்கன சுகத்தைத் தொடர விரும்பி இமைப் பொழுதில் அவளைக் குழந்தைபோல் தூக்கி மஞ்சத்தில் கிடத்த முயன்றபோது, அந்த மாவீரன் பலத்துக்கு ஈடாக – ஏன் அதற்கும் மேலாகத் தன் பெண்மைச் சக்தியைப்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பயன்படுத்தி, அவரை மஞ்சத்தில் வீழ்த்தி, அவரிடமிருந்து விலகி, துள்ளி ஓடி 'வென்று விட்டேன்' என்று விழிகள் வெற்றிப் பெருமிதம் பொங்க அறை வாயில் அருகே சென்று நின்று, கலைந்த தன் ஆடையைச் சரி செய்து கொண்டாள். அவள் மேனி முழுமையும் இலேசாக நடுங்கிக் கொண்டிருந்தது. விழிகளில் வெற்றிப் பெருமிதமா? அச்சமா?

சோழ நாட்டுச் சக்கரவர்த்தி, வீரமாமல்லன், இளையோர் திலகம், போர்க்களத்தே பகைவர்களுக்கு அரிமா, இங்கே சயன அறையில், மஞ்சத்தில் தடுமாறி வீழ்ந்த நிலையில் இரு கரங்களையும் ஊன்றி வீரம்மாளைத் திகைப்புடன் நோக்கினார்.

'இவருக்கு இவ்வளவு காமமா? வாக்குறுதியைக் காமம் மீறிவிடுமோ – அடிபட்ட வேங்கையைப்போல் மீண்டும் தன் தாபம் தணிக்கப் பாய்ந்து வருவாரோ?' என்று வீரமாதேவி அச்சத்துடன் நிற்க, சோழ நாட்டுச் சக்கரவர்த்தி பரகேசரி இராசேந்திர சோழ தேவர் ஏமாற்றத்தை மறைக்கும் அசட்டுச் சிரிப்புடன்,"வீரம்மா! உன் உடல் வலிமையை இன்றே அறிந்தேன். பெண்களைப் பூவையர், மலர் மேனியர் என்றெல்லாம் வர்ணிப்பது பொய். என் சொற்படி நீ நடப்பதில்லை. என் கோரிக்கையை ஏற்பதில்லை என்பதை உணர்த்தவே நான் உன்னை ஒரு கண நேரத்தில் வருத்திவிட்டேன்" என்று கூறி, மஞ்சத்திலிருந்து மெல்ல எழ முயன்றார்.

வீரமாதேவி விரைந்து வந்து எழ முடியாமல் தவித்துக் கொண்டிருந்த அவர் திருக்கரத்தைப் பற்றி மெல்ல தூக்கி, பிறகு சரிந்து அவர் பாதத்தில் தன் முகம் பதித்தாள். விழிகளிலிருந்துச் சிந்திய நீர் பாதத்தை முத்தாக உதிர்ந்து நனைத்தது.

"அரசர்க்கரசே! என் வலிமையைப் புலப்படுத்த வேண்டும் என்பது என் நோக்கமன்று. பெண்ணொருத்தி தன் கணவனின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டிய கடமை உள்ளவள் என்பது உண்மைதான். ஆனால் அரசே, அதே சமயம் தன் கணவரின் உறுதிக்குப் பங்கம் நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டியவளாகிறாள். நாம் இருவரும் செய்து கொண்ட ஒப்பந்தம் என்ன? கொடுத்த வாக்குறுதி என்ன? சக்கரவர்த்திகளே! நேற்று முதல் தாங்கள் என்னைப் பார்க்கும் பார்வையை நான் அறிவேன். தங்கள் விழிகளில் தேங்கி நிற்கும் பசியை நான் உணர்வேன். சோழ நாட்டில் தங்களுக்குப் பிறகு அடுத்த வாரிசுரிமையை முன்பே நிலை நாட்டிவிட்ட தங்களுக்கு வருங்காலத்தில் என் மூலம் தொல்லை தருவதற்கு நான் ஒரு கருவியாகலாமா? நல்ல நாளான இன்று நல்லோரையில், ஓர் வாரிசு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

உருவாகக் கூடிய சூழ்நிலையை நான் ஏற்படுத்தலாமா? என்னைப் பொறுத்தருளுங்கள், அல்லது தங்களைவிட்டுப் பிரிந்து ஏழ் கடலுக்கு அப்பால் வாழுமாறு அனுப்பி விடுங்கள். விரத பங்கம் ஏற்படுமாறு மட்டும் செய்து விடாதீர்கள்.

“நேற்று மாமன்னர் இட்ட கட்டளை என்ன? அவர் நமக்கு அளித்த அறிவுரை என்ன? நாம் செய்ய வேண்டிய பணிகளுக்கு அவர் முழுமனதுடன் அளித்த வாழ்த்துகளை மறந்துவிட்டீர்களா?

“என் தலைவரே! நாம் இருவருமே ஒன்று போல விடிகாலையில் கனவு கண்டோம். அது கனவா? இல்லை இல்லை. முன்னிரவில் பேரரசர் கூறிய நல்லுரைகளின் எதிரொலி.

“எவ்வளவு ஆசைகளைப் பேரரசர் தம் மனதில் தேக்கி வைத்திருக்கிறார். தங்களுக்கு இசை, ஓவிய, நடன, சிற்பக் கலை ஆர்வம் எப்படி ஏற்பட்டது என்று நான் எண்ணிப் பார்த்திருக்கிறேன். அவருக்கிருக்கும் ஆர்வத்தில் பாதிதான் தங்களுக்கு இருக்கிறது என்று நான் சொன்னால் தாங்கள் தவறாகக் கருதமாட்டீர்கள். கிழக்கே கடல் கடந்த நாடுகளுக்கு அவர் விஜயம் செய்து அங்கிருந்து அவர் அறிந்தவற்றை அந்த நாட்டிய நாடகத்தினின்று நான் தெரிந்து கொண்டேன்.

“ஆகா! பெரிய கோயிலைக் கட்டவேண்டும் என்று அவர் எவ்வளவு காலமாகக் கனவு கண்டிருக்கிறார். தன் ஆர்வத்தை மனதிலே பல ஆண்டுகளாகத் தேக்கி வைத்திருக்கிறார். அவை அவருடைய முதுமைக் காலத்தில் நிறைவேறின. பகைவர்களை வென்று, அந்த நாட்டில் புலிக் கொடியைப் பறக்கவிடுவது மட்டும் அவர் இலட்சியமாயில்லை என்பதைத் தெரிந்து கொண்டேன்.

“அவருடைய சிறப்புப் பெயர்களை வரிசைப்படுத்திப் பிறர் கூறுவதைக் கேட்டிருக்கிறேன். அவர் வருகையை அறிவிக்கும்போது கட்டியம் கூறுபவன் விவரிக்கும் பெயர்களை விரல்விட்டு எண்ணியிருக்கிறேன். முப்பத்தேழு சிறப்புப் பெயர்கள்! ஒவ்வொரு பெயருக்கும் ஒரு காரணமிருந்தது என்பதையும் அறிந்தேன். செயங்கொண்ட சோழன், கேரளாந்தகன், சத்துரு புஜங்கன், சிங்களாந்தகன் என்ற பெயரெல்லாம் அவர் வீரத்துக்குச் சாட்சி.

“முதன் முதல் தங்களைச் சந்திக்கும்போது தங்கள் சுந்தரவடிவைக் கண்டு வியந்ததும், மோகித்ததும் உண்மை. தங்களுக்கு இவ்வளவு அழகு எப்படி வந்தது என்று நான் எண்ணியிருக்கிறேன். என்னிடம் அந்தரங்கமாகப் பேசும் மூதாட்டியை வினவியிருக்கிறேன். தங்கள்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பாட்டனார் சுந்தர சோழரை நீங்கள் அப்படியே உரித்து வைத்திருப்பதாகக் கூறினார்கள். ஆனால் நான் சொல்வேன். தந்தையின் பிரதிபிம்பமே நீங்கள். அவருக்குச் சோழகுல சுந்தரன், அழகிய சோழன் என்ற சிறப்புப் பெயர்கள் மிகவும் தகுதியானவையே.

“என் அன்பின் இருப்பிடமே! அவருக்கு உள்ள விருதுகள் - புகழ்ப் பெயர்கள் யாவும் தங்களுக்கும் பொருந்தும். பண்டித சோழன், நித்யவிநோதன் - கலையில் ஆர்வமுடைய அவருக்கும் தங்களுக்கும் தகும்.

“என்னைத் தாங்கள் மணந்தபோது, தங்களுக்கும் எனக்கும் உள்ள வயது இடைவெளியை என் தோழி சுட்டிக் காட்டியபோது, நான் அதைப் பற்றி எள்ளளவும் நினைக்கவில்லை. தங்களுடைய இதயம் கவர்ந்தவள் எனும் பெருமை என்னுள் நிறைந்தது. எனக்கு மட்டுமே தாங்கள் என்ற கர்வமும் எனக்கு இருந்தது. ஆனால் தாங்கள் முன்பே திருமணமானவர் என்றும், பட்டத்து இளவரசியாக உரிமை கொண்டாட வேறு ஒருத்தி இருக்கிறாள் என்பதையும் அறிந்து முதலில் அதிர்ச்சி அடைந்தேன். ஆனால் தங்கள் தந்தையின் வழியைத் தாங்கள் பின் பற்றியிருக்கிறீர்கள் என்பதை அறிந்து மனத்தைச் சமாதானப்படுத்திக் கொண்டேன். பத்துக்கு மேற்பட்டவர்களை மணந்திருந்ததை நாட்டிய நாடகத்தின் மூலம் தெரிந்து கொண்டேன். தாங்களும் தந்தை வழியைப் பின்பற்றியிருப்பதும் பெருமைதானே? ஆனால், தங்கள் தந்தையை உயிருக்கு உயிராகக் காதலித்த அபிமான வல்லியாகிய இன்பவல்லியை மட்டும் பேரரசர் இளவரசியாக அந்தப்புரத்தில் சேர்க்காதது எனக்கு வருத்தமே. அந்த வகையில் தங்கள் தந்தையைத் தாங்கள் பின்பற்றவில்லை என்பது எனக்குப் பெருமைதான். தங்கள் அத்தையார் இளைய பிராட்டி என் வாழ்க்கையில் குறுக்கிடவில்லை என்பது மனத்திற்கு நிம்மதியைத் தருகிறது. நான் அவர்களுக்குத் தொந்தரவு கொடுக்கவில்லை. நானே கட்டுப்பாடு செய்து தங்களுக்கு உறுதி மொழியளித்து விட்டேன்.

“தங்கள் தந்தையைப் போல் மற்றொன்றையும் தாங்கள் பின்பற்றியிருக்கலாம். அதுதான் - பேரரசருக்குத் தாங்கள் ஒரே புதல்வர். ஆனால் தங்களுக்கோ – (வீரமாதேவி மெல்லச் சிரிக்கிறாள்).

“மிகச் சிறந்த வீரராக மட்டும் அவர் விளங்கவில்லை. சிவபக்தி மிகுந்த அவர் பெரிய கோயிலைக் கட்டத் தூண்டியவர், கருவூர்த் தேவர். தங்களுக்கும் அவர்தான் ஊக்கமளித்துள்ளார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“தஞ்சைப் பெரிய கோயிலைப் போன்று மற்றொன்று எடுப்பிக்கத் தாங்கள் எண்ணம் கொண்டுள்ளீர்கள் என்பதை முதலில் தங்கள் தந்தை பேரரசர் விரும்பவில்லை என்பதை வருத்தத்துடன் தாங்கள் சொல்லியிருப்பது என் நினைவுக்கு வருகிறது. நேற்று அவர் சொல்லிவிட்டார். மனம் திறந்தும் பேசிவிட்டார். தங்களுடைய திட்டத்திற்கு ஆதரவு அளித்துவிட்டார்”.

வீரமாதேவி பேசிவந்ததை இமைகொட்டாமலும் வியப்புடனும் இராசேந்திரன் பார்த்துக் கொண்டே இருந்தார். கேட்டுக் கொண்டே இருந்தார்.

“வனப்பகுதியைக் கலைக் கோயிலாக்க தாங்கள் கண்ட கனவை, உடனே நனவாக்க ஆசி வழங்கிவிட்டார். தஞ்சையிலுள்ளது போல் பெரிய கோயிலை எழுப்ப எதிர்ப்பைத் தெரிவிப்பார் என நாம் பயந்திருந்தோம். ஆனால் அவருடைய வாழ்த்து நமக்குக் கிடைத்து விட்டது. தாங்கள் நினைக்காத ஒன்றையும் அவர் தெரிவித்தாரே கவனித்தீர்களா?” என்று வீரமாதேவி கேட்டவுடன் இராசேந்திரன் வியப்புடன் அவளை நோக்கினார்.

“தாங்கள் எடுப்பிக்கும் பெரிய கோயிலில் கருவறையில் உள்ள பெரிய லிங்கத்திற்குப் பெருவுடையார் என்றே பெயர் சூட்ட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

“ஆமாம்…”

“பெருவுடையாருக்கு நாள்தோறும் கங்கை நீரைக் கொண்டு திருமுழுக்கு செய்ய வேண்டும்” என்று சொன்னாரே, கவனித்தீர்களா?”

வீரமாதேவி கூறியவுடன், இராசேந்திரன் மகிழ்ச்சியுடன்,“வீரமாதேவி, உன் அறிவுக் கூர்மையை நான் மெச்சுகிறேன். என் தந்தைக்குக் கங்கை நதியின்மீது பெருமதிப்பு. கங்கையில் நீராடி வந்தவர்கள் அந்த நதியின் பெருமையை அதன் நீர்ப் பெருக்கைப் பற்றி வர்ணிப்பதை ஆவலுடன் கேட்பார். சிவபெருமான் திருச்சடையில் திகழும் பேறு பெற்ற புனித நதி என்பதால், கங்கையின் பெருமையை என்னிடம் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறார். கங்கைக் கரைக்குச் சென்று புனித நீராட வேண்டும் என்ற தன் அவாவை அடிக்கடி சொல்வார். காசி எனும் புனித நகரம் கங்கைக் கரையில் இருக்கிறதாம். அங்கு நீராடிப் பின் தென்கோடியிலுள்ள இராமேச்வரத்தில் கடலில் நீராட வருபவர்களுக்கு வேண்டிய உதவிகளும், வசதிகளும் செய்து கொடுக்குமாறு கட்டளையிட்டிருப்பதையும் நான் அறிவேன்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“என் தந்தையின் எண்ணத்தை நிறைவேற்றுவேன். கங்கை நதியினின்று புனித நீரைக் கொண்டு வருவது போல் கனவு கண்டேன். அதைச் சொல்ல நினைத்தேன். மிக விரைவில் காட்டுப் பகுதியைக் கலைக்கோயிலாக்குவோம். வீரமாதேவி! உன் உறுதியைக் குலைக்குமாறு நான் இனி நடந்து கொள்ள மாட்டேன். உன்னையே கங்காதேவியாக நான் மதிக்கிறேன்”.

இராசேந்திரன் கூறிவரும்போது, வீரமாதேவி குறுக்கிட்டு, அவர் வாயைத் தன் கரத்தால் மூடி,“அப்படியெல்லாம் சொல்லலாமோ, என் மன்னவரே? நான் என்றும் தங்கள் பிரியமான வீரமாதேவியாகவே இருக்கிறேன். சிவபெருமான் முடி மீதிருக்கும் கங்கை எங்கே, நான் எங்கே? தங்கள் திருமுடி மீது அமர விரும்பவில்லை. தங்கள் இதயத்தில் என்றும் அழியாது வீற்றிருக்க விரும்புகிறேன்” என்று அவள் கூறும் போதுதான், அவர்கள் சயன அறை அருகே வந்து மாளிகைக் காவல் தலைவர் அழைக்கும் குரல் கேட்டது.

அவர் கூறிய செய்தி, இராசேந்திரனையும் வீரமாதேவியையும் திடுக்கிட வைத்தது.

கணங்கூடத் தாமதிக்காமல், இராசேந்திரன் வீரமாதேவியுடன் இராசராசசோழர் படுத்திருக்கும் இடம் நோக்கி விரைந்தார்.

# 53

# நானா? வீரம்மாளா?

எல்லாம் முடிந்துவிட்டன. சோழ நாட்டைக் காத்து வந்த இராசராசன் என்ற ஆலமரம் வீழ்ந்துவிட்டது.

கண்ணீர் விட்டறியா இராசேந்திரன் சிறு குழந்தை போல் தேம்பி அழுத காட்சியைக் கண்டு கலங்காதவர் இல்லை.

“நேற்று எனக்குத் தாங்கள் துணிவு அளித்தீர்கள். ஊக்க மூட்டினீர்கள். என் இலட்சிய தீபத்தைத் தூண்டி விட்டீர்கள். ஆசி வழங்கினீர்கள்.

“கங்கை நதியின் பெருமையைச் சொன்னீர்கள். எந்தையே! என் அகவிழியைத் திறந்தீர்கள். புனித நதியாம் கங்கையின் பெருமையை அறியச் செய்தீர்கள். பூசை செய்யும் ஈசான சிவத்தின் திருமகனைச் சந்தித்து கங்கையின் சிறப்பைக் கேட்டறியப் பணித்தீர்கள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தங்கள் காலத்தில் கங்கையைத் தஞ்சைக்குக் கொண்டு வரவேண்டும் என்ற ஆசை நிறைவேறாமல் போனதை எடுத்துச் சொல்லி ஏக்கத்தைப் புலப்படுத்தினீர்கள். தங்களைப் போல் புகழுடைய நானும் பெரிய கோயில் கட்ட விரும்பினேன். என் எண்ணத்திற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது போன்ற சூழ்நிலை இருந்ததை நான் அறிவேன். ஆனால் தாங்கள் மகா பெரிய சக்கரவர்த்தி என்ற பெருமையை நிலைநாட்டி விட்டீர்கள். என் இலட்சியம் அறிந்தீர்கள். எனக்கு ஏற்படும் புகழ், பெருமை எல்லாம் சோழ நாட்டிற்குக் கிடைக்கும் பெருமை என்று எண்ணிய தங்கள் உயர்நோக்கம் எனக்கு வழிகாட்டி. தஞ்சைப் பெரிய கோயிலைப் போல் மற்றோர் ஆலயம் படைக்க ஆசி வழங்கினீர்கள். அதற்கான திட்டங்களைக் குறிப்பால் உணர்த்தினீர்கள். கங்கை நீரைக் கொண்டு வந்து பெருவுடையாருக்கு நித்ய அபிஷேகம் செய்ய வேண்டுமென்று தெரிவித்தீர்கள். அது எப்படி முடியும் என்று நான் திகைத்தபோது அதற்கும் யோசனை தெரிவித்தீர்கள்.

“அதுதான் தங்களுடைய கடைசி பேச்சு என்பதை நான் உணரவில்லை. ஈசன் அருளால் நான் தங்களுடைய நல் ஆசியைப் பெற்றேன். தங்கள் இறுதி மூச்சு அடங்கும் போது தங்கள் அருகே இருக்கும் பேறு கிடைத்ததே, அதுவே முன் பிறவிப் புண்ணியம்.

போர்க்களங்களுக்குச் சென்று வெற்றியுடன் திரும்பி வரும் ஒவ்வொரு தடவையும் என்னை வாழ்த்தி, உற்சாகமூட்டும் தங்களுடைய நல்லுரைகளை எண்ணிப் பார்க்கிறேன்.

“தங்கள் உபதேசப்படி நான் அமைக்கவிருக்கும் சிற்ப ஆலயத்தைத் தாங்கள் கண்டு மகிழ வேண்டாமா! அந்தக் கோயிலின் குடமுழுக்கை நடத்தித் தந்திருக்க வேண்டாமா!

“எந்தையே! இன்னும் சில ஆண்டுகள் இருந்து என்னை வழிநடத்தியிருக்கக் கூடாதா?

“நான் ஓர் அதிர்ஷ்டமற்ற பிறவி. தங்கள் வீரதீரப் பிரதாபங்களை விளக்கும் வரலாற்றை வண்ணச் சித்திரங்களாக வடித்துத் தர எண்ணினேனே. அந்த ஜீவ சித்திரங்களைத் தாங்கள் கண்டு மகிழ்வதைக் காணும் பேறு பெறாத துரதிர்ஷ்டசாலியாகி விட்டேனே!”

இராசேந்திரன் வாய்விட்டுப் புலம்பி அழுவதைப் பார்ப்பவர்களும் இருகரங்களால் முகத்தை மூடிக் கொண்டு விம்மினர். சிலர் வாய்விட்டு அழுதனர். குலுங்கிக் குலுங்கி அழுதனர். தலையிலும் மார்பிலும் அடித்துக் கொண்டு ஓலமிட்டனர்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

இராசேந்திரன் தோளை ஓர் அருள் கரம் தொட்டது.

"இராசேந்திரா, மகனே!" என்றழைத்த குரல் அரிய மருந்தா அமைந்தது.

இராசேந்திரன் திரும்பிப் பார்த்தார்.

கருவூர்த் தேவர் குனிந்து, இராசேந்திரனின் முதுகை ஆறுதல் ஏற்படுமாறு தடவினார்.

அவர் பார்வையில் ஆயிரம் ஆயிரம் செய்திகள் பிறந்தன.

'தேவரே – சோழர் குலத்தை வாழ வைக்கும் குல குருவே!- இனி தாங்கள்தான் எனக்கு வழிகாட்டி – ரட்சகர், தாய், தந்தை எல்லாம்" என்று ஓலமிட்டு அவர் பாதங்களில் வீழ்ந்தார், இராசேந்திரன்.

இராசேந்திரனை மெல்ல எழுப்பி ஆறுதல் கூறிய கருவூர்த் தேவர்,"இராசேந்திரா! என் அன்பு மகனே! இன்றைக்கு இருந்தவர் நாளைக்கு இருப்பதில்லை என்ற பெருமை உடையது இந்த உலகு என்பதை நீ அறிய மாட்டாயா? நீ இன்னும் சிறுபிராயத்தவனா? இராசேந்திரா! நீ பரகேசரி என்ற பட்டம் பெற்றவன். சோழ நாட்டுச் சக்கரவர்த்தி. உனக்கென்று கடமைகள் பல இருக்கின்றன. அவற்றை நிறைவேற்றி, சோழ நாட்டு மக்களைக் காப்பாற்ற வேண்டியவன் நீ, சோர்வடையலாமா? உன் தந்தையின் இறுதிக் கால ஆசையை நிறைவேற்ற வேண்டாமா! நான் உன்னுடன் இருக்கிறேன். சோழ நாட்டிலிருந்து புறப்பட்டுத் தெற்கே பொதிகை மலைக்குச் செல்ல வேண்டிய காலம் எனக்கு நெருங்கிக் கொண்டிருக்கிறது. விரைவிலே நீ பெரிய கோயிலை எடுப்பிப்பதற்கு வேண்டிய செயல்களில் முழு மூச்சுடன் ஈடுபடு. எழுந்து நில். செயல்படு – வெற்றியை அடைய வாழ்த்துகிறேன்!" - இராசேந்திரனுக்குப் புத்துணர்வு ஊட்டினார்.

சோழ நாடே குலுங்கியது. மக்கள் விட்ட கண்ணீர் காவிரியின் பெருக்கைவிட அதிகமாகியது.

மலர்ப் படுக்கையில் இராசராசன் திருமேனி உயிருள்ள சிற்பமாகத் திகழ்ந்தது. அகில்பகை மெல்லிய மணத்தைப் பரப்பியது.

அரச குரு வந்தார். காளாமுகத் துறவிகள் வந்தனர். பெரிய கோயிலில் இறைவன் திருமுன்னர் திருப்பதிகம் விண்ணப்பஞ் செய்யும் நாற்பத்தெண்மரும் சூழ்ந்தனர். பெரிய கோயிலில் திருப்பதிகம் ஓதுவார் தங்கள் வருத்த நிலையிலும், தேவாரப் பதிகங்களும், திருவாசகமும், திவ்யப் பிரபந்தமும் மெல்லப் பாடிக் கொண்டிருந்தனர். இறைவன்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

மலரடியைப் பேரரசர் அடைந்ததைக் குறிப்பது போல் மலர் மாலைகள் பாதத்தில் குவிந்தன. உடுக்கை வாசிப்பவரும், மத்தளம் கொட்டுபவரும் தம் பணி விட்டு ஓடோடி வந்தனர்.

மாளிகை முற்றத்திலும், வெளிச் சுற்றிலும், வெளியிலும், வீதியிலும் சிறிது சிறிதாக அதிகாரிகளும், பெரியவர்களும், அறிஞர்களும், கலைஞர்களும் வந்து சேர்ந்தனர்.

இராசராசன் எழுப்பித்த பெரிய கோயிலால் பயன் அடைந்தவர்கள் பலர். கோயிலின் அன்றாட வழிபாட்டிற்கு உதவித் தொண்டாற்றும் பலவகைத் தொழிலாளர்கள் - பூந்தோட்டக்காரர், மாலை தொடுப்போர், கோயிலைக் கூட்டித் துப்புரவு செய்வோர், நீரிரைப்போர், திருவிளக்கு ஏற்றுவோர், மணியடிப்போர், சங்கு ஊதுவோர், மங்கல இசைக் கருவிகளை முழக்குவோர், திருப்பதிகம் ஓதுவோர் என்று பலவகைப்பட்ட தொழிலாளர்கள் தங்கள் அன்றாடப் பணிகளை விட்டு மாமன்னருக்கு இறுதி மரியாதை செலுத்த ஓடோடி வந்தனர்.

இராசராச நாடகத்தை நடத்தும் பொறுப்பேற்றிருந்த ஹாஸ்யன் விக்கிரமாதித்தன் அச்சன் முதல் நாள் நாடகம் நடிக்க வந்தவர், கோயில் விடுதியிலேயே இரவு தங்கி விட்டார். அவர் தன் முதுமை நிலையையும் பாராமல் ஓடோடி வந்தார்.

ஊர்வலத்தில் நாட்டியமாடும் நங்கையரும் பெரிய கோயிலில் தொண்டு புரியும் பதியிலாதாரும் அழுதழுது முகம் சிவந்து துயரம் தாளாமல் ஒருவரை ஒருவர் பற்றிக் கொண்டு அமர்ந்திருந்தனர்.

தஞ்சை நகரில் வாணிபம் செய்யும் நகரத்தார்கள் துயரம் நிறைந்த உள்ளத்துடன் விரைந்து வந்தனர்.

தச்சுத் தொழிலாளர்களும், கட்டடத் தொழிலாளர்களும், அணிகலத் தொழிலாளர்களும் சக்கரவர்த்திக்கு இறுதி மரியாதை செலுத்த வந்து கொண்டிருந்தனர்.

தஞ்சை நகரத்தின் புறம்பாடியில் குடியிருந்த தொழிலாளர்கள் துயரச் செய்தி கேட்டு ஓட்டமும் நடையுமாக வந்து கொண்டிருந்தனர்.

மாளிகையிலுள்ளவர்களுக்கு ஆடைகளைத் தைத்துக் கொடுக்கும் ரத்னத்தையான் தன் தொழிலாளர்கள் பின்தொடர துயர நெஞ்சுடன் வந்தான்.

சீன நாட்டினின்று வாணிபம் செய்ய வந்தோரும், அரச

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தூதுவர்களும்,மௌனமாகக் கூடி நின்று, தலைகுனிந்து நின்று கண்ணீர் உகுத்தனர். சோனகர்களும், யவனர்களும் இறுதி அஞ்சலி செலுத்த வந்தனர்.

பெருந்தரம், சிறுதரம் என்ற பிரிவு பாராமல் அரசியல் அதிகாரிகள் ஒன்று சேர்ந்து வந்தனர்.

நால்வகைப் படையின் தலைவர் மாதண்ட நாயகர் வந்தார். கூடியிருந்தவர்களிடையே ஒழுங்கும், அமைதியும் நிலைநாட்ட ஏற்பாடு செய்தனர். மாமன்னரின் புகழுடல் இருக்கும் இடம் செல்வதற்கு அவர்கள் பெரும்பாடு பட்டனர்.

சோழநாட்டின் பெருமைக்குப் பெரும் காரணமாய்த் திகழ்ந்த குறுநில மன்னர்களின் வருகைக்காக எல்லோரும் காத்திருந்தனர். காற்றைவிட வேகமாகச் சென்று அவர்களுக்குச் செய்தி தெரிவிக்கப்பட்டது. கூடியிருந்தவர்கள் எல்லோரும் இரவு பகல் பாராமல் பசி தூக்கம் மதிக்காமல் காத்திருந்தனர்.

வீழ்ந்த ஆலமரம் போல் மாமன்னர் சாய்ந்து கிடக்கும் அந்தத் துயரம் நிறைந்த வேளையில், இராசேந்திரனுடன் வந்த வீரமாதேவியைக் கண்டு, மற்ற இளவரசிகளுக்குப் பொறாமை துயரத்தையும் மீறிப் பொங்கி நின்றது.

சிறிது நேரம் கண்ணீர் விட்டுக் கதறி விட்டு, சடலத்தைச் சுற்றிலும் அரசாங்க அதிகாரிகள் சூழத் தொடங்கியவுடன், மெல்ல அருகே இருந்த அறைக்குச் சென்ற இளவரசிகள் வீரமாதேவியைப் பற்றிப் பேசத் தொடங்கினர்.

சக்கரவர்த்தி, வீரமாதேவியுடன் முதல் நாள் தங்கியிருந்ததையும், அவளையும் உடன் அழைத்து வந்ததையும் பற்றிப் பேசினர்.

“காட்டுப் பகுதியில் கலையை வளர்ப்பதாக நினைத்திருந்தோம். இப்போது நாட்டுக்கே வந்துவிட்டாளே” என்று அவர்கள் குமுறினர்.

“உம்… அவ்வளவு எளிதில் விட்டு விடுவேனா? மறுபடியும் அவளைக் காட்டுக்கே ஓட்டி விடுவேன்!” என்றாள், பட்டத்து அரசி.

“நேற்று, சக்கரவர்த்தி நீண்ட நெடுநேரம் வீரமாதேவியிடமும், நம் அரசரிடமும் என்ன பேசிக் கொண்டிருந்தார் என்று தெரியவில்லை. அவர்கள் இருவரும் பேசிப் பேசியே களைத்திருக்க வேண்டும்” என்று கவலை தெரிவித்தாள், ஒருத்தி.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“பெரிய கோயில், கங்கா நீர் அபிஷேகம், சிற்பங்கள், சிற்பி, நாட்டியம் என்ற வார்த்தைகள் மட்டும் அந்த மாளிகையிலிருந்த பணிப்பெண்ணின் காதில் விழுந்ததாக அறிந்தேன். அதனால், வீரம்மாள் மீண்டும் காட்டிற்கே போய்விடுவாள் என்று நினைக்கிறேன்”.

“அதுவும் ஆபத்துதான். வீரம்மாள் இருக்குமிடத்தில் தான் நம் அரசரும் இருப்பார். அவள் மோகவலையில் சிக்கி இங்கே வராமலே இருந்துவிட்டால்…?”

இப்படிச் சொன்னவுடன் மற்றவர்கள் திடுக்கிட்டனர். வெளியே எழுந்த ஓலத்திற்கு இணையாக அவர்கள் நெஞ்சில் பொறாமைத் தீ கொழுந்துவிட்டது.

“கவலைப்படாதீர்கள்! இளைய பிராட்டிக்குச் செய்தி போயிருக்கிறது. அவர்கள் வந்துவிடுவார்கள். அவர்களிடம் சொல்லி நம் அரசரைத் தஞ்சை மாநகரைவிட்டு வெளியே எங்கும் செல்லாதவாறு செய்து விடுகிறேன்” என்று ஆறுதல் சொன்னாள், பட்டத்து அரசி.

அப்போது அங்கே வந்த வீரமாதேவியைக் கண்டவுடன் அவர்கள் சீறும் சிங்கத்தைக் கனவில் கண்டதுபோல் நடுங்கினர். தொடர்ந்து பெரும் அமைதி அங்கே நிலவியது. கண்ணீரைத் துடைத்துக் கொள்வதுபோல் ஒவ்வொருவரும் முகத்தை மூடிக்கொண்டு மற்றவரை இரகசியமாகப் பார்த்தனர்.

வீரமாதேவி பட்டத்து அரசியைப் பார்த்து,“மரியாதைக்குரிய என் மூத்த சகோதரிகளே! பட்டத்து அரசிகளே! நீங்கள் நினைப்பது போல் சோழ நாட்டுப் பேரரசரான என் தலைவர் தஞ்சைபுரியில் தங்கி இருக்கப் போவதில்லை. அவருக்குத் தஞ்சையைக் கண்டால் பிடிக்கவில்லை. சக்கரவர்த்தியின் இறுதிச் சடங்குகள் முடிந்த பிறகு ஒரு நாள்கூட அவரும் நானும் தஞ்சையில் தங்குவதில்லை என்று முன்பே முடிவு செய்துவிட்டோம். இளவரசியே! தஞ்சையிலோ, பழையாறையிலோ நீங்கள் தனியே வாழ வேண்டியதுதான். பாவம், வயதான நிலையில் நீங்கள் அனுபவிக்கப் போகும் துயரத்தை எண்ணினால் எனக்கே வருத்தமாய் இருக்கிறது. முற்பகல் செய்யும் இன்னா பிற்பகல் தாமே விளையும் என்பதை நினைத்துக் கொள்ளுங்கள்!” என்று கூறிவிட்டு அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

இராசேந்திர சோழ தேவரின் பட்டத்து இளவரசியும் மற்ற இளவரசிகளும் சொல்வதறியாது ஒருவரை ஒருவர் அதிர்ச்சியுடனும் கவலையுடனும் பார்த்துக் கொண்டனர்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பட்டத்து இளவரசி சொன்னாள். “கவலைப்படாதீர்கள்! நமது மாமன்னர் இன்னும் சில நாள்களில் வடக்கு நோக்கிப் படைகளுடன் புறப்படப் போகிறார். பாவம், வீரம்மாள் காட்டில் தனியே இருந்து வேதனைப் படவேண்டியதுதான்”.

‘உங்களுக்கு எப்படித் தெரியும்?’ என்பதுபோல் மற்ற இளவரசிகள் புருவம் உயர்த்தினர்.

“ஆம், நேற்று ஒற்றர்படைத் தலைவர் தெரிவித்த செய்தி. எனக்கு மட்டுமே தெரியும்” என்றாள்.

இராசகேசரி இராசராசர், இறைவனடி எய்தி இருபட்சம் ஓடி மறைந்துவிட்டது. சோழ நாட்டின் பல பகுதிகளிலிருந்து வந்திருந்த குறுநில மன்னர்கள் தத்தம் நாடுகளுக்குத் திரும்பினர்.

வல்லவரையர் வந்தியத் தேவரும், இளைய பிராட்டியும் முக்கியச் செய்தி ஒன்றைப் பேசுவதற்காக இராசேந்திர சோழரைச் சந்திக்கத் தஞ்சை மாளிகைக்கு வந்தனர்.

இராசேந்திர சோழர் தஞ்சையை விட்டுப் புறப்பட்டுச் சென்றுவிட்ட செய்தி அறிந்து திடுக்கிட்டனர்.

# 54

# அரிந்தவன்தேவி தந்திரம்

இராசேந்திரனைக் காணவந்த இளைய பிராட்டியும் வல்லவரையரும் அவரைக் காணாது திகைத்தனர்.

இராசேந்திரன் தஞ்சையை விட்டுப் புறப்பட்டுச் சென்று விட்டார் என்ற செய்தியைக் கேட்ட இளைய பிராட்டி வந்தியத் தேவனைப் பொருட்புதைந்த புன்னகையுடன் நோக்கினாள்.

அந்தப் புன்னகையில்,“பார்த்தீர்களா, நான் சொன்னதுபோல் நடந்துவிட்டது என்று சொல்வது போல் இருந்தது.

“தஞ்சையை விட்டுப் புறப்பட்டு இராசேந்திரன் சென்று விடுவார் என்று முன்பே உனக்குத் தெரியுமா? அவ்வளவு சரியாகச் சொன்னாயே? என்று வந்தியத் தேவன், இளைய பிராட்டியைக் கேட்டார்.

அங்கே சூழ்ந்திருந்தவர்களையும் குறிப்பாக பஞ்சவன் மாதேவியையும்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

நோக்கிய இளைய பிராட்டி....

“பட்டத்து ராணிக்குத் தெரியாமலா, இராசேந்திரன் சென்றிருப்பான்?” என்றாள்.

“உனக்கு எப்படித் தெரியும் என்று கேட்டால், நீ பட்டத்து அரசியைக் கேட்கிறாயே?” என்று வந்தியத் தேவன் இளைய பிராட்டியைப் பார்த்துக் கேட்டார்.

“பஞ்சவன் மாதேவிக்குத் தெரியாத செய்தியே கிடையாது, அதனால் கேட்டேன்” என்றாள் இளைய பிராட்டி குந்தவ்வை தேவி, குறும்புப் புன்னகை இதழ்களில் இழையோட.

“எனக்கொன்றும் தெரியாது அக்கா! உங்கள் பிள்ளை என்னிடம் முன்பு போல் ஏதும் சொல்வது கிடையாது” என்று முகத்தில் ஏமாற்றம் பிரதிபலிக்கக் கூறினாள், பழுவேட்டரையர் வம்சத்து வந்த பஞ்சவன்மாதேவி.

“ஒரு காலத்தில் அரிந்தவன் மாதேவியிடம் நெருங்கி இருந்தானே, இராசேந்திரன்? அவளுக்காவது தெரியுமா கேள்...?” என்று இளைய பிராட்டி சோகமே வடிவாக நின்றிருந்த அரிந்தவன் மாதேவியைக் கேட்டாள். பிறகு இளைய பிராட்டி தொடர்ந்து...

“அரிந்தவன் மாதேவி, இராசேந்திரனை வயப்படுத்தாது விட்டுவிட்டாள். நன்றாகப் பாடுவாள். இசைப் புலமை எல்லாம் இப்போது மறந்துவிட்டதோ?” என்று அரிந்தவன் மாதேவியைச் சீண்டினாள், இளைய பிராட்டி.

“நாங்கள் இருவருமே ஏமாந்துவிட்டோம். எங்கள் இளமை அப்படியே இருக்குமென்று நினைத்து விட்டோம். தங்கள் புதல்வர் எங்களைச் சந்திக்க வராதபோது அவர் வழக்கம்போல் அண்டை நாடுகளுக்குப் படை எடுத்துச் சென்றிருப்பதாக நினைப்போம்: ஆனால் இளவயது வீரம்மாளுடன் அவர் சல்லாபித்துக் கொண்டிருப்பது எங்களுக்குத் தெரியாது”– புலம்பாத குறைதான்.

இளையபிராட்டி குந்தவ்வை தேவியார் கேட்டாள்: “நான் வளர்த்த இராசேந்திரன் இளமைக்கு மட்டுமே மயங்கக் கூடியவன் என்று நினைத்து விட்டீர்களா? அழகுக்கும் இளமைக்கும் அடிமையாகக் கூடியவன் என்று தவறாக நினைத்து விட்டீர்களா?” என்று வந்தியத் தேவனைப் பார்த்தவாறு கேட்டாள். ஆனால் அவள் விடை

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

எதிர்பார்த்ததோ பஞ்சவன் மாதேவியிடம்.

பஞ்சவன்மாதேவியும் அரிந்தவன் மாதேவியும் மறு மொழி கூறாது சற்றுத் திகைத்தனர்.

இளைய பிராட்டியே இதற்கு விடை கூறினாள்.

“என் அருமை தேவியரே! என்ன இருந்தாலும் நாட்டின் அரசியர் நீங்கள். உங்கள் தந்தை சோழ நாட்டின் சிற்றரசர்கள். சோழர்களின் வெற்றிக்குப் பல விதத்தில் உதவியவர்கள், உதவி வருபவர்கள். அத்துடன் உங்களையும் பரிசாக உங்கள் தந்தைமார்கள் அளித்துள்ளார்கள் என்பதை மறக்க முடியாது. ஆனால் வீரமாதேவியை யாரும் பரிசாக அளிக்கவில்லை. என் அருமை மகனே தனக்கெனத் தேடிக் கொண்டான். அவள் எளிய குடும்பத்துப் பெண். ஆனால் அந்தக் குடும்பத்தவர்கள் சோழ நாட்டிற்கு மகத்தான தியாகங்கள் செய்திருக்கிறார்கள். அதற்காக மட்டும் வீரமாதேவியிடம் மனத்தைப் பறிகொடுத்தானா? உங்களிடமில்லாத ஒன்று வீரம்மாளிடம் நிறைந்திருந்தது. இறைவன் அவளுக்கு அளித்த நடனக்கலை. இனி யாரும் அவர்கள் இருவரையும் பிரிக்க முடியாது”.

இளைய பிராட்டி இவ்வாறு கூறியதும் பஞ்சவன் மாதேவி அதிர்ச்சி அடைந்தாள். தங்களை இளைய பிராட்டி ஆதரிப்பார்கள் என்று எண்ணியது போக வீரம்மாளின் பக்கத்து நியாயத்தை எடுத்துச் சொல்கிறார்களே?

“ஏன் உங்கள் முகத்தில் இப்படி ஓர் அதிர்ச்சி. மனத்தைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள். என் வாழ்க்கையைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?” என்று கேட்டாள், குந்தவ்வை.

பஞ்சவன் மாதேவியும், அரிந்தவன் மாதேவியும் பேசாமடந்தையாக இருந்தார்கள்.

“என் கதை உங்களுக்குத் தெரியாதா? இதோ இருக்கிறாரே மகத நாட்டுச் சிற்றரசர் வல்லவரையர் - அவர்மீது எனக்கு ஏற்பட்ட காதலும், அவருக்கு என்மீது ஏற்பட்ட அன்பும் நாடறியும். வீண் பழி சுமத்தப்பட்டு சிறையில் அவர் இருந்தபோது அவருக்காகத் தவம் செய்து காத்திருந்தேன். தவம் பலித்தது. இருவரும் இலட்சியத் தம்பதியரானோம். அதெல்லாம் வேறு கதை. பழைய கதை. இளம் பிராயத்தில் மனம் மாறாத வல்லவரையர், வேறு பெண்ணை ஏறெடுத்துப் பாரா வல்லவரையர் வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வேறொருத்தியை மணம்புரிந்து கொண்டார் என்பது உங்களுக்குத் தெரியுமா? தெரிந்திருக்கும், தெரிந்திருக்கும். மரியாதைக்காக நீங்கள் மௌனமாய் இருக்கிறீர்கள். அவளுக்கு ஒரு குழந்தை பிறந்து – வளர்ந்து - இந்த மகத நாட்டு வாரிசாக உருவாகித் திகழ்கிறது. அதனால் வல்லவரையர் என்னுடன் வாழ்ந்த வாழ்க்கை கசந்துவிட்டதா? இல்லை இல்லை. அவர் பெயரைச் சொல்ல ஒரு வாரிசை உருவாக்கிக் கொடுக்க என்னால் முடியவில்லை. அவள் தந்துவிட்டாள். இப்பொழுதும் வல்லவரையரும் நானும் ஒற்றுமையோடு மகிழ்ச்சியாக இருக்கிறோம். நீங்கள் - ஒருத்திக்கு மூன்று பேராகப் பொறாமைப்பட்டு கருகுகிறீர்கள். இனியாவது உங்கள் மனத்தில் ஏற்பட்டுள்ள சந்தேகங்களை விட்டொழியுங்கள். வீரமாதேவியை வீரம்மாள் என்று அழைத்து அவளை அவமானப்படுத்தாதீர்கள்".

வல்லவரையரும், இளையபிராட்டியும் விடைபெற்றுக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டனர்.

பஞ்சவன்மாதேவி திகைத்தவாறு சிலைபோல் நின்றிருந்தாள். இளைய பிராட்டியாரின் ஆதரவு தனக்கு இருக்கும் என்று நினைத்திருந்தது போக, வீரம்மாளை அன்றோ ஆதரிக்கிறார்கள்? வீரமாதேவி என்று அழைக்க வேண்டும் என்று சொல்கிறார்களே!

மனத்திலுள்ள சந்தேகங்களை விட்டொழிக்க வேண்டுமாமே! 'நடனக் கலையில் புலமை பெற்றவள், அதனால் தான் சோழச் சக்கரவர்த்திகள் வீரம்மாள் மீது காதல் கொண்டார், என்று கூறுகிறாரே! நமக்கு ஒரு கலையும் தெரியாது: வெறும் ஜடம் என்பதை மறைமுகமாகச் சுட்டிக் காட்டுகிறாரே'என்று வேதனைப்பட்டாள்.

அரிந்தவன்மாதேவி, தோளைத் தொட்டுக் குலுக்கிய பிறகுதான் பஞ்சவன்மாதேவி சுயநினைவுக்கு வந்தாள்.

"தேவி! தங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது? ஏன் இப்படி அதிர்ச்சியடைந்து விட்டீர்கள்?" என்று கேட்டாள்.

"ஏதோ ஒன்று என்னிடமிருந்து பறிபோவது போல் உணர்கிறேன். சோழ சக்கரவர்த்தி இனி நம்மிடம் அன்பாக இருக்கமாட்டார். நேற்று வந்த மாயக்காரி சொன்னது போல் நடக்கிறதே. இனி தஞ்சைபுரிக்கு அரசர் வரமாட்டார் என்று அந்த வீரம்மாள் சொன்னாளே. தவறு வீரம்மாள் என்று சொல்லக் கூடாது – வீரமாதேவி – சொன்னாளே. அதன்படிஇனி நடக்கும்போல் தோன்றுகிறதே! இனி என்ன செய்யலாம்?"– பஞ்சவன் மாதேவியின் குரலில் சோகம் நிறைந்திருந்தது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“நாமும் நாட்டியம் கற்றுக் கொள்வோம்” என்று கூறி அரிந்தவன் மாதேவி சிரித்தாள்.

நகைச்சுவையாகப் பேச இதுவா நேரம்?” என்று பஞ்சவன் மாதேவி கடிந்து கொண்டாள்.

அங்கே சிறிது நேரம் அமைதி நிலவியது. அரிந்தவன் மாதேவி மௌனத்தைக் கலைத்தாள்.

“அப்படியா? நான் ஒரு யோசனை சொல்கிறேன். தஞ்சைக்குத்தானே வரமாட்டார்?பழையாறைக்கு வருவாரல்லவா?” என்றாள், பஞ்சவன்மாதேவி.

“வீரம்மாள் வராவிட்டால் என்ன? அரசர் வருவார். அவரை வரச்செய்வோம். வீரம்மாள் வராமல் அரசர் தனியே ஒருமுறை வந்தால் போதும்: என் எண்ணம் நிறைவேறிவிடும்” என்றாள், அரிந்தவன் மாதேவி.

“எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது” என்று கூறி, பஞ்சவன்மாதேவிக்கு மட்டும் கேட்கும் வண்ணம் மெல்லிய குரலில் தன் திட்டத்தை விளக்கிக் கூறினாள்.

“மிகவும் ஆபத்தான யோசனை!” என்றாள், பஞ்சவன் மாதேவி.

“அதில் ஆபத்து ஏதுமில்லை. நம் அரசரை இங்கே வரவழைக்க ஒரே வழி அதுதான்” என்றாள், அரிந்தவன் மாதேவி.

“தஞ்சைக்கு இனி வரப்போவதில்லை என்று மாமன்னர் சூளுரைத்துச் சென்றிருக்கிறாரே தெரியுமா? அதனால் உன் யோசனை பலிக்காது” என்றாள், பஞ்சவன்மாதேவி.

மீண்டும் அங்கே மௌனம் குடி கொண்டது.

மறுநாள் பஞ்சவன்மாதேவியும், அரிந்தவன்மாதேவியும் தோழியர் புடைசூழ பழையாறைக்குப் பயணமானார்கள்.

இவர்கள் போய்ச் சேருவதற்குச் சிறிது நேரத்திற்கு முன்புதான் அதுவரை அங்கே தங்கியிருந்த இராசேந்திரனும் வீரமாதேவியும் பழையாறையிலிருந்து புறப்பட்டு, கலைக்கூடப் பணிகள் நடைபெறும் காட்டுப் பகுதிக்குச் சென்றிருந்தனர்.

பழையாறைக்கு வந்தவுடனேயே அரிந்தவன்மாதேவி கடும் வயிற்று

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வலியால் துடித்தாள். பழையாறை மாளிகையிலுள்ளவர்கள் கூடிவிட்டனர். மாளிகை மருத்துவர் விரைந்து வந்தார். மருந்து கொடுக்கப்பட்டது.

கடும் வயிற்று வலியால் தொல்லைப் படுவது போல் நடிக்க எண்ணியவளுக்கு, மெய்யாகவே வயிற்று வலியுடன் காய்ச்சலும் சேர்ந்தன. எல்லோரும் பயந்து விட்டனர்.

சக்கரவர்த்திகளுக்குச் செய்தி தெரிவிக்க விரைந்தார்கள். அரிந்தவன்மாதேவி திட்டமிட்டது போல், இராசேந்திர சோழ தேவருக்குச் செய்தி தெரிந்திருந்தால்அவர் பழையாறைக்கு உடனே வந்திருப்பார். ஆனால், நினைத்தது ஒன்று, நடந்ததோ வேறு!

# 55

## சலனமும் சபதமும்

தன் தந்தை பேரரசர் இராசராச சோழ தேவர் தில்லை அம்பலவாணர் திருவடிகளை அடைந்த பிறகு இராசேந்திரன் ஓரிரு நாள்கள் மட்டுமே தஞ்சைபுரியில் தங்கினார். வீரமாதேவிக்கு அந்தச் சில நாள்களும் முள்ளின் மேல் இருப்பது போலிருந்தது.

பிரதானியுடனும், கருவூல அதிகாரிகளுடனும் கலந்து ஆலோசித்து மூத்த அதிகாரியும், நீண்ட காலமாக சோழர்க் குலத்துக்கு நம்பிக்கையுடன் பணியாற்றியவரும், படைத் தலைவராக இருந்தவருமான கிருஷ்ணன் ராமனை மட்டும் அழைத்துக் கொண்டு வீரமாதேவியுடன் இராசேந்திரன் தஞ்சையை விட்டுப் புறப்பட்டு விட்டார்.

சிற்ப வேலைப்பாடு மிகுந்த சோழநாட்டு இரதத்தில் வீரமாதேவியும் இராசேந்திரனும் அமர்ந்து தஞ்சையின் முக்கிய வீதிகள் வழியே வடக்குக் கோட்டை வாயில் வழியே சென்றபோது வீதியின் இருபுறமும் மக்கள் நின்று வாழ்த்தொலி எழுப்பினர். சக்கரவர்த்தி இராசேந்திர சோழர் அருகே வீற்றிருக்கும் வீரமாதேவியை அவர்களால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. வீரமாதேவியை அடையாளம் கண்டு சொல்லக் கூடியவர் ஒருவரும் இலர். அரசர் அருகே அமர்ந்திருப்பவள் அரசி பஞ்சவன்மாதேவி இல்லை என்பது மட்டும் புரிந்தது. அதனால் பெயர் கூறி வாழ்த்தொலிக்க இயலாது திகைத்தனர்.

புத்திசாலியான நகர மூத்தவர் ஒருவர்,“சோழ நாட்டு இளவரசி வாழ்க,

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வாழ்க!" என்று வாழ்த்தொலி எழுப்பவும் அந்த வாழ்த் தொலி தொடர்ந்தது.

"அரசர் அருகே இருப்பவள் ஓர் இளவரசியாக இருக்க வேண்டும். அதனால் இளவரசி வாழ்க, வாழ்க என்று வாழ்த்தினேன்" என்றார் மூத்தவர்.

இராசேந்திரனும் வீரமாதேவியும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர்.

முன் எப்பொழுதையும் விட வீரமாதேவியின் விழிகளில் நம்பிக்கை ஒளி வீசியது. அன்றலர்ந்த மலர் போன்ற புன்னகை இதழ்களில் நிறைந்திருந்தது. வீதிகளின் இருபுறமும் கையசைக்கும் மக்களும், கரங்கூப்பியுள்ள மக்களும் தன்னைப் பார்த்து வாழ்த்துக் கூறுகிறார்கள் என்பதை நினைக்கும்போது,'ஓ, வீரம்மா! உனக்கு வந்த அதிர்ஷ்டத்தைப் பார்த்தாயா? உன்னைக் கேலியாகப் பேசியவர்கள் இப்போது என்ன சொல்லப் போகிறார்கள்?'

இப்படி நினைக்கும் போதே அவளுக்குச் சற்றுக் கர்வமாக இருந்தது. ஒரு தடவை அருகே இருக்கும் சக்கரவர்த்தியைத் திரும்பிப் பார்த்துத் தன் பெருமிதத்தைத் தெரிவிக்க விரும்பினாள். ஆனால் அவரோ வீதியின் இருபுறமும் கூடி நிற்கும் மக்களைப் பார்த்துக் கையசைத்தும், கை உயர்த்தி வாழ்த்துக் கூறியும், சற்று அறிமுகமான முகங்களைப் பார்த்து மகிழ்ச்சியைத் தெரிவித்தும் இங்கும் அங்குமாகத் திரும்பிப் பார்த்து வந்ததால் வீரமாதேவியை அவர் கவனிக்கவில்லை.

ஒரு முறை இராசேந்திரன் வீரமாதேவியிடம் திரும்பிப் பார்த்து,"நம் நாட்டு மக்களின் மரியாதையையும் பாசத்தையும் கவனித்தாயா? அவர்கள் நம்மீது வைத்திருக்கும் பாசமும், அன்பும் என்றும் மாறாமல் இருக்குமாறு பார்த்துக் கொள்ளவேண்டும்" என்றார்.

வீரமாதேவி ஏதோ சொல்ல முயன்றாள். அதற்குள் இராசேந்திரன் பார்வை வேறுபக்கம் திரும்பியது.

வடக்குக் கோட்டை வாயில் அருகே இராசேந்திரன் இரதத்தினின்று இறங்கினார். கோட்டைக் காவல் தலைவரை அழைத்து ஏதோ பேசினார்.

கோட்டைக் காவல் வீரர்கள் சிலரைப் பெயர் சொல்லி அழைத்து அவர்கள் நலம் விசாரித்தார். வியப்பினால் திகைத்துப் போன அவர்கள்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

இராசேந்திரன் பாதங்களில் வீழ்ந்து வணங்கினர்.

அவர்கள் அனைவரும் வீரமாதேவிக்கும் வணக்கம் தெரிவித்தார்கள்.

நெடிதுயர்ந்த மதிலை இராசேந்திரன் நிமிர்ந்து பார்த்து, காவல் தலைவரிடம் சில யோசனைகளைத் தெரிவித்தார். கோட்டையின் நுழைவாயில் மீது பறக்கும் புலிக்கொடி சற்றுப் பழுதுற்றிருப்பதைச் சுட்டிக் காட்டி, உடனே புதிய கொடியை மாற்றுமாறு கூறி கொடியின் பெருமையையும், சிறப்பையும், உணர்த்தினார்.

தொடர்ந்து,“போரில்லாத அமைதியான காலத்தில் தான், நாம் கவனமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும். கோட்டைக் கதவுகள், அகழி, மதிள் இவற்றைப் பலமாக வைத்திருப்பது மிக முக்கியம். பலங்குறைந்த இடம் என்று ஓரிடம்கூட இருக்கக்கூடாது. கோட்டையைச் சுற்றியுள்ள அகழிக்கும் மதிளுக்கும் இடைப்பட்ட பகுதியில் அடர்ந்திருக்கும் முள் புதர்களை அகற்றிவிட வேண்டும். அகழியில் உள்ள முதலைகளைக் கவனித்து மேலும் வளர்க்க வேண்டும்” என்று கட்டளையிட்டு விட்டு இரதத்தில் ஏறி வீரமாதேவியின் அருகே அமர்ந்து கொண்டார்.

“முதலில் பழையாறைக்கு செல்வோம். அங்கே அத்தையும் அத்தான் வந்தியத்தேவரும் இருப்பார்கள். அவர்களுடன் சிறிது நேரம் இருந்துவிட்டு, சிதம்பரம் சென்று ஆடவல்லானை வணங்கிவிட்டு, சிறப்புப் பணிகள் நடைபெறும் இடத்திற்கு செல்வோம்” என்றார்.

அரசரும், வீரமாதேவியும் அமர்ந்திருந்த தேர் - பழையாறைச் சாலையில் விரைந்து கொண்டிருந்தது.

“சாலைகளை இன்னும் சரிவரச் செப்பனிட வேண்டும்” என்றார், இராசேந்திரன்.

“முள்ளும் கல்லும், மேடும் பள்ளமும் நிறைந்த பாதையில் குதிரையின் மீது போகும்போது எப்படி இருக்கும்?” என்று கேட்டாள் வீரமாதேவி. அவர் அருகே சற்று நகர்ந்து, ஒட்டிப் படர்ந்திருக்க, வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது. அப்படிச் செய்வதனால் விரதபங்கள் ஏற்படுவதற்கு விதை விதைக்கப்படுமோ என்ற ஐயமும் ஏற்பட்டது.

“குதிரைமீது, உன்னையும் உட்கார வைத்து அழைத்துச் செல்லட்டுமா?” - இராசேந்திரன் அவளைத் திரும்பிப் பார்த்துக்கேட்டார்.

அவள் முகத்தை அவர் மிக அருகில் பார்க்கிறார். முன்பைவிட இப்போது

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பளபளப்பும், ஆர்வமும், மகிழ்ச்சியும், எல்லாவற்றிற்கும் மேலாக காதலும் நிறைந்திருப்பது தெரிந்தன.

“குதிரை மீது இருவரா?”– வியப்புடன் கேட்டவள், அந்த அனுபவம் எப்படி இருக்கும் என்று கற்பனையும் செய்து கொண்டாள்.

“குதிரைமீது உன்னை உட்காரவைத்துக் கொண்டு செல்வது மிகவும் இன்பமாக இருக்கும்!” என்றார்.

“குதிரைகளுக்கு....?” வீரமாதேவி அவரைப் பார்த்துச் சிரித்தாள்.

“ஒருவருக்கு மகிழ்ச்சி என்றால் மற்றவருக்குத் துன்பம் தான்” என்றார், இராசேந்திரன், அவளுடைய கன்னத்தை மெல்ல வருடி. அவள் உடல் சிலிர்த்தது.

வீரமாதேவிக்கும், இராசேந்திரனுக்கும் இருந்த இடைவெளி குறைந்தது. ஆனால் அவள் உள் மனம் எச்சரித்தது. வேண்டாம் வேண்டாம் என்று கூறியது. பேச்சை வேறு திக்கில் செலுத்த விரும்பினாள்.

“எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியால் மற்றவருக்கு எவ்வளவு துன்பம் தெரியுமா?” இராசேந்திரன் மீது மெல்ல சாய்ந்தவாறு அவர் செவிக்கருகே பேசினாள்.

“உன்னால் மற்றவருக்கு என்ன துன்பம்?”

“நான் உங்களை மயக்கி விட்டேனாம். நீங்கள் அரசியையும், மற்ற இளவரசிகளையும் கண்டு பேசி பல நாள்களாகின்றனவாம்”.

“அதனால்? பழைய கதையையே சொல்கிறாயே வீரம்மா – என் பட்டத்தரசியுடனும், மற்ற இளவரசிகளுடன் திகட்டும் அளவுக்கு இருந்து, பேசி, மகிழ்ந்தாகிவிட்டது. இப்போது என் இலட்சியம் எல்லாம், விரைவிலேயே கோயில் ஒன்று கட்டுவது. கோயிலில் சிற்பக்கூடம் அமைப்பது. அதே நினைவில் நானிருக்கும்போது இவர்கள் அந்தப்புரத்தில் உட்கார்ந்து கொண்டு கேளிக்கைகளில், சல்லாபங்களில் காலத்தைக் கழிக்கச் சொல்கிறார்கள். வீரமாதேவி! நீயும் நானும் செய்யவேண்டிய காரியங்கள் பல உள்ளன. பழையாறை சென்று, பிறகு சிதம்பரம் சென்று, ஆடவல்லானைக் கண்டு பிரார்த்தனை செய்தபிறகு, நம் கலைப்பணியைத் தொடங்குவோம்!’ என்றார்.

மிகுந்த கலை ஆர்வம் அவர் முகத்தில் பிரதிபலிப்பதைக் கண்ட வீரமாதேவி, வேகமாகச் செல்லும் இரதத்தில் அவர்மீது சாய்ந்து

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கொண்டாள். விழிகளை மூடிக் கொண்டாள். தென்றலின் சுகமும், ஆருயிர்க்கருகே உள்ள நெருக்கமும் சேர்ந்தன. மாபெரும் சக்கரவர்த்திக்கு இணையாக அமர்ந்து, இரதத்தில் செல்வதில் அவளுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியுடன் கர்வமும் சேர்ந்தது. விரதபங்கம் செய்து, சோழ நாட்டில் தன் விருப்பப்படி இராசேந்திரனை ஆட்டிப் படைத்தால் என்ன என்ற எண்ணமும் எழுந்தது.

# 56

# வீரமாதேவியின் சபதம்

வீரமாதேவியால் தன் விரதத்தினின்று மாற முடியவில்லை. சோழநாட்டுச் சக்கரவர்த்தியாகத் திகழும் இராசேந்திரனை ஆட்டிப் படைக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளத்தில் ஏன் எழுந்தது என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள்.

பழையாறையில் அவர்கள் நுழைவதற்கு முன்பே, அவர்கள் வருகை சிலருக்குத் தெரிந்துவிட்டது. குளக்கரையிலும், கோயில் வாசலிலும் அரசர் வருகைக்காகக் காத்து நின்றனர்.

அரசர் வரும் அழகுத் தேரின் முன்பு நான்கு குதிரைகள் மீது புலிக்கொடி ஏந்திய வீரர்கள் புழுதியைக் கிளப்பிய வண்ணம் விரைந்து சென்றனர். அவர்களைத் தொடர்ந்து இரண்டு குதிரைகளில் வீரர்கள் வந்தனர். அவர்கள்தாம் அரசர் வருகையை அறிவித்துச் சென்றனர்.

இராசேந்திரன் அருகே அமர்ந்திருக்கும் வீரமாதேவியைப் பலர் அறியமாட்டார்கள். பெண் வயிற்றுப் பெயர்த்தியாகவும் அவள் இருக்க முடியாதே – யாராக இருக்கும் என்ற கேள்விக் குறியை எழுப்பிக் கொண்டனர்.

கேள்வியும், மறுமொழியும், சந்தேகமும், வம்பும், வதந்தியுமாக உச்சிப்பொழுதிற்குள் வீரமாதேவியைப் பற்றி அவர்கள் தெரிந்து கொண்டனர்.

“ஓ! நான் கேள்விப்பட்டது நிஜம்தான்” என்றாள், அங்கிருந்தவர்களுள் சற்று வயது முதிர்ந்தவள்.

“என்ன கேள்விப்பட்டாய்? கேள்விப்பட்டதை உடனே தெரிவிக்காமல் நீங்கள் இருந்தது அதிசயம்தான்!” என்று அவளைப் பார்த்து

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

மற்றொருத்தி சிரித்தவாறு கேட்டாள்.

“நமக்குப் பெரிய இடத்து வம்பு எதற்கு என்றுதான் சும்மாயிருந்தேன்” என்ற மூதாட்டி, மெல்லிய குரலில்,‘இந்தச் சிறுசுதான் இப்போது நமது அரசரை ஆட்டி வைக்கிறாளாம். தஞ்சாவூரிலேயே அரசரைத் தங்கவிடாமல் செய்ததே இவள்தானாம்!”

“ஏனாம்?”

“தஞ்சையில் இருந்தால் தன் செல்வாக்கு எடுபடாது என்றுதான்! எல்லாம் இளமை மோகம்தான்”.

“அப்படியெல்லாம் இல்லையாம். நம்ம பெருவுடையார்க் கோயிலைவிடப் பெரிய கோயில் ஒன்றை அரசர் கட்டப்போகிறாராம். அரசருக்கு அப்படியோர் ஆசை ஏற்படக் காரணமே இவள்தானாம்!”

“இனிமேல் அரசர் பழையாறையிலேயே தங்கிவிடப் போகிறாராம்!”

“நல்ல முடிவுதான். பழையாறைக்குப் புதுப்பொலிவு ஏற்படும். மந்திரி மண்டலத்தார், படைத் தளபதிகள், குறுநில மன்னர்கள் என்று இங்கே அடிக்கடி வருவார்கள். நகரம் கலகலப்பாக இருக்கும்”.

“பழையாறை கலகலப்பாக, இன்னும் சோபையுடன் விளங்கும்”.

“அதுதான் இல்லை. வீரமாதேவியின் திட்டம் எனக்குத் தெரியும். பழையாறையிலும் அவள் சக்கரவர்த்திகளைத் தங்கவிடப் போவதில்லை. அவர்கள் கொள்ளிடக் கரையையும் தாண்டி, வனப்பிரதேசத்துக்குப் போகப் போகிறார்கள். அங்கே கோயில் கட்டப் போகிறார்கள். சிலைகள் அமைக்கும் பணி ஆரம்பமாகிவிட்டது. நடனம் கற்றுக் கொடுக்கும் கலைப்பள்ளி அங்கே முன்பே இருக்கிறது. சிற்பிகள் குடியிருக்க வீடுகள் கட்டப் போகிறார்கள்”.

அவள் கூறிவருவனவற்றை மற்ற பெண்கள் ஆவலுடன் கேட்டவாறிருந்தனர்.

அவர்கள் வியந்து பேசும் வகையில் பல சம்பவங்கள் அடுத்தடுத்து நிகழ்ந்தன.

அவற்றுள் ஒன்று, அரிந்தவன் மாதேவி பழையாறைக்கு திடீரென்று வந்தவுடன் கடும் வயிற்று வலி அவளுக்கு ஏற்பட்டது.

பழையாறைக்கு அரிந்தவன் மாதேவி வருவதற்கு முதல் நாளே,

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வீரமாதேவியும், இராசேந்திர சோழ தேவரும் பழையாறையை விட்டுப் புறப்பட்டு சிற்பப் பணிகள் நடைபெறும் கானகப் பகுதிக்குச் சென்றுவிட்டனர்.

அங்கு செல்லும்போதே, இராசேந்திரன் தன் திட்டங்களை விவரித்து வந்தார். வீரமாதேவி ஆவலுடன் அவர் சொல்வதைக் கேட்டவாறு வந்தாள்.

“வீரமாதேவி! நீ கூறியதை நான் சிந்தித்தேன். பெரிய கோயில் ஒன்றைக் கட்டுவதற்கு முன் அங்கே சிற்றூர் ஒன்றை ஏற்படுத்த வேண்டும். தஞ்சையும், பழையாறையும் மிகப் பழமையான நகரங்களாகிவிட்டன. புதிய நகரத்தைத் திட்டமிட்டு அமைக்க வேண்டும்” என்று இராசேந்திரன் கூறினார்.

“நான் இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தது எதற்காக என்று உனக்குத் தெரியுமா?”

“தெரியும், சிதம்பரம் சென்று நடராசப் பெருமானைத் தரிசிக்க எந்தவித இடையூறும் இருக்கக் கூடாது”.

“ஆமாம். என் எண்ணத்தைத் தெரிந்திருக்கிறாயே? பார்! நேற்றே நாம் சிதம்பரம் சென்றிருக்க வேண்டும். காவிரியிலும் மற்றும் நான்கு ஆறுகளிலும் கடுமையான வெள்ளம், கொள்ளிடத்திலும் பிரவாகம் கரைபுரண்டோடுகிறது. மேற்கே பெய்த பெருமழை இப்படித் திடீரென்று வெள்ளம் வந்துவிட்டது. புதிய நகரத்தினின்னு தில்லையம்பதிக்குச் செல்ல எந்தவித இடையூறும் இருக்கக் கூடாது. நாம் நினைத்தவுடன் தில்லைக்குச் செல்ல வேண்டும். சிதம்பரத்திற்கு மிக அருகே அந்த நகரம் இருக்க வேண்டும். அதற்கு ஏற்ற நகரத்தை நிர்மாணிக்க வேண்டும்”.

ஆகா, திட்டமிட்டுச் செய்யும் அறிவாற்றல். உணர்ச்சி மிகுதியால் அப்படியே இராசேந்திரனைத் தழுவிக் கொள்ளத் துடித்தாள், வீரமாதேவி.

“எவ்வளவு பெரிய அறிவுபூர்வமான திட்டம். வீரம், விவேகம், ஞானம், ஆட்சித்திறன் எல்லாம் சேர்ந்த பேரரசர் எனக்குச் சொந்தமானவர்” என்று நினைக்கும்போது அவளுக்கு ஏற்பட்ட பெருமிதம் அவள் முகத்தில் படர்ந்தது.

“அவரை எனக்கு மட்டுமே சொந்தமானவராகக் கொள்வதில் என்ன

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தவறு? “ஏ, பஞ்சவன்மாதேவி! அரிந்தவன்மாதேவி! மற்ற மற்ற தேவிகளே! உங்களுக்கு அவர் சொந்தமில்லை. உங்களைச் சந்திக்க வேண்டுமென்றால் என் அனுமதியை அவர் பெறவேண்டும்” - இப்படி நினைக்கும் போது அவளுக்குச் சிரிப்பு வந்தது.

“திடீரென்று சிரிக்கிறாயே, ஏன்!” என்று கேட்டார் இராசேந்திரன்.

“ஒன்றுமில்லை” என்று கூறி நாணத்துடன் அவரைப் பார்த்தாள், வீரமாதேவி.

“இல்லை இல்லை – ஏதோ என்னிடம் மறைக்கப் பார்க்கிறாய். புதிய நகரத்தைப் பற்றி நான் திட்டமிட்டுப் பேசுகிறேன். சிறு பிள்ளைத்தனமான காரியம் என்று நினைத்து நீ சிரிக்கிறாயா?” என்று கூறி அவளை உற்று நோக்கினார், இராசேந்திரன்.

“ஓ, ஓ… அப்படியெல்லாம் இல்லை” என்று கூறி, தான் அவரைப் பற்றி நினைத்ததைக் கூறினாள்.

இராசேந்திரன் வீரமாதேவியை இமைகொட்டாமல் நோக்கினார்.

“வீரமாதேவி! ஆமாம், நீ நினைப்பது சரிதான். நான் உனக்குமட்டும் தான்”.

“இல்லை, இல்லை! அப்படியெல்லாம் பேராசைக் காரியாக நான் இருக்கமாட்டேன். தேவிமார்களை உங்களிடமிருந்து பிரிக்க மாட்டேன். என்னதான் தங்களுக்கு அபிமானவல்லியாக நான் இருந்தாலும், பட்டத்து அரசியாக நான் ஆக முடியாது என்பது எனக்குத் தெரியும். அரியணையில் அமரும் தகுதி எனக்கு இல்லை என்று நான் அறிவேன். ஆனால், கலை வளர்ப்பதில் தங்களுக்கு உதவியாக – உறுதுணையாக இருப்பதிலிருந்து என் இடத்தை யாரும் அபகரித்துவிட முடியாதல்லவா?”

“வீரமாதேவி! அரியணையிலும் உனக்கு உரிமை உண்டு. வீரமாதேவி! இறைவனுக்குக் கோயில் மட்டும் இங்கே கட்டப் போவதில்லை. கோயிலைச் சுற்றிப் பெரிய நகரததையும் படைக்கப் போகிறேன். அந்த நகரத்திற்கு உன் பெயரைச் சூட்டப் போகிறேன்”.

இராசேந்திரன் இவ்வாறு கூறியது கேட்டு வீரமாதேவியின் மெய் சிலிர்த்தது. வியப்பால் உடல் நடுங்கியது.

“என் பெயரையா? வேண்டாம், வேண்டாம், வேண்டாம் பேரரசரே!

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வேண்டாம். கிராமத்தில் பிறந்த “நான் நல்ல பெண், அமைதியானவள் என்ற பெயரைப் பெற்றிருந்தேன். தாங்கள் என்னை ஏற்ற பிறகு என்னைப் பொறாமையுடன் பலர் பார்க்க ஆரம்பித்தார்கள். அதற்கு முக்கியக் காரணம், நான் தங்களை வசீகரித்து விட்டேனாம். என் பேச்சைக் கேட்டுத்தான் தஞ்சைபுரியைத் தாங்கள் புறக்கணிக்கிறீர்களாம். தாங்கள் திருப்பணி செய்து படைக்கப் போகும் கோயிலைச் சுற்றிலும் மக்கள் வாழத்தக்க பெரிய நகரம், அதற்கு என் பெயர்! வேண்டாம், பேரரசரே வேண்டாம்! இதுவரை விழிகளால் மட்டும் சுட்டு வருபவர்கள், மெய்யாகவே எரித்து விடுவார்கள்”– வீரமாதேவியின் குரலில் வேதனையும் வருத்தமும் கலந்திருந்தன.

இராசேந்திரன் அவளை மெல்ல அணைத்துக் கொண்டார். “வீரமாதேவி! மற்றவர்களைப் பற்றிக் கவலையில்லை. உன்னைப் பார்த்தவுடன் என் உள்ளத்தில் மறைந்திருந்த கலை ஊற்றுப் பொங்கிப் பிரவாகித்தது. அழியாச் சிற்பங்களைப் படைக்கச் சிற்பிகளை வரவழைத்தேன். அந்தத் திட்டத்தில் உனக்குப் பங்கு உண்டு என்பதை மறந்துவிட்டாயா? உன்னைப் பார்த்தவுடனேயே சிற்பிக்கு கலை ஆர்வம் மேலும் சிறந்தது. எனக்குக்கூடப் பொறாமையாக இருந்தது. திருமாலையும், ஞான சரஸ்வதியையும், ஆடவல்லானையும் கல்லிலே படைக்குமாறு சிற்பிக்கு ஊக்கம் கொடுத்தது, நீதானே? சிற்பங்களை வெறும் காட்சிப் பொருளாக வைப்பது பிடிக்கவில்லை என்று நீதான் கருத்துத் தெரிவித்தாய். சிற்பியின் கைவண்ணத்தில் தெய்வ வடிவங்கள் சிற்பங்களாகத் திகழ்கின்றன. அந்தக் கலைக் கருவூலத்தைக் கோயிலில் வைத்துக் கும்பிடுவோம். இந்த அரிய கருத்தைக் கூறியவள், நீதானே? உன் பெயர் அழியாது இருக்க வேண்டாமா? உன் பெயரை புதிய நகரத்திற்குச் சூட்டுவதில் தவறு என்ன?”

இராசேந்திரன் இவ்வாறு தன்னைப் புகழ்ந்து பேசுவதைக் கேட்கும்போது, வீரமாதேவி நன்றிப்பெருக்கால் பரபரப்படைந்தாள், அவளால் அப்போது செய்யக் கூடியது அவரை ஆலிங்கனம் செய்து கொண்டு – செய்து கொண்டு – நினைப்பே அவள் முகத்தில் செம்மை படர வைத்தது. முகத்தை மூடிக்கொண்டாள்.

“என்ன, பேச்சு நின்று விட்டது? முகத்தை மூடிக் கொண்டு விழிகள் இரண்டால் என்னை நீ பார்க்கலாம்: உன் முகத்தை நான் பார்க்கக் கூடாதா!” இராசேந்திரன் விரைந்து மூடியிருந்த அவள் கரங்களைப் பற்றி இழுத்தார்.

வீரமாதேவிக்கு நாணம் மேலும் அதிகரித்தது. அங்கிருந்து வெளியே ஓட

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

முயன்றாள். கூடத்து வெளிவாயிலை அடைய முற்பட்டபோது, மிக முக்கியச் செய்தி கொண்டு வந்த இரு வீரர்கள் வணங்கி நின்றனர்.

செய்தியைப் படித்த இராசேந்திரன் முகத்தில் கவலை நிறைந்தது. அவருடைய கரம் ஓலையை வீரமாதேவியிடம் நீட்டியது.

வீரமாதேவி ஓலையில் இருந்த செய்தியைப் படித்துத் திடுக்கிட்டாள்.

"என்ன செய்வது?" என்று அவள் வழிகள் கேட்டன.

அரிந்தவன்மாதேவிக்கு வந்திருக்கும் கொடிய வயிற்றுவலி அறிந்து வீரமாதேவி மெய்யாகவே வேதனை அடைகிறாள் என்பதை இராசேந்திரன் அறிந்து கொண்டார்.

'அரிந்தவன்மாதேவி தஞ்சையில் இருந்து, பழையாறைக்கு எப்போது வந்தாள்?'

'வயிற்றுவலி ஏற்பட என்ன காரணம்?'

'அரண்மனை மருத்துவர் வந்து பார்த்தாரா?'

'நான் இங்கே இருப்பதாக அவளுக்குத் தெரிவித்தது யார்?'

'நான் வந்து அங்கு ஆகவேண்டியவை இருக்கின்றனவா?' என்றெல்லாம் கேள்வி மேல் கேள்வி கேட்டு, வந்த அதிகாரியைத் துளைத்து எடுத்துவிட்டார்.

அங்கிருந்தவர்களைச் சற்று வெளியே சென்றிருக்கச் சொல்லிவிட்டு, வீரமாதேவி கேட்டாள்:

"பேரரசரே! பழையாறையில் இருந்து தங்கள் இருப்பிடம் தேடிச் செய்தி வந்திருக்கிறது என்றால் மிக முக்கியமானதாக இருக்க வேண்டும்.

"இளவரசியாருக்குக் கடும் வயிற்றுவலி ஏற்பட்டிருப்பதால்தான் அவர்கள் தங்களுக்குச் செய்தி அனுப்பி இருக்கிறார்கள். தாமதமின்றிப் பழையாறைக்குச் செல்வது தான் நியாயமானது"– வீரமாதேவி கூறியது கேட்டுப் பேரரசர் புன்முறுவல் கொண்டு,"தேவி, உன்னை வெறுக்கிறவர்களை நீ ஆதரிக்கிறாயே! உன் குணம் புரியவில்லையே" என்றார்.

"விவாதிக்க நேரமில்லை, பேரரசரே! உடனே புறப்படுங்கள்"– வீரமாதேவியின் குரலில் கட்டளை இருந்தது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தனக்குள்ளேயே அவளைப் பார்த்து நகைத்துக் கொண்டிருந்ததை இராசேந்திரன் இப்போது வெளியே புலப்படுத்தினார்.

“அரிந்தவன்மாதேவியிடம் உனக்குள்ள மதிப்பையும், மரியாதையையும் புலப்படுத்த வேண்டுமென்றால் நீ உடனே பழையாறைக்குச் செல்லலாம். என் சார்பில் அவளுக்கு ஆறுதல் கூறலாம். நாம் சொல்லாமலே மருத்துவர்கள் தகுந்த சிகிச்சை அளிப்பார்கள் என்றாலும், நீ அருகிருந்தால் அரிந்தவன்மாதேவிக்குப் புத்துணர்வும் புதுத்தெம்பும் ஏற்படும். பழையாறைக்கு நீ பயணப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யச் சொல்கிறேன்!” என்றார்.

வீரமாதேவிக்கு ஒன்றும் புரியவில்லை.

தன்னை வெறுப்பவளிடமே சென்று அவளுக்கு ஆறுதல் சொல்லச் சொல்கிறார், அரசர். என்னைச் சோதனை செய்வதற்கா?

“தாங்கள் வராமல் நான் மட்டுமா?” வீரமாதேவி பேரரசரை ஏறிட்டுப் பார்த்துக் கேட்டாள்.

“மிக முக்கியமான செய்தியை எதிர்பார்த்திருக்கிறேன். கருவூர் தேவர் வருவதாகச் செய்தி வந்திருக்கிறது. நானில்லாமல் இருப்பது சரியன்று. நீ போய் வா, வீரமாதேவி! தாமதப்படுத்தாதே, விவாதிக்க நேரமில்லை. உடனே புறப்படு!”

பழையாறை மாளிகையில் அரிந்தவன் மாதேவியை வீரமாதேவி சந்தித்தாள். இருவரும் திடுக்கிட்டனர்.

தகுந்த வரவேற்பு பழையாறை மாளிகையில் தனக்குக் கிடைக்கவில்லை என்பதை வீரமாதேவி உணர்ந்தாள். என்றாலும், அரண்மனை மருத்துவரிடம் அதிகாரத்துடன் ஏதோ சொல்லிக் கொண்டிருந்ததை மற்றவர்கள் கேட்டு, அரிந்தவன் மாதேவியிடம் சொன்னார்கள்.

“சக்கரவர்த்தியின் கட்டளை என்கிறாள். உடனே புறப்பட்டுச் சென்று பார்த்து வருமாறு பேரரசர் வேண்டிக் கொண்டாராம். மிக முக்கியப் பணி இருப்பதால் அரசர் வரவில்லையாம். ‘என் சார்பில் அருகே இருந்து கவனித்துக்கொள்’ என்று அரசர் சொல்லி இருக்கிறாராம்.”

இதைக் கேட்ட பட்டத்தரசியும், மற்றவர்களும் ஆத்திரமடைந்தனர்.

“பேரரசருக்கு அப்படியென்ன மிக முக்கியமான பணி?” என்று பட்டத்தரசி கேட்டாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வீரமாதேவி கூறிய மறுமொழி அவர்களைச் சீறியெழச் செய்தது.

வனப்பகுதியை அழித்து புதிய நகரத்தை நிர்மாணிக்கப் போவதாகவும், அங்கு பெரிய கோயில் - தஞ்சை புரியிலுள்ள பெருவுடையார் கோயிலைவிடப் பெரிய கோயிலைக் கட்டப் போவதாகவும், அதற்காக சிற்பிகள் பலர் அங்கே வரப்போவதாகவும், நாட்டியம் கற்றுக் கொடுக்கும் கலையகத்தில் சோழ நாட்டினின்று நூற்றுக் கணக்கானவர்களுக்கு நாட்டியப் பயிற்சி அளிக்கப் போவதாகவும், நகரத்திற்குத் தன் பெயரைச் சூட்டப்போவதாகவும், பொறாமைப்பிடித்த அரிந்தவன் மாதேவியைச் சந்திக்கத் தன்னைப் பேரரசர் வற்புறுத்தி அனுப்பியதாகவும் மிகக் கம்பீரமாகவும் குரலில் செருக்குடனும் வீரமாதேவி கூறியது கேட்டு, பஞ்சவன்மாதேவியும், மற்றவர்களும் சீறியெழுந்தனர்.

அவர்கள் உடலில் பாயும் குருதியெல்லாம் பொறாமை, ஆத்திரம், சீற்றம் இவற்றால் கொதித்தது.

“உன் பெயரில் நகரமா? பெரிய கோயிலா? உன்னை வற்புறுத்தி இங்கு அனுப்பினாரா? உனக்கு என்ன உரிமை? இந்த நாட்டில் வாழும் எளிய குடிமகள். அரச அந்தஸ்தை ஒரு நாளும் நீ அடைய முடியாது. அரசரிடம் உனக்குள்ள நெருக்கத்தால், நீ செல்வாக்குடன் திகழ்கிறாய். உனக்குள்ள செல்வாக்கை ஒழிக்காமல் நாங்கள் ஓயமாட்டோம்” என்று அவர்கள் கூவினர். எல்லாரும் ஒருசேரப் பேசியதால் வார்த்தைகளில் குழப்பம்!

வீரமாதேவி அமைதியாகப் பேசினாள்: அரச குடும்பத்தில் மிக உயர்ந்த இடத்தில் வீற்றிருப்பவர்கள் என்பதற்காகத் தங்களுக்குத் தரும் மரியாதையை நான் குறைக்கப்போவதில்லை. ஆனால், சோழர் குலத்து மகராசிகளே! உங்களுக்கு ஒன்று இப்போது சொல்வேன். அரசரின் அன்பு இதயத்தினின்று என்னை கீழே வீழ்த்த ஒருவராலும் முடியாது. தஞ்சைப் பெரிய கோயிலைப் போலவும், என் அன்புக்கு இனியவர் நிர்மாணிக்கப் போகும் மற்றொரு பெரிய கோயிலை போலவும் என் பெயரும் சூரிய சந்திரர் உள்ள வரை அழியாமல் இருக்கப் போகிறது”.

“ஓஹோ” என்று அவர்கள் வாய்விட்டுச் சிரித்தனர்.

“எங்கள் எதிரே நீ ஒரு புழு. உன் எண்ணம் ஒருபோதும் நிறைவேறாது. உன் பெயரை அந்தக் கோயிலுக்குப் பேரரசர் சூட்டுவார் என்று கனவிலும் நினைக்காதே. அங்கே கோயிலும் கட்டப்படப் போவதில்லை. புது நகரமும் எழப்போவதில்லை. அப்படியொன்று

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

நடந்தால்தானே அந்தக் கோயிலுக்கும், நகரத்திற்கும் உன் பெயரைச் சூட்டுவார்கள்? 'வீரமாதேவிச்சரம், வீரமாதேவிபுரம்' என்றழைப்பார்கள் என்று வீண் மனப்பால் குடிக்காதே வீரம்மா! நீ அந்த இடத்திற்குத் திரும்பிப் போக முடியாது. போனாலும் அரசரைச் சந்திக்கப் போவதில்லை. உன் பெயர் வீரமாதேவியாகவும் இருக்கப் போவதில்லை. இருந்தால்தானே அழியாமல் இருப்பதற்கு? உன்னை வீரம்மாளாக ஆக்கி, மீண்டும் கொள்ளிடக் கரைக்கே அனுப்பாவிடில் நான் பேரரசரின் பட்டத்தரசியல்லள். நீ இப்போது போகலாம்" என்று அரசி ஆவேசத்துடன் பேசினாள்.

வீரமாதேவி சிரித்தாள். அந்தச் சிரிப்பில், அரசியாரை அவமதிக்கும் தன்மை இருந்தது. முகத்தைத் திருப்பிக் கொண்டாள். இடுப்பில் கை வைத்துக் கொண்டு எழுந்து நின்றாள். மெல்ல நடந்து வந்தாள். பஞ்சவன் மாதேவியின் முகத்துக்கு வெகு அருகே தன் கையை நீட்டி,"இந்த நாட்டின் அரசி என்பதற்காக நான் தங்களுக்கு இந்தக் கணம் வரை மரியாதை தருகிறேன். பழுவேட்டரையர் குலத்தில் வந்தவள் என்பதற்காக அன்று. என் அபிமானத்திற்குரிய, என் இதயத்தின் அரியணையிலிருந்து என்றும் அழிக்கமுடியாத சக்கரவர்த்தி ஆளும் நாடான சோழப் பேரரசின் அரசி என்பதற்காக மிகவும் அடக்கமாக இருக்கவேண்டியிருக்கிறது. ஆனால், இப்போது நீங்கள் அரசி என்ற தர்மபீடத்திலிருந்து இறங்கி பொறாமை பிடித்த பெண் போல் பேசுவதால் நானும் அதற்கு ஏற்றபடி என் குணத்தை மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது.

"பஞ்சவன் மாதேவி அவர்களே! மனத்தில் உள்ள பொறாமையைக் கொட்டித் தீர்த்து விட்டீர்கள். உங்கள் வாய்மொழிப்படியே உங்களை பேரரசரின் பட்டத்தரசிப் பதவியிலிருந்து நொடியில் இறக்கிவிட முடியும். மீண்டும் என்னை பழைய வீரம்மாளாக மாற்றிக் கொள்ளிடக் கரைக்கு அனுப்ப முடியாது. நான் சோழச் சக்கரவர்த்தியின் இதய அரியணையில் ஈடு இணையில்லாமல் அமர்ந்திட்டவள். வருங்காலத்தில் உங்கள் பெயரைச் சொல்வதற்கு ஒருவர் கூட இருக்கப்போவதில்லை. சோழ நாட்டின் பெயர் உள்ளளவும், மூவுலகும் ஆளும் பரகேசரி இராசேந்திர சோழச் சக்கரவர்த்தி அவர்களின் பெயர் உள்ள அளவும் என் பெயரும் அழியாது நின்று நிலவப் போகிறது. அப்படிப்பட்ட மகத்தான செயலொன்றைப் புரிந்து என் பெயரை நிலைநாட்டிக் கொள்ளாவிடில் என் பெயர் வீரமாதேவி அல்ல. சோழப் பேரரசரைக் கைபிடித்த இளவரசிகள் என்ற உரிமையையோ பயன்படுத்தினாலும் என் சபதம் நிறைவேறாமல் தடுக்க முடியாது".

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வீரமாதேவி மெல்லப் பேசிக் கொண்டே, பஞ்சவன் மாதேவியின் மிக அருகே நெருங்கி தன் சபதத்தை உரத்த குரலில் கூறியது கேட்டு அந்தக் கூடத்தில் இருந்தவர்கள் நடுநடுங்கி விட்டனர்.

# 57

# சித்தரைத் தேடி....

வீரமாதேவி, பழையாறையிலிருந்து புறப்பட்டுச் சென்றுவிட்டாள்.

அவள் சென்ற பிறகு, மழை விட்டும் தூவானம் விடாதது போல் பஞ்சவன் மாதேவியும், அரிந்தவன் மாதேவியும் வீரமாதேவியைப் பற்றியே பேசிக் கொண்டார்கள். அவளைத் தூற்றினார்கள். அவளைக் குரூரமாக வர்ணித்தார்கள்.

“என்ன சொன்னாள் பார்த்தீர்களா? நாம் பொறாமை பிடித்தவர்களாம். பட்டத்தரசிப் பதவியிலிருந்து என்னை நொடியில் இறக்கி விடுவார்களாம்” பஞ்சவன்மாதேவி சீறினாள்.

வீரமாதேவிக்கு இவ்வாறு பேச யார் உரிமை கொடுத்தார்கள்?

“தேவி! சோழநாட்டின் அரசி என்பதைத் தாங்கள் மறந்துவிட்டீர்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. நேற்று வந்தவள் பேசி விட்டுப் போகிறாள்.மரியாதையின்றிக் கையை நீட்டி நீட்டிப் பொல்லாங்கு பொழிந்து விட்டுப் போகிறாள். நீங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். ஒரு வார்த்தை பேசியவுடனேயே காவலர்களை அழைத்து அவள் நாக்கைத் துண்டாடச் செய்திருக்க வேண்டாமா?” அரிந்தவன் தேவி அரசியாரை நோக்கிச் சற்று அதிகாரத்துடனேயே கேட்டாள்.

“அவள் சபதமிடுகிறாள். நாம் அனைவரும் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

“வருங்காலத்தில் நம் பெயரைச் சொல்வதற்கு ஒருவரும் இருக்கமாட்டார்களாம்.

“சோழநாட்டின் பெயர் உள்ளளவும் மூவுலகும் ஆளும் பரகேசரி இராசேந்திர சோழ சக்கரவர்த்தி அவர்களின் பெயர் உள்ளளவும் என் பெயர் அழியாது நின்று நிலவப் போகிறது’என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்கிறாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

'அழியாது பெயர் நின்று நிலவுவதற்கான செயலொன்றைப் புரியப் போகிறேன். அப்படியோர் அரிய செயல் செய்யாவிட்டால், என் பெயரை நிலை நாட்டிக் கொள்ளாவிட்டால் என் பெயர் வீரமாதேவி அன்று' எனச் சபதம் செய்து விட்டாளே!" பஞ்சவன்மாதேவி வாய்விட்டுப் புலம்பினாள்.

"அவள் இவ்வாறு சொல்வதன் அடிப்படைக் காரணம் என்னவாக இருக்கும்?" அரிந்தவன் தேவி கேட்டு அவளே அதற்கு விடை பகன்றவாறு,"நம் சக்கரவர்த்திதான் வீரமாதேவி இவ்வாறு பேசுவதற்கும் மமதை பிடித்து அலைவதற்கும் காரணம்".

"அவள் பெயர் அழியாதிருக்க அரிய செயல் என்ன செய்யப் போகிறாள்?"

"அதுதான் சொல்லிவிட்டாளே! வனப் பகுதியை அழித்துப் புதிய நகரத்தை அமைக்கப் போகிறாளாம். அங்கே பெரிய கோயில் ஒன்றைக் கட்டப் போகிறாளாம். சிற்பிகளை அழைத்து வரப்போகிறாளாம். புதிய நகரத்திற்குத் தன் பெயரைச் சூட்டப் போகிறாளாம். வீரமாதேவிபுரம் என்று பெயரிட்டு விட்டால் காலகாலத்திற்கு அவள் பெயரால் அந்த நகரத்தை ஆழி சூழ் உலகிலுள்ளவர்கள் அழைப்பார்கள் அன்றோ?"

பஞ்சவன்மாதேவியும், அரிந்தவன் தேவியும் ஏதும் பேசாமல் மௌனமாயிருந்தார்கள். புதிதாக ஒன்றைக் கண்டுபிடித்து விடடவள்போல் பஞ்சவன்மாதேவி பரபரப்புடன் கூறினாள்:

"காடுகளை வெட்டினால்தானே நகரத்தை அமைப்பாள்? நகரத்தை அமைத்தால்தானே பெரிய கோயிலைக் கட்டுவாள்! பெரிய கோயிலைக் கட்டினால்தானே அதில் அற்புதச் சிற்பங்களை அமைப்பாள். சிற்பங்கள் அமைப்பதாயிருந்தால்தானே சிற்பிகள் வருவார்கள். நகரம் அமைந்தால்தானே நகரத்திற்கு வீரமாதேவியின் பெயரிடப்படும். 'வீரமாதேவிபுரம்' என்ற பெயர் இடப்பட்டால்தானே அது அழியாதிருக்கும்! அடிப்படையையே தகர்த்து விடுவோம்" என்றாள், பஞ்சவன்மாதேவி.

அரிந்தவன் தேவி தலையை அசைத்தவாறு கேட்டுக் கொண்டிருந்தாள். பிறகு கவலையுடன் கூறினாள்: "தேவி, கேட்க நன்றாகத்தானிருக்கிறது. வீரமாதேவியைத் தடை செய்யும் சக்தி யாருக்கிருக்கிறது? அரசர் தாங்கள் சொல்வதைக் கேட்கப் போவதில்லை. அமைச்சர்கள் எடுத்துக் கூறுவார்களா என்பது சந்தேகமே! அமைதியான பணி, அதைத் தடை செய்வானேன் என்று அவர்களே கூறக்கூடும். யாரைக் கொண்டு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வீரமாதேவியைக் கட்டுப்படுத்தப் போகிறார்கள்?"

அரிந்தவன் தேவி கூறியதைக் கேட்டு பஞ்சவன் தேவி ஒரு கணம் திகைத்தாள். சிறிது சிந்தித்தாள்.

"காட்டை அழிக்க மரம் வெட்டும்போது நான் அங்கே செல்வேன். தடுப்பேன்" பஞ்சவன்தேவி வீரமுடன் பேசினாள்.

அரிந்தவன் தேவி தலையசைத்தாள். "முடியாது, முடியாது, தங்களால் முடியாது! யாராலும் முடியாது. அங்கே பணிகள் ஆரம்பமாகிவிட்டன. பணியைத் துரிதப்படுத்துவதற்காகவே சக்கரவர்த்தியும், மற்றும் பரிவாரங்களும் சென்றிருக்கிறார்கள். விஷப்பரிட்சை மேற்கொள்ளாதீர்கள். அவமானப்பட்டுத் திரும்புமாறு நேரலாம்" என்றாள்.

பஞ்சவன்மாதேவி அமைதியாகச் சிந்தித்தாள். பிறகு முகமலர்ச்சியுடன், உற்சாகமான குரலில் பேசினாள்.

"அரிந்தவன் தேவி! தக்கவரைக் கண்டுபிடித்து விட்டேன். அவர் சொன்னால் சக்கரவர்த்தி கேட்பார். வீரம்மாளும் தலைவணங்குவாள்" என்றாள்.

அரிந்தவன் தேவி வியப்புடன் அரசியை நோக்கினாள். 'தக்கவர்' யார் என்றறிய ஆவல் கொண்டாள்.

அரிந்தவன் தேவியை அழைத்து அவள் செவிக்கு மட்டும் கேட்கும்படியாக அவர் பெயரைச் சொன்னாள்.

"கருவூர்ச் சித்தர்".

'கருவூர்ச்சித்தர்'– அரிந்தவன்தேவி ஒரு முறை அந்தத் திருப்பெயரை உச்சரித்தாள். மெல்ல அவள் மேனி சிலிர்த்தது.

"தேவி! நல்ல யோசனை. நமது பேரரசர், சித்தர் பேச்சைத் தட்ட மாட்டார். அவரை நாம் சந்திப்போம். அவர் எங்கே இருப்பார்? அவர் இங்கு வருவாரா? சற்றும் தாமதமின்றி நாம் இயங்க வேண்டும்". இதுவரை சோர்ந்துப் படுத்திருந்த, அரிந்தவன் தேவி நிமிர்ந்து அமர்ந்தாள்.

"நாம் அழைத்தாள் வரமாட்டார். அவர் இருக்குமிடம் செல்ல வேண்டும். நமக்கு அவரைச் சந்திக்கும் நற்பேறிருந்தால்தான் சந்திப்பார். என்ன செய்வதென்று தெரியவில்லை. புரியவில்லை. இதுவரையில் நான் எந்த

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அரசு அதிகாரிகளிடமும் நேரே பேசியதில்லை. கட்டளையிட்டதில்லை. ஒற்றர் படைத் தலைவர் பலமுறை எனக்கு வணக்கம் தெரிவித்துப் பேச முயன்றிருக்கிறார். என் ஆணைப்படி இயங்கவே ஒற்றர்களில் ஒரு பிரிவு இருப்பதாகவும் நான் இப்போதுதான் அறிந்தேன். சக்கரவர்த்திகளை நான் மணம்புரிந்து கொண்ட பிறகு, மாளிகையில் சுகபோக வாழ்வில் திளைத்து இருந்துவிட்டேன். எப்போதும் யுத்தகளத்திலும், வேற்று நாட்டிற்குச் சென்று போர் புரிவதிலும் பேரரசர் தன் காலத்தைக் கழித்துவிட்டார். மாளிகையிலும் ‘நீ பெரியவள், நான் பெரியவள்’ என்ற பூசலிலேயே காலத்தைப் போக்கிவிட்டேன். பொற்கொல்லரையும், நானா தேசத்து வணிகர்களையும் ரத்தின வியாபாரிகளையும் மாளிகைக் கூடத்திற்கு அழைத்து, ஆபரணங்கள் செய்வதிலும், நவரத்தினங்களின் சிறப்பை ஆராய்வதிலும் காலத்தைக் கழித்துவிட்டேன். காஷ்மீரத்திலிருந்தும் சீனத்திலிருந்தும் யவன நாட்டிலிருந்தும் வரும் பெருஞ்செல்வந்தர்கள் அளிக்கும் பரிசுகளை ஏற்று மகிழ்ச்சியுடன் காலம் கழித்துவிட்டேன். பேறு காலம், உடல் நலக் குறைவுக் காலம். திருவிழாக்கள் என்று காலங்கழித்து வேறு சிந்தனையில்லாமலேயே முதுமையை அடைந்துவிட்டேன். இப்போது நினைத்து என்ன பயன்?

“முக்கோக்கிழான்டிகள், வானவன் மாதேவி இவர்கள் எல்லாம் என்னை இலட்சியமே செய்யமாட்டார்கள். நீ சற்று அன்புடன் பழகுவாய். அதற்கே மற்ற தேவிமார்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதை நான் அறிவேன். ‘அரிந்தவன் தேவி, பஞ்சவன் மாதேவியிடம் நெருங்கிப் பழகுவதற்கு ஏதோ காரணம் இருக்கிறது’ என்று பேசிக் கொள்கிறார்களே” என்று கூறும்போது அரிந்தவன் தேவி குறுக்கிட்டு,“எனக்குத் தெரியும். அதுபோன்ற வம்புப் பேச்சைக் காதிலே போட்டுக் கொள்ளக் கூடாது”.

“என்னிடம் வந்து நம்பிக்கைக்கு உகந்தவர்கள் சொல்கிறார்களே!”

“எனக்கு ஒன்று தோன்றுகிறது. தங்களிடம் இது போன்ற செய்திகளைச் சேகரித்துச் சொல்பவர்களில் நம்பிக்கையான ஓரிருவரை அழைத்து, கருவூர்ச் சித்தர் இருக்குமிடத்தைத் தெரிந்து வருமாறு செய்யுங்கள்”.

“ஆ! மிக நல்ல யோசனை. வயதில் என்னைவிட இளையவளெனினும் உனக்குள்ள அறிவு ஆற்றலைப் பாராட்டுகிறேன்” என்று கூறி பஞ்சவன் மாதேவியை நோக்கி அரிந்தவன் தேவி மெல்லிய குரலில்,“பட்டத்தரசிகளுக்குள் நான்தான் இளையவள் என்பதும், அழகானவள் என்பதும், என் அழகிற்காகவே இளவரசாயிருந்தபோது நம் அரசர் என்னை விரும்பி மணந்து கொண்டார் என்பதும் தங்களுக்குத்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தெரிந்திருக்கும்” என்று, இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு நெஞ்சில் தைப்பதுபோல் பேசினாள்.

ஒரு காலத்தில் அரிந்தவன் தேவி மீது பஞ்சவன் தேவிக்குப் பொறாமை உண்டு. திரிபுவனமாதேவியும், முக்கோக்கிழானடிகளும் இறந்த பிறகு, பஞ்சவன் மாதேவிக்கு மதிப்பு உயர்ந்தது. இராசேந்திரனும் அவ்வப்போது பஞ்சவன் மாதேவியைச் சந்தித்து உரையாடி வந்ததால், பஞ்சவன்மாதேவி தன் பொறாமைக் குணத்தை மாற்றிக் கொண்டாள். அரிந்தவன் தேவியுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்தாள். வீரமாதேவியை இராசேந்திரன் திருமணம் செய்து கொண்டார் என்ற செய்தி அறிந்த நாளிலிருந்து பஞ்சவன் மாதேவிக்கு உள்ர பயம் குடி கொண்டது. அரிந்தவன் தேவியிடம் நெருக்கமாகி வீரமாதேவியைக் குறை கூறுவது, இழிவு படுத்துவதுபோல் பேசுவது. இராசேந்திரனிடமிருந்து அவளை எப்படியாவது பிரித்துவிட வேண்டுமென்பதற்குத் திட்டங்களை வகுப்பது - இப்படியாக அரிந்தவன் தேவியின் கருத்துகளுக்கு மதிப்பளித்தாள்.

“தேவி! நேரம் பொன்னானது என்பார்கள். ஒரு கணம் கூட நாம் சும்மாயிருக்க முடியாது. சித்தர் இருக்குமிடத்தைக் கண்டுபிடிக்கச் சொல்லுங்கள். நமது திட்டத்தை விரைவில் செயல்படுத்த வேண்டும்” என்று பஞ்சவன் மாதேவியைத் தூண்டினாள்.

சோழநாட்டுப் பேரரசி தன் அந்தரங்க ஒற்றர்களை முதன் முதலாக ஏவினாள்.

கருவூர்ச் சித்தர் இருக்குமிடத்தை இரு நாள்களுக்குள் அறிந்து வந்துத் தெரிவித்தனர்.

பஞ்சவன்மாதேவியும், அரிந்தவன்தேவியும் சில பணிப்பெண்களுடன், மெய்க் காவலர்களுடன் கருவூர்த் தேவரைச் சந்திக்கப் புறப்பட்டார்கள்.

# 58

# கங்கை நீரும் கண்ணீரும்

பழையாறையினின்று பல்லக்குத் தேரில் பஞ்சவன் தேவியும், அரிந்தவன் தேவியும் புறப்படும்போது, மெய்க் காப்பாளர்களிடம் அரசி சொன்னாள்:

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“நாங்கள் செல்லும் இடம், காரிய காரணங்கள் மிக இரகசியமாக இருக்க வேண்டும்” என்று பட்டோலைப் பெருமானிடமும் தெரிவித்தாள்.

இராசேந்திர சோழ சக்கரவர்த்திகளுடன் தஞ்சையினின்று புறப்பட்ட பட்டோலைப் பெருமானை, பழையாறையிலேயே இருக்குமாறு அவர் சொல்லி வீரமாதேவியுடன் புறப்பட்டார். ஏன் என்று வீரமாதேவிக்கும் தெரியவில்லை.

“வீரமாதேவி! சில நிகழ்ச்சிகள் அரசியலில் மிக முக்கியமானவருக்குக் கூடத் தெரியாமல் இருப்பது நல்லது. பட்டோலை நாயகத்திடம் நாள்தோறும் நாட்டு நடப்பை எழுதுமாறு பணிப்பேன். இப்போது நாம் செய்வது, இன்னும் சில நாள்கள் கழித்துத் தெரியட்டும் என்பதற்காகவே, அந்த அதிகாரிகளைப் பழையாறையிலேயே சில நாள்கள் தங்குமாறு பணித்தேன்!” என்று கூறினார், இராசேந்திரன்.

“சில நிகழ்ச்சிகள் மிக முக்கியமானவருக்குக் கூடத் தெரியக்கூடாது என்பது அரச இரகசியமாயிருப்பதால் நான் ஏன் என்று கேட்கவில்லை. முக்கியமானவர்களுக்குத் தெரியக் கூடாதென்பதால் நான் மிக முக்கியமானவளாஇல்லையா என்பதை உறுதி செய்து கொள்ளலாமா? மிக முக்கியமானவள் நான் என்றால் எனக்குத் தெரியக்கூடாது. தெரிவதில் தவறில்லை என்றால் நான் முக்கியமானவளில்லை. அப்படித்தானே?”– வீரமாதேவியின் கேள்விக்கு மறுமொழி கூறமுடியாமல், தேவியைக் கூர்ந்து நோக்கினார்.

அவளுடைய கூர்மையான அறிவிற்காக அவளைப் பாராட்டத் துடித்தார். அவளை அப்படியே அணைத்துக் கொள்ள வேண்டும்போல் தோன்றியது. உச்சியிலும் இதழ்களிலும் முத்தமிட வேண்டும் என்று தோன்றியது.

ஒரு கணம் அந்த மாயை அவர் கண்களை மறைத்தது. மறுகணம் தன் நிலை உணர்ந்து,“வீரமாதேவி! உன் அறிவுத் திறமையைப் பாராட்டுகிறேன். நீ வேறு. நான் வேறா? மிகமிக வேண்டியவர்களுக்கும் அப்பாற்பட்டவள் நீ. உனக்கு நான், நம் உறவுமுறை விசித்திரமானது. கலை நம்மைப் பிணைத்திருக்கிறது. அதனால் கலை தொடர்பாக நாம் எடுக்கும் முடிவை மற்றவர்கள் சில காலம் அறியக் கூடாது என்பதற்காக பட்டோலைப் பெருமகனாரை வருமாறு சொல்லவில்லை. இன்றும் பார்த்தாயா? திருமந்திர ஓலை நாயகம் வரவில்லை: உடன் கூட்டத்தாரை அழைக்கவில்லை. கட்டியங்காரனும் அழைக்கப்படவில்லை. என்னுடனிருந்து என் ஏவலை

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

நிறைவேற்றுவோர் ஒருவரும் வரவில்லை. கவனித்தாயா?" என்று கேட்டார்.

வீரமாதேவி சிறிது மௌனமாயிருந்து பிறகு எதையோ நினைத்துச் சிரித்தாள்.

"அந்தக் கட்டியங்காரனை நினைத்தால் சிரிப்பு வருகிறது. அவனுடைய உடையும் குரலும் - கையிலே வெள்ளிப்பூண். அதன் முகப்பில் புலி உருவம். அவர் மீசை. யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே என்பதுபோல் 'பரகேசரி இராசேந்திர சோழ தேவர் வருகிறார் வருகிறார் வருகிறார்' என்று அவர் முழங்குவதும் பரகேசரி என்று சொல்வதற்கு முன்பு அவர் கூறும் தங்களைப் பற்றிய பெருமைச் சொற்கள்: ஆகா! கேட்டுக் கொண்டே இருக்கலாம். ஆனால், அவர் ஒரு தடவை கூட 'வீரமாதேவியும் உடன் வருகிறாள் வருகிறாள் என்று கூறியதில்லை!" என்றாள்.

"இனி கூறுமாறு சொல்கிறேன். தேவி! நமக்காக கருவூர்த் தேவர் காத்திருப்பார். இந்தப் பூவுலகிலேயே கண்கண்ட தெய்வமான சித்தர் அருளால்தான் நாம் வாழ்கிறோம். அவர் இன்று நமக்குப் பல யோசனைகளை கூறப் போகிறார். அவருடன் நாம் பேசும்போது மற்றவர்கள் இருக்கக் கூடாது".

"தங்கள் சகோதரி?"

"கூடாது".

"சிற்பி".

"கூடாது".

"அப்படியென்றால்?"

"சித்தர், நீ, நான் மட்டுமே! இன்று மந்திரபூர்வமான செயலொன்று உருவாகப் போகிறது. நம் வாழ்க்கையில் திருப்புமுனை. நம் இலட்சிய மாளிகையின் கால்கோள் விழா. இந்தப்பிறவி எடுத்த பயனை நான் பெறப் போகிறேன்".

"பிறவிப் பயன் எனக்கில்லையா?"

"நான் என்று சொல்லும்போது நீயும் உட்பட!"

"ஓ! மாதொரு பங்கன்: அர்த்தநாரி!".

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“ஆமாம்! சிவனும் பார்வதியும் எப்படியோ அப்படியே தான் நாம். காம, குரோதங்களுக்கு அப்பாற்பட்ட தெய்வநிலையை நாம் அடைந்து விட்டோம். அதை நாம் உறுதியுடன் கடைப்பிடிக்கிறோமா என்று கருவூர்த்தேவர் சோதனை செய்து வருகிறார். சோதனை முடிந்து நம் இலட்சியக் கோயிலுக்கு அடிக்கல் நாட்டும் விழா வரை அவர் காத்திருப்பார்”.

வீரமாதேவியின் மெய் சிலிர்த்தது. “பேரரசரே! என் இதய நாயகரே! என் இடது தோளும் கண்ணும் துடிக்கின்றன. கட்டப்படும் கோயிலில் நம் இருவர் சிலைகளும் அமைய வேண்டும் என்ற என் எண்ணத்தைத் தேவரிடம் சொல்லலாமா?”

“நாம் ஒன்றுமே சொல்லக்கூடாது. எல்லாம் உணர்ந்தவர் அவர்”.

காட்டின் நடுவே, முன்பே உருவாகியிருந்த வெட்ட வெளிக்கு இராசேந்திரனும் வீரமாதேவியும் மட்டும் சென்றடைந்தார்கள். அவர்கள் வருவதற்கு முன்பே கருவூர்ச் சித்தர் அங்கிருந்த பாதை ஒன்றில் அமர்ந்து யோக நிஷ்டையிலிருந்தார்.

இராசேந்திரனும் வீரமாதேவியும் வருவதுணர்ந்து அவர், சைகையால் அவர்களை வரவேற்று ஓரிடத்தைச் சுட்டிக் காட்டினார்.

ஈரமாயிருந்த மணல் வெளியில் கோலமிடப்பட்டிருந்தது. குறுக்கும் நெடுக்குமாகக் கோடுகள்.

“இராசேந்திரா! நன்றாகக் கவனி! இதுதான் நீ கட்டவிருக்கும் சிவபெருமான் திருக்கோயில்.

“பெரிய லிங்கம்: பெரிய ஆவுடையார். மிகப் பெரிய விமானம். மண்டபம். திருச்சுற்று, கருவறையின் இருபுறமும் துவார பாலகர்கள், மேல் மாடம், அதற்கு மேல் மாடம் இன்னும் சொல்கிறேன்.

“வீரமாதேவி! இராசேந்திரன் திருக்கரத்தைப் பிடித்துக் கொள்! இருவரும் இங்கே வரையப்பட்ட கோயிலின் வரைகோடுகளைச் சுற்றி வாருங்கள். கூர்ந்து கவனியுங்கள்.

“கோயில், விமானம், கோபுரம், திருச்சுற்று, பெரிய நந்தி, மதில், கோயிலுக்கு வெளியே வீதிகள். வீதிகளைத் திட்டமிட்டு அமையுங்கள். மாளிகை கட்டுங்கள், சற்றுக் கோட்டை மதில் கட்டுங்கள், புறநகரங்களை அமையுங்கள். ஓ! நமசிவாய - இங்கே ஒரு தட்சிண கைலாயம் அமையட்டும்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

"ஓ! இராசேந்திரா! சோழநாட்டில் நான் சுற்றி வந்த காலம் முடியப் போகிறது. பொதிகைச் சாரலில் நான் தவஞ் செய்யச் சென்று விட்டால் நான் மீண்டும் வர மாட்டேன். இன்னும் இரு நாள்களில் வடக்கே கங்கைக் கரைக்குச் செல்கிறேன். கங்கை வழியே கைலாசம் செல்கிறேன். திரும்பி வரும் போது சோளீச்சரம் கட்டி முடிக்கப்பட்டிருத்தல் வேண்டும். நகரம் உருவாகியிருக்க வேண்டும். இராசேந்திரா! மற்றுமொரு மகத்தான பணியை உன்னிடம் கூறப் போகிறேன். இங்கே, தட்சிண கைலாயம் உருவாகிக் கொண்டிருக்கும்போது, நீ கங்கைக் கரைக்குச் சென்று அங்கே புனித நீராடி கங்கை நீரைக் கொண்டு வர வேண்டும். சோளீச்வரருக்கு கங்கையின் புனித நீரால் திருமுழுக்காட்ட வேண்டும்".

வீரமாதேவி பயபக்தியுடன் கேட்டுக் கொண்டிருந்தாள். விழிநீர் அருவி போல் வழிந்து அவளைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தது. உதடுகள் உணர்ச்சி மிகுதியில் துடித்தன.

"வீரமாதேவி!" என்று கருவூர்ச் சித்தர் அழைத்தார்.

மிகவும் பயபக்தியுடன் வீரமாதேவி அவர் அருகே வந்து பாதங்களைக் கண்ணீரால் குளிப்பாட்டினாள்.

# 59

# கங்கைக் கரை நோக்கி...

கருவூர்ச் சித்தர் புறப்பட்டு விட்டார். இரு கரங்களையும் உயர்த்தி வீரமாதேவிக்கும், இராசேந்திரனுக்கும் ஆசி அளித்துப் புறப்பட்டு விட்டார். பறவைகள் நின்று வணங்கின. காட்டு மயிலொன்று நின்று பார்த்து அவர் அருளுக்கு ஏங்கியது. பூங்கொத்துகள் நிறைந்த மரக்கிளைகள் தாழ்ந்து வணங்கின. அவருக்கு என்ன வயதிருக்கும்? புயல் போன்ற நடை, புகை மெல்ல மறைவது போல், கானகப் பாதை வழியே சென்று மறைந்தார் நடந்தாரா! பூமியில் பாதங்கள் பதிகின்றனவா!

வீரமாதேவியும், இராசேந்திரனும் நின்ற இடத்திலிருந்து அசையாச் சிலையாக அருளாளரை கண் இமைக்கவும் மறந்து, நெஞ்சாஞ்சலி செலுத்தி நின்று கொண்டிருந்தனர்.

"தேவி, வா போகலாம்! செய்ய வேண்டிய பணிகள் ஏராளமாக உள்ளன.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சித்தர் மிக விரைவில் திரும்பி வருவார். அவர் வருவதற்குள் நாம் மேருவையே இங்கு கொண்டு வர வேண்டும். வா போகலாம்” என்று விரமாதேவியின் தோளை மெல்லத் தொட்டு, அவளைச் சுய நினைவுக்குக் கொண்டு வந்தார், இராசேந்திரன்.

உணர்ச்சி மிகுதியால், பக்திப் பரவசத்தால் வீரமாதேவி விழிகளிலிருந்து அருவி நீராய்க் கண்ணீர் பெருகியது.

அவள் விழிநீரை மெல்லத் துடைத்து,“சித்தர் எங்கும் போய்விடவில்லை: சித்தர் வடக்கே இமயமலைச் சாரலுக்குச் செல்கிறார். திரும்பி வருவதாகத் தெரிவித்திருக்கிறாரே. அவர் திரும்பி வருவதற்குள் இந்தத் தட்சிணக் கைலாயம் கட்டி முடிக்கப்பட்டிருத்தல் வேண்டும். நாம் மிக வேகமாக இயங்க வேண்டும். மற்றவரையும் இயக்க வேண்டும். வா, போகலாம்” என்று இராசேந்திரன் வீரமாதேவியை சமாதானப்படுத்தி அழைத்தார்.

கட்டப்பட வேண்டிய கோயிலின் வரிவடிவம் வரையப்பட்ட பூமிக்கருகே இருவரும் நின்று வணங்கினர். “இந்த இடத்தைச் சுற்றி வேலி அமைத்து என்றும் பாதுகாக்க வேண்டும்” என்றார், இராசேந்திரன்.

”புனிதமான இடமாக இதைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும். சித்தர் கரம் பட்ட பூமி, இது” என்றாள், வீரமாதேவி.

“அவர் அருளால், கோயில் சிறப்பாக அமையும் என்பதில் ஐயமில்லை. ஆனால்…” என்றார், இராசேந்திரன்.

“தங்களுக்கு என்ன சந்தேகம்?”

“சந்தேகமில்லை… ஒருவித அச்சம்”.

“அச்சம் என்ற சொல் தங்கள் மனதில் எழுவதற்கே அஞ்சுமே…. தாங்களா அச்சம் என்று சொல்வது?”

“சித்தர் இட்ட கட்டளையை மீண்டும் ஒருமுறை நினைத்துப் பார்! வடக்கே கங்கைக் கரைக்குச் சென்று கருவூரார் திரும்பி வருவதற்குள் சோளீச்சரம் கட்டி முடிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று சித்தர் கூறியுள்ளாரே…”“அதில் என்ன தயக்கம்? அவர் அவ்வாறு சொன்னதால் தான், இறைவன் திருக்கோயில் திருப்பணியை விரைவில் முடிக்கும் வேகம் நம்மிடம் ஏற்படுகிறது”.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

”அதைச் சொல்லவில்லை. மற்றொரு மகத்தான பணியை அவர் கூறியிருக்கிறார். இங்கே தட்சிணக் கைலாயம் உருவாகிக் கொண்டிருக்கும்போது, நான் கங்கைக் கரைக்குச் சென்று, புனித நீராடி, கங்கை நீரைக் கொண்டு வந்து சோளீச்வரருக்கு அந்தப்புனித நீரால் முழுக்காட்ட வேண்டுமாம். அப்படியென்றால் இங்கே கோயில் திருப்பணியை நீதான் அருகே இருந்து கவனித்துக் கொள்ள வேண்டும். தயக்கமே அங்குதான் தேவி…!” என்று இராசேந்திரன் கூறி, வீரமாதேவியை நோக்கினார்.

இப்போது அவர்கள் பேசிக் கொண்டே பூங்கொடியின் நடன அரங்கு அருகே வந்துவிட்டனர். உள்ளே, நடனம் பயில்பவர்களின் பாதச் சதங்கை ஒலியும், தாள ஓசையும் கேட்டுக் கொண்டிருந்தன.

வீரமாதேவிக்கு ஒரு கணம் அவர் சொல்வது விளங்கவில்லை: விழிகளால் வினவினாள்.

“கங்கையில் நீராட என்னுடன் நீ வர இயலாது என்ற கவலைதான் தயக்கத்திற்குக் காரணம்”.

“தங்களுடன் நான் வரமுடியாதா?”

“சித்தர் என்ன சொன்னார்? என்னைக் கங்கையில் நீராடிக் குடமுழுக்குக்குக் கங்கை நீர் கொண்டுவருமாறு சொல்லவில்லையா, நம் இருவரில் ஒருவர் இங்கு இருந்து கோயில் நிர்மாணப் பணிகளைக் கவனிக்க வேண்டாமா? நான் இங்கு இருந்து, கங்கைக் கரைக்கு நீ செல்ல முடியுமா? இருவரும் சென்றால், திருப்பணியை யார் மேற்பார்வை இடுவது?”

வீரமாதேவி புரிந்து கொண்டாள்.

“தாங்கள் பட்டத்து அரசியுடன் சென்று நீராடுவதுதான் தர்மம், நியாயம். பட்டத்து அரசியை அழைத்துக் கொண்டு செல்லுங்கள். அங்கே முப்பெரும் நதிகள் கலக்கும் இடத்தில் அவருடன் நீராடுங்கள். “நான் இங்கே இருந்து, திருப்பணிகளைக் கவனிக்கிறேன்” என்று வீரமாதேவி கூறினாள். கங்கையில் நீராட இராசேந்திரனுடன் செல்ல இயலவில்லையே என்ற வேதனையை அவள் சிறிதும் புலப்படுத்திக் கொள்ளவில்லை.

“நான் மிக மகிழ்ச்சியுடன் கூறுகிறேன். என் இலட்சியமே, கோயிலை மிக விரைவில் கட்டவேண்டும் என்பதே! புறப்படுங்கள், கங்கைப்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பயணத்திற்கு ஆயத்தம் செய்யுங்கள். இப்பயணம் விரோதி நாட்டின்மீது படையெடுத்துச் செல்வதன்று. இது புனிதப் பயணம் என்பதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்".

"ஆம் தேவி! இது புனிதப் பயணம். எதிரிகள் நாட்டின்மீது படை எடுத்துச் செல்வதன்று. ஆனால் என் இலட்சிய யாத்திரைக்குச் சாளுக்கியன் பெரும் தடையாக விளங்குவான் என்று தோன்றுகிறது".

"சாளுக்கியரா? அந்த நாட்டைத் தான் தாங்கள் எப்போதோ வென்று ஒன்றுமில்லாது செய்து விட்டீர்களே?"

"வென்று புலிக்கொடியை நாட்டினேன். அந்த நாட்டை நம் நாட்டுடன் இணைத்து ஒரே நாடாக்காததுதான் பெரிய குறை. எங்குமே அதுபோல் செய்வது நம் வழக்கமில்லை. தோற்றவர்கள் சிறிது காலத்திற்குப் பிறகு துளிர்த்து விடுகிறார்கள். படைப் பலத்தைப் பெருக்குகிறார்கள். சோழ நாட்டின் எல்லை நகரங்களிலுள்ள மக்களுக்குத் தொல்லை தருகிறார்கள். போரில் தோற்றபோது ஒப்புக் கொண்ட திரைப் பணத்தைச் செலுத்துவதில்லை. அதனால் மீண்டும் அந்த நாட்டின்மீது படை எடுத்துச் செல்ல நேர்கிறது. வீரமாதேவி! உன்னிடம் இந்தச் செய்திகளை சொல்லி, குழப்பமும் கவலையும் அடையச் செய்ய விரும்பவில்லை" என்று கூறிவரும்போது,"ஆட்சி முறையைப் பற்றி நான் அறிந்து கொள்ளக் கூடாதா?" என்று வீரமாதேவி கேட்டாள்.

"நாட்டரசி அறிந்து கொள்ள வேண்டிய கட்டாயம் உண்டு. ஆனால்..." என்று சொல்ல முற்பட்டவர். நிறுத்தி விட்டார். "ஏதோ சொல்ல வந்தீர்கள்: தொடக்கத்திலேயே நிறுத்திவிட்டீர்களே" என்று வீரமாதேவி கேட்டாள். "இல்லை தேவி! பேச்சை நிறுத்தவில்லை. நீ தெரிந்து கொள்ள வேண்டிய பல முக்கிய செய்திகள் இருக்கின்றன. அவற்றைவிடக் கோயில் திருப்பணி சம்பந்தமாக நீ அறிந்து நீயே முடிவெடுக்க வேண்டிய செயல்கள் ஏராளம். ஏராளம்! இரண்டொரு நாள்களில் மிக முக்கியமாக முடிவெடுக்க வேண்டியவற்றைப் பற்றி ஆலோசனை செய்ய, தஞ்சையிலிருந்து அமைச்சர் மண்டலத்தார் மற்ற அதிகாரிகளும் இங்கு வருகிறார்கள். அப்போது நீ உடன் இருந்து கவனித்துப் பலவற்றை அறிந்து கொள்ளலாம்" என்றார்.

சில நாள்கள் கழிந்தன. பஞ்சவன் மாதேவியும், அரிந்தவன் தேவியும் கருவூராரைச் சந்திக்க முடியாமல் திரும்பினர்.

சோழ மன்னர் இராசேந்திர சோழ தேவரைச் சந்திக்க, தஞ்சாபுரியிலிருந்து ஐம்பெருங்குழுவில் அமைச்சர், படைத்தலைவர்,

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

ஒற்றர்கள் ஆகிய மூவரும் அதிகாரிகளான கரும விதிகள், கனகச் சுற்றம், நாடு காவலதிகாரி, அரசர் அவ்வப்போது இடும் கட்டளைகளைக் குறிப்பெடுத்து திருமந்திர ஓலைச் செய்திகளை நிறைவேற்றும் அலுவலர் ஆகியோர் பேரரசர் தங்கியிருக்குமிடத்திற்கு மிகப் பிரயாசையுடன் வந்து சேர்ந்தனர்.

“காட்டின் நடுவே கோயில் கட்டுவதற்காக இங்கேயே அரசர் தங்கிவிட்டால் சோழ நாட்டு ஆட்சி முறையில் தொய்வு ஏற்படாதா?” என்றும்,“ஒவ்வொரு முறையும் நாமெல்லாம் இங்கு வந்து ஆணையைக் கேட்டுச் செயல்படுவதால் காலதாமதமாகும்” என்றும் அவர்கள் பேசிக் கொண்டனர்.

“தஞ்சாபுரியில் தங்கியிருப்பதில் அரசருக்கு ஏனோ விருப்பம் இல்லை. தஞ்சையில் தங்கியிருந்து ஆணையிட விரும்பாவிடில் பழையாறையில் வீற்றிருக்கலாமே” என்றும் பேசிக் கொண்டனர்.

காட்டுப் பகுதியின் நடுவே பனை ஓலையாலும், தென்னங் கீற்றாலும் வேயப்பட்ட சபை மண்டபம் போன்று அமைக்கப்பட்ட இடத்தில், அரசரை அதிகாரிகள் சந்தித்தனர்.

பயணக் களைப்பைப் பற்றியும், அவர்களது நலன்களையும் கேட்டறிந்த இராசராசன், தாம் அங்கு தங்கியிருப்பதன் நோக்கத்தை விளக்கினார்.

கருவூர்ச் சித்தரின் ஆசியையும் கோயில் திருமுழுக்குக்குக் கங்கையாற்று நீரைக் கொண்டு வர அவர் பணித்ததைப் பற்றியும் விவரித்தார். இவற்றையெல்லாம் முறைப்படி எடுத்துக் கூற நேரமில்லாமல் போனதைத் தெரிவித்தார்.

வீரமாதேவி, மன்னர்க்கருகே வீற்றிருந்து அங்கு நடைபெறுவனவற்றைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

தஞ்சாபுரியை விட்டுப் பேரரசர் இந்தக் கானகப் பகுதியில் தங்கி ஆட்சி செய்வதிலுள்ள இடர்ப்பாடுகளை ஐம்பெருங்குழுவினரும், எண்பேராயத்தினர் சிலரும் எடுத்துக் கூறினர்.

அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த இராசேந்திரன் சொன்னார்: “எனக்கு உறுதுணையாயிருப்பவர்களான நீங்கள் கூறியவற்றைக் கேட்டறிந்தேன். தஞ்சாபுரியைப் போன்று ஒரு பெரும் நகரத்தை நான் நிர்மாணிக்கப் போவதைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். கோயிலுக்குரிய பெரும் நகரத்தை நிர்மாணிக்கவே இங்கு நான்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தங்கியிருக்கிறேன். மிக விரைவில் நகரத்தை உருவாக்கும் பொறுப்பு உங்களுடையது. கோயிலை நிர்மாணிக்கும் பொறுப்பு இதோ இந்த தேவியுடையது" என்று கூறிவிட்டு வீரமாதேவியை நோக்கினர். அங்குள்ளவர்கள் வீரமாதேவிக்கு எழுந்து நின்று வணக்கம் தெரிவித்தனர்.

"அரசுப் பணிகள் தாமதமின்றி நடைபெற புதிய நகரம் உருவாகும் வரை, நாம் அமர்ந்து ஆட்சி செய்ய ஒரு நகரத்தைத் தேர்ந்தெடுத்துள்ளேன். சோழர் குல தெய்வம் வீற்றிருக்கும் தில்லைச் சிற்றம்பலத்தில் நாம் வீற்றிருந்து ஆட்சி செய்வோம். தஞ்சாபுரியிலுள்ள முக்கிய ஆவணங்களை அங்கு கொண்டு சேருங்கள். அதிகாரிகள் அங்கே சென்று விடுங்கள். சிறிது காலம்தான். பிறகு புதிய நகரம் உருவாகிவிடும். நான் கங்கைக் கரைக்குப் புறப்படுகிறேன். அங்கிருந்து கங்கையாற்று நீரைக் கொண்டு வந்து புதிய திருக்கோயிலின் கருவறையிலுள்ள சோளீச்வரருக்குப் புனித நீராட்டுவேன். இப்போதுள்ள கவலையெல்லாம் சோளீச்வரர் திருக்கோயில் கட்டுவதற்கு வேண்டிய கற்பாறைகளை உடனே கொண்டுவர ஏற்பாடு செய்வதுதான்!" என்றார்.

இராசேந்திர சோழன், கங்கைக்கரைக்குச் செல்லப் போகும் செய்தியும் உடன் பட்டத்து அரசி பஞ்சவன் மாதேவி செல்லப் போகிறார்கள் என்ற செய்தியும் அன்றே வெளியே பரவின.

கருவூர்ச் சித்தரைச் சந்திக்க வந்த பஞ்சவன் தேவியும், அரிந்தவன் தேவியும் இந்தச் செய்தி அறிந்து, பேரரசரைச் சந்திக்கக் கானகப் பகுதிக்குச் சென்றனர்.

வீரமாதேவியின் மீது ஏற்பட்டிருந்த கோபமும் பொறாமையும் மறைந்தன.

தீர்த்த யாத்திரையாகக் கங்கைக் கரைக்குச் செல்லப் புறப்பட்ட இராசேந்திர சோழர், அதற்கு முன்பு ஆற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுவதில் முனைந்தார்.

தன் மூத்த குமாரன் இராசாதிராசனைத் தில்லையில் வீற்றிருக்கச் செய்தார். மதுரையிலிருந்து, பாண்டியர்கள் கலகம் செய்யாதிருக்கத் தன் இளைய மகன் சுந்தரனுக்கு சோழ பாண்டியன் என்று பெயர் சூட்டி அங்கேயே திறமையுடன் அமர்ந்து நிர்வகிக்குமாறு செய்தார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

நாள்கள் விரைந்தோடின.

தில்லைச் சிற்றம்பலத்தில் நடராசப் பெருமானுக்கு ஆனித் திருமஞ்சன நிகழ்ச்சியைக் கண்டு களித்தபிறகு, வடக்கே புறப்பட நல்ல நாள் குறிக்கப்பட்டது.

முதல்நாள் இரவு. இராசேந்திரன் வீரமாதேவியைச் சந்தித்து நேரம்போவது தெரியாமல் பேசிக் கொண்டிருந்ததில் பெரும் பகுதி, திருப்பணி மிக வேகமாக நடைபெற வழி வகைகளைப் பற்றியே அமைந்திருந்தது.

பாறைகள் கொண்டு வருவது, சிற்பப் பணிக்குத் தேவையான சிற்பிகள் எண்ணிக்கையை அதிகரிப்பது போன்றவற்றைப் பற்றியே இருவரும் பேசிக் கொண்டனர்.

இராசேந்திர சோழருடன் செல்லும் குழுவில் அதிகாரிகள், பணியாளர்கள் தவிர இராசராசப் பேரரையன் என்ற இளைஞன் உடன் இருந்ததை, வீரமாதேவி கவனித்தாள். “கங்கைப் பயணத்தில் இவன்தான் எனக்கு உறுதுணை” என்று வீரமாதேவியிடம் அறிமுகப்படுத்தினார். இது நாளில்லாது இப்போது அவனை அறிமுகப்படுத்துவதை அறிந்த வீரமாதேவி வியப்புற்றாள்.

பல குதிரைகள் பூட்டப்பட்டத் தேரில் பரகேசரி இராசேந்திர சோழ தேவர் ஏறி அமர்வதற்கு முன்பு ஆலம் சுற்றி, கண்ணேறு சுழித்து அவருக்கு நெற்றித் திலகமிட்டாள்! வீரமாதேவி. அருகே இருந்த பஞ்சவன் மாதேவியின் நெற்றியிலும் திலகமிட்டு வணங்கினாள்.

“பார்த்தாயா! நான் வென்று விட்டேன். உன்னிடமிருந்து பிரித்துப் பேரரசரை அழைத்துச் செல்கிறேன்” என்று பஞ்சவன் மாதேவி கூறுவதுபோல் அவள் விழிகளில் வெற்றிப் பெருமிதம் நிறைந்திருந்தது.

“பேரரசியாரே! சக்கரவர்த்திகளுடன் தாங்கள் உடன் செல்ல அனுமதித்ததே நான்தான். அவருடன் செல்வதை விட மிகப் பெரும் பணி எனக்கு இருக்கிறது. தாங்கள் திரும்பி வரும் போது என் புகழ், பெருமை இவற்றைக் கண்டு சக்கரவர்த்திகள் என்னைப் பாராட்டிப் புகழ்ந்து பேசப் போகிறார்கள். அப்பொழுது யாருக்கு வெற்றி என்பதை, தாங்களே அறிந்து தோல்வியைப் பூட்டிக் கொள்வீர்கள்” என்று மறுமொழி கூறுவதுபோல் வீரமாதேவியின் பார்வை இருந்தது.

இராசேந்திர சோழர், குனிந்து வீரமாதேவியின் செழுமையான

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கன்னத்தில் முத்தமிட்டார். அப்பொழுது வீரமாதேவியின் விழிகளிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் சிந்தி அவருடைய உதடுகளை நனைத்தது.

பரிவாரங்கள் புறப்பட்டன. செல்லும் இரதத்திலிருந்து இராசேந்திர சோழர் திரும்பிப் பார்த்துக் கையசைத்தார். பிரிவு சில மாதங்கள் அன்று: சில ஆண்டுகளுக்கு இருக்கலாம் - என்று தன்னைத் தேற்றிக் கொண்டாள், வீரமாதேவி.

அவள் எதிரே கம்பீரமாய் எழுந்து நின்றது, கங்காபுரியை அமைக்கும் திருப்பணி.

# 60

# சோழநாட்டில் கங்கை

கங்கையைக் கொண்டு வரவேண்டும் என்ற புனித நோக்கத்துடன் பயணம் மேற்கொண்ட சக்கரவர்த்தி இராசேந்திர சோழ தேவர், முதல் நாள் பயணத்திற்குப் பிறகு தில்லைச் சிற்றம்பலத்தை அடைந்தார். அங்கு மாளிகையில் தங்கி ஓய்வு எடுத்த பிறகு, வீரநாராயணபுரத்தருகே கடல் போல் காட்சியளித்த ஏரியைக் காணச் சென்றார்.

பலமுறை அந்த ஏரிக் கரையைச் சுற்றி வந்திருக்கிறார். அக்கரை தெரியாது பரந்து விரிந்திருக்கும் ஏரியைக் காணும்போது அவர் மெய் சிலிர்க்கும். தன் முன்னோர்களின் திறமையை எண்ணி மகிழ்வார்.

இராசேந்திரன் தன் அருகே படைத் தலைவர்கள், வீரர்கள் சூழ்ந்திருப்பதை விரும்பவில்லை. அந்தப் பரிவாரத்தினைச் சற்று முன்னதாகச் சென்று தங்குமாறு கட்டளையிட்டார். இராசேந்திரனுடன் பல இரதங்களிலும், நான்கு காளைகள் பூட்டப்பட்ட பெரும் கூண்டு வண்டிகளிலும் அறிஞர்கள் பலர் உடன் வந்தனர்.

வீரநாராயணபுரம் ஏரியைக் கண்டு மகிழ்ந்து வீரநாராயணர் திருக்கோயிலில் திருமாலை வழிபட வந்த இராசேந்திரன் தன் அருகே இருந்த ஈசானசிவ பண்டிதரை நோக்கி

"குருநாதரே! என் முப்பாட்டனார் பராந்தக சோழரின் நீண்டகால நோக்கத்தைக் கவனித்தீர்களா? அழகிய கோயிலுக்கருகே நீர்நிலை

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

ஒன்றை ஏற்படுத்தினார். அந்த ஏரிக்கு இறைவன் திருப்பெயரைச் சூட்டினார். நூறு ஆண்டுகளுக்குப் பிறகு வீரநாராயணபுரம் ஏரி சுற்றுப்புற மக்களுக்கு வாழ்வளிக்கிறது" என்று வியப்புடன் கூறும் போது, பண்டிதர் புன்முறுவலுடன்,"பேரரசரே! பராந்தக சோழர் மாவீரர். தம் பெயர் நிலைக்க அவர் தம் வீரத்தை மட்டும் நம்பி இருக்கவில்லை. திருக்கோயிலும், குளமுமே மக்களின் அன்றாட வாழ்க்கை உணர்வுக்கு உறுதுணையாயிருக்கும் என்று முடிவு செய்தார். திருச்சிற்றம்பலத்து விமானத்துக்குப் பொன் தகடு வேயவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு உதித்தது. சைவத் தத்துவத்தை விளக்கும் மெல்லிய பொன் தகடுகள் கோயில் விமானத்தில் பதிக்கத் திட்டமிட்டுப் பணியைத் தொடங்கினார். மெய்யாகவே பொன்னம்பலத்தைப் பொன் ஒளி வீசச் செய்ய முயன்றார். அவர் காலத்தில் அந்தப் பணி ஈடேறவில்லை. கண்டராதித்தன் அந்தப் பணியை முடிக்கத் தன்னையே தியாகம் செய்து கொண்டார். பராந்தக சோழ தேவர் மறைந்து பல ஆண்டுகள் ஆகின்றன. அவர் புகழை இன்றும் நிலைநாட்டிக் கொண்டிருக்கின்றன தில்லை பொன் விமானமும், வீரநாராயணபுர ஏரியும். அதனால் அவருக்கு வீரநாராயணர் என்ற பெயரும் ஏற்பட்டது. பேரரசரே! தாங்களும் முப்பாட்டனார் வழி நடப்பதற்காக மகிழ்கிறேன், பாராட்டுகிறேன். பகீரதன் கங்கையைக் கொண்டுவர மிகப் பெரிய முயற்சியைக் கொண்டது போல் தாங்களும் திட்டமிட்டுள்ளீர்கள், என் பரிபூரண ஆசிகள்" என்றார்.

பண்டிதரைப் பார்த்துக் கை கூப்பிய இராசேந்திரன்,"பேரறிஞரே! பல வழிகளில் எனக்கு நல்லுரைகள் கூறி நற்பணிகள் செய்யத் தூண்டி விடுகிறீர்கள். பயணம் மேற்கொண்டு விட்டேன், கங்கை நீரைக் கொண்டு வர. சிவபெருமானுக்கு கங்கை நீரை அபிஷேகம் செய்யுமாறு இலகுளீச பண்டிதர் கூறியுள்ளார். புதிய நகரம் ஒன்றையும், புதிய கோயில் ஒன்றையும் நிர்மாணிக்கத் திட்டமிட்டுவிட்டேன். கோயில் கட்டும் பணியை வீரமாதேவியிடம் ஒப்படைத்து விட்டேன். கங்கை நீரைக் கொண்டு வரும்போது கோயில் கட்டி முடிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதே என் பெரும் கவலை. கோயில் பணி முடியாவிட்டால், கொண்டு வரப்படும் கங்கைப் புனித நீரை என்ன செய்வது? ஒருவேளை கோயில் கட்டி முடிக்கப்பட்டு, கருவறையிலுள்ள சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டு, குறித்த முகூர்த்தத்தில் திருமுழுக்காட்ட கங்கை நீர் வராது போனால்? கருவூர்ச் சித்தர், கோயில் குடமுழுக்கு விழாவை முடித்து விட்டு, பொதிகைமலைச் சாரலுக்குச் சென்றால் மீண்டும் திரும்புவதில்லை என முடிவெடுத்திருக்கிறார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கோயில் திருப்பணி இடையூறின்றி முடிவடைய வேண்டுமே, என்று மற்றொரு கவலை”– பெருமூச்சுவிட்டார் இராசேந்திரன்.

ஈசான சிவ பண்டிதர் பலவகையிலும் இராசேந்திரனுக்கு யோசனை வழங்கி வழி நடத்தி வந்தவர். இராசேந்திரனின் மனக் கவலைக்குத் தக்க சமாதானம் கூற விரும்பினார். ஆனால் புதிய கோயில் கட்டுவதில் தன் யோசனையைக் கேட்கவில்லை என்ற மனக் குறை அவருக்கு உண்டு. ஆனால் அதைப் புலப்படுத்திக் கொள்ளாமல், இராசேந்திரன் எடுத்திருக்கும் முயற்சிகள் இரண்டும் மகத்தானவை என்பதை அவர் அறிவார். அவரால் தக்க ஆலோசனைகளே கூற முடியும். விரைவில் நிறைவேற்றி வைக்க அவரால் முடியுமா?

அவர் மெல்லிய புன்னகையுடன்,“என் அருமை சோழ தேவரே! தங்கள் மனக்கவலையை நான் அறியேன். தங்கள் முயற்சி இடையூறின்றி விரைவில் முடிய வாழ்த்துவதைத் தவிர என்னால் வேறென்ன செய்ய முடியும்? சிவபெருமான் அருள் தங்களுக்குப் பரிபூரணமாக உண்டு. அதை வேண்டிப் பிரார்த்திக்கவும் நான் சித்தமாயிருக்கிறேன். ஒரே போதில் இரண்டு மாபெரும் பணிகளை நீங்கள் மேற்கொள்ளத் தங்களுக்கு ஆலோசனை வழங்கியவர் யார் என்று நான் அறியவில்லை” என்றார்.

தான் மிகவும் மதிக்கும் பண்டிதரின் மறுமொழி இராசேந்திரனுக்கு மனநிறைவை அளிக்கவில்லை.

“குருநாதரே! கங்கையில் நீராட வேண்டும் என்பது என் தந்தையின் வாழ்நாளில் இறுதிக் கால ஆசை. அவரால் கங்கைக் கரைக்குச் செல்ல முடியவில்லை. ஆனால் அவர் நினைவாக எழுப்பப்படும் ஆலயத்தில் நிர்மாணிக்கப்படும் சிவலிங்கத்திற்குக் கங்கை நீரைக் கொண்டு புனித அபிஷேகம் செய்ய வேண்டும் என்று முடிவு செய்தேன். தஞ்சைப் பெரிய கோயிலை போன்று பெரிய கோயிலைக் கட்ட வேண்டும் என்பது என் இலட்சியம். அதற்கு வீரமாதேவி பேராதரவு அளித்தாள். அங்கு சிற்பக் கூடமே நிறுவ வேண்டும் என்ற ஆவல் அவளுக்கு. அந்தப் பணிக்காகத் தன்னைத் தியாகம் செய்யத் துணிந்திருக்கிறாள். நெடுந்தொலைவுப் பயணம் வரக்கூடிய உடல்வாகுடன் உள்ள இளம் வயதினளான அவள் கங்கை நீரைக் கொண்டு வரும் அந்தப் புனிதப் பயணத்தில் என்னுடன் வராமல் காட்டுப் பகுதியிலேயே தங்கி, கோயில் திருப்பணியை விரைவில் முடிக்க அல்லும் பகலும் பாடுபடத் துணிந்துவிட்டாள். இப்பொழுது புரிந்ததா என் முயற்சிக்கு அடிப்படையானவர்கள் யார் யார் என்பது?” என்று இராசேந்திர சோழ தேவர் கூறவும் பண்டிதரால்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

மறுமொழி கூற இயலவில்லை.

இராசேந்திரனிடம் மிக அன்பும், மதிப்பும் கொண்டு அவருக்கு அரிய யோசனைகளை அவ்வப்போது வழங்கி வரும் பண்டிதருக்கு, கங்காபுரி யாத்திரையைத் தன்னைக் கேளாமலேயே இராசேந்திரன் மேற்கொண்டதில் மனக்குறை ஏற்பட்டது. அதை வெளிப்படையாகப் புலப்படுத்த விரும்பவில்லை.

இராசேந்திரன் மேற்கொண்ட இந்தக் கடுமையான பணிகளுக்குக் காரணம் இலகுளீச பண்டிதர் என்ற முடிவுக்கு வந்திருந்தார். சோழநாட்டுத் திருக்கோயில்களை மேற்பார்வையிட்டு அவற்றின் நிர்வாகத்தை மேற்கொண்டிருப்பவர் இலகுளீசர். அவர் யோசனையாகத்தான் இருக்க வேண்டும் என்று பண்டிதர் முடிவு செய்தார். இராசராசன் நினைவாக மேற்கொண்டுள்ள பணியைப் பற்றிக் குறை சொன்னால் இராசேந்திரன் ஏற்கமாட்டார் என்பது பண்டிதருக்குத் தெரியும். அதனால் இலகுளீசரைச் சந்தித்துத் திட்டத்தில் மாறுதல் செய்வதென முடிவு செய்தார்.

“என்ன பண்டிதரே, மௌனமாகி விட்டீர்கள்? என்னுடன் கங்கைக்கரைக்கு வருகிறீர்களா?” என்று இராசேந்திரன் கேட்டார்.

கங்கை யாத்திரைக்கு இலகுளீசரையும் அழைத்துச் செல்லும் முடிவு முன்பே செய்தது. ‘பயணத்தில் உடன் வருபவர்கள் குழுவில் தன்னையும் இப்போது சேர்த்துக் கொள்ள வேண்டும்’ என்று அரசர் முடிவு செய்திருப்பது தன்னை ஒருவகையில் சமாதானப்படுத்தவே இருக்கலாம். ஹும்’ பண்டிதர் சிந்தனை சுழன்றது.

“பண்டிதரே! திடீரென சிந்தனையில் ஆழ்ந்து விட்டீர். தில்லையை விட்டு வெளியே வரச் சம்மதிக்கமாட்டீர்களே? தங்கள் நிர்வாகத்திலுள்ள வேத பாட சாலைகள், தேவார இசைப் பள்ளிகள், இலக்கணப் பயிற்சிப் பள்ளிகள் ஆகியவற்றைக் கவனிப்பதைவிட்டு கங்கைக் கரைக்குத் தங்களை அழைத்துச் செல்வது சரியா என நானே யோசித்தேன். தங்களால் பல திங்கள் சிதம்பரத்தை விட்டு வெளியே தங்கியிருக்க முடியுமா என்றும் எண்ணினேன். தாங்களும் அதைத்தான் நினைக்கிறீர்களோ!” இராசேந்திரன் பண்டிதரைக் கூர்ந்து நோக்கிக் கேட்டார்.

பண்டிதர் திடுக்கிட்டார். எவ்வளவு காலம்தான் சிதம்பரத்திலும், கல்விக் கூடங்கள் உள்ள இடங்களிலும் மட்டுமே தங்கியிருந்து, வெளி உலகை மறந்திருப்பது? அரசர் அழைத்தால் செல்லாமல் இருக்க முடியாது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

ஆனால் அரசர் தன்னை அழைத்துச் செல்ல விரும்பவில்லை. அதற்காக இப்படிப் பேசுகிறார்.

“ஆமாம்… ஆமாம்… என் மனத்திலுள்ளதைத் தாங்கள் எவ்வாறு புரிந்து கொண்டீர்கள்? அதனால்தான் பண்டித சோழர் என்று மக்கள் தங்களைப் பாராட்டுகிறார்கள். சகல கலையும் அறிந்தவர்கள் நீங்கள்…” என்று ஏதேதோ சொல்ல முற்பட்டார்.

“எல்லாம் குருநாதராகிய தங்கள் கருணைதான். தாங்கள் நல்லாசானாக எனக்கு அமைந்திராவிடில் நான் அத்தகைய பெருமைக்கும் பட்டங்களுக்கும் உரியவனாவதேது?” என்று கூறிக் கரங்கூப்பி வணங்கினார் இராசேந்திரன்.

“சக்கரவர்த்திகளே! கங்கையில் நீராட வேண்டும் என்று எனக்கும் ஆசைதான். ஆனால் இங்குள்ள பணிகளை விட்டுவிட முடியுமா? மாணவர்களை விட்டுப் பிரிய முடியுமா? தங்களுடன் பயணம் புறப்பட்டு சிதம்பரம் வரை வந்து விடைபெற்றுக் கொள்ள எண்ணினேன். வீரநாராயண ஏரிக் கரையில் தங்களுடன் இருந்து பேசும் வாய்ப்புக் கிடைத்தது இறைவன் கருணையே. வீரநாராயண ஏரிக்கரையில் ஒரு சிந்தனை எழுந்தது”.

“சொல்லுங்கள் பண்டிதரே! நல்ல கருத்துகள் நாட்டுக்கும் பயன். எனக்கும் பெருமை…”

“சக்கரவர்த்திகளே! மாபெரும் திட்டத்தை மேற்கொண்டுள்ளீர்கள். காட்டை அழித்து பெரிய நகரும், பெரிய கோயிலும் நிர்மாணிக்கப் போகிறீர்கள். நகரத்தை அமைத்துக் காடு திருத்தி நாடாக்குவதோடு பயிர் நிலங்களை வளர்க்க வேண்டும். பயிர் நிலங்களுக்குப் பாசனத்திற்குத் தண்ணீர் வேண்டும். நகர மக்களுக்குக் குடிநீர் வேண்டும். இந்தப் பெரிய கோயில் பெரிய நகரம் போன்று பேரேரி ஒன்றை ஏற்படுத்த வேண்டும். வீரநாராயண ஏரியைப் போன்ற பேரேரி ஒன்றைத் தாங்கள் வெட்டிட வேண்டும்…”

பண்டிதர் சொல்லும்போது, இராசேந்திரன் மனத்தில் ஆயிர மாயிரம் எண்ணங்கள் உதித்தன. பண்டிதரின் இருகரங்களையும் பற்றிக் கொண்டு, தன் கண்ணில் எடுத்து ஒற்றிக் கொண்டு,“பண்டிதரே, பண்டிதரே! அரிய பெரிய யோசனைகளைத் தெரிவித்து விட்டீர்கள். ஆகா! தெய்வீக அறிவு படைத்த உங்கள் கருத்துக்குப் பல்லாயிரம் பொன் பரிசளித்தாலும் ஈடாகாது. நான் நிர்மாணிக்கப் போகும் நகரத்தின் அருகே பெரிய ஏரியை உடனே ஏற்படுத்துவேன். கொள்ளிட

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

நீரையும் காவிரியையும் அதில் தேக்குவேன்…” என்று கூறிய இராசேந்திரன் சிறிது நேரம் ஏதோ சிந்தித்தவராக,“பண்டிதரே, பண்டிதரே! எனக்கு ஒரு யோசனை இப்போது உதித்து விட்டது. கங்கை நீரைக் கொண்டுவந்து புதிய ஏரியில் நிரப்புவோம். கங்கை நீரைக் கொண்டு நாள்தோறும் இறைவனுக்குத் திரு மஞ்சனம் செய்விப்போம். ஆகா! என் வாழ்வின் பயன் அதுதான். வாழ்க பண்டிதர்! முப்பெருந் திட்டங்கள்: முப்பெருந்திட்டங்கள்” என்று ஆனந்தக் கூத்தாடினார்.

அருகே இருந்த தன் மகன் ஆதித்தனை அழைத்து,“மகனே! உனக்கு ஒரு மகத்தான பணி. பேரேரியை வெட்டும் பணியை நீ மேற்கொள்ள வேண்டும். பண்டிதர் மேற்பார்வையில் நடைபெற இருக்கும் அந்த ஏரியை விரைவில் அமைத்து முடிக்க வேண்டும்” என்று கட்டளையிட்டார்.

தந்தையுடன் கங்கைக் கரைக்குச் செல்லப் போகிறோம் என்ற ஆவலுடன் இருந்தவனுக்கு தந்தையின் கட்டளை ஓர் அதிர்ச்சி.

மகனின் தயக்கம் அறிந்த இராசேந்திரன்,“மகனே! உனக்குக் குறையொன்று உண்டு என்பதை நானறிவேன். உன் மூத்த சகோதரனை இராதிராசன் என்ற பட்டப்பெயருடன் இளங்கோவாக்கப் போகிறேன். உன் இளைய சகோதரன் சுந்தரன் மதுரையிலிருந்து பாண்டிய நாட்டை நிர்வகிக்கிறான் - அவனுக்கும் அங்கே முடி சூட்டப் போகிறேன். என் நிலை என்ன? என்று நீ கேட்டுக் கொண்டிருந்தாய். நீ இந்தக் காட்டுப்பகுதியை நாடாக்கும் முயற்சியில் ஈடுபடு. பண்டிதருடைய கருத்திற் கேற்பப் புதிய ஏரியை உருவாக்கு.அந்த ஏரியில் கங்கை நீர், சோழ நாட்டில்…. கங்கை! என்றுமே இறைவனுக்கு கங்கை நீரால் அபிஷேகம். வெற்றி வெற்றி!” என்று சிறு குழந்தை போல் இராசேந்திரன் இருகரம் கொட்டிக் கூத்தாடினார்.

# 61

# ஏரியா? கோயிலா?

ஈசான சிவபண்டிதர், பழையாறையை வந்தடையும் போது நடுநிசிக்கு மேலாகிவிட்டது. இரவோடு இரவாக பழையாறையை அடைந்து விடவேண்டும் என்ற வேகத்தில் நடுவே எங்கும் இளைப்பாறாமல் பயணம் செய்தார்.

அரசர் அளித்திருந்த சிவிகையில் நெடுந்தொலைவு செல்ல

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

முடியாதாகையால் காளை வண்டியிலும் பயணம் செய்தார். குதிரை ஏற்றம் அவர் கல்லாததால் குதிரைப் பயணம் செய்ய இயலவில்லை. இரண்டு குதிரைகள் பூட்டிய இரதம் இருந்தால் நன்றாக இருந்திருக்கும். அரசு அதிகாரிகளிடம் நாம் கேட்கவில்லையே என்று வருத்தப்பட்டுக் கொண்டார். எப்படியோ அவர் உடல் வருத்தம் பாராது பழையாறை வந்தடைந்துவிட்டார்.

எந்தக் காலத்திலுமில்லாத மனச் சஞ்சலம் அவரிடம் மிகுந்திருந்தது.

சோழ நாட்டில் கோயில் திருப்பணியையும் கோயில் நிர்வாகத்தையும் பொறுப்பேற்றுக் கவனிக்கும் இலகுளீச பண்டிதரை உடனே சந்தித்தாக வேண்டும் என்ற வேகம் அவரிடமிருந்தது. இலகுளீச பண்டிதரின் செல்வாக்கு அதிகமாவதாய் அவருக்குத் தோன்றியது. சிதம்பரத்தில் சில நாள்களும் பிரம்ம தேசத்தில் சில நாள்களுமாக அவர் இருப்பதால் தஞ்சையிலும் பழையாறையிலும் நடைபெறுவன பற்றி அவருக்குத் தெரியவில்லை.

தன்னிடம் கேட்டு அதன்படி இராசேந்திர சோழதேவர் நடக்கிறார் என்று அவர் இதுவரையில் எண்ணியிருந்தது போக, இலகுளீச பண்டிதரின் செல்வாக்கு அதிகமாய் இருப்பதாக இப்போது எண்ணினார்.

சக்கரவர்த்திகள் தன்னுடன் பயணம் செய்யத் தன்னை அழைக்கவில்லை. அதற்கு இலகுளீசரும் காரணமாக இருக்கலாம். ஆனால் அவரும் சக்கரவர்த்திகளுடன் செல்லவில்லை. அதனால் இலகுளீசரின் செல்வாக்கு மிகுந்திருக்க முடியாது. ஒருவேளை தானும் செல்லாமல், என்னையும் செல்லவிடாமல் அவர் தடுத்திருக்கலாம்.

இலகுளீச பண்டிதரின் கருத்துப்படி பெரிய கோயில் ஒன்றைக் கட்ட சக்கரவர்த்திகள் முடிவு செய்துவிட்டார். அதற்காக கங்கைக் கரைக்குச் செல்கிறார். பெரிய கோயில் கட்டப்பட்டால் இலகுளீசரின் செல்வாக்கும் மதிப்பும் மேலும் உயர்ந்து விடும். அவ்வாறு நடக்கவிடக் கூடாது.

பயணததின் போது பலபல எண்ணியவாறு மனத்தைக் குழப்பிக் கொண்டார். தங்களுக்கென்று தனியே கட்டப்பட்டிருக்கும் மடத்திற்குச் சென்று இரவைக் கழிக்க விரும்பினார். உறக்கம் வரவில்லை. சரியான உணவு இல்லாததால் ஒருவித மயக்க நிலை ஏற்பட்டதே தவிர உறக்கம் வரவில்லை.

பிரம்ம முகூர்த்த வேளையில் விழித்தெழுந்து காலைக் கடன்களை

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

முடித்துப் பழகிப் போயிருந்த அவருக்கு அந்த இளங்காலைப் பொழுது உறக்கத்தை அளித்தது. விழித்தெழுந்த போது காலைக் கதிரவனின் கரங்கள் சாளரத்தின் வழியே, அவர் உறங்குமிடத்தின் வழியினுள் புகுந்து கடுமையாகத் தாக்கின.

“அடடா, இப்படி ஒருபோதும் உறங்கியதில்லையே!” அதிகாலை விழித்தெழுந்து இலகுளீசர் வசிக்கும் தஞ்சை நகரைச் சென்று சேர அவர் எண்ணியிருந்தார். மிக விரைவாகக் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, சிவபூஜை செய்ய அமரும் போது,‘ஓம், நமசிவாய’ என்ற குரல் கேட்டு அறைக்கு வெளியே எட்டிப் பார்த்தார்.

இலகுளீச பண்டிதர் கம்பீரமாக நின்று கொண்டிருந்தார்.

“நமசிவாய! பண்டிதரே, என்ன ஆச்சர்யம்! இந்த இடத்தில், இந்தக் காலைப் பொழுதில் தங்களைச் சந்திப்பேன் என்று கனவிலும் நினைக்கவில்லை. எல்லாம் அந்தக் கயிலையங்கிரி எம்பிரான் சித்தம்” என்று கூறி,“உம், சிவபூஜையில் நான் குறுக்கிட விரும்பவில்லை. பூஜையை முடித்துவிட்டு வாரும். நான் அதற்குள் அரசியாரைச் சந்தித்து வருகிறேன்” என்று கூறிப் புறப்பட எத்தனித்தார்.

ஈசான பண்டிதர் ஒருகணம் திகைத்தார். பேசுவதற்குக் குரல் எழவில்லை. நாம் காண்பது நனவா, கனவா என்று ஒரு கணம் எண்ணினார்.

“என்ன ஈசான பண்டிதரே, மௌனமாகிவிட்டீர்கள்? மிகவும் களைப்பாகக் காட்சியளிக்கிறீர்கள். பூஜையை முடித்துச் சற்று இளைப்பாறுங்கள். பிற்பகல் சந்திப்போம். என் பயணத்தை மாலை நேரத்தில் தொடருகிறேன்” என்று கூறிப் புறப்பட எத்தனித்தார்.

‘சோழ அரசியாரைச் சந்திக்கப் போகிறாராம்: பிறகு எங்கோ பயணம் தொடங்குகிறாராம். நாம் செய்ய நினைத்ததையெல்லாம் அவரும் செய்ய நினைக்கிறார். இப்போதே இங்கேயே இவரைச் சந்தித்து விட வேண்டும்’ என்ற முடிவுடன்,“இலகுளீசரே! தங்களைச் சந்திக்க விரும்பியே, எங்கும் தங்காமல் ஒரே மூச்சில் தில்லையிலிருந்து வருகிறேன். தஞ்சாவூருக்கு உடனே புறப்பட எண்ணினேன். தங்களை இங்கே கண்டவுடன் எனக்கு ஏற்பட்ட வியப்பால், பேச நா எழவில்லை. சற்று இருங்கள். பூஜையை முடித்து வருகிறேன். தங்களுடன் பேச வேண்டியவை நிறைய உள்ளன” என்று கூறி பூஜை செய்ய ஆயத்தமானார்.

அவரிடம் ஏற்பட்டுள்ள பரபரப்பை உணர்ந்த இலகுளீசர்,“அமைதியாக

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பூஜையை முடித்துவிட்டு வாருங்கள். அதற்குள் நான் அரசியாரைச் சந்தித்து வருகிறேன். அதிருக்கட்டும், தஞ்சைக்குச் செல்லப் போவதாகக் கூறினீர்களே, என்ன விசேஷம்?" என்று கேட்டார்.

"தஞ்சையில் தங்களைச் சந்திக்கத்தான். தஞ்சையில் தங்கியிருந்தன்றோ, கோயில் நிர்வாகங்களைக் கவனிக்கிறீர்கள்" என்றார், அவரை உற்றுப் பார்த்தபடி.

இலகுளீசர் பெரிதாக நகைத்து வியப்பைத் தெரிவிக்கத் தன் கைத் தடியை கீழே இரண்டு முறை தட்டி,"பண்டிதரே! எந்த உலகத்தில் இருக்கிறீர்கள்? தஞ்சைபுரியிலிருந்து எமது பணியிடத்தைப் பழையாறைக்கு மாற்றிக் கொண்டு பல மாதங்களாகிவிட்டன என்பது தங்களுக்குத் தெரியாதா? சக்கரவர்த்திகள், தஞ்சைபுரியில் இருந்து ஆட்சி புரிவதை விரும்பவில்லை. பழையாறைக்கு வந்துவிட்டார். நாங்களும் வந்து விட்டோம். புதிய நகரம் ஒன்றை நிர்மாணித்து அந்த நகரத்திலிருந்து தான் நாட்டை ஆளப்போகிறார். இந்தச் செய்தி தெரியாதா?" என்று கேட்டார்.

'இந்தச் செய்தி தெரியாதா?' எனக் கேட்டவுடன் ஈசான பண்டிதர் உள்ளத்திற்குள் கூனிக் குறுகிவிட்டார். இலகுளீசர் செல்வாக்கு ஓங்கியிருக்கிறது என்பதற்கு இதைவிட வேறு சான்று வேண்டுமா? ஹூம்: இவற்றை எல்லாம் நாம் ஏன் தெரிந்து கொள்ள வேண்டும்? கல்வி பயில்வித்து அறிஞர்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள நாம் இதுபோன்ற சிறிய அரசாங்க நடைமுறைகளை அறிய வேண்டியது அவசியமில்லை. அதை எடுத்துக் கூற விரும்பி,"ஓ! எனக்குத் தெரியும். சக்கரவர்த்திகள் என்னிடம் புதிய நகரத்தைப் பற்றிப் பல மாதங்களுக்கு முன்பே கேட்டார். நான் சில கருத்துகளைச் சொன்னேன். என் யோசனையை அவர் ஏற்றார். புதிய நகரம் உருவாகும் வரை தஞ்சையிலேயே ஆட்சியாளர்கள், அதிகாரிகளை இருக்கச் செய்வதாகச் சொல்லி விட்டார். கங்கை நதிக் கரைக்குச் சென்று வந்த பிறகு நகரத்தை மாற்றுவதைப் பற்றி முடிவு செய்யலாம் என்று சொல்லிவிட்டார். தஞ்சையில் தங்களைச் சந்திக்கச் சொல்லி செய்தி அனுப்பினார். அதனால்தான் தஞ்சைக்கு வந்து கொண்டிருக்கிறேன்" என்றார்.

இலகுளீசர் திடுக்கிட்டார். அவர் மனத்தில் மேலும் குழப்பம் ஏற்படுத்த விரும்பிய ஈசான பண்டிதர்,"வீர நாராயண ஏரிக்கரையில், பேரரசருடன் நான் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தேன். பல முடிவுகளை நாங்கள் எடுத்தோம். அவற்றைத் தங்களிடம் தெரிவிக்க வேண்டும். சிறிது நேரம் இருங்கள். நான் பூஜையை முடித்து விடுகிறேன்" என்றார் ஈசான

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பண்டிதர்.

அரசியாரை இலகுளீசர் எதற்காகச் சந்திக்கப் போகிறார் என்று கேட்டறிய வேண்டும் என்ற ஆவலும் அவரிடம் இருந்தது. பூஜையில் கவனம் செல்லவில்லை.

இலகுளீசர், பண்டிதரை ஒருமுறை கூர்ந்து நோக்கினார்.

“பண்டிதரே! உம்மிடம் நான் பேச வேண்டியவை நிறைய உள. தவிர, சக்கரவர்த்திகள் சொல்லி அனுப்பியிருப்பதைக் கேட்டறிய வேண்டும். சற்று அமைதியாக நாம் பேச வேண்டும். என்னைச் சந்திக்க, அரசியார் நேரம் குறிப்பிட்டிருக்கிறார். மிக முக்கியமான செய்திகளைக் கூறி கலந்தாலோசிக்க வேண்டுமாம். குறித்த நேரத்தில் செல்லாவிடில் அரசியார் கோபத்திற்கு ஆளாக நேர்ந்திடும். பழுவேட்டரையர் மகள் அன்றோ – அவர் கோபத்தைத் தாங்க முடியாது! அமைதியாகப் பூஜையை முடித்துவிட்டு இங்கேயே இரும். விரைவில் வந்து விடுகிறேன்” என்று புறப்பட முயன்றார்.

“இலகுளீசரே! அரசியாரை நானும் சந்திக்க வேண்டும். இருவருமே செல்வோம்” என்று கூறி சிவலிங்கம் எதிரே அமர்ந்து விழிகளை மூடிக் கொண்டு,‘நமசிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!’ என்று முணுமுணுக்க ஆரம்பித்தார். பூஜையில் ஈடுபாடு கொள்ள இயலவில்லை.

விழியைத் திறந்தார். இலகுளீசரை அங்கு காணவில்லை.

“வாருங்கள், இலகுளீச பண்டிதரே! தங்களுக்காகத் தான் காத்திருக்கிறேன்” என்று வணங்கி வரவேற்றாள், சோழ நாட்டுப் பேரரசி, பஞ்சவன்மாதேவி.

சில நாள்களுக்குள் முதுமை அவர்களை மிகவும் ஆக்ரமித்து விட்டது. இலகுளீசர் அரசியாரைச் சந்தித்துப் பல திங்கள் ஆகியிருந்ததால், அரசியாரிடம் ஏற்பட்டிருந்த மாறுதல் நன்றாகவே புலப்பட்டது.

அரசியாரை நலம் கேட்டறிந்து பிறகு மிகவும் பரிவும் பணிவும் நிறைந்த குரலில்,“தேவி, முன்னுக்கு இப்போது தாங்கள் மிகவும் இளைத்துக் காணப்படுகிறீர்கள். மாளிகை மருத்துவர்கள் தக்க மருந்து தருகிறார்களா?” என்று கேட்டார், மெல்லத் தன் தாடியை உருவிவிட்டுக் கொண்டு,“ஒருமுறை புள்ளிருக்கும் வேர் சென்று மருந்தீச்வரரைத் தரிசனம் செய்து வாருங்கள். உடல்நோய் நீங்கிவிடும்” என்று பாசமிகுந்த குரலில் அன்பைக் குழைத்துப் பூசிப் பேசினார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“சிவ யோகியாரே! முன்பு போல் இப்போது தங்களை மாளிகைப் பக்கமே காண முடிவதில்லை. கோயிலைக் கட்டிக் காப்பதே தங்களுக்குப் பெரும் பணியாக இருப்பது போல் தோன்றுகிறது. தங்களை இன்று பழையாறையிலாவது சந்திக்க முடிந்ததே” என்று கூறிப் பெருமூச்சுவிட்ட அரசி,“இலகுளீச பண்டிதரே! நம் நாட்டுக் கோயில்களில் ஆறுகால பூஜை நடைபெறுகிறதா? தூண்டா விளக்கு இடைவிடாமல் எரிகிறதா? பக்தர்கள் அளிக்கும் இரையிலி கொடைகளிலிருந்து வருவாய் சரிவர வருகிறதா?” என்று கேட்டாள்.

இலகுளீசர் மீண்டும் தன் தாடியை ஒருமுறை நீவி விட்டுக் கொண்டு,“சிவபாத சேகரன் பெற்ற திருமகன் பண்டித சோழர் ஆட்சியில் எந்தவித இடர்ப்பாடுமில்லை. மூவர் பாடல் பெற்ற திருத்தலங்களைச் செப்பனிட்டு ஒழுங்காக பூஜை நடத்துவதற்கான திட்டங்களிட்டு, அவை நிறைவேறுகின்றனவா என்று பார்க்கவே என் நாளும் பொழுதும் சரியாகி விடுகின்றன. தஞ்சைப் பெருவுடையார் கோயிலைச் சரிவரப் பராமரிப்பதே இப்போது பெரும் பாடாக இருக்கிறது” என்று கூறி, தன் பணியின் சிறப்பையும் அதிலுள்ள வேலைப் பளுவையும், தன் பொறுப்பையும் கடமையையும் மறைமுகமாகச் சுட்டிக் காட்டினார்.

பஞ்சவன்மாதேவி இருந்த இடத்தில் நிமிர்ந்து உட்கார்ந்து,“பெரிய கோயிலில் நித்ய பூஜை, அபிஷேகம், திருநாள் இவற்றைக் கவனிப்பதில் உள்ள சங்கடங்களை அறிந்த தாங்கள், மற்றொரு கோயிலைக் கட்டுமாறு வற்புறுத்தலாமா?” என்று கேட்டாள்.

இலகுளீச பண்டிதர் சிறிது மௌனமாயிருந்து, பிறகு,“தேவி! சோழ நாட்டில் சைவம் தழைக்க மட்டும் நான் யோசனை கூறி வருகிறேன். புதிய கோயில் கட்டுவதைப் பற்றி நான் ஏதும் சொல்லவில்லையே” என்றார்.

“உங்கள் சக்கரவர்த்தியின் மனத்தை யாரோ கலைத்திருக்கிறார்கள். எழுபதுக்கும் மேலான சிவத்திருக்கோயில்கள் இருக்கும்போது நம் அரசரின் தந்தை தஞ்சையில் பெரிய கோயில் கட்டினார் என்றால் அதற்குக் காரணம் இருக்கிறது. கடல் கடந்து சென்ற நாட்டில் தான் கண்டவற்றை இங்கே நனவாக்க அவர் விரும்பினார். அதுவே இலட்சியமாகக் கொண்டார். எங்கள் நாயகர் மற்றொரு கோயிலைக் கட்ட முற்பட்டதற்குக் காரணம் என்ன? தாங்கள் யோசனை சொல்லாவிடில் வேறு யார் சொல்லி இருப்பார்கள்?”-பஞ்சவன்மாதேவியின் குரலில் அதிகாரம் நிறைந்திருந்தது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“தேவி, தாங்கள் அறிந்திருந்தே என்னைக் கேட்பது நியாயமா? கருவூர்ச் சித்தரின் விருப்பப்படிதான் நம் சக்கரவர்த்தி நடக்கிறார் என்பது தங்களுக்குத் தெரியாதா? காட்டை அழித்துப் பெரு நகரமும், கோயிலும் நிர்மாணிக்கப் போவதாக அரசர் திட்டமிட்ட பிறகு நான் வேறு யோசனை கூறுவது நியாயமாகுமா? ஆனாலும் நான் மேலும் நல்ல சில யோசனைகளைக் கூறினேன். கங்கை நதிக் கரைக்குச் சென்று நீராடி, புனித கங்கை நீர் கொண்டு வருமாறு தெரிவித்தேன்” என்று கூறி அரசியாரை நோக்கினார்.

“உங்கள் யோசனை இல்லை. அமரராகிவிட்ட என் மாமனாரின் கடைசி விருப்பம் அது. அது போகட்டும்: புதிய கோயில் கட்டுவதில் தங்களுக்குச் சம்மதமில்லை என்றால் தாங்கள் அந்தப் பணியைத் தொடக்க காலத்திலேயே தடுத்து நிறுத்த வேண்டும். அதற்காகவே தங்களைச் சந்திக்க விரும்பினேன்” என்றார்.

இலகுளீச பண்டிதருக்கு என்ன மறுமொழி கூறுவதென்றே தெரியவில்லை. “ஒருநாள் அவகாசம் கொடுங்கள். தீவிரமாகச் சிந்தித்துச் சொல்கிறேன்” என்றார்.

ஈசான பண்டிதரிடம் சென்று அவர் கருத்துரையைக் கேட்போம் என்ற எண்ணத்தில்,ஈசான பண்டிதர் தங்கியிருந்த இடம் நோக்கி விரைந்தார். பேரறிஞரான அவர் தக்க யோசனைகூறுவார் என்று எண்ணினார்.

ஈசான பண்டிதர் தங்கியிருந்த இடம் நோக்கி விரைந்த போது, அதற்கு முன்னரே பண்டிதர் புறப்பட்டுச் சென்று விட்டதாகச் செய்தி கிடைத்தது.

“எங்கே சென்றிருப்பார்?” என்று இலகுளீசர் சிந்தித்தார்.

பண்டிதர் தங்கியிருந்த மடத்துப் பணியாளர் ஒருவரை அழைத்து வினவினார்.

சக்கரவர்த்திகள் இரண்டாவது மகன் பழையாறைக்கு வந்திருப்பதாகவும், அவரைச் சந்திக்கச் சென்றிருப்பதாகவும் அறிந்து கொண்டார்.

ஈசான சிவன், அரசியைச் சந்திப்பதற்காக விரைந்து சிவ பூஜையை முடித்துக் கொண்டு, மடத்திலுள்ள பணியாளரிடம் பூஜைக் கலங்களைச் சீராக எடுத்து வைத்து, இடத்தை ஒழுங்குபடுத்துமாறு பணித்துப் புறப்பட எத்தனிக்கையில், இளவரசர் அழைப்பதாகக் காவல் வீரர் ஒருவன் அங்கு வந்து தெரிவித்தான்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அரசியிடம் இலகுளீசர் பேசிக் கொண்டிருக்கும் போதே தானும் கலந்து கொண்டு புதிய கோயில் எழுப்புவதை நிறுத்தி, இலகுளீசருக்குத் தலைகுனிவு ஏற்படுத்த வேண்டும் என்று திட்டமிட்டது நடவாமல் போய்விடும் போலிருக்கிறதே என்று பண்டிதர் எண்ணினார். ‘உம், இதுவும் சிவன் செயல்தான்’ என்ற முடிவுடன் இளவரசரைச் சந்திக்கச் சென்றார்.

இராசேந்திர சோழரின் இரண்டாவது புதல்வன் அவன். சோழர் குலக்கொடியைத் தஞ்சையில் ஏற்றி வைத்த விஜயாலய சோழனின் திருக்குமாரன் ஆதித்தனுடைய பெயரை அவனுக்குச் சூட்டினார் இராசராச சோழர்.

ஒருமுறை அவர் தன் மகன் இராசேந்திரனை அழைத்து மிகவும் அந்தரங்கமாக,“மகனே! உன் புதல்வர்கள் ஒவ்வொருவரும் அரிமாபோல் கம்பீரமாகத் தோன்றுகிறார்கள். அவர்களுடைய அறிவையும் ஆற்றலையும் வளர்க்க வேண்டும். திறமையும், அறிவும், வலிமையும் வீணாக விட்டு விடக் கூடாது. ஒவ்வொருவரும் தங்கள் நேரத்தைத் தக்க முறையில் ஈடுபடுத்த இப்போதிருந்தே திட்டமிட ஏற்பாடு செய்” என்றார்.

மூத்த புதல்வன் இராசாதிராசன் தன் தந்தை இராசேந்திரனுடன் போர்க்களங்களுக்குச் சென்று போர்க்கலையில் வல்லவனானான். மூன்றாவது மகன் சுந்தரன் மதுரைக்குச் சென்றுவிட்டான். அவன் தீய வழக்கங்களிலிருந்து மாறிவிட்டான் என்றே மற்றவர்கள் பேசிக் கொண்டனர்.

ஆதித்தனை, நாட்டு நிர்வாகத்தில் ஈடுபடுத்தினார் அரசர்.

ஈசான பண்டிதருடன் அவன் மனம் விட்டுப் பேசி, வீர நாராயணப் பேரேரி போன்ற ஒன்றை வெட்டுமாறு சக்கரவர்த்திகளுக்கு யோசனை வழங்கியதற்கு நன்றி தெரிவித்தான். நல்ல நாளாகப் பார்த்து, ஏரியை வெட்டும் பணியைத் தொடங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டான். தன் தந்தையிடம் கூறி அந்த ஏரிக்குத் தன் பெயரைச் சூட்டுமாறு செய்ய வேண்டும் என்றும் தன் விருப்பத்தை வெளிப்படுத்தினான்.

பண்டிதர் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். “இளவரசர் அவர்களே! மிக விரைவில் ஏரிப் பணியைத் தொடங்குவோம். அதற்கிடையே ஒரு வேண்டுகோள்” என்றார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“சொல்லுங்கள் பண்டிதரே! நான் என்ன செய்ய வேண்டும்?” என்று பணிவுடன் கேட்டான் ஆதித்தன்.

“ஏரிப்பணி நடைபெறும்போது கோயில் திருப்பணி நடைபெறக் கூடாது. ஏரி வெட்டி, அதில் கங்கை நீரை நிரப்பிய பிறகே கோயில் கட்ட வேண்டும். இலகுளீச பண்டிதர், கோயில் கட்டுவதில் மிக முனைப்பாக இருக்கிறார். தங்கள் தாயைச் சந்திக்க அவர் சென்றிருக்கிறார். தாங்கள் உடனே அரசியாரைச் சந்தித்துக் கோயில் கட்டும் பணியை நிறுத்தச் சொல்ல வேண்டும்” என்று கேட்டுக் கொண்டார்.

இளவரசன் ஆதித்தன் இதைக் கேட்டுத் திடுக்கிட்டான்.

# 62

# ஆதித்தன் என்ன செய்யப் போகிறான்?

காடு திருத்தி நாடாக்கும் பணியில் ஈடுபடுவதா? அல்லது, சிற்பிகளை அழைத்து விரைந்து கோயில் திருப்பணியை நடத்தச் சொல்வதா என்ற கவலை வீரம்மாளைச் சூழ்ந்தது.

கங்கை நதிக்கரைக்குச் சென்று, நீராடி கங்கை நீருடன் திரும்பி வருவதற்குள் கோயிலைக் கட்டி முடிக்க வேண்டும். அதற்கு ஏராளமான சிற்பிகள் தேவைப்படுவார்கள். சிற்பிகளை, மாணிக்கசேகரன் அழைத்து வந்து விடுவார். ஆனால், கோயில் கட்டுவதற்குக் கருங்கல் பாறைகள் வேண்டுமே?

சிற்பப் பணியைத் தொடங்குவதற்கு முன்பு, சிற்பிகள் தங்குவதற்குக் குடில்கள் ஆயத்தமாக வேண்டும். அவர்களுக்கு உணவுப் பண்டங்கள் வேண்டும். வயிறார உணவு சமைக்கப் பணியாளர்கள் வேண்டும். இந்தக் காட்டிற்குள் தடங்கலின்றி வந்து செல்ல ஒழுங்கான பாதைகள் வேண்டும். இவற்றை எல்லாம் ஏற்பாடு செய்ய எவ்வளவு நாள்கள் ஆகுமோ? எவ்வளவு பணியாளர்கள் வேண்டுமோ? என்னால் முடியுமா? பொருள் செலவுக்கு யாரைக் கேட்பது? இவை பற்றி, அரசரை ஏதும் கேட்காமலிருந்து விட்டேனே….

வீரமாதேவி கவலையுடன் அமர்ந்திருந்த போது கலைச்செல்வி பூங்கொடி அங்கு வந்தாள். வீரமாதேவியின் கவலைக்குக் காரணம் கேட்டாள். தேவைக்கு அதிகமாக எப்போதும் பேசும் பழக்கமில்லாத

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அவள் வீரமாதேவியின் அருகே வந்தமர்ந்தாள்.

“கோயில் பணி எந்த நிலையிலிருக்கிறது” என்று பேச்சைத் தொடங்கினாள்.

யாராவது என்னிடம் அன்புடன் பேச மாட்டார்களா என்று எதிர்பார்த்திருந்த வீரமாதேவி, தன் கவலையைத் தெரிவித்தாள்.

“நீ எடுத்துக் கொண்டுள்ள பணி மகத்தானது. இராசேந்திரனின் இலட்சியம் நிறைவேற நீ உறுதுணையாக அமைந்தது இந்த நாடு செய்த புண்ணியம்” என்று பேச்சைத் தொடங்கி, தொடர்ந்து வீரமாதேவிக்கு ஆதரவாகப் பேசலானாள்.

மற்ற இளவரசிகளைப் போல, பூங்கொடியும் எதிர்ப்புத் தெரிவித்தால் என்ன செய்வது என்று எண்ணியிருந்த வீரமாதேவிக்குப் புத்துணர்ச்சி ஏற்பட்டது.

“புதிய நகரத்தை நிர்மாணிப்பதும், கோயில் கட்டுவதும் மட்டுமே நிறைவேற்றத் திட்டமிட்டிருந்த போது ஏரி வெட்டுமாறும் அரசர் உத்தரவிட்டுச் சென்றிருக்கிறாராம்.... மூன்று திட்டங்களை ஒரேபோதில் எப்படி நிறைவேற்றுவது என்று குழம்பியிருக்கிறேன்” என்றாள் வீரமாதேவி.

“எல்லாம் நன்மைக்கே! ஒரு செய்தி தெரியுமா? – செய்திகள் தெரியாமல் இருப்பது நல்லது. பட்டத்தரசியும், மற்ற இளவரசிகளும் எல்லாவற்றிற்கும் கடும் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்.”

“ஆமாம், அறிவேன்”

“அவர்கள் எதிர்ப்பிலும் இப்போது கருத்து வேற்றுமை ஏற்பட்டிருக்கிறது. ஏரி வெட்டுவதை ஓர் இளவரசி எதிர்க்கிறாள். ஓர் இளவரசிக்குக் கோயில் கட்டுவது பிடிக்கவில்லை. புதிய நகரம் அமைப்பதை அனைவரும் எதிர்க்கிறார்கள்.”

“அப்படி என்றால் மூன்றும் நிறைவேறாமல் போய் விடும், எப்படியோ அவர்களுக்கு மகிழ்ச்சிதானே?”

“இல்லை, இல்லை. இளவரசன் ஆதித்தன் அவர்களுடைய தடையை ஒப்புக் கொள்ளவில்லை. அதனால் உனக்குத்தான் வெற்றி.

“ஆதித்தனா?”

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“ஆமாம், அரசரின் புதல்வன். அமைதியாகப் பணியாற்றுபவன். நாட்டு நிர்வாகத்தில் அவன் பொறுப்பு அதிகம். ஏரி வெட்டும் பணியில் அவன் முன் நிற்கிறான்.”

“ஏரி வெட்டுவதில் முனைந்தால், கோயில் பணியும் புதிய நகரத்தை ஏற்படுத்தும் பணியும் என்னாவது? ஒருவேளை அரசரின் மற்ற இரு புதல்வர்களும் உதவுவார்களோ?”

“இல்லை: இல்லை. ஒருவன் அரசருடன் வடக்கே சென்றிருக்கிறான். ஒருவன் மதுரை ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறான். மற்ற இருவரும் புகழ் பெறுவதை அறிந்த ஆதித்தன் ஏரியை வெட்டிப் பெயரும், புகழும் அடைய ஆசைப்படுகிறான்.”

“பேரேரி மிகத் தேவையானது. வீரநாராயண ஏரியை நான் பார்த்திருக்கிறேன். சோழ நாட்டில் ஒரு புதிய கடல் என்று சொல்லுமளவிற்கு வீரநாராயணப் பேரேரி திகழ்கிறது. ஏரியை வெட்டுவதால் ஆதித்தனுக்குப் பெயரும் புகழும் ஏற்படும் என்கிறீர்களே, அதெப்படி?”

“சோழநாட்டில் மற்றொரு கடலென்று சற்றுமுன்பு சொன்னாயே அந்த ஏரியின் பெயரென்ன தெரியுமா?”

“வீரநாராயணப் பேரேரி.”

“அந்த ஏரிக்குப் பெயர் எப்படி ஏற்பட்டது?”

பூங்கொடி கேட்டவுடன், வீரமாதேவி சற்றுச் சிந்தித்தாள். அவளுக்குப் புரிந்துவிட்டது. “சோழ சக்கரவர்த்தி பராந்தக சோழதேவரின் புகழ்ப் பெயர் வீரநாராயணர். அவர் நிர்மாணித்த ஏரி, நூறு ஆண்டுகளுக்குப் பிறகும் அவர் நினைவாக விளங்குகிறது. புதிதாக வெட்டவிருக்கும் இந்த ஏரிக்குத் தன் பெயரைச் சூட்டினால் தனக்குப் புகழும் பெயரும் என்றும் அழியாதிருக்குமல்லவா? அப்படி எண்ணி ஏரி வெட்டுவதில் இளவரசர் முனைந்திருக்கிறார் போலும்! யாரோ சிந்திக்கிறார்கள்: திட்டமிடுகிறார்கள். யாரோ பெயரை அடையப் பார்க்கிறார்கள்” என்று கூறிப் பெருமூச்சு விட்டாள் வீரமாதேவி.

“அடி, பெண்ணே! நீ உலகை இன்னும் அதிகமாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஏரிக்கும், கோயிலுக்கும், நகரத்திற்கும் பெயர் சூட்டுவது நம் கரத்திலோ, அரசி, இளவரசிகளின் கரங்களிலோ இல்லை. உன்னிடம் இருக்கும்போது ஏன் கவலைப்படுகிறாய்? அமைதியாய் இருந்து

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

காரியத்தை வெற்றிகரமாக முடிப்பதில் முனைப்பாக இரு” என்று பூங்கொடி கூறியவுடன், வீரமாதேவிக்கு வியப்பாக இருந்தது.

“பெயர் சூட்டுவது நானா? தேவி! நீங்கள் என்னைச் சோதிக்கிறீர்களா அல்லது மற்றவர்களைப் போல் கிண்டலும் கேலியும் செய்கிறீர்களா?” என்று கேட்டாள்.

வீரமாதேவியின் கரங்களை எடுத்துத் தன் கரங்களோடு பிணைத்துக் கொண்டு,“வீரமாதேவி! சக்கரவர்த்திக்கு உன்னிடம் இருக்கும் அன்பைவிட மதிப்புதான் மிக அதிகம் என்பதை நான் புரிந்து கொண்டேன். உன் விருப்பத்தை அவர் நிறைவேற்றுவார். இராஜ தந்திரம் என்று சொல்வார்களே, அந்தக் கலையை நீ கற்பதும் கடைப்பிடிப்பதும் மிகமிகத் தேவை. உணர்ச்சி வயப்படாமல் இலட்சியத்தை நிறைவேற்றுவதில்தான் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். ஏரி வெட்டும் பணியைத் தொடங்குவதால் இரட்டைப் பயன். பல நூறு பேருக்கு வேலை வாய்ப்பு. அவர்கள் தங்கியிருக்க வீடுகள் கட்டப்படும். அங்கு செல்ல வழித்தடம் ஏற்படும். உணவுப் பண்டங்கள் தடையின்றிக் கிடைக்கும். இளவரசரின் நேர்ப்பார்வையில் பல பலன்கள் ஏற்படும்” என்று கூறியவுடன் வீரமாதேவிக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையில்லை.

இளவரசன் ஆதித்தன் வீரமாதேவியைச் சந்திக்கக் காட்டுப் பகுதிக்கு வந்தான். அவன் வருகை வீரமாதேவிக்கு முதல் நாளே தெரிவிக்கப்பட்டிருந்தது.

சிற்பி மாணிக்கசேகரனிடம் கோயில் வரைபடத்தைக் காட்டிப் பேசிக் கொண்டிருந்தபோது, காவல் வீரர்கள் சூழ ஆதித்தன் அங்கு வந்து விட்டான்.

வீரமாதேவியைப் பற்றி இருவிதக் கருத்துகளை அவன் அறிந்திருந்தான்.

தந்தையைத் தன் அழகால் மயக்கி இளவரசி எனும் உயர்ந்த இடத்தை அடைந்தவள் என்றும், அவள் விருப்பப்படி, சொற்படி, தன் தந்தை நடக்கிறார் என்றும் அவன் அறிந்திருந்தான். தஞ்சைப் பெரிய கோயிலைப் போல் மற்றொரு கோயிலைக் கட்டுவதற்கான பொன்னும் பொருளும் கருவூலத்தில் இல்லை என்பது அரசருக்குத் தெரிந்திருந்தும் மாபெரும் பணியில் அவர் இறங்க வீரமாதேவிதான் காரணம் என்பதாக அவன் எண்ணியிருந்தான். வீரமாதேவியைப் பற்றித் தன் தாய் பஞ்சவன்மாதேவி குறை கூறுவதை அறிந்திருக்கிறான். இவ்வளவு விரைவில் அவளைச் சந்திக்க இயலும் என்று அவன் நினைக்கவில்லை.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books




Click Here to join our Telegram Group

For free eBooks, join us on Telegram

https://t.me/tamilbooksworld

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வீரமாதேவி-

ஆதித்தன் அவளை முதன்முறையாக நேருக்கு நேர் பார்க்கிறான்.

அவன் மனத்தில் பல்வேறு எண்ணங்கள். இவளைப் பார்த்து தன் தந்தை மயங்கியது அழகிற்காகவா, கலைக்காகவா?

அழகிற்காக இருக்க முடியாது. இவளை விட அழகிகள் தன் தந்தைக்குக் கிடைக்கக்கூடும். கலைக்காக என்றால் - தன் தந்தை அறியாத கலையா? பிறகு எதற்காக?

எதனாலோ – தன் தந்தையின் மனத்தை இனி மாற்ற முடியாது. மாற்ற முயல்வதும் தவறு. வீரமாதேவியை வெறுத்து எதிரியாக நினைப்பதும் சரியில்லை: சுமூகமாகப் பேசுவோம். அன்புடன் பழகுவோம்.

முன்பு, தன் சகோதரன் சுந்தரன் வீரமாதேவியால் பெற்ற தண்டனையைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறான். அவன் செய்தது தவறோ – தவறில்லையோ அவனுக்குக் கடுந்தண்டனை கிடைத்ததற்கு வீரமாதேவியின் அழகுதான் காரணம். வீரமாதேவியின் சம்மதமில்லாமலா சுந்தரன் அவளை நெருங்கி இருப்பான்? அவனை மோகவலையில் வீழ்த்தியதுமல்லாமல் தண்டனையும் வாங்கிக் கொடுத்த இவளிடம் நாம் மிகக் கவனமாக நடந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணமும் சேர, வீரமாதேவியைச் சந்திக்க வந்தான்.

வீரமாதேவியைச் சந்திக்காமலே ஏரிப் பணியைத் தொடங்கி நிறைவேற்றினால் என்ன தவறு என்று அவன் எண்ணினான். முக்கியமானவர்களின் கருத்தைக் கேட்டான். ஈசான சிவ பண்டிதரும், இலகுளீசரும் ஒப்புக் கொள்ளவில்லை.

“வீரமாதேவி மிக சக்தி வாய்ந்தவள். அவள் ஆதரவு, உதவி இல்லாமல் இந்தப் பணியை நிறைவேற்ற முடியாது” என்று ஈசான சிவபண்டிதர் கூறினார்.

பஞ்சவன் மாதேவியும், மற்ற இளவரசிகளும் கோயில் கட்டும் பணியை எப்படியாவது தடுத்து நிறுத்துமாறு இலகுளீசரிடம் வற்புறுத்தியிருக்கிறார்கள். ஏரிப் பணியைத் தொடங்கினால், கோயில் கட்டும் பணி தடைப்படும்: கோயில் கட்டுவது இயற்கையாக நிற்கட்டும் என்ன எண்ணத்தில் ஏரி வெட்டும் பணியில் ஈசான சிவ பண்டிதருக்கு உதவ முன்வந்த இலகுளீசரும் வீரமாதேவியின் ஒத்துழைப்பைப் பெறுவது அவசியம் என்று ஆதித்தனிடம் கூறி இருக்கிறார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வீரமாதேவியின் எதிரே ஆதித்தன் நின்றான். சிறிது நேரம் அவளை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த அவன் கரம்கூப்பி வணங்கி,"பழையாறையில், தஞ்சையில் தங்களைக் காண நான் முயன்றிருக்கிறேன். முடியவில்லை. தங்களின் ஆசி பெற நான் இங்கு வந்துள்ளேன்" என்றான்.

வியப்பால் வீரமாதேவியின் விழிகள் மேலும் விரிந்தன. மேனியில் ஒருவிதச் சிலிர்ப்பு, தந்தையின் கம்பீரமும், தாயின் ஆணவமும் மிகுந்த பார்வையும் அதே போதில் சூழ்நிலைக்காக வரவழைத்துக் கொண்ட பணிவும் ஆதித்தனிடம் அவளுக்குப் புலப்பட்டன. அவன் பார்வையில் தவறான உள்நோக்கம் இல்லை என்பதையும் நொடியில் புரிந்து கொண்டாள்.

மௌனம் அங்கே சில கணம் குடிகொண்டிருந்தது. அவனுடனும் நேருக்கு நேர் பேசாமல், சிற்பி வசிக்கும் குடில் பக்கம் திரும்பி, சிற்பி மாணிக்க சேகரனை அழைக்கக் குரல் கொடுத்து விட்டு, அருகே இருந்த பாறையை நோக்கிச் சென்றாள். அதில் வரையப்பட்டிருந்த சிற்ப வரைகோட்டை ஒருமுறை பார்த்து, பிறகு ஆதித்தனை நோக்கித் திரும்பி சிறிது புன்முறுவலுடன்,"என் ஆசியா? எதற்கு?" என்று மெல்லக் கேட்டு அவனை நோக்கினாள். ஆதித்தன் அவளைத் தொடர்ந்து வந்து அருகே நின்றான். இந்தக் கேள்வியை ஆதித்தன் எதிர்பார்க்கவில்லை.

அவள் சுட்டிய அதே பாறையின் மீது தன் பார்வையைச் செலுத்தி,"கலைத் தேவியாக விளங்கும் தாங்கள் என் இளைய தாயார் என்ற இடத்தில் அமர்ந்திருப்பது எனக்குப் பெருமையாக இருக்கிறது. தங்களுக்கு என் பாராட்டைத் தெரிவித்து, ஆசி பெற வந்தேன்" என்றான். இதைச் சொல்வதற்குள் அவன் மிகவும் திணறிவிட்டான்.

"ஓ!" என்றாள் வியப்புடன் வீரமாதேவி. "நான் இளவரசியாகிப் பல மாதங்கள் ஆகிவிட்டன. உனக்கு அரசுப்பணிகள் மிக அதிகம் என்று அறிந்திருக்கிறேன்" என்றாள் வீரமாதேவி, அவனை நேருக்கு நேர் நோக்கிய வண்ணம். தன்னைவிட வயதில் மூத்த ஆதித்தனை ஒருமையில் அழைப்பதில் பலவிதத்தில் நல்லது என்று அவள் கணத்தில் முடிவெடுத்து விட்டாள். தன் மகனுடைய ஸ்தானத்தில் அவன் இருப்பதை அந்த அழைப்பு வலியுறுத்துவதாக அந்தக் குரல் அமைந்திருந்தது.

சோழநாட்டு அரசியல் பணிகளில் தான் ஈடுபட்டிருப்பதை வீரமாதேவி அறிந்திருக்கிறாள் என்பதை உணர்ந்தான் ஆதித்தன்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“நாட்டு நிர்வாகப் பணியுடன் புதுப் பொறுப்பு ஒன்றும் எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது, தாயே! வடக்கே புறப்படும் முன்பு, மகத்தான பணியொன்றை விரைவில் நிறைவேற்றும் பொறுப்பை அரசர் என்னிடம் ஒப்படைத்திருக்கிறார்” என்று, தான் வந்த நோக்கத்தைத் தெரிவிக்கத் தொடங்கினான். தொடர்ந்து,“தாங்கள் பெரும் பொறுப்பொன்றை ஏற்றிருப்பது போல்” என்று கூறி வீரமாதேவியை நோக்கினான்.

“ஒரு பொறுப்பா- இரண்டு மாபெரும் பொறுப்புகள் என்பது உனக்குத் தெரிந்திருக்குமே” என்று கூறி அவன் மனத்தை ஆராய்வதுபோல கூர்ந்து நோக்கினாள்.

அதற்குள் மாணிக்க சேகரன் அங்கு வந்துவிட்டான். சிற்பியை ஆதித்தனுக்கு அறிமுகப்படுத்தினாள்.

மாணிக்க சேகரனை ஒருமுறை பார்த்து,“இவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். மதுரையில், அரசமாளிகை ஒன்றைக் கட்டுவதற்காகச் சென்றவர்களுள் இவரும் ஒருவர்” என்று கூறி,“மதுரையில் மாளிகைப் பணி முடிந்து விட்டதா?” என்று அவனை நோக்கிக் கேட்டான் ஆதித்தன்.

மாணிக்க சேகரன் இதற்கு மறுமொழி கூறுவதற்கு முன்பு, வீரமாதேவியே குறுக்கிட்டுப் பேசினாள்.

“மதுரை மாளிகையைவிட மிக முக்கியமான பணியை ஏற்று முடிக்க அரசர் கட்டளையிட்டார். கருவூர்ச் சித்தரின் ஆசியுடன் இந்தக் காட்டுப் பகுதிக்கு வந்து பணியாற்றத் தொடங்கிவிட்டார். பெரிய கோயில் எவ்வாறு அமைய வேண்டும் என்று நம் சக்கரவர்த்திகளும், நானும் கனவு காண்கிறோமே அதற்கு உயிர் வடிவம் கொடுப்பதில் முன் நிற்கிறார் சிற்பி மாணிக்க சேகரன். இவர் குடும்பம் மதுரையில் இருக்கிறது. இவர் இங்கே கலைத்தவம் செய்கிறார். பெரிய கோயிலைக் கட்டுவதுடன் பெரிய நகரத்தையே உருவாக்க வேண்டும். அந்தப் பொறுப்பை நிறைவேற்றத் தக்கவரைத் தேடி உடனே ஒப்படைக்க வேண்டும். கட்டப்படவிருக்கும் பெரிய கோயிலின் மாதிரியையும், கோயில் மாடங்களில் அமையவிருக்கும் சிற்பங்களின் மாதிரியையும் நீ பார்க்க வேண்டும்” என்று கூறி, அருகே, கலைத் தேவி, திருமகள், போன்ற சிற்பங்கள் சிறு வடிவில் அமைக்கப்பட்டிருப்பதைக் காட்ட ஆதித்தனை அழைத்துச் சென்றாள்.

பெரிய கோயிலில் அமையவிருக்கும் சிற்பங்களின் சிறு வடிவத்தைப்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பார்த்து ஆதித்தன் வியப்படைந்தான். சுருட்டி வைக்கப்பட்டிருந்த துணிச் சுருளில் கட்டப்படவிருக்கும் பெரிய கோயிலின் சித்திரத்தையும், ஆதித்தன் பார்த்தான்.

‘கோயில் கட்டுவதை அரசியும், இளவரசியும் ஏன் எதிர்க்கிறார்கள்? அரசரின் இலட்சியத்தை, அதை நிறைவேற்ற அவர் கட்டளையை ஏன் அரசி எதிர்க்கிறார்?’ ஆதித்தனுக்குப் புரியவில்லை.

“இளவரசே! என் ஆசியைவிட உன் உதவி பெரிதும் தேவை. கங்கைக் கரைக்குச் சென்றுள்ள சக்கரவர்த்திகள் திரும்பி வருவதற்குள் பெரிய கோயிலைக் கட்டி முடிக்க வேண்டும். அதற்கு எதிர்ப்பும் இடையூறும் இருக்கின்றன என்பதை நீ அறிவாய். நீ சக்கரவர்த்தியின் இடத்தில் இருந்து எதிர்ப்பை முறியடித்துப் பணிகளை முடித்துத் தரவேண்டும்” என்றாள்.

வீரமாதேவி பேசுவதையே ஆதித்தன் இமைக்காமல் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டுமிருந்தான். பிறகு ஒரு முடிவுக்கு வந்துவிட்டான்.

“இன்னும் சில நாள்களில் தங்களைச் சந்திக்கிறேன்” என்று கூறி விடை பெற்றான்.

கோயில் திருப்பணியை எப்படியாவது நிறுத்த வேண்டும் என்ற சோழ அரசி பஞ்சவன் மாதேவியின் எண்ணத்தை எப்படி மாற்றுவது என்ற சிந்தனையில் ஆழ்ந்தவாறு பழையாறையை நோக்கிச் சென்றான்.

# 63

## வீரமாதேவி போகாதே நில்

இராசேந்திர சோழ தேவர் தம் படைகளுடன் சில நாள்கள் சிதம்பரத்தில் தங்கியிருந்து, பிறகு காஞ்சி மாநகர்ப் பொன் மாளிகையில் வீற்றிருந்து வடக்கு நோக்கிப் புறப்பட்டார்.

அவருடன் வீரர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் சென்றனர். பகை நாட்டின் மீது படை எடுத்துச் செல்லும் உணர்வு அவர்களிடம் இல்லை. வழக்கமான அணிவகுப்புக் கட்டுப்பாடும் தளர்த்தப்பட்டிருந்தது. ‘வீரவேல், வெற்றி வேல்’ கோஷம் இல்லை. இரவு தங்குமிடங்களில் அவர்கள் விருப்பப்படி, உணவு சமைத்து உண்டனர். பாட்டும் கூத்தும்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அவர்களுக்கு மகிழ்ச்சியை அளித்தன. அணிவகுத்துச் செல்லும்போது ஆடிப்பாடிச் சென்றனர்.

வழியே குறுக்கிட்ட ஆறுகளில் நீர்ப்பெருக்கு குறைந்திருந்ததால் பெரும் வண்டிகளும் எளிதில் ஆற்றைக் கடந்து செல்லும் அளவுக்குக் குறுக்குப் பாலமாக அமையத் தக்க படகுகளையும் அவர்கள் உடன் கொண்டு சென்றனர். படகுப் பாலம் அமைக்காமல் படகுகளிலேயே கடந்தனர். சில இடங்களில் இடுப்பளவு நீரில் நடந்தும் சென்றனர்.

நாட்டியமாடி மகிழ்விக்க நடனப் பெண்கள் தக்க பாதுகாவலுடன் தொடர்ந்து வண்டிகளில் வந்தனர். ஆனால் ஒழுக்கத்தை மிகக் கண்டிப்பாகக் காக்க வேண்டும் என்ற உத்தரவை யாரும் மீறவில்லை.

வழியே பாடல் பெற்ற திருத்தலங்களில், இராசேந்திரன் தங்கி அந்தந்தக் கோயில்களுக்குத் தேவையானவற்றை நிவந்தங்களாக அளித்தார். அந்தத் தலத்து இறைவன் மீது பாடப் பெற்ற பதிகங்களைப் பாடச் சொல்லி, கேட்டு மகிழ்ந்தார்.

தங்குமிடங்களில், படையில் புதிதாகச் சேர்ந்த வீர இளைஞர்களை அழைத்து மனம் திறந்து அவர்களுடன் உரையாடினார். அவர்கள் குடும்பத்தைப் பற்றிக் கேட்டறிந்தார். அவர்கள் திறமையைக் கண்டறிந்தார்.

சாளுக்கிய நாட்டின் மீது படையெடுத்துச் சென்ற போதெல்லாம், இராசேந்திரனுடன், அவர் புதல்வர் இராசாதிராசன் உடனிருப்பது வழக்கம். மாதண்டநாயகராக இராசேந்திரனே பொறுப்பேற்றிருந்தாலும், மகன் இராசாதிராசனே படைவியூகம் அமைப்பது, எதிரிகளின் போக்கறிந்து செயல்படுவது, முன்னணிப் படைக்குத் தலைமை வகிப்பது என்ற தம் போர் அறிவையும் வீரத்தையும் புலப்படுத்தி வந்தான்.

இம்முறை கங்கை யாத்திரையின் போது இராசேந்திரன் அரையன் இராசராசன் என்ற வீரனைத் தேர்ந்தெடுத்தார். பலமுறை அவன் வீரத்தைக் கூர்மையாகக் கண்டறிந்து பாராட்டி இருக்கிறார்.

“நம்மையெல்லாம் கங்கை நதிக்கரைக்கு அழைத்துச் சென்று நீராடச் செய்து, நாடு நகரங்களைக் காட்டித் திரும்பவும் அழைத்து வரப்போவதாக அன்றோ பேசிக் கொள்கிறார்கள்? இதற்கு அரையன் இராசராசன் தலைமை வேறு தேவைதானா? அரசர் ஏன் அவ்வாறு முடிவெடுத்தார்?” என்று படை வீரர்கள் பேசிக் கொண்டனர்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அரையன் இராசராசனுக்கும் வியப்பாக இருந்தது. சோழ சக்கரவர்த்திகளின் உள்ளக் கிடக்கையை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. தன் சந்தேகத்தைத் தெளிவுபடுத்திக் கொள்ள அரசரை வினவ, வாய்ப்புக்காகக் காத்திருந்தான்.

படைப் பயணத்தில் ஒரு நாள் வடபெண்ணை ஆற்றங் கரையில் பரந்த மணல் வெளியில், சோழப் படைகள் தண்டு இறங்கி இருந்தன. வெண்ணிலவு காய்ந்து கொண்டிருந்த வேளையில், படைவீரர்கள் குதூகலமாகப் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்த போதில் இராசேந்திரன், நீலவானத்தை நோக்கிச் சிந்தனையிலாழ்ந்திருந்தார். திடீரென அவர் அரையன் இராசராசனை அழைத்தார்.

படைத் தலைவர் அரையன் இராசராசனுக்கு ஒரு கணம் வியப்பேற்பட்டது. இரவு வேளையில் அரசர் எதற்காகத் தன்னை அழைக்கிறார் என்று அவனால் யூகிக்க முடியவில்லை. சக்கரவர்த்தியின் அன்பையும் மதிப்பையும் தான் பெற வேண்டும் எனும் ஆர்வமும், ஆவலும் அவனிடம் குடிகொண்டிருந்தன. அதுபோல் தம் திறமையைக் காட்டி முன்னேற விரும்பும் இளைஞர் மற்றொருவர் உண்டு. இராசராச சோழர் காலத்துப் படைத் தலைவராயிருந்த கிருஷ்ணன் இராமனின் புதல்வன் அருண்மொழி, சக்கரவர்த்திகளிடம் நன் மதிப்பு பெற முயன்று கொண்டிருந்தான். அவனையும் விஞ்ச வேண்டும் என்று அரையன் இராசராசன் விரும்பினான்.

“வருக, வருக விக்கிரம சோழ அரையன் இராசராசனாரே! மாதண்ட நாயகரே வருக வருக!” என்று இராசேந்திர சோழர் வரவேற்புக் கூறி அழைத்தவுடன், அரையன் இராசராசன் திடுக்கிட்டான்.

தன் பெயரையும், பட்டப் பெயரையும் சொல்லி அழைப்பது ஒருவேளை தன்மீது குற்றம் கண்டு குத்திக் காட்டுவதற்காக இருக்குமோ என்று அச்சமுற்று, மிகப் பணிவுடன் நின்றான்.

எதிரே அமரச் செய்து. அடுத்துப் பயணத் திட்டத்தை விவாதிக்கத் தொடங்கிய பிறகுதான் அரையனுக்குத் துணிவு பிறந்தது. ஆனால், அவர் தன்னை ‘நீங்கள், தாங்கள்’ என்று அழைக்காமல் நீ என்று அழைத்தால் மேலும் துணிவும் தெம்பும் ஏற்படும் என்ற எண்ணம் தோன்றியது.

சக்கரவர்த்திகள் மெல்ல நகைத்தார். “அரையரே! வல்லவரையர் வந்தியத் தேவனை உனக்குத் தெரியுமா?” என்று கேட்டார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அரையன் இராசராசன் தலை அசைத்தான்.

“அவர் என் அத்தையின் கணவர். என்னை உருவாக்கியவர். அவர் என்னை இன்றும் ‘நீங்கள் - தாங்கள்’ என்றழைக்கிறார். ஏன் தெரியுமா? பதவியின் காரணமாக. வயது அங்கே குறுக்கிடவில்லை. அதுபோல் மாதண்ட நாயகனாக இந்த கங்கைப் படையெடுப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கும் உன்னை- “ என்று கூறிச் சற்று, நிறுத்தி ‘சரிதானா?’ என்பது போல் பார்த்து,“படைத்தலைவருக்கு உரிய மரியாதையுடன் அழைக்கிறேன். அப்படி அழைப்பது உனக்குக் கூச்சமாக இருந்தால் உன் விருப்பப்படியே அழைக்கிறேன்” என்றார்.

இராசராசன் மிகவும் பணிவான குரலில்,“சக்கரவர்த்திகளே! நாம் எந்த நாட்டின் மீது படையெடுத்துச் செல்கிறோம் என்று தெரியாமலே தொண்டை மண்டலம் கடந்து வந்துவிட்டோம். இன்னும் சில நாள்களில் வேங்கியை அடைந்து விடுவோம். கீழைச் சாளுக்கியர்கள் நம் நண்பர்கள் தாமே? படைவீரர்கள் உற்சாக யாத்திரையாகக் கருதுகிறார்கள். உல்லாச யாத்திரைக்கு நான் மாதண்ட நாயகனா? எனக்கே ஒன்றும் விளங்கவில்லை” என்று தன் ஐயத்தைத் தெரிவித்துக் கொண்டான்.

“வீர இளைஞர்கள் மிக அதிகமாகக் கொண்ட நம் படைவீரர்களின் தோள் வலியை வீணாக்குவது என் நோக்கமன்று. வேங்கி வந்தடைந்தவுடன் நம் திட்டம் புலப்படும். கங்கையில் நீராடி, கங்கை நீரைக் கொண்டு வருவது என் நோக்கம். என் தந்தை அமரர் இராசராசரின் கடைசிக் கால ஆசையை நிறைவேற்றுவது என் கடமை. புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் கோயிலின் குடமுழுக்கு கங்கை நீரால் நடைபெற வேண்டும் என்பது என் ஆசை. கங்கை நீரைக் கொண்டு வர இவ்வளவு படைகளா என்று நீ கேட்கலாம். நீயே பார்க்கப் போகிறாய் - வேங்கி வந்தடைந்தவுடன் சாளுக்கியர்களும், கலிங்கத்தாரும், சக்கரக் கோட்டத்தாரும் போரிட ஆயத்தமாகப் போவதை. கங்கைக் கரைக்குச் செல்லும் வழியில் உள்ளவர்கள் ஒன்று சேர்ந்து நம்மை எதிர்க்கப் போகிறார்கள். மும்முனை, நான்கு முனைத் தாக்குதல் என்று நாம் பலத்த தாக்குதலை எதிர்பார்க்க வேண்டும். இப்போதுள்ள படைகள் போதுமா என்பது சந்தேகமே. படைகள் எண்ணிக்கையில் அதிகமிருந்தாலும் தந்திரமும், திட்டமும் மிக அவசியம். அங்குதான் உன் வீரமும், விவேகமும், ஆற்றலும் கைகோத்து உன் புகழை நிலைநாட்டப் போகின்றன.”

இராசேந்திர சோழர் சொல்லி நிறுத்தினார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“என் புகழா? சக்கரவர்த்திகளின் திறமையும், வீரமும் புகழைக் கொண்டு குவிக்கப் போகின்றன. புகழும் பெருமையும் தங்களுக்கே அரசே! மும்முனை, நான்கு, ஐந்து முனைத் தாக்குதலுக்கு நான் ஆயத்தமாக இருக்கிறேன். அரசர்க் கரசே! ஏதோ வேடிக்கை விளையாட்டாக இவ்வளவு தொலைவு வந்த எங்களுக்கு உண்மையிலேயே வீரத்தை நிலை நாட்ட ஒரு வாய்ப்பு கிடைக்கப் போகிறது” என்று உணர்ச்சி மிகுதியுடன் பேசினான்.

அந்த நிலவு வேளையில் அந்த இள வீரன் விழிகள் வீரத்தால் மின்னுவதைக் கண்ட இராசேந்திரன் அவன் முதுகைத் தட்டிக் கொடுத்து,“இராசராசா! நம் உளவுப் படைகள் மிகக் கவனமாக இயங்க வேண்டும். கலைவிருந்து படைக்க வந்த நடனமணிகள் வேங்கியிலேயே தங்கட்டும். உல்லாசமும், கேளிக்கையும் பாட்டும் கூத்தும் வேங்கிக்குப் பிறகு வேண்டாம். நீயும், வீர இளைஞன் அருண்மொழியும் சேர்ந்து சோழ நாட்டிற்குப் பெரும் புகழைத் தேடித்தர வேண்டும்” என்றார்.

இரவு நேரமாகிக் கொண்டிருந்ததை நினைவுபடுத்தி, மறுநாள் பொழுது புலரா முன்னரே படைகள் புறப்பட வேண்டும் என்றும் கட்டளையிட்டார்.

அரையன் இராசராசனுக்குப் புதிய உற்சாகம் ஏற்பட்டது என்றாலும், புகழில் ஒரு பங்கினை அருண்மொழி பெற்றுவிடப் போகிறானே என்ற கவலை வேறு ஏற்பட்டது. உறக்கம் வராமல் தவித்தான்.

இராசேந்திர சோழருக்கும் உறக்கம் வரவில்லை. மாளிகையில் மஞ்சத்தில் கவலையின்றி உறங்க வேண்டியவர், எங்கோ ஆற்றங்கரையில் மணல் வெளியில் உறங்கக் காரணம் ஏதுமில்லையே?

புகழுக்குக் குறைவா? கல்விக்குக் குறைவா? செல்வம் குறைவா? நாட்டின் எல்லை குறைவு பட்டதா? பிறகு கங்கைக் கரைக்கு ஏன் செல்ல வேண்டும்? ஆயிரக்கணக்கான போர் வீரர்களை, காரணம் கூறாமல் நடத்திச் செல்ல என்ன காரணம்? உறக்கம் வராமல் ஆயிரம் சிந்தனைகளில் மிதக்க என்ன காரணம்?

கங்கைக் கரை யாத்திரைக்குப் புறப்படும்போது, அதிகாரிகளுக்கு அவர் அந்தரங்க உத்தரவுகள் சில பிறப்பித்துச் சென்றிருந்தார். இரு நாள்களுக்கு ஒருமுறை, தலைநகரத்தில் நடைபெறும் முக்கிய செய்திகளைத் தெரிந்து கொண்டு ஒற்றன் ஒருவன் அரசரைச் சந்திக்க வேண்டும் என்பது ஒன்று. பெரிய கோயில் கட்டும் பணியும், நகர நிர்மாணமும், ஏரி வெட்டும் வேலையும் எவ்வாறு நடைபெறுகின்றன

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

என்பதைச் சுருக்கமாக எழுதி நம்பிக்கை வாய்ந்தவரிடம் அனுப்புமாறு பட்டோலைப் பெருமான் என்ற அதிகாரியிடம் ஒப்படைத்திருந்தார்.

நாள்தோறும் நடக்கும் அரசு தொடர்பான நிகழ்ச்சிகளை, நிகழ்ச்சி ஏட்டில் குறித்து வைத்திருப்பதே பட்டோலைப் பெருமானின் பணி.

காஞ்சியினின்று இராசேந்திரன் புறப்பட்டுப் பல நாள்கள் ஆகியும் கோயில் பணி,நகர நிர்மாணப் பணிகள் தொடர்பாக எவ்விதச் செய்தியும் அவருக்குக் கிடைக்கவில்லை.

அதற்குள் திருப்பணியில் என்ன முன்னேற்றம் ஏற்பட்டுவிடப் போகிறது என்று தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டார் இராசேந்திரன்.

"வீரமாதேவி இப்போது என்ன செய்து கொண்டிருப்பாள்? பாவம்! முற்றிலும் தன்னை நம்பி வந்துவிட்டவள். கலை, கலை என்று கலையே தன் மூச்சாகக் கொண்டு சுறுசுறுப்புடன் இயங்குகிறாள். அவள் கனவுகள் விரிந்து பரந்தவை, ஆழமானவை. என்னைவிட,பெரிய கோயிலைக் கட்டுவதில் அவளுக்குத்தான் ஆர்வம் அதிகம். அந்தக் கோயிலைச் சிற்பக் களஞ்சியமாக்க வேண்டும் என்பது அவளுடைய தணியாத ஆவல். காட்டுப் பகுதியில் அவள் தன்னந்தனியாளாய் இயங்குகிறாள். அவளுடைய கலை ஆர்வத்தை மேலும் தூபமிட ஒரு சிற்பி. சிற்பியுடன் அவளுக்குள்ள நெருக்கத்தைத் தவறாக எண்ணினோம். விளையாட்டாக இட்ட சபதத்தை நிறைவேற்றுவதில் அவள் கடுமையாக இருக்கிறாள். உள்ளத்தை முழுமையாக அர்ப்பணித்து விட்ட அவள் தன் உடல் இளமையைச் சிற்பியிடம் ஒப்படைத்து விடுவாளோ என்று நான் தவறாக எண்ணியதை அறிந்த அவள் அன்று எப்படிச் சீறினாள்? உள்ளம் வேறு, உடல் வேறு என்று பொதுவாகப் பெண்கள் பிரிக்க விரும்ப மாட்டார்கள் என்பதை அறியாது போனேனே! என் கபட உள்ளத்தைப் போல், வீரமாதேவியும் இருவேறு மனமுடையவளாக இருப்பாள் என்று தவறாக எண்ணிவிட்டேனே..."

இராசேந்திரன் கண் இமைக்காமல் சிந்தித்துக் கொண்டிருந்தார். பழையாறையில் நடைபெற்ற சம்பங்களை நினைவு படுத்திக் கொண்டார். அந்த இரவு – வீரமாதேவி பொங்கி எழுந்த இரவை நினைவு படுத்திக் கொண்டார். அவளுக்குத்தான் எத்தனை வலிமை! சினத்தின் உச்சியிலேறிய அவள் சீறி எழுந்து என் கரத்தை விலக்கினாளே! அப்பப்பா! அந்தப் பூங்கரத்திற்குள்தான் எவ்வளவு புயலின் வேகம்?

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

‘கோபப்பட்டது நியாயம்தானே. அவள் மனஉறுதியை நான் சோதிக்க முற்பட்டது தவறுதானே?’

இராசேந்திரன் தனக்குள் பேசிக் கொண்டார். எதிரே வீரமாதேவி இருப்பது போன்ற நினைவு. அவர் அருகே அவள் வந்தமர்கிறாள். அவர் மெய் சிலிர்க்கிறது.

“எனக்காகத்தானே உங்களுக்கு இவ்வளவு தொல்லைகள்?” என்று கேட்கிறாள்.

“தொல்லையா, உன்னாலா?” இராசேந்திரர் வினவுகிறார்.

“கோயில் குடமுழுக்குக்குக் கங்கை நீரைக் கொண்டு வர வேண்டும் என்று விரும்பினேன். உடனே புறப்பட்டு விட்டீர்கள். இப்படி, நதிக் கரையில் வெறும் தரையில் படுத்திருக்கறீர்கள். அந்தப்புரத்தில் பஞ்சணையில் பணிப் பெண்கள் சாமரம் வீசத் துயில வேண்டிய நீங்கள், இப்படி கண்விழித்துப் படுத்திக்க நான்தானே காரணம்?”

“இல்லை, இல்லை. நீ காரணமில்லை. என் தந்தையின் ஆசையை நிறைவேற்றப் புறப்பட்டதற்கு நீ எப்படிக் காரணமாவாய்?”

“இந்த வடபெண்ணை ஆற்றங்கரை எனக்குப் புதியதன்று. வாதாபிப் போரின் போதும், ஒரு சமயம் கீழைச் சாளுக்கியர்களை அடக்கப் படையெடுத்து வந்தபோதும் பஞ்சணை மெத்தையையா உடன் கொண்டு வந்தேன்?”

“வாழ்க்கையின் பெரும் பகுதியை போர்ப் பூமியிலே கழித்த நீங்கள் இந்த வயதிலாவது சுகம் அனுபவிக்காமல் காடு மேடு என்று அலைந்திருக்க வேண்டாம். கங்கை நீர் வேண்டும் என நீங்கள் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் உங்கள் திருப் புதல்வர்கள் கொண்டு வந்திருக்க மாட்டார்களா?”

“கொண்டு வந்திருப்பார்கள். ஆனால் கங்கையில் நீராடி நானே கொண்டு வர ஆசைப்பட்டேன்.”

“கங்கையில் தனியே புனித நீராடக் கூடாது என்று சாத்திரம் புகல்வதாகப் பண்டிதர் கூறினார். தங்களுக்குத் தெரியாதா?”

“ஆமாம், என்னுடன் வருவதற்கு நீ சம்மதப்படவில்லை. கோயில் பணி என்று கூறிவிட்டதால் உனக்குப் பயம், தனியே என்னுடன் வந்தால் விரதபங்கம் ஏற்பட்டு விடுமோ என்று.”

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“என்னைப் பற்றி எனக்குத் தெரியும். தங்களையும் நான் அறிவேன். ‘விரத பங்கம், சபதத்தை மீறுவது’ என்பதெல்லாம் இனி ஒரு நாளும் நடைபெறாது. தங்களுடன் நான் வரச் சம்மதிக்காததற்கு அவை எல்லாம் காரணமல்ல.”

“பிறகு...” என்று கேட்டவாறு, இராசேந்திரன் வீரமாதேவியை மெல்ல அணைத்துக் கொண்டார். அவர் அணைப்பிலிருந்து மிக இலகுவாக நழுவினாள் வீரமாதேவி.

“பிறகு.... கங்கையில் நீராடும்போது உரிமைப் பொருள் உடனிருக்க வேண்டும். “சகதர்மிணியின் கரம் பிடித்துக் கங்கையில் மூழ்கி எழ வேண்டும்: என்ற சாத்திரக்கூற்றை நீங்கள் மீறலாமா?”

“ஓ! சாத்திரம் நிறையப் படிக்கிறாய்.”

“இல்லை, சாத்திர வல்லுனர்கள் நானிருக்கும் கானகத்திற்கு வந்து விட்டார்கள். தெய்வச் சிற்பங்கள் எப்படி அமைய வேண்டும் என்று கூறசிற்ப விற்பன்னர்கள் வந்திருக்கிறார்கள். சாத்திரம் படித்தவர்களுடன் பேசும் போது பல அரிய உண்மைகளைக் கற்றறிகிறேன். ஆகா! மனித வாழ்க்கை என்பதே எவ்வளவு பெரிய தத்துவம்! பிறப்பது, மகிழ்ச்சியுடன் இருப்பது, திருமணம் செய்து கொள்வது எல்லாம் தத்துவமே. கணவருடன் நாள்தோறும் வாழ்வது புனித வேள்வி செய்வதுபோல், உடலில் ஏற்படும் கிளர்ச்சிகளும், உடல் உபாதைகளும் நம்மைச் சோதிக்கும் அரக்கர்கள். அந்த அரக்கர்களை வதைக்க நமக்கென்றே இறைவன் அவதாரம் எடுக்கிறான். அவன் அவதாரத்திற்கு ஏற்ற நிலைக்களனை ஏற்படுத்தவே நல்ல இசை, நடனம் இவையெல்லாம் பெண்களின் முழு உடலே வேள்விப் பீடமாகும்.”

“ஏய்.... ஏய்... வீரம்மா... சாத்திர மேதையாக, தத்துவ ஞானியாக அதற்குள் எப்படி மாறினாய்? நான் திரும்பி வருவதற்குள் காவியுடை உடுத்தி, உருத்திராட்ச மாலை அணிந்து கமண்டலத்தால் என்னை வரவேற்கும் அளவுக்கு மாறிவிடப் போகிறாய்...”

“மாற மாட்டேன். அஞ்சாதீர்கள். நான் எப்போதும் போல் உங்கள் வீரமாதேவியாக உங்கள் அருகேயே இருக்க விரும்புகிறேன். நினைவெல்லாம் உங்களிடம் இருத்தியிருக்கிறேன். செய்யும் பணியில் எள்ளளவும் பிசகு ஏற்படாதிருக்க உங்களிடம் பூரணமாக ஈடுபடுத்திக் கொண்டுள்ள என் மன நிறைவு உதவுகிறது. பணிகள் வேகமாக நடைபெற உற்சாகம் ஏற்படுகிறது.”

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“நீ சொல்வதில் முன்னுக்குப் பின் முரண்பாடு இருக்கிறதே. என் நினைவாக இருந்தால் கோயில் கட்டும் பணி எப்படி நடைபெறும்? உதாரணமாக போர்க்களம் செல்லும் நான் உன்னையே நினைத்துக் கொண்டிருந்தால் வெற்றி கிட்டுமா?”

“யுத்த பூமியிலே பெண் உதவி தேவையில்லை, அதனால் நினைவைச் சிதறவிடக் கூடாது. ஆனால் கலைப்பணியில் உங்களைப் போன்ற கலைஞரின் உறுதுணை வேண்டும். நீங்கள் அருகே இருப்பது போன்ற உணர்வு இருந்து கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் முழுமையாகக் கலை பூத்துக் குலுங்கும்.”

“வீரமாதேவி! உன்னைச் சாதாரணப் பெண் என்று நினைத்தேன். என்னையே நினைத்துக் கொண்டிருக்கும் உன்னைப் போல, நானும் உன்னையே நினைத்துக் கொண்டிருக்கிறேன். அதனால் என் யாத்திரை தடைப்படுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. வீரமாதேவி! நீ இப்படியே இங்கேயே இருந்து விடு. என்னுடனேயே இருந்து விடு.”

வீரமாதேவியிடமிருந்து ஒரு மெல்லிய சிரிப்பொலி எழுந்தது. “அதெப்படி என்னால் முடியும்? கங்கை நதியில் நீராட உங்கள் உரிமை மனைவியை அழைத்துவர ஏற்பாடு செய்யுங்கள்.”

“உரிமை மனைவியா? வீரமாதேவி! என்னைச் சோதனை செய்கிறாயா? நீதான் என் உரிமை, உயிர், உடல் எல்லாம்.”

“இல்லை, இல்லை. உலகம் ஏற்காது. அரியணையில் அமரும் உரிமை பெற்றவள், ஊரும் உலகமும் அறிந்த பஞ்சவன் மாதேவி இருக்கும்போது, அந்த இடத்தை நான் பறிப்பது, உரிமை கொள்வது மிகவும் தவறு. இரண்டு காரணங்களுக்காக உடனே பஞ்சவன் மாதேவியை அழைத்துக் கொள்ளுங்கள். ஒன்று கங்கையில் ஆற்ற வேண்டிய புனிதச் செயலுக்காக, மற்றொன்று – பழையாறை, தஞ்சையை விட்டுச் சில காலம் அவர்கள் வெளியே இருந்தால் தான் கலைப்பணி, நகரப்பணி எல்லாம் நிறைவேறும். என் மீதுள்ள வெறுப்பால் பட்டத்து அரசியும் மற்றவர்களும் நல்ல காரியத்தைத் தடை செய்கிறார்கள். நான் சொல்வதை ஏற்கிறீர்களா? போய் வரட்டுமா? பொழுது புலர்கிறது. அதோ, படை வீரர்கள், விழித்தெழ சங்கம் முழங்குகிறது.”

இராசேந்திரன் அருகே அமர்ந்திருந்த வீரமாதேவி துள்ளி எழுந்து மறைகிறாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

# 64

# ஓலையில் வந்த செய்தி

சோழ வீரர்கள் அணிவகுத்து வடக்குத் திசை நோக்கிப் புறப்பட்டனர். இதுவரையில் அவர்களிடம் இருந்து வந்த குறிக்கோளற்ற போக்கு மாறி, வேற்று நாட்டின் மீது படையெடுத்துச் செல்லும்போது இருக்கும் வேகம், துள்ளல், கம்பீரம், முழக்கம் ஆகிய யாவும் இப்போது நிறைந்திருந்தன.

போருக்குப் போகவில்லை: கங்கை நதிக்கரையில் நீராடிப் பொழுதை நல்ல முறையில் கழிப்பதற்காகச் செல்கிறோம் என்ற உணர்வு மங்கி விட்டது.

கட்டுப்பாட்டிற்கும், கடமை உணர்விற்கும் பெயர் பெற்ற சோழப் படைகளிலும் ஓரிரு ஒற்றர்கள் இல்லாமலில்லை. பாண்டிய நாட்டின் மீது அன்பு கொண்டவர்கள் ஓரிருவர் இல்லாமலில்லை.

நான்கு, ஐந்து வீரர்களாக கூடிப் பேசும்போது அவர்கள், வேடிக்கைப் பேச்சின் மூலம் சோழ நாட்டைக் குறைகூறத் தவறுவதில்லை. சிரிக்கப் சிரிக்கப் பேசுவதால் அவர்களுக்குச் சோழ நாட்டின் மீதுள்ள விரோத மனப்பான்மையை எவரும் சந்தேகிப்பதில்லை. அதற்கு மாறாக சங்கன், ரங்கன் என்ற அந்த இரு இளைஞர்களும் தங்கள் சாதுர்யப் பேச்சால், வேடிக்கைப் பேச்சால் சக தோழர்களின் கவனத்தைக் கவர்ந்திருந்தனர்.

“நம் அரசர், பழையாறையிலிருந்து செய்தி வருகிறதா என்று ஆவலுடன் எதிர்பார்க்கிறார். அதனால் அவருக்கு ஏக்கமும் அதிகம். அதுபோல் நம் அரையர் இராசராசனும் எதிர்பார்க்கிறார்” என்று கண்சிமிட்டியபடியே கூறுவான் சங்கன்.

“அரசர் நாள்தோறும் முக்கிய செய்திகளை எதிர்பார்க்கிறார். நம் அரையருக்கு அப்படி என்ன செய்தி? பட்டீச்வரத்தில் ஒரு பாட்டி இருக்கிறாள். அவள்தான் ஏதாவது செய்தி அனுப்ப வேண்டும்” என்பான் ரங்கன்.

“அடடே, பட்டீச்சரம் பாட்டியா? எனக்குத் தெரியாமல் போய்விட்டதே? திருவாரூர் தேன்மொழியைத் தான் எனக்குத் தெரியும். தேன்மொழியைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று பல வருடங்களாகத் தவம் செய்தார்”– சங்கன்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“ஏதேது, இப்பொழுதுதான் படைத்தலைவர் ஆகியிருக்கிறார். அதற்குள் இரண்டு, மூன்று காதலா?” என்று கூறி, கண்சிமிட்டுவான் ரங்கன்.

உணவு சமைக்க மூடப்பட்டிருக்கும் அடுப்பைச் சுற்றி வீரர்கள் அமர்ந்திருப்பர். அங்கு பாட்டும் கூத்துமாக இருக்கும். வீரர்கள் குழுவில் இதுவரை சரியாகக் கலந்து கொள்ளாமலிருந்தவர்கள் சங்கன் பேசுவதைக் கேட்க ஆவலுடன் அவன் பக்கம் திரும்புவார்கள்.

“முக்கியமானவர்களின் அந்தரங்கச் செய்திகளை எப்படி சங்கா நீ தெரிந்து கொள்கிறாய்?” என்று அவனை உசுப்பி விடுவான் ஒரு வீரன், செய்தியை முழுமையாகக் கேட்டறிய.

“அதுவா? நானாக அலைவதில்லை. அதற்காக, என்னைத் தேடி வருவதைத் தள்ளிவிட முடியுமா? உன்னைப் பற்றிக்கூட ஒரு செய்தி எனக்குத் தெரியும்” எனக்கூறி, கேள்வி கேட்டவனையே திடுக்கிட வைப்பதுடன்,“என்னைப் பற்றி என்ன செய்தி, என்ன செய்தி?” என்று பரபரப்புடன் கேட்குமாறு செய்வான்.

“நம் தலைவரைப் பற்றிச் சொல்லப்பா. மற்ற கதையெல்லாம் எதற்கு? ஏதோ உத்தமர்போல அவர் நடித்து நம் அரசரின் அபிமானத்தைப் பெற்றுவிட்டார். பட்டீச்சரம் பாட்டியைப் பற்றிச் சொல்லு” என்று மற்றொருவன் தூண்டுவான்.

சக்கரவர்த்தியிடம் அபிமானம் பெறுவதில் அரையன் இராசராசனுக்கும் முன்னால் படைத்தலைவர் கிருஷ்ணன் ராமன் புதல்வன் அருண்மொழிக்கும்தான் கடுமையான போட்டி. இருவரும் தம் திறமையைப் புலப்படுத்திப் போட்டியிடுவதால் சோழ நாட்டிற்கு நன்மைதானே என்று அரசரும் அவர்கள் நடவடிக்கையைக் கண்டும் காணாததுமாக இருந்து விடுவார்.

இளம் வயதிலேயெ திறமை மிகுந்த இரு வீரர்களும் தங்கள் ஆற்றலை வெளிப்படுத்தி முன்னேறி வந்தனர். அவர்கள் இருவரையும் பாராட்டுவதற்கும் - புகழ்வதற்கும் என்று சிலர் சூழ்ந்திருப்பர். அவர்களுள் அருண்மொழியை ஆதரிக்கும் வீரன் ஒருவன் ரங்கனைப் பேசத் தூண்டினான்.

ரங்கன் கண் சிமிட்டியபடி,“நமக்கு எதற்கப்பா வம்பு? அரையர் காதில் இந்தச் செய்தி விழுந்தால் என்னை இங்கேயே வெட்டி மணலில் புதைத்து விடுவார்” என்றான், மேலும் ஆவலைத் தூண்ட.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“பட்டீச்சரம் பாட்டியைப் பற்றி நீ சொல்லாவிட்டாலும் கூட ஒருநாள் இல்லாவிட்டால் வேறு ஒருநாள் உன்னை அரையர் கண்ட துண்டமாக வெட்டிப் போடத்தான் போகிறார்.”

“அந்த ரகசியச் செய்தியைச் சொல்லிவிட்டுத்தான் செத்துப் போயேன். பாவம், தன் அபிமானத் தலைவர் அருண்மொழியிடம் இந்தக் கதையை உடனே போய்ச் சொல்லத் துடிக்கும் அவன் ஆசையை ஏன் தடுக்கிறாய்?” என்று கேட்டவனைப் பார்த்து அங்கிருப்போர் எல்லாரும் சிரிக்குமாறு செய்து விட்டான் சங்கன்.

“எனக்கு ஒரே தலைவர், நமது பேரரசர்தான். உம் சொல்லப்பா, ஆவலைத் தூண்டிவிட்டு திசை திருப்பப் பார்க்கிறாயே. அன்று அப்படித்தான், நமது பேரரசர் குடும்பத்தைப் பற்றிக் கதை கதையாகச் சொல்லிக் கடைசியில் வீரமாதேவியைப் பற்றி ஏதோ பெரிய ரகசியம் சொல்லப் போவதாகக் கூறி ஆவலைத் தூண்டி விட்டு சொல்லாமல் போய்விட்டாய். இரவெல்லாம் எனக்குத் தூக்கம் வரவில்லை” என்று குறைப்பட்டுக் கொண்டான். “வீரமாதேவியைப் பற்றி அறிய உனக்கு அவ்வளவு ஆவல் ஏன்?” என்று கேட்டான் மற்றொரு வீரன்.

“அதுவா, ஒரு பெரிய கதை” என்றான் மற்றொருவன்.

“கிணறு வெட்ட பூதம் கிளம்புவதுபோல் சுவையான கதை இன்று கிடைக்கும் போலிருக்கிறதே. இன்று சிவராத்திரிதான்” என்றான் மற்றொருவன்.

“மற்ற கதையெல்லாம் இருக்கட்டும்: வீரமாதேவியை உனக்கு முன்பே தெரியுமா? வீரமாதேவியின் கடைக் கண் பட்டுவிட்டால் அரசாங்கத்தில் பெரிய பெரிய காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம் என்று சொல்கிறார்கள்” என்று தூபம் போட்டான் மற்றொருவன்.

“வீரமாதேவி வீரம்மாளாகக் கிராமத்தில் வசித்த போதே அவனுக்குத் தெரியும். அவளுக்குப் பரிசம் போட அவன் வீட்டார் முடிவு செய்து விட்டார்கள். அவன் துரதிர்ஷ்டம் காரியம் கைகூடவில்லை” என்றான் மற்றொருவன்.

“துரதிர்ஷ்டமா? அதிர்ஷ்டம் என்று சொல்லு. அந்த வீரம்மாள் வீரமாதேவியாகி நம் சக்கரவர்த்திகளைப் படுத்தும் பாடு கொஞ்சமா? அவளை இவன் மணந்திருந்தால் இவன் கதி என்ன ஆகியிருக்கும்?”

“ஒன்றும் ஆகியிருக்காது. அவள் அங்கேயே இருப்பாள். இவன் மட்டுமே

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பரிதாபத்துடன் பிரிந்து போர்க்களம் செல்ல வேண்டியிருக்கும்.”

“ஆமாம். எனக்கும் அதுதான் சந்தேகம். நம் அரசர் எங்கு சென்றாலும் வீரமாதேவியை உடன் அழைத்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். தஞ்சையில் தங்காமல், பழையாறையில் தங்காமல் காட்டுப்பகுதியில் தங்கியிருக்கிறார். அவர் கட்டும் கோயில் குடமுழுக்குக்குக் கங்கை நீரைக் கொணரவும், கங்கையில் புனித நீராடவும் இளவரசியை ஏன் அழைத்து வரவில்லை?”

“அரசர் அழைத்து வரவில்யா? அவள் வரச் சம்மதிக்கவில்லை. அதற்குச் சில காரணங்கள் உண்டு” சங்கன் கூறினான்.

“ஒரு கதை சொல்லப் போக நூறு கிளைக் கதைகள் கிளர்ந்தெழுகின்றன. இவற்றையெல்லாம் கேட்பதற்கு நமக்கு வயது இருக்குமா என்று தெரியவில்லை” என்று ஒரு வீரன் அங்கலாய்த்தான். இளைஞர்களே நிறைந்திருந்த அந்தக் கூட்டத்தில் அவன் ஒருவனே சற்று வயதானவன். கல்யாணமாகி மனைவியை இழந்தவன். காதல் கதைகள், குடும்ப நிகழ்ச்சிகள் கணவன் - மனைவி பிணக்கு, ஊடல் ஆகிய போன்ற செய்திகளைக் கேட்பதில் அவனுக்கு ஆவல் அதிகம். சுவையான பாடல்களைத் தானே புனைந்து பாடுவான். இளைஞர்களிடையே இருந்து அவர்கள் பேசுவதைக் கேட்பதில் தான் அவனுக்கு மனநிறைவு. அதனால் வீரமாதேவியைப் பற்றி அறிவதில் அவன் ஆவல் கொண்டான்.

எவ்வளவு காத தொலைவு பயணம் செய்தாலும் களைப்படையாத இராசேந்திரசோழ தேவர் இரண்டு பகல் பயணம் செய்தவுடனே சற்று இளைப்பாற விரும்பினார். மலையடிவாரத்திலுள்ள ஒரு சிற்றூரில் தங்கினார்.

படைகளின் ஒரு பகுதித் தலைவர் அருண்மொழி, அரசரைப் பார்க்க விரைந்து வந்தான். அவனிடமிருந்த பரபரப்பை அரசர் நொடியில் அறிந்தார். அவன் கரத்தில் பட்டுத் துணியால் சுற்றப்பட்ட ஓலைகள் இருந்தன. அதை அரசரிடம் நீட்டிய அருண்மொழி “இவை நம் படை வீரனொருவனிடமிருந்தன” என்றான்.

பழையாறையிலிருந்து பட்டோலைப் பெருமான் அனுப்பிய செய்திகள் நிறைந்த ஓலை அவை. அவர் முன்பே திட்டமிட்டிருந்தபடி வாரம் ஓர் ஒற்றன் செய்தியை எடுத்துக் கொண்டு, அரசர் இருக்குமிடம்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வரவேண்டும். பல வாரங்கள் கடந்தும் தஞ்சையினின்றோ, பழையாறையினிற்றோ எந்தவிதத் தகவலும் வந்து சேரவில்லை என்பதை அறிந்து அரசர் பெரிதும் கவலை கொண்டிருந்தார். இரண்டு நாள்களுக்கு முன்பு, வீரமாதேவியே நேரில் வந்து உரையாடியது போன்ற உணர்வினால் பெரிதும் மனம் பாதிக்கப்பட்டிருந்த இராசேந்திரன் பத்துக்கும் மேற்பட்ட ஓலைகளைக் கண்டவுடன் ஒரு கணம் சீற்றமடைந்தார். பிறகு தம்மை அமைதிப்படுத்திக் கொண்டு அருண்மொழியை நோக்கிப் பார்வையாலேயே வினவினார்.

“நம் படை வீரர்களுள் ரங்கன், சங்கன் என்று இருவர். நல்லவர்கள் போல் நடிப்பார்கள்.”

“சிரிக்கப் சிரிக்கப் பேசுவார்களே அவர்களா?” என்று அரசர் கேட்டவுடன், நுணுக்கமான சிறு செய்திகளைக்கூட அரசர் அறிந்து வைத்திருக்கிறாரே என்று வியப்புடன் அருண்மொழி அரசரைப் பார்த்தான்.

உள்ளே கோபம் பொங்கிக் கொண்டிருந்தாலும் உதட்டில் புன்னகையுடன் “நம் வீரர்களின் ஒவ்வொரு நடவடிக்கையும் நான் அறிவேன். உம்: மேலே செய்திகளைச் சொல்லு. இவ்வளவு வாரங்கள் இந்த ஓலைகள் எங்கே இருந்தன? அவற்றைக் கொண்டு வந்த ஒற்றர்கள் எங்கே?”

அருண்மொழி திகைத்தான் சங்கனிடமிருந்து ஓலைகளைப் பறித்து வந்தானே தவிர, அதைக் கொண்டு வந்தவர்கள் என்ன ஆனார்கள் என்பதை விசாரிக்க மறந்தான். அல்லது அப்போது தோன்றவில்லை.

“இந்த ஓலைகளைப் படித்து முடிப்பதற்குள் செய்தி கொண்டு வந்தவர்களைத் தெரிந்து வா. படைத்தலைவன் ஆற்றல் மிக்கவராய் இருக்க வேண்டும். ஆற்றல் வீரத்தில் மட்டுமன்று: அறிவிலும்” என்று அரசர் சொன்னவுடன் நொடியில் கூனிக் குறுகிவிட்டான் அருண்மொழி.

இராசேந்திரன் ஒவ்வோர் ஓலை மடலாகக் கவனத்துடன் படித்தார். இடையே ஓர் ஓலை, வீரமாதேவியிடமிருந்து வந்திருந்தது, ஓலை நறுக்கில் எழுத்தாணியால் அவள் முத்து முத்தாக எழுதியிருந்தாள் சில வரிகள் மட்டுமே ஆயினும் அவை ஆயிரம் செய்திகளைத் தெரிவித்தன. வீரமாதேவியிடமிருந்து வந்த ஓலையைத் தவிர மற்ற ஓலைகளைப் படிக்கலானார்.

மதுரையில், சோழநாட்டின் சார்பில் அரசப் பிரதிநிதியாக இருந்த

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சுந்தரனைப் பற்றிய செய்தியை ஒரு மடல் விவரித்தது. வடக்கே சோழப் படைகள் சென்றிருப்பதால், தெற்கே மதுரையில் கிளர்ச்சி செய்யலாம் என்று எண்ணிய பாண்டிய நாட்டுப் புரட்சிக் காரர்கள் கலகம் செய்ய முற்பட்டிருப்பதை ஒரு மடல் விவரித்தது.

தந்தையுடன் கங்கை நதிப்பயணத்தில் சேர்ந்து வராமல் தஞ்சையில் உடல்நலக் குறைவால் தங்கிவிட்ட இராசராசனின் மூத்த இளவரசன் இராசாதிராசன் மதுரைக்கு விரைந்ததை மடல் விவரித்தது.

பழையாறையில், அரசி பஞ்சவன் மாதேவிக்கும் மற்றோர் இளவரசன் ஆதித்தனுக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டு இருவரும் நேர்விரோதமாக உத்தரவுகளை வெளியிட்டு வருவதாக ஒரு செய்தி.

ஏரி வெட்டுதல், காட்டை அழிக்கும் பணி மிக விரைவாக நடைபெறுகின்றன.

ஈழத்துப் போரிலும் மற்ற போர்களிலும் சிறைபிடிக்கப் பட்டவர்களைக் கொண்டு அந்த வேலைகள் நடைபெறுகின்றன. மதுரையிலிருந்து சிற்பிகளை அழைத்து வர அனுப்பப்பட்ட செய்தி அங்கு சென்றடையவில்லை என்று ஒரு செய்தி.

கோயில் திருப்பணிக்கு வேண்டிய பாறைகள், பாண்டிய நாட்டினின்றும், தொண்டை மண்டலத்தினின்றும் கொண்டுவர இளவரசர் ஆதித்தன் இட்ட உத்தரவை அரசியார் தடுத்துவிட்டார் என்ற செய்தி.

சிற்பி மாணிக்க சேகரன் உடல் நலம் குன்றியதால் பழையாறைக்கு அழைத்து வரப்பட்டதாகவும், அவனை மிக நேசிக்கும் அவன் காதலியை அவன் அருகே இருக்க வைக்க முயற்சி செய்யப்படுவதாகவும் ஒரு தகவல்.

மற்றுமோர் ஓலை – கல்விக் கூடங்கள் பண்டிதர்களுக்கு உதவி: வருவாய்க் கணக்கைத் தெரிவித்திருந்தது.

வீரமாதேவியிடமிருந்து வந்திருந்த ஓலையைக் கடைசியாகப் படிக்க எண்ணிய இராசேந்திரன் சிறிது நேரம் மௌனமாக இருந்தார்.

‘சோழ நாட்டுப் பேரரசியாக விளங்கினாள் உலக மாதேவி. அவள் மறைவிற்குப் பிறகு பஞ்சவன் மாதேவி அந்த இடத்தை ஏற்றாள். அவள் அதிர்ஷ்டக்காரி. அரியணையில் என்னிடம் சரிசமமாக அமரும் வாய்ப்பு பஞ்சவன் மாதேவிக்கே கிடைத்தது. பழுவேட்டரையர் குலத்திற்கு இதைவிடப் பெரிய பரிசு வேறெதுவும் கிடைக்க வாய்ப்பில்லை.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

ஆனால், அழகிலும் குணத்திலும் சிறந்திருந்த பஞ்சவன் மாதேவியின் போக்கில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. வயது முதிர்ந்த நிலையில் வயதுக்கேற்ற அனுபவம், அவளுள் எழுந்த பொறாமையை ஏன் தடுக்கவில்லை? வீரமாதேவி இளவரசியாக வந்து சேர்ந்தவுடனேயே பஞ்சவன்மாதேவியிடம் பெரும் மாறுதல். அவளுள்ளத்தே ஏற்பட்ட பொறாமைத் தீ நல்ல காரியங்களுக்குத் தடையாக இருக்கிறது. பெரிய கோயில் கட்டுவது என்ற இலட்சியத்திற்கு வடிவமைத்துக் கொடுக்கும் ஆற்றல்மிக்க வீரமாதேவியின் பணிகளுக்குப் பஞ்சவன்மாதேவி இடையூறாக விளங்குகிறாள் என்பதை அறியும்போது இராசேந்திரனுக்குக் கவலை இதயத்தைக் கணக்கச் செய்தது.

கோயிலின் குடமுழுக்குக்குக் கங்கை நீரைக் கொண்டு வரவே இந்தக் கங்கை யாத்திரை. கோயில் பணி நடைபெறாவிடில் எதற்காக இந்தப் பயணம்? உடனே, தலைநகரத்திற்குத் திரும்பி விடுவோம் என்று எண்ணினார் இராசேந்திரன்.

இதுவரை எடுத்த காரியம் யாவிலும் வெற்றி கண்டு வந்த தனக்கு இப்படி ஓர் ஏமாற்றமா?

இதுவரை கவலை என்பதே அறியாத இராசேந்திரன் மனத்தில் பலவித எண்ணங்கள் கூத்தாடின. நெற்றிப் பொட்டைப் பிடித்துக் கொண்டார். பழையாறையில் குழப்பம் இருக்கும் போது நாம் இங்கே ஏனிருக்க வேண்டும் என்று கவலை கொண்ட அவர் எதிரே வீரமாதேவி எழுதிய மடல் இருந்தது. அந்த ஓலையை எடுத்துப் படிக்கலானார்.

ஓலையைப் படிக்கும்போது தன் முகத்தில் ஏற்படும் மாறுதலை, வியப்பை, கவலையை படைத்தலைவன் கவனிக்கிறானா என்று ஒருமுறை அவனை நோக்கினார். அவன் வேறு எங்கோ பார்த்திருந்தான்.

ஓலையைப் படித்து முடித்தவுடன் அவர் ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்.

## 65

# பயணத்தில் மாற்றம்

அருண்மொழியை இராசேந்திரன் ஒரு கணம் கூர்ந்து நோக்கினார்.

"அருண்மொழி! நீயும் அரையனும் பகைவர் படைகளை எளிதில்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வென்று விடுவீர்களல்லவா?” என்று கேட்டார்.

“ஏன் இவ்வாறு கேட்கிறீர்கள்? சோழப் படைகள் தோற்றோடியது என்ற வரலாறே கிடையாதே?” அருண்மொழி புரிந்து கொள்ள முடியாமல் நின்றான்.

“சாளுக்கியப் படைகள் மிகக் கடுமையாக நம்மை எதிர்க்கப் போகிறார்கள். அதனால் அஞ்சிவிட மாட்டீர்களே?” என்று கேட்டார் அரசர்.

சிங்கம் பிடரியைச் சிலிர்ப்பதுபோல் அருண்மொழி உடல் ஒருகணம் சிலிர்த்தது.

“புறப்பட்டுப் பல நாள்களாகியும் பகைவர்களுடன் நேருக்கு நேர் சந்தித்துப் போராட வாய்ப்புக் கிடைக்கவில்யே என்று கவலையுடன் இருக்கிறேன். எனக்கு அச்சம் ஏது? சக்கரவர்த்திகளே! யுத்த பூமியில் என் திறமையைக் காட்ட எங்கே மறுத்து விடுவீர்களோ என்று கவலையுடன் இருந்தேன். கட்டளையிடுங்கள்…” என்று பணிவுடன் கூறினான் படைத்தலைவன் அருண்மொழி.

“உங்கள் இருவரைப் பற்றிக் கேட்டேன்: நீ உன்னைப் பற்றி மட்டுமே உறுதி கூறுகிறாய். உன் நண்பன் அரையனைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. நீயும் அவனும் கலந்துபேசி, போர் முறைகளை வகுக்க வேண்டும். சோழநாட்டிற்கு இது ஒரு சோதனைக் காலம். உங்கள் இருவருக்குள்ளும் பொறாமை ஏற்படக் கூடாது. கருத்து வேற்றுமை ஏற்படக் கூடாது. படை வீரர்கள் ஒற்றுமையுடன் இல்லாவிடில் குழப்பம்தான் மிஞ்சும்” எனக் கூறிவிட்டு இராசேந்திரன் அருண்மொழியை ஏறிட்டுப் பார்த்தார்.

அவன் கண்கள் கலங்கியிருந்தன. மற்றொரு படைத்தலைவன் அரையனுடன் தனக்கு எந்தவிதப் பூசலும் இல்லாதபோது அரசர் இப்படி ஏன் சொல்கிறார்? தன்னைப் பற்றித் தவறாக அரசரிடம் யார் தெரிவிக்கிறார்கள்? வேறு யார் சொல்வார்? எல்லாம் அரையனாகத்தான் இருக்க வேண்டும்.

ஏன் அரையன் மீது நாம் சந்தேகப்படுகிறோம்? அவனிடம் என் உள் மனத்திற்குள்ளே பொறாமை இருப்பது எனக்கே தெரியவில்லையா?

தன் மௌனத்தை அதிக நேரம் நீடிக்கவிடாமல்,“சக்கரவர்த்திகளே! எங்களிடம் எந்தவித மன வேற்றுமையுமில்லை. படை வீரர்களுள் சில

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

ஒற்றர்கள் இருப்பதாகத் தாங்கள் அறிந்திருக்கிறீர்களே - இப்படியொரு வதந்தியைப் பரப்புவது அவர்களுடைய கை வரிசையாகத்தான் இருக்க வேண்டும். செய்திகளைப் பகைவர்களுக்குத் தெரிவிப்பது மட்டும் ஒற்றர்களின் பணியன்று. நட்பில் பிரினை செய்து பலவீனப் படுத்துவதும் அவர்கள் பணி போலிருக்கிறது. நாங்கள் இரு கண்களென இயங்குவதாக உறுதி கூறுகிறேன். கட்டளையிடுங்கள்" என அருண்மொழி நிமிர்ந்து நின்று பேசினான்.

"நீங்கள் இருவரும், படைகளை நடத்திக் கொண்டு முன்னேறுகிறீர்கள். நான் தலைநகரம் திரும்புகிறேன். அங்கிருந்து கிடைத்து வரும் செய்திகள் கவலையை அளிக்கின்றன" என்றார் இராசேந்திரன்.

அருண்மொழி ஒருகணம் திகைத்தான் - என்ன சொல்வதென்று. "சரி, நாங்கள் செல்கிறோம்: நீங்கள் திரும்பிச் செல்லுங்கள்" என்று சொல்வதா, என்ன விடை பகர்வது என்று அவனுக்குப் புரியவில்லை.

"நான் திரும்பும் செய்தி யாருக்கும் தெரியவேண்டாம். கிருஷ்ணை நதிக் கரை வரை ஒரே மூச்சாகப் பயணப்படுங்கள்" என்றார் சக்கரவர்த்தி.

சோழப்படைகள் புதிய உற்சாகத்துடன் அணிவகுத்துச் சென்றன. யானைப் படைகள், குதிரைப் படைகள், தேர்ப்படைகள் என, அவை கம்பீரமாகச் சென்றன.

"சக்கரவர்த்தி நம்முடன் வரவில்லையாம். பழையாறைக்குத் திரும்புகிறாராம்" என்ற செய்தி காற்றினும் அதிக வேகத்தில் விரைந்து பரவியது. அதைவிட வேகமாக ரங்கனும் சங்கனும் செய்தியைப் பழையாறைக்கு அனுப்பினர். அவர்களை விட்டு விட்டு சோழப்படைகள் முன்னேறின. இராசேந்திரன் தங்கியிருந்த பாடிவீட்டுப் படைகளுடன் ரங்கனும் சங்கனும் தங்கிவிட்டனர்.

"சங்கா! நாம் சோழப்படைகளுடனே சென்றிருக்கலாம். அரசருடன் மீண்டும் பழையாறைக்குச் செல்வதால் என்ன பயன்?" என்று சங்கன் கேட்டான்.

"இரண்டுவித ஆதாயங்கள். தீர்த்த யாத்திரை என்று தொடங்கிப் போரிடத் திட்டமிட்டுள்ளார் சோழ மன்னர். யுத்த பூமியை மிதிக்காமல் பத்திரமாக பழையாறை திரும்புவது ஒன்று. மற்றொன்று சொந்த ஊரிலே சகல சௌபாக்கியங்களுடன் மீதி நாள்களைக் கழிப்பது" என்றான் ரங்கன்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“கிராமத்தில் தங்கியிருந்தால் நம் பிழைப்பு நடந்துவிடுமா? செய்திகளைப் சேகரித்துப் பாண்டிய நாட்டிற்கு அனுப்பினால்தானே பொன்னும் பொருளும் கிடைக்கும்?” சங்கன் கவலைப்பட்டான்.

“அப்படிச் சொல்லாதே. அங்கேயும் பிழைப்பு இருக்கிறது” ரங்கன் கூறினான்.

“எப்படி?”

“அரசியாருக்கும் இளவரசருக்கும்இடையே தூது போய்ப் பொருளீட்டலாம்.”

“எப்படி?”

“அங்கே குடும்பச் சண்டை வலுத்திருக்கிறது. அரச குடும்பத்திற்குள் அதிகாரப் போட்டி ஏற்பட்டிருக்கிறது. நாமும் நம்மால் இயன்றளவு தூபமிடுவோம்.”

“அவர்கள் சண்டை வலுப்பதால் நமக்கென்ன லாபம்?”

“ஒவ்வொன்றையும் உனக்கு விளக்கிச் சொல்ல எனக்குச் சக்தியில்லை. சோழர்களின் பலவீனம்,பாண்டியர்களுக்குத் தனிப்பலம். நாம் சாளுக்கியர்களிடமும் பழகுகிறோம். சொல்லிவருவோம். நமக்குச் சேரவேண்டிய பொன்னும் பொருளும் கூடுதலாகக் கிடைக்கும்.”

“எந்த நாட்டில் சென்று கடைசிக் காலத்தை நிம்மியாகக் கழிப்பது என்பதை முடிவு செய்து கொள்ள வேண்டும்.”

“எனக்கென்னவோ பயமாயிருக்கிறது. நம்முடைய நடவடிக்கைகள் வெளிப்பட்டு விட்டால், கடைசிக் காலம் உடனே வந்துவிடும் என்று தோன்றுகிறது.”

“அடப் பைத்தியமே! அதுவரையில் நாம் இருந்த இடத்திலிருப்போமா? சோழ சக்கரவர்த்திகள் பழையாறை நோக்கிப் புறப்படும்போது ஒருவருமறியாமல் நாம் நழுவி விடுவோம்.”

“எப்படி?”

“பழையாறைக்குச் செல்லும் முன்பு அரசர் காளத்திக்குச் செல்லத் திட்டமிட்டிருக்கிறார். பிறகு அருகே உள்ள வேங்கடவரைத் தரிசிக்கச் செல்வார். மலை ஏறிச் செல்லும்போது நாம் தப்பி விடுவோம்.”

“சரியானபடி சிக்கிக் கொண்டால் மலையிலிருந்து உருட்டி

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

விடுவார்கள்.”

சங்கன், ரங்கன் இருவருடைய பேச்சு நீடித்தது. பழையாறையை நோக்கித் திரும்பிச் செல்லும்போது சக்கரவர்த்தியின் கண்களில் படாமல் தப்புவது எப்படி என்பதைப் பற்றிப்பலமான யோசனையில் இருவரும் ஆழ்ந்திருந்தனர்.

அவர்களுக்கு அதிகக் கவலை வைக்காது மறுநாள் காலைப் பொழுது புலர்ந்தது. இரவு நெடுநேரம் விழித்திருந்ததால், காலைப் பொழுது விடிந்தும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள். கண் விழித்தபோது, தங்கியிருந்த இடத்தில் யாருமில்லை. அரசருடைய பரிவாரங்கள் அங்கில்லை. நடுநிசிக்கு மேல் சக்கரவர்த்திகள் திடீரென முடிவெடுத்தார். சக்கரவர்த்திகளும் மற்றும் அவருடைய உடன் கூட்டத்தாரும் புறப்பட்டனர். பழையாறை நோக்கி அவர்கள் செல்லவில்லை. மீண்டும் வடதிசை நோக்கிச் சென்றனர். ஆட்சிச் செயல்பாடுகளில் திடீரென முடிவெடுப்பது அவர் வழக்கம். ஆனால் அந்த முடிவு சரியானதாக இருக்கும்.

இதுபோல் திடீரென முடிவை மாற்றியதில்லை. தன் முடிவை எண்ணி இராசேந்திரனுக்கு வியப்பாகவே இருந்தது.

வீரமாதேவியின் சுருக்கமான ஓலையைப் படித்தவுடன், பழையாறையில் என்ன நடக்கிறது என்பதைப் புரிந்து கொண்டார். அங்கே தான் இருந்தால்தாம் சிக்கல்களைத் தவிர்க்கலாம். அதனால் பரிவாரங்களுடன் பழையாறை செல்வது என்று முடிவெடுத்தார்.

படைவீரர்கள் புறப்பட்டுச் சென்ற பின் வீரமாதேவியின் ஓலையை மீண்டும் ஒருமுறை படித்தார்.

எழுத்தாணி கொண்டு பனை ஓலையில் அவள் முத்துக் கோத்ததுபோல் எழுதியிருந்தாள். தெளிவாக இதயத்தைப் புலப்படுத்தியிருந்தாள். யார் மீதும் குற்றம் சுமத்தவில்லை. குறை காணவில்லை. பிரிவின் வேதனை ஓரிரு இடங்களில் தெரிந்தது. பஞ்சவன் மாதேவிக்குத் தன்மீது ஏற்பட்டிருப்பது பொறாமையா, கோபமா என்று புரியவில்லை: அதனால் கோயில் கட்டுவதற்கான கருங்கற்கள் வருவது தடுக்கப்படுகிறது. வனப்பகுதியிலுள்ள மரங்களை வெட்டக் கூடாது என்று அதிகாரிகள் தடுக்கின்றனர். சிற்பப் பணிக்கு வரும் சிற்பிகள் வரும் வழியிலேயே தடுக்கப்படுகின்றனர். ஆனால் ஏரி வெட்டும் பணி மட்டும் எந்தவித இடையூறுமின்றி நடைபெறத் தொடங்கிவிட்டது என்று தெரிவித்திருந்தாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

மற்றொரு செய்தி இராசேந்திரனுக்குச் சற்று அதிர்ச்சியைத் தந்தது.

“தங்கள் உடன்பிறவாச் சகோதரி பூங்கொடி சில நாள்களாக ஒருவருடனும் பேசுவதில்லை. நடன வகுப்புகள் நடைபெறவில்லை. பழையாறைக்குச் சென்று விட்டாள். அவளுக்கு உடல் நலம் குன்றியிருப்பதாகத் தகவல். இளவரசர் ஆதித்தனின் ஆதரவு இருப்பதால் நான் துணிவுடன் இருக்கிறேன். திருப்பணிகள் நடைபெறாமல் தடுக்கப்படுவதும் அதிக நாள்கள் நீடிக்காது என்று எனக்குத் தெரியும். சிற்பியின் நடல்நலத்தைக் கவனிக்க மருத்துவர்கள் வராமல் தடுக்கப்படுகிறார்கள்.

“எல்லாவற்றையும்விட எனக்கு அதிர்ச்சி தருவது என் உடன் பிறந்தாருக்கு என்மீது ஏற்பட்டிருக்கும் கோபம். அது ஏன், எதனால் ஏற்பட்டது என்று என்னால் உணர முடியவில்லை.

“எப்போதும் வாய் நிறைய ‘வீரம்மா, வீரம்மா’ என்று என்னை அழைக்கும் என் அண்ணன்,‘இளவரசி அவர்களே!’ என்றும்,‘வீரமாதேவி அவர்களே!’ என்றும் அழைப்பதிலிருந்து அவருக்கு என்மீது ஏதோ ஒரு விதத்தில் மனத்தாங்கல் ஏற்பட்டிருப்பது புரிகிறது. இறைவன் அளித்திருக்கும் காட்டை அழிக்குமாறு தங்களுக்கு நான் தவறான யோசனை கூறியுள்ளேனாம். தஞ்சைபுரியிலிருந்து தலைநகரத்தைக் காட்டுப் பிரதேசத்திற்கு மாற்றுமாறு, தங்களுக்கு திட்டமிட்டுத் தந்தது நான்தானாம். இன்னும் என்னவெல்லாமோ கூறி என் மனத்தை நோகச் செய்துவிட்டார்.

“இருந்தாலும் நீங்கள் கவலைப்படாமல் கங்கா யாத்திரையை மேற்கொண்டு புனித நீராடித் திரும்பி வாருங்கள்.

“கங்கையைக் கொண்டு வந்து, நாம் கட்டி முடித்திருக்கும் கோயிலில் வீற்றிருக்கும் பெருவுடையாருக்குப் புனித நீர்த் திருமுழுக்காட்டி பெரிய விமானத்தின் கும்பத்திற்குக் கங்கை நீரால் அபிடேகம் செய்து, ஏரியில் கங்கை நீரை நிரப்பி, வெள்ளி விழா கொண்டாடிய பிறகு நீங்களும் நானும் மட்டும் கங்கையில் புனித நீராடி விட்டுத் திரும்ப வேண்டும்.

“கங்கையை இந்தப் பூமிக்குக் கொண்டு வந்த பகீரதனைப் போல் நீங்கள் கலியுகப் பகீரதனாக மாறும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். இப்படி நான் எழுதுவதைப் படித்தவுடன் நீங்கள் என்ன முடிவு எடுத்திருப்பீர்கள் என்று நான் கற்பனை செய்கிறேன். சொல்லட்டுமா?

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

‘கங்கை நீரைத் தேக்கி வைக்க ஏரி வெட்டப்பட்டிருக்கும். கோயில் குடமுழுக்குக்கு ஆயத்தமாகக் கோயில் பணி முடிந்திருக்கும். என் அருமை வீரமாதேவி எடுத்ததை முடிக்கும் ஆற்றல் படைத்தவள்’ என்றுதானே நினைத்திருப்பீர்கள்? என் எண்ணம் சரிதானே? உங்கள் விழிகளில் ஏற்படும் காதல் ஒளியைக் காண்கிறேன். இதழ்களில் மிளிரும் புன்முறுவலைக் காண்கிறேன். வழக்கம்போல் என்னை நெருங்கி நீங்கள்... அதற்குமேல் எழுதமாட்டேன். ஏன் என்றால் என் நினைவிருந்தால் நீங்கள் பயணத்தைப் பாதியில் நிறுத்தித் திரும்பிவிடக் கூடும். எனக்கோ, நீங்கள் என் அருகே இருப்பது போன்ற உணர்வு. - இதயத்தில் அழியா இடம் பெற்ற வீரமாதேவி.”

இராசேந்திரன் ஓலையை மீண்டும் ஒருமுறை படித்தார். கண்களில் ஒத்திக் கொண்டார். மார்புடன் அணைத்துக் கொண்டார்.

பாதிசாமம் நெருங்கியதால் விளக்கொளி குறைந்தது, விளக்கில் எண்ணெய் விட வந்த பணியாள் சற்றுத் தொலைவில் நின்று அரசரின் செய்கையைக் கவனித்துக் கொண்டிருந்தான். இருளை ஒட்டி முகத்திற்கு மட்டும் ஒளியைத் தந்து கொண்டிருந்த அந்த அகல் விளக்கொளியில் அரசர் முகத்தில் இப்போது புத்துணர்வு ஏற்பட்டிருப்பதை உணர்ந்தான்.

விளக்கில் எண்ணெயிடத் தான் வந்திருப்பதை சிறு ஓசையால் மெல்லத் தெரிவித்தவுடன் இராசேந்திரன் நிமிர்ந்து பார்த்தார். “எண்ணெய் விட்டபிறகு, திருமந்திர ஓலை நாயகத்தை உடனே வரச்சொல்” என்றார். காவலரிடம் மட்டுமே சொல்லப்பட வேண்டிய அந்தக் கட்டளையைத் தன்னிடம் சொல்வதால் செய்வதறியாது திகைத்த அவன் உடனே விரைந்தான். நன்றாக உறங்கிக் கொண்டிருந்த திருமந்திர ஓலை நாயகம் திடுக்கிட்டு விழித்தெழுந்து விரைந்து வந்தார்.

“பழையாறையிலிருந்து அரசி பஞ்சவன் மாதேவியை இளவரசி அரிந்தவன் மாதேவியையும் உடனே இங்கு அழைத்து வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள். அவர்களுக்குத் துணையாக வீரமாதேவியின் சகோதரன் முத்துக் குமரனைப் படைவீரர்கள் நூற்றுவரோடு வருமாறு பணியுங்கள். வழியில் பயணம் எவ்வித இடையூறின்றி அமைய ஏற்பாடு செய்யுங்கள். விடிந்தவுடன் நாம் கிருஷ்ணா நதிக்கரையை நோக்கிச் சென்று அங்கே தங்குகிறோம். பழையாறையிலிருந்து புறப்பட்டு எவ்வளவு விரைவாக அவர்கள் வர முடியுமோ அவர்கள் இங்கு வந்து சேரட்டும்” என்று கட்டளை பிறப்பித்தார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

மன்னர் கட்டளைக்கு மறுபேச்சு பேச முடியுமா?

66

# அதென்ன முடிவு?

சிற்பி மாணிக்க சேகரன் நோய்வாய்ப்பட்டு பழையாறையில் அரச மருத்துவரின் கண்காணிப்பில், ஆதூர சாலையில் படுத்திருந்தான்.

அவன் அருகே அவனைக் கவனிக்க, ஊதியம் பெற்ற பணியாளர்கள் இருந்தனர். அவன் உற்றார் உறவினர் அவன் அருகிலில்லை. தனக்கு அப்படி யாருமே இல்லை என்று அவனே சொன்னான். “எனக்கென்று பரிதாபப்பட ஒரு ஜீவன் உண்டு. அதுவும் இங்கில்லை” என்று அவன் முணுமுணுத்தான். மதுரையில் சிற்பத் திருப்பணி செய்யச் சென்ற குழுவினருள் அவனுடைய உறவினர் சிலர் இருந்தனர். அவனுக்கு மிக நெருங்கியவர், வேண்டியவர் என்று சொல்வதற்கு யாராவது இருக்கிறார்களா என்றால் - அவன் குறிப்பிட்டது போல் அவன் மனத்தைக் கவர்ந்த குமுதத்தைத்தான் சொல்லலாம்.

அவள் இன்னும் பழையாறைக்கு வந்து சேரவில்லை. அவனைத் தேடிப் புறப்பட்டவள் எங்கோ தடைப்பட்டு நின்றிருக்கிறாள். ஒவ்வொரு நாளும் மாணிக்க சேகரன் அவள் வருகையை எதிர்நோக்கியிருந்தான். எதிர்பார்ப்பினால் அவன் மனம் சில நேரங்களில் சஞ்சலமடையும், உற்சாகம் குறையும் என்றாலும் அவனுடைய உள்ளத்தில் பொங்கி வழிந்து கொண்டிருந்த ஆர்வம் அவன் சோர்வைப் போக்கி விடும். சிவபெருமானும், உமையும், திருமாலும், திருமகளும், விநாயகரும், ஆறுமுகக் கடவுளும், சூரியனும், பைரவனும், பிக்ஷாடனரும் அவன் மனக்கண் முன் எப்போதும் நின்று புன்முறுவல் பூத்தவாறிருப்பார்கள்.

சில வேளைகளில் தன் எதிரே யார் இருக்கிறார்கள் என்றே அவனுக்குத் தெரியாது. புதிதாகச் சிற்பம் பயில வந்திருக்கும் இளம் சிற்பிகள் அவன் இட்ட கட்டளையை நிறைவேற்றக் காத்திருப்பார்கள். சிற்பக் கலையைக் கற்றுத் தேர்ந்து அமர சிற்பங்களைப் படைக்க வேண்டும் என்ற இலட்சியத்துடன் வந்தவர்கள் அவன் எதிரே நிற்பார்கள். ஓலைச் சுவடியிலுள்ள சிற்ப சாத்திரத்தை ஒரு புறம் அமர்ந்து ஓர் இளம் சிற்பி மிகக் கவனத்துடன் படித்துக் கொண்டிருப்பான். வேற்று மொழியிலுள்ள நுணுக்கச் சொற்களின் உச்சரிப்பு மாறாமல் இருக்க, புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட எழுத்தின் வரிவடிவம் புரியாமல் சந்தேகம் கேட்க

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

ஓர் இளம் சிற்பி மாணிக்கசேகரன் அருகேமிகவும் அடக்கமாக நிற்பான். பாறைகளின் தன்மையைச் சோதித்து அவற்றைத் தலைகீழாகப் புரட்ட, பணியாளர்களின் உதவியைக் கேட்டுக் குரல் எழுப்புவான் ஒருவன்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பாறையில் சிற்பம் செதுக்கக் காவிக் கோடுகளையும் சுண்ணாம்புக் கோடுகளையும் இட்டு அளவு பார்ப்பான் ஒருவன். பதப்படுத்தப்பட்டு ஒன்று சேர்த்துத் தைக்கப்பட்ட இலைகளில் வரி வடிவமாக வரையப்பட்டிருக்கும் உருவங்களை ஒருமுறை கவனமாக மனத்தில் பதிய வைத்துக்கொள்வான் ஓர் இளஞ்சிற்பி.

சிற்ப நூலில், உருவாக்கப்பட வேண்டிய சிற்பங்களின் அங்க அளவுகளை விவரிக்கும் பாடல்களை, ஸம்ஸ்கிருத சுலோகங்களை இளம் சிற்பி ஒருவன் வாய்விட்டுப் படித்துக் கொண்டிருப்பான்.

சூழலைச் சிறப்புடையதாக்க இளஞ் சிற்பிகள் முனைந்து கொண்டிருந்தனர். பெரிய கோயில் ஒன்றையும் கோயில் சிற்பக் கூடங்களையும் அமைக்க அவர்கள் உற்சாகத்துடன் இயங்கிக் கொண்டிருந்தனர். இளம் வயதிலேயே கலாதேவியின் பூரண அருளையும் பெற்று விட்ட மாணிக்க சேகரனின் வழிகாட்டுதலுக்காக அங்கே சிற்பிகளின் படையே நின்று கொண்டிருந்தது. ஆனால் சில நாள்களாக அந்தக் கானகப் பகுதியில் சிற்பப் பணி தடைப்பட்டது.

ஒரு நாள் மாணிக்க சேகரனுக்குக் கடும் காய்ச்சல் ஏற்பட்டது. காட்டின் நடுவே சிகிச்சைக்கு வசதியில்லை. கை வைத்தியமாகச் சில மூலிகைகளைப் பிழிந்து சாறாக்கிக் கொடுத்தார்கள். பழையாறைக்கு அவனை அழைத்துச் செல்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதால், மாணிக்க சேகரன் பழையாறைக்குத் தக்க துணையுடன் அழைத்துச் செல்லப்பட்டான். அவனுடன் செல்ல வீரமாதேவி விரும்பினாள். ஆனால் தொடங்கப்பட்ட சிற்பப் பணிகளுக்கு இடையூறு ஏற்படும் என்பதால், அவள் பழையாறை செல்லும் முயற்சி கைவிடப்பட்டது. பஞ்சவன் மாதேவி இதை அறிந்து, மாணிக்க சேகரனுக்கு அரச மருத்துவர் சிகிச்சை அளிப்பதைத் தடை செய்ய முயன்றாள். ஆனால் இளவரசன் முயற்சியால் மாளிகை மருத்துவரிடம் மாணிக்கசேகரன் ஒப்படைக்கப்பட்டான்.

மாணிக்க சேகரன் பழையாறைக்குச் சென்ற பிறகு ஒருநாள் ஓர் இளஞ் சிற்பி விழிகளை மூடி மனத்தை ஒருமைப்படுத்தியவாறு அமர்ந்திருந்தான். அப்பொழுது மற்றொரு சிற்பி அப்பொழுதுதான் நீராடிவிட்டு ஈர ஆடையுடன் வந்து கொண்டிருந்தான்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“காய்ச்சல் எப்படி இருக்கிறது?” என்று மனத்தை ஒருமைப்படுத்த முயன்று கொண்டிருந்த சிற்பி அவனை நோக்கிக் கேட்டான்.

“காய்ச்சலைப் பார்த்தால் முடியுமா? இரண்டு நாள்களாக உளியைத் தொடாததால் மனத்தில் ஏற்பட்ட வேதனை சொல்ல முடியவில்லை.”

“ஏன் தொடவில்லை?”

“நீராடாமல் சிற்றுளியையும், சுத்தியலையும் நெருங்கக்கூடாது என்று குருநாதர் சொல்லியிருக்கிறார். ஏனெனில் தூய்மைதான் சிற்பக் கலைக்கு அடிப்படை இல்லையா? என்னால் சும்மாயிருக்க முடியவில்லை. அல்லித் தடாகத்திற்குச் சென்று இளம் சூடு குறையு முன்பே தொப்பென்று குதித்து மூழ்கி எழுந்து ஓடோடி வந்துவிட்டேன்” என்று கூறியவனை நோக்கி, மனத்தை ஒரு நிலையில் நிறுத்த முயன்று கொண்டிருந்த இளம் சிற்பி கேட்டான்.

“தூய்மை, உடலில் மட்டும் இருந்தால் போதுமா? மனத் தூய்மை எந்த நீரால் அமையும்?”

கேள்விக்குள் மறைந்திருந்த பொருளைப் புரிந்து கொண்ட சிற்பி கேட்டான்,“மனத்தில் மாசு இருப்பது முகத்தில் தெரிந்து விடும், மாசை உள்ளே மறைத்துக் கொண்டு சிறு பாறை அருகே கூடச் சிற்பப் பணியாற்ற நெருங்க முடியாது. தெரியுமா? சிற்பப் பணியிலீடுபட வேண்டுமென்றால் மனத்தில் தூண்டுதலொன்று ஏற்பட வேண்டும். மாசுள்ள மனத்தில் எந்த விதப் புத்துணர்வும் ஏற்படாது.”

இளஞ் சிற்பி நகைத்தான்.

“ஏன் சிரிக்கிறாய்?”

“நம் குருநாதர் எவ்வளவு திறமைசாலி தெரியுமா?”

“அதில் என்ன சந்தேகம்?”

“அவர், பாறைகளில் ஜால வித்தைகளைச் செய்கிறார் தெரியுமா?”

“ஆமாம், அவரிடம் சிற்பக் கலை கற்பதற்கென்றே பல காத தொலைவிலிருந்து வந்திருக்கிறோம் என்பதை மறந்துவிட்டாயா?”

“அதில் என்ன சந்தேகம்? அவருடைய மனத்தை நான் அறிவேன். அதில்... அதில்.... அதில்....”

“என்ன சொல்ல வருகிறாய்?அவர் மனம் மாசுபட்டிருக்கிறது என்றா?

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சுற்றி வளைக்காமல் பளிச்சென்று சொல்லி விடு. ஒளிவு மறைவு இல்லாமல் பேசப் பழகிக் கொள்."

"எல்லாருக்கும் தெரிந்த கதைதான். ஆனால் வெளியே சொல்லப் பயம்."

"உனக்குத் தெரியாதா? சில நாள்களாக அவர் பிரமை பிடித்தவர் போலிருக்கிறார். யாரையோ எதிர்பார்ப்பது போல் அவர் பார்வை குத்திட்டு நிற்கிறது. நான் கேட்டறிந்தவரை – அவருக்கு ஒரு காதலியாம். அவள் இவரை மறந்து விட்டாளா அல்லது இவர் அவளை மறந்து விட்டாரா தெரியவில்லை. ஆனால் இங்கு இவர் மனமாறுதலுக்கு வேறு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்கிறார்."

"அப்படி என்ன சூழ்நிலை?"

"உனக்குத் தெரியாதா? இங்கே கானகத்தில் ஓர் அழகிய பெண். அவளிடம் அவர் தன் மனத்தைப் பறிகொடுத்து விட்டார். மின்னல் வெட்டைப் போன்ற அவளுடைய பார்வை இவரை வெட்டி இழுக்கிறது. அவளும் இவரும் அப்படி என்னதான் நேரம் போவது தெரியாமல் பேசிக் கொள்வார்களோ?"

"அவர்கள் பேசிக் கொள்வதை உன்னிடம் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறாயா?"

"சொல்லாமலே எனக்குப் புரியாதா? நான் இப்போது உன்னிடம் சொல்ல வந்தது: மனத்தில் இப்படிப் பெரிய அழுக்கை வைத்துக் கொண்டு அவர் அற்புதச் சிற்பங்களைச் செதுக்குவது சரிதானா?"

இப்படிச் சொன்னவுடன். இளஞ் சிற்பி வாயடைத்துப் போனான். "சிவ சிவ" எனக் கூறிக் காதைப் பொத்திக் கொண்டு,"உன் மனத்தில்தான் பெரும் அழுக்கு. உன்னுடன் பேசிக் கொண்டிருந்தால் என் மனம் மாசு அடைந்துவிடும். பிறகு நான் உளியுடன் பாறைகளை நெருங்க முடியாது. போ, போ இங்கிருந்து போய்விடு. தகாத வார்த்தையெல்லாம் பேசாதே" என்றான் கடுமையாகப் பேசியவாறு.

அவனை அடிக்க வருவதுபோல் கையை ஓங்கியவனைப் பார்த்து இளஞ் சிற்பி நகைத்து,"உனக்கு ஏனப்பா கோபம் வருகிறது? நான் கண்டதைக் கேட்டதைச் சொல்கிறேன். ஒவ்வொரு சிற்பியின் மனக் கண் முன்னாலும் ஓர் அழகிய இளம் பெண் நடமாடிக் கொண்டிருப்பாள். ஓர் இலட்சியப் பெண் உருக் கொண்டிருப்பாள் என்பது உண்மைதானே! அவளுடைய எட்பூ நாசியையும், அகன்ற விழியையும், குமிழ்ச்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சிரிப்பையும், வில் புருவத்தையும், செங்கலச மார்புகளையும் ரசித்தவாறுதானே தன் படைப்புகளையும் உருவாக்குகிறான்? திருநாவுக்கரசர் பதிகத்தை அன்று நீ பாடினாய் - அந்தப் பாடல் வரிகள்…. கொவ்வைச் செவ்வாயில் குமிழ்ச் சிரிப்பும்…”

“ஏய், ஏய் - நாவுக்கரசர் பெண்ணையா வர்ணித்தார்? இறைவனின் திருவடியை மனக் கண்ணால் கண்டதைப் பாடல்களாகப் பாடினார்…. ‘குனித்த புருவமும், குமிழ் சிரிப்பும்’ என்றவுடன் உன் அத்தை மகள் நினைவுக்கு வந்துவிட்டாளா? வேண்டிய வரை மனத்தில் நினைத்துக் கொள்வதால் மனம் மாசுபடுமா?”

“உனக்கு உலகம் புரியவில்லை. நம் குருநாதர் நேரம் போவது தெரியாமல் அந்த மங்கை நல்லாளுடன் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தால் உனக்குத் தெரியும்.”

“இருக்கட்டுமே? ஒரு பெண்ணுடன் பேசிக் கொண்டிருப்பதால் மனத் தூய்மை கெட்டு விடுமா?”

“நெருங்கிப் பேசிப் பார்த்தால் தெரியும். எனக்கென்னவோ இந்தக் காட்டுப் பகுதியில் நடமாடும் பெண் தேவதைகளால் மனம் சஞ்சலமடைகிறது. நடனம் கற்றுக் கொள்ள வந்தார்களா? அல்லது திருமணம் புரிந்து கொள்ள மணாளனைத் தேட வந்தார்களா? ஊர் நினைவு வந்து விடுகிறது.”

“போ, போ…. நாச்சியார் கோயில் இங்கிருந்து அதிகத் தொலைவில் இல்லை. அங்கே உனக்காகக் காத்திருக்கும் அத்தை மகளை மணம் பேசி முடித்து விட்டு வா.”

“குருநாதர் அனுமதிக்க மாட்டார். தனக்கு மட்டும் தான் காதல் தாபம் ஏற்படும் என்பது அவர் எண்ணம். தன் காதலியைக் காணாத ஏக்கத்தை இங்கே சுற்றிச் சுற்றி வரும் மோகினியிடம் பேசிப் பழகுவதில் தீர்த்துக் கொள்கிறார்.”

“அடேய்! உனக்கு மோகினிப் பிசாசு பிடித்துவிட்டது. என்னிடம் பேசுவது போல் மற்றவர்களிடம் பேசாதே. நீ நினைப்பது போல் இந்தக் கானகத்தில் சுற்றிச் சுற்றி வருபவள் மோகினி அல்லள். அவள்தான் - அவள் தான்….” என்று சொல்ல முனைந்தவன் வாயடைத்துப் போனான். பேச்சு தடைப்பட்டது.

“சொல்லாமல் ஏன் தயங்குகிறாய்?” என்று மற்றவன் அவனை

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

உலுக்கினான். நிலைகுத்தி நின்ற பார்வையுடன் இருந்த அவன் தோளை உலுக்கி,“அவள்தான் என்றால் யார்? மோகினி என்றால் பாதம் பூமியில் பதிய வேண்டுமல்லவா? அதை நான் பார்த்து விடுகிறேன்” என்றவனிடம்,“திரும்பிப் பார்” என்று தடுமாறியவாறு கூறினார்.

வீரமாதேவி அங்கு நின்று கொண்டிருந்தாள். அவ்வளவுதான் - இரண்டு இளம் சிற்பிகளும் ஓட்டம் பிடித்தனர்.

அவர்கள் பேசியதன் இறுதிப் பகுதியை மட்டும் கேட்ட வீரமாதேவி, அவர்களிடம் முழுமையும் கேட்டறிய முற்படுவதற்குள் அவர்கள் ஓட்டம் பிடித்தது கண்டு மேலும் வியப்படைந்து, மாணிக்க சேகரனின் மனநிலையைப் பற்றிச் சிந்திக்கலானாள். அவனுடன் தான் பேசிக் கொண்டிருந்ததை முன்பு அரசர் தவறாக எடுத்துக் கொண்டது நியாயமே என்று எண்ணினாள்.

மாணிக்க சேகரனின் காதலி குமுதத்தைத் தேடிப் பிடித்து உடனே அவனிடம் சேர்க்க விரும்பினாள்.

தன் பணிகளில் அரசி குறுக்கீடு செய்வதை அரசருக்கு எழுதியனுப்பிய பிறகு வீரமாதேவி அமைதியாகச் சிந்தித்தாள்.

மாணிக்க சேகரன் உடல் நிலை முழுமையாகக் குணமடைய வேண்டும். காட்டுப் பகுதியைச் சீராக்க வேண்டும். வீடுகள் கடடப்பட வேண்டும். புதிய நீர் நிலை ஏற்படுத்த வேண்டும். கோயில் திருப்பணியை முழுமூச்சுடன் நிறைவேற்ற வேண்டும். இவ்வளவும் நிறைவேற சோழ அரசி தடையாக இருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம்? அரசிக்குச் சிவபக்தி இல்லையா? புதிதாகக் கோயில் கட்டுவதை ஏன் தடுக்கிறாள்? புதிய நகரம் உருவாகித் தன் கணவனுடைய இலட்சியத்தை நிறைவேற்ற வேண்டும் எனும் ஆவல் அவளுக்கு இல்லையா? புதிய நகரத்தில் கட்டப்படும் அரண்மனையின் புதிய மண்டபத்தில் புதிய அரியணையில் அரசருடன் அமர்ந்து புதிய மகுடாபிஷேகம் செய்துகொள்ளும் ஆசை அவளுக்கு இல்லையா? அந்த உரிமையை நிலை நாட்ட வேண்டும் என்ற துடிப்பு இல்லையா? ஒவ்வோர் ஆண்டும் கட்டுக்கடங்காமல் பெருக்கெடுத்தோடும் காவிரி வெள்ளத்து வடிகாலாக இருக்கும் கொள்ளிடத்தில் பாயும் நீரைத் தடுத்துத் தேக்க ஓர் ஏரி வெட்டினால் சோழ நாட்டிற்குத்தானே பெரும் பலன்? அதை நிறைவேற்றுவதால் தனக்குப் பெயரும் புகழும் ஏற்படும் என்ற நம்பிக்கை அரசிக்கு இல்லாதது ஏன்?

பெயர், புகழ், பெருமை – யாவும் அவளுக்குக் கிடைக்கும் என்றாலும்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அதைத் தடுக்கும் மற்றொன்று அவள் உள்ளத்திலிருக்கிறது. அதுதான் - அதுதான் பொறாமை. யார் மீது பொறாமை? வேறு யார் மீது இருக்க முடியும்? தன் மீதுதான். அப்பொழுதே புரிந்து விட்டது. அரசரிடமிருந்து தன்னைப் பிரித்து விட்டால் தான் சோழ நாட்டிற்கும் - சோழ மாமன்னன் இராசேந்திரனுக்கும் புகழ், பெயர், அழியாக் கீர்த்தி எல்லாம் ஏற்படக் கூடிய இந்தப் பணி நிறைவேறும். கோயில் கட்ட, ஏரி வெட்ட, நகரம் உருவாக்க வேறு எவரேனும் முன்வர மாட்டார்களா?

அங்கேயே மரத்தடியில் அமர்ந்து சிந்தித்தாள். மாணிக்கசேகரன் நோய்வாய்ப் பட்டதால் அரை குறையாக நின்று விட்ட சிற்பங்கள் ஒரு புறம். மரங்கள் வெட்டப்படுவது தடுக்கப்பட்டு நிறைவேறாமல் இருக்கும் காடு திருத்தும் பணி ஒரு புறம். காட்டை அழிக்கும் பணியால் கொடிய பாம்பு இனங்கள் இடம் பெயர்வதால் ஏற்பட்ட அச்சத்தால் நூற்றுக்கணக்கான மக்கள் தங்கள் உயிரைக் காத்துக் கொள்ள ஓடி வருவதால் அவ்வப்போது ஓலமிட்டு, தங்கள் கலைப் பணிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, கலைச் செல்வி பூங்கொடியுடன் நடனக் கூடத்தை விட்டுப் புறப்பட ஆயத்தமாகும் கலைக்கூடப் பரபரப்பு ஒரு பக்கம்.

பழையாறையில் இருந்து உணவுப் பொருள்கள் சரிவர வராததால், பணியாள்கள், பசியால் வாடி தன்னிடம் முறையிடும் கூக்குரல் ஒரு பக்கம். தன் பணிக்கு உதவியாக இருக்கும் இளவரசர் பல நாள்களாக அந்தப் பக்கம் வரவில்லை: காரணம் என்னவென்று தெரியவில்லை.

அரசருக்குச் செய்தி எடுத்துச் சென்றவர்கள் ஒவ்வொரு வராகத் திரும்பி வரும்போது ஒருவர் சொன்னார். “அரசர் கங்கைக் கரைக்குச் செல்லவில்லை. கிருஷ்ணா நதிக் கரையில் தங்கியிருக்கிறார்.”

‘அப்படியென்றால் கங்கைக் கரைக்கு அவர் எப்போது செல்லப் போகிறார்? எப்போது கங்கை நீர் வரப் போகிறது? இங்கே கோயில் கட்டும் பணி முடிவடைவதற்குப் போதிய அவகாசம் தரவேண்டும் என்பதற்காகக் காலம் தாழ்த்துகிறாரா?

தன் சகோதரன் கூறியதுபோல் நாம் அளவுக்கு மீறிய உரிமையை அரசரிடம் எடுத்துக் கொண்டு விட்டோமா? அரச குடும்பத்தில் தேவையற்ற கலக்கத்தை ஏற்படுத்தி விட்டோமா?’

வீரமாதேவி நேரம் போவது தெரியாமல் பல வித சிந்தனைகளில் ஆழ்ந்திருந்தாள். கடைசியாக ஒரு முடிவுக்கு வந்து விட்டாள். அதுதான் -

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பழையாறைக்குச் சென்று சிற்பி மாணிக்க சேகரனின் உடல் நலம் குறித்துக் கேட்டறிந்து, அவனுக்கு ஆறுதல் கூறிவிட்டு உடல் நலமடைந்தவுடன் சிற்பப் பணிகளைத் தொடருமாறு கூறிவிட்டு, சக்கரவர்த்தி தங்கியிருக்கும் கிருஷ்ணா நதிக் கரையை நோக்கிச் செல்வது. அங்கு அவரைச் சந்தித்துத் தன் முடிவைத் தெரிவிப்பது…

முடிவா? அதென்ன முடிவு? அவள் அப்படியும் ஒரு முடிவு செய்ய முடியுமா?

# 67

# சித்தரின் சித்தம்

இராசேந்திர சோழ தேவரின் பட்டத்தரசி, பஞ்சவன் மாதேவியின் கரத்தில், பட்டுத் துணியில் சுற்றப்பட்ட ஓலைகள் இருந்தன. அந்த ஓலைகளில் எழுதப்பட்டிருந்த செய்தியை மிகக் கவனத்துடன் அரசி படித்தாள். சற்றுத் தொலைவில் நின்றிருந்த ஒற்றர் படைத் தலைவர் அரசியார் என்ன சொல்லப் போகிறாரோ என்று எதிர்பார்த்துக் கவனத்துடன் பயபக்தியாக நின்று கொண்டிருந்தார். பயமும் மரியாதையும் கலந்த முகத்தில், சற்றுப் பெருமிதமும் கலந்திருந்தது.

வீரமாதேவியின்நடவடிக்கையைக் கண்காணிக்கும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. கானகத்தில் அவள் செய்யும் பணிகள், அவள் யாருடன் பேசுகிறாள், கோயில் பணிகளின் முன்னேற்றம் - ஆகிய எல்லாவற்றையும் கவனமாகக் குறித்து, அரசியிடம் தெரிவிப்பது அவர் பொறுப்பு.

அரசியாருக்கு அவர் தெரிவிப்பது மற்ற எவருக்கும் தெரியாது பார்த்துக் கொள்ளும் மிகப் பெரிய கடமையும் அவருக்கிருந்தது. ஒவ்வொரு நாளும் பழையாறையிலும், நாட்டிலும் நடைபெறும் முக்கியச் செய்திகள் வடக்கே சென்றிருக்கும் அரசருக்குத் தெரிவிக்கப்படும். அதற்கென்றே படை வீரர்கள் இருவர் இரு நாள்களுக்கு ஒருமுறை அரசரிருக்குமிடத்திற்குச் சென்று கொண்டிருந்தனர். அவர்கள் மூலம் வீரமாதேவியும் செய்தி அனுப்பி வந்தாள்.

அவள் அனுப்பும் செய்தியைத் தெரிந்து அரசியிடம் சொல்லும் பொறுப்பை ஒற்றர் படைத் தலைவர் ஏற்றிருந்தார். ஓலையைப் படித்துவிட்டு பஞ்சவன் மாதேவி கொடுத்து விடுவாள். வீரமாதேவியின்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

ஒவ்வோர் எழுத்தையும் படிக்கும்போது, பஞ்சவன் மாதேவிக்குச் சீற்றமும், எரிச்சலும், ஆத்திரமும் பொங்கும்.

அன்று ஒற்றர் படைத் தலைவர் கொண்டு வந்த தகவலைப் படித்தறிந்தவுடன் பஞ்சவன் மாதேவி வெகுண்டெழுந்தாள்.

“பழையாறையிலுள்ள ஆதூர சாலைக்கு வீரமாதேவி வந்து சென்ற செய்தி எனக்குத் தெரிவியல்லை. கருவூர்ச் சித்தரும் வந்திருக்கிறார். எனக்கு ஏன் தெரிவிக்கவில்லை?” கோபத்துடன் ஒற்றர் படைத் தலைவரைக் கேட்டாள்.

பழையாறைக்கு யார் வருகிறார்கள், யாரைச் சந்திக்கிறார்கள் என்பனவற்றை அறிந்து அரசியாரிடம் சொல்லும் பொறுப்பை அவர் ஏற்கவில்லை. எனவே என்ன சொல்வது என்று புரியாமல் கையைப் பிசைந்தார்.

“என்ன?”– பஞ்சவன் மாதேவியின் விழிகள் உருண்டன. நடக்காதது ஏதோ நடந்து விட்டதைப் போல் அவள் சீறினாள்.

ஒற்றர் படைத் தலைவர் மிகவும் மெல்லிய குரலில், பயத்துடன்,“மாளிகை மருத்துவரின் வீட்டைக் கண்காணிக்குமாறுஎனக்கு உத்தரவு இல்லை என்பதால், நான் ஒற்றர்களை அங்கே இருக்கச் செய்யவில்லை…” என்றான்.

“பழையாறைக்கு வீரமாதேவி வந்தது எப்படி தெரியாமல் போயிற்று? கானகப் பகுதியை விட்டு அவள் புறப்பட்டதைத் தெரிந்து கொண்டிருக்க வேண்டாமா? அது உங்கள் கடமையல்லவா?” அரசியின் ஆத்திரம் அதிகமாயிற்று.

அரசி கேட்பது நியாயம்தான். வீரமாதேவி சிற்பத் திருப்பணி நடைபெறும் இடத்தை விட்டுப் புறப்பட்டது நமக்குத் தெரியாமல் போனது எப்படி? தலைவர் கவலையடைந்தார்.

அவருடைய மௌனம் அரசியாரின் கோபத்தீயைக் கொழுந்து விட்டெரியச் செய்தது.

“அந்த மாய மோகினி பழையாறைக்கு வந்திருக்கிறாள். ஹூம்” என்று அரசி சீறினாள்.

மாய மோகினி என்று அவள் குறிப்பிடுவது வீரமாதேவியை.

“மாளிகை மருத்துவரின் ஆதூர சாலையில் சிற்பி மாணிக்க சேகரன்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கடும் காய்ச்சலுடன் கிடக்கிறான். அவனுக்குக் காய்ச்சல் வந்ததால் சிற்பப் பணிகள் தடைபட்டன. சிற்பிக்கு வந்திருக்கும் நோயைக் குணப்படுத்த வேண்டும் என்பதில் எமக்கும் அக்கறை உண்டு. ஆனால், சிற்பிக்கு உடல்நிலை சரியில்லாததால் தானே கோயில் திருப்பணி தடைப்பட்டது? வெளிப்படையாக நான் சொல்ல வேண்டுமா? சிற்பி பழையாறையில் எவ்வளவு நாள்கள் தங்கியிருக்கிறாரோ அவ்வளவுக்கு நல்லது. அவருடைய காதலியைப் பழையாறைக்கு வரவிடாமல் நீங்கள் தடுத்ததில் எனக்கு மகிழ்ச்சியே. ஆனால்....” என்று கூறி நிறுத்திய பஞ்சவன் மாதேவி, தன் கோபத்தைச் சற்றுத் தணித்து, அவரைச் சமாதானப்படுத்துபவள் போல், ஒற்றர் படைத் தலைவரைப் பெயர் சொல்லி விளித்து,“வீரம்மாளிடமிருந்து சக்கரவர்த்திகளுக்குச் செல்ல இருக்கும் இந்த முக்கிய ஓலையைக் கொண்டு வந்ததற்காக உங்களைப் பாராட்டுகிறோம். இந்த ஓலையை நான் பார்த்திராவிடில், பல முக்கியச் செய்திகளை நான் அறிந்து கொள்ள இயலாமல் போயிருக்கும். பல ரகசியச் செய்திகளை அறிந்திருந்தும் நீங்கள் இந்த ஓலையைக் கொண்டு வந்ததன் மூலம் பல முக்கிய முடிவுகளை நான் எடுக்குமாறு செய்து விட்டீர்கள். அதற்காகப் பாராட்ட வேண்டும்” என்றாள்.

ஒற்றர் படைத் தலைவர் அரசி பாராட்டியதற்காகவும் மகிழ்ந்து விடவில்லை. ஒரு முறை தன் வணக்கத்தைத் தெரிவிக்கும் முகமாக தலையைத் தாழ்த்தி நின்றார்.

பழையாறைக்கு விரைந்து வந்த வீரமாதேவி சிற்பியின் உடல்நிலையில் எவ்வித முன்னேற்றமும் இல்லை என்பதை அறிந்து செய்வதறியாது திகைத்தாள். பழையாறையை விட்டுச் சென்று பல மாதங்களானபடியால், இப்போது நகரத்தைப் பார்க்கும் போது புதிதாக இருந்தது. நாட்டு ஆட்சி முறை தொடர்பான அலுவலர்கள் பழையாறைக்கு வந்து விட்டதனால் நகரில் கலகலப்பு சற்று மிகுந்திருந்தது. பணியாள்களுக்கான குடியிருப்புகள் புதிதாகக் கட்டப்பட்டன. நகரம் வளர்ந்தது. கடல் கடந்த நாடுகளிலிருந்து வரும் வணிகர்கள் பலரை நகர வீதிகளில் காண முடிந்தது. மாளிகையில் அதிகாரிகளைக் காண யவன, சீன வணிகர்கள் வருவது மிகுந்திருந்தது.

சக்கரவர்த்தி தலை நகரிலில்லாததால் விலையுயர்ந்த அணிமணிகள், பட்டுப் பீதாம்பரங்களை விற்பவர்கள் அரசியைக்காண நேரம் கேட்டுக் காத்திருந்தனர்.

பழையாறைக்குத் தாம் வருவது ஒருவருக்கும் தெரியக்கூடாது என்பதால், எந்தவித முன் அறிவிப்புமின்றி ஒரு நாள் இரவு வேளையில்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வீரமாதேவி பழையாறைக்கு வந்தாள்.

ஆதூர சாலையில் சிற்பி மாணிக்க சேகரனைக் கண்ட பிறகு அவளுக்கு இரவு உறக்கம் வரவில்லை. மருத்துவர்களின் உதவியாளர்களிடம் பேசியதிலிருந்து சிற்பியின் உடல்நிலையில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பதை அறிந்தாள். அவளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சிக்கு அளவில்லை. சோழ நாட்டின் தலைசிறந்த கலைஞரின் உடல் சீரடைய ஒருவரும் முயற்சி மேற்கொள்ளவில்லையே என்பது குறித்து அவளுக்கு வருத்தமே. மறுநாள் அரச மருத்துவரைச் சந்தித்தாள்.

மாணிக்க சேகரனைப் பீடித்திருப்பது காட்டுட் பகுதியில் ஏற்படும் கொடிய நச்சுக் காய்ச்சல் என்று விவரித்த மருத்துவர், தன்னால் முடிந்த அளவிற்குச் சிகிச்சை செய்வதாகவும் பிறகு இறைவன் விட்ட வழிதான் இறுதியானது என்றும் தெரிவித்தார்.

“சக்கரவர்த்தி கேட்டிருந்தாலும் இந்த மறுமொழியைத்தான் சொல்லியிருப்பீர்களா மருத்துவரே?” என வீரமாதேவி பளிச்சென்று கேட்டு விட்டாள்.

மருத்துவர் ஒரு கணம் திகைத்தார். “என்ன அப்படிக் கேட்டுவிட்டீர்கள்? சக்கரவர்த்திக்கு வேறு: தங்களுக்கு வேறு என்று நான் வேற்றுமை பாராட்டி ஏதும் சொல்லமாட்டேன். நோயாளிகளுள் வேற்றுமை ஏது?” என்றார்.

“நோயாளிகளுக்குள் வேற்றுமை பாராட்டக் கூடாது என்பது நியாயமே. ஆனால், இங்கு உங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பவர் சோழ நாட்டின் கண்மணி போன்றவர் என்பது உங்களுக்குத் தெரியுமா? அவர் மற்றொரு பிரம்மா என்பதை அறிவீர்களா? சக்கரவர்த்திகள் மிகவும் மதிப்பு வைத்து அவரிடம் மிகப் பெரிய பொறுப்பை ஒப்படைத்திருப்பதையும், இந்த நாட்டின் பெருமையை உயர்த்தும் மாபெரும் கோயிலை நிர்மாணிக்கும் பொறுப்பை மாணிக்க சேகரனிடம் சக்கரவர்த்திகள் ஒப்படைத் திருப்பதையும் நீங்கள் அறிவீர்களா?” வீரமாதேவி சற்று உணர்ச்சிவயப்பட்டுப் பேசியதைக் கண்ட மருத்துவர், அவளைச் சமாதானப்படுத்த விரும்பி, அவளுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் பேசினார். வீரமாதேவியை எப்படி விளிப்பது என்று முதலில் அவருக்குத் தெரியவில்லை – என்றாலும் பொதுவாக,“தேவி!” என்று அழைத்துப் பேச்சைத் தொடங்கினார்.

“கடும் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு என் ஆதூர சாலையில் இருப்பவர் மிக முக்கியமானவர் என்பதை அறிவேன். அரச குடும்பத்திற்கு என்று

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தனியே ஏற்படுத்தப்பட்டிருக்கும் மருத்துவமனையில் ஒருவருக்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது என்றால் அவர் மிக முக்கியமானவராகத் தானிருக்க வேண்டும் என்று தெரிந்து கொண்டேன். தேவி! அவருக்கு ஏற்பட்டிருக்கும் நச்சுக் காய்ச்சலுக்கு எல்லாவித மருந்துகளையும் கொடுத்து விட்டோம். உடனிருந்து பணிவிடை செய்ய அவருக்கு உற்றார் உறவினர் யாருமில்லை என்பதறிந்து, எங்கள் பணியாட்களை அவர் அருகிலேயே அல்லும் பகலும் இருக்குமாறு பணித்தேன். காய்ச்சலின் உச்ச நிலையில் அவர் பிதற்றுவதிலிருந்து அவரைப் பற்றி அறிந்தேன். அவர் பெரும் கலைஞர் என்பதைப் புரிந்து கொண்டேன். ஒரு நாள் அவர் அருகேயே நீண்ட நேரமிருந்தேன். காய்ச்சல் வேகத்தில் அவர் யாருடனோ பேசுகிறார். சிரித்துப் பேசுகிறார். குழந்தை போல் குழைந்து பேசுகிறார். நாட்டியமாடுவதைப் போல் அவர் அபிநயிக்கிறார். அவர் யாரையோ எதிர்பார்த்து வராததால் ஏக்கமுற்றிருப்பது நன்றாகப் புலப்பட்டது. ஒரு பெண்ணின் பெயரை அடிக்கடி உச்சரிக்கிறார்" என்று மருத்துவர் சொல்லிவரும் போது வீரமாதேவி குறுக்கிட்டு,"யாருடைய பெயரை அவர் சொன்னார் என்பது நினைவிருக்கிறதா!" என்று ஆவலுடன் கேட்டாள்.

சற்று யோசித்த பிறகு மருத்துவர்,"நினைவில் வரவில்லை தேவி! மிகவும் நேசிக்கும் பெண்ணாக அவளிருக்க வேண்டும் எனத் தோன்றியது. அந்தப் பெண் அவர் அருகிலிருந்தால் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படும் என்பது தெரிந்தது. அவள் யார் தேவி?" என்று மருத்துவர் கேட்டார்.

யார் என்று குறிப்பிட்டு வீரமாதேவி கூறுவாள்?

"பாவம் சிற்பி! மாபெரும் கலைஞர், என்றாலும் அவருக்கும் மனம் என்று ஒன்று உண்டு. உணர்வுகள் உண்டு. உலக இன்பங்களில் ஈடுபாடு உண்டு. அழகை ரசிக்கும் கலைஞன் அழகை மிகவும் நேசிப்பவன். அந்த முறையில் மாணிக்க சேகரன் தன்னை மிகவும் கவர்ந்த குமுதவல்லியை நினைக்காமல் இருக்க முடியுமா? என்னிடம் எதிரெதிரே அமர்ந்து சிற்பக் கலையைப் பற்றியும், கோயில் உருவாவதைப் பற்றியும் பேசிக் கொண்டிருக்கும் போது என்னில் அவர்தன் காதலியைக் கண்டிருக்கலாமல்லவா? அவர் பேச்சையும், நடவடிக்கையையும் கண்டு சக்கரவர்த்தியார் சந்தேகப்படும்படி இருந்திருப்பதில் நியாயம் இருக்கிறது. ஆனால் என் உள்ளம் சிற்பம் வடிக்கப் பிறந்த பாறை. அதை அசைக்க முடியாது. எந்தவிதச் சலனமும் எனக்கு ஏற்படவில்லை. ஆனால் சிற்பியின் மென்மையான உள்ளத்தில் ஏற்படும் சலனத்தை

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

யாரால் தடுத்திருக்க முடியும்?

“பாவம், சிற்பி! காய்ச்சல் வேகத்தில் யாரை அழைத்திருப்பார்? அவர் மனத்துக்கினியவளை அழைத்திருப்பார். எங்கிருந்தாலும் தேடி அழைத்து வருமாறு, அரச கட்டளை இடப்பட்டிருந்தும் அவளைக் கொண்டு சேர்க்க இயலவில்லை. உம். சிற்பியின் காய்ச்சல் முழுமையாகக் குணமாக வேண்டும். அதற்கான மருந்தை ஏழு கடலுக்கு அப்பாலிருந்தாவது கொண்டு வந்தாக வேண்டும். யாரிடம் சொல்வது? இளவரசர் ஆதித்தனைச் சில நாள்களாகக் காணவில்லை. அவரைச் சந்திப்போம். இதற்கிடையே சக்கரவர்த்திக்குச் செய்தி அனுப்புவோம்” என்று முடிவு செய்த வீரமாதேவி, மருத்துவரை நோக்கி,“ஐயா, சிற்பியின் காய்ச்சலைக் குணப்படுத்த சோழ நாட்டில் மூலிகையே இல்லையா?” என்று கேட்டாள்.

“இல்லாமலிருக்குமா? கொல்லி மலையில் மூலிகை ஒன்று இருக்கிறது” என்று பேச்சைத் தொடங்கியவரை நோக்கிப் பரபரப்புடன்,“கொல்லி மலை என்ன, இமயமலையில் இருந்தாலும் கொண்டு வர வேண்டும். நூறு திக்குகளுக்கும் தக்கவர்களை அனுப்புங்கள். கங்கை நீரைக் கொண்டுவரச் சென்றிருக்கும் சக்கரவர்த்திக்கும் நான் சொல்லி அனுப்புகிறேன்” என்றாள்.

மருத்துவர் மௌனமாக இருப்பதைப் பார்த்தவுடன்,“உடனே இயங்குங்கள். நான் கட்டளையிடத் தகுதி வாய்ந்தவள் என்பதை சக்கரவர்த்தியின் உத்தரவு மூலம் உறுதிப்படுத்துகிறேன். இன்றே, சக்கரவர்த்திக்குச் செய்தி அனுப்புகிறேன். செய்தி போய்ச் சேர்ந்து அரசரிடமிருந்து மறுமொழி வருவதற்குப் பல நாள்களாகும். அதுவரை, சிற்பியின் உயிரைப் பிடித்திருக்க முடியுமா? இயங்குங்கள். உடனே இயங்குங்கள். ஒரு நாட்டிற்கு மருத்துவர் எவ்வளவு முக்கியமோ, அரச குரு எவ்வளவு முக்கியமோ, படைத் தளபதி எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் கலைஞர்களும். கலைஞர்களின் முதன்மையானவர் சிற்பி சோழ நாட்டிற்குப் பெரும் புகழைத் தரப்போகிற கோயிலைக் கட்ட வந்துள்ள சிற்பி, மிக முக்கியமானவர் என்று தங்களுக்குத் தோன்றவில்லையா! உடனே நான்கு திக்கும் ஆளை அனுப்புங்கள். கொல்லி மலைக்கு அனுப்புங்கள், பொதிகைக்கு அனுப்புங்கள்” என்று ஆவேசம் வந்தவள் போல் பேசினாள்.

மருத்துவர் திகைத்து ஏதும் சொல்வது அறியாமல் நின்றார்.

“கொல்லி மலைக்குச் செல்ல வேண்டாம்: பொதிகைக்கும் செல்ல

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வேண்டாம். இமயத்திற்கும் போக வேண்டாம்!” என்ற குரல் கேட்டது.

அந்தக் குரல் மிக இனிமையாக இருந்தது. தேவகானம் ஒலிப்பது போலிருந்தது. யாழின் இன்னிசை போலிருந்தது. கீதமினிய குயில்கள் ஒரு சேர அமர்ந்து இன்னிசை எழுப்புவது போலிருந்தது.

வீரமாதேவி திரும்பிப் பார்த்தாள். மருத்துவர் திரும்பிப் பார்த்தார்.

ஆதுர சாலையில் நுழைந்த கருவூர்ச் சித்தர், அவர்கள் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்துச் சிறிது நேரம் நின்ற பிறகு குரல் கொடுத்தார்.

வீரமாதேவி உடல் மெல்ல நடுங்கியது.

கருவூர்த் தேவர் அங்கு வந்து கொண்டிருந்தார்.

பேச வார்த்தைகள் வராமல் திகைத்த வீரமாதேவி,“சித்த மகாபுருஷரே! நான் காண்பது கனவா? மெய் தானா? ஒரு கணம் தங்களை மனத்தில் நினைத்தேன், வந்து விட்டீர்கள். சோழ நாட்டைக் காப்பாற்றுங்கள். சோழ சக்கரவர்த்திகளின் இலட்சியத்தை நிறைவேற்றுங்கள். தாங்கள் ஆசிர்வதித்துத் தொடங்கிய கோயில் திருப்பணிக்குத் தடை ஏற்பட்டிருக்கிறது. தடையை நீக்குங்கள். சிற்பியைக் காப்பாற்றுங்கள்” என்று கூறி, அவர் பாதத்தில் வீழ்ந்து வணங்கினாள்.

ஒரு கணம் ஒன்றும் புலப்படாமல் திகைத்த மருத்துவர், ஓடோடிச் சென்று இருக்கை ஒன்றைக் கொணர்ந்து அமருமாறு உபசரித்தார்.

சிற்பி மாணிக்க சேகரன் உடல் குணமடைய சித்தர் மூலிகைச் சாறு கொடுத்தார். இரண்டாவது முறையாக அந்த ஜீவ மூலிகையைப் பயன்படுத்தினார்.

“இன்னும் இரு நாள்களில் சிற்பி குதித்தெழுந்து விடுவார். பெண்ணே! வடக்கே போய் என்ன செய்கிறான் இராசேந்திரன்? இன்னும் இரண்டு பௌர்ணமிகள் வரைதான் நான் சோழ நாட்டில் இருப்பேன். அதற்குள் கோயில் திருப்பணியை முடிக்க வேண்டும்” என்று கூறிச் சுற்று முற்றும் பார்த்தார்.

மருத்துவர், மூலிகைச் சாற்றை, சிற்பியின் வாயில் புகட்டிக் கொண்டிருந்தார்.

வீரமாதேவி விம்மினாள். கோயில் திருப்பணிக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகளை ஒன்றுவிடாமல் விவரித்தாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சித்தர் கரம் தூக்கி ஆசி வழங்கி,“மகளே! கவலைப்படாதே. சூரியனைக் கண்ட பனிபோல் தடைகள் நீங்கிவிடும். உடனே வருமாறு இராசேந்திரனுக்குச் செய்தி அனுப்பு…” என்றார்.

வீரமாதேவி திகைத்தாள். “நான் அரசருக்குக் கட்டளையிடுவதா? என்ன சுவாமி என்னைச் சோதிக்கிறீர்கள்?” என்றாள். கண்கள் கலங்கியிருந்தன.

“சோதனை இல்லை – உன்னால் முடியும். நடக்கக் கூடியதைச் சொல்கிறேன். அடுத்த வாரம் நான் திருப்பணி நடக்குமிடத்திற்கு வருவேன். அதற்குள் முழு மூச்சுடன் வேலைகள் நடக்க வேண்டும். நாற்பத்தி ஐந்து நாள்களில் பணி முடிவடையவில்லை என்றால், இராசேந்திரன் இலட்சியப்படி, கங்கை நீரால் குடமுழுக்கு நடைபெறும் போது நான் கலந்து கொள்ள முடியாது. என்னைச் சோழ நாட்டில் எங்கும் காண முடியாது. உம். தாமதமின்றி பணிகளைக் கவனி” என்றார். பிறகு சிற்பியின் நெற்றியில் தன் கரத்தைப் பதித்தார். மீண்டும் விழுந்து வணங்கிய, வீரமாதேவியைத் தூக்கி அவள் தலையில் தன் கரத்தை வைத்து ஆசிர்வதித்தார்.

ஆயிரம் மின்னல்கள் உடலில் பாய்ந்தது போன்ற உணர்வு வீரமாதேவிக்கு ஏற்பட்டது.

அன்று பழையாறையில் நடந்த நிகழ்ச்சியை விடாமல் எழுதி வடக்கே உள்ள சக்கரவர்த்திக்கு அனுப்பினாள் வீரமாதேவி. ஓலையை அனுப்பிவிட்டு, கானகப் பகுதிக்கு விரைந்து சென்று விட்டாள்.

சக்கரவர்த்திக்கு வீரமாதேவி எழுதிய அந்த முக்கிய ஓலையைப் பஞ்சவன் மாதேவி படித்தாள். அதிலுள்ள செய்தியை வரி விடாமல் படித்தாள். ஒரு முறைக்கு இருமுறை படித்தாள். கருவூர்ச் சித்தரின் ஆசி முழுமையாக வீரமாதேவிக்கு ஏற்பட்டிருக்கும்போது நாம் ஏற்படுத்தும் தடைகள் வெற்றியடையுமா என்று கவலைப்பட்டாள்.

“இந்த ஓலையைச் சக்கரவர்த்திக்கு அனுப்புமாறு சொல்கிறீர்களா?” என்று ஒற்றர் படைத்தலைவர் கேட்டார்.

அரசி சிறிது நேரம் ஏதும் பேசவில்லை.

“சிந்திப்பதற்குச் சிறிது நேரம் கொடு. பகல் உணவிற்குப் பிறகு வா. ஓலையை எடுத்துச் செல்பவரை மாலை வரை காத்திருக்கச் சொல்” என்றாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

ஆனால் நண்பகல் நேரத்தில், இராசேந்திர சோழ தேவர், பஞ்சவன் மாதேவிக்கு அனுப்பிய செய்தியை எடுத்துக் கொண்டு, வீரனொருவன் மாளிகையை அடைந்தான்.

உடனே கிருஷ்ணை நதிக்கரைக்குப் புறப்பட்டு வருமாறு சக்கரவர்த்தி எழுதியிருந்தார்.

## 68

# பஞ்சவன்மாதேவி யாத்திரை

வீரமாதேவி, நீராடி, திருநீறணிந்து புத்தாடை உடுத்தி சிற்பி மாணிக்க சேகரனைக் காண மருத்துவமனைக்கு வந்தாள். மாணிக்க சேகரன் படுத்திருக்கும் குடிலின் கதவருகே வந்தபோது திகைத்து நின்றாள்.

உள்ளேயிருந்து இனிய குரல் கேட்டது.

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு

சுந்தரம் ஆவது நீறு துதிக்கப் படுவது நீறு

தந்திரம் ஆவது நீறு சமயத்தில் உள்ளது நீறு

செந்துயர் வாய் உமை பங்கன் திருஆலவாயான் திருநீறே

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு

சத்தியம் ஆவது நீறு தக்கோர் புகழ்வது நீறு

பக்தி தருவது நீறு பரவ இனியது நீறு

சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே.

என்ற, திருஞானசம்பந்தப் பெருமானின் தேவாரப் பாடலை மாணிக்க சேகரன் மெல்லிய குரலில் பாடிக் கொண்டிருந்தான். மாணிக்க சேகரன் இனிய தோற்றத்திற்கு ஏற்பக் குரலும் மிக இனிமையாக இருப்பது கேட்டு அவள் வியந்தாள்.

சித்தர் கொடுத்த மருந்து கைமேல் பலனைத் தந்து விட்டது. அதற்கு மேலாக சித்தரின் வாக்கான,‘இன்னும் இரு நாள்களில் சிற்பி குதித்து எழுந்து விடுவார் பெண்ணே!’ என்பது பலித்து விட்டது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வியப்பு மேலிட வீரமாதேவி, சிறிது நின்று பார்த்தாள். மாணிக்க சேகரன் இதுவரையில் படுத்திருந்தமஞ்சத்தில் உட்கார்ந்து கொண்டு, விழிகளை மூடியவாறு பாடிக் கொண்டிருந்தான்.

நெற்றியில் திருநீறு. கடும் காய்ச்சலால் பல நாள்களாக வளர்ந்துவிட்ட மீசையும் தாடியும் முனிவர் போன்ற தோற்றத்தைத் தந்தன. அவன் அருகே யாருமில்லை.

வீரமாதேவி மெல்ல அவன் அருகே வந்தாள். அவள் வந்ததையும் கவனிக்காமல், சிவபெருமானின் புகழ் பாடும் பதிகத்தை மெல்லப் பாடிக் கொண்டிருந்தான். மெலிந்திருந்த உடலுக்குள்ளிலிருந்து கம்பீரமாக, இனிமையாகக் குரல் ஒலித்துக் கொண்டிருந்தது.

“சிற்பியாரே!” என்று மெல்லக் குரல் கொடுத்தாள், அவன் கவனம் சிதறவில்லை. பாடிக் கொண்டே இருந்தான்.

வீரமாதேவி மெல்லத் தொண்டையைக் கனைத்தாள். ஹுஹும், சிற்பி திரும்பிப் பார்க்கவில்லை.

வீரமாதேவி, அந்தப் பாடலுக்கு ஏற்பக் கர தாளம் இடலானாள்.

தாளமும், பாடலும் இணைந்தன.

வீரமாதேவி சட்டெனத் தாளத்தை நிறுத்தினாள். மாணிக்க சேகரன், இமைகளைத் திறந்து பார்த்தான்.

“யார்….. இளவரசியா?

வீரமாதேவியா….

வாருங்கள், வாருங்கள்.

வந்து நேரமாகிறதா?

நின்று கொண்டிருக்கிறீர்களே!”

என்று கேள்வி மேல் கேள்வியாய் கேட்டவாறு பரபரப்புடன் இருக்கையில் இருந்து ஏழ முயன்றான்.

எழ வேண்டாம் என்று வற்புறுத்திய வீரமாதேவி, சிற்பியின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டதற்குப் பாராட்டி, அதற்குக் காரணமான சித்தரைப் புகழ்ந்து, விழிகளை மூடியவாறு சித்தருக்கு நன்றி கூறினாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

மாணிக்க சேகரன், வீரமாதேவியின் கருணையைப் பாராட்டி,“சித்தர் என்னைக் காப்பாற்றியதற்குத் தங்கள் பிரார்த்தனையும், நல்ல உள்ளமுமே காரணம்” என்றான்.

“நாம் இன்றே இங்கிருந்து புறப்படுகிறோம்” என்று உற்சாகமாகக் கூறினான் மாணிக்க சேகரன்.

‘இன்னும் சிறிது நாள்கள் ஓய்வு எடுத்து வரலாம்’ என்று, வீரமாதேவி உபசாரத்துக்காவது சொல்லவில்லை. நாளையே சிற்பப் பணிகளைத் தொடங்க வேண்டும் என்ற ஆவல் அவள் உள்ளத்தில் நிறைந்திருந்தது.

சித்தர் கூறியவற்றை, மாணிக்க சேகரனிடம் தெரிவித்த வீரமாதேவி,“இப்பொழுது எனக்கு முழு நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. எந்தச் சக்தியும் இனி நம் பணியைத் தடுக்க முடியாது” என்று உற்சாகமாகப் பேசினாள்.

அரசி பஞ்சவன் மாதேவி, பரிவாரங்களுடனும், பாதுகாவலுடனும் வடக்கு நோக்கிப் புறப்பட்ட செய்தியைப் பற்றி அவள் அறிய ஆவல் கொள்ளவில்லை.

வீரமாதேவியின் பணிகளை இனித்தடுக்க முடியாது என்றுணர்ந்த அரசு அதிகாரிகள் வீரமாதேவியைப் புகழத் தொடங்கினர்.

“நல்ல வேளையாக, அரசர் அழைப்பு வந்ததனால் தங்களுக்கு நேரவிருந்த இடையூறுகள் நீங்கின” என்று ஆதரவுக் குரல் கொடுத்தனர்.

எந்தெந்த விதங்களில், அரசியும் அவள் கட்டளையை ஏற்றவர்களும் தன் சிற்பப் பணிக்கு இடையூறு செய்ய முற்பட்டனர் என்ற விவரம் அறிந்த வீரமாதேவி, இறைவன் கருணையை எண்ணி மகிழ்ந்தாள். இறைவனுக்கு நன்றி தெரிவித்தாள். சிறு வயது முதல், தில்லையம்பதி நடராசரை அவள் கண்கண்ட தெய்வமாகக் கருதி வழிபட்டு வந்தாள். பிறகு அவள் நெஞ்சில் நிறைந்த இராசேந்திரனும் நடராசப் பெருமானைக் குலதெய்வமாகக் கொண்டிருக்கிறார் என்பதை அறிந்தவுடன் தில்லையம்பதியானைக் கணம் கூட மறவாத சிந்தை உடையவளானாள்.

இறைவனுக்குத் தன் நன்றியை எவ்வாறு தெரிவிப்பது என்று சிந்தித்தாள். இப்பொழுது எடுத்திருக்கும் கோயில் திருப்பணியை மிக விரைவில் முடித்து, நடராசரின் திருத்தாண்டவங்களைக்கோயில் திருச்சுற்றில் சிற்பமாக வடிவமைக்க உறுதி கொண்டாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“சிற்பியாரே! சிவபெருமான் கருணைக்கு நாம் நன்றி தெரிவிக்க வேண்டும். இறைவனுக்கு நம் காணிக்கையைத் தக்க முறையில் அளிக்க வாய்ப்பளித்திருக்கும், சக்கரவர்த்தி இராசேந்திர சோழ தேவருக்கு நாம் முதலில் நன்றி தெரிவிக்க வேண்டும்” என்றாள் வீரமாதேவி உணர்ச்சிப் பெருக்குடன்.

“நானும் அப்படித்தான் நினைக்கிறேன். உலகிலேயே அழியாத சின்னம் கல்வெட்டு, பட்டயம், சிற்பம், திருக்கோயில் கல்வெட்டும் பட்டயமும் அளிக்க நமக்கு உரிமையில்லை. ஆனால் சிற்பம் சமைப்போம். சக்கரவர்த்தியின் திரு உருவத்தைப் படைப்போம். உங்களுக்கு நினைவிருக்கும் என நினைக்கிறேன். சில திங்களுக்கு முன்பு கட்டப்படும் புதிய கோயிலில் சக்கரவர்த்திக்கு உரிய இடத்தை, அளிக்க முடிவு செய்தோமே – நினைவிருக்கிறதா?” என்று மாணிக்க சேகரன் கேட்டான்.

வீரமாதேவி சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். பிறகு,“ஆம்: நினைவுக்கு வருகிறது. சிவபெருமான் நம் சக்கரவர்த்திக்கு அருள்வதுபோல் சிவபெருமான் சிற்பம் ஒன்று-வரிவடிவமாகத் தாங்கள் செங்கோட்டில் வரைந்த கோட்டோவியம் - குடிலில் ஓரிடத்தில் இருக்க வேண்டும். அதைத் தேடி எடுத்து அதைப் போன்ற சிற்பம் ஆக்குவோம். விரைந்து செயல்படுவோம். கருவூர்த் தேவர் அருள் நமக்குப் பூரணமாக உண்டு. சித்தர் திருமுன்பு குடமுழுக்கு நடைபெறச் செய்ய வேண்டும். இரவு பகல் பாராமல் பணியாற்றுவோம்” என்று உணர்ச்சிப் பெருக்கால் கூறும்போது, குரலில் கம்பீரம் மிளிர்ந்தது.

பஞ்சவன்மாதேவி, தன் பணியாள்களும் பாங்கியரும் அதிகாரி காவல் வீரர்களும் புடைசூழ இராசேந்திரன் தங்கியிருந்த கிருஷ்ணை நதிக்கரையை நோக்கிப் புறப்பட்டாள்.

அரிந்தவன் மாதேவி உடல் நலங்குன்றி எழமுடியாமல் படுத்திருந்தாள். அதனால் பழையாறையில் அவள் தங்கிவிட்டாள். புறப்படும் முன்பு அவள் சொன்னாள்: “தேவி! என்னைத் தனியே விட்டுத் தாங்கள் செல்கிறீர்கள். அங்கு சென்றுதான் ஆக வேண்டுமா? அப்படியென்றால் வீரமாதேவியின் பணிகளைத் தடுக்க முடியாது போய்விடுமே. அவள் வெற்றி பெற்று விடுவாளே” என்று குரல் தழுதழுக்கக் கூறினாள்.

அவளை அன்புடன் அணைத்து, அரசி பஞ்சவன் மாதேவி, கூறினாள்: “என் இனியவளே! கவலை இல்லாமல் இரு. நெடுந்தூரப் பயணம், உன் உடலுக்கு ஏற்காது. வயதால் தளர்ந்து விட்ட என்னாலும்வெகு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தொலைவு பயணப்பட முடியுமா என்பது சந்தேகமே. ஆனால், சக்கரவர்த்தி அழைக்கிறார்கள். பட்டத்து இளவரசியுடன் இணைந்தே நீராட வேண்டுமாம்: அதுவே பெரும் புண்ணியமாம். யுத்த பூமிக்கா நான் செல்கிறேன்? புண்ணிய கங்கையில் நீராடச் செல்வது முன் பிறவிப் பேறன்றோ? கிருஷ்ணை, கோதாவரி, மகாநதி என்று பல புண்ணிய நதிகளிலும் நாங்கள் இணைந்து நீராடுவோம். இந்தப் பேறு வீரமாதேவிக்குக் கிடைக்குமா? சக்கரவர்த்திகளுடன் நெருங்கி இருக்கப் பெரும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கிறது. மோக வலை வீசி அரசரைத் தன் கைப்பாவையாக ஆக்கிக் கொண்ட வீரமாதேவியின் பிடியிலிருந்து சக்கரவர்த்தியார் விடுபட இது ஒரு நல்ல வாய்ப்பு. அரிந்தவன் தேவி, நீ கவலைப்படலாமா! சிறந்த மருத்துவர்கள் உன் அருகே இருந்து, நோயைத் தீர்க்க உதவுவார்கள். நாங்கள் திரும்பி வரும்போது, நீ உற்சாகத்துடன் வரவேற்க வேண்டும்" என்று ஆறுதல் கூறினாள்.

எலும்பும் தோலுமாய், படுக்கையில் கிடந்த அரிந்தவன் தேவியால் அதிகம் பேச முடியவில்லை. அவள் விழிகளில் நீர் கோத்து நின்றது. அரசியை அருகே அழைத்து,"தேவி! என் வருத்தமெல்லாம் வீரமாதேவியை எதிர்த்து நின்ற, நம் போராட்டம் தோல்வி அடைந்துவிட்டதே என்பதுதான்" என்றாள்.

"தோல்வியா, அதெப்படி?"

"வீரமாதேவியின் நடவடிக்கையான புதிய நகரம் ஒன்றை ஏற்படுத்துவதையும், கோயில் கட்டுவதையும், ஏரி வெட்டுவதையும் நாம் தடுக்க முடியவில்லை. நேற்று அதிகாரி ஒருவர் என்னிடம் மனம் விட்டுப் பேசிக் கொண்டிருந்தார். வீரமாதேவிக்கு, நம் அரசரின் முழு ஆதரவும் இருக்கிறதாம். பெரிய நகரம், பெரிய கோயில், பெரிய ஏரி - இவை மூன்றும் வீரமாதேவியின் திட்டம். அவள் பெயர் என்றும் நின்று நிலவத் தன் பெயரை அவற்றிற்குச் சூட்டப் போகிறாளாம். வீரமாதேவீச்சுரம், வீரமாதேவிபுரம், வீரமாதேவி பேரேரி. தேவி! அவள் எண்ணம் நிறைவேறி விட்டால், நகரமும், கோயிலும், ஏரியும் ஏற்பட்டுவிட்டால், நாம் படுதோல்வியடைந்து தலை குனிய வேண்டியதுதான். சோழப் பேரரசி என்ற பெயர் தங்களுக்கு இருந்தும் என்ன பயன்? வீரமாதேவியின் கை ஓங்கினால், செல்வாக்கு மிகுந்தால் அவள் நம்மைப் பழிவாங்கத் தயங்கமாட்டாள். தன்னுடைய அழகாலும், இளமையாலும் செல்வாக்காலும் சக்கரவர்த்தியைக் கைக்கொண்டு விட்ட வீரமாதேவியின் பணிகளைத் தடுக்காமல், நீங்கள் வடக்கே செல்கிறீர்களே:என்னை விட்டு விட்டுச் செல்கிறீர்களே – அந்தப் பாதகி

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

என்னைக் கொன்று விடுவாளே. எனக்குப் பயமாயிருக்கிறது. தேவி! அவள் தங்களுக்குப் பெரும் இடையூறு விளைவிக்கத் தயங்கமாட்டாள். செல்லும் வழியில் தங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படும்படி செய்துவிட்டால், பிறகு நான் என்ன செய்வேன்? தேவி! என்னையும் அழைத்துச் செல்லுங்கள்: ஆபத்து ஏற்பட்டால் நம் இருவருக்கும் சேர்ந்தே ஏற்படட்டும். அல்லது என் அருகேயே இருங்கள்" என்று, அரசி பஞ்சவன் மாதேவியின் திருக்கரத்தை அழுத்தமாகப் பற்றிக்கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

அச்சத்தாலும், அன்பினாலும், வேறு துணையில்லை என்ற நம்பிக்கையாலும், அழுத்தமாகப் பற்றியிருந்த அரிந்தவன் தேவியின் கரத்தை மெல்ல விலக்கி, அவள் விழிநீரைத் துடைத்து,"கோழை போன்று அழலாமா? நீ மாபெரும் வீர பரம்பரையைச் சேர்ந்தவள் என்பதை மறந்து விட்டாயா? நீயும் நானும் உயிர்த் தோழிகள்: பிறகுதான் பேரரசி - இளவரசி என்ற பாகுபாடு. நீ பழையாறையில் இருக்க வேண்டும். வீரமாதேவியின் பணிகள் நடைபெறாமலிருப்பதற்கு வேண்டிய திட்டங்களை வகுத்து விட்டேன். கருவூலத்திலிருந்து ஒரு செப்புக்காசு கூடத் திருப்பணிக்குக் கொடுக்கக் கூடாது என்று கட்டளை இட்டுவிட்டேன். வீரமாதேவியின் கோயில் பணியும், அவளுடைய திட்டங்களும் நிறைவேறாமல் தடுப்பதற்கு வழி வகுத்து விட்டேன். இன்னும் பல ரகசியத் திட்டங்கள். அவற்றைப் பிறகு தெரிவிக்கிறேன். நீ பொறுமையாக இரு. உன் உடல் நிலை முழுமையும் குணமடைய மருத்துவர்கள் பெரு முயற்சி எடுக்கின்றனர். என்னுடன் பயணம் செய்ய உன் உடல் நிலை இடம் தராது. மருத்துவர்களும் அவ்வாறே கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். என் பயணம் வெற்றிகரமாக முடிய கடவுளைப் பிரார்த்தித்துக் கொள். விரைவில் திரும்பி வருவேன். அதற்குள் வீரமாதேவியின் எண்ணம் தவிடு பொடியாகி இந்த நாட்டை விட்டே அவள் வெளியேறியிருப்பாள். அவளாக வெளியேறாவிட்டாலும், நம் சக்கரவர்த்தி அதற்கான கட்டளைகளைப் பிறப்பிக்குமாறு நான் செய்துவிடுவேன். கவலையை விட்டு அமைதியாக இரு" என்று கூறி அவள் கரத்தை ஆதரவுடன் தன் கரத்துடன் பிணைத்துக் கொண்டாள். அவள் முகத்தை ஆசையுடன் தடவினாள். முதுகை அன்புடன் வருடினாள். அவள் விழிகளிலிருந்து வடிந்த நீரைத் துடைத்தாள். விடை பெற்றுக்கொண்டு, இராசேந்திரன் தங்கியிருக்கும் இடத்தை நோக்கிப் பரிவாரங்களுடன் பயணப்பட்டாள்.



Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

# பிரிந்தவர் கூடியபோது

சிற்பி மாணிக்க சேகரன், மறுநாள் புதுத் தெம்புடன் கண்வழித்துப் பார்த்தபோது அங்கே வீரமாதேவி இல்லை. அந்த அறை முழுவதும் நறுமண வாசனை பரவியிருந்தது. கோலமிடப்பட்டிருந்தது. மூலையில் ஒரு குத்து விளக்கு ஏற்றப்பட்டிருந்தது. அதன் அருகே சிறு விநாயகர் சிலை ஒன்று வைக்கப்பட்டிருந்தது. விநாயகர் பாதத்தருகே முல்லை மலர் தூவப்பட்டிருந்தது. அருகம்புல் மாலையாகத் தொடுக்கப்பட்டு அணிவிக்கப்பட்டிருந்தது. சிறு சட்டியிலிருந்து குங்கிலியப் புகை நறுமணம் பரப்பிக் கொண்டிருந்தது. குங்கிலியத்தின் மணத்துடன் சேர்த்து புதுவித மணம் அங்கு எழுந்து பரவியது. அந்த நறுமணத்திற்கான பொருள் கடல் கடந்த நாட்டினின்று வந்தது என்று மாணிக்க சேகரன் அறிவான். அந்த அறைக்குள் வேறு யாரோ வந்து சென்றிருக்க வேண்டும். உள்ளே பாத்திரங்கள் எழுப்பும் ஒலியுடன் வளையல்கள் குலுங்கும் மெல்லிய ஓசையும் எழுந்தது.

அவனுக்குப் பசித்தது. எழுந்து உலவச் செல்ல வேண்டும் என்ற தெம்பு ஏற்பட்டது. அவனால் எழுந்திருக்க முடிந்தது. தரையில் பாதங்களை ஊன்ற முடிந்தது. சோர்வில்லாமல் புதிய சுறுசுறுப்பு உடலில் பரவியிருந்ததை உணர்ந்தான்.

மருத்துவர் அனுமதி இல்லாமல் எழுந்து நடமாடக் கூடாது என்பதை அவன் அறிவான். அவன் அருகே இருந்து பணிவிடை செய்யும் பணியாளரைக் காணவில்லை.

ஆற்றங்கரைக்குச் சென்று அமிழ்ந்து நீராட வேண்டும் என்ற உந்துதல் எழுந்தது. பழையாறையில் இருக்கும் போது அரிசிலாற்றிலோ, காவிரியிலோ நீராடாமல் இருப்பதா? என்ன பாவம் செய்தேனோ - இவ்வாறு கட்டிப் போட்டது போல் கிடப்பதற்கு.

மாணிக்கசேகரன் விழிகளை மூடிக் கொண்டான். அவனுடைய இஷ்ட தேவதையை மனத்தில் எண்ணிக் கொண்டு மௌனமாக இருக்க முயன்றான். இவ்வளவு நாள்கள் நினைவில்லாமல் இருந்ததும் ஒருவிதத் தியானம்தானே!

திடீரென்று, பின்புறமிருந்து மூடியிருந்த அவன் விழிகளை இளம் பூங்கரங்கள் மூடின. அல்லித் தண்டோ அல்லது அன்னத்தின் தூவியோ என்று அவன் ஒரு கணம் திகைத்தான். அந்த மென்மையான பூங்கரத்திற்கு உரியவளின் வளைக்கரங்களைத் தன் இரு கரங்களாலும்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பற்றினான்.

வளையல்கள் ஓசைப்படுத்தின. மெல்லிய மணம் மிக அருகே சூழ்ந்தது. அவள் விடும் மூச்சு அவன் தோள்களைத் தழுவின. பெண்மை வந்து விழிகளைத் தழுவவும் திடீரென அவன் மனத்தில் உற்சாகம் பொங்கியதால்,“யார் அது” என்று கேட்டான். உரிமையில்லாதவர்கள் அவ்வளவு தைர்யமாக அவனைத் தொட முடியாது என்பது அவனுக்குத் தெரியாதா?

வளைக்கரத்தை மெல்ல விலக்க முயன்றான்.

“யாராக இருக்கும்! ஒருவேளை… ஒருவேளை வீரமாதேவியாக இருக்குமோ?” அவன் நினைப்பது மாபெரும் தவறாக இருக்கலாம். அப்படிப்பட்ட எண்ணம் அவனுக்கு வந்ததே பெருங் குற்றமல்லவா?

மீண்டும்,“யாரது?” என்று குரல் கொடுத்தான். கரங்களை விலக்க முடியவில்லை. அந்த ஸ்பரிசத்தை நீக்க வேண்டாம் என்று தோன்றியது. ஆனால், அவ்வாறு துணிவுடன் உரிமையுடன் தன்னைத் தொடக்கூடியவள் யாராயிருக்க முடியும்?

“யார் என்று சொல்லுங்கள் பார்க்கலாம்?” என்ற குரல் வரும். குரலிலிருந்து யார் என்று அறிந்து கொள்ளலாம் என்று எண்ணினான். தோளின் மீது படர்ந்த மெல்லிய மூச்சுக் காற்றை தவிர வேறு அரவம் இல்லை. கண்ணை மூடிட – கரங்களின் அழுத்தம் அதிகமாயிற்று!

யாராக இருக்கும்? இளம் பெண்ணாக இருக்க வேண்டும். இந்த நிலையில் வேறு யாராவது பார்த்தால் தவறாக நினைத்துவிடப் போகிறார்களே என்ற அச்சம் வேறு –

தலையை இப்படியும் அப்படியும் அசைத்தான். அவனால் கரங்களை நகர்த்த முடியவில்லை.

“என்னால் ஊகிக்க முடியவில்லை. ஓர் ஆடவனை உரிமையுடன் தொடக் கூடியவள் - என்னைத் தொடக்கூடியவள் - ஒருத்திதான் இருக்கிறாள். அவளாக இருந்து விட்டால் நான் மிகவும் அதிர்ஷ்டசாலி” என்றான் மாணிக்க சேகரன்.

அடுத்த கணம் அவன் விழியை அழுத்தியிருந்த தன் கரங்களை எடுத்துவிட்டு அவனை ஆரத் தழுவிக் கொண்டாள். அவள் பேசவில்லை. விம்மினாள். அவள் விழிகளிலிருந்து நீர்த் துளிகள் அவன் கன்னத்தை ஈரமாக்கின.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“யார், யார் குமுதமா? என் குமுதமா?” என்று பரபரப்புடன் உணர்ச்சி மிகுதியால் கேட்டவாறு, மாணிக்கசேகரன் அவளை மெல்ல அணைத்துக் கொண்டான். பிரிந்தவர் கூடியபோது பேச்சு எதற்கு? இருவர் விழிகளும் ஒன்று கலந்தன.

“குமுதம்.... குமுதம்! நான் காண்பது கனவா, நனவா? நீ எப்போது வந்தாய்? சொல் சொல் குமுதம்” என்று மாணிக்க சேகரன் பரபரத்தான். அவள் கன்னத்தை வருடினான். தோள்களை ஆசையுடன் தொட்டான். அவள் விரல்களைத் தன் விரல்களுடன் கோத்துக் கொண்டான். என்ன செய்வது என்று தெரியாமல் பரபரத்தான்.

“இந்தக் கஞ்சியைக் குடியுங்கள். பிறகு பேசுவோம். நேரம் போவது தெரியாமல் பேசுவோம். தங்களுக்குப் பால் கலந்த கஞ்சி தருமாறு எனக்குக் கட்டளை. உணர்ச்சி வயப்படாமல் தங்களைக் கவனித்துக் கொள்ளுமாறு கட்டளை. கரும்பைக் கண்ட யானையாகாமல், மாணிக்கத்தைக் காத்து நிற்கும் நாகமாயிருக்குமாறு எனக்குக் கட்டளை” என்று கூறி, கலயத்திலிருந்து சிறு குவளையில் கஞ்சியை எடுத்து ஊற்றிப் பருகுமாறு வேண்டி,குவளையை அவன் இதழ் அருகே கொண்டு சென்றாள். சிற்பியைத் தன்மீது சாய்த்துக் கொண்டாள். அவள் மேனி மெல்ல நடுங்கியது.

“தாங்கள் பிழைத்தது பெருமான் அருளாம். தங்கள் உடல்நிலை முற்றும் குணமாகும் வரை பொறுப்பு என்னுடையதாம். நான் அதிகம் பேசக் கூடாதாம். நான் எங்கிருந்து வந்தேன், இவ்வளவு நாள்கள் எங்கிருந்தேன், தங்களைக் காணாது எங்கெல்லாம் அலைந்தேன் என்பவை பற்றியெல்லாம் பேசித் தங்களுக்கு வருத்தம் ஏற்படுமாறு செய்யக் கூடாதாம். வருத்த மிகுதியால் உணர்ச்சி வயப்பட்டால் மீண்டும் தங்கள் நோய் திரும்பி விடுமாம். அப்படியெல்லாம் என்னால் தங்களைப் பாதுகாக்க முடியாவிட்டால் இந்த இடத்தை விட்டே, ஊரைவிட்டே சென்று விடுமாறு கட்டளை. கொஞ்சம் கொஞ்சமாகக் கஞ்சியை அருந்துங்கள்” என்று குமுதவல்லி மெல்லப் பேசினாள். பேச வேண்டியவற்றை, சொல்ல வேண்டியவற்றைக் கட்டுப்பாட்டுடன்அடக்கிக் கொள்வதால் எழுந்த திணறலும், அதனால் அவளிடமிருந்துசொற்கள் உடைந்து வருவதும் அழுத்தமாக எழும் பெருமூச்சும் அவள் தன் உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறாள் என்பதைப் புலப்படுத்தின.

அவன் அவளையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“என்னை விழுங்கிவிடுவது போல் பார்க்காதீர்கள். இந்தக் கஞ்சியைக் கொஞ்சம் கொஞ்சமாக அருந்துங்கள். உடலுக்குப் புதுத் தெம்பு வரவேண்டும். தெம்பு ஏற்பட்டால்தான் என்னுடன் பேச முடியும்” என்றாள்.

“உன்னைப் பார்த்தவுடனேயே வயிறு நிறைந்து விட்ட உணர்ச்சி: புதிய உற்சாகம் பொங்கி உடல் முழுமையும் பரவுவது போன்ற உணர்ச்சி.”மாணிக்கசேகரன் மெல்லச் சிரித்தான். அவளுடைய ஒரு கரத்தைப் பிடித்துக் கொண்டான். மற்றொரு கையில் கஞ்சிக் குவளை.

“கையை விடுங்கள்: ஒரு வாய்கஞ்சி கூடப் பருகவில்லை. என் வேண்டுகோளுக்கு என்ன பயன்?” குமுதம் கோபப்படுவது போல் பேசினாள். முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

“எவ்வளவு நாள்களாகி விட்டன உன்னைப் பார்த்து? ஒரு யுகமாகியிருக்குமா?”

“சொல்ல மாட்டேன்: கஞ்சி ஆறுகிறது.”

“என் நெஞ்சத்துணர்வுகளும் ஆறி விடுவதற்கு முன்பு நான் கேட்பதற்கெல்லாம் மறுமொழி சொல்ல வேண்டும்.”

“நீங்கள் கேட்பதை, கேட்க நினைப்பதை, கேட்காததை – எல்லாவற்றிற்கும் நான் மறுமொழி கூறுவேன். நாம் இருவரும் நேரம் போவது தெரியாமல் பேச வேண்டாமா?”

“ஆமாம்” என்று தலையசைத்து, அவள் கரத்தை அழுத்தினான்.

“புதிய தெம்புடன் நீங்கள் பேச வேண்டாமா?”

“ஆமாம்.”

“அப்படியென்றால் நீங்கள் கஞ்சியை ஒரே மூச்சில் குடித்துவிட வேண்டும்.”

குமுதம் ஆசையுடன் கூறும்போது அவள் முகத்தில் தேங்கி நிற்கும் பாசத்தையும், கட்டுக்குள் அடங்கியிருக்கும் காதல் உணர்வுகளையும் புரிந்து கொண்டான். அவள் கொடுத்த கஞ்சியை வாங்கிக் குடித்தான்.

“உம்... உம்.... மெல்ல. அதற்காக ஒரே மூச்சில் குடிக்கக் கூடாது” குமுதம் மெல்ல அவன் மார்பைத் தடவினாள். இதுநாள் வரை வாடியிருந்த மலர் மீண்டும் பூத்தது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“குமுதம்! இந்த நோய் வந்ததால் தானே உன் மெல்லிய கரங்கள் என் மார்பைத் தொடுகின்றன? உன்னை விட்டுப் பிரிந்திருந்ததால் தானே நீ என் அருகே அமர்ந்து உன் மெல்லிய மூச்சுக் காற்றில் என் உடலில் புத்துணர்ச்சியை ஏற்படுத்துகிறாய்” என்று கூறி அவளுடைய இரு கரங்களையும் பற்றித் தன் அருகே அமர்த்த முயன்றான்.

“எழுந்து சென்று கதவை மூடிவிட்டு வருகிறேன். கொஞ்சம் நடக்க வேண்டும் என்று தோன்றுகிறது” என்று எழ எத்தனித்தவனை, குமுதம் தடுக்க,“பகலில் கதவை மூடக் கூடாது. இது மருத்துவமனை” என்றாள்.

“நாம் பேசவேண்டும்.”

“பேசுவோம். அதற்காகக் கதவை மூட வேண்டுமா?”

“யாராவது வந்துவிட்டால்?”

“வரட்டுமே.”

“நம் பேச்சு தடைப்படும். யுகயுகமாக நாம் பிரிந்திருந்த கதையைப் பேச வேண்டும். விராலிமலைக்கு அருகே நாம் பிரிந்ததிலிருந்து இந்தக் கணம் வரை நடந்தவற்றைப் பேச வேண்டும். நீ எப்படி இங்கு வந்தாய் என்பதை விவரிக்க வேண்டும். இவ்வளவு காலமாக உனக்கு ஏற்பட்ட இன்னல்களை, துன்பங்களை நீ எடுத்துச் சொல்ல வேண்டும். உனக்குத் தொல்லை கொடுத்தவர்களை, மறைத்து வைத்தவர்களை நீ அடையாளம் காட்ட வேண்டும். என் அருமைக் குமுதா! சோழநாட்டுப் பேரரசர் என்மீது அன்பு கொண்டவர். மரியாதை மிகுந்தவர். அவரது காதல் துணைவியும் அவ்வாறே என்மீது அன்பு மிகுந்தவர். நான் என்ன சொன்னாலும் அதை நிறைவேற்றக் கூடியவர்கள். சொல் குமுதா – சொல்” மாணிக்க சேகரன் வேகமாகப் பேசினான். பரபரப்புடன் பேசினான். நடந்தவற்றை எல்லாம் உடனே அறிந்து கொள்ள வேண்டும் என்ற துடிதுடிப்புடன் பேசினான். களைப்பு மிகுந்தது. அதைக் கவனித்த குமுதம் பேசுவதைத் தடுக்கவும், நிறுத்தவும் எண்ணி, குளிர்ந்த நீரால் அவன் உதடுகளைத் துடைத்து, அவனை மெல்லப் படுக்க வைத்து,“என் அன்பே! உங்களை விட எனக்கு ஆர்வம் மிக அதிகம். உங்களைப் பிரிந்திருந்த கால நிகழ்ச்சிகளை அறியும் ஆவல் எனக்கிருக்காதா? கிணற்று நீரை வெள்ளம் கொண்டு போய்விடாது. நான் இங்கேயே இருக்கப் போகிறேன். உங்கள் அருகேயே இருக்கப் போகிறேன். உங்கள் உடல் நலம் முற்றும் சீராகிப் பயணத்துக்குத் தக்கவாறு புதிய தெம்பு ஏற்படும்வரை உங்கள் அருகேயே இருக்கப் போகிறேன். சற்று இளைப்பாறுங்கள்: உண்ட களைப்பு நீங்கியவுடன் பேசுவோம்” என்று

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அவனை அமைதிப்படுத்தினாள்.

களைப்பு மேலிட்டது. அவன் விழிகளில் உறக்கம் சேர்ந்தது. இமை மூடக் கண்ணயர்ந்தான். குமுதவல்லி அவன் அருகேயே அமர்ந்து அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

இதே பழையாறை நகரில் இரண்டு திங்களாக அடைபட்டிருந்த அவளுக்கு, மாணிக்க சேகரன் அதே நகரில் இருப்பது தெரியவில்லை. சிற்பி இருக்குமிடத்தைக் கண்டுபிடித்துத் தருவதில் அரசு அதிகாரிகள் மெத்தனம் காட்டியதுதான் அவளுக்கு மிக வருத்தத்தை அளித்தது. கேட்ட கேள்விகளுக்கு அவர்கள் சரிவர மறுமொழி தராததுடன், மௌனம் சாதித்தது சந்தேகத்தை அளித்தது. கடைசியாக சோழ அரசி பஞ்சவன் மாதேவியைச் சந்திக்கச் சென்றபோது அதிகாரிகள் மெத்தனத்திற்கு அரசிதான் காரணம் என்பதை அறிந்தாள்.

சோழ நாட்டின் பெருமையை உலகுக்கு உணர்த்த வேண்டியசிற்பியை மிகவும் நேசிப்பவள் என்பதை அவர்கள் அறிந்தும், சிற்பி இருக்குமிடத்தைக் கண்டு கூறுமாறு அதிகாரிகளுக்குக் கட்டளையிடுவதில் அரசி ஏன் தயக்கம் காட்டுகிறாள் என்பது அவளுக்குப் புரியவில்லை. மாளிகையில் சுகசௌக்கியமாக வாழ எல்லாவித வசதிகளும் செய்யப்பட்டன. அந்தப்புரத்தில் வாழும் மகளிர்க்கு அளிக்கப்படும் உபசரணைகளுக்கும் ஆகார வகைகளுக்கும் குறைவில்லை. பட்டுப்புடைவையும், நறுமணத் திரவியங்களும், அறுசுவை உணவுகளும் அவள் மனத்தை மயக்கவில்லை. பெற்றோரைப் பிரிந்து காதலனை தேடி அலைந்து அவனுடன் சேரத் துடிக்கும் அவளுக்கு, ஏற்பட்ட வசதியான வாழ்க்கை கசந்தது.

மெல்ல மெல்ல உண்மையை அறிந்தாள். அரசிக்கு ஏற்பட்ட குடும்பப் பூசலுக்குத் தான் பலியாவதை அறிந்தாள். இராசேந்திர சோழ தேவரின் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் வீரமாதேவி எடுக்கும் பெரிய கோயிலைச் சிற்பப் பெட்டகமாக்கும் பெரும் பொறுப்பை மாணிக்க சேகரன் ஏற்றிருக்கிறார். தன் காதலியைக் காணாது தவிக்கிறார். சிற்பியின் உற்சாகத்தைக் குறைத்து, காதல் நோயால் சிற்பியைப் பித்துப் பிடித்தவர் போலாக்கி, சிற்பப் பணிக்குத் தடை விதிப்பது அரசியின் திட்டம். கலைஞர்கள் அழகுணர்வு மிக்கவர்கள். சிருங்காரத்தை ரசிப்பவர்கள். நடனக்கலையில் புலமை பெற்ற, இயற்கையாக அழகு வடிவமான வீரமாதேவியிடம் சிற்பி நெருங்கிப் பழகும் வாய்ப்பை ஏற்படுத்தி, வீரமாதேவிக்கு அவப் பெயர் ஏற்படுத்தினால், இராசேந்திர சோழர் சீற்றம் கொண்டு வெறுப்புற்றுஅவள் உறவைத் துண்டித்துக்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கொள்ளலாம் என்ற கபடமான சூது நிறைந்த திட்டம் அரசியின் மனத்தில் உருவாகியதன் விளைவு தான், குமுதமும் மாணிக்க சேகரனும் சந்திக்க முடியாது செய்தது.

மெல்ல, மெல்ல, அரசியின் இந்தத் தீய நோக்கத்தை குமுதம் அறிந்தாள். மாணிக்க சேகரனைச் சந்திக்க அல்லாமல் அரசி சூழ்ச்சி செய்வதன் காரணம் அதுவே என்பதை உணர்ந்தாள். அவளால் மாளிகைச் சுக வாழ்க்கையை ஏற்க முடியுமா?

அரசி பஞ்சவன்மாதேவி, வடக்கே இராசேந்திர சோழரின் அழைப்புக்கிணங்கப் புறப்பட்ட பிறகு தான், அந்தப்புரத்திலுள்ள வீரமாதேவியிடம் மதிப்பும் மரியாதையும் கொண்ட பணிப் பெண் ஒருத்தியின் மூலம், அரசியின் சூழ்ச்சிகளை அறிந்தாள்.

மாணிக்க சேகரன் கடும் காய்ச்சலால் பல நாள்களாய்ப் பழையாறையில் மருத்துவக் கூடத்தில் தங்கியிருக்கும் செய்தி அறிந்தவுடன், அந்த இடத்திற்குச் செல்ல குமுதம் துடிதுடித்தாள். ஆனால், மாளிகையை விட்டு வெளியே செல்லக் கட்டுப்பாடு இருந்தது.

ஒருநாள் - மாணிக்க சேகரனைக் காண வீரமாதேவியும் கருவூர்ச் சித்தரும் வருவதை அறிந்தாள். கருவூர்ச் சித்தரைச் சந்திக்கச் செல்வதாகத் தெரிவித்து மாளிகையில் இருந்து வெளியேறுமாறு பணிப்பெண் யோசனை கூறினாள்.

தொலைவில் இருந்தே கருவூர்ச் சித்தரையும், வீரமாதேவியையும் கண்டாள். ஆனால் மருத்துவமனையை நெருங்க முடியவில்லை. பழையாறையினின்று அரசி சென்ற பிறகு ஒரு நாள் நண்பகலில் குமுதம், மருத்துவக் கூடத்தை நோக்கி விரைந்தாள். அங்கே வீரமாதேவியைச் சந்தித்து அவள் பாதங்களைக் கெட்டியாகப் பற்றித் தனக்கு ஏற்பட்ட துன்பத்தை விவரித்தாள்.

வீரமாதேவிக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. அதே போது, அரசி பஞ்சவன் மாதேவியிடம் ஏற்பட்ட கோபத்திற்கும் அளவில்லை. மாணிக்க சேகரனை இயமன் வாயிலிருந்து மீட்ட சித்தரின் மூலிகை மருந்துடன், மாணிக்க சேகரனின் மன ஏக்கத்தை, குமுதாவின் வருகை தீர்க்கும் என்பதை உணர்ந்த வீரமாதேவி, குமுதவல்லியை முழுமையாகப் பயன்படுத்தத் தீர்மானித்தாள்.

குமுதவல்லியின் பணிவிடையால் மாணிக்க சேகரன் முற்றும் தேறி, பழைய தெம்புடன் சிற்பப் பணியில் ஈடுபடுவான் என்ற நம்பிக்கையில்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

மாணிக்க சேகரனை அவளிடம் ஒப்படைத்து விட்டுக் கோயில் பணியை முழுமூச்சுடன் முடிக்கக் கானகப் பகுதிக்கு விரைந்தாள்.

மாணிக்க சேகரனிடம் குமுதம் நடந்தவற்றை ஒன்று விடாமல் விவரித்த போது மாணிக்க சேகரனுக்கு மகிழ்ச்சியும் அதே போது கவலையும் சேர்ந்தன.

அவன் கவலைக்கும், அச்சத்திற்கும் காரணம் இல்லாமலில்லை. மறு நாளே பழையாறை அரசியின் மாளிகையிலிருந்து சில வீரர்கள், மருத்துவமனைக்கு வந்தனர். மீண்டும் அவளை மாளிகைக்கு அழைத்து வருமாறு அரிந்தவன் மாதேவியின் கட்டளை என்று தெரிவித்தனர்.

எத்தகைய இடர்ப்பாடு, எதிர்ப்பு, அரச கட்டளை ஏற்பட்டாலும் மாணிக்க சேகரனை விட்டுப் பிரிய, குமுதவல்லி விரும்பவில்லை.

# 70

# பெயரும் புகழும்

பெரிய கோயில் கட்டப்படும் பகுதி. சில நாள்களுக்கு முன்பு அடர்ந்த கானகப் பகுதி. கண்ணுக்கு எட்டிய தொலைவு வரையில் வெட்ட வெளியாகத் தென்பட்டது. அடர்ந்த மரங்களும், செடி கொடிகளும் புதர்களுமாக இருந்த இடத்தில் பாறைகள் கொண்டு குவிக்கப்பட்டிருந்தன.

ஒருபுறம் கோயில் திருப்பணி நடந்து கொண்டிருந்தது. ஒருபுறம் மாளிகையை எழுப்பக் கடைக்கால் தோண்டும் வேலையில் நூற்றுக்கணக்கானவர் ஈடுபட்டிருந்தனர். மிகப் பெரிய மாளிகை உருவாவதற்கான அறிகுறி தென்பட்டது.

செங்கற்கள் அடுக்கடுக்காய் வரிசையாய் சிறிய மதில் போல் நின்றன. அவை புத்தம் புதிதாய் சூளைகளிலிருந்து வந்து இறங்கி செந்நிறத்துடன் ஒளி வீசின.

ஒருபுறம் பாறைகளை உயரமான கற்தூண்களைச் சிற்பிகள் செதுக்கிக் கொண்டிருந்தனர். பெரும் கல்தூண்கள் உருளைகள் பொருத்தப்பட்ட வண்டிகளில் யானைகளால் இழுத்து வரப்பட்டன. தேர்கள், குதிரைகள், இரட்டை மாடுகளால் இழுக்கும் பார வண்டிகள், யானைகள் இழுக்கும் பார வண்டிகள் தடையின்றிச் செல்ல அகலமான பாதைகள்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

போடப்பட்டன. பாதைகளின் இருபுறமும், மரங்கள் நடப்பட்டன. அவை பெரிதாக வளர்ந்து நிழல் தருவனவாய் விளங்கும் காட்சி மனத்துக்கு இதமாய் இருந்தது.

'இந்தக் கானகப் பகுதியில் வெட்டப்பட்ட மரங்களின் எண்ணிக்கைக்கு ஈடாக புதிய மரங்களை வளர்க்க வேண்டும்' என்று அரசு அதிகாரிகள் கட்டளையிட்டு, நிறைவேற்றத் திட்டங்கள் வகுத்தனர்.

பல இடங்களில் வெண்ணெய் போன்ற நிறமுள்ள சுண்ணாம்பு அடிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது. கோயிற் பணி தொடங்குவதற்காக முதன்முதலில் கட்டப்பட்ட குடிலில் வீரமாதேவி அமர்ந்திருந்தாள். உண்ணும், உறங்கும் நேரம் தவிர அவளால் ஒரு கணம்கூட சும்மாயிருக்க முடியவில்லை.

கோயில் திருப்பணி, மாளிகைத் திருப்பணி, குடியிருப்பு இல்லங்கள், தெருக்கள், வீடுகள், வீரர்கள் தங்கும் விடுதிகள், என்று பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற வேண்டி யோசனை பெற, கட்டளை ஏற்கத் தொழிலாளர்களின் மேற்பார்வையாளர்கள் வந்து சென்று கொண்டிருந்தனர். தேனீக்கள் போல் சுறுசுறுப்பாக, தொழிலாளர்கள் இயங்கிக் கொண்டிருந்தனர். சிற்பிகள் எழுப்பிய சிற்றுளி ஓசை அந்தப் பகுதி முழுமையும் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

சிற்பி மாணிக்க சேகரனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை. குமுதவல்லியுடன் சேர்ந்து அவனும் அவளும் சிற்பப்பணி நடக்குமிடங்களுக்குச் செல்வதும் யோசனை கூறுவதுமாக சிட்டுகளைப் போலப் பறந்து கொண்டிருந்தனர்.

குமுதவல்லிக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. தன் இதயம் நிறைந்தவனுடன் சேர்ந்துவிட்டது முதல் மகிழ்ச்சி. சோழ நாட்டில் தஞ்சைபுரிக்கு அடுத்து பெரிய கோயில் ஒன்றை நிர்மாணிக்கும் மகத்தான பணியைத் தன் காதலன் ஏற்றிருப்பது மற்றொரு மகிழ்ச்சி. வீரமாதேவியிடம் மகிழ்ச்சி நிறைந்த தன் உள்ளத்து உணர்ச்சியை வெளியிட்டு நன்றி தெரிவிக்க வந்தபோது அவள் விழிகளில் மகிழ்ச்சிக் கண்ணீர் கோத்து நின்றது.

'குமுதவல்லி! உனக்கு ஏற்பட்ட முதல் மகிழ்ச்சி உன் அருமைக் காதலனுடன் சேர்ந்ததுதான். கடைசி நேரத்தில் அதற்குப் பெரும் இடர்ப்பாடு நேர இருந்ததை நீ மறந்துவிட்டாயா?" என்று வீரமாதேவி கேட்டாள்.

உண்மைக் காதலுக்குக் கடைசி வரையில் சோதனைகளும்,

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

இடர்ப்பாடுகளும் நேருவது உலக இயற்கை போலும் என்று வீரமாதேவி எண்ணிப் பெருமூச்சு விட்டாள். கை கூப்பியவாறு நின்றிருந்த குமுதவல்லி, மறுமொழி கூறினாள்.

“ஆமாம். இளவரசி அவர்களே! கைக்கு எட்டிய மாங்கனி எங்கே தவறி விடுமோ என்று பயந்து கலங்கினேன். கதிரொளி கண்ட பனிபோல் அது கரைந்தது. அந்தச் சூரிய ரேகைக்குக் காரணம் தாங்கள்தான் என்று அறியும்போது எங்கள் நன்றியை எவ்வாறு தெரிவிப்பது என்று தெரியவில்லை” என்று குமுதவல்லி மெல்லப் பேசினாள். உணர்ச்சி மிகுதியால் வார்த்தைகள் வெளிவரத் தடுமாறின.

வீரமாதேவி, அவளை அன்புடன் அணைத்துக் கொண்டாள். “நீ பட்ட துயரத்தை நான் பிறகுதான் அறிந்து கொண்டேன். உள் துயரம், வெளித்துயரம் என்று இரண்டு விதம். சாட்டை எடுத்து நூறு அடிகள் மேனியில் அடித்துக் காயப்படுத்தலாம். மருந்திட்டு அந்தக் காயத்தை ஆறச் செய்துவிடலாம். ஆனால், உள்ளத்தில் வடு அளிக்கும் வகையில் துன்பம் ஏற்படுத்துவதைத் தாங்கிக் கொள்வது கடினம். உன் இதயம் நிறைந்த மாணிக்க சேகரன் தெய்வப் பிறவி. அவர் கரங்களுக்கு இறைவன் மாய சக்தியை அளித்திருக்கிறான். இறைவன் சிற்பியின் மூலம் இந்தப் பூமியில் தோன்றப் போகிறார். சிறபிக்குத் தொல்லை கொடுக்க வேண்டும் என்பது சோழ அரசியின் நோக்கமன்று. ஒரு விதத்தில் நான்தான் காரணம் என்றும் சொல்லலாம். என்மீது அவருக்கு ஏற்பட்ட பொறாமை, சோழ நாட்டின் கலைக்கே இடையூறு செய்யுமளவிற்கு வளர்ந்து விட்டது. இங்கே ஏற்படவிருக்கும் பெரிய கோயிலால் எனக்கு அழியாப் பெருமை ஏற்படப் போவதாக அரசி நினைத்து விட்டாள். அதற்கும் நான்தான் காரணம் என்று நினைக்கிறேன். நான் ஒரு சபதம் செய்தேன். சிற்பியைத் தடுப்பதன் மூலம் சிற்பிக்கு மன வேதனை ஏற்படுத்துவதன் மூலம் கலைப் பணியைத் தடுத்துவிடலாம் என்று அரசி நினைத்துவிட்டார்கள். அதன் விளைவுதான் உங்களுக்கு அவர்கள் அளித்த தொல்லை” என்று ஆறுதலாகக் கூறினாள் வீரமாதேவி. தனக்கே மனப்புண்ணிற்கு மருந்திட மற்றவர் வருவாரா என்று தேடுவது போக, குமுதவல்லிக்கு ஆறுதல் சொல்லும் அளவிற்குத் தனக்குச் சக்தி ஏற்பட்டு விட்டது அவளுக்கு வியப்பாக இருந்தது.

“சிற்பியுடன் நான் சிற்பக்கூடத்திற்குப் புறப்படப் போகிறேன் என்று எண்ணியிருந்தபோது இளவரசி அழைப்பதாகக் காவலர்கள் வந்தார்கள். என்னை மாளிகைக்கு அழைத்துச் சென்றார்கள். சோழ சக்கரவர்த்தியின்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

மனத்துக்கு இனிய இளவரசியாம் - அரிந்தவன் மாதேவி, நோயுற்றுப் படுத்திருந்த நிலையிலும் என்னிடம் கடுமையாகப் பேசினாள். தங்கள் பெயரைக் குறிப்பிட்டு, கடுஞ்சொற்களால் ஏசினார்கள். அரசியார் வடக்கே சென்றிருக்கும் நிலையில், தானே அரசி என்றும் தன் உத்தரவுப்படி அதிகாரிகள் நடப்பார்கள் என்றும் ஆவேசத்துடன் கூறினார்கள்.

இன்னும் சில நாழிகைக்குள் சிற்பியையும் அழைத்து கொண்டு கண்காணாத தேசத்திற்குச் சென்றுவிட வேண்டும் என்று எச்சரித்தார்கள். அதற்காகப் பொன்னும் பொருளும் ஏராளமாகத் தருவதாகக் கூறினார்கள். சோழநாட்டு எல்லையைத் தாண்டிச் செல்லும் வரை தகுந்த பாதுகாப்பு அளிப்பதாகவும் உறுதி கூறினார்கள்.

“மீண்டும் தங்கள் பெயரைச் சொல்லி ‘ஒரு நாளும் அவள் திட்டம் நிறைவேறப் போவதில்லை. கோயில் பணிகள், ஏரி வெட்டுதல், வீடு கட்டுவது போன்ற காரியங்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களைத் தடுத்து அவரவர் ஊர்களுக்குச் செல்லுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது’ என்று கூறினார்கள். கடைசியாக அவர்கள் மெல்லக் கூறினாலும் கடுமையாகக் கூறிய சொற்கள் என்னை நடுங்க வைத்துவிட்டன. அதாவது தன் கட்டளையை இன்றைய பகற்பொழுதுக்குள் நிறைவேற்றவில்லை என்றால் சிற்பியுடன் நானும் இந்த உலகை விட்டே மறைந்துவிட நேரிடும் என்ற எச்சரிக்கை வார்த்தைகளைக் கேட்டவுடன், நான் மயங்கி விழாத நிலைதான்....”

குமுதவல்லி தொடர்ந்து பேசுவதைத் தடுத்து, வீரமாதேவி சொன்னாள்:

“எனக்கு எல்லாம் தெரியும். நடந்தவற்றை மீண்டும் விவரிப்பதன் மூலம் மனத்தில் மீண்டும் துன்ப நிகழ்ச்சிகளை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டாம். நல்ல செயல்களுக்குத் தொடக்கத்தில் தொல்லை ஏற்படும். துன்பத்தைக் கண்டு துவளக்கூடாது. நம் இலட்சியத்தில் உறுதியுடன் இருக்கிறோம் என்று இறைவனின் சோதனை என்று எண்ணி உறுதியுடன் இருந்துவிட்டால் அவன் உதவி நமக்கு உண்டு. சிற்பியும், நீயும் மருத்துவமனையிலிருந்து புறப்படும் தருணத்தில் இளவரசி அழைப்பதாகக் காவலர்கள் வந்து உன்னை மட்டும் அழைத்துச் சென்றதை நான் அறிவேன். உன்னைப் பயமுறுத்திப் பேசியதும் எனக்குத் தெரிய வந்தது. ஆனால், பிறகு என்ன நேர்ந்தது. எப்படி ஓர் அதிசயம் நடந்தது என்று உனக்குத் தெரியமா?” என்று கூறிச் சற்று நிறுத்தினாள் வீரமாதேவி.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தெரியாது என்று தலையசைத்து வீரமாதேவி என்ன சொல்லப் போகிறாளோ என்று வியப்புடன் அவள் முகத்தை விரிந்த விழிகளுடன் நோக்கினாள்.

"இளவரசி அரிந்தவன்மாதேவி தஞ்சைபுரியிலிருந்து பழையாறைக்கு, நோய்க்குச் சிகிச்சை பெறுவதற்காகவே வந்தாள். மன அமைதியுடன், முழு ஓய்வுடன் இருக்க வேண்டும் என்று மருத்துவர் எச்சரித்திருந்தும் அதை மீறி, மனத்தில் எப்போதும் சதித்திட்டங்களுக்கு இடம் கொடுப்பதால் உடல்நிலை சீர் குலைந்தது.

"உன்னிடம் பேசி, அதிகாரிகளை அழைத்துக் கட்டளையிடும் முன்னரே மயக்கமடைந்துவிட்டாள். வாய் பேச முடியாமல் போய்விட்டது. கரங்கள் செயலிழந்தன. பிறகு நடந்தது உனக்குத் தெரியும். நீயும் சிற்பியும் உற்சாகமாகப் பணியாற்றி வருகிறீர்கள். மதுரையினின்று நூற்றுக்கணக்கானவர்கள், காடு திருத்தி நாடாக்க வந்திருக்கிறார்கள். பஞ்சம் வந்துவிடுமோ என்று பயந்து, அடுத்து என்ன செய்வது என்று திகைத்திருந்த பகுதி மக்களை ஏரி வெட்டும் பணியில் ஈடுபடுத்தியதும் அவர்கள் உற்சாகத்துடன் வேலை செய்கிறார்கள்.

"சோழ சக்கரவர்த்திகளின் இலட்சியங்களில் ஒன்றான, மாபெரும் ஏரியை வெட்டுவது மிக விரைவில் நிறைவேறிவிடும். அவர்கள் திரும்பி வருவதற்குள் ஏரியை வெட்டி, கரையை உயர்த்தும் பணியை முடித்துவிட வேண்டும். சக்கரவர்த்திகள் கொண்டு வரும் கங்கை நீர் அந்த ஏரியில் நிரப்பப்படும்."

வீரமாதேவி விழிகளை மூடிக்கொண்டு தன் எதிரே ஏரியும், கோயிலும், மாளிகையும், நகரமும் கம்பீரமாக நிற்பனபோல் மெய்மறந்து உற்சாகத்துடன் விவரித்தாள்.

வீரமாதேவி விவரித்துக் கொண்டே வந்த போது, அவர்கள் வார்த்தைகளால் மெய்சிலிர்த்துப் போன குமுதம் வாய்விட்டு உற்சாகத்துடன் குரல் கொடுத்தாள். மாணிக்க சேகரனும் அங்கே வந்து சேர்ந்தான்.

"ஆமாம், ஆமாம். நான் செய்வது மிகையில்லை. இங்கே மூன்று அற்புதங்கள் நிகழப் போகின்றன. பெரிய கோயிலின் குடமுழுக்கும், ஏரியில் கங்கை நீர் நிரப்புதலும், புதிய மாளிகையில் அரச குடும்பத்தினர் குடிபுகுதலும் நடைபெறப் போகின்றன. கருவூர்ச் சித்தர் சோழநாட்டை விட்டுத் தெற்கே பொதிகை மலைச் சாரலை அடையும் நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. சோழ அரசியும், அரசரும் கங்கை நதியில் நீராடி,

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கங்கை நீருடன் திரும்பி வருவார்கள். வெற்றியுடன் அவர்கள் திரும்பும் நாளை நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். பெருவுடையார் கோயிலுக்குப் புகழ் சேர்க்கப் போகும் இரண்டு முக்கிய சிற்பங்களை முடிக்கும் பொறுப்பு உன் அருமை மாணிக்க சேகரனிடம் இருக்கிறது. அவையும் முடிந்து விட்டால் வாழ்வின் இலட்சியம் பூர்த்தியாகி விடும். பிறகு சோழ அரசியோ மற்றவர்களோ என்னைச் சோழ சக்கரவர்த்தியிடமிருந்து பிரித்து, என்னை நாட்டை விட்டு ஓட்டிவிட்டாலும் கவலைப்பட மாட்டேன்…”என்று கூறிவரும் போது மாணிக்க சேகரன்,“தேவி…” என்று பெருங்குரல் கொடுத்தான்.

“தேவி! என்ன கூறினீர்கள்? சோழ நாட்டில் உங்களுக்கு எதிர்ப்பாளரா? அப்படி ஒருவரும் இருக்க முடியாது: என்றும் ஏற்படப் போவதுமில்லை. தாங்கள் குறிப்பிட்ட கலைத் தேவியாம் ஞான சரஸ்வதியின் சிலை முடிவடையும் தருவாயிலுள்ளது. சண்டேச்வர அனுக்கிரகர் சிலையில் இன்னும் சில பணிகள் மட்டுமே உள்ளன. கண் திறக்க நாள் பார்க்குமாறு சோதிடரைக் கேட்டுக் கொண்டுள்ளேன். சக்கரவர்த்தியின் பெருமையுடன் உங்களுடைய புகழையும் உலகுக்கு எடுத்துக்காட்டும் வகையில், சூரிய சந்திரர் உள்ளவரை அழியாத சிற்பக்கூடமாகப் பெரிய கோயில் திகழும். என் நெடுநாள் ஆசை ஒன்றையும் நான் சக்கரவர்த்திகளிடம் விண்ணப்பிக்கப் போகிறேன். லோக மாதீச்சரம், ராஜராஜேச்சரம், செம்பியன் மாதேவீச்சரம் என்ற புகழ்க் கோயில்கள் இருப்பனபோல் இங்கே அமையும் கோயிலுக்கு வீரமாதேவீச்சரம் என்று பெயர் சூட்ட வேண்டும் என்று நான் சக்கரவர்த்திகளிடம் வேண்டப் போகிறேன். உருவாகும் பேரேரிக்கு வீரமாதேவி பேரேரி என்றும் ஊருக்கு வீரமாதேவி நகரம் என்றும் பெயர்கள் சூட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்ளப் போகிறேன்.”

வீரமாதேவி அதிர்ச்சியடைந்தாள். “சிற்பியாரே! சிற்பியாரே! என்ன வார்த்தைகள் கூறிவிட்டீர்கள்? என்னை மகிழ்விக்க வேண்டும் என்று இப்படிப் பேச மாட்டீர்களே. என்னைப் புகழ வேண்டும் என்று உயர்வு நவிற்சியாகப் பேசமாட்டீர்களே! இந்தப் பணிகளின் பெருமை முழுமையும் நம் தலைவர் சோழ சக்கரவர்த்திகளையே சேரவேண்டும். இந்த நகரத்திற்கு இராசேந்திர சோழபுரம் என்று பெயர் சூட்டப்பட வேண்டும். இராசேந்திர சோழப் பேரேரி என்று இந்த ஏரிக்குப் பெயரும், இராசேந்திர சோழீச்சரம் என்று பெரிய கோயிலுக்குப் பெயரும் சூட்டப்பட வேண்டுமென்பது தான் என் விருப்பம். நியாயம்கூட. கருணை கூர்ந்து தங்கள் எண்ணத்தை, விருப்பத்தை வெளியே யாரிடமும் சொல்லி விடாதீர்கள்” என்று உருக்கமாக வேண்டினாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

நகரம், ஏரி, கோயில் மாளிகைப் பணிகள் மிக வேகமாக நடைபெற்றுக் கொண்டிருந்த போது பழையாறையிலிருந்து அதிர்ச்சியான செய்தியொன்று வந்தது.

அரிந்தவன்மாதேவியின் உடல்நிலை கவலைக்கிடமாகி விட்டது என்ற செய்தியை அதிகாரிகள் விரைந்து வந்து தெரிவித்தனர்.

அந்தச் செய்தியை சக்கரவர்த்தி இராசேந்திர சோழரிடம் தெரிவிக்க உடனே புறப்பட்டுச் செல்லுமாறு வீரமாதேவி சோழ இளவரசரிடம் வேண்டிக் கொண்டாள்.

அடுத்து என்ன நேருமோ என்ற பெரும் கவலை வீரமாதேவியிடம் எழுந்தது.

# 71

# திறந்த விழிகளும் கலங்கிய விழிகளும்

இராசேந்திர சோழ தேவரின் இலட்சியமான பெரிய கோயிலில் அமைக்கப்படவிருந்த சிற்பப் பணிகள் மிகவும் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஒவ்வொரு சிற்பத்தையும், வீரமாதேவி ஆவலுடன் பார்த்தாள். ஓர் அதிசயத்தைப் பார்ப்பது போல் பரந்த விழிகளுடன் நோக்கினாள். ஒரு குழந்தையைப் போல் குதூகலித்துக் கரம் கொட்டிக் குதித்தாள்.

“தங்கள் கரங்களுக்குத்தான் எத்தனை திறமை?” என்று சிற்பியின் கரத்தை எடுத்துத் தன் விழித்தாமரையில் ஒத்திக் கொண்டாள். சிற்பியின் மெய் சிலிர்த்தது.

சிற்பத்தின் விழிகளைத் திறப்பதற்குத் தேர்ந்தெடுத்த நாளன்று மாணிக்க சேகரன், பொழுது புலருமுன்பு நீராடித் திருநீறணிந்து, தன் குடிலிலுள்ள பிள்ளையாரைக் கும்பிட்டுத் தோத்திரம் சொல்லி, சிற்றுளியை வணங்கி, வெளியே வந்து சகுனம் பார்த்துச் சிற்பக் கூடத்துக்குப் புறப்பட்டான். கஞ்சிக் கலயத்துடன் விரைவில் வருவதாகக் கூறி, குமுதவல்லியும் மலர்ந்த முகத்துடன் வழியனுப்பினாள். முதல் நாளிலிருந்து சிற்பி உணவேதும் அருந்தவில்லை. சிற்பத்தின் விழிகளைத் திறப்பதைப் புனிதமான நோன்பாகக் கொண்டான். இறைவன் திருடிவடிகளை நினைத்துக் கொண்டே இரவைக் கழித்தான்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அவன் படைத்த ஞான சரஸ்வதியின் சிலை அழகுடன் அமைந்து விட்டது. சிற்பத்தின் விழிகளைத் திறந்தவுடன் தான் கலைதேவியின் பூரணப் பொலிவு புலப்படும். விழி திறக்கும்போது எள்ளளவு தவறு ஏற்பட்டாலும் முழுச் சிற்பமும் வீண் தான். தவறு நிகழாது என்ற உறுதி அவனுள்ளத்தில் இருக்கிறது என்றாலும், அச்சமுமில்லாமற் போகவில்லை. தெய்வம் துணை நிற்க வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் சிற்பம் உருவாகும் கூடத்திற்குச் சென்றான்.

ஞான சரஸ்வதி முழுப் பொலிவுடன் காட்சியளித்தாள். மாணிக்க சேகரனின் விழிகளில் ஆனந்தக் கண்ணீர் பொங்கி நின்றது.

ஞான சரஸ்வதியின் சிற்பத்தின் எதிரே வீரமாதேவி மெய்மறந்து நின்றாள்.

“கலையின் அதிதேவதையே! உன்னைப் பணிகிறேன். வெள்ளைக் கலை உடுத்தி, வெண் தாமரைப் பூவில் வீற்றிருக்கும் தேவியே! உன் திருவடிகளில் வணங்குகிறேன். நடனம், இசை ஆகிய அறுபத்து நான்கு கலைகளின் நாயகியே! உன் பாதங்களில் சரணடைகிறேன்.

சகல கலைகளையும் படைத்தவளே! உன்னைப் பணிகிறேன். நிருத்தியத்தின் மூலம் உன்னை அஞ்சலி செய்யும் ஆற்றல் என்றும் என்னிடமிருந்து அகலாமலிருக்க அருள வேண்டும். தங்களிடமிருந்து நான் பெற்ற நடனக் கலையைக் கண்டுதானே அரசர் எனக்கு இவ்வளவு பெரிய வாய்ப்பு அளித்தார்!” என்று வீரமாதேவி பிரார்த்தித்தாள்.

மாணிக்க சேகரன் வீரமாதேவியின் இதழ்கள் துடிப்பதை நோக்கியவாறிருந்தான்.

“தேவி! தங்களுடைய ஊக்கமும் ஆதரவும் இல்லாவிட்டால் கலைவாணி இங்கு எழுந்தருளுவது ஏது?” என்றான் மாணிக்க சேகரன்.

“எல்லாம் சக்கரவர்த்தியின் கருணை. அவருடைய கலைக் கனவுதான் சிற்ப அற்புதங்கள் இங்கு நிகழக் காரணம். அவர் இப்போது இங்கிருந்தால் உங்களுக்குப் பல்லாயிரம் பொன் பரிசாக அளித்திருப்பார். என்னிடம் பொன் இல்லையே! சொல்லால் உங்களைப் புகழ்வதற்கு வார்த்தைகள்கூட வரவில்லையே” என்று உணர்ச்சி மிகுதியுடன் பேசினாள் வீரமாதேவி.

“சக்கரவர்த்தியின் திக் விஜயம் முடிந்து எப்போது திரும்பி வருகிறார்கள், தேவி? அதற்குள் கோயிற் பணிகளை முடித்து விடவேண்டாமா?” என்று

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

மாணிக்க சேகரன் கேட்டான்.

“ஆமாம், ஆமாம். எனக்கும் அதே கவலைதான். விழிகளை வலுக்கட்டாயமாக மூடினால், கலீர், கிணிங், கிணிங் என்ற ஓசைதான் கேட்கிறது. முன்னேற்றம் போதாது என்று தோன்றுகிறது. முன் மண்டபம் முடிந்து, மளமளவென்று விமானம் வளர்கிறது. தஞ்சைப் பெரிய கோயிலைப் படைத்த பரம்பரையில் வந்தவரின் கைவண்ணத்தைப் பார்த்தீர்களா? ஈழ நாட்டிலிருந்தும், மதுரையினின்றும் நான் எதிர்பார்த்ததைவிட அதிகமானவர்கள் உற்சாகத்துடன் பணிபுரிய இங்கு வந்திருக்கிறார்கள். மதுரையினின்று வந்தவர்கள் சில நாள்கள் வரை அரை மனத்துடன் கோயில் பணியில் ஈடுபட்டார்கள். இப்போது முழு உற்சாகத்துடன் வேலை செய்கிறார்கள். நம் சக்கரவர்த்திகளைக் காணவேண்டும் என்ற ஆவலுடன் பலர்,‘சக்கரவர்த்தி எப்போது திரும்பி வருவார்கள்?’ என்று ஒருவரையொருவர் கேட்டுக் கொள்கிறார்கள். ‘நாம் பணியை விரைவில் முடித்தவுடன் அவர்கள் வந்து விடுவார்கள்’ என்று அவர்களே பேசிக்கொள்கிறார்கள்.” என்று வீரமாதேவி பணிபுரிபவர்களின் கருத்தை எடுத்துக் கூறினாள். அவ்வாறு கூறும் போது முழுத் திருப்தி அவள் உள்ளத்தில் நிரம்பியிருந்தது அவள் விழிகளில் புலப்பட்டது.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சிலையின் அருள் விழிகளைத் திறப்பது எனத் திட்டமிட்டிருந்தான் மாணிக்க சேகரன். வரிசையாக நான்கு நாள்களும் நல்ல நாள்களாக அமைந்தன.

பௌர்ணமி அன்று, கருவூர்ச் சித்தர், கோயில் பணிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் காண வருவதாகச் செய்தி கிடைத்தவுடன், வீரமாதேவி பரபரப்படைந்தாள். கோயில் பணிகள் நடைபெறும் பகுதியை ஒருமுறை சுற்றிப் பார்க்க விரும்பினாள்.

ஓர் ஆண்டிற்கு முன்பு அடர்ந்த காட்டுப் பகுதியாக இருந்த அந்த இடம் இப்போது முற்றிலும் மாறியிருந்தது. பரந்த வெளியாக மாறி இப்போது கண்ணுக்கு எட்டிய தொலைவு வரை தொழிலாளர்கள் சுறுசுறுப்பாகப் பணிபுரிவது தெரிந்தது.

மாட்டு வண்டிகளும், குதிரை பூட்டியவண்டிகளும் அங்கும் இங்கும் சென்று கொண்டிருந்தன. ஏராளமான மூங்கில்கள் காததொலைவிலிருந்து கொண்டு வரப்பட்டன. ஆற்று மணலும், செம்மண்ணும், கருங்கற்களும் ஏற்றிய பார வண்டிகள் அசைந்தாடி வந்தன. மாளிகை, இல்லங்கள்,விடுதிகள், வீடுகள் என ஆங்காங்கே

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கட்டப்பட்டு வந்தன. வீடு கட்டும் கலைஞர்கள் சோம்பலின்றி இயங்கினர். அவர்களுக்கு உதவியாக இளம் பெண்களிலிருந்து முதிர்ந்த வயதுடையவர்கள் வரை ஓய்வு இன்றி அல்லும் பகலும் உழைத்தனர்.

புதிய நகரமும், மாளிகையும், கோயிலும் உருவாவதைப் பார்க்கத் தொலைவிலுள்ள பட்டி தொட்டிகளிலிருந்து மக்கள் வந்த வண்ணமிருந்தனர். வேடிக்கை பார்த்துச் செல்லாமல் தங்களால் இயன்ற பணிகளைச் செய்து கூலியாக தானியங்களையும், காசுகளையும் பெற்றுச் சென்றனர். பழையாறை நாணய சாலையில் புதிதாக உருவான செப்பு நாணயங்கள்அவர்களுக்கு கூலியாகக் கொடுக்கப்பட்டன. அந்தக் காசுகளைப் பார்த்து அவர்கள் வியப்படைந்தனர்.

எதிர்பார்த்தது போலவே கருவூரார் வந்துவிட்டார். சிற்பங்களைக் காண அவர் விரும்பினார். வீரமாதேவி உற்சாகத்துடன் கருவூராருடன் சிற்பக் கூடங்களுக்குச் சென்றாலும் அவளுள்ளத்தில் அச்சமும் நிறைந்திருந்தது. சித்தர் என்ன சொல்லப் போகிறாரோ என்ற கவலை அவள் விழிகளில் நிறைந்திருந்தது.

மாணிக்க சேகரன் ஒவ்வொரு சிற்பமாக விளக்கி வந்தான்.

ஆலமர் செல்வர், காலாந்தகர், காமாந்தக மூர்த்தி, தகூஷிணா மூர்த்தி என்று சிவபெருமானின் பலவிதத் தோற்றங்கள் கல்லில் அழகுறக் காட்சியளித்தன.

ஆடவல்லாரின் சிற்பமும் உருவாகிக் கொண்டிருந்தது.

கருவூரார் மாணிக்க சேகரனைத் தன் அருகே அழைத்து, சில குறிப்புகளைத் தெரிவித்தார்.

“ஆடவல்லாரின் சிற்பத்தை மிக நேர்த்தியாகச் செய்ய வேண்டும். சோழர் குலத்தைக் காக்கும் கடவுள் நடராசர். இராசேந்திரன் புதிய நகரத்தை நிர்மாணிக்காமல்தில்லையம்பதியை மேலும் விரிவுபடுத்தியிருக்கலாம். ஆனால் இராசேந்திரனுக்கு எல்லாம் புதுமையாக, மகத்தானதாக இருக்க வேண்டும் என்ற ஆர்வம். அந்த ஆர்வத்தைத் தூண்டியவளே இந்த வீரமாதேவிதான்” என்று கூறித் திரும்பிப் பார்த்தார்.

வீரமாதேவி, நாணமும் அச்சமும் கலந்து கரங்கூப்பி, நிலத்தை நோக்கித் தலைகுனிந்து நின்றாள்.

“என்ன, தேவி! நான் சொல்வது சரிதானே? காட்டு வெளியைக்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கண்ணுக் கெட்டிய தொலைவுவரை பொட்டல் வெளியாக மாற்றிஅங்கே கயிலாயத்தையே படைத்துவிடப் போகும் இராசேந்திரனின் எண்ணத்தை ஊக்குவிப்பவள் நீதானே?" என்று வெண் தாடியை வருடியவாறு கேட்டார் கருவூரார்.

மறுமொழி கூற வீரமாதேவிக்கு நா எழவில்லை. உணர்ச்சியால் விழிகளில் நீர் திரையிட்டது. இமைகளை மெல்ல மூடித் திறந்தாள்.

'சித்தர் பாராட்டுதலுக்கு நான் தகுதியானவள்தானா?' என்ற ஐயம் அவளுள்ளே எழுந்தது. மூங்கில் துறைக் கிராமத்திலிருந்த போது இப்படியொரு மகத்தான இலட்சியம் மனத்தில் விதைக்கப்பட்டதாகக் கூடத் தெரியவில்லையே! பிறகு எப்படிப் பிறந்தது? எல்லாம் இறைவன் அருள்' என்று நினைத்தாள்.

"சிறிது நேரமாக நீ ஒன்றுமே பேசாமல் இருக்கிறாய். மனத்தில் ஏதோ ஒரு கவலை – அப்படித்தானே பெண்ணே?" என்று கேட்டார் கருவூரார்.

"வடக்கே வெகு தொலைவில் இருக்கும் உன்நேசன் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறாரோ என்ற கவலை. எந்த விதத் துன்பமும் தொல்லையும் ஏற்படாமல் திரும்பி வர வேண்டுமே என்ற கவலை. கங்கை நீரைக் கொண்டு வந்து விரைவில் குடமுழுக்குச் செய்ய வேண்டுமே – கங்கை நீரை இவ்வளவு தொலைவு அவர் எப்படிக் கொண்டு வரப்போகிறாரோ என்ற கவலை.

இராசேந்திரன் வருவதற்கு முன்பு கோயில் விமானம் பூர்த்தியாகிவிட வேண்டும். சுற்றுக் கோட்டங்களில் பிரதிஷ்டை செய்யப்பட வேண்டிய தேவதைகளின் சிலைகள் இடர்ப்பாடின்றி முடிவடைந்திருக்க வேண்டும். ஆவுடையாரும் மாபெரும் லிங்கமும் செய்யப்பட்டு பாலாலயத்தில் ஒரு மண்டலப் பூசையில் இருக்க வேண்டும். இப்படிப் பல கவலைகள். இன்னொரு கவலையையும் உன் உள்ளத்தில் ஏற்றிக் கொள்-" என்று கூறினார். வெண்தாடியையும் தாண்டி அவர் நகைப்பது தெரிந்தது.

"வீரமாதேவி! கோயில் கட்டும் பணி என்பது எளிதன்று. இராசேந்திரனுக்குத் தன் தந்தை எழுப்பிய இராசராசேச்வரம் திருக்கோயில் முன் மாதிரியாக இருந்திருக்கிறது. ஆனால் இராசராசன் பெரிய கோயிலைக் கட்டும்போது கோயில் அமைப்பு முறை, விதிகள், அளவு எல்லாம் அவனுடைய சொந்த ஆற்றலால் எழுந்தன. திறமையான சிற்பியும் அவருக்கு உறுதுணையாக அமைந்தார்." என்றுகூறி மாணிக்க சேகரனை நோக்கி,"இளவயதிலேயே கலைமகளின் பூரண அருள்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பெற்றிருக்கும் நீ, உன் முழுக் கவனத்தையும் செலுத்தி, இராசேந்திரனின் பெரிய கோயிலை உலகப் புகழ் அடையுமாறு அமைக்க வேண்டும். உன் மனத்தில் சஞ்சலம் ஏற்படுவதற்கான சூழ்நிலைகள் ஏற்படலாம். பிரம்ம கர்மத்தைக் கடைபிடித்து நீ, உன் கை வண்ணத்தால் தெய்வங்களை இங்கே வந்தமரச் செய்ய வேண்டும்” என்றார்.

மாணிக்க சேகரன்மிகப் பயபக்தியுடன் அவர் கூறுவதைக் கேட்டுத் தலையசைத்தான். மீண்டும் வீரமாதேவியை நோக்கி,“எல்லாம் நல்ல விதமாக அமையும். அங்கே எதிர்ப்பவர்கள் யாரும் இன்றியே கங்கை நீரைக் கொண்டு வரப்போகிறான் இராசேந்திரன்” என்று புதிய நம்பிக்கையை அளித்தார் கருவூரார்.

“வீரமாதேவி! அரிந்தவன்மாதேவியின் உடல்நிலை கவலைக்கிடமாயிருக்கிறது என்று ஒலை அனுப்பினாயே. அதைக் கேட்டுப் பதற்றத்துடன் இராசேந்திரன் திரும்பி வந்து விட்டால்? கங்கை நீரைக் கொண்டு வருவது தடைப்பட்டுவிடுமே! நீ இப்படியொரு செய்தி அனுப்பியிருக்கலாமா? பட்டத்தரசியும் அங்கே சென்றிருக்கிறாள் என்பது உனக்குத் தெரியாதா? இந்தச் செய்தி கேட்டவுடன் கங்கை நீராடாமல், கங்கை நீரைக் கொண்டு வரத் திட்டமிடாமல் திரும்பி வந்து விட்டால் உன் இலட்சியம் என்னாவது? ஒன்று உறுதியாகச் சொல்கிறேன். பொதிகை மலைக்குச் செல்லும் திட்டத்தை நான் மாற்றிக் கொள்ள மாட்டேன். இன்னும் மூன்று பௌர்ணமிகள் உள்ளன –“ என்று கூறி, வீரமாதேவியின் உள்ளத்தை ஊடுருவது போல் பார்த்தார் கருவூரார்.

என்ன சொல்வது என்று தெரியாமல் திகைத்து நின்றாள் வீரமாதேவி.

“அரிந்தவன் மாதேவியின் இறுதிக் காலத்தில் அரசரை அவளருகே இருக்கச் செய்வது என் கடமையல்லவா?” என்று கேட்டாள் வீரமாதேவி.

“அந்தக் கடமையைச் செய்ய அவளுடைய மகன் இருக்கிறானே. அவனுக்கு இல்லாத பாசம் உனக்கு எப்படி ஏற்பட்டது?” கருவூராரின் இந்தக் கேள்விக்கு மறுமொழி கூறுவதற்கு முன் மீண்டும் கருவூரார் கேட்டார்.

“பெண்ணே! தர்ம நியாயத்திற்கு நீ கட்டுப்படுகிறாய். ஆனால் அரிந்தவன் தேவி, உனக்குத் தொல்லை தருவதையே தன்கொள்கையாகக் கொண்டிருந்தாளே! அவள் சொற்படி, இராசேந்திரன் நடந்திருந்தால் இங்கே கோயில் ஏது? சிற்பம் ஏது, ஏரி

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

ஏது, புதிய நகரம் ஏது?”

வீரமாதேவி கண் கலங்கினாள். குரல் தழுதழுக்க,“நான் அப்படி நினைக்கவில்லை. என்ன இருந்தாலும் இளவரசி அரிந்தவன் மாதேவிக்கு இருக்கும் உரிமை எனக்கு இல்லை. சக்கரவர்த்திகளின் அபிமானத்தைப் பெற்று, தன் உரிமையில் ஒரு பகுதியை நான் பகிர்ந்து கொண்டேன் என்ற கோபம்தான், பெரிய கோயில் உருவாவதற்கு அவர்கள் தடையாக நின்றது. இளவரசியின் தடையையும் மீறி கோயில் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. அதனால், இளவரசி மீதுள்ள கோபத்தைப் புலப்படுத்த இது தருணமன்று என்ற முடிவுடன், அரசருக்குச் செய்தி அனுப்பினேன். செய்தி அறிந்து அவர், திரும்பி விட்டால் - என்ன செய்வது புரியவில்லையே சுவாமி?” வீரமாதேவியின் விழி வேதனையை நீராகச் சொரிந்தன.

சித்தர், வீரமாதேவியின் இரு கரங்களையும் அன்புடன் எடுத்து தன் கரத்துடன் பிணைத்து,“கலங்காதே வீரமாதேவி! எல்லாம் நல்ல வண்ணமாக நடக்கும். அரிந்தவன் தேவியின் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டு விட்டது. பெரிய கோயில் குட முழுக்கு விழாவைப் பார்த்து விட்டுத்தான் அவள் கண் மூடுவாள். இப்போதே நீ அரசருக்கு ஓர் ஓலை எழுது. ‘கங்கை நீருடன் வரவும். திருப்பணிகள் எல்லாம் நல்லபடி முடியும் தறுவாயில் உள்ளன’ என்று குறிப்பிட்டு, விரைந்து செல்லுமாறு நம்பிக்கையான தூதுவரை அனுப்பிவை. அரசர் கரத்தில் கிடைக்குமாறு அனுப்பிவை.

“கங்கைக்கரைக்கு, சோழ வீரர்கள் சென்றடைந்து விட்டனர். அரசி பஞ்சவன் மாதேவி வருவதை அறிந்து, கோதாவரிக் கரையில் காத்திருக்கிறார் அரசர். நினைவிருக்கட்டும். இன்னும் மூன்று பௌர்ணமிகளே உள்ளன” என்றார்.

அரிந்தவன் தேவி பிழைத்து விட்டாளா? வீரமாதேவியின் முகம் மலர்ந்தது. அகம் குளிர்ந்தது. சித்தர் சொன்னது போல் ஓலை அனுப்பத் திட்டமிடலானாள்.

“வீரமாதேவி!” என்று மீண்டும் அழைத்தார் சித்தர். “செய்தியைத் தக்கவரிடம் அனுப்ப வேண்டும் என்று ஏன் சொன்னேன் தெரியுமா? அரிந்தவன் மாதேவியின் உடல்நிலை சரியில்லை என்று தெரிவிக்குமாறு சொன்ன ஓலை, அரசரை இன்னும் சென்றடையவில்லை” என்று சித்தர் கூறினார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

# 72

# மனித திட்டம் இறைவன் செயல்!

கோதாவரி பேராறு இரு கரைகளையும் அணைத்தவாறு பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது. வெகு தொலைவிலுள்ள கடலரசனுடன் சேர அது விரைந்து கொண்டிருந்தது. எதிர்க்கரை ஒரு மெல்லிய கோடுபோல் தெரியுமளவுக்குப் பரந்து விரிந்திருந்த கோதாவரியின் அழகைக் கண்டு ரசித்தவாறு அமர்ந்திருந்தார் சக்கரவர்த்தி இராசேந்திர சோழ தேவர்.

வேங்கியில் சில நாள்கள் தங்கிவிட்டு, கோதாவரியைக் கடந்து செல்ல அந்தச் சிற்றூரில் தங்கினார்.

அவர் தந்தை இராசராசன் காலத்திலேயே அந்த ஊரில் சிறிய மாளிகை கட்டப்பட்டது. சாளுக்கியர்களுடன் நடைபெறும் போரின் போது அங்கே தங்கி, படைத்தலைவர்கள் திட்டம் வகுப்பார்கள். வேங்கியில் ஏற்பட்ட குழப்பங்கள் காரணமாக பல ஆண்டுகளாக அந்த மாளிகை கவனிப்பவரில்லாமல் பொலிவிழந்திருந்தது.

இராசேந்திர சோழர் கங்கையில் நீராடச் செல்லப் போகிறார் என்ற செய்தி வேங்கையை எட்டிய பிறகு, வேங்கியில் அவரை விருந்தினராக வரவேற்று, உபசரிக்க விமலாதித்தன் விரும்பினார். நோய்வாய்ப்பட்டிருந்தால் முழு நிறைவோடு அவரால் செயலாற்ற முடியவில்லை. மேலும், அண்டை நாட்டு சாளுக்கிய அரசன் ஜெயசிங்கன் தொல்லை தரத் தொடங்கியதை முறியடிப்பதிலேயே அவர் பொழுதெல்லாம் செலவிட்டதால் மனவேதனையும் அதனால் ஏற்பட்ட உடல்நோயும் அவர் ஆற்றலைத் தடுத்தன.

இராசேந்திர சோழர் வேங்கியில் சில நாள்களே தங்கினார். தங்கிய அந்தக் குறுகிய காலத்திலேயே வேங்கியின் நிலைமையை முழுவதும் உணர்ந்தார். தான் எடுத்த பெரும் பணியை நிறைவேற்றுவதிலேயே அவர் கவனமாக இருந்ததால், வேங்கியில் தங்காமல் புறப்பட்டார். கோதாவரியைக் கடந்து கங்கைக் கரையை நோக்கிச் செல்லத் திட்டமிடலானார். அவர் எண்ணியது அவ்வளவு எளிதில் நடைபெறும் என்று தோன்றவில்லை.

அரசி பஞ்சவன் மாதேவி பழையாறையிலிருந்து புறப்பட்டு வரும் செய்தியும், வீரமாதேவி அவ்வப்போது அனுப்பும் செய்திகளும்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அவர்முன் பல பிரச்னைகளை உருவாக்கின. தன் எண்ணத்தையும், முடிவுகளையும் பகிரிந்து கலந்து ஆலோசிக்க அமைச்சர் குழுவினரை அவர் அழைத்து வரவில்லை. கங்கைக் கரைக்குச் செல்ல வேண்டும் என்ற நோக்கத்துடன் அவர் செல்கிறார். அவர் பயணத்தின் நோக்கம் புனித யாத்திரை என்றே வெளி உலகிற்குப் புலப்பட்டது. ஆனால் வேற்று நாட்டின்மீது படையெடுத்துச் செல்லும் அளவிற்கு வீரர்களும், போர்க்கலன்களும் அவர் பயணத்தில் இருந்தன.

ஆயிரக்கணக்கான வீரர்கள் அவருடன் செல்லக் காரணம் என்ன என்று அறிய சாளுக்கிய ஒற்றர்கள் முயன்றனர். கங்கைக் கரைக்குச் செல்லும்போது சக்கரக்கோட்டம், தண்டபுத்தி, ஒட்டரம், கலிங்க நாடுகளைக் கடந்து செல்லும்போது அந்த நாட்டரசர்களிடமிருந்து எதிர்ப்பு வந்தால் - அதற்காகப் படைகள், இராசராசனுடன் செல்கின்றன என்றே ஒற்றர்கள் அறிந்து சாளுக்கிய நாட்டிற்குச் செய்தி அனுப்பினார்கள்.

கோதாவரிக் கரையில், ஆற்றின் அழகை ரசித்தவாறு நேரம் போவதே தெரியாமல் இருக்கும் அரசன் அருகேயே பஞ்சவன் மாதேவி மௌனமாக ஒருநாள் இருந்தாள். இருநாள்கள் வீற்றிருந்தாள்.

ஒரு நாள் மாலை வேளை, கோதாவரியில் கதிரவன் மூழ்கி மறையும் நேரத்தில் அரசர் இருக்குமிடம் வந்தாள். அவளுடன், வீணை மீட்டுவதில் திறமை வாய்ந்த மங்கையும் வந்திருந்தாள். காலில் சதங்கை கட்டிய அழகிய பெண் ஒருத்தியும் வந்தாள்.

கோதாவரி நதியின் மேற்றிசையில் கதிரவன் நீராடி மறையும் அழகை ரசித்தவாறு இருந்த இராசேந்திரன், வீணை மீட்டும் ஒலி கேட்டுத் திகைத்துத் திரும்பினார்.

பஞ்சவன் மாதேவி அவர் அருகே வந்தமர்ந்தாள். வீணை மீட்டுபவளையும், நடனப் பெண்ணையும் காட்டி,“இவர்கள் எல்லாம் எதற்காக? ஏன் இங்கே அழைத்து வந்தாய்?” என்று புருவம் உயர்த்திக் கேட்டார் அரசர். பட்டத்தரசி பஞ்சவன் மாதேவி அவர் இருக்குமிடம் வந்து நான்கு நாள்களாகிவிட்டன. ஒருநாள்கூட அவளுடன் அமைதியாக அமர்ந்து அந்தரங்கமாக உரையாடவில்லை என்பதையும் அவர் அறிவார்.

நின்று கொண்டிருக்கும் பஞ்சவன் மாதேவியின் பாதாதி கேசம் முடிய அவர் விழிகளைப் படரவிட்டார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

மாலைப் பொழுதின் மங்கிய ஒளியில் தன்னை வைத்த விழி வாங்காது நோக்கிக் கொண்டிருந்ததைக் கண்ட பஞ்சவன் மாதேவி நாணமுற்றாள். மேனியெங்கும் முதுமை கொடி படர்ந்திருந்தாலும் பழுவேட்டரையர் குலத்துக்குரிய இயற்கையான கம்பீரம் அரசியாரிடமிருந்து மறையவில்லை. விழிகளுக்குக் கீழே தேங்கியிருந்த சுருக்கம், இளமையில் தாம் எப்படியெல்லாம் இராசேந்திரனைக் கவர்ந்திழுக்கும் சக்தி படைத்திருந்தோம் என்று நினைத்துக் கொண்டது. கடைவாய்ப் பற்கள் சில தங்கள் உறவை விட்டுப் பிரிந்து, தாங்கள் வாழ்ந்த இடத்தை நிரூபிக்க அடையாளம் விட்டுச் சென்றதால் ஒரு காலத்தில் செழுமையாயிருந்த கன்னங்கள் சோபை இழந்திருந்தன.

அந்த முதிய பருவத்திலும் அரசர் தன்னைப் பாதம் முதல் முடி வரை நோக்குவதைக் கண்டு நாணமுற்று, மெல்லத் தலை குனிந்தாள், பஞ்சவன் மாதேவி.

இராசேந்திரன் அவளைப் பார்த்து மெல்ல நகைத்து,“தேவி, ஏன் நிற்கிறாய்? இப்படி உட்காரலாமே. அதோ பார். மேற்றிசையில் சூரியன் செங்கோணமாய், திருமால் கைச் சக்கரம் போல் சுழன்றுகொண்டு மறைய விரைவதை” என்றார்.

பஞ்சவன் மாதேவி தொண்டையைக் கனைத்துக் கொண்டு,“தங்களைத் தேடி நான் வந்திருப்பதும், நினைவில்லாமல் சூரியன் உதயமாவதையும், மறைவதையும் பார்த்து மகிழ்ந்தவாறு இருக்கறீர்கள். அதற்குக் கோதாவரிக் கரைக்கு வரவேண்டுமா? காவிரிக் கரையிலில்லாத சூரியோதயமா?”

மெல்ல நகைத்து, தலைகுனிந்தவாறு இருக்க வேண்டும் என்று எண்ணியவள், தன் உள்ளத்துள் குமுறிக் கொண்டு இருப்பதை மேலும் தொடர்ந்து வெளிப்படுத்த முயன்றாள்.

இராசேந்திரன், பஞ்சவன்மாதேவியைத் திரும்பிப் பார்த்தார். மெல்ல நகைத்தவாறு “நீ வந்திருப்பதை நினைவு படுத்த வீணையும், நாட்டியமும் வேண்டுமா?” என்று கேட்டார். அவர்களை உடனே போகச் சொல்லு என்பதை மறைமுகமாகப் புலப்படுத்த.

பஞ்சவன் மாதேவி புரிந்து கொள்ளவில்லை. “நடனம் என்றால் உங்களுக்குப் பிடிக்குமே என்றுதான் நடனமாதை என்னுடன் அழைத்து வந்தேன். தேவாரப் பாடல்களை நீங்கள் விரும்புவீர்கள் என்பதும் தெரியும். மிக நல்ல வீணையைத் தடவி மீட்டி – அதற்கேற்ப ஆடப்படும் நடனம் தங்கள் மனத்தைக் கவரும் என்பதும் எனக்குத் தெரியாதா?”

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

என்று கூறிச் சற்று நிறுத்தினாள். விழிகள் அரசரின் முகத்தை ஆராயச் சுழன்றன.

இராசேந்திரன் அவளை ஒரு கணம் உற்றுப் பார்த்து “தேவிக்கு இப்போதாவது இசை நாட்டியத்தின் மீது மதிப்பு ஏற்பட்டதே! தன் பிரியமானவருக்குப் பிடித்ததைத் தானும் பிடித்ததாகக் கொள்ள வேண்டும் என்பதை உணர பலகாத தூரம் கடந்து கோதாவரி நதிக்கரைக்கு வரவேண்டியதாயிற்று பார்த்தாயா?” என்றார்.

அவர் பேசியதில் புதைந்து இருக்கும் மறைபொருளை உணராத பஞ்சவன் மாதேவி,“எனக்கும் கலைகளில் விருப்பம் உண்டு என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் தங்கள் மனத்தைக் கவரும் இளம் வயதை நாம் விரும்பிப் பெறமுடியுமா?” என்றாள்.

பேச்சின் திசைமாறி, தேவிக்கு மீண்டும் வருத்தத்தை வரவழைக்கக் கூடாது என்பதற்காக, இராசேந்திரன் மகிழ்ச்சி நிறைந்த குரலில்,“தேவி! இளமையைப் பற்றி இப்போது ஏன் நினைக்கிறாய்? உனக்கு மட்டும் தானா? எனக்கும் இளமை மீண்டும் வரப்போகிறதா? உன்னை முதன்முதலில் சந்தித்த அதே இனிய நினைவுகள் போதும். போர்க்களங்களில் வாழ்நாளில் பெரும் பகுதியைக் கழித்தேனே – அதை நினைத்து மகிழ்வதா – வருத்தப்படுவதா? மகிழ்வது எதற்காக என்று கேட்கிறாயா? இளம் பருவத்தில் பெரும் வெற்றிகளைப் பெற்றதால் எட்டுத்திக்கும் என்னைப் புகழ்கிறது. வீரனாக வாழாமல் இளமை உல்லாசத்தில் மோகக் கடலில் மூழ்கியிருந்தால் சோழ நாட்டிற்கோ எனக்கோ புகழும் பெருமையும் கிடைத்திருக்குமா? இளமை முழுவதுமாக நம்மிடமிருந்து மறைந்து விட்டது என நினைக்கிறாயா, தேவி?” இராசேந்திரன் கேட்டுவிட்டு, நடனப் பெண்ணையும், வீணை மீட்ட வந்திருப்பவளையும் அங்கிருந்து போய்விடுமாறு சைகை காட்டினார்.

அரசர் அந்தரங்கமாக பேச விரும்புகிறார் என்பதைப் புரிந்து கொண்ட பஞ்சவன்மாதேவியும், அரசர் விருப்பத்தை ஆமோதிப்பவள் போல் அவர்களைப் போகுமாறு கூறித் தலையசைத்தாள்.

மனக் குறையையெல்லாம் பேச நினைத்து முடியாததால் பஞ்சவன் மாதேவிக்குத் துக்கம் நெஞ்சை வந்து முட்டியது. ‘இருவருக்கும் முதுமை வந்துவிட்டது. நானும் வயதைப் பற்றி எப்போதும் நினைத்துப் பார்ப்பதில்லை. நீங்களும் நினைத்துப் பார்ப்பதில்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால், மற்றவர்கள் தங்களைப் பற்றி அவ்வாறு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

நினைப்பதில்லை. அதனால் தானே, தங்களை வீரம்மாள் மயக்கிவிட்டாள்?'

மனத்தில் குமுறிய இந்த எண்ணத்தை வார்த்தைகளாகக் கொட்டிவிட எண்ணினாள். ஏதோ ஒன்று அவளைத் தடுத்தது.

அரசர் தன்னுடன் தனியே பேச விரும்பும் இந்தப் போதில், நாதபேதம் ஏற்படுத்தி விடக்கூடாது என்பதனால் அவள் மௌனமானாள். அது கரைந்து கண்ணீராகப் பொங்கியது. துக்கத்தை அடக்க முயன்றாள். அது விம்மலாக வெளிவந்தது.

"தேவி! தேவி! ஏன் அழுகிறாய்? என்ன நேர்ந்தது உனக்கு? நல்ல வேளையாக நடனப் பெண்ணையும் வீணை வாசிப்பவளையும் இங்கிருந்து அனுப்பி விட்டேன்! அவர்கள் இங்கு இருந்திருந்தால் என்ன நினைப்பார்கள்? சோழ அரசி அழலாமா? மண்ணில் கண்ணீர் சிந்தலாமா?" என்று கூறி தேவியின் கரங்களைத் தன் கரங்களுடன் பிணைத்துக் கொண்டார். பிறகு ஆதரவாக அவள் கூந்தலையும், முதுகையும் வருடினார். விழிநீரைத் துடைத்தார்.

பரந்த திண்தோள் வீரரான சோழ சக்கரவர்த்தியின் கரம் பட்டவுடன், அவள் உடல் சிலிர்த்தது. இவ்வளவு ஆண்டுகளில் உணர்ந்திராத ஒரு சிலிர்ப்பு அவள் மேனியெங்கும் மின்னல் வெட்டைப் போல் பாய்ந்து பரவியது.

அந்தக் கணம் பஞ்சவன் மாதேவி வானில் பறப்பது போன்ற உணர்வை அடைந்தாள். இதுவரையில் அவள் நெஞ்சை அழுத்தியிருந்த சுமை திடீரென இறங்கி விட்டது போல் உணர்ந்தாள்.

'இவருக்கா, நம்மிடம் அன்பு குறைந்துவிட்டது என்று நினைத்தோம்? இவரா, இளம்பெண்ணின் மாயையில் சிக்கி, நம்மை வெறுத்து, அரசி என்ற நிலையிலிருந்து நம்மை இறக்கி அந்த இடத்தில் நடனப் பெண்ணை அமர்த்திடப் போவதாக எண்ணினோம்? வீரம்மாள் வந்ததால் நம்மை அரசர் மறந்துவிட்டு, நம் மதிப்பு குறையுமாறு செய்துவிடுவார் என்று கற்பனை செய்து கொண்டோம்? அடடா, அதற்காகவா கலைக் கோயில் எழாதவாறு தடுக்க முயன்றோம்?

அவள் விழிகளில் தேங்கி நின்ற கடைசி சொட்டுக் கண்ணீரையும், அரசரின் மேலாடை துடைத்தது. "தேவி! நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கிறது. கங்கை நதிக் கரைக்குச் சென்று உன் கரம் பற்றி உன்னுடன் இணைந்து நீராட நினைத்தேன். அந்த எண்ணம் ஈடேறாது

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

போல் தோன்றுகிறது. அடுத்து என்ன செய்வது போன்ற சிந்தனையில் ஆழ்ந்திருந்தேன். இரண்டு நாள்களாக அதே சிந்தனை. அப்பப்பா! பழையாறையிலிருந்து வடக்கே பயணம் வருவது எளிதன்று என்பது எனக்குத் தெரியாதா? பயணம் சுகமாக இருந்ததா? கிருஷ்ணை ஆற்றங்கரை வரையில் நம் பிரதிநிதிகள் ஆங்காங்கே வந்து உன்னைக் கண்டு வணங்கியிருப்பார்களே! உனக்கு எந்தவிதக் குறையும் ஏற்படாமல் பார்த்திருப்பார்களே! நான் இப்போது தான் பயணக் களைப்பை உணர்கிறேன். தொடர்ந்து, இலட்சியம் நிறைவேறப் பயணம் செய்து கொண்டிருந்தால் களைப்பும் சோர்வும் ஏற்பட்டிருக்காது" என்று கூறிச் சற்று அமைதியானார்.

"தேவி! முன் யோசனையுடன் படை வீரர்களை அழைத்து வந்தது இப்போது பயன் உடையதாய் இருக்கிறது. நம் வீரர்கள் வடகிழக்கிலும், வடமேற்கிலுமாகப் பிரிந்து செல்லும் கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. சாளுக்கியர்கள் கொட்டம் ஒடுங்கி அவர்கள் அமைதியாகி விட்டார்கள் என்று எண்ணியது எவ்வளவு தவறாகி விட்டது? என் தந்தையின் கடைசிக் கால சூளுரையை இப்போது எண்ணிப் பார்க்கிறேன். சாளுக்கிய நாடென்று ஒரு நாடே இல்லாமல் அப்போதே செய்திருந்தால் இப்போது கவலைப்படுமாறு நேர்ந்திருக்காது. ஹும்..." என்று கூறிப் பெருமூச்சு விட்டார் இராசேந்திரன்.

பஞ்சவன் மாதேவிக்குச் சோழ நாட்டு அரசியல் ஓரளவிற்குத் தெரியும். சாளுக்கியர்களுடன், தன் மாமனார் சக்கரவர்த்தி இராசராசன் பலமுறை பெரும் போர் நடத்தி வெற்றி வாகை சூடியதை அவள் அறிவாள். அந்தப் போர்களில் பலமுறை தன் கணவர், இராசேந்திர சோழன் பங்கு கொண்டு வெற்றி பெற்றதும் பெரும் புகழ் எய்தியதும் அவள் அறிவாள். சோழர்களுக்கு விரோதி யாருமிலர். எதிர்த்துப் போரிட நினைப்பவர்கள் யாருமில்லை. இனி அமைதி அமைதி அமைதிதான் என்று அவள் எண்ணிக் கொண்டிருக்கும்போது, கோதாவரி நதிக்கரையில் அமைதியாக உரையாட வந்த வேளையில் சோழ சக்கரவர்த்தி சாளுக்கியர்களைப் பற்றிக் கவலைப்படுகிறாரே-

"தேவி! சாளுக்கிய அரசன் சத்தியாச்ரயனுடன் போரிட்டு நான் வெற்றயடைந்ததை நீ அறிந்திருக்கலாம். அவன் ஆண் வாரிசின்றி இறந்தான். அப்பொழுதே சோழப் பிரதிநிதியை அங்கே நிலை நிறுத்தி சோழ நாட்டின் ஒரு பகுதியாக அந்த நாட்டை மாற்றியிருக்க வேண்டும். ஏனோ தந்தை தடுத்தார். 'எதிரிகளை வெல்ல வேண்டும் என்பதே நம் இலட்சியம். நாட்டை ஆக்ரமிப்பதன்று' என்று அறிவுரை கூறினார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“வாரிசு இல்லாத சாளுக்கிய நாட்டில் அடுத்து அரியணை ஏறப்போவது யார் என்று வாரிசுப் போர் ஏற்பட்டுக் குழப்பம் நிலவும்: அப்போது நாம் தலையிடலாம் என்று எண்ணியிருந்தேன். ஆனால் சத்தியாச்ரயனின் உடன்பிறந்தான் தசவருமனின் மகன் விக்கிரமாதித்தியன் முடிசூடிக் கொண்டான். நாட்டை ஆளும் வலிமை அவனுக்கு இல்லை என்ற செய்தி எனக்குக் கிடைத்தது. அதற்கு ஏற்றவாறு முடி சூடிக்கொண்ட நான்கு ஆண்டுகளிலேயே அவன் இறந்தான். அதுதான் சரியான தருணம். கீழைச் சாளுக்கிய நாட்டுடன், மேலைச் சாளுக்கிய நாட்டையும் ஒன்று சேர்த்து விட வேண்டும் என்று எண்ணினேன்.

“நான் கோதாவரி ஆற்றங்கரைக்கு வந்த பிறகுதான் சில செய்திகளை முழுமையாக அறிந்தேன். விக்கிரமாதித்தியனுக்குப் பிறகு அவன் மகன் ஜெயசிங்கன்பட்டமேறினான். ஆட்சியைத் தொடங்கும்போதே நம் மீது விரோத எண்ணத்துடன் தொடங்கினான். அவன் நம்மை எதிர்க்கப் பெருந் திட்டமிடுகிறான் என்பதை அறிகிறேன். அவனால் நமக்குப் பெரும் தொல்லை வரப்போகிறது என்று இப்போது உணர்கிறேன். அவன் வேங்கியில் நுழையப் பார்க்கிறான். கீழைச் சாளுக்கிய நாட்டைத் தன் நாட்டுடன் சேர்க்கப் பார்க்கிறான். விமலாதித்தன் சக்தி குறைந்திருக்கும் நிலையில் ஜெயசிங்கன் எண்ணம் எளிதில் நிறைவேறலாம். நாம் கங்கைக் கரைக்குச் செல்லப்போவதை அறிந்து அவன் நேரே நம்மிடம் மோதாமல் நாம் செல்லும் வழியிலுள்ள ஒட்டரர்களையும் கலிங்கரையும் நம்மை எதிர்க்கத் தூண்டுகிறான். எப்பாடுபட்டாவது என்னைச் சிறைப்பிடித்து விட வேண்டும் என்பதும் அவனது ரகசியத் திட்டமாம்!” என்று கூறிப் பெரிதாக நகைத்தார் இராசேந்திரன்.

அரசன் இவ்வாறு நகைத்துப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன என்பதை, பஞ்சவன் மாதேவி அறிவாள். அரசரின் உள்ளத்தில் இதுவரை அடக்கி வைக்கப்பட்டிருந்த சீற்றம் சிரிப்பாகப் பொங்கியிருக்கிறது என்பதையும் அறிவாள்.

“தேவி! இவை எல்லாம் ஒரு பக்கமிருக்கட்டும். நம் படைவீரர்கள் இதற்கெல்லாம் அஞ்சாதவர்கள். அவர்களுக்கு வழிகாட்டி நடத்திச் செல்லும் தளபதி அரையன் இராசராசன், வீரமும், தீரமும், புத்திக் கூர்மையும் உடையவன். அவன் இருக்கும் வரையில் ஜெயசிங்கன் கனவு, கனவுதான். ஆனால், பெரும் ஆபத்து மற்றொன்று

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

காத்திருக்கிறது. வீட்டினுள்ளே கொடிய நாகம் புகுந்தது போல் மேற்கே ஓர் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

“கங்கை மாநதியைப் போல மேற்கே சிந்து நதி என்ற நதி – காவிரி, கோதாவரி மகாநதி, கங்கை, பிரம்மபுத்ரா போன்று மிகப் பெரிய நதி மட்டுமன்று: புண்ணிய நதியுங்கூட. எனக்கோர் ஆசை உள்ளத்தின் ஒரு மூலையில் இருக்கிறது. கங்கையில் நீராடுவது போல், சிந்து நதியிலும் நீராடி மகிழ வேண்டும். மேற்குக் கடற்கரையில் கிருஷ்ணபிரான் வாழ்ந்த நாட்டிற்கும் சென்று அங்குள்ள பழைமையான கோயிலைக் கண்டுவர வேண்டும் என்பதே அந்த எண்ணம். ஆடவல்லான் அருளால் நீண்ட ஆயுள் இருந்தால் அந்த எண்ணம் நடைபெறாமலா போகப் போகிறது? ஆனால், சிந்துநதி பாயும் இடங்களுக்கு அருகிலுள்ள நாடுகளுக்குப் பெரும் ஆபத்து வந்திருக்கிறதாம். கஜினி முகமது என்றோர் அரசன் இமயமலையைத் தாண்டி இந்த நாட்டிற்குள் நுழைந்திருக்கிறானாம். வேற்றுச் சமயத்தினரான அவனுக்கு நம் நாட்டுப் பொன்னின் மீதும் பொருளின் மீதும் பேராசை. வடக்கே உள்ள நாட்டை எல்லாம் கைப்பற்றும் பேராசையுடனும், பெரும் வெறியுடனும், ஏராளமான போர் வீரர்களுடனும் அவன் சிந்துநதியின் கரைகளிலுள்ள நாடுகளின் மீது ஒருமுறை படை எடுத்த பொழுது, அம்முயற்சி வெற்றியடையாமல் மீண்டும் வரப்போவதாகக் கேள்வி. ஏராளமான படை வீரர்கள் வலிமையும் அவர்களது தோள்வலிமையும், வாள் வலிமையும் கொண்டு பாய்ந்து வரும் அவனைத் தடுத்து நிறுத்தாவிடில் எல்லா அரசர்களுக்கும் ஆபத்து அல்லவா? இதை உணர்ந்து வட மேற்கு நாட்டு அரசர்கள் சிலர் நம் உதவி நாடி வரப்போவதாகச் செய்தி வந்துள்ளது. அவர்கள் தெற்கே தொலைதூரத்திற்கு தஞ்சைபுரிக்கு வர வேண்டுமே என்ற கவலையுடன் இருந்தபோது, கங்கை நீராட நாம் வரப்போகும் செய்தி அறிந்து, மகிழ்வுற்று என்னைச் சந்திக்க வரப்போகிறார்கள்.

“ஒவ்வொரு நாளும் அவர்களை எதிர்பார்த்து நான் காத்திருக்கிறேன். அவர்களுக்கு உதவ படைவீரர்களை அனுப்ப ஆயத்தமாக இருக்கிறேன். தேவைப்பட்டால் நானே போகலாம் என்ற எண்ணம்” என்று கூறி அவர் பேச்சை நிறுத்தியபோது பஞ்சவன் மாதேவி கவலையடைந்தாள். “கங்கை நீராடச் செல்லாமல் என்னை இங்கே தங்குமாறு கூறிச் செல்லப்போகிறாரா? அல்லது பழையாறைக்குத் திரும்பிச் செல்லுமாறு கட்டளையிடப் போகிறாரா? புதிதாகக் கட்டப்படும் கோயிலின் குடமுழுக்கின் நாளைத் தள்ளிப் போட்டால், கருவூரார் கோபமுற்று பொதிகை மலைக்குச் சென்று விடமாட்டாரா?

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பஞ்சவன் மாதேவிக்கு எதைப் பற்றியும் சிந்திக்கத் தோன்றவில்லை. நாமும், சக்கரவர்த்திகள் செல்லும் இடமெங்கும் செல்வோம்' என்று எண்ணினால் கோயில் குடமுழுக்கைத் தள்ளிப் போடட்டுமே! கருவூரார் பொதிகைக்குச் செல்லட்டுமே! வீரமாதேவியின் எண்ணத்தில் மண் விழட்டுமே! எல்லாம் இறைவன் செயல்" என்று எண்ணி இறைவனைத் துதிக்கக் கண்களை மூடிக் கொண்டாள்.

அந்தப்போதில், பணியாள் ஒருவன் வந்து மரியாதையும் பயமும் சேர வணங்கி செவியருகே ஏதோ கூறினான்.

இராசேந்திர சோழர் நிமிர்ந்து உட்கார்ந்தார். கோதாவரி நதியைக் கூர்ந்து கவனித்தார்.

நான்கு படகுகள் வந்து கொண்டிருந்தன. படகுகளின் மீது அமைதிக் கொடியான வெள்ளைக் கொடி பறந்து கொண்டிருந்தது.

மேற்குத் திசை நாட்டினின்று உதவி கேட்க வருகிறார்கள், போலும்! என்று எண்ணினார் இராசேந்திர சோழர்.

# 73

# தீர்த்த யாத்திரையா? திடீர்ப் படையெடுப்பா?

இரண்டு நாள்களாக வீரமாதேவியின் மனம், பெரும் காற்றில் சிக்கிய தீபம் போல் நிலைகொள்ளாமல் தவித்தது. வடக்கே இராசேந்திர சோழ தேவரிடமிருந்து செய்தி ஏதும் வரவில்லை. கருவூர்ச் சித்தர் சொற்படி அரிந்தவன் மாதேவியின் உடல்நலம் சீர் கெட்டிருக்கும் செய்தியைத் தெரிவிக்காது இருந்தாள். அவள் ஓலை எழுதாவிடில் என்ன –பழையாறையிலிருந்து செய்தி அரசரைச் சென்றடைந்திருக்காதா? அவ்வாறு மற்றவரால் அனுப்பப்பட்ட செய்தி கிடைத்து, நான் எழுதாது இருந்துவிட்டதற்காக சக்கரவர்த்திக்கு என்மீது வருத்தம் ஏற்பட்டிருந்தால், வேண்டுமென்றே நான் அரிந்தவன் மாதேவியின் உடல்நிலையைக் குறித்து எழுதாது மறைத்துவிட்டேன் என்று நினைத்துவிட்டால்...?

புதிய நகரம் மிக வேகமாக உருவாகி வருவதையும், வீடுகள் கட்டப்படுவதையும், மாளிகைகள் அமைவதற்காக கடைக்கால்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தோண்டப்படுவதையும், பெரிய கோயிலைச் சுற்றி கற்பாறைகளால் மதிற் சுவர் கட்டும் பணி தொடங்கப்பட்டிருப்பதையும், பரந்து விரிந்திருக்கும் நீள அகலமுடைய ஏரி வெட்டப்பட்டு, அதனின்னு அகழ்ந்து எடுக்கப்பட்ட மண், பள்ளமான பகுதியை நிரப்ப வண்டிகளில் சென்ற வண்ணமாக இருப்பதையும் பார்ப்பதற்குப் பல குறுநில மன்னர்கள் வந்தனர். சோழ நாட்டுப் பிரமுகர்கள் வந்தனர். புதிய நகரம், புதிய கோயில், பெரிய ஏரி, சாலைகள், வீதிகள் போன்ற வியக்கத்தக்க பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதைக் காண வருபவர்கள் வீரமாதேவியையும் காணாமல் செல்வதில்லை.

இராசேந்திர சோழ தேவரின் அபிமானத்தைப் பெற்றவள், இளவரசியருள் மிக முக்கியம் வாய்ந்தவள் வீரமாதேவி என்பதை அனைவரும் அறிவார்கள். குறிப்பாக சோழ நாட்டு அதிகாரிகள், மலையமான், வேளிர் போன்ற குறுநில மன்னர்கள் அறிவார்கள்.

அன்று வீரமாதேவியைக் காண வந்தவருள் இருவர் மிக முக்கியமானவர்கள். அவர்கள் சோழ நாட்டின் மீதும் சோழர் குலத்தின் மீதும் மிகுந்த மரியாதையும் விசுவாசமும் கொண்டவர்கள்.

வீரமாதேவியின் சொற்படியே இராசேந்திர சோழ தேவர் முடிவெடுக்கிறார் என்ற எண்ணம் அவர்களுக்குச் சற்று எரிச்சலை அளித்திருந்தது. குறிப்பாக தஞ்சைபுரியிலிருந்து தலைநகரை மாற்றுவதற்காகப் புதிய நகரத்தை உருவாக்கி அங்கே பெரும் கோயில் எழுப்பி தஞ்சைபுரியின் பெருமையைக் குறைக்கச் செய்யத் திட்டமிட்டதற்கு, வீரமாதேவி பெரும் காரணம் என்பதாக முடிவு செய்திருந்தவர்களுள், படைத்தலைவர்களுள் ஒருவரான இராசராச பிரும்ம மகாராசாவும் மலையமான் பராந்தகன் யாதவீமனும் முக்கியமானவர்கள்.

அவர்கள் இருவரும் புதிதாக வெட்டப்படும் ஏரிக்கரையில் சந்தித்துக் கொண்டனர். பெரும் காட்டை அழித்து ஏரியாக மாற்றும் பணி அசுர வேகத்தில் நடைபெறுவதை குதிரை மீதிருந்தே கண்டு வியந்த இருவரும், பெருமூச்சு விட்டவாறு மரநிழலில் ஓய்வாக நின்றனர்.

அவர்கள் ஒருவரையொருவர் சந்தித்துப் பேசிப் பல ஆண்டுகளாகி விட்டபடியால் சற்று நேரம் இருவரும் மௌனமாகப் பார்த்தவாறு முதலில் யார் பேசுவது என்று தயங்கி நின்றனர்.

"வீரநாராயணப் பேரேறிக்குப் பிறகு மற்றொரு சமுத்திரம் இந்த ஏரி" என்று பேச்சைத் தொடங்கினார் மிலாடுடையார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அவர் முன்னோர்கள் சோழர்களுடன் மணவினைத் தொடர்புடையவர்கள்.

“ஆமாம், ஆமாம். என் பாட்டனார் காலத்தில் வீர நாராயணபுர ஏரி வெட்டப்பட்டதாகச் சொல்வார்கள்” என்றார் இராசராச பிரம்மராயர்.

“என் தந்தை காலத்தில் வெட்டப்பட்டது வீர நாராயணஏரி. எங்கள் குடும்பத்தில் பெண் எடுத்த காலம் முதல் சோழ நாட்டில் எந்தக் காரியமும் எனக்குத் தெரியாமல் நடந்ததேயில்லை. இப்போது சோழ சக்கரவர்த்திகள் முற்றிலும் மாறிவிட்டார்.”

மலையமான் வம்சத்தவர் என்பதைப் புரிந்து கொண்ட பிரம்மராயர், மரியாதை தெரிவிப்பதற்காக மட்டுமல்லாமல், வியர்வையைத் துடைத்துக் கொள்வதற்காகவும் தன் தலைப் பாகையைக் கழற்றிக் கையில் வைத்துக் கொண்டார்.

“மிலாடுடையாரைச் சந்தித்துப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. நம் பெரிய சக்கரவர்த்தி மரணமடைந்த போது எனக்கு முக்கியமான பணிகள் அளிக்கப்பட்டிருந்த படியால், மிலாடுடையாரை நெருங்கிப் பேச முடியாது போயிற்று. உடல்நலமாயிருக்கிறீர்களா? திருக்கோவலூரிலிருந்து இப்போதுதான் வருகிறீர்களா? தஞ்சைபுரி போயிருந்தீர்களா? பழையாறைக்குச் சென்றிருந்தீர்களா?” என்று கேள்வி மேல் கேள்வி கேட்டு அவர் நலன் விசாரித்தார்.

“ஓ! இராசராச பிரம்ம மகாராசர்தானே? தங்கள் வீரப் பிரதாபங்களைக் கேட்டறிந்திருக்கிறேன். உங்கள் வீரமறிந்து படைத் தலைமை ஏற்கும் பொறுப்பை இராசேந்திர சோழ சக்கரவர்த்தி அளித்திருக்கும் செய்தியையும் நான் அறிவேன். தாங்கள் இங்கேயே இருப்பவர்கள். எனவே, இங்கு நடப்பவை எல்லாம் உங்களுக்குத் தெரியும். ஆனால், எனக்கு எந்தச் செய்தியும் எட்டுவதில்லையே.

இராசேந்திர சக்கரவர்த்தி தஞ்சையையும் மறந்து, பழையாறையையும் பிடிக்காமல் இப்படி ஒரு வனப்பகுதியில் நகரத்தை நிர்மாணிக்கிறார் என்ற செய்தி எனக்குத் தெரியவில்லை. சோழ நாட்டினின்று நான் வெகு தொலைவில் சென்று விட்டேனோ என்ற எண்ணம் தோன்றுகிறது” என்று வருத்தத்துடன் கூறினார்.

இராசராச பிரம்மராயரும் தன் பங்கிற்கு மனத்தில் அடக்கி வைத்திருந்ததைக் கூறினார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“வட திசைக்குச் சக்கரவர்த்தி புனித நீராடச் செல்கிறார், என்று செய்தி தெரிவிக்கப்பட்டது. தீர்த்த யாத்திரை என்றால் என்னை அரசர் அழைத்திருக்கலாம். அருண்மொழி என்ற இளம் வயதினனை அழைத்துச் சென்றிருக்கிறார். தீர்த்த யாத்திரையா? இல்லை இல்லை. மறைமுகமாக வேறு ஏதோ போர் நடத்தப் போகிறார். நான் என்ன குற்றம் செய்தேன்? யாரிடம் கேட்பேன்? சக்கரவர்த்தியின் திருக்குமாரர்கள் தங்களுக்கு ஏதும் தெரியாது எனக் கைவிரித்துவிட்டனர். மிலாடுடையாரே! என்னதான் இருந்தாலும் நான் படைத் தலைவருள் ஒருவர்தான். தாங்களோ பரம்பரைப் புகழ்பெற்ற மன்னர். சக்கரவர்த்திகளிடமும், சோழகுலத்துடனும் நெருங்கிய தொடர்புள்ளவர். எந்தக் கணத்திலும் தாங்கள் அரசரைச் சந்தித்து அந்தரங்கமாக உரையாடக்கூடிய உரிமை உடையவர்” என்று தன் வேதனையைப் புலப்படுத்தினார்.

“ஆமாம், சக்கரவர்த்திகளுக்கு என்னிடம் மிகுந்த மரியாதை உண்டு. அவர் கலந்து கொள்ளும் போர்க்களங்களில் எல்லாம் நானும் உடன் செல்லத் தவறுவதில்லை. இந்த முறை அவர் ஏன் என்னை அழைக்காமல் சென்றுவிட்டார்? அதற்கு என்ன காரணம்? யார் காரணம்? அதை முதலில் கண்டறிய வேண்டும்” என்று கூறிய மிலாடுடையார், குதிரையைத் தட்டிவிட்டு,“இங்கு நிற்பதால் என்ன பயன்? வாருங்கள் போவோம்.... இதற்கெல்லாம் யார் காரணம் என்று கண்டுபிடித்து விட்டேன்” என்று கூறிப் புறப்பட்டார். இராசராச பிரம்மராயரும் அவரைப் பின் தொடர்ந்தார்.

யார் காரணம் என்று இவர் கண்டுபிடித்திருப்பார்? என்றயோசனையில் அவர் மிலாடுடையாரைத் தொடர்ந்தார்.

பெரிய கோயில் நிர்மாணிக்கப்படும் இடத்திற்கு அருகே இன்னும் தம் பழைய நிலை மாறாதிருந்த, மரங்கள் அடர்ந்திருந்த, பகுதிக்குள் மிலாடுடையார் செல்ல, இராசராச பிரம்மராயரும் அவரைத் தொடர்ந்தார்.

பர்ணசாலை போல் ஓலைகளாலும், மூங்கில்களாலும் கட்டப்பட்ட குடிலருகே சென்று குதிரையினின்று இறங்கினர்.

அந்தக் குடிலின் வாயிலில் பலர் நின்று கொண்டிருந்தனர். சீனவணிகர், நானா தேசியார், தொழிலாளர்கள், அதிகாரிகள் என்று வீரமாதேவியைக் காண நின்று கொண்டிருந்தனர். ஒவ்வொருவராகக் குடிலுக்குள் செல்வதும், விரைவில் தாம் வந்த பணியை முடித்துத் திரும்பி

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வருவதுமாக இருந்தனர்.

குடிலின் வாயில் அருகே நின்றிருந்த காவலருள் ஒருவன் மிலாடுடையாரை அடையாளம் கண்டு விரைந்து அவர் அருகே வந்து வணங்கி,“உள்ளே சென்று இளவரசியாரிடம் செய்தி சொல்லி வரும் வரையில் இதோ அந்த இருக்கையில் அமர்ந்திருங்கள்” என்று பணிவுடன் கூறி மரத்தடியில் இருந்த இருக்கையைச் சுட்டிக் காட்டினான். வெட்டப்பட்ட பெரும் மரத்தின் அடிப்பாகம், உட்கார வசதியாக ஆக்கப்பட்டிருந்தது.

“உம்.... சோழ அரசிகள் பலரையும், இளவரசிகள் பலரையும் நான் கண்டிருக்கிறேன். மாளிகை வெளியே வரமாட்டார்கள். செம்பியன் மாதேவியாரையும், இளைய பிராட்டியாரையும் போல் மக்களோடு பழகும் ஆற்றல் கொண்டவளாக வீரமாதேவி விளங்குகிறாள். பெருங்காட்டை அழித்து பெரிய நகரத்தை உருவாக்கும் ஆற்றல் படைத்திருக்கும் வீரமாதேவியைக் காண பல்வேறு இனத்தவர்கள் காத்திருப்பதில் அதிசயமில்லை. அரசரையும் வழி நடத்திச் செல்லும் ஆற்றல் அவளிடமிருக்கிறது என்பதில் வியப்பில்லை. வட திசைக்கு அரசர் செல்லும் போது இன்னார் இன்னார்தான் செல்ல வேண்டும் என்று யோசனை சொல்லியிருப்பவள் இவள்தான்” என்று கூறிச் சற்று நிறுத்தி அவர், சற்றுக் கோபத்துடன்,“என்னைத் தவிர்த்ததற்கு என்ன காரணம் இருக்க முடியும்? நேருக்கு நேர் சந்தித்து நான் ஒரே கேள்வி கேட்டு விட்டுப் போய் விடுகிறேன்” என்று கூறியவர், மறுகணம்,“இந்தக் காவல்காரன் போய்ச் சொன்னவுடன், நான் வந்திருப்பது தெரிந்து என்னைச் சந்திக்க அவள் விரும்பாமல் இருக்கலாம்” என்றும் சொல்லிக் கொண்டார். “அப்படி அவள் என்னை அலட்சியப்படுத்தி அழைக்காமல் இருந்தால், நான் காவல் தடையை மீறி புயல் போல் உள்ளே புகுவேன்” என்றார்.

அவர் சொல்லி வாய்மூடும் முன்பாக அந்தக் குடிலுக்கு வெளியே பரபரப்பு ஏற்பட்டது. கூட்டமாக இருந்தவர்கள் திடீரென்று ஓர் ஓரமாக ஒதுங்கி நின்றார்கள். அங்கிருந்தவர்கள் சிரம் தாழ்த்தி வணங்கினார்கள்.

வீரமாதேவி, வெளியே வந்து சுற்று முற்றும் பார்த்து, மரத்தடியில் அமர்ந்திருக்கும் மிலாடுடையாரை நோக்கி நடந்தாள். அவளைத் தொடர்ந்து அதிகாரிச்சியும், பணிப் பெண்களும் வந்தனர்.

கரம்கூப்பிய வீரமாதேவி மிலாடுடையாரைப் பார்த்து,“வரவேண்டும், வரவேண்டும். வந்து அதிக நேரமாகிறதா? என்னைச் சந்திக்க

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

உங்களுக்கு என்ன தடை? காவல்காரர் தங்களைத் தடுத்து விட்டார்களா? மிக முக்கியமானவர்களை உடனே சந்திக்க விரும்பி ஒவ்வொருவரையும் அழைத்துப் பேசி அனுப்புவதற்காக, நானிருக்கும் இடத்து வாயிலில் காவல் வீரனை நியமித்தோம். தங்களை அவன் நிறுத்திவிட்டானா? தடுத்துவிட்ட பிறகு வந்து சொல்கிறான் புத்தியில்லாதவன்" என்று காவல்காரனைக் கடிந்து கொண்ட வீரமாதேவி, கூப்பிய கரத்தைத் தாழ்த்தாமல், மிலாடுடையாரைப் பேச விடாமல்,"வாருங்கள், வாருங்கள், குடிலுக்குள்ளே செல்வோம்" என்றழைத்தாள்.

இராசராச பிரம்மராயரும் மிலாடுடையாரும் திகைப்புடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். வீரமாதேவி வழிகாட்டியவாறு முன் செல்ல, கம்பீரமாக மிலாடுடையாரும் இராசராச பிரம்மராயரும் தொடர்ந்தனர்.

திடீரென்று,"மலையமான் வாழ்க் வாழ்க! உத்த சோழ மிலாடுடையார் பராந்தகன் யாதவவீமன் வாழ்க வாழ்க!" என்று வாழ்த்துக் குரலொலி எழுந்தது. குறுநில மன்னர்களை மரியாதையுடன் வரவேற்கும் முழக்கங்கள் எழுந்தன.

வீரமாதேவி நேருக்கு நேர் சந்தித்தவுடனேயே அவர் உள்ளத்திலிருந்த கோபம் நீங்கியது: ஆத்திரம் அகன்றது. வடதேச யாத்திரையைப் பற்றி வீரமாதேவி விவரித்ததும், நிர்மாணிக்கப்படும் பெரிய கோயில், வெட்டப்படும் பெரிய ஏரி, கட்டப்படும் நகர வீடுகள், அரண்மனைகள் ஆகியவற்றைப் பற்றியெல்லாம் கருத்துக்கூறி, அரசர் வடநாட்டிற்குச் சென்ற காரணத்தை விளக்கவும் மிலாடுடையார் பாகாக உருகிவிட்டார்.

கோதாவரிக் கரையில் அரசியும், அரசரும் வீற்றிருப்பதையும், சில மாதங்களாக செய்தி ஏதும் வராததால் தான் அடைந்திருக்கும் கவலையையும், கோயில் குடமுழுக்குக்கு நாள் குறிப்பிட்டுவிட்டதையும், கங்கை நீரால் விமானக் கும்பபத்தைத் திருமுழுக்காட்ட வேண்டிய அரசர் இலட்சியத்தையும், கருவறையில் ஆவுடையார் ஒரே கல்லில் செதுக்கப்பட்டிருப்பதையும், இலிங்க வடிவில் பெருவுடையார் உருவாவதையும் எடுத்துக் கூறி,"நான் தன்னந் தனியாள் என்ன செய்வதெனத் தெரியாமல் திகைக்கிறேன். கங்கைக் கரைக்கு அரசர் சென்றாரா? கங்கையில் நீராடினாரா? கங்கை நீரை இவ்வளவு தொலைவு எவ்வாறு கொண்டு வரப் போகிறார் என்ற செய்தியெல்லாம் அறியாமல் கவலை நிறைந்தவளாக இருக்கிறேன். தங்களைப் போன்றவர்களின் வழிகாட்டுதலுக்கும், யோசனைக்கும்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

காத்திருக்கிறேன்” என்றாள்.

மிலாடுடையார் மிகவும் இலேசாக வானத்தில் பறப்பது போன்ற நிலையில் இருந்தார். இராசராச பிரம்மராயர் விழிகளை மூடியவாறு சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்.

அப்போது வீரர்கள் இருவர் சற்றுத் தொலைவில் வணங்கி நின்றனர். பல காத தொலைவு பயணம் செய்த களைப்புடன் காணப்பட்டனர். அரச முத்திரையிட்ட ஓலைச் சுருள் அவர்களிடமிருந்தது.

ஆவல் மிகுதியும், பரபரப்பும் ஒருசேர வீரமாதேவி ஓலைச் செய்தியைப் படித்தாள். படித்தவுடன் அதை மிலாடுடையாரிடம் நீட்டினாள். “கோதாவரிக் கரையிலிருந்து சக்கரவர்த்திகள் எழுதியிருக்கிறார்கள்” என்றாள்.

“அரசர் தங்களுக்கு எழுதியுள்ள அந்தரங்க ஓலையை நான் படிக்கலாமா? ஏதாவது முக்கியச் செய்தியிருந்தால் மட்டும் சொல்லுங்கள்” என்றார்.

“இல்லை, இல்லை. தாங்கள் படிக்கலாம்” என்ற வீரமாதேவி, ஓலையை அவரிடம் கொடுத்தாள்.

மிலாடுடையார் படித்தபின் பிரம்மராயரிடம் கொடுத்தார்.

மறுகணம் இருவரும் எழுந்தனர்.

“நான் நினைத்தது சரி. தீர்த்த யாத்திரை புனித நீராடல் இல்லை. அங்கே பெரும் போர் நடைபெறவிருக்கிறது. உடனே நாங்கள் புறப்படுகிறோம்” என்றனர்.

மறுநாள் இராசராச பிரம்மராயரும், உத்தம சோழ மிலாடுடையாரும் ஐநூறுக்கும் குறையாத படைவீரர்களுடன், கோதாவரிக் கரையை நோக்கிப் பயணப்பட்டார்கள்.

## 74

# மன்னனின் நோக்கமும் மாதேவியின் திட்டமும்

கோதாவரி நதிக்கரையில், கிழக்கே கதிரவன் உதிக்கும் அழகை ரசித்தவாறு இராசேந்திர சோழ தேவர் அமர்ந்திருந்தார். அவர்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

மனம் எப்போதுமில்லாத வகையில் அமைதியாக இருந்தது. அவர் அருகே பட்டத்து அரசி பஞ்சவன் மாதேவி அமர்ந்திருந்தாள்.

கடல் போன்ற கோதாவரி நதியில் சூரியோதயத்தைக் காண்பதில் பஞ்சவன் மாதேவிக்கும் மகிழ்ச்சிதான். ஆனால், அரசரைப் போன்று அந்தக் காட்சியிலேயே மனத்தை முழுமையும் ஈடுகொடுத்து மூழ்கி விட அவளால் முடியவில்லை.

மெல்லப் பேச்சுக் கொடுத்துப் பார்த்தாள். மிக முக்கியமான சிந்தனையில் ஈடுபட்டிருக்கும் போது தான், அரசர் சுற்றுச்சூழலை மறந்து அமைதியாக யாருடனும் பேசாமல் இருப்பார்.

‘என்னால் அவ்வாறு இருக்க முடியவில்லையே: மனத்தில் இருப்பதை யாரிடமாவது கொட்டித் தீர்க்கவே தோன்றுகிறது. இவரால் எப்படி அமைதியாக இருக்க முடிகிறது?’ என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள்.

தேவாரப் பதிகங்களைப் பாடும் ஓதுவார்களை அழைத்து வந்திருந்தார்கள். அவர்கள் தாளத்துடன் பாடினார்கள். ஒருமுறை திரும்பிப் பார்த்த அரசர், சிறிது நேரம் கழித்துப் பாடுவதை நிறுத்துமாறு சைகை செய்தார். அவர்களும் அங்கிருந்து சென்றுவிட்டனர்.

கதிவரன் மேலெழுந்து, கதிர்களைச் ‘சுள்’ளென்று வீசத் தொடங்கியபோது, இராசேந்திரன் பஞ்சவன் மாதேவியின் பக்கம் திரும்பிப் புன்முறுவல் பூத்தார்.

‘அப்பாடா, முனிவர் தவம் கலைந்தது!’ என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்ட தேவி, வெளியே கேட்கும்படியாகவும் சொன்னாள். இராசேந்திரன் அவளைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தார்.

“முனிவராகும் பக்குவம் இன்னும் வரவில்லை தேவி! கொடிய பகைவரைக்கூட அடக்க முடிகிறது. ஆனால் மனம் எனும் உள் விரோதியை அடக்குவது அவ்வளவு எளிதாகத் தோன்றவில்லை. அடக்கியவுடன் ஏற்படும் அமைதி இருக்கிறதே, அதற்கு எல்லையேயில்லை. இங்கு வந்து பல நாள்கள் ஓடிவிட்டன. ஒவ்வொரு நாளும் என் மனம் அலைகடல் போல் கொந்தளிக்கும்…”

அரசர் சற்றுப் பேச்சை நிறுத்தியவுடன், அவரிடம் பேச வாய்ப்பை எதிர்நோக்கிக் காத்திருந்த அரசி,“உங்கள் மனத்தில் கவலையும், குழப்பமும் ஏற்படக் காரணமே இல்லையே…” என்று குறுக்கிட்டாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“தெற்கே, பழையாறையில் என்ன நடக்கிறதோ என்ற கவலை இருக்கலாம். அங்கு ஒவ்வொரு நாளும் நடைபெறும் நிகழ்ச்சியை அதிகாரிகள் அறிவித்துக் கொண்டிருக்கின்றனர். என்னை உடன் அழைத்து வராமலிருந்த கவலையும் தீர்த்துவிட்டது. போர் நடத்தச் சென்றவர்களே மாபெரும் வீரர்கள். வடக்கே இருந்து சில நாட்டரசர்கள் தங்களைத் தேடி வந்தனர். அதனால் புதிய கவலை ஏற்பட்டிருக்கலாம். அப்படித்தானே? அவர்களும் மகிழ்ச்சியுடன் சென்றுவிட்டனர். ஆனால், நான் நினைக்கிறேன் - உங்கள் மனத்திலுள்ள கவலை என்னவென்றால்...” பேச்சை நிறுத்தினாள்.

அரசரை நிமிர்ந்து நோக்கினாள். அரசரும் திரும்பி என்று கேட்டார்.

அரசர் மன நிலையைப் புரிந்து கொண்டாள் அரசி. எந்தவிதத் தடையுமின்றிப் பேசலாம். உரிமையுடனும் பேசலாம்.

“வீரர்களுடன் வடக்கு நோக்கிப் புறப்பட்டது போர் புரிய அன்று: புனித யாத்திரைக்காக. அந்தத் தெளிவு தங்களிடமிருந்தது. ஆனால், வெளி உலகிற்குத் தெரியா வண்ணம், சில நாடுகளின் மீது படையெடுத்து சோழ நாட்டிற்கு உள்ள நிரந்தர விரோதிகளை வென்றுவிடும் எண்ணமும் உண்டு. அந்த எண்ணம் தங்கள் மனத்தில் பல சஞ்சலங்களை ஏற்படுத்தியிருக்கும். அவை ஒரு வகையில் தீர்க்கப்பட்ட பிறகு, கங்கையாற்றில் புனித நீராடச் செல்வதைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினீர்கள். நான் அருகே இல்லாமல் புனிதச் சடங்குகளை நிறைவேற்றுவது முறையில்லை என்பதை உணர்ந்தீர்கள். என்னை வரவழைப்பதைப் பற்றிச் சிந்தித்தீர்கள். அதே போது, உங்கள் அபிமான வல்லியையும் உடன் அழைத்து வருவதா, வேண்டாமா என்ற குழப்பம் ஏற்பட்டிருக்கும். நல்ல வேளையாக, தன்னால் வருவதற்கு இயலாது என்று அவள் சொல்லிவிட்டப்படியால் என்னை மட்டும் அழைத்தீர்கள். என்னை இங்கே அழைத்ததன் மூலம் தங்களுக்கிருந்த மற்றொரு குழப்பமும் நீங்கியது” என்று மனத்திலுள்ளதை ஒளிக்காமல் கூறிச் சற்று நிறுத்திய பஞ்சவன் மாதேவி,‘என்ன குழப்பம்?’ என்று அரசர் வினவுவார் என்று எதிர்பார்த்தாள்.

அது போன்றே அவர்,‘என்ன குழப்பம்?’ என்று அரசர் கேட்டார். தேவி மேலும் தைரியத்துடன் பேசலானாள்.

“நான் பழையாறையிலிருந்தால், வீரமாதேவியின் பணிகளுக்கு இடையூறாக இருப்பேன். என்னை இங்கே அழைத்து வந்துவிட்டதால் அங்கே கோயிலும், ஏரியும் எவ்விதத் தடையுமின்றி மளமளவென்று

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வளர்கின்றன” என்றாள்.

இராசேந்திரன் மெல்ல நகைத்தார். முதுமையால் துவண்டிருக்கும் பஞ்சவன் மாதேவியின் கரத்தை மெல்லத் தன் வலக்கரத்துடன் பிணைத்து,“தேவி! நீயே சொல்லு. இவ்வளவு அமைதியாக, நெருக்கமாக நாம் இதுவரை அமர்ந்து பேச வாய்ப்பிருந்திருக்கிறதா?”

பஞ்சவன் மாதேவி மறுமொழி கூறவில்லை. ஏதாவது பேசி, அரசரின் மனநிலையில் மாறுதலை ஏற்படுத்தி விடக் கூடாது என்பதற்காகத் தலையை மட்டும் அசைத்தாள்.

“தஞ்சையிலும், பழையாறையிலும் இருக்கும்போது உனக்கும் மன சஞ்சலம் அதிகம் தானே?”

தேவி தலையை மட்டும் அசைத்தாள்.

“வீரமாதேவி வந்த பிறகு, வீணே நீ உன் மனத்தில் கவலையை வரவழைத்துக் கொண்டாய்.”

தலையை மட்டும் அசைத்தாள்.

“உன்னுடன் அரிந்தவன் தேவியும் சேர்ந்து கொண்டாள். பொறாமைத் தீர வளர அவளும் ஊதினாள். அதனால் மனத்தில் கவலை சூழ்ந்தது. அப்படித்தானே?”

பஞ்சவன் மாதேவி தலையை அசைக்கவில்லை.

‘அது என்ன பொறாமைத் தீ என்று சொல்கிறார். உண்மையைச் சொன்னார், சங்கடம் வராமல் தடுத்தார். அது பொறாமையா?’

மறுமொழி கூறவில்லை. அரசருக்கு அப்போது இருந்த மன அமைதியைக் குலைக்க விரும்பவில்லை. அரசி மௌனமாக எவ்வித உணர்ச்சியையும் புலப்படுத்தாதிருப்பதை அறிந்த அரசர்,“நடந்து போனவற்றை நினைவுபடுத்த நான் விரும்பவில்லை. நாட்டை ஆளும் அரசர் மனத்தில் ஏற்படும் அழுத்தம், தீர்க்க வேண்டிய பிரச்னைகள் ஏராளம் என்பதை நீ அறிவாய் அல்லவா! கங்கை நதியில் புனித நீராட நான் ஏன் திட்டமிட்டேன் என்பது உனக்குத் தெரியுமா?”

அரசி தலையசைத்தாள்.

“நம் குல தெய்வம் சிவபெருமான் செஞ்சடையில் வீற்றிருக்கும் புண்ணியம் செய்த நதி கங்கை. கங்கையின் வரலாறு கேட்டறிந்தது

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

முதல் நான் கங்கையைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தேன். செழுநீர்புனல் கங்கை செஞ்சடை அணிந்த புண்ணியமான சிவபெருமானை நினைக்கும் நாளெல்லாம், கங்கை நதிக்கரைக்குச் செல்ல விரும்பினேன். என் தந்தை பேரரசரின் எண்ணமும் கங்கைக்கரைக்குச் செல்ல வேண்டும் என்பதிலேயே இருந்தது. அவர் இறுதி இலட்சியமும் அதுவே. அவருக்குக் கிடைக்காத பெருமை எனக்குக் கிடைத்திருப்பது நடராசப் பெருமான் திருவருள் தான். பெரிய கோயிலைக் கட்டும் எண்ணம் ஏற்பட்டு, அதை நிறைவேற்ற வீரமாதேவி எனக்குக் கிடைத்தாளல்லவா? அது இறைவன் செயல் அல்லவா?”

இப்படிச் சொல்லும்போது, பஞ்சவன் மாதேவியின் முக உணர்ச்சியை இராசேந்திரன் கவனிக்கத் தவறவில்லை.

“வீரமாதேவியிடம் உனக்கு ஏற்பட்ட தவறான எண்ணத்தால், சோழநாட்டிற்குக் காலகாலத்திற்குக் கிடைத்த மாபெரும் புகழை, பெருமையைத் தடுக்க நினைத்தாய். உன்மீது குற்றம் சாட்டுவதாகவோ, குறை கூறுவதாகவோ நினைக்க வேண்டாம். மனிதகுல இயல்பு அது. அரசியென்றாலும், அந்தக் குறையினின்று தப்ப முடியாது. மற்றொரு தட்சிண மேரு என்று புகழப்படவிருக்கும் அந்தக் கோயிலின் விமானத்தின்மீது அமைக்கவிருக்கும் பொற்கலசத்திற்குக் கங்கை நீரால் அபிடேகம் செய்விக்க விரும்பினேன். அதற்குக் கங்கை நீரைக் கொண்டு வருவதுதான் என் முதன்மையான நோக்கம். அதை மனத்தில் எண்ணியே வடநாட்டு யாத்திரையை மேற்கொண்டேன். புனிதக் கங்கையில் நீராடிப் புண்ணியம் சேர்த்துக் கொள்வதை முதன்மையாகக் கருதவில்லை. நான் கட்டும் பெரிய கோயிலில் உள்ள பெருவுடையாருக்குப் புனித நீரால் அபிடேகம் செய்ய வேண்டும்: கோயிலின் திருமுழுக்கு கங்கை நீரால் நடத்தப்பட வேண்டும் என்பதுதான் என் இலட்சியம்.”

“உயர்தர இலட்சியம் மனத்திற்குள் இருக்கும்போது அதை நிறைவேற்றும் திட்டங்களை வகுக்கும்போது அதைப் பற்றிய சிந்தனை, கவலை மனத்தில் இருப்பது இயற்கைதானே! ஏனோ தொடக்கத்திலிருந்து, புதிய கோயில், புதிய நகரம், புதிய ஏரி ஏற்படுத்தும் மாபெரும் திட்டம் உனக்குப் பிடிக்கவில்லை.

“ஆடவல்லான் அருளால் இப்போது அவை சரியாகிவிட்டன. கங்கையில் நீராடச் செல்லவேண்டும் எனும் எண்ணம் எனக்கு ஏற்பட்டவுடன் உன்னையும் அழைத்து வரத் திட்டமிட்டேன். அதற்கிடையில், கோதாவரிக் கரையில் தங்கியிருக்கும் கட்டாயம்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

ஏற்பட்டது. நம்மால் வாழும் வகை செய்யப்பட்டவர்களே நமக்கு விரோதியாகும் நிலை ஏற்பட்டது. வேங்கியில் ஏற்பட்ட குழப்பத்தைத் தீர்க்க வேண்டிய நிலை. கங்கை நதியை நோக்கிச் செல்லும் என் நோக்கம் தடைப்பட்டது. அதற்கிடையே புதிய பிரச்னை. வடமேற்குத் திசையில் நம் நாட்டிற்குப் பெரிய ஆபத்து ஏற்பட்டிருப்பதாகச் செய்தி வந்தது. கஜினி முகம்மது என்ற வெளிநாட்டு மன்னர் வடநாட்டில் உள்ள பெரும் செல்வத்தின் மீது ஆசைப்பட்டுத் தம் படைகளுடன் வந்து தாக்குதலைத் தொடங்கியிருக்கிறான். அவனைத் தடுத்து நிறுத்தாவிடில் நம் நாட்டிற்குப் பெரும் ஆபத்து வந்து விடும். நம் பலம் அறியாமல் அவன் நம் மீது மோதமாட்டான் என்றாலும், மூர்க்கத்தனமான படைவீரர்கள் - ஏராளமான குதிரை வீரர்களுடன் அவன் வருகிறானாம். அவன் நோக்கம் நாட்டைப் பிடிப்பதன்று: கோயில்கள் தாம் அவன் இலக்கு. கோயில்களில் உள்ள ஏராளமான செல்வங்களைக் கொள்ளையடிப்பதுதான் அவன் நோக்கம்.

நாம் கோதாவரிக் கரையில் தங்கியிருப்பதை அறிந்த வடநாட்டு வேந்தர்கள் சில நாள்களுக்கு முன்பு என்னைச் சந்திக்க வந்தது உனக்கு நினைவிருக்கலாம். அவர்களுக்கு உதவியாக சோழ வீரர்களை அனுப்புவதாக வாக்களித்தேன். நம் படைகளை இரண்டு பகுதிகளாகப் பிரித்தேன். ஒரு பிரிவைக் கங்கைக் கரையை நோக்கி அனுப்பத் திட்டமிட்டுள்ளேன். இப்போது எனக்குத் தெளிவு ஏற்பட்டுள்ளது. நல்ல நாளாகப் பார்த்து நாம் கங்கைக் கரைக்குச் செல்வோம். நீராடுவோம். புனித நீரெடுத்துச் சோழ நாடு திரும்புவோம்."

பஞ்சவன் மாதேவி அமைதியாக அரசர் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். தம் வயதில் இன்னும் இருபது ஆண்டுகள் குறைவாகி விட்டதுபோல் புதிய உற்சாகம் ஏற்பட்டது.

'வீரமாதேவி! பார்த்தாயா? நீ சொல்வது போல் மன்னர் எப்போதும் ஆடுவார் என நினைத்தாயே. உன் இளமை மோகத்தால் அவரை வயப்படுத்தி விட முடியும் என நினைத்தாயே – மனப்பால் குடித்தாயே, செருக்குடன் அவருடன் இணைந்து ஆடினாயே, என்ன நடக்கப் போகிறது தெரியுமா? நான் அரசருடன் கங்கையில் நீராடி புனிதக் கங்கை நீருடன் திரும்பி வருவேன். அதற்குள் அங்கே கோயில் கட்டி முடிக்கப்பட்டிருக்க வேண்டும். சந்தேகம்தான். பழையாறையில் உள்ள கோயிலுக்கும் திருவையாற்றுக் கோயிலில் உள்ள இறைவனுக்கும், இறைவிக்கும் திருமஞ்சனம் செய்விக்கச் செல்வோம். தஞ்சைப் பெரிய கோயிலை ஏனோ புறக்கணிக்க எண்ணிய அரசரின் மனத்தை

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

மாற்றுவேன். பேரரசர்-என் மாமனார் - விருப்பப்படி கங்கை நீரைக் கொண்டு, பெருவுடையாருக்குத் திருமஞ்சனம் செய்விப்பேன் - வீரமாதேவி – உன் மமதை சபதம் குலைவது திண்ணம்' பஞ்சவன் மாதேவி தன் மனத்துக்குள்ளேயே கற்பனை செய்து கொண்டாள்.

"தேவி! திடீரென மௌனமாகி விட்டாயே? என்ன சிந்தனை? என்ன திட்டம்? என் கவலையெல்லாம் உன்னிடம் வந்துவிட்டனவோ? கங்கை நீருடன் சோழ நாட்டில் புதிதாகத் தோன்றியுள்ள நகரத்திற்குள் நுழையும் போது வரவேற்பு எப்படியெல்லாம் இருக்கும் என்று கற்பனை செய்து பார்க்கிறாயா?" என்று அரசர் கேட்டவுடன் திடுக்கிட்டு தன் நிலைக்கு வந்தாள் பஞ்சவன் மாதேவி.

அப்போது, ஒற்றர் படைத்தலைவர், விரைந்து வந்து, சோழநாட்டிலிருந்த இராசராச பிரம்மராய உத்தம சோழரும் மிலாடுடையாரும் படைவீரர்களுடன் வந்து கொண்டிருக்கும் செய்தியைத் தெரிவித்தார்.

இராசேந்திர சோழதேவர் புருவர் உயர்த்தினார். எதற்காக அவர்கள் வருகிறார்கள் என்ற கேள்விக் குறி அவர் உள்ளத்தே எழுந்தது.

# 75

# அரசியின் சீற்றம்

இராசராச பிரம்மராய உத்தமசோழரும், மிலாடுடையாரும் கோதாவரி நதிக்கரையில் சிறப்பாகக் கட்டப்பட்டிருந்த மாளிகையில் அமர்ந்து, இராசேந்திர சோழரிடம் மனம்விட்டுப் பேசிக் கொண்டிருந்தனர்.

பல காத தொலைவு பயணம் செய்து வந்த களைப்பு எதுவும் அவர்களிடம் இல்லை. இருந்த சிறிது சோர்வும்,இராசேந்திர சோழ தேவரை மிக நெருக்கத்தில் சந்தித்த போது நீங்கிவிட்டது.

அவர்கள் உரையாடும் போது பட்டத்து அரசி பஞ்சவன் மாதேவியையும் அருகேயே இருக்குமாறு அரசர் பணித்தது, தங்களுக்கு அரசர் அளித்த மிகப்பெரிய கௌரவம் என்று நினைத்தனர். அவர்கள் மனத்திலிருந்த சிறிதளவு குறையும் மறைந்து விட்டது. அவர்கள் நிமிர்ந்து உட்கார்ந்தார்கள். அவர்கள் உடலில் புதிய தெம்பு ஏற்பட்டது. சோழர் குலத்திற்கு ஏழேழு தலைமுறைக்கும் உண்மையுடையவர்களாக இருக்க வேண்டும் என்று உறுதி செய்து கொண்டார்கள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சோழ நாட்டின் முன்னேற்றத்தைப் பற்றிப் பேசினார்கள். இந்த ஆண்டு நல்ல விளைச்சல் என்று உற்சாகமாகச் சொன்னார்கள். மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வதாகப் பெருமையுடன் சொன்னார்கள்.

சோழ அரசர் அவர்கள் சொல்வதை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். அவ்வப்போது தலையசைத்தார். மெல்லிய புன்னகைக் கோட்டினால் அவர்களை மேலும் உற்சாகப்படுத்தினார்.

பணியாள்களை அழைத்து, முக்கனிகளைக் கொண்டு வருமாறு பணித்தார். சக்கரவர்த்திகளின் எதிரே அமர்ந்து உண்பதா? அவர்கள் திகைத்தார்கள். மேலும் உற்சாகம் அவர்களிடம் பொங்கியது.

மூன்றாவது மனிதர்கள் பேசும்போது பொதுவாக அரசி அந்த மண்டபத்திலோ, இடத்திலோ இருப்பதில்லை. அரசரும் அரசியாருடன் உரையாடிக் கொண்டிருக்கும் போது மற்றவர்களை அழைப்பதில்லை. சபை கூட்டப்படும்போதுஅரியணையில் சபைக் கொலுமண்டபத்து மேல் மாடத்தில் அமர்ந்து நிகழ்ச்சிகளைக் கவனிப்பாள். அரசியும் அவள் பரிவாரங்களும் மாடத்தில் அமர்ந்து சபை நடவடிக்கைகளை நோக்குவதை அவையிலிருப்பவர் பார்க்க முடியாது.

கோதாவரி நதிக்கரையில் அரசருடன் அமர்ந்து தனியே பேசிக் கொண்டிருக்கும் வேளையில் நேரம் போவது தெரியாமல் சோழ நாட்டுச் செய்திகளைப் பேசவந்து விட்டார்களே என்ற கோபம் அரசிக்கு எழுந்தது.

ஆனால், புதிதாக உருவாகும் கோயிலைப் பற்றியும், நகரத்தை பற்றியும், வெட்டப்படும் ஏரியைப் பற்றியும், போடப்படும் சாலைகளைப் பற்றியும் அவர்கள் விவரிக்கும் போது மேலும் மேலும் ஊர்ச் செய்தியை அறிய அரசி ஆவல் கொண்டாள்.

காடுகள் வெட்டப்பட்டதை அவர்கள் சொன்னார்கள். சாலை அகலமான பெரும் அமைத்திருப்பதை விவரித்தார்கள்.

சிதம்பரத்திலிருந்து அந்தப் புதிய நகரத்திற்கு, அகலமான சாலை போடப்படுவதையும், சாலையின் இருபக்கங்களிலும் மரக்கன்றுகள் நடப்படுவதையும் தெரிவித்தார்கள். இன்னும் பத்து ஆண்டுகளில் கன்றுகள் பெருமரங்களாக வளர்ந்து குளிர் நிழல் தரும் காட்சியை இப்போதே காண்பதாக அவர்கள் சொன்னார்கள்.

“சக்கரவர்த்திகளே! அங்கே புதிய புதிய வீடுகள் நிறையக்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கட்டப்படுகின்றன. பழையாறையிலும், தஞ்சைபுரியிலும் இருக்கும் வீடுகளை விடப் பார்ப்பதற்கு அழகாக இருக்கின்றன. புதுமையாக இருக்கின்றன. சில ஆண்டுகள் கழித்து உருவாகும் அந்த நகரம் எப்படியிருக்கும் என்று கற்பனைக் கண் கொண்டு பார்க்கிறேன்.

“தஞ்சைபுரியையும், பழையாறையையும் விட மிகப் பெரியதாக அந்த நகரம் அமையும் போல் தோன்றுகிறது. பாண்டிய நாட்டு மதுரைக்கும் சென்றிருக்கிறேன் - அந்த நகரத்திற்கில்லாத பெருமை இந்த நகரத்திற்கு இருக்கப் போகிறது” என்று கூறி மிலாடுடையார் சற்று நிறுத்திய போது,‘அது என்ன பெருமை, சொல்லுங்கள்’ என்று வினவுவது போல் இராசேந்திர சோழர் அவர்களை நிமிர்ந்து பார்த்தார்.

பெரிய கடலும், கடலுக்கு அருகே பெரிய கோயிலும் வேறு எந்த நகரத்துக்குப் பெருமை சேர்க்கின்றன?” என்று பெருமையுடன் கூறினார் மிலாடுடையார்.

அவர் சொல்வதற்கெல்லாம் பிரம்ம ராய உத்தம சோழர் தலையசைத்துக் கொண்டிருந்தார்.

“பெரிய கடலா? கடலுக்கு அருகே பெரிய கோயிலா? விளங்கவில்லையே” என்று அரசர் கேட்டார்.

“ஆ! பெரிய கடல் போன்ற ஏரி என்று சொல்வதற்கு மாறாக அவசரத்தில் அப்படிச் சொல்லிவிட்டேன்” என்று பல்லை இளித்த அவரைப் பார்த்து, அரசர்,“கடலை நகரத்திற்குள் கொண்டு வர நான் விரும்பவில்லை. விளை நிலங்கள் உப்பாக மாறி, பயனில்லாமல் போய்விடுமல்லவா?”

“கங்கை நீரைக் கொண்டுவர விரும்புகிறேன். அதனால்தான் கடல் போன்று பெரிய ஏரி அங்கே உருவாகிறது! கங்கை நீரை அதில் நிரப்ப கங்கையைக் கொண்டு வரத்தானே நான் இங்கே வந்திருக்கிறேன்?” என்றார் அரசர்.

அவர்கள் இருவரும் தலையசைத்தனர். “ஆமாம், ஆமாம். அங்கே எல்லாம் மிகப் பிரம்மாண்டமாக உருவாகிறது. இளவரசி தாமே முன்னின்று பெரிய கோயிலை, பெரிய நகரத்தை உருவாக்குகிறார்கள். அவர்களுக்கு வேறு சிந்தனையே இல்லை. இங்கும் அங்கும் ஓடி அலைந்து மேற்பார்வையிடுகிறார்கள். சோழ சக்கரவர்த்திகளே! இன்னும் சில மாதங்களில் புதிய சுவர்க்கமே அங்கே நிர்மாணமாகி விடும். இந்த சமயத்தில் சக்கரவர்த்திகள் பழையாறையிலிருந்து

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

Telegram

Click here to join my Telegram channel

Click Here to join our Telegram Group

For free eBooks, join us on Telegram

https://t.me/tamilbooksworld

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

திடீரென்று வட திசைக்குப் போர் வீரர்களுடன் சென்றதாகக் கேள்விப்பட்டோம். தாங்கள் எடுத்த முயற்சிகள் எல்லாவற்றிலும் நாங்கள் இதுவரையிலும் பங்கு கொண்டு எங்களால் இயன்றதைச் செய்திருப்பது தாங்கள் அறியாததா? நாங்கள் என்ன பிழை புரிந்தோம்? நாங்கள் பங்குபெறாமல் செய்துவிட்டீர்கள்? அதனால்தான் தாங்கள் அழைக்காமலே படைவீரர்களுடன் வந்து விட்டோம். எங்கள் கடமையல்லவா?"

"புதிய சுவர்க்கம் உருவாகி வருகிறது என்றா சொன்னீர்கள்? தென்னாட்டில் கயிலாயம் ஒன்றை நிர்மாணிக்க வேண்டும் என்பதே வீரமாதேவியின் ஆசை. பெரிய கோயிலில் சிற்பங்கள் எல்லாம் உருவாகி விட்டனவா? விமானத்தில் சுதையாலான சிற்பங்கள், திருச்சுற்றில் உள்ள கோட்டங்களில் தேவதைகளின் திருஉருவங்கள், தாமரைத்திரு, கலைத்தேவி, மகாவிஷ்ணு – சிற்பங்களைப் பார்த்தீர்களா? எல்லாம் வீரமாதேவி திட்டமிட்டபடி நடைபெறுகின்றனவா?"

அரசர் சற்று நேரம் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருப்பவர் போல் மௌனமாக இருந்தார்.

"சக்கரவர்த்திகளுக்கு ஒரு வேண்டுகோள்! சோழ இளவரசி கலை ஆர்வம் மிகுந்தவர்கள் என்றுநாடு நகரம் எல்லாம் புகழ்கின்றன. எங்கள் வாழ்நாளில் புதிய நகரம் ஒன்று உருவாவதைப் பார்க்கும் பேறு பெற்றிருக்கிறோம். சுற்றுப்புற ஊர்களிலிருந்து கூட்டங் கூட்டமாக வந்து புதிய நகரத்தைப் பார்த்துச் செல்கிறார்கள். புதிய நகரத்தில் வீடு கட்டிக் கொண்டு வாழப் பலர் இப்போதே ஆயத்தமாகிறார்கள். தரிசாகக் கிடந்த நிலங்களை உழுது பயிரிட வேளாண் குடிமக்கள் ஆவலுள்ளவர்களாக இருக்கிறார்கள். பெரிய ஏரியிலிருந்து பாசனத்துக்குப் பஞ்சமில்லாமல் தண்ணீர் கிடைக்கும் என்று நம்புகிறார்கள். வடக்கே சிதம்பரம் சென்று ஆடவல்லானைத் தரிசிக்க முடியாதவர்கள், தங்கள் ஊரிலேயே பெரிய கோயில் எழப் போவதை எண்ணிப் பெரிய அளவில் மகிழ்கிறார்கள்.

"கோயில் திருப்பணி விரைவில் முடிவடைய வேண்டும் என்று கருவூர்ச் சித்தர் இரவு பகலாக அங்கேயே தங்கியிருந்து ஆலோசனை கூறி வருகிறார்கள். கருவறையில் மிகப் பெரிய ஆவுடையார் லிங்கம் - அப்பாடி! எங்களைப் போலவே பலரும் ஆவலுடன் எதிர்பார்த்து இருக்கிறார்கள். தேவலோகத்து மயன் அனுப்பிய சிற்பிகள் தாம் வந்து சிற்பங்களை வடிக்கிறார்களோ என்று மக்கள் பிரமிப்படைகிறார்கள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“சக்கரவர்த்திகளே! நாங்கள் பாக்கியசாலிகள். இந்தப் புனிதமான பணியில் எங்களுக்குப் பங்கு கொடுங்கள். விரைவில் தலைநகரம் திரும்புவதற்கு இடையூறாக எதிரிகள் இருந்தால் சொல்லுங்கள்: அவர்களை துவம்சம் செய்கிறோம். கங்கையில் நீராடச் செல்லாமல் தங்களைத் தடுப்பவர்கள் யார்? கட்டளையிடுங்கள் - அவர்களை நிர்மூலமாக்குகிறோம்.”

உண்மையிலேயே உற்சாகமாகவும், தூய உள்ளத்துடனும் பேசும் உத்தம சோழரையும், மிலாடுடையாரையும் அரசர் கை உயர்த்தி வாழ்த்தி,“உங்கள் அன்பு என்னை மெய் சிலிர்க்க வைக்கிறது. தங்களைப் போன்றவர்கள் உற்ற துணையிருந்தால் எனக்கும் இந்த நாட்டிற்கும் எந்தவிதக் குறையுமுண்டோ?

“என் புனித யாத்திரைக்கு இடையூறு செய்ய ஒரே ஓர் எதிரி மட்டுமே இருப்பதாக எண்ணினேன். இப்போதோ புதிய எதிரி முளைத்துவிட்டார். வடநாட்டு அரசர்களுக்குப் பெரும் ஆபத்து. அவர்களுக்கு மட்டும்தானே ஆபத்து என்று நாம் எளிதில் தள்ளிவிட்டால் அந்தக் கொடியவர்கள், தெற்கு நோக்கிப் படைகளுடன் வரமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? கஜினி முகமது என்ற பெயருடைய அந்த அயல்நாட்டு மன்னனுக்கு நாட்டைப் பிடிக்க ஆசை இருப்பதாகத் தெரியவில்லை. நம் முன்னோர்கள் கட்டி வைத்த கோயில்களின் கருவறையில் மதிப்பிட முடியாச் செல்வம் இருக்கிறது. இறைவனுக்கும் இறைவிக்கும் விலைமதிப்பிட முடியாத வைர, வைடூரிய நவரத்ன ஆபரணங்களை மூதாதையர் காணிக்கையாகச் சேர்த்து வைத்துச் சென்றிருக்கிறார்கள். அவற்றைக் கொள்ளையடித்துச் செல்வதே கஜினியின் நோக்கம். பலமில்லாமல் ஒற்றுமையில்லாமல் இருக்கும் வடபுலத்து மன்னர்களை எளிதில் வென்று செல்வங்களைக் கொள்ளையடித்து வருகிறான். அவனைத் தடுக்க வேண்டும். அடித்து விரட்ட வேண்டும். வட நாட்டரசர்களை ஒற்றுமையாக இருக்குமாறு செய்துவிட்டேன். என் உதவியை அவர்கள் நாடினார்கள். தோள்வலி மிகுந்த ஆயிரக்கணக்கான நம் வீரர்களை, கஜினியை எதிர்த்துப் போராட அனுப்ப முடிவு செய்துள்ளேன்.

“நம் படையில் ஒரு பிரிவினர் கங்கைக் கரை நோக்கிச் சென்றுள்ளனர். நான் சில நாள்களில் புறப்படுகிறேன்...” என்று கூறி அரசர் சற்று நிறுத்தினார்.

“சக்கரவர்த்திகளே! கட்டளையிடுங்கள். நாங்கள் கங்கைக் கரைக்குத் தங்களுக்குத் துணையாக வருகிறோம்” என்ற மிலாடுடையாரை

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

நோக்கிக் கையசைத்து,“வேண்டாம், வேண்டாம். நீங்கள் உடனே வடமேற்கு நோக்கிச் செல்லுங்கள். சோழப் படைகளுடன் சேர்ந்து கொள்ளுங்கள். கண்ணபிரான் பிறந்து, வளர்ந்து, லீலைகள் புரிந்த மதுரா நகருக்கும் ஆபத்து நெருங்குகிறது. சிந்துநதிக் கரையிலுள்ள மாசுணி நாட்டிற்குப் பேராபத்து.

கஜினி முகமதுவை எதிர்க்கப் போகிறோம் என்று நான் நினைக்கவில்லை. கங்கைக் கரைக்குச் செல்லும் போது நம்மைத் தடுக்க வரும் அரசர்களை எதிர்க்கப் போதுமான வீரர்களுடன் புறப்பட்டேன். இப்போது படைவீரர்களை இரு பிரிவுகளாகப் பிரித்தேன். பலமிக்க கஜினியை எதிர்க்க அரசர்கள் பலரை ஒன்று சேர்த்துள்ளேன். இன்னும் பலம் பொருந்திய சோழர்ப் படைகள் தேவை. நல்ல வேளையாக நீங்கள் வந்து சேர்ந்தீர்கள். உடனே நீங்கள் கஜினியை எதிர்க்கப் புறப்படுங்கள். சிந்துநதியின் நீரைக் கொண்டு வாருங்கள். நர்மதை, சிந்து, கங்கை நீர்களைக் கொண்டு பெருவுடையாருக்குப் புனித நீராட்டுவோம். உடனே புறப்படுங்கள். கங்கை வெற்றியில் தங்கள் பங்கும் என்றும் நின்று நிலவும். புதிய கோயிலின் விமானத்தை கங்கை நீரால் முழுக்காட்ட நீங்கள் உதவியதாக நான் சொல்கிறேன். உம்: புறப்படுங்கள்” என்றார்.

கோதாவரி நதியில், மேற்குத் திசையில் கதிரவன் மூழ்கி மறைந்தான். எங்கும் இருள் சூழ்ந்தது.

“தேவி! நெடுநேரம் இங்கே அமர்ந்திருந்ததால், சோர்வுற்றிருப்பாய். சற்று ஓய்வு எடுத்துக் கொள். மீண்டும் நாம் இங்கே வந்தமர்ந்து இசையின்பத்தில் திளைப்போம்” என்றார்.

ஐந்தாம் பிறைச் சந்திரன் வானவெளியில் பவனி வந்து தண்ணிலவைப் பொழிந்து கொண்டிருந்தான்.

வீணையை மீட்டி, குழலூதி இன்னிசை எழுப்ப கலைப் பெண்கள் வந்தமர்ந்தனர். பாடலுக்கேற்றபடி நடனமிட இரண்டு அழகிய பெண்கள் வந்து நின்றனர்.

பட்டத்தரசியும் வந்தமர்ந்தாள். அவள் முகத்தில் சோர்வு மிகுந்திருந்தது. சென்ற சில நாள்களாக இருந்த மகிழ்ச்சி இன்று முகத்தில் காணவில்லை.

தேவாரப் பண்ணிசைக்க வந்த மங்கையை நோக்கி,“மாதர் பிறைக் கண்ணியானை – பதிகம் தெரியுமா?” என்று அரசர் கேட்டார். அரசருக்கு மிகவும் பிடித்தமான பதிகம்?

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பாடலும், வீணையொலியும், குழல் ஓசையும் எழுந்தன. பாடலுக்கே ஏற்ப மங்கையர் ஆடினார்கள். திடீரென அரசர்,‘நிறுத்துங்கள் நிறுத்துங்கள்’ என்று குரல் கொடுத்தார்.

“காதல் மடப்பிடியோடு களிறு வருவன கண்டேன்’ என்ற பாடலுக்கு இப்படியா ஆடுவது? வீரமாதேவியின் நடனத்தைப் பார்த்திருக்கிறீர்களா? இல்லாவிட்டால், நாடு திரும்பியதும், இளவரசி வீரமாதேவியிடம் நாட்டியம் பயிலுங்கள்” என்று சற்றுக் கோபத்துடன் கூறினார்.

அரசி பஞ்சவன்மாதேவி அதிர்ச்சியடைந்தாள்.

கோபம் பொங்கியது. வீரமாதேவி, வீரமாதேவி. அவள் நினைவு இங்குமா? விருட்டென்று எழுந்து, அந்த வெளி முற்றத்திலிருந்து உள்ளே சென்று மஞ்சத்தில் சாய்ந்தாள்.

இராசேந்திர சோழ தேவர், பஞ்சவன் மாதேவியின் அருகே சென்றமர்ந்து,“தேவி! உடல்நிலை சரியில்லையா? ஏன் திடீரென எழுந்து சென்று விட்டாய்?” என்று கேட்டு நெற்றியில் கரம்பதித்து மெல்ல வருடினார்.

பஞ்சவன் மாதேவி பேசவில்லை. “இலேசாகக் காய்ச்சல் இருக்கிறதே” என்றார். அவள் பேசவில்லை.

பஞ்சவன் மாதேவிக்கு இரவு உறக்கம் வரவில்லை. புரண்டு புரண்டு படுத்தாள்.

காலையில் அரசரைச் சந்தித்தவுடன்,“பழையாறைக்கு உடனே புறப்பட வேண்டும்” என்றாள்.

இராசேந்திரன் வியப்புடன் அவள் முகத்தை நோக்கினார்.

திடீரென்று ஏன் இந்த மாற்றம்? என்று விழியாலேயே கேட்டார்.

“ஆமாம், இங்கே இருக்க எனக்குப் பிடிக்கவில்லை. உங்கள் அபிமான வல்லி வீரமாதேவி உருவாக்கும் புதிய சொர்க்கத்தை நான் உடனே பார்க்க வேண்டும். அந்த அதிசய நகரத்தை நான் உடனே காண வேண்டும்” என்றாள்.



Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

# வீரமாதேவியின் சிந்தனை அலைகள்

பழையாறை மாளிகைக்குத் திடீரென வீரமாதேவி, பணிப்பெண்களும், காவலர்களும் சூழ வருகை புரிந்தாள். அரிந்தவன் மாதேவியின் உடல்நலம் மேலும் குன்றியிருப்பதாக வந்த செய்தி அறிந்தவுடன் அவளால் சிற்பப் பணிகளையும், கோயில் பணிகளையும் மேற்பார்வையிட்டவாறு புதிய நகரத்தில் கணம்கூடத் தங்கியிருக்க முடியவில்லை.

பொழுது புலர்வதற்கு முன்பே பரிவாரங்களுடன் புறப்பட்டு விட்டாள். அரசர் உடன் வராமல் அவள் பழையாறைக்குச் செல்வது அதுவே முதல் தடவை.

புதிய நகரம் பாதிக்கு மேல் உருவாகிவிட்டது. புதிய புதிய வீடுகள், புத்தம் புதிய ஓடுகள் வேயப்பட்டு வீதிகளின் இரு புறமும் வீதிக்கு அழகு செய்தன.

பெரிய கோயில் பணிகள் முக்கால் பாகம் முடிவடைந்து விட்டன. விமானம் கம்பீரமாக எழுந்து கொண்டிருந்தது. விமானத்தின் நான்கு பக்கங்களும் ஓலைகளால் மறைக்கப்பட்டிருந்தன. சிற்பிகள் விமானத்தில் அழகிய சிற்பங்களை அமைத்துக் கொண்டிருந்தார்கள்.

இரண்டு நாள்கள் முன்பு வீரமாதேவி கோயில் பணி எவ்வளவு நிறைவேறியிருக்கிறது என்று சுற்றிப் பார்த்தாள். கோயிலைச் சுற்றி மதிற்சுவர்கள் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது. நீண்ட பெரிய பாறைகள் ஒன்றன்மீது ஒன்றாக அடுக்கிப் பொருத்தப்பட்டன.

‘அப்பப்பா, தேவலோகத்திலிருந்து தேவர்கள் வந்து பணியாற்றுகிறார்களா? அவர்களுக்கு ‘அசுரபலம்’ அமைந்துவிட்டதா?’

சோழ நாட்டுப் பணியாட்களைத் தவிர நானா தேசங்களிலிருந்தும் திறமை மிக்கவர்கள் நூற்றுக்கணக்கானவர்கள் வந்து இரவு பகல் பாராமல் இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

சிற்பி மாணிக்க சேகரனின் மாணாக்கர்களின் இருகரங்களும் சோர்வில்லாமல் இயங்கிக் கொண்டிருந்தன. இடக்கரம் உளியைப் பிடிக்க, வலக்கரம் சுத்தியல் பிடிக்க,‘கிணிங் கிணிங்’ என்ற நாதம் எழ, பாறைத்துகள் சிதறி ஓட, கற்கள் உயிர்வடிவம் பெற்றுக் கொண்டிருந்தன.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சிற்பிகள் களைப்படையாதிருக்க அவர்களது அன்பிற்குரிய இனிய துணைவியர் கஞ்சிக் கலயத்துடன் அங்கு வந்து வற்புறுத்தி ஒரு வாயாவது கஞ்சியைப் பருகச் செய்தனர். பிறகு அங்கிருந்து செல்லாமல் மலர்ந்த விழிகளால் தங்கள் அருமை அத்தானையும் இயங்கிக் கொண்டிருக்கும் கரங்களையும் உருவாகும் சிற்பத்தையும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

குடமுழுக்குக்கு நாள் குறித்தாகிவிட்டதாகப் பேசிக் கொண்டார்கள். அதற்குள் தங்களுக்கிட்ட பணியை முடித்துவிட வேண்டும் என்னும் ஆர்வத்தில் சிற்பிகள் இயங்கிக் கொண்டிருந்தார்கள். வெயிலுக்காக வேயப்பட்ட கீற்றுப் பந்தலில் தலைமைச் சிற்பி மாணிக்கசேகரன் சிற்பங்களுக்கு உயிர் கொடுத்துக் கொண்டிருந்தான்.

காலைக் கதிரவன் எழும் முன்பே தன் பணியை, தொடங்கி, பசி, தாகம் பாராமல் அவன் பணி செய்து கொண்டிருப்பதை வியப்புடன் குமுதவல்லி பார்த்துக் கொண்டிருந்தாள். கோயில் திருப்பணிகள் மிக விரைவில் நிறைவேற வேண்டும் என்பதில் மற்றவர்களைவிட அவளுக்கு அக்கறை அதிகம்.

வீரமாதேவி ஒருநாள் வேடிக்கையாக மாணிக்கசேகரனிடம் சொன்னாள்: "பெரிய கோயில் குடமுழுக்கு நடைபெற்ற மறுநாளே உங்கள் திருமணத்தை நடத்த வேண்டும் என்று நான் முடிவெடுத்து அதை முன்பே அரசரிடம் தெரிவித்து விட்டேன்."

"அதென்ன, குடமுழுக்கு முடிந்தபிறகே மாணிக்க சேகரன் திருமணம் நடைபெற வேண்டும் என்று கட்டளை விதித்திருக்கிறாய்?" என்று கூட வேடிக்கையாகக் கேட்டார் அரசர்.

"அப்போதுதான் திருப்பணி மிக வேகமாக நடைபெறும். தூண்டுதல் குமுதவல்லியிடம் இருந்தும் வரும்" என்று சொல்லியிருக்கிறாள், வீரமாதேவி சிரித்தவாறு. வீரமாதேவி சொல்வதைக் கேட்ட குமுதவல்லியின் முகம் நாணத்தால் சிவந்ததை மாணிக்க சேகரன் காணத் தவறவில்லை. இளவரசி கூறியதைக் கேட்டு மாணிக்க சேகரன் என்ன நினைக்கிறான் என்று, குனிந்த தலை நிமிராமல் நோக்கினாள் குமுதவல்லி.

'அதோ அவரும் தலைகுனிந்து விட்டாரே!' ஓர் ஆண் வெட்கப்படுவதை அவள் இப்போதுதான் பார்க்கிறாள்.

பொதுவாகவே சிற்பப்பணி நடைபெறும்போது அவளுடன் நெருங்கிப்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பேச விரும்பாத மாணிக்கசேகரன் இப்போது குடிலுக்குக்கூட வருவதில்லை. சிற்பப்பணி நடக்கும் இடத்திலேயே இரவு பகல் தங்கத் தொடங்கினான். அவளும் உறுதியுடன் இருக்க முடிவு செய்தாள். சிறிது நேரம் ஓய்வெடுக்க முயன்று அமைதியாக அமர்ந்திருக்கும்மாணிக்கசேகரன் செவிகளில் மட்டும் கேட்குமாறு,"இளவரசி என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா?" என்று கேட்பாள்.

மாணிக்க சேகரன் திரும்பிப் பார்ப்பான் - அவள் சொற்கள் புரியாமல் திகைப்பான்.

"குடமுழுக்கு ஆன மறுநாளே நம் திருமணம்!" என்று அவள் நினைவுபடுத்தும் வார்த்தைகளைக் கேட்டவுடன், அவன் சிற்றுளியையும் சுத்தியலையும் எடுத்துக் கொள்வான்.

அன்று, வீரமாதேவி சிற்பப் பணிகளைச் சுற்றிப் பார்க்க வரும்போது மாணிக்க சேகரன், சிற்பம் ஒன்றில் மிக நுணுக்கமான வேலைப்பாட்டைச் செய்து கொண்டிருந்தான். அவன் களைப்பாக இருந்தான். அவன் எதிரே குமுதவல்லி கவலையுடன் மாணிக்க சேகரன் முடிக்கவிருக்கும் அழகிய திருமகளின் சிற்பத்தை வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். வீரமாதேவி வந்ததைச் சிற்பி கவனிக்கவில்லை. குமுதவல்லி பார்த்து விட்டாள். சைகையால் குமுதவல்லியை அழைத்துச் சற்றுத் தொலைவில் சென்று,"குமுதவல்லி! திருமண நாளை நிச்சயித்து விடலாமா?" என்று கேட்டாள்.

வீரமாதேவி கேட்பதன் பொருள் புரியாமல் திகைத்த குமுதவல்லியை நோக்கி,"அதோபார்! விமானத்தில் கலசம் வைக்க வேண்டியதுதான் பாக்கி. சிற்பி இரவு பகலென்று பாராமல் பணி செய்கிறார். இந்தச் சிற்பத்துடன் எல்லாம் முடிவடைந்துவிடும். பிறகு என்ன? சக்கரவர்த்திகள் குடமுழுக்குக்கு நாள் பார்த்து விடுவார். அதற்குப் பிறகு உங்கள் திருமண நாள் தானே?" என்றாள் வீரமாதேவி.

'இளவரசி மிகப் பொல்லாதவர் - இல்லாவிட்டால் நாணத்தால் தலைகுனிய வைத்துவிடும் கலையைக் கற்றிருப்பார்களா?' என்று குமுதவல்லி எண்ணி, மறுமொழி கூறாமல் அங்கிருந்து சிற்பியை நோக்கிச் சென்றாள். வீரமாதேவியும் அவளைப் பின் தொடர்ந்தாள். இளவரசி வந்திருப்பதை குமுதவல்லி தெரிவித்தாள். சிற்பியின் சிந்தை கலையவில்லை. சிற்பி கருமமே கண்ணாக இருந்தான்.

திருமகள் - செந்திருவின் சிற்பத்தின் வில் போன்ற புருவத்தைச் செதுக்கி,

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கருணை விழிகளை அமைத்த பிறகே அவனுக்கு இந்த உலகத்தின் நினைவே வந்தது.

அருகே குமுதவல்லியும், வீரமாதேவியும் நிற்பதைக் கண்டவுடன் திடுக்கிட்டு எழ முயன்ற மாணிக்க சேகரனைப் பார்த்து, கையமர்த்தி,“சக்கரவர்த்திகள் இங்கிருந்திருந்தால் தங்கள் கரங்களுக்கு பொற் கங்கணமிட்டிருப்பார்கள். உம்: அதனால் என்ன - இன்னும் சில நாள்களில் உங்கள் திருமண நாள் அன்று சக்கரவர்த்தி கனகாபிஷேகம் செய்து விடுவார் பாருங்களேன்!” என்று கூறி, கலகலவென நகைத்தாள்.

சிற்பியின் விழிகள் கலங்கின. முழுமையாக உருவான திருமகள் சிற்பத்தை வெற்றிகரமாக முடித்துவிட்ட உள்ள நிறைவில் அவனுக்குப் பேச நா எழவில்லை.

“ஆடவல்லான் அருளால் எல்லாம் நல்லபடியாக முடிவடைந்தன. கருவூர்ச்சித்தரின் ஆசி, அரசர் கொடுத்த நல்ல வாய்ப்பு, தாங்கள் அவ்வப்போது அளித்து வரும் ஊக்கம்…” என்று வார்த்தைகளை முழுமையாக்க முடியாமல் தவித்தான்.

“கருவூர்ச்சித்தர் நேற்று இங்கு வந்திருந்தார். இன்னும் இரண்டு நாள்களுக்குள் கோயில் பணி அனைத்தும் முடிந்துவிட வேண்டும் என்று அன்புடன் வற்புறுத்தினார். பொதிகை மலைக்குப் புறப்பட்டுச் செல்ல நாள் குறித்துவிட்டாராம்” என்றான் மாணிக்க சேகரன்.

வீரமாதேவி திடுக்கிட்டாள். “சித்தர் இங்கு வந்தாரா? எனக்குத் தெரியாதே. பொதிகை மலைக்குச் சென்றால் மீண்டும் சோழ நாட்டிற்குத் திரும்ப மாட்டாரே? அவர் இருக்கும்போதே குடமுழுக்கு நடத்த வேண்டுமே – ஐயோ வடக்கே இருந்து எந்தவிதச் செய்தியும் வரவில்லையே. சக்கரவர்த்திகள் கங்கைக் கரைக்குச் சென்றாரா? விமானத்திற்கும் பெருவுடையாருக்கும் கங்கை நீரால் அபிஷேகம் செய்ய வேண்டும் என்ற சக்கரவர்த்திகளின் எண்ணம் நிறைவேற வேண்டுமே” என்று பதைபதைப்புடன் கூறிய வீரமாதேவி, சிற்பியை நோக்கி,“சித்தர் வேறு என்ன தெரிவித்தார்? இங்கே வந்து எவ்வளவு நேரம் இருந்தார்? ஐயோ, எனக்குத் தெரியாமல் போய்விட்டதே?” என்று கவலையுடன் பேசினாள்.

வீரமாதேவி அங்கிருந்து சென்றவுடன் மாணிக்கசேகரன் அருகிலுள்ள பாறையில் அமர்ந்தான். பணிகளை முழுமையாக முடித்துவிட்டதில் அவனுக்கு முழு நிறைவு இருந்தாலும், இதுவரை இல்லாத களைப்பும் சோர்வும் அவனிடம் சேர்ந்தன. அதையறிந்த குமுதவல்லி அவன்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கரத்தை எடுத்து முத்தமிட்டு அவனைத் தன் மடியில் கிடத்தி அவன் தோள்களைப் பிடித்துவிட்டு,“இந்தக் கரங்களுக்கு உரிமையுடையவள் என்பதில் பெருமைப்படுகிறேன்” என்று அவன் கரங்களை எடுத்துத் தன் விழிகளில் புதைத்துக் கொண்டாள்.

மாணிக்க சேகரனுக்கு அப்போது ஏற்பட்டது மயக்கமா, சோர்வினால் ஏற்பட்ட களைப்பா? மாணாக்கன் ஒருவன் வந்து அழைத்தபோதுதான் அவன் கண் விழித்தான்.

“இளவரசியார் பழையாறை புறப்படப் போகிறார். தங்களையும் உடன் அழைத்துச் செல்ல விரும்புகிறார். பழையாறை சோதிடரிடம் குடமுழுக்குக்கு நாள் பார்க்க வேண்டுமாம்” என்று தெரிவித்தான்.

பழையாறைக்குச் சென்ற வீரமாதேவி சோதிடரிடம் செல்லாமல், அரிந்தவன் மாதேவியின் மாளிகைக்குச் சென்றாள். கடந்த சில நாள்களாக அவள் பேச்சும் சுயநினைவும் இல்லாமல் படுத்துக் கிடப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

‘அரிந்தவர் மாதேவியின் இறுதி நாள்கள் நெருங்குகின்றன. சுயநினைவு வரும்போது, சக்கரவர்த்திகளை உடனே காண வேண்டும் என்று தன் இறுதி விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்” என்று மருத்துவர் கூறியது கேட்டு வீரமாதேவி என்ன செய்வது என்று புரியாமல் திகைத்தாள்.

வடக்கே சென்றிருக்கும் சக்கரவர்த்திகளுக்கு அரிந்தவன் மாதேவியின் உடல்நிலை குறித்துத் தெரிவிக்கக் கூடாது என்று சித்தர் ஏன் சொன்னார்? தெரிந்தால் கங்கைப் பயணத்தை இடையிலே நிறுத்தித் திரும்பி விடுவார் என்பதால் இருக்கலாம். கங்கை நீரைக் கொண்டு குடமுழுக்குச் செய்யும் எண்ணம் நிறைவேறாமல் போய்விடும். அபசகுனம் போல் அந்தச் செய்தி அமைந்து விடலாம். ஒருவேளை அரிந்தவன் மாதேவி நிரந்த நித்திரை கொண்டுவிட்டால் அப்போதும் அரசர் பயணத்தை முடிக்காமல் திரும்பி விடலாம் அல்லவா? என்ன செய்வது என்று தெரியாமல் வீரமாதேவி கவலையுடன் நின்று கொண்டிருக்கும்போது கருவூர்த் தேவர் அங்கு வந்து கொண்டிருந்தார்.

மேகம் மூடிய இருண்ட வானத்தில் ‘பளிச்’ என்று வெண்மதி தோன்றியது போல் அந்த வெண்தாடித் தேவர் வந்து கொண்டிருந்ததை விழி மூடாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் வீரமாதேவி.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

77

# அரசரின் முடிவு?

பெரும் புயல் வீசிக் கொண்டிருந்தது. வானமே பொத்துக் கொண்டதோ எனும்படியாக மழை தாரை தாரையாக ஊற்றிக் கொண்டிருந்தது,

கண்ணுக்கெட்டிய தொலைவு வரை நீர், நீர்! கோதாவரி நதியில் பெருக்கெடுத்த வெள்ளத்தோடு, வானத்தையும் பூமியையும் இணைத்துக் கொண்டிருக்கும் மழை நீரும் சேர்ந்து கொண்டது.

இரவு பகல் என்று தெரியாமல் மழை பெய்து கொண்டிருந்தது. அவ்வப்போது வெட்டிச் செல்லும் மின்னொளியில், பெரும் பெரும் மரங்கள் நதி நீரில் அடித்து வருவது தெரிந்தது,

இராசேந்திரன் தங்கியிருந்த மாளிகையை மெல்ல மெல்ல வெள்ளம் சூழத் தொடங்கியதால், அரச பரிவாரங்கள் சற்று மேடான இடத்தினை நோக்கிச் செல்லத் தொடங்கினர்.

வெண் கொற்றக் குடையின் கீழ் ஏழுலகையும் ஆளும் சக்தி படைத்த இராசேந்திரன் மழையால் நனையாமல் இருக்கப் பிரிக்கப்பட்ட குடைகள் சூறாவளியில் பிய்த்துக் கொண்டு பறந்தன.

இராசேந்திரன், பட்டத்தரசியை உடன் அணைத்துக் கொண்டு பாதுகாப்பான இடம் நோக்கி விரைந்தார். அந்த முதுமையிலும் அவரிடம் நிறைந்திருந்த வலிமை அவரை வேகமாக இயங்க வைத்தது. பஞ்சவன்மாதேவியின் கரத்தை அவர் அழுத்தமாகப் பிடித்திருந்தார். அவருடைய வேகத்துக்கு இணையாக, பஞ்சவன்மாதேவியால் நடக்க இயலவில்லை. பல இடங்களில் தடுமாறினாள். காற்றுடன் கலந்து மழை நீர் முகத்தில் பளீர் பளீர் என்றடித்தது. உடலுடன் ஒன்றிப் போன பட்டாடை நடையைத் தடைப்படுத்தியது. மழைக் குளிரால் உடல் நடுங்கியது.

சிறு குழந்தையைத் தாய் அணைப்பது போல் அணைத்துக் கொண்டு இராசேந்திரன் விரைந்தார். அவர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இடம் கோயிலொன்றின் மண்டபம். மேடான இடம். அங்கே மழை வெள்ளம் எட்டிப் பார்க்க முடியாது. கோயிலின் பாதத்தைத் தொட்டு ஓடியது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கலங்காத இராசேந்திரன் மனம் கலங்கியது. பஞ்சவன் மாதேவி தரையில் படுத்திருந்தாள். விரைந்தோடி வந்த பணியாள்கள் எங்கிருந்தோ சுளுந்துகளைக் கொண்டு வந்து தூண்களில் கட்டி மண்டப ஓரமாக ஒளி பரவச் செய்தனர்.

முற்றிலும் நனைந்திருந்த பஞ்சவன் மாதேவியாரின் உடலெங்கும் காய்ந்த துணியால் அரசர் துடைத்தார். தனக்கு அவர் செய்யும் பணிவிடை கண்டு திடுக்கிட்ட பஞ்சவன்மாதேவி அதைத் தடுக்க முயன்றாலும் அவளால் முடியவில்லை. அச்சத்தாலும், நாணத்தாலும் மரியாதை மிகுந்திருந்ததாலும் அவள் குறுகிப் போனாள். உதடுகள்,'வேண்டாம்: வேண்டாம்' என்று முணுமுணுத்தன.

நல்ல வேளையாக உடைகள் இருந்த பெட்டி மழையில் நனையவில்லை. அரசர், அங்கு உதவி வந்த பணியாளர்களையும் அதிகாரிச்சிகளையும் அங்கிருந்து விலகச் சொல்லி, பெட்டியைத் திறந்து வேற்றாடைகள் எடுத்து உடுக்கச் செய்தார். மண்டபத்தின் நான்கு புறமும் மறைக்கப்பட்டன. ஒருவரும் அருகே வர அரசர் அனுமதிக்கவில்லை.

இராசேந்திரன் வெளியே வந்து நின்று கொண்டார். பணிப் பெண்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகள், அதிகாரிச்சிகள் - பாதுகாப்பான இடத்திற்குச் சென்று விட்டனரா என்று அறிவதில் முனைந்தார். அவ்வப்போது வெட்டிச் செல்லும் மின்னலொளியில் புயலின் கோரத்தாண்டவம் புலப்பட்டது. நடுநிசியைத் தாண்டியிருக்கும்.

அருகேயிருந்த கிராமத்து மக்கள் அந்தக் கடுமையான மழையிலும் கூட்டமாக ஓடிவருவது தெரிந்தது. பானைகளைச் சுமந்து வந்தனர். அதில் சூடான கஞ்சி இருந்தது.

அந்த நேரத்தில் அது அமுதமாகத் தோன்றியது.

மழையும் புயலும் எப்போது நின்றனவோ தெரியவில்லை. அரசரும் அரசியும் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தனர். பொழுது புலர்ந்து நேரமான பிறகும் அவர்கள் எழுந்திருக்கவில்லை.

மழை ஓய்ந்தது. கரிய மேகங்கள் விலகி வானம் வெளுத்தது. எங்கோ தெரிந்த கதிவரனின் மெல்லிய கரங்கள் மக்களுக்கு ஆதரவு தர நீண்டன. பறவை இனங்கள் சிலிர்த்தவாறு பறந்தன. கடுமையான மழையில் சிக்குண்டு தவித்த ஆவினங்கள் 'அம்மா' என்று தீனக்குரல் எழுப்பின.

கோயில் மண்டபம் எத்தகைய வெள்ளத்தாலும் புயலாலும்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பாதிக்கப்படாத அளவுக்கு உயரமான இடத்தில் கட்டப்பட்டிருந்தது. அது சிவன் கோயிலின் உள் மண்டபம். சுற்றிலும் உயரமான மதில்கள்.

பணியாளர்களும், அதிகாரிகளும் மண்டபத்தின் வெளியே நின்று கொண்டு அரசரை எப்படி எழுப்புவது என்று தெரியாமல் திகைத்துக் கொண்டிருந்தனர். பரிவாரங்களுடன் வந்திருந்த மருத்துவர், துணிவுடன் சுற்று மறைப்பை விலக்கிக் கொண்டு அரசர் படுத்திருந்த இடம் நோக்கிச் சென்றார். அரசியார் கண் விழித்து, அரசரின் அருகே செய்வதறியாது திகைத்தவாறு அமர்ந்திருந்தார்.

இராசேந்திர சோழ சக்ரவர்த்தியின் உடல் தணலாய்க் கொதித்தது. நெற்றியைத் தொட்டுப் பார்த்து நாடி பிடித்துப் பார்த்த மருத்துவர் பதற்றத்துடன் வெளியே வந்தார். மூலிகைச் சாறெடுத்து அவருக்குப் புகட்ட முயன்றார். கைவசமிருந்த தைலங்களைத் தடவித் தேய்த்தார். தன் உதவியாளர்களிடம் தகவல் கூறி அவர்களை விரைந்து சென்று சில மருந்துகளைக் கொண்டு வரச் சொன்னார்.

மெல்ல எழுந்த பஞ்சவன்மாதேவி, அரசர் அருகே கவலையுடன் அமர்ந்த மருத்துவர் அளித்த மருந்தைப் புகட்ட முனைந்தாள்.

நண்பகல் தாண்டிய பிறகு அரசர் கண் திறந்து பார்த்து, சைகையால் வினவும் நேரம்வரை அனைவரும் பேய் அடித்தவர்கள் போல் பிரமிப்புடன் இருந்தனர். வேங்கி நாட்டுக்குச் செய்தி சென்றது.

கடும் காய்ச்சல் மெல்ல மெல்லக் குறைந்தது. சூழ்ந்திருந்த வெள்ளம் படிப் படியாகக் குறைந்தது. ஆனால் கோதாவரியில் இன்னும் இரு கரைகளையும் உடைத்து விடுவது போல் வெள்ளம் பாய்ந்தோடியது. சுழல் குறையவில்லை.

கோதாவரி நதியில் இரண்டு முறை முழுமதி நிலவு மறைந்தது. கதிரவன் மறைவதையும், முழுமதி உதயமாவதையும் கண்டு மன அமைதியடைந்தார் இராசேந்திரன்.

அந்தப் புயல் அடித்த இரவு நடந்த சம்பவத்தை அரசி மறக்கவில்லை. அன்று வலிமையுடன் அவர் இயங்கியதையும் இன்று அவர் துவண்டு கிடப்பதையும் பார்க்க அவள் அதிர்ச்சியடைந்தாள். அவருடைய திடமான கரங்களைத் தன் மடி மீது வைத்து மெல்ல வருடியவாறிருந்த பஞ்சவன்மாதேவி, கடுங் காய்ச்சலிலிருந்து தப்பிய சக்கரவர்த்தியின் முகத்தையே நோக்கியவாறிருந்தாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அவள் விழிகள், சக்கரவர்த்திகளின் வாடிய முகத்தை நோக்கின. ஒரு மாதத்திற்குள் இளைத்துப் போன மேனியை நோக்கி வேதனையடைந்தாள்.

இராசேந்திரனும் பஞ்சவன்மாதேவியை நோக்கி மெல்லப் புன்னகை புரிந்தார். அந்தக் கீற்றுப் புன்னகையில் பல நூறு அர்த்தங்கள் பளிச்சிட்டன.

‘கவலைப்பட்டாயா, தேவி?’ என்று அந்த விழிகள் கேட்டன.

“அந்தப் புயலடித்த இரவு வேளையில் நானே பயந்து விட்டேன். உன்னால் நடக்க முடியவில்லை. மிகவும் களைப்படைந்து விட்டாய். மலர் போன்ற உன் பாதங்கள் மழை நீரில் சிக்குண்டு தள்ளாடின. பன்னீர் அன்றி வேறு நீரால் நனையாத உன் முகத்தில் பளீர் பளீர் என்று புயலும், மழையும் அடித்து வேதனையடையச் செய்தன. எப்படித் தாங்கிக் கொண்டாய், தேவி?”

“மிகவும் தொல்லை கொடுத்து விட்டேன் அரசே! குடி மக்கள் துயரங்களைச் சுமக்கும் தாங்கள், என்னைச் சிறு குழந்தை போல் சுமந்தீர்கள். நானும் சோழ நாட்டுக் குடிமகள் என்பதை உணரச் செய்தீர்கள். என்னால் அன்றோ தாங்கள் கடுமையான நோயால் அவதிப்பட்டீர்கள்?”

“இல்லை, இல்லை. நீ அருகே இருந்து பணிவிடை செய்ததால் நான் பிழைத்தேன். இல்லாவிடில், கோதாவரி நதிக் கரையில் எனக்கு ஒரு நினைவு மண்டபத்தை எழுப்பியிருப்பார்கள்.”

“ஐயோ, என்ன சொல்கிறீர்கள்? சோழ நாட்டைக் கொடிய துயரில் ஆழ்த்தி விட வேண்டும் என்பது தங்கள் விருப்பமா?”

“இல்லை, இல்லை. சாவுக்கு அஞ்சுபவன் அல்லன் நான். ஐந்தெழுத்து மந்திரத்தை மனத்தில் நினைத்த வாறிருந்தேன். ‘நமனை அஞ்சோம், நரகத்தில் இடர்ப்படோம்’ என்று உறுதியாக நம்பினேன். ‘நமசிவாய வாழ்க, நாதன்தாள் வாழ்க’ என்று ஆயிரம், லட்சம், கோடி முறை உச்சரித்தவாறிருந்தேன்.”

சொல் வெளியே வரவில்லை. உதடுகள் அசையவில்லை. பஞ்சவன் மாதேவியின் விழிகளும், இராசேந்திர சோழ தேவர் விழிகளும் இமை கொட்டாமல் மேலே கூறியவாறு பேசிக் கொண்டிருந்தன.

சக்கரவர்த்தி இராசேந்திர சோழ தேவர் முகத்தில் புதிய ஒளி பிறந்தது,

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

இவ்வளவு நாள்களாக பேசாத அவர் பேசினார்.

“தேவி! இரவும் பகலும் என்னருகே அமர்ந்து நீ செய்த பணிவிடையால் நான் பிழைத்தேன். நீ பயந்து விட்டாய். அப்படித்தானே?”

பஞ்சவன் மாதேவியின் விழிகள் பனித்திருந்தன. மெல்ல, விழிகளைத் துடைத்துக் கொண்டாள். இதயத்தில் அடக்கி வைத்திருந்த பாச உணர்ச்சியைப் பொங்கி வரும் கண்ணீரால் வெளிப்படுத்த முயன்றாள்: அடக்கிக் கொண்டாள். மெல்லிய விம்மல் ஒலி விசும்பலாக வெளி வந்தது.

“சக்கரவர்த்திகளே! நான் அஞ்சவில்லை. தங்களைப் போன்றே நான், நம் குல தெய்வம் ஆடவல்லானின் திருவடிகளை மனத்திலெண்ணித் தங்கள் பாதத்தில் முகத்தைப் புதைத்தவாறிருந்தேன். சிவபெருமானுக்கு மிகப் பெரிய கோயில் கட்டும் திருப்பணியில் ஈடுபட்டுள்ள தங்களுக்கு இத்தகைய கொடிய காய்ச்சலை ஏன் அவர் அளித்தார், என்றெண்ணினேன். சில நாள்களாகவே நான் தங்களை வற்புறுத்தி வந்தது நினைவிருக்கலாம். பழையாறைக்கு உடனே திரும்ப வேண்டும். அரிஞ்சயன் தேவியைப் பார்க்க வேண்டும் என்ற பரபரப்பு என் உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமன்று, நம் நாட்டினின்று சில நாள்களுக்கு முன் வந்தவர்கள் கோயிலையும் அதிலுள்ள சிற்பங்களையும் வர்ணித்ததைக் கேட்கும் போது கோயிலைக் காண வேண்டும் என்ற ஆர்வம் என் உள்ளத்தில் எழுந்து என்னை நிலை கொள்ளாமல் செய்தது. கங்கை நதி நீரால் கோயிலின் குடமுழுக்கை நடத்த வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தீர்களே, அதை நிறைவேற்ற வேண்டாமா?” என்று கூறும்போது பஞ்சவன் மாதேவியின் குரல் தழுதழுத்தது.

இராசேந்திரசோழ தேவர், பஞ்சவன் மாதேவியின் கரத்தை எடுத்து அன்புடன் தன் கரத்துடன் பிணைத்து,“புதிய கோயிலை, பெரிய கோயிலைக் காணவேண்டும் என்ற ஆவல் உனக்கு மட்டுமா? எனக்குந்தான். கோயில் திருப்பணியை அருகிருந்து நான் நடத்தாமல் கங்கை நீரின் மீது ஆசை கொண்டு புறப்பட்டது பிழைதானோ என்று எண்ணுகிறேன்.

“நகரம் பெரிதாக உருவாகி வருகிறதாம். தஞ்சைப் பெருவுடையார் கோயிலைப் போன்றே மிகப் பிரம்மாண்டமான கோயில் அங்கே கட்டப்பட்டு விட்டதாம். அழகிய சிற்பங்கள் சோழ நாட்டிற்கே பெருமை தரும் அளவுக்கு அங்கே அமைந்து விட்டனவாம். கருவறையில் மிகப்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பெரிய பெருவுடையார் லிங்க வடிவில் அமர்ந்திருக்கிறாராம். ஆவுடையாரும் லிங்கமும் தஞ்சைக்கு இணையாக இருக்கின்றனராம். அவற்றைக் காணாது நான் கோதாவரி நதிக்கரையில் அமர்ந்து என்ன செய்து கொண்டிருக்கிறேன்? பொழுதை வீணடித்து விட்டேனோ? கங்கையில் நீராடி, கங்கை நீருடன் திரும்பும் எண்ணத்தில் நான் போர்க்குணம் கொண்டு விட்டேனோ. தவறு, தவறு என் செயல். பெரும் பிழை. தஞ்சையிலுள்ளது போல் பெரிய நந்தியின் சிற்பத்தைப் படைக்க வேண்டும் என்று சொல்ல நினைத்திருந்தேன். நந்தியை அமைக்காமல் கோயில் பணிகள் முழுமையாகமாட்டா.

“கனவிலே, புதிய கோயில் தெரிந்தது. பெரும் மதில்கள் சூழ கோயில் விமானம் கம்பீரமாக நிற்பது தெரிந்தது. பல நூறு வீடுகள் அந்த நகரத்தில் கட்டப்பட்டிருக்கும் காட்சி தெரிந்தது. அடர்ந்த காடுகள் நிறைந்த இடம் என்று சொல்ல முடியாத அளவிற்கு அந்தப் பகுதி மாறிவிட்டது தெரிந்தது. புதிய நகரத்தைக் காண சோழ நாட்டின் பல காத தொலைவிலிருந்து மக்கள் வந்து பார்த்த வண்ணமாக இருப்பது எனக்குத் தெரிந்தது.

“பாவம், வீரமாதேவி! தன்னந்தனியாளாகவே அந்த நகரத்தை, கோயிலை உருவாக்கி விட்டாள். அந்தக் கோயிலுக்கு வீரமாதேவீச்சரம் என்று பெயர் சூட்டப் போகிறேன்.”இராசேந்திர சோழர் விழிகளை மூடியவாறு தன் கண்முன் தெரிந்ததை விவரித்துக் கொண்டே போனார்.

பஞ்சவன் மாதேவி நிமிர்ந்து உட்கார்ந்தாள். தன் மெலிந்த கரத்தை, இராசேந்திரன் கரத்திலிருந்து விருட்டென்று எடுத்துக் கொண்டு,“வீரமாதேவீச்சரமா? இல்லை.... இல்லை... அவள் பெயரைச் சூட்டக் கூடாது” என்று, மெல்லத்தான் சொல்ல எண்ணினாள். ஆனால் அந்தக் குரல் கிறீச்சென்று ஒலித்தது.

இராசேந்திரன் திடுக்கிட்டார். “தேவி, தேவி! உனக்கு என்ன ஆயிற்று?” என்று கேட்டு நெருங்கினார்.

“எனக்கு ஒன்றும் ஆகவில்லை. உங்களுக்குத்தான் - உங்களுக்குத்தான் - இன்னும் அவள் மீதுள்ள மோகம் மாறவில்லை. வீரமாதேவீச்சரமாம் வீரமாதேவீச்சரம்! இவ்வளவு ஆண்டுகள் ஆகியும் உங்களுக்கு அந்த மோகினி மீதுள்ள மோகம் தணியவில்லையா?” பஞ்சவன்மாதேவியின் முகத்தில் ஏற்பட்ட மாறுதலையும், உள்ளத்துணர்ச்சிகளையும் பிரதிபலிக்கும் விதத்தில் முகத்தில் ஏற்பட்ட கடுமையையும் இராசேந்திரன் கண்டார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“என்ன சொல்கிறாய் தேவி!” - இராசேந்திரன் அவள் முகத்தைத் தன் பக்கமாகத் திருப்பினார்.

“வழக்கத்திற்கு மாறாக புதிய கோயிலுக்கு அவள் பெயரை இட விரும்புகிறீர்கள்…”

“வழக்கம்தானே – லோகமாதீச்வரம், செம்பியன் மாதீச்சவரம் - பஞ்சவன்மாதீச்சுவரம் என்றெல்லாம் எனக்கு முன்பிருந்த பெரியவர்கள் கோயில்களுக்குப் பெயர் சூட்டி மகிழ்ந்திருக்கிறார்களே-“

“புதிய கோயில் தஞ்சைப் பெரிய கோயிலுக்கு இராசராசேச்வரம் என்று தானே பெயர்? அதுபோல் இந்தப் பெரிய கோயிலுக்குத் தங்கள் பெயரைச் சூட்டுங்கள். இராசேந்திர சோழேச்வரம் என்று பெயரிட வேண்டும் என்று நான் உத்தரவிடுகிறேன்.”

இராசேந்திர சோழ தேவர் வியப்புடன் பஞ்சவன் மாதேவியை நோக்கினார். ‘வீரமாதேவி மீது இவ்வளவு ஆத்திரமா? ஏன் அப்படி?” அவருக்கு விளங்கவில்லை.

“நாம் உடனே பழையாறைக்குப் புறப்பட வேண்டும்” என்று கூறினாள் பஞ்சவன்மாதேவி. அதில் பரபரப்பும் வேகமும் தெரிந்தன.

“ஆம்: என் எண்ணமும் அதுதான். அந்தப் புதிய கோயிலையும் நகரத்தையும் நான் காணாமல் ஒரு கணம் கூட இருக்க முடியாது. ஆனால்…”

“ஆனால்…. என்று கூறி, நம் பயணத்தை நிறுத்தி விடாதீர்கள்.”

“நீ தானே அதை நினைவுபடுத்தினாய். கோயில் குடமுழுக்குக்குக் கங்கை நீரைக் கொண்டு வருவதற்காக நான் பயணம் புறப்பட்டதை…”

“ஆம்: ஆனால், அந்தப் புனித யாத்திரையை நீங்கள் மறந்து, கோதாவரிக் கரையில் தங்கியது ஏன்? வடக்குத் திசை நோக்கிப் படைகள் அனுப்பினீர்கள். கங்கைக் கரைக்குப் படைகளை அனுப்பினீர்கள் ஏன்? நீங்கள் சென்றிருந்தால் உங்களை எதிர்க்கும் துணிவு யாருக்கு வந்திருக்கும்? இளைய படைத் தலைவர்களை கங்கைக் கரைக்கு ஏன் அனுப்பினீர்கள்? கங்கை நதிப் புனித நீர் தானாக வந்துவிடுமா? கங்கை நீர் வரப் போவதில்லை: வீரர்கள் வெற்றியடைந்த செய்திதான் வரப்போகிறது பிறகு ஏன் இங்கே காத்திருக்க வேண்டும்? மழையிலும் புயலிலும் சிக்கி அநாதை போல் மண் தரையில் ஏன் உறங்க வேண்டும்? ஆடவல்லான் அருளால் புயலும் வெள்ளமும் நமக்கு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

எந்தவித இடையூறும் தரவில்லை. தெய்வ அருள் பூரணமாக இருந்ததால் தப்பினோம். இனியும் நாமிங்கே தங்கக்கூடாது. புறப்படுவோம்.”

பஞ்சவன்மாதேவி இதுபோல் கருத்துத் தெரிவித்து அவர் அறிந்ததில்லை. அவர் மௌனமானார்.

“ஏதோ சிந்திக்கிறீர்கள். திட்டமிடுகிறீர்கள். நீங்கள் வருவதற்குள் அங்கே கருவூர்ச் சித்தரின் உதவியுடன் வீரம்மாள் குடமுழுக்கு நடத்தி விடுவாள். அவ்வாறு நடைபெற நான் சம்மதிக்க மாட்டேன்.”

இராசேந்திரன் மறுமொழி கூறாமல் இருந்தார். ஆனால் அவருள்ளம் பெரிதாகக் கொந்தளித்தது. அவர் உள் மனம் கேட்ட கேள்விகளுக்கு அவராலேயே மறுமொழி கூற முடியவில்லை.

“கங்கையில் நீராடுவதற்காகத்தானே புறப்பட்டாய்?

கங்கையில் நீராட வேண்டும் எனும் தந்தையின் எண்ணத்தை நிறைவேற்றத் தானே புனித யாத்திரை மேற்கொண்டாய்?

‘புனித நதியில் நீராடும்போது பட்டத்து அரசியை அழைத்துச் செல்லவில்லை. ஏன் என்று தெரியும். அந்த வீரமாதேவியுடன் சென்று நீராட வேண்டும் என்பது தானே தங்கள் உள்ளார்ந்த விருப்பம்?’

‘ஆம்: அப்படியும் இருக்கும். அதனால்தான் படைகளுடன் புறப்பட்டேன். பிறகு மனத்தை மாற்றிக் கொண்டேன். பஞ்சவன் மாதேவியைப் பழையாறையில் இருந்து வருமாறு அழைத்தேன்.’

‘இல்லை, இல்லை. மறைக்காதே. பழையாறையிலிருந்தால் வீரமாதேவியின் பணிகளுக்குப் பஞ்சவன் மாதேவி இடையூறு செய்வாள் என்ற எண்ணத்தில்தானே, தேவியை அழைத்தீர்கள்?’

உள்மனக் குரலுக்கு விடை கூற, சமாதானம் செய்ய முடியவில்லை.

‘பழையாறைக்குத் திரும்ப வேண்டும் - பஞ்சவன் மாதேவி பிடிவாதமாக இருக்கிறாள்.’

கோயில் திருப்பணியைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலையும் கட்டுப்படுத்த முடியவில்லை. கங்கை நீரைக் கொண்டு வராமல் செல்வது, எடுத்த இலட்சியத்திற்குத் தோல்வி. என்னதான் செய்வது?’

இராசேந்திர சோழர் மறுமொழி கூறாமல் எங்கோ தொலைதூரத்திலுள்ளதை வெறித்துப் பார்ப்பது போல்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அமர்ந்திருப்பதைக் கண்ட பஞ்சவன் மாதேவிக்குக் கவலை ஏற்பட்டது. தன் பேச்சைக் கேட்டு அரசருக்குக் கோபம் வந்துவிட்டதா? வரம்பு மீறிப் பேசிவிட்டேனா?

பஞ்சவன் மாதேவியிடம் மெல்ல நடுக்கம் ஏற்பட்டது. அவரை ஏறிட்டுப் பார்க்க முடியாமல் அச்சத்தால் தலை குனிந்து கொண்டாள். அதுபோன்ற சமயங்களில் அரசர் எதிரே நில்லாமல் போய் விடுவதுதான் சரி.

பஞ்சவன் மாதேவி குனிந்த தலையுடன் எழுந்தாள். அங்கிருந்து செல்ல முயன்றவளை,“தேவி! நில். என் மனத்தில் ஏற்பட்டுள்ள குழப்பத்தை எப்படி நீக்குவது என்று நான் சிந்திக்கிறேன். கலிங்க நாடு சென்றவர்களிடமிருந்து செய்தியை ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்திருக்கிறேன். சிலவற்றை நான் யூகித்து உணர்ந்துள்ளேன். அதன்படி நடக்கவும் யோசனை கூறியுள்ளேன். சில நாள்கள் பொறுத்திருப்போம். கோதாவரிக் கரையிலேயே அமைதியாகப் பொழுதைக் கழித்து வருவது சரியில்லை தான். ஓரிரு நாள்களில் கோதாவரியில் பெரும் வெள்ளம் குறையும். நாம் கங்கைக் கரையை நோக்கிச் செல்வோம்” என்றார்.

இரண்டு நாள்கள் - ஐந்து நாள்கள் - ஏழு நாள்கள் என்று கழிந்தன. ஆற்றுவெள்ளக் கடுமை குறைந்தது. நதியைக் கடக்கப் பெரிய பெரிய படகுகள் ஆயத்தம் செய்யப்பட்டன. மறுநாள், நல்ல வேளையாகப் பார்த்து பரிவாரங்களுடன் அரசர் புறப்படும்போது, கோதாவரியின் மறுகரையினின்று படகுகள் சில வந்து கொண்டிருப்பது தெரிந்தது. அந்தப் படகுகளில் புலிக்கொடி கம்பீரமாகப் பறப்பது, படகு நெருங்க நெருங்க நன்றாகப் புலப்பட்டது.

## 78

## கருவூராரின் கட்டளை

கருவூர்த் தேவர் நின்று நிதானமாக, பெருவுடையார் கோயிலைச் சுற்றிப் பார்த்தார். அவருடன் வீரமாதேவியும், சிற்பி மாணிக்க சேகரனும் சென்றனர். சற்றுத் தொலைவில் அதிகாரிகளும், சிற்பிகளும் அவர்களைத் தொடர்ந்து வந்தனர்.

விசாலமான கோயில் திருச்சுற்றில் அவர்கள் உயர்ந்து நிற்கும் விமானத்தைப் பார்த்தவாறு நடந்தனர். அவர்களுள் பலர் தஞ்சை

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

இராசராசேச்வரத்தைக் கண்டவர்கள். அங்கே சிற்பப்பணி செய்தவர்கள். தஞ்சையிலேயே வாழ்ந்து வருபவர்கள்.

குரலைத் தாழ்த்தி அவர்கள் தங்களுக்குள் பேசி வந்தனர்.

“மிகப் பிரம்மாண்டமான பணிதான்.”

“தட்சிண மேரு என்று தஞ்சை இராசராசேச்வரத்தைப் புகழ்வார்கள். மற்றொரு மேரு தான் இது”என்று வியந்து பேசினார்கள்.

“சிற்பி மாணிக்க சேகரனின் கைவண்ணமே கை வண்ணம்.”

“குடமுழுக்குக்கு நாள் குறித்துவிட்டாராமே கருவூர்த் தேவர்? நம் சக்கரவர்த்திகள் இப்போது எங்கே இருக்கிறார்? வடக்கே கங்கை நீராடச் சென்றவர் மனம் மாறி, போர் புரியச் சென்றுவிட்டாராமே. எப்பொழுது திரும்பி வருவார் என்று தெரியுமா?” என்று வியப்புடன் தானறிந்த செய்தியை விவரித்தார் ஒருவர்.

“ஆமாம். தக்க சமயத்தில் சக்கரவர்த்தி நம் வீரர்களை அனுப்பியிராவிடில் கூர்ஜர அரசர் தோற்றோடி இருப்பாராம். சோமநாதபுரம் வடமேற்கே பெரிய சிவன் கோயிலாம். அந்தக் கோயிலிலுள்ள நகைகளையும், செல்வங்களையும் கணக்கிட முடியாதாம். கஜினி என்ற ஊரிலிருந்து வந்த அரசர் பலமுறை தாக்குதல் நடத்தி, செல்வங்களைக் கொள்ளை அடிக்க முயன்றாராம்.”

“ஓ! அப்படியா? புலிக்கொடி ஏந்திய படை வீரர்கள் அவர்களை விரட்டியடித்து விட்டார்களா?”

“அப்படித்தான் நினைக்கிறேன். செய்தி இன்னும் இங்கே கிட்டவில்லை. கங்கைக் கரையிலும் சில எதிர்ப்புகள் இருந்தனவாம். அவை எல்லாம் சரியாகி விட்டனவாம். அரசரின் வருகை குறித்த செய்தியை பழையாறையில் எந்தக் கணமும் எதிர்பார்க்கிறார்கள்.”

“பழையாறையிலா? அங்கே யார் இருக்கிறார்கள்? சக்கரவர்த்திகளின் திருமகனார் இருவரும் இங்கே இருக்கிறார்கள். முதல் அமைச்சர் இங்குதான். இங்கே செய்தி கிடைத்த பிறகுதான் பழையாறைக்கு.”

“என்ன அப்படிச் சொல்லி விட்டாய்? பழையாறையில் அரிந்தவன் மாதேவியார் படுத்த படுக்கையாய் இருக்கிறார். அவருடைய அந்திம நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அவருடைய கடைசிக் காலத்தில் ஒருவர்கூட அவர் அருகே இல்லையே - ஹும். குடமுழுக்குக்காக

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

இல்லாவிட்டாலும், தம் அருமை மனைவியைக் காணவாவது அரசர் வரவேண்டாமா?"

"வடக்கே எங்கோ இருக்கும் அவருக்குச் செய்தி சொல்லி அனுப்பினார்களா தெரியவில்லையே?"

இப்போது குரல் மிகவும் மெலிந்தது. ரகசியம் பேசுவது போல்,"உனக்குத் தெரியுமா, வீரமாதேவியாருக்கு மனத்தில் ஒரே குழப்பம். அரிந்தவன் மாதேவி நிரந்தரமாகக் கண்ணை மூடிவிட்டால் என்ன செய்வது என்ற கவலை. கோயில் குடமுழுக்கு நடைபெற வேண்டும். அதற்குள் அரசர் வந்துசேர வேண்டும். அரிந்தவன் மாதேவி உடல்நிலை குறித்த செய்தியை அரசருக்குத் தெரிவிக்க வேண்டாம் என்று கருவூரார்தான் கூறினாராம்?"

"உனக்கு எப்படித் தெரியும்? அரசருக்குச் செய்தி தெரிவிக்குமாறு சொல்லியிருப்பார். வீரமாதேவி தடுத்திருப்பாள்."

"நீ பேசுவதில் நியாயம் இருப்பதாகத் தெரியவில்லையே? இருவருமே அவ்வாறு செய்திருக்க மாட்டார்கள்."

"எப்படிச் சொல்கிறாய்?"

"அரசர் விரைவில் வரவேண்டும் என்பதுதான் கருவூரார் விருப்பம். குடமுழுக்கை நிறைவேற்றிவிட்டுப் பொதிகை மலைக்குச் சென்றுவிட வேண்டும் என்று முன்பே முடிவு செய்துவிட்டார். அவர் குறிப்பிட்ட நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அரசரை வரவேண்டாம் என்று சொல்வாரா? வீரமாதேவிக்கும், அரசரைத் தடுத்து நிறுத்துவதால் என்ன பலன்?"

இந்த வாதம் நியாயமாகப்பட்டது. இதைக் கேட்டுக் கொண்டிருந்த மற்றொருவர் சொன்னார்: "அரிந்தவன் மாதேவியின் உடல்நிலை குறித்த செய்தி இரண்டு திங்களுக்கு முன்பு சக்கரவர்த்திகளைச் சென்றடைந்திருந்தால் சக்கரவர்த்திகள் கங்கைக் கரைக்குச் செல்லாமலே திரும்பியிருப்பார். அரிந்தவன் மாதேவியின் முடிவு உறுதி. குடமுழுக்குக்குக் கங்கை நீரைக் கொண்டுவர வேண்டும் என்ற அரசரின் இலட்சியம் நிறைவேறாது போயிருக்கும். இரண்டு துன்பகரமான நிகழ்ச்சிகளைத் தடுப்பதற்காகவே பழையாறை நிலவரத்தைக் கருவூரார் தடுத்திருப்பார்."

அவர் வாதத்திலும் நியாயமிருப்பதாகவே தோன்றியது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

மிக மெதுவாகப் பேசினாலும் பேச்சுச் சுவையில் தங்களைச் சுற்றிலும் பலர் நின்று கேட்டுக் கொண்டிருப்பதையும், சித்தரும், வீரமாதேவியும், சிற்பியும் தொலைவில் சண்டேச்வர அனுக்ரகமூர்த்தி சிலை எதிரே நின்று சிற்ப அற்புதத்தை ரசித்துக் கொண்டிருப்பதையும் கண்டு அங்கே விரைந்தார்கள்.

கருவூர்த் தேவர், சிற்பி மாணிக்க சேகரனைப் பாராட்டினார். அவன் கரத்தைப் பிடித்து மெல்ல வருடியவாறு,“உலகம் உள்ள அளவும் இந்தச் சிற்பம் அழியாது. இந்தச் சிற்பத்தின் சிறப்பு மற்றொன்று இருக்கிறது தெரியுமா?” என்று கூறி மாணிக்க சேகரனையும் வீரமாதேவியையும் மாறி மாறிப் பார்த்தார். பிறகு, மெல்லிய இனிய குரலில் பாடினார்.

“தனிய ரெத்தனையோ ராயிர வருமாம்

தன்மையர் என் வயத்தினராம்

கனியரத் தருதீங் கரும்பர் வெண்புரிநூற்

கட்டியர் அட்டஆர் அமிர்தர்

புனிதர் பொற் கழலர் புரிசடா மகுடர்

புண்ணியர் பொய்யிலா மெய்யர்க்

கினிய ரெத்தனையும் இஞ்சிசூழ் தஞ்சை

இராசரா சேச்சுரத் திவர்க்கே”

வெண் தாடியும், முடியும் கொண்ட சித்தர் உணர்ச்சியுடன் பாடினார். பாடும்போது அவர் கரங்களை அசைத்துப் பாடினார். ஆடினார்.

வீரமாதேவியும் மாணிக்க சேகரனும் விழிகளை மூடிக் கொண்டு நின்றனர். பெரிதும் புரியவில்லை. மயக்கம் தரும் சித்தரின் குரலில் கட்டுண்டு மெய்மறந்து நின்றனர்.

“வீரமாதேவி! எப்படி இருக்கிறது இந்தப் பதிகம்?” என்று கேட்டார் சித்தர்.

இதற்கு என்ன மறுமொழி கூறுவாள்? “சித்தர் பெருமானே! நாங்கள் எளியவர்கள். எங்களை ஒரு பொருட்டாக மதித்து கருத்தைக் கேட்கிறீர்களே! நாங்கள் கருத்துச் சொல்வதற்கே தகுதியற்றவர்கள்” என்று வீரமாதேவி சொல்லும்போது அவள் குரல் தழுதழுத்தது. இராசராசேச்சுரம் என்று கூறும்போது இராசேந்திர சோழேச்சுரம்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

என்பதுபோல் அவள் செவிகளில் வீழ்ந்து அவள் மேனி மெல்ல நடுங்கியது.

“வீரமாதேவி! இந்தப் பதிகம் தஞ்சையிலுள்ள பெருவுடையாரைப் பற்றியது. அவர் குடிகொண்டிருக்கும் கோயிலைக் குறித்தது.

“தஞ்சை இராசராசேச்வரத்தில் வீற்றிருக்கும் இறைவர் கனிவுடையவர். தனிமையானவர். ஆயிரம் பெயர்களுடைய தன்மையும் உடையவர். இனிய தித்திப்பான கரும்பைப் போன்றவர். வெண்மையான முப்புரி நூலைத் தரித்தவர். அமிர்தம் போன்றவர். தூய்மையானவர். பொன்மயமான வீர தண்டையைத் தரித்தவர். முறுக்கடங்கின சடையினையும் மகுடத்தையும் உடையவர் - பொய் பேசாத உண்மையானவர்களுக்கே இனியவர், புண்ணியர் என்று பொருள். புரிந்ததா? என்ன சிற்பியாரே! இந்த வர்ணனையெல்லாம் நீர் செதுக்கிய சிவபெருமானிடம் உள்ளனவா?” என்று கூறி, மெல்ல நகைத்தார். வெண்தாடி, மீசைக்கிடையே வெண்பற்கள் மின்னின.

வீரமாதேவி ஏதோ சொல்ல வாயெடுத்தாள். “சொல்லு, மகளே! தஞ்சையிலுள்ள இராசராசேச்வரமுடைய பெருவுடையாரைப் பற்றித்தானே பதிகம் பாடியுள்ளீர்கள்? இங்கே குடி கொண்டிருக்கும் இறைவனும் பிரம்மாண்டமானவர்தானே? பெருவுடையார் என்று தானே நாமம் சூட்டப்போகிறீர்கள்? இவருக்கு நீங்கள் இராசேந்திர சோழீசர் என்று பெயர் சூட்டிமகிழ வேண்டியதுதானே?” என்று தானே கேட்கப் போகிறாய்? வரும் காலத்தில் அழியாப் புகழ் அடையப் போகும் வீரமாதேவியே! இங்குள்ள இறைவனும் பெருவுடையார் தான். ஆனால் இந்தக் கோயிலுக்கு என்ன பெயர் சூட்டுவது? உன் பெயரில் வீரமாதேவீச்சரம் என்றழைக்கலாமா? இல்லை - மூத்த அரசி பஞ்சவன்மாதேவீச்சரம் என்றழைக்கலாமா? என்ன பெயரிடலாம் பெண்ணே! நீயே சொல்லு” சித்தர் சிரித்தவாறு கேட்டார்.

வீரமாதேவியிடமிருந்து மெல்லிய விம்மல் ஒலி எழுவது அவர் செவிகளில் வீழந்திருக்க வேண்டும்.

“பெண்ணே! நீ என்ன நினைக்கிறாய் என்று எனக்குப் புரிகிறது. உன் நினைவெல்லாம், விரைவில் இராசேந்திரன் திரும்பி வரவேண்டும். கங்கை நீர் கொண்டு குடமுழுக்குச் செய்ய வேண்டும். அவ்வளவுதானே? நடந்துவிடும். கவலை மறந்து களிப்புடன் இரு” என்றார்.

அவர் பார்வை சுற்றிலும் படர்ந்தது. அண்ணாந்து மேருவை ஒத்த விமானத்தை நோக்கியது. சாரம் கட்டி இன்னும் பணிகள் நடைபெற்றுக்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கொண்டிருந்தன. பிரமேந்திரக் கல்லையும் கும்பத்தையும் விமான சிகரத்தில் ஏற்றுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

"வீரமாதேவி! பொதிகைக்கு நான் செல்ல வேண்டிய நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. வரும் பௌர்ணமிக்குள் குடமுழுக்கு நடைபெறாவிடில், நானில்லாமல் நீங்களே குடமுழுக்கை நடத்திக் கொள்ள வேண்டியது தான். நீண்ட நாள்கள் தள்ளக்கூடாது. அந்தப் புண்ணிய நிகழ்ச்சிக்காகவே அரிந்தவன் மாதேவியின் உயிரை உடலில் நிறுத்தி வைக்கச் செய்துள்ளேன். பிறகு உங்கள் எல்லாரையும் பிரிந்து அரிந்தவன் மாதேவி சிவபெருமான் திருவடிகளை அடைந்து விடுவார்…" என்றார்.

"சுவாமி, சுவாமி! வரும் பௌர்ணிக்குள்ளாகவா? அரசரிடமிருந்து எந்தச் செய்தியும் வரவில்லையே. கங்கைக் கரைக்குச் சென்றாரா? கங்கை நீர் வருமா? இப்போதுள்ள சூழலில், கங்கை நீர் வராவிட்டாலும் - அரசர் வந்து சேரட்டும். கங்கையைவிடப் புனிதமான காவிரியினின்று நீர் கொண்டு வருவோம். சுவாமி! நீங்கள் இல்லாமல் பெரிய கோயிலுக்குக் குடமுழுக்கா? சித்தருக்கு ஒரு வேண்டுகோள்" என்று நிறுத்தினாள்.

"சொல்லலாம்" என்பதுபோல் சித்தர் புருவம் உயர்த்தினார்.

"தஞ்சைப் பெருவுடையாரைப் புகழ்ந்து பாடியது போல் இந்தக் கோயிலில் குடிகொண்டிருக்கும் பெருவுடையார் பேரிலும் பாடவேண்டும்" என்றாள்.

சித்தர் சிரித்தார். "எல்லாம் இறைவனின் ஆணை. அவனன்றி ஓரணும் அசையாது. உன் தலைவன் குடமுழுக்குக்கு வந்து சேரட்டும். அது சமயம் நாம் பதிகம் பாடுவோம். குடமுழுக்கு நடத்துவோம். விரைவில் எல்லாருக்கும் செய்தி சொல்லி அனுப்புவோம் - நினைவிருக்கட்டும்: வரும் பௌர்ணமியன்று கோயில் குடமுழுக்கு. என்ன செய்வாயோ? எப்படிச் செய்வாயோ கோதாவரிக் கரையில் பட்டத்தரசியுடன் ஓய்வு எடுத்து வரும் இராசேந்திரன் செவிகளை எட்டுமாறு உடனே செய்தி அனுப்பு.

"அரிந்தவன் மாதேவி கைலாசத்தின் படிக்கட்டுகளில் ஏறிக் கொண்டிருக்கிறார். விரைவில் வந்து சேருங்கள். கோயில் பணி முடிந்து குடமுழுக்குக்கு ஆயத்தமாக இருக்கிறது. கோயிலுக்கும் நகரத்திற்கும் பெயரிடும் பிரச்னைதான் மேலோங்கி இருக்கிறது. உடன் வந்து சேருங்கள்" என்று எழுதிச் செய்தியைக் காற்றினும் கடிதாகச் சென்று சேர்ந்து விடையுடன் வருமாறு செய்க" என்றார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வீரமாதேவிக்கு ஏது செய்வது என்று விளங்காமல்,‘கருவூராரின் மனத்தைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் எனக்கில்லையா? அல்லது அவர் புரிந்து கொள்ள முடியாதா புதிரா?’ என்று வீரமாதேவி தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள்.

வீரமாதேவி அருகே சித்தர் வந்தார். “குழந்தை என்று அழைப்பதா, தேவி என்று அழைப்பதா என்று எனக்கே தெரியவில்லை, வீரமாதேவி! என்ன செய்வதென்று திகைக்க வேண்டாம். செய்தி சென்றடைந்தவுடன் இராசேந்திரன் திடுக்கிட்டு உடனே திரும்பி வந்து விடுவாரே என்ற கவலைதானே? அந்தக் கவலை உனக்கு முன்பே இருக்க வேண்டாமா? அவருக்குச் செய்தி அனுப்பத் துடித்தாயே கங்கை நீரைக் கொண்டு வராமல் திரும்பி வருவாரே என்று அப்போது நீ நினைத்திருக்க வேண்டாமா? – போகட்டும். உனக்குப் பெரிய மனது. களங்கமற்ற மனது. வஞ்சனையில்லாத மனது. கலைக்காகவே வாழும் கன்னி நீ என்பது உலகத்துக்குத் தெரிய வாய்ப்பில்லை.

“வீரமாதேவி! பஞ்சவன் மாதேவி பழையாறை வரத் துடிக்கிறாள். மரணப் படுக்கையிலிருக்கும் அரிந்தவன் தேவியைக் காண்பதற்காக அன்று: இங்கே பூலோக கைலாயம் உருவாகிறது. பிரம்மாண்டமான கோயில், நிர்மாணிக்கப்பட்டு விட்டது. தஞ்சைக்கு இணையான பெரிய நகரம் அமைந்து விட்டது. நகரத்திற்குக் குடிநீரும், பயிர் வளரப் பாசன நீரும் கொடுக்க, பெரிய ஏரி வெட்டப்பட்டு விட்டது என்ற செய்தியை இங்கிருந்து சென்று சிலர் சொல்லியிருப்பார்கள். பட்டத்து அரசி தான்: ஆனால் சாதாரண மனிதனுக்கு இருக்கக் கூடிய இலட்சணத்துள் ஒன்றான பொறாமை அவளிடம் ஆரம்பம் முதல் குடிகொண்டிருக்கிறது. நகரத்திற்கும் கோயிலுக்கும் உன் பெயரைச் சூட்டிவிடப் போகிறார்களோ என்ற கவலையும், பயமும் அவளுக்கு ஏற்பட்டு விட்டன.”

“அவள் என்ன செய்யப் போகிறாள் என்பதுதான் இப்போது கேள்வி. இராசேந்திரன் கங்கைக் கரைக்குப் புறப்பட இருக்கிறான். அதற்குள் நம் தூதர்கள் செய்தி கொண்டு செல்ல வேண்டும்” என்று சித்தர் சொல்லும் போது அவருக்கே குடமுழுக்கு உரிய நாளில் நடைபெறுமா என்ற ஐயம் ஏற்பட்டது.

# 79

## கங்கை வரும்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கோதாவரிக் கரையில் நின்று கொண்டிருந்த பெரும் படகுகளில் ஏறுவதற்கு ஆயத்தமான இராசேந்திர சோழ தேவர், கரையை நெருங்கிக் கொண்டிருக்கும் புலிக்கொடி பறக்கும் படகுகளைக் கண்டவுடன் படகில் ஏறாமல் நின்றார்.

அருகில் இருந்த திருமந்திர ஓலை நாயகத்தை அழைத்து,“வருவது நம் படைவீரர்களா?” என்று கேட்டார்.

சற்று உற்றுப் பார்த்த ஓலை நாயகம்,“ஆம், வெற்றிக் களிப்புடன் வருகிறார்கள் என்று தெரிகிறது” என்றார் நாயகம்.

“இந்த வயதிலும் தங்கள் பார்வை தெளிவாக, தொலை நோக்குடன் இருக்கிறது. எப்படி அறிந்தீர்கள் வெற்றிக் களிப்புடன் அவர்கள் வருகிறார்கள் என்பதை?” என்று கேட்டார்.

“பெரிய பெரிய படகுகள் நான்கிலும் புலிக் கொடிகள் தெளிவாகக் காற்றில் அசைந்தாடிப் பறக்கின்றன. தளர்ச்சியைக் காணோம்: படகின் தளத்தில் வீரர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். அதோ பாருங்கள், அவர்கள் தங்கள் கரத்தை உயர்த்தி வேல், வாளுடன் நிற்பதை! அவர்கள் உரத்த குரலில் ஒன்றாகச் சேர்ந்து வெற்றிக் கீதம் இசைப்பதைக் கேளுங்கள். வானை நோக்கி வீரர்கள் வீசுகிறார்களே அவை பூங்கொத்துகள், அவை காற்றில் மிதந்து வருகின்றன.”

இராசேந்திரர், திருமந்திர ஓலை நாயகத்தின் முதுகைத் தட்டிக் கொடுத்து, அவர் கூறியபடியே வெற்றி முழக்கக் குரல் விண்ணை எட்டும் அளவிற்கு எழும் வாழ்த்தொலியைச் செவிமடுத்தார். தேவர்கள் பூமாரி பொழிவது போல் படகுகளிலிருந்து மலர்களைத் தூவுவதையும் பார்த்தார்.

“புறப்பட ஆயத்தமாக இருக்கும் நம் படகுகளில் விரிக்கப்பட்ட பாய்களைச் சுருட்டச் சொல்லுங்கள்” என்றார்.

பட்டத்து அரசி பஞ்சவன் மாதேவியின் பக்கம் திரும்பி,“தேவி! நல்ல செய்தியை வீரர்கள் கொண்டு வருகிறார்கள் என்றே தோன்றுகிறது. நீ, இருப்பிடம் செல்: வரும் வெற்றி வீரர்களை நான் வரவேற்று அழைத்து வருகிறேன்” என்று கூறும்போது அவர் குரலில் பரபரப்பு நிறைந்திருந்தது. உள்ளத்தில் பொங்கித் ததும்பும் மகிழ்ச்சி மிகுதியால் அவர் பேசுகிறார் என்பதும் புலப்பட்டது.

நான்கு பெரும் படகுகள் நதிக்கரையின் சற்றுத் தொலைவில்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வரிசையாக நங்கூரம் பாய்ச்சி நின்றிருந்தன.

தொலைவிலிருந்து பார்க்கும்போது சிறியவைபோல் தோன்றிய அந்தப் படகுகள், கரையருகே வந்து நின்ற போது பெரும் மரக்கலங்கள் போல் காட்சியளித்தன. அவற்றினின்று தோணிகள் போன்று சிறு படகுகள் கரை இறக்கப்பட்டன. ஏணியின் வழியே, சிறிய படகுகளில் வீரர்கள் ஒவ்வொருவராக இறங்கினர். அந்தப் படகுகள் கரையை நெருங்கின.

ஒரு பகுதிப் படைகளின் தலைவனான வீரர் ஒருவர் அரசரை வணங்கி,"ஜய விஜயீ பவ! சோழ சக்கரவர்த்திகள் வாழ்க! நும் கொற்றம் வாழ்க! வடபுலத்திலுள்ள நாடுகளிலெல்லாம் புலிக் கொடியை நாட்டிய செம்பியன் வழிவந்த கோப்பர கேசரி வர்மர் உடையார் ஸ்ரீ இராசேந்திர சோழ தேவர் வாழ்க! வாழ்க! அவர்தம் பட்டத்து அரசியார் பஞ்சவன் மாதேவியார் வாழ்க! வாழ்க!" என்று கூறி பட்டுத் துகிலால் போர்த்தப்பட்ட தந்தப் பேழையொன்றை அரசரிடம் அளித்து வணங்கி, பின்புறமாக நகர்ந்து, சற்றுத் தொலைவு சென்று நிமிர்ந்து நின்றார்.

மூடப்பட்ட பட்டுத் துகில் நீக்கி, தந்தப் பேழை திறந்து, அதன் நடுவே இருந்த ஓலைச் சுருள் ஒன்றையெடுத்துப் படித்தார்.

அவர் முகம் மலர்ந்தது. திருமந்திர ஓலை நாயகத்துடன், நதிக்கரை மாளிகைக்கு விரைந்தார். அவரைத் தொடர்ந்தனர் மற்ற அதிகாரிகள்.

செய்தி கொண்டு வந்த தூதன் கூறியவற்றை, இராசேந்திரன் மிகக் கவனமாகக் கேட்டுக் கொண்டார்.

சென்ற இடங்களிலெல்லாம் வெற்றி! வேங்கி, சக்கரக் கோட்டம், மதுரை மண்டலம், கலிங்கம், ஒட்டரம், நாமணைக் கோணப் பஞ்சப்பள்ளி நாடுகளிலெல்லாம் நம் படைவீரர்கள் வென்று வெற்றிவாகை சூடியுள்ளனர் என்று பெருமிதத்துடன் உரக்கக் கூறினர்.

மகிழ்ச்சியான இந்தச் செய்தியைப் பஞ்சவன் மாதேவி கேட்டுக் கொண்டிருந்தார். இனி கங்கையில் நீராடச் செல்வதற்கு எந்தத் தடையுமில்லை. வேற்று நாட்டு மன்னர்கள் சமாதானமாகி, அரசரை வரவேற்க ஆயத்தமாக இருக்கிறார்கள் என்பதையும் அரசி அறிந்து கொண்டாள்.

ஆனால் நதிக்கரை வரை சென்று படகில் ஏறும் தருணத்திலும், பயணம் தடைப்பட்டது. அது நல்ல சகுனமாக அரசிக்குத் தோன்றவில்லை.

தூதுவர் கொண்டு வந்த செய்தியிலிருந்து அடுத்து நிறைவேற்ற

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வேண்டியவற்றைப் பற்றி அரசர் கலந்தாலோசனை செய்து கொண்டிருந்தபோது, பழையாறையிலிருந்து மிக முக்கியமான செய்தியைச் சோழ வீரர்கள் கொண்டு வந்திருப்பது தெரிய வந்தது.

அடுத்து நிறைவேற்ற வேண்டியவற்றைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்த போது பழையாறையிலிருந்து வந்த சேதியைக் காண அவருக்கு நேரமில்லை. "தேவி! தூதுவர்களிடம் நீயே கேட்டறிந்து கொள்" என்று கூறிவிட்டு அரசர் அதிகாரிகளுடன் கலந்து பேசுவதில் முனைந்தார்.

அரிந்தவன் மாதேவியின் உடல்நிலை மிகக் கவலைக்கிடமாக இருப்பதாகவும், உடனே பழையாறை வருமாறும் இளவரசர் கைப்படத் தெரிவித்திருக்கிறார். செய்தியறிந்த பஞ்சவன் மாதேவிக்கு ஏற்பட்ட அதிர்ச்சி அடங்கச் சில கணங்களாயின.

ஓலையை எடுத்துக் கொண்டு அரசரிடம் விரைந்து,"சக்கரவர்த்திகளே! இந்தச் செய்தியைக் கேட்டீர்களா? அரிந்தவன் மாதேவியின் உடல்நிலை குறித்துச் செய்தியைப் பாருங்கள். கணம் கூடத் தாமதிக்கக் கூடாது, நாம் உடனே புறப்பட வேண்டும். நம் பயணம் இன்று தடைப்பட்ட போதே என் மனம் துணுக்குற்றது. அதுமுதல் நெஞ்சில் ஒருவிதப் படபடப்பு. வயிற்றில் ஒரு கலக்கம். ஏதோ நிகழப்போகிறது என்ற பீதி ஏற்பட்டது. கங்கைப் பயணத்தை மேற்கொள்ள வேண்டாம் என்று சொல்ல முடிவு செய்தேன். இன்றே பழையாறைக்குப் புறப்பட்டால் போய்ச் சேரப் பல நாள்கள் பிடிக்கும். அதற்குள் தேவிக்கு ஏதாவது நேர்ந்து விட்டால்? ஐயோ என்னால் நினைக்க முடியவில்லையே"– வார்த்தைகளை முடிக்கக் கூட அரசியால் இயலவில்லை.

சக்கரவர்த்திகளால் உடனே முடிவெடுக்க இயலவில்லை. கண்களை மூடிக் கொண்டு சிறிது நேரம் யோசிக்கலானார். நடைபெற வேண்டிய பற்பல சம்பவங்கள் அவர் மன மேடையில் கூத்தாடின. சில அவரைப் பார்த்துச் சிரித்தன. சில அவரைப் பார்த்துக் கேள்விகள் கேட்டன. சில அவரைப் பயமுறுத்தின.

கட்டப்பட்ட புதிய பெரிய கோயில் அவர் கண்முன் கம்பீரமாக நின்றது. வெட்டப்பட்ட பரந்த ஏரி தோன்றியது. அகலமான வீதிகளும், புதிய வீடுகளும் அவர் எதிரே கம்பீரமாகக் காட்சியளித்தன. விமானம் உயர்ந்து நிற்கிறது. திருச்சுற்றிலுள்ள மாடங்களில் காட்சி தரும் கோயிலில் அழகிய சிற்பங்களை, சித்தர் பார்த்துப் பாராட்டுகிறார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அருகே வீரமாதேவி புன்முறுவலுடன் நிற்கிறாள். சிற்பி மாணிக்க சேகரன் அருகே நிற்கிறான். அந்தக் காட்சி இராசராசனை மெய்சிலிர்க்க வைக்கிறது.

“கோயிலின் குடமுழுக்குக்குக் கங்கை நீரைக் கொண்டு வருவதாக முடிவெடுத்துச் சென்றேனே – கங்கை நீரைக் கொண்டுவராமல் சோழ நாட்டின் எல்லையில் அடியெடுத்து வைக்க மாட்டேன் என்று உறுதி பூண்டேனே… கங்கை நீரைக் கொண்டு வராமல் எப்படித் திரும்புவது?”

“பழையாறையில், என் அன்புக்குரிய அரிந்தவன் மாதேவியின் உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாக இருக்கிறது. அங்கே கங்கைக் கரையின் படைத்தலைவன் அரையர் இராசராசன் காத்திருக்கிறான். வடபுலத்து மன்னர்களை அவன் அடிபணிய வைத்துவிட்டான். அவனுடைய வீரத்தை, சேவையைப் பாராட்டி அவனுக்குப் புகழ்ப் பெயர் சூட்ட முடிவு செய்திருந்தேனே – கங்கைக்குச் செல்வதா, பழையாறை திரும்புவதா, குடமுழுக்குக்குக் கங்கை நீரைக் கொண்டு வராமலிருப்பதா – என்ன செய்வது?” - இராசேந்திரன் மிகக் குழப்பத்துடன் இரு கரங்களாலும் நெற்றியைப் பிடித்துக் கொண்டு அங்கேயே குனிந்த தலையுடன் அமர்ந்தார்.

அதைப் போன்ற சமயங்களில் அவர் எதிரே நிற்காமல், அதிகாரிகளும், பணியாளர்களும், காவலர்களும் அங்கிருந்து சென்றுவிடுவர். அதைப் போல் ஒவ்வொருவராகச் சென்றனர்.

பஞ்சவன் மாதேவிக்கு ஒன்றும் புரியவில்லை. அன்று பகல் முழுவதும் அரசர் ஏதும் பேசவில்லை. சிந்தனை – சிந்தனை – ஒரே சிந்தனையில் ஆழ்ந்தார். அதுபோன்ற வேளைகளில் அவர் மௌனமாக உட்கார்ந்திருப்பார். குறுக்கும் நெடுக்கும் நடப்பார். கண்களை மூடிக் கொண்டு தியானத்தில் அமர்ந்திருப்பார். நெடுநேரமிருப்பார்.

பகல் கழிந்து, இரவு வந்தது. அவர் உறங்கவில்லை என்பது அவர் புரண்டு படுப்பதிலிருந்து தெரிந்தது.

ஒருமுறை பஞ்சவன் மாதேவி அவரிடம் ஏதோ கேட்க முனைந்தாள். பழையாறை திரும்ப வேண்டும் என்ற பரபரப்பு அவர்களிடம் இருந்தது. பயணத்திற்கு இப்போதே ஆயத்தம் செய்தால்தானே பரிவாரங்களுடன் புறப்பட முடியும்? ஒருவேளை கங்கைக் கரைக்குச் செல்வது என அரசர் முடிவெடுத்துவிட்டால்…?

கங்கையில் நீராடுவதில் அரசிக்கு விருப்பமோ ஆர்வமோ முன்பு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

எப்போதுமில்லை. காவிரியைவிட கங்கை எந்த விதத்தில் உயர்வு பெற்றது என்று அரசி நினைப்பாள்: பேசுவாள்: விவாதிப்பாள். ஆனால், அரசர் எதிரே தன் கருத்தை வெளியிடும் துணிவு அரசிக்கு இல்லை.

வீரமாதேவிதான் கங்கை மீது ஆசையை உண்டாக்கினாள் என்று அவள் எண்ணினாள். கங்கையில் அரசருடன் சென்று நீராட வேண்டும் என்ற ஆசையால், கங்கை நீரைக் கொண்டு வந்து குடமுழுக்கு செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தை அரசர் மனத்தில் அவள்தான் தூண்டிவிட்டாள் என்றும் எண்ணினாள். அதனால் கங்கைக் கரைக்குப் புனித நீராடச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் அரசருக்குத் தோன்றிய போது வீரமாதேவியின் மீது ஏற்பட்ட வெறுப்பில் அவள் கங்கைப் பயணத்தில் ஆர்வம் காட்டவில்லை.

ஆனால், கங்கை மீது அரசருக்குள்ள பற்றும் மரியாதையும் அசைக்க முடியாதவை என்று அவள் உணர்ந்தாள்.

திருஞானசம்பந்தரும், சுந்தரரும், நாவுக்கரசரும் இறைவன் மீது பதிகங்கள் பாடிய போதெல்லாம் அரசர் உள்ளம் உருகி, சிவபெருமானின் செஞ்சடையில் வீற்றிருக்கும் பெருமை பெற்ற கங்கையைப் போற்றிப் பாடிய பதிகங்களை அரசர் விரும்பிக் கேட்பதும், மீண்டும் மீண்டும் கேட்பதும், பாடலிலே உள்ளம் தோய்ந்து மெய் மறந்து நிற்பதும், அவர் சிந்தனையிலிருந்து கங்கை எனும் புனித நதியை மறக்க வைக்க முடியாது என்பதை அரசி உணர்ந்தாள்.

சக்கரவர்த்திகள் பேசாமல், முடிவெடுக்க முடியாமல் தவிக்கிறார் என்பதை பஞ்சவன்மாதேவி உணர்ந்தாள். அவருடைய குழப்பத்தைத் தீர்த்து சரியான முடிவை எடுக்க அவளால் முடியும். ஆனால் அதை அவரிடம் எப்படி எடுத்துச் சொல்வது? அவரருகே சென்று அமர்ந்து மெல்ல அவரைத் தொட்டால், அவர் சீற்றமுற்று கடுஞ்சொல் கூறிவிட்டால்...?

பஞ்சவன்மாதேவியும் கவலையுடன் விழித்திருந்தாள். அரசரிடம் செல்வாள்: திரும்பி வருவாள். பிறகு எப்போது உறக்கம் வந்ததோ தெரியாது: தன்னை மறந்து உறங்கினாள்.

பொழுது புலர்ந்தது. விதவிதமான புள்ளினங்கள் இசைத்த பூபாளம் அரசியை விழித்தெழச் செய்தது. அருகே இருந்த அரசரைக் காணவில்லை. அரசர் வெளியே வந்து மாளிகையை ஒட்டி ஓடிக் கொண்டிருந்த கோதாவரியை உற்று நோக்கியவாறிருந்தார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

நதியின் கீழ்த்திசை வெளுத்து, வானச் சீலையில் மெல்லிய செங்கோடுகள் வரையப்பட்டது. படர்ந்து வரும் மேகக் கூட்டத்தின்மீதுசெம்பொன் நிறம் பூசப்பட்டது வானத்தின் விளிம்பில் கதிரவனின் வருகைக்குக் கட்டியம் கூறப்பட்டது.

வட்டத் திகிரி போல் சுழன்று கொண்டு செங்கோளமாகக் கதிரவன் கீழ்த் திசையில் தோன்றினான்.

முதல் நாள் இருந்த குழப்பம் தீர்ந்தது போன்ற உணர்வு, புதிய தெம்பு அவர் மேனியெங்கும் பரவியது.

இராசேந்திர சோழ சக்கரவர்த்தி கதிரவனைக் கையெடுத்துக் கும்பிட்டுத் தன்னை மறந்து நின்றார்.

கோதாவரியின் கீழ்த் திசைக் கோடியினின்று வெண்பஞ்சு மேகங்கள் மெல்லப் படர்ந்து வானவெளியில் மேலெழுந்து மிதந்தன. அவற்றின் இடையே ஓர் உருவம். புனிதமான தோற்றம். அருள் ஒளிரும் திருமேனி. மெல்ல மெல்லப் பூமியில் இறங்கி வருகிறது. அந்த உருவம் சிறிது நேரத்தில் தன்னை நோக்கி வருவதை உணர்ந்தார்.

அவர் மேனி சிலிர்த்தது. விழிகள் அத்தோற்றத்தை நோக்கி அசையாது நிலைபெற்று நின்றன.

அந்தப் புனிதமான வடிவுடையவர் வானத்து மேகக் கூட்டங்களில் அமர்ந்து வந்தார். நீலவானக் கடலில் நீந்தி வந்தார். ஓடும் பிரவாகத்தில் நடந்து வந்தார்.

“யார்....யார்?” வார்த்தைகள் வரத் தடுமாறின.

‘அவரா? அவராக இருக்க முடியாது. அவர் இங்கு வருவாரா?

‘அவர் இங்கு இப்போது வந்தால் நான் பெரும் பேறு பெற்றவனாவேன். எந்தத் திசை செல்வது என்று தெரியாமல் திகைக்கிறேன். என்ன முடிவு எடுப்பது என்று தெரியாமல் குழம்புகிறேன். எனக்கு வழிகாட்ட நான் யாரை அழைப்பது என்று தடுமாறுகிறேன். அவர் வந்தால் எனக்குத் தெளிவு பிறக்கும், குழப்பம் தீரும்.

‘என்னுடன் என்றுமே இருந்து வழிகாட்டும் தேவபுருடராகிய அவர் இப்போது இந்தக் கணம் இங்கு வந்தால் ஆடவல்லான் அருள் எனக்கும் பரிபூரணமாக இருக்கிறது என்றுதான் பொருள்.’

அதோ அவர் கரம் உயர்த்துகிறார். அஞ்சாதே என்று அபயமளிக்கிறார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வெண்தாடிக்கு இடையே முத்துப்பல் ஒளிரச் சிரிக்கிறார்.

ஆம்: அவரேதான்! நான் எதிர்பார்த்த தேவபுருடனே தான். சோழர் குலத்தின் உயர்வுக்குத் தோன்றாத் துணையாயிருந்து காப்பாற்றுபவர்தான். அவர்தான் கருவூர்ச் சித்தர்.

விழிகளை அகல விரித்துப் பார்த்தார் அரசர். தாம் காண்பது கனவா – நனவா என்று கண்களைக் கசக்கிப் பார்த்தார்.

சூரியக் கதிர்கள் ஊடுருவ, ஒளி வீசும் மற்றொரு கதிரவன் போல் சித்தர் திகழ்ந்தார்.

"இராசேந்திரா!" என்று அன்பைக் குழைத்து வடித்தெடுத்த அதே குரல். யாழிசை போலும், கந்தவர்கள் மீட்டும் வீணை நாதம் போலும் அந்தக் கரல் ஒலித்தது.

"சித்தர் பிரானே! எங்கள் குலம் காக்க வந்த தேவரே!" என்று கூறியவாறு இராசேந்திர சோழ தேவர் சித்தரின் திருவடிகளில் வீழ்ந்தார்.

சித்தர் குனிந்து, இராசேந்திரனைத் தொட்டு எழச் செய்து,"மகனே! கதிரவனைப் பார்த்து வணங்கி நிற்கும் உன் முகத்தில் காலைப் பொழுதில் கவலைக் கோடுகள் ஏன்?" என்று சக்கரவர்த்தியின் கரத்தை மெல்லப் பிடித்தவாறு கேட்டார்.

இராசேந்திரன் வியப்புடன், சித்தரைப் பார்த்தார். 'சித்தர் எங்கிருந்து வருகிறார்? இந்த இடத்திற்கு வந்தது எப்படி?'

"இராசேந்திரா! நீ சொல்லாவிட்டாலும் உன் குழப்பத்தை நான் அறிவேன். உன் கவலைக்கு மருந்தளிக்கிறேன். நான் சொல்கிறேன் - கங்கைக் கரைக்கு நீ செல்ல வேண்டாம்" என்று கூறி மாளிகை மண்டபத்தின் உள்ளே சென்றார்.

"சித்தர் பிரானே! கங்கை நீரைக் கொண்டு வர வேண்டும் என்று நான் எடுத்த முடிவு என்னாவது?" என்று பதற்றத்துடன் கேட்டார் இராசேந்திரன்.

"கங்கை வரும்… புனிதக் கங்கை நீரால் புதிய கோயில் கலசத்துக்கு குடமுழுக்கு செய்யத்தான் போகிறாய்" என்றார்.

'கங்கை வருமா? நான் கங்கைக் கரைக்குச் செல்லாமலே கங்கை வருமா? சித்தர் என்ன வழி கூறப்போகிறார்? என்று இராசேந்திரன் வியப்புடன்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சித்தரை நோக்கினார்.

# 80

# சித்தர் சிரித்தார்

கங்கைக் கரையினின்று வெற்றிச் செய்தியைக் கொண்டு வந்த தூதர் கூறியவற்றை அரசி பஞ்சவன் மாதேவி அமைதியுடன் கேட்டுக் கொண்டிருந்தாள்.

வடக்கே, வடமேற்கே, கிழக்கே, வடகிழக்கே என்று சோழரின் வீரப் படைகள் பல திசைகளுக்குச் சென்றதை அவர்கள் தெரிவித்தார்கள்.

"வடமேற்கே நம் படைகள் சென்றன. புதிய இடம், பெரிய நதி, மிகப் பெரிய நதி. எதிர்க் கரையைக் காணமுடியாத அளவுக்கு மிகமிக அகலமான மாபெரும் நதி" என்று அவர்கள் விவரித்தார்கள்.

"இதோ இந்தக் கோதாவரியின் மறுகரை தெரிகிறதா? இதுவும் நம் காவிரியை விடப் பெரியது. அதைப் போலத்தானே? அதற்கு ஏன் பெரியது, மிகப் பெரியது என்று கையை அகலமாக விரிக்கிறீர்கள்?" என்று பஞ்சவன் மாதேவி மிகுந்த எரிச்சலுடன் கேட்டாள்.

அப்படி இல்லை என்பதற்கு அடையாளமாக,"ஹூம் ஹூம்" என்று கூறி அவர்கள் தலையை அசைத்தார்கள். "இந்தக் கோதாவரியைப் போல நான்கு மடங்கு. ஆறு மடங்கு, எட்டு மடங்கு பெரியது. கங்கையைவிடப் பெரியது. ஆகவே நடு ஆற்றில் படகில் செல்லும்போது எங்கள் குலை நடுங்கியது. குலதெய்வத்தை வேண்டிக் கொண்டோம். படகு, சுழலில் சிக்கிக் கவிழாமல் இருக்க வேண்டும் என்று."

சிந்து நதியைப் பற்றி அவர்கள் வர்ணிப்பது அரசிக்குப் பிடிக்கவில்லை. "உம் - அங்கே எதற்குச் சென்றீர்கள்? கங்கைக் கரைக்குச் செல்லுமாறு தானே உத்தரவு?"– அரசி கேட்டாள்.

"சக்கரவர்த்திகள் கட்டளையை மீறுவோமா தேவி? ஒரு பகுதிப் படைகள் கங்கைக் கரைக்குச் சென்றன. ஒரு பகுதி மதுரை மண்டலம் அடைந்தது, சென்ற இடமெல்லாம் எதிர்ப்பின்றி வெற்றி, வெற்றி! புலிக் கொடியைப் பார்த்தவுடனேயே அங்குள்ள அரசர்கள் அஞ்சி நடு நடுங்கிச் சமாதானம் பேசிச் சரணாகதி அடைந்தனர். கண்ணபிரான் பிறந்து, வளர்ந்து. விளையாடிய மதுரா நகரை மேற்குத் திசையினின்று

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வந்த பெயர் சொல்ல முடியாத வேற்று நாட்டரசன் திடீரென்று தாக்குவதாகச் செய்தி வந்தது.

“கேள்வியுற்ற நம் படைத்தலைவர் வெகுண்டெழுந்தார். ஆயிரக்கணக்கான நம் வீரர்கள் புயலெனப் பாய்ந்தனர். வாயில் பெயர் நுழையவில்லை. கஜினியோ, கஜினிமுகமதோ, அவனை வேரோடு நசுக்காவிடில் பெரும் ஆபத்து என்பதை அங்குள்ள சிறு சிறு நாட்டரசர்கள் உணர்ந்தனர். எப்போதும் அவர்களுக்குள் சிறு சிறு பிணக்குகள், சச்சரவுகள். ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொள்வார்கள். தங்கள் பொதுப் பகைவரின் ஆபத்தை உணர்ந்த அவர்கள் புலிக்கொடி வேந்தர் உதவியை நாடினார்கள். நம் சக்கரவர்த்தி முன்பே கட்டளையிட்டிருந்தார். போசராசனும், சேதி நாட்டுக் காளசூரி மன்னன் காங்கேய விக்கிரமாதித்தனும், சாந்தல நாட்டு மன்னன் நித்தியாதரனும் நம் புலிக்கொடியின் தலைமையின் கீழ் ஒன்று சேர்ந்தனர். பகையரசர் கஜினி முகமதுவை எதிர்த்துப் போரிட்டனர்.

சோழ வீரர்களின் தாக்குதலைத் தாங்காமல் கஜினி பின் வாங்கி ஓடினான்.”

சோழப் படைகளின் வெற்றியை, தூதுவர்கள் விவரித்ததை ஆர்வத்துடன் பஞ்சவன் மாதேவி கேட்டுக் கொண்டிருந்தாள்.

“பிறகு, கஜினி என்ன ஆனான்? கங்கை நீரைக் கொண்டு வரும் நம் நோக்கம் என்ன ஆனது? கங்கை கரைக்குச் செல்ல வேண்டும் என்று எவ்வளவு நாள்கள் கோதாவரிக் கரையில் காத்திருப்பது? அதைப் பற்றிச் சொல்லுங்கள். பழையாறையில் என் சகோதரி அரிந்தவன் மாதேவி மரணப்படுக்கையில் இருக்கிறாள். நாங்கள் உடனே போயாக வேண்டும். கங்கை நீரா, இளவரசியைக் கடைசி கடைசியாகக் காண்பதா என்ற குழப்பத்தில் நானிருக்கிறேன். சக்கரவர்த்திகளும் இருக்கிறார். சொல்லுங்கள், சீக்கிரம் சொல்லுங்கள்’– அரசி பரபரப்புடன் கேட்டாள்.

செய்தி கொண்டு வந்த தூதர்கள் கலக்கமடைந்தார்கள். அவர்கள் என்ன மறுமொழி சொல்வார்கள்? இராசராசன் சக்கரவர்த்திகளுக்குச் சொல்லியனுப்பியதை எடுத்துக் கூற வந்திருக்கிறார்கள்.

வடபுலத்திற்குச் சென்றிருக்கும் படை வீரர்களின் தலைவர் அரையன் இராசராசன் சொல்லியனுப்பியதை எடுத்துக் கூற முற்பட்டார்கள்.

“கங்கைக் கரையில் படைத் தலைவர் தங்களுக்காகக் காத்திருக்கிறார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அந்த நாட்டுச் சிற்றரசர்கள் சக்கரவர்த்திகளை வரவேற்க ஆவலுடன் காத்திருக்கிறார். சக்கரவர்த்தியையும், தங்களையும் அங்கே எதிர்பார்த்திருக்கிறார். தங்கள் திருப்பாதங்கள் பதிந்து வர மலர்களைத் தூவ நந்தவனத்து மலர்களை ஏற்பாடு செய்திருக்கிறார். மற்றுமோர் அதிசயத்தை – புதுமையைச் செய்யவும் ஏற்பாடுகளைச் செய்துள்ளார். உலக அதிசயத்துள் ஒன்றாக அது அமைய வேண்டும் என்று திட்டமிட்டுள்ளார்...” தூதர்கள் சொல்லிக் கொண்டே போனார்கள். அவர்கள் பயம் தெளிந்துவிட்டது. தைரியமாகப் பேசத் தொடங்கினார்கள்: உற்சாகமாகவும் பேசத் தொடங்கினார்கள்.

“அதிசயமா – அப்படி என்ன அதிசயம்?” அரசி கேட்டாள்.

“அதை விவரிக்க எங்களுக்கு ஆற்றல் இல்லை. அந்தக் கண்கொள்ளாக் காட்சியை வர்ணிக்க வார்த்தைகளைத் தேட வேண்டிய நிலையிலிருக்கிறோம். லட்சோப லட்சம் மலர்கள். சம்பங்கியும், முல்லையும், தாமரையும், அல்லியும், பாரிஜாதமும் பூத்துக் குலுங்கும் நந்தவனத்திலிருந்து பக்குவமாக மலர்களைக் கொய்து நடைபாதையில் ரத்னக் கம்பளம் விரித்தது போன்று தூவி, தங்கள் செம்பொற்பாதங்களை அவற்றில் பதிய வைக்கத் திட்டமிட்டிருக்கிறார், இந்திரதரன் என்ற கங்கை நாட்டு அரசர்.”

பஞ்சவன் மாதேவியின் விழிகள் வியப்பால் விரிந்தன. சக்கரவர்த்திகளின் பெருமை எட்டுத் திக்கும் பரவியிருந்தது கேட்க அவளுக்குப் பெருமையாக இருந்தது.

“அதில் என்ன அதிசயம்?” தேவி கேட்டாள்.

“கங்கைக் கரையில் ஆயிரத்தெட்டுப் பொற்குடங்களில் கங்கை நீரை நிறைத்து தங்களுக்கு அபிஷேகம் செய்யப் பொற்குடங்களைப் பொற் கொல்லர்கள் இரவு பகலாகச் செய்து வருகிறார்கள். கங்கை பாயும் நாட்டு வேத பிராமணர்கள் ஆயிரக்கணக்கானவர்கள் அந்திப் பொழுதில் வேதம் ஒலிக்கப் போகிறார்கள். சோழப் படைவீரர்களால் தங்கள் நாட்டைக் காப்பாற்றிக் கொண்ட மன்னர்கள் கூடுகிறார்கள். பொன்னும், மணியும், கோமேதக இரத்தினங்களும், வைர, வைடூரியங்களும் சக்கரவர்த்திகளின் திருப்பாதங்களில் காணிக்கையாக்கப் பெரிய பெரிய பொற்பேழைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.”

இந்த அதிசய அற்புதங்களை விவரிக்கும் பொழுது தூதர்களின் குரலில் உற்சாகம் இருந்தது. நிமிர்ந்து நின்றார்கள். முகம் மலர்ந்து பேசினார்கள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கரங்களை அகல விரித்து, அந்த நிகழ்ச்சியை விவரித்தார்கள். அரசி எதிரே பேசுகிறோம் என்ற அச்சமில்லை.

நடைபெறவிருக்கும் கங்காபிஷேக நிகழ்ச்சி. பஞ்சவன் மாதேவியின் கண் எதிரே தாண்டவமாடியது.

“இவை எல்லாம் எப்போது நடைபெறும்?” அரசி கேட்டாள்.

“புஷ்பக விமானம் ஒன்று இருந்தால், சக்கரவர்த்திகளும் தாங்களும் அதில் அமர்ந்து வானமார்க்கமாக சில நாழிகைகளில் அங்கே சென்று சேரலாம். அவர்கள் ஒவ்வொரு நொடியும் தங்கள் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள்.”தூதர்கள் ஆவலுடன், உற்சாகத்துடன் கூறினார்கள்.

“புஷ்பக விமானத்தைத் தேவலோகத்திலிருந்து யார் கொண்டு வருவது? சோழ மூதாதையர் முசுகுந்த சக்கரவர்த்தி அசுரர்களை ஒழிக்க தேவேந்திரனுக்கு உதவியிருக்கிறார். அந்த நன்றியை நினைவில் கொண்டு, இப்போது தேவேந்திரன் புஷ்பக விமானத்தை அனுப்பலாம். விமானத்தில் செல்லாவிடில் அங்கே செல்ல எவ்வளவு நாள்கள் ஆகும்?”– அரசி கேட்டாள்.

தூதர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

“கங்கை நதிக் கரையையும், அதன் பிரவாகத்தையும், புனிதத் தன்மையையும், அங்கே எங்களுக்கு நடக்கவிருக்கும் வரவேற்பையும், உபசரணையையும் அவர்கள் நடத்தவிருக்கும் கங்காபிஷேகத்தையும் நீங்கள் வர்ணிப்பதைக் கேட்டு எனக்கும் ஆசையாக இருக்கிறது. ஆனால்…”

அடுத்து அரசி என்ன சொல்லப் போகிறாரோ என்று தூதர்கள் அவள் முகத்தையே உற்று நோக்கினார்கள்.

“சக்கரவர்த்திகளிடம் நான் சொல்கிறேன். ஆனால் என் நினைவெல்லாம் பழையாறையிலிருக்கிறது. அங்கே உயிருக்குப் போராடி கொண்டிருக்கும் அரிந்தவன் மாதேவியின் நிலை எப்படி இருக்கிறதோ என்ற கவலையில் கங்கையில் நீராடுவதைப் பற்றி என்னால் நினைக்க முடியவில்லை. மனம் சிந்தனைச் சுழலில் சிக்கித் தடுமாறுகிறது. நீங்கள் சொன்ன புஷ்பக விமானமிருந்தால் சில நொடிகளில் நான் பழையாறைக்குச் சென்று விடுவேன். முருகபிரானின் மயில் வாகனமோ, திருமாலின் கருடனோ, அன்னப் பறவையோ

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அல்லது என்னை முதுகில் தூக்கிப் பறந்து செல்லும் சக்தியுடைய எந்தத் தேவ புருடரோ இருந்தால் நான் உடனே பழையாறைக்குத்தான் செல்வேன்.

“ஆனால்… ஆனால் எனக்கு நம்பிக்கை தருவதற்குக் கருவூர்த் தேவர் வந்திருக்கிறார். சரியான வேளையாகப் பார்த்து அவர் இங்கே தோன்றிவிட்டார். அவர் எனக்கு வழிகாட்டுவார். என் சஞ்சலம் தீர்ப்பார்” என்று பஞ்சவன் மாதேவி கைகூப்பி விழிகளை மூடியவாறு துதிப்பது போல் உருக்கமாகப் பேசினாள்.

அருகே பன்னீரும், பாரிஜாதமும் சேர்ந்து மணம் வீசுவது போல் தேவமணமும், சந்தன மணமும், தேவதாரு மகிழ மலர் மணமும் ஒன்று சேர்ந்து காற்றில் மிதப்பது போன்ற நறுமணம்.

பஞ்சவன் மாதேவி விழி திறந்தாள். கருவூர்ச் சித்தர் அருகே நின்றிருந்தார். அவர் அருகே சோழ சக்கரவர்த்தி இராசேந்திர சோழர் மேலே அலங்கரிக்கும் பட்டாடையை இடுப்பில் கட்டியவாறு கைகட்டி மிகவும் பயபக்தியுடன் நின்றிருந்தார்.

“பஞ்சவன் மாதேவி என்ன சொல்கிறாள் என்று கேட்போம், வா” என்று இராசேந்திரன் பக்கம் திரும்பிய சித்தர்,“பார்த்தாயா இராசேந்திரா! உன் இல்லத்தரசியின் வேண்டுதலை? சஞ்சலம் தீர்ப்பேனாம்: வழிகாட்டு வேனாம்! எவ்வளவு உயரிய நம்பிக்கை! கங்கையில் புனித நீராட வேண்டும் என்பது உன் ஆவல்: இலட்சியம். பட்டத்து அரசிக்கோ பழையாறை செல்ல வேண்டும் என்ற துடிப்பு” என்று கூறி பஞ்சவன் மாதேவியின் விழிகளைக் கூர்ந்து நோக்கியவாறு,“தேவி! உண்மையைச் சொல்ல வேண்டும், அரிந்தவன் மாதேவியிடம் உனக்கு அவ்வளவு பற்றா? அப்படித் தோன்றவில்லையே! இராசேந்திரனின் அபிமானம் மிக்க வீரமாதேவியின் மீது தான் உன் கவனம், எண்ணமெல்லாம். அங்கே கட்டி முடிக்கப்பட்டிருக்கும் பெரிய கோயிலைக் காண வேண்டும், உருவாகியிருக்கும் பெரிய நகரத்தைக் காண வேண்டும், கட்டி முடிக்கப்பட்டிருக்கும் அழகிய மாளிகையில் வீரமாதேவி குடியேறிவிடப் போகிறாளே என்றஞ்சி, அந்த மாளிகையில் நல்ல வேளையில் குடிபுகுந்து விடவேண்டும். அதுதானே உன் எண்ணம்?”

சித்தர் உரை கேட்ட பஞ்சவன் மாதேவி நடுநடுங்கினாள். அரசர் அருகே இருக்கிறார்: சற்று விலகித் தொலைவில் அதிகாரிகள், தூதர்கள் நிற்கிறார்கள்: நம் மனத்தில் இருப்பதை அப்படி அப்படியே விண்டு வைத்து விட்டாரே! அவர்கள் கேட்டிருப்பார்களே. என்ன

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

நினைப்பார்கள்? இதே போல் வேறு யாராவது சொல்லியிருந்தால் நாம் அமைதியாயிருப்போமா? சொன்னவருக்குத் தண்டனை வழங்க முனைந்திருப்போமே!’-

“சுவாமி சுவாமி!” என்று பஞ்சவன் மாதேவி கதறினாள். சித்தர் பாதங்களில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்தாள். பேச்சு வரவில்லை. இராசேந்திரனும், சித்தரும் பஞ்சவன் மாதேவியயைத் தூக்கி நிறுத்தினர்.

சித்தர், பஞ்சவன் மாதேவியைச் சிறுகுழந்தை போல் அணைத்து, கண்ணீர் துடைத்து,“நீ நினைத்ததில் தவறென்ன? வீரமாதேவியின் மீது உனக்கேற்பட்ட கோபமும் தவறில்லைதான். மனிதர்களின் ஆசைக்கும், வெறுப்புக்கும், அன்புக்கும் அப்பாற்பட்டவர் இறைவன்.

“ஓர் உருவம், ஒரு நாமம் இல்லாத - இறைவனுக்கு இராசேந்திரன் கோயில் கட்டுகிறான். சிறிய கோயிலா? பெரிய கோயில்! மிகப் பெரிய கோயிலாயிற்றே!

“அந்தக் கோயிலின் கருவறையில் பெரிய இலிங்கம் அமைக்கிறான். கருவறை மீது மிகப் பெரிய விமானம் கட்டுகிறான். முழு முதற் கடவுள் வீற்றிருக்கும் மேருமலையின் பெயரையே அந்த விமானத்திற்குச் சூட்டுகிறான்.

“ஓர் உருவம் இல்லை என்று சொன்னால் எளியவர்களுக்கு எப்படிப் புரியும்? தன்னை உணர வைக்கவே கலைஞர்களைப் படைத்தான். சிற்பியைப் படைத்தான். சித்திரக்காரர்களைப் படைத்தான். புலவர்களைப் படைத்தான், மொழியைப் படைத்தான், கல்லிலும், செப்புத் தகடுகளிலும் அவர்களுடைய கருத்துகளை உணர்வுகளைத் தீட்டச் செய்தான். இறைவன் புகழ் பாடுமாறு கவிஞர்களைப் படைத்தான். அவர்கள் எண்ணத்தைப் பனை ஓலைகளில் எழுதச் செய்தான்.

“இறைவன் அம்பலத்தில் ஆடுகிறான். அம்பலம் என்பது என்ன? அதற்குக் கரை உண்டா, மண்டபம் உண்டா? மண்டபத்தைத் தாங்கும் தூண்கள் உண்டா? அண்டவெளி பிரம்மாண்டமான வெளி – பாழ்வெளி – அதுதான் ஆண்டவன் இருப்பிடம். இதைச் சொன்னால் புரிந்து கொள்ள மாட்டார்களே. நம்ப மாட்டார்களே! நம்பிக்கை இல்லாவிட்டால் நேற்று - இன்று நாளை என்ற கால வித்தியாசம் ஏது? சூரியன் உதிப்பதையும் சந்திரன் மறைந்து மறைந்து தோன்றுவதையும் செய்பவன் யார்? என்று நம்பமாட்டார்களே. அதனால்தான் தில்லைப் பெருவெளியில் அவன் ஆடினான்: ஆடிக் கொண்டே இருக்கிறான்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“பேரம்பலமான அகண்ட வானவெளியைச் சிறிதாக்கி – சிற்றம்பலமாக்கி நமக்குப் புரிய வைத்தது யார்? கலை உள்ளம் படைத்தவர்கள்தாம். ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே என்பதுதானே நியதி!

“உன் அருமைக் கணவர் இராசேந்திரன் தன் தந்தையைப் போல், பாட்டனாரைப் போல், முப்பாட்டனாரைப் போல், சோழர் குலத்தை மீண்டும் உருவாக்கிய விஜயாலயரைப் போல் மாவீரன். திண்தோள் வீரனான இராசேந்திரன் தன் தோள் வலிமையினால், ஆற்றலினால் சோழர் குலத்திற்குப் பெருமை தேடித் தந்தான். உன் மாமனார் இராசராசனுடைய பெரும் வெற்றிகளுக்கெல்லாம், அடைந்த புகழ்களுக்கெல்லாம் உன் கணவர் தான் காரணம் என்பதை நீ அறிவாயா?

“இராசேந்திரனுடன் சமமாக அரியணையில் அமரும் பேறு கிடைக்கும் என நீ அவனைக் கரம்பிடித்தபோது நம்பினாயா? அல்லது உன் தந்தை பழுவேட்டரையர் நினைத்திருப்பாரா?

“காலச் சுழற்சியில் பட்டத்துக்கு உரிமையானவர்களின் காலம் முடிந்தது. உனக்கு அந்தப் பெரும் பாக்கியம் கிடைத்தது.

“போர்க்கள வெற்றி நிலையற்றது என்பதை இராசேந்திரன் உணர்ந்து தன் பெயரும், சோழ நாட்டின் பெயரும் என்றும் நிலைத்து நிற்க என்ன செய்வது என்று சிந்தித்தார். அவர் மனத்தடாகத்தில் மலர்ந்த வாடா மலர்தான் பெரிய கோயில். அவர் கலை உணர்வுக்கு உருக்கொடுத்து நிறைவேற்றச் சபதம் எடுத்தவள் வீரமாதேவி.

“அவள் உன்னிடத்தைப் பிடித்துவிடப் போகிறாள் என்று நீ தவறாக எண்ணியதன் விளைவே அவள் மீது உனக்கு ஏற்பட்ட பொறாமை. அவள் வயிற்றில் குழந்தை பிறந்தால் அந்தக் குழந்தையும் வாரிசு உரிமை கொண்டாடுமே என்று நினைத்தாய். அப்படி ஏதும் நடைபெறாது என்பதை விளக்கக்கூடிய காலம் வந்துவிட்டது.

“என் அருமைக் குழந்தாய், பஞ்சவன் மாதேவி! உன் மனத்திலுள்ள அழுக்காறுகளை நீக்கிவிடு.

“பழையாறைக்குச் செல்ல வேண்டும், அரிந்தவன் மாதேவியைக் கடைசியாகக் காண வேண்டும் என்பது தானே உன் எண்ணம்,

“அப்படியென்றால் கங்கை நீரைக் கொண்டு வந்து, குடமுழுக்கு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

ஆற்றுவேன் என்று உறுதி பூண்ட இராசேந்திரன் எண்ணம் என்ன ஆவது?

“இரண்டுமே நிறைவேறப் போகின்றன. இப்படி நான் சொன்னவுடன் உனது புருவங்கள் உயர்கின்றன. எப்படி முடியும் எனத் திகைப்படைகிறாய். இராசேந்திரனுக்கும் கூட,அப்படி ஓர் ஐயம் எழவே செய்யும். அந்த ஐயம் தேவையற்றது.

“சோழ சக்கரவர்த்தி தன் மனைவியின் விருப்பப்படி கங்கை நீரைக் கொண்டு வராமல் பாதி வழியிலேயே திரும்பி விட்டார் என்ற அவப்பெயர் கால காலத்திற்கு நிலவ வேண்டுமா? கூடாது, கூடாது. பெரிய கோயிலுக்குக் குடமுழுக்குச் செய்த பிறகே சோழ நாட்டை விட்டு வெளியேறுவேன் என்று நான் சொல்லியிருக்கிறேன். சோழ நாட்டிலேயே நான் தங்கியிருக்க முடியாது. என் வார்த்தை என்னாவது?

“நடப்பதை – நடக்கக் கூடியதைச் சொல்கிறேன். சொன்னபடி செய்வேன். அதுவே இறைவன் கட்டளை.”

சித்தர் பேசிக் கொண்டே போனார். பேசினார் என்பதைவிட சொல் மாரி பொழிந்தார் என்பதே சரியாகும். மந்திரம் போல் அவர் வார்த்தைகள் ஒலித்தன.

இப்போது இராசேந்திரனும், பஞ்சவன் மாதேவியும் நின்று கொண்டிருக்கவில்லை. இருவரும் சித்தரின் திருப்பாதங்களில் வீழ்ந்து, அவர் பாதங்களைச் சிக்கெனப் பிடித்திருந்தனர். அவர்களின் கண்ணீர், சித்தரின் பாதங்களை நனைத்தன.

“எழுந்திரு இராசேந்திரா! உன் இலட்சியம் நிறைவேறும். எழுந்திரு தேவி! உன் எண்ணமும் நிறைவேறும். கங்கை வரும். பழையாறைக்கும் செல்லலாம்”என்று கூறி சித்தர் சிரித்தார்.

“கங்கை வருமா? என்ன இது, சித்தரின் சித்து வேலையா” என்று நினைக்காதே. இந்தப் புண்ணிய பூமியில் எல்லா நதிகளும் மிகப் புனித நதிகளே! சிந்து, நர்மதா, யமுனை, கங்கை, கோதாவரி, கிருஷ்ணை, காவிரி, பொருநை எல்லாம் இறைவனின் திருமேனியிலிருந்து தோன்றுபவையே. வேற்றுமை, ஏற்றத்தாழ்வு காண்பவன் இறைவனல்லன்.

கோதாவரி நதிக்கரையில் அடுத்த பௌர்ணமி வரை நீங்களிருவரும் அமைதியாகத் தவம் செய்யுங்கள். கங்கை வரும்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பிறகு, கங்கையுடன் நீங்கள் புறப்பட்டுச் செல்லுங்கள்.

இராசேந்திரா! பஞ்சவன் மாதேவி! இதயம் என்பது புனிதமான கோயில். அந்தக் கோயில் தூய்மையாக விளங்க வேண்டும்.

தெற்கே உருவாகியிருக்கும் பெரிய கோயில் இந்த உலகம் உள்ளளவும் அழியாதிருக்கும். அந்தக் கோயிலுக்கும், கோயில் இருக்கும் ஊருக்கும் என்ன பெயர் சூட்ட வேண்டும் என்று கவலைப்படாதீர்கள்.

நல்ல பெயராக அழியாத பெயராக நான் சூட்டுவேன்.

பெயரைச் சூட்டி, குடமுழுக்கு செய்து ஆசி வழிங்கிய பிறகே நான் சோழநாட்டை விட்டுச் செல்வேன்.”

இராசேந்திரனும், பஞ்சவன்மாதேவியும் ஏதும் பேசமுடியாமல் திகைத்து நிற்க, சித்தர் திரும்பினார், நடந்தார். சற்றுத் தொலைவு சென்ற பிறகு நின்று அவர்களைத் திரும்பிப் பார்த்தார். கரங்களைத் தூக்கி ஆசி வழங்கினார். அவருடைய அருள் புன்னகை பளிச்சென்று தெளிவாகத் தெரிந்தது.

# 81

# நடத்த விடமாட்டேன்

கோதாவரி ஆறு அமைதியாக ஓடிக்கொண்டிருந்தது. கோடைக் காலமானதால் ஆற்றில் பிரவாகம் குறைந்திருந்தது. நதியில் நீராட அமைந்துள்ள புண்ணியத் துறையில், மழைக்காலத்தில் சில படிக்கட்டுகள் இறங்கினால் போதும். இப்போது பல படிக்கட்டுகள் இறங்கி, மணற் பகுதியைக் கடந்து நதியில் நீராட வேண்டியிருந்தது.

பௌர்ணமி வரை அமைதியாக விரதமிருக்குமாறு சித்தர் சொல்லியிருக்கிறார். இல்லை – கட்டளையிட்டிருக்கிறார். மூன்று வேளைகளிலும் நீராட வேண்டும். சோழ அரசி பஞ்சவன் மாதேவியால் அவ்வளவு படிக்கட்டுகளிலும் இறங்க முடியவில்லை.

மிகத் தூய்மையாகக் கடைப்பிடிக்க வேண்டியது விரதம். புறத் தூய்மை நீரால் அமையும். அகத்தூய்மை வாய்மையால் காணப்படும் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

கோதாவரியில் மூன்று வேளைகளிலும் நீராடு துறையில் அரசனும்,

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அரசியும் நீராடினர். கரையருகே இருந்த மண்டபத்தில் அமர்ந்து அவர்கள் பயபக்தியுடன் சோழர்கள் குலங்காக்கும் தெய்வமான திருச்சிற்றம்பல வாணனின் திருப்பெயரை உச்சரித்துக் கொண்டிருந்தார்கள்.

பொன்னம்பலத்தில் வீற்றிருக்கும் குஞ்சிதபாதமுடையவனின் திருமேனியை மனக் கண்முன் நிறுத்தி அவன் நினைவில் வாழ்ந்தனர்.

பொற்பாதமெடுத்தாடும் தூயவனைப் போற்றும் திருப்பதிகங்களை அவர்கள் எதிரே அமர்ந்து ஓதுவார்கள் இசைத்துக் கொண்டிருந்தார்கள்.

சக்கரவர்த்தியும், அரசியும் அமர்ந்து பல நாழிகை நேரம் மெய்மறந்த நிலையில் இருப்பது பரிவாரங்களை வியப்பிலாழ்த்தியது. பன்னீர் கலந்த நீரில் குளித்து, நறுமணப் பொருள்களை மேனியில் பூசி, சுவைமிகுந்த உணவருந்தி பெரும்பாலான நேரம் ஓய்வுடனிருக்கும் அரசி, தன்னைத் தானே வருத்திக் கொள்வதைப் பார்க்க அவர்களுக்கு வியப்பாக இருந்தது.

பஞ்சணையின்றித் தரையில் துயின்றனர். ஒரே வேளை இலேசான உணவு அவர்கள் உடலுக்குச் சுகத்தை அளித்தது. இராசேந்திரன் தன் வாழ்நாளில் அடையாத புதிய உணர்வை அடைந்தார். அவர் உடல் இலேசானது. எங்கோ மிதப்பது போல் தோன்றியது. சில வேளைகளில் எதிரே பாடப்படும் பாடல்கள் எங்கோ இருந்து ஒலிப்பது போல் கேட்கும். பாடுபவர்கள் களைப்படைந்து அவர்கள் ஓய்வெடுக்கச் செல்லும் போது, இசை ஒலிக்காததைக் கூட அரசரும் - அரசியும் அறியமாட்டார்கள். புதிய உலகில் சஞ்சரிப்பது போன்ற இன்பத்தை உணர்ந்தார்கள்.

அரச பரிவாரங்களுக்குக் கவலை ஏற்பட்டது. கங்கைக் கரைக்குச் செல்லாமல் கோதாவரிக் கரையில் அரசரும் அரசியும் ஒன்றும் பேசாமல் மௌனமாக இருப்பது அவர்களுக்குச் சிறிது அச்சத்தை அளித்தது.

புதிய கோயிற் பணிகள் முடிவடைந்து, சுற்றுப்புறங்களைத் தூய்மைப்படுத்தும் வேலை நடைபெற்றுக் கொண்டிருந்தது. கம்பீரமாக அமைந்த புதிய கோயிலைக் காண நாட்டின் பல பகுதிகளிலிருந்து மக்கள் வந்த வண்ணமாக இருந்தனர். பெரும் மதிற்சுவர்கள் கட்டப்பட்டன. கோயிலுக்குள் ஒருவரும் அனுமதிக்கப்படவில்லை.

சாலைகள் தூய்மையாக்கப்பட்டன. சாலைகளின் இருபுறமும் நடப்பட்ட மரங்கள் வளர்ந்து துளிர்விடத் தொடங்கின. கட்டப்பட்ட புதிய

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வீடுகளில் மக்கள் குடிபுகுந்தனர்.

கோயில்களில் பணி செய்வோருக்காகக் கட்டப்பட்ட இல்லங்களில் அவர்கள் குடியேறினர். தஞ்சைபுரியிலிருந்து கோயில் திருப்பணி செய்யப் பலர் குடிபெயர்ந்தனர். இறைவனுக்கு நடைபெறும் ஆறு காலப் பூஜையின்போது பாடவும் ஆடவும் கலைஞர்கள் போட்டி போட்டுக் கொண்டு புதிய நகரத்திற்கு வரத் தொடங்கினர். அதனால் நகரத்தில் கலகலப்பு அதிகமாகியது.

வீரமாதேவி புதிதாக உருவாகி வந்த நகரத்தின் பல பகுதிகளைச் சுற்றிப் பார்த்து வந்தாள். காடுகள் நிறைந்திருந்த அந்தப் பகுதி கலைக்கூடமாகியிருப்பது அவளுள்ளத்தில் பெரும்பூரிப்பை அளித்தது. அரசர் வந்தவுடன், அவருடன் ஒவ்வோர் இடமாகப் பார்த்து வரும்போது அவர் என்ன கருத்தைக் கூறுவார் என்பதைக் கற்பனை செய்து கொண்டாள். மெல்லப் புன்முறுவல் பூத்தாள். உடல் சிலிர்த்தது. உள்ளத்தில் திடீரென ஆர்வம் பொங்கி வழிந்தது. நாணம் கவ்விக் கொண்டது. கற்பனைக்கே இவ்வளவு பாதிப்பா?

அவர் கேட்பார்: “வீரமாதேவி! நாட்டியக் கலையை மறந்து விட்டாயா?”

அவர் அப்படிக் கேட்கத்தான் வேண்டும். “தஞ்சைபுரிப் பெரிய கோயிலில் பூர்த்தியாகாதிருக்கும் நடனத் தோற்றங்களைப் போலன்றி இங்கே முழுமையான நடனக் கலையையே கல்லில் வடிக்க வேண்டும். அதற்கு ஏற்ற சூழ்நிலை இங்கே அமைய வேண்டும்” என்று கூறுவேன்.

‘சூழ்நிலையா? இப்போது இல்லாத சூழ்நிலையா? என்ன சூழ்நிலை?’ என்று கேட்பார்.

நான் சொல்லத் தயங்குவேன். என் முகத்தில் நாணப்பூ மலர்வதைக் காண்பார். என்னை நெருங்கிக் காரணம் கூறுமாறு வற்புறுத்துவார்.

நான் அவர் செவிகளில் மட்டும் கேட்கும்படி,“நீங்களும் நானும் சேர்ந்து ஆட வேண்டும். சிவனுடன் பார்வதி இணைந்து ஆடிய நடன வகைகளை விளக்கும் சிற்பங்களாக அவை அமைய வேண்டும். ஓய்வு கிடைத்து, மன நிறைவுடன் நாம் சேர்ந்தே நடனத் தோற்றங்களை அமைக்கச் சிற்பிக்கு உதவ வேண்டும். வீரநாராயணபுர ஏரியின் நடுவே சில ஆண்டுகளுக்கு முன்பு… நினைவிருக்கிறதா? அதுபோல்” என்று கூறுவேன்.

என் கருத்தை அவர் அப்படியே ஏற்பார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“கோயில் குடமுழுக்கு முடிவடைந்து, நாம் நிம்மதியுடன் அந்தப் பணியைச் செய்வோம்” என்று அவர் கூறுவார். “என்ன, சரிதானா? திருப்திதானா?” என்று கேட்டுவிட்டு,“உன் முகத்தில் முளைத்துள்ள நாணமலரில் ஓரிதழைக் கொய்து கொள்ளட்டுமா?” என்று கேட்பார்.

வீரமாதேவி கற்பனையில் ஆழ்ந்திருந்தாள்.

“குடமுழுக்கு எப்போது நடைபெறும்? அரசர் கங்கைக் கரைக்குச் சென்றாரா? கங்கை நீருடன் வருவது எப்போது? செய்தி ஏதும் வரவில்லையே…” என்ற கவலையே அவளைச் சூழ்ந்தது.

ஒவ்வொரு நாளும் பழையாறையிலிருந்து, அரிந்தவன் மாதேவியின் உடல்நிலை குறித்துச் செய்திகள் வந்த வண்ணமாய் இருந்தன. ஒருநாள், தேவியின் உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்ற நல்ல செய்தியைத் தூதுவர்கள் கொண்டு வந்தனர்.

அரிந்தவன் மாதேவி நீண்ட நாள் வாழ வேண்டும் என்று கடவுளைத் துதித்தாள் வீரமாதேவி.

ஒருநாள் காலையில் வீரமாதேவி விழித்தெழுந்த போது கருவூர்ச் சித்தர் ஏரிக் கரைக்குச் சென்று ஏரியைப் பார்வையிடுகிறார் என்ற செய்தி கிடைத்தது.

“சித்தர் வந்துவிட்டாரா?” என்று பரபரப்புடன் கேட்ட வீரமாதேவி, அவரைச் சந்திக்க ஏரிக்கரையை நோக்கி விரைந்தாள்.

புதிதாக அமைக்கப்பட்ட அந்த ஏரி பரந்து விரிந்து காணப்பட்டது. ஏரியில் காவிரியின் தண்ணீர் வந்து சேருமளவுக்கு ஏரி மிகப் பிரம்மாண்டமானதாக இருந்தது. அண்மையில் பெய்த மழையால் ஏரியில் நீர் நிறைந்திருந்தது. மெல்லிய அலைகள் கரையில் வந்து செய்தி கூறித் திரும்பின.

காலைப் பொழுது புலர்ந்து, கதிவரனுக்குக் கட்டியம் கூறியது. சித்தர் ஏரிக் கரைக்கருகே நின்று கிழக்கே உதயமாகும் காலைக் கதிரவனை நோக்கி இருகரம் உயர்த்தி வணக்கம் தெரிவித்துக் கொண்டிருந்தார்.

அவர் இயற்கையை வணங்கினார். இயற்கைக்கு ஆற்றல் தரும் இறைவனைப் பணிந்தார்.

“யாருக்காகவும், எவருக்காவும் காத்திராது தன் கடமையை யுகயுகங்களாகச் செய்து கொண்டிருக்கும் கதிரவனேபோற்றி” என்று

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சத்தியவானான ஞாயிற்றைப் போற்றிப் புகழ்ந்து கொண்டிருந்தார். அவருடைய உதடுகள் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தன. அவர் இசைப் பாவால்இறைவனைத் துதித்துக் கொண்டிருந்தார்.

சூரிய ஒளி ஏரி நீரின் மீது பிரதிபலித்தது. தங்கத்தை உருக்கித் தகடாக்கி ஏரிக்குக் கூரை வேய்ந்தது போல் ஏரிப் பரப்பு முழுமையும் காட்சியளித்தது.

அவர் சிரித்தார். திரும்பிப் பாராமலேயே "வா குழந்தாய், வீரம்மா! – ஓ! தேவி என்று சொல்லவில்லையோ?" என்று கூறி மீண்டும் குழந்தைபோல் சிரித்தார்.

'நான் வந்தது, அவருக்கு எப்படித் தெரியும்?' நினைத்தாள்.

"நீ வருவாய் என்பதறிவேன். வந்துவிட்டதையும் தெரிந்து கொண்டேன். எனக்கு வீரம்மா – குழந்தைதான். வீரம்மா! நீ தேவமகள்" என்று கூறி கரத்தை உயர்த்தி ஆசீர்வதித்தார்.

வீரமாதேவி அவர் பாதத்தில் வீழ்ந்து வணங்கினாள். கண்ணீர்த் துளிகளால் அவர் பாதத்தை நனைத்தாள்.

"குழந்தாய்! இந்தப் பொன் ஏரியைக் கடைசி கடைசியாக என்று கண்டாய்?" என்று கேட்டு அவளை மெல்லத் தூக்கி நிறுத்தி, கேசத்தை வருடினார்.

"பத்து நாள்களுக்கு முன்பிருக்கும்" என்று கூறிய வீரமாதேவி,"ஆனால் நாள்தோறும் நம் அதிகாரிகள் ஏரியைச் சுற்றிப் பார்த்து வருகிறார்கள். புதிதாகக் கட்டப்பட்ட மதகுகளையும் கரையையும் அவர்கள் பார்க்கத் தவறுவதில்லை" என்று மரியாதையும், பயமும் கலந்து மெல்லப் பேசினாள்.

"குழந்தாய்! இந்த ஏரி ஏன் வெட்டப்பட்டது என்று தெரியுமா?"

"எனக்குத் தெரியாது. பெரிய கோயில், பெரிய ஆவுடையார், பெரிய நந்தி, பெரிய விமானம், பெரிய ஏரி – என்று எல்லாம் பெரிதாக இருக்க வேண்டும் என்று தலைவர் விரும்பினார்."

"பெண்ணே! உன் மாமனார் செய்யாத ஒன்றை உன் கணவர் செய்துவிட்டார். அதுதான் இந்த ஏரி. அவனுடைய முப்பாட்டனார் சிதம்பரத்திற்கு அருகே ஏரியை வெட்டினார். வீரநாராயண ஏரி என்ற தன் பெயரையே அந்த ஏரிக்கும் சூட்டினார். இந்த ஏரிக்கு யார் பெயரை

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வைக்கலாம்?” என்று வீரமாதேவியைக் கேட்டு விட்டு, தன் விழிகளை மூடினார். ஆனால் அரைவிழி திறந்திருந்தது.

“நகரத்திற்கு, கோயிலுக்கு, ஏரிக்கு என்ன பெயர் வைக்கலாம் என்பது எனக்குத் தெரியாது. ஊருக்கும், கோயிலுக்கும் என் பெயரை வைக்க வேண்டும் என்று நான் சக்கரவர்த்திகளை வற்புறுத்துவதாகப் பெரியவர்கள் பேசிக் கொள்கிறார்கள். நான் அவ்வாறு கனவில் கூடச் சிந்திக்கவில்லை. என் பெயர் வேண்டாம். வேண்டவே வேண்டாம்” என்று வீரமாதேவி இருகரங்களையும் கூப்பிப் பணிவாகச் சொன்னாள்.

“ஏன், ஏன் கூடாது? உன் பெயரை ஏன் வைக்கக் கூடாது? இராசேந்திரன் வந்தவுடன் அவனிடம் சொல்லப் போகிறேன். ‘இராசேந்திரா! இந்தக் கோயில் கட்ட யார் காரணம்?’ என்று கேட்பேன்.

“உன்னைச் சுட்டிக் காடட்டி ‘என் அன்புக்குரிய வீரமாதேவிதான் காரணம், என்று கூறுவான் - அப்படித்தானே?” கண் சிமிட்டினார் சித்தர்.

வீரமாதேவியின் மேனி மெல்லச் சிலிர்த்தது. தலையைப் பலமாக அசைத்து,“இல்லை, இல்லை. நான் காரணமில்லை. எல்லாம் வல்ல இறைவன் காரணம்” என்று கரத்தை மேல் நோக்கி உயர்த்தினாள்.

“சரி, இல்லை என்று நீ சொன்னால் அரசி சம்மதிப்பாளா? அரிந்தவன் மாதேவி தான் ஒப்புக் கொள்வாளா?” சித்தர் கேட்டார்.

“சுவாமி! அவர்கள் ஒருங்கிணைந்து இதேபோல் ஊர் உலகம் எல்லாம் வதந்தியைப் பரப்பி வருகிறார்கள். நான் ஓர் எளிய கிராமத்துக் குடியானவனின் மகள். தாய் தந்தை அற்ற நான் பாட்டனார் கொடுத்த ஊக்கமும் உதவியும் கொண்டு நடனக் கலையைப் பயின்றேன். தேர்ந்தேன். அரசரின் பார்வையில் நான் வீழ்ந்தேன்.”

சித்தர் குறுக்கிட்டார். “உன் பார்வை இராசேந்திரன் மீது விழவில்லையோ?” என்று கூறிச் சிரித்தார்.

வீரமாதேவி தலை குனிந்தாள். “சித்த மகாபுருஷரே! முக்காலும் உணர்ந்த தாங்கள் என்னைச் சோதிப்பது சரியா? உங்களிடம் நான் மிகப் பணிவுடன் வேண்டுகிறேன். என் பெயர் எதற்கும் வேண்டாம். நான் ஒருபோதும் அப்படி எண்ணியதில்லை”– சொற்களில் பணிவும், மென்மையும் இருந்தன.

“ஓ!” என்று கை கொட்டிச் சிரித்த சித்தர்,“அந்தப்புரத்தில் பலபேர் அறிய அன்றொருநாள் நீ சபதம் செய்தாயாம். ‘இந்தச் சோழ நாடு உள்ளவரை

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

என் பெயரும் புகழும் நிலைத்து நிற்கும்படியாக நான் ஏதாவது செய்து விடுகிறேன்" என்று. உன் பெயரில் இந்தப் பெரிய கோயிலும், நகரமும், ஏரியும் அமைந்து விட்டால் சோழ நாட்டின் புகழ் உள்ளளவும் உன் பெயர் நின்று நிலைத்து நிற்குமல்லவா? வீரநாராயண ஏரியும், லோகமாதீச்சரமும், ராஜராஜேச்சரமும் அவற்றைப் படைத்த அரசகுலத்தவரை நினைவுபடுத்துகின்றன. நீ சபதம் செய்ததே அவற்றை மனத்தில் கொண்டுதானே?"– கேட்டுவிட்டு சித்தர் கூர்ந்து நோக்கினார்.

வீரமாதேவி மெல்ல விசும்பினாள். "மகாபுருஷரே! நான் என் குலத்தவர் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன். எனக்கு அப்படிப்பட்ட எண்ணம் என்றுமே இருந்ததில்லை. அரசியையும், மற்ற இளவரசிகளையும் விட என் பெயர் நிலைத்து நிற்குமாறு நான் செய்வேன் என்று நான் சூளுரைத்தது உண்மையே. ஆனால்,நகரத்திற்கும் கோயிலுக்கும் என் பெயரைச் சூட்ட வேண்டும் என்று நான் என்றும் விரும்பியதில்லை. சக்கரவர்த்தியின் திருப்பெயர்தான் இடப்பட வேண்டும் என்று நான் வற்புறுத்துவேன். இராசேந்திர சோழேச்வரம், இராசேந்திர சோழப் பெருநகரம், இராசேந்திர சோழப் பேரேரி... இப்படியாக அழைக்கப்படுவதைத் தான் விரும்புவேன்" என்று கூறி இருகரங்களையும் கட்டிக் கொண்டு விழிகளை மூடிக் கொண்டாள்.

"சுவாமி! என் தலைவர் பெயர் சூரிய, சந்திரர் உள்ளளவும் ஒலிக்கப்பட வேண்டும். அவர் பெயரை ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் மக்கள் உச்சரிக்க வேண்டும். அதுவே என் ஆசை" என்று கூறி மௌனமாய் நின்றாள்.

"ஏன், பெரிய கோயிலுக்குப் பஞ்சவன் மாதீச்வரம் என்றும் நகரத்திற்குப் பஞ்சவன் மாதேவி பெருநகர் என்றும் ஏன் பெரியட்டு அழைக்கக் கூடாது? அதில் உனக்கு எந்தவிதக் கருத்து வேற்றுமையும் இல்லையே?" என்று சித்தர் கேட்டு, அவள் மௌனத்தைக் கலைத்தார்.

வீரமாதேவி தன் விழி நீரைத் துடைத்துக் கொண்டு,"சித்தரின் சித்தம் எப்படியோ அப்படியே எங்களுடையதும். தங்கள் கட்டளையை நிறைவேற்றக் காத்திருக்கிறேன். அரசியாரின் பெயரை எல்லாவற்றிற்கும் இடுவதில் எனக்குப் பெருமகிழ்ச்சியே" என்றாள்.

பிறகு,"சுவாமி! ஏதேதோ பேசி, முக்கியமாகக் கேட்க வேண்டியதை மறந்து விட்டேனே! அரசரும் அரசியும் கங்கைக் கரைக்குச் சென்றனரா? குடமுழுக்குக்கு கங்கை நீர் வருகிறதா? தாங்கள் சக்கரவர்த்திகளைச் சந்தித்தீர்களா? என்று ஆவலுடன் கேட்டாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கருவூர்ச்சித்தர், வீரமாதேவியை உற்று நோக்கியவாறு சொன்னார்: “வீரமாதேவி! உன் எண்ணம், இராசேந்திரன் விருப்பம், பஞ்சவன் மாதேவியின் ஆசை எல்லாம் நிறைவேறப் போகிறது. இராசேந்திரன், கங்கை நீருடன் வருகிறான். கலிங்க நாட்டு, யானைகள் கங்கை நீரைப் பொற்குடங்களில் சுமந்து வருகின்றன.”

வீரமாதேவி விழிநீரைத் துடைத்துக் கொண்டு வியப்புடன் சித்தரைப் பார்த்தாள்.

“சுவாமி....?” என்று விழிகளை அகல விரித்து அவர் சொல்வதை நம்ப முடியாத நிலையில் இருப்பது போல் கேட்டாள்.

“ஆமாம், உண்மை உங்களுக்காக இல்லாவிட்டாலும், எனக்காக, இந்தப் பெரிய கோயிலின் குடமுழுக்கை உரிய நாளில் நேரத்தில் நிறைவேற்ற வேண்டும். இன்னும் இரண்டு நாள்களில் பௌர்ணமி. அதற்கு அடுத்த பௌர்ணமி அன்று பெரிய கோயிலின் குடமுழுக்கு. மற்றொரு செய்தி – நான் இந்த ஏரிக் கரைக்கு ஏன் வந்தேன் தெரியுமா? பலநூறு யானைகள் மீது பெரும் குடங்களில் ஏற்றப்பட்டு வரும் கங்கை நீர் குடமுழுக்குக்கும், பெருவுடையாரின் அபிஷேகத்திற்கும் போக மீதமாவதை வீணாக்கக் கூடாது. குடங்களிலுள்ள கங்கை நீரை இந்த ஏரியில் கலக்க வேண்டும். காவிரியுடன் கங்கை கலக்க வேண்டும். அதற்காக இந்த ஏரியைக் காண வந்தேன். இந்தப் பொன்னேரி மேலும் புனிதமடையப் போகிறது. வீரமாதேவிப் பேரேரியாகப் புகழ் பெறப் போகிறது” என்றார்.

“கூடாது - கூடாது. நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்” என்று வீரமாதேவி கூவினாள். “அப்படி என் பெயர் வைப்பது உறுதியென்றால், நான் குடமுழுக்குக்கு முன்பாகவே இந்த நாட்டை விட்டு – ஏன் உலகை விட்டே மறைந்து விடுவேன்” என்று ஆவேசம் வந்தவள் போல் கூறினாள்.

சித்தர் சிரித்தார். “பெண்ணே! அப்படி ஓர் எண்ணம் உனக்கிருக்கிறதா? ஹும் பார்ப்போம். இராசேந்திரன் இங்கு வந்தவுடன் பெயர் சூட்டும் படலத்தைக் கவனிப்போம். இனியும் தாமதம் செய்யாமல் சென்று இராசேந்திரன் புதல்வர்களை அழைத்து, குடமுழுக்கு விழாவிற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கச் சொல். விரைவாக இயங்க வேண்டும். மற்றவர் சொற்களுக்குச் செவி சாய்க்கக் கூடாது” என்றார்.

வீரமாதேவி விரைந்தாள். அவள் கூறியதை ஒருவரும் நம்பவில்லை.

பழையாறையில் நோய்வாய்ப்பட்டிருந்த அரிந்தவன் மாதேவி சற்றுத்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தெளிந்து படுக்கையினின்று எழுந்து உட்காரத் தொடங்கினாள்.

சக்கரவர்த்தியும், அரசியும் விரைவில் வருவார்கள் என்ற செய்தி அறிந்த அரிந்தவன் மாதேவி,“கங்கை நீருடன் வருகிறார்களா?” என்று கேட்டாள்.

“ஆம்” என்ற மறுமொழி கிடைத்தவுடன்,“அந்த மாயக்காரி வீரம்மாள் தன் எண்ணத்தை நிறைவேற்றி விட்டாள்” என்று கூறும்போது அதில் எரிச்சல், பொறாமை, ஆத்திரம் நிறைந்திருந்தன.

“பௌர்ணமி நாளன்று குடமுழுக்கு நடக்கக் கூடாது. நான் அனுமதிக்க மாட்டேன்” என்று வெறி பிடித்தவள் போல் பேசினாள்.

“அந்த மாயக்காரியின் எண்ணம் நிறைவேற விடமாட்டேன். தன் இளமையால் அரசரை வயப்படுத்தி இந்த நாட்டை அபரிக்கப் பார்த்த சூழ்ச்சிக்காரியின் திட்டம் வெற்றியடைய விடமாட்டேன். நான் இறந்துவிடுவேன் என்று எண்ணினார்கள். இறைவன் என் பக்கம். அவனருளால் பிழைத்து விட்டேன்” என்று ஆவேசத்துடன் பேசினாள். பிறகு சற்று அமைதியடைந்தாள்.

“கடவுளே! மரணவாயிலுக்குச் சென்ற என்னை ஏன் பிழைக்க வைத்தாய்? உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கும் என்னை விட்டுவிட்டு அரசி பஞ்சவன் மாதேவியும் வடக்கே போய்விட்டாள். இந்த நிலையில் எனக்கு எதற்கு இந்த உலக வாழ்க்கை? கடவுளே! என்னைக் கொண்டு போய்விடு. அவர்கள் இங்கே வருவதற்குள் கொண்டு போய்விடு. அப்போது கங்கை குடமுழுக்கு நடைபெறாது. நான் போன பிறகு நடந்தால் என்ன, நடக்காவிட்டால் எனக்கென்ன?” என்று அரிந்தவன் மாதேவி வெறி பிடித்தவள் போல் பேசினாள்.

## 82

# கங்கை நீருடன்... புதுநகரம் புறப்பட்டார்

கோதாவரி நதிக்கரையில், சோழ சக்கரவர்த்தி இராசேந்திர சோழ தேவர் தங்கி விரதமிருந்த இடம் ஒரே இரவில் கலகலப்பு மிகுந்ததாக மாறியது.

‘வாழ்க வாழ்க’ என்ற வாழ்த்தொலிகள் வானை எட்டின. கோதாவரியின் நீர்ப்பரப்பே காணாது போய் விட்டதோ என்று சொல்லும் அளவுக்குத்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தோணிகளும், படகுகளும், சிறுசிறு மரக்கலங்களும் மறு கரையினின்று வந்து கொண்டிருந்தன.

எதிர்க்கரையில் ஏராளமான சோழப் படைகள் தங்கியிருந்தன. குதிரைகளும், யானைகளும் கட்டுவதற்கு இடமில்லாமல் கண்ணுக்கெட்டிய தொலைவு வரை பரந்த வெளியில் நின்றிருந்தன. சோழப் படைகளுடன் பல நாட்டு மன்னர்களும் தங்கள் மெய்க்காவலர்களுடன் கோதாவரியைக் கடக்கக் காத்திருந்தனர்.

கோதாவரிக் கரையில் ஓரமாக இருந்த வனங்களும், பூங்காக்களும், வயல் வெளிகளும் படைவீரர்கள் தங்கியிருந்ததால் மனிதத் தோட்டமாக மாறிவிட்டன.

படைவீரர்களுக்கு மற்றவர்களுக்கும் உணவு படைக்க ஏற்படுத்தப்பட்ட சமையற் கூடத்தின் அடுப்புகளிலிருந்து எழுந்த புகை அந்தக் கோடைக் காலத்திலும் கரிய மேகங்கள் போல் வானில் பரவின.

போர் ஓய்வைக் கொண்டாடும் வகையில் வீரர்கள் வெற்றிக் களிப்பால் ஒருவரோடொருவர் மகிழ்ச்சியுடன் பேசுவதும், களிப்புடன் பாடுவதும், கடல் ஓசைபோல் வெகுதூரம் கேட்டன. இத்தகைய மக்கள் கூட்டத்தை இதுவரை காணாத சோழ வீரர்கள் தங்கியிருந்த இடத்தைச் சுற்றிச் சூழ்ந்து அவர்கள் ஆடுவதையும் பாடுவதையும் வியப்புடன் நோக்கினர்.

தங்களால் இயன்ற உணவுப் பண்டங்களையும், காய்கனிகளையும் அவர்களுக்கு அளித்து மகிழ்ந்தனர்.

பத்துப் பன்னிரண்டு படகுகளை ஒன்று சேர்த்துப் பிணைத்து பலமாகக் கட்டப்பட்ட படகுகளில் கம்பீரமாக வந்த வேழங்கள் கரை இறங்கியவுடன் சக்கரவர்த்தி இருக்குமிடம் நோக்கி அசைந்து அசைந்து சென்றன.

யானைமீது புலிக் கொடியுடன் அமர்ந்து வீரர்கள் செல்ல, தொடர்ந்த பஞ்ச கல்யாணிக் குதிரைகளோ என்று வர்ணிக்கத்தக்க சோனக நாட்டுப் பரிகளின் மீது மறவர்கள் கையில் வேலுடனும், அசைந்தாடும் கொடியுடனும், நிமிர்ந்த மார்புடன் வெற்றிக் களிப்புடன் அமர்ந்திருந்தனர். அவர்கள் இராசேந்திர சோழ மன்னர் வீற்றிருக்கும் மண்டபத்துக்குச் சற்றுத் தொலைவில் மரியாதை செலுத்தும் நிமித்தம் நின்றனர்.

கம்பீரமான குதிரை ஒன்றின் மீதிருந்து நடுத்தர வயதுள்ள வீரன் கீழே

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

இறங்கிக் குதித்து கம்பீரமாக நடந்தான். அவனுக்கு முன்னும் பின்னும் காவல் வீரர்கள் மார்பை நிமிர்த்தி தாளம் தவறா நடை ஒலிக்க நான்கு நான்கு பேராக அணிவகுத்துச் சென்றனர். அவர்கள் கரங்களில் கூர்மையான வேல்கள் சூரியக்கதிர்கள் பட்டு மின்னின. அவர்கள் நடுவே இருந்த வீரனின் கரத்தில் புலிக்கொடி பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்தது.

அவர்கள் வருகை இராசேந்திர சோழருக்கு முன்னரே முறையாய் அறிவிக்கப்பட்டது. இதுவரை இல்லாத பரபரப்பு அவரிடம் நிறைந்திருந்தது.

பேரிகை ஒலித்தது. துந்துபி முழங்கியது. வாழ்த்தொலி வானை எட்டியது.

“தேவி! அரையன் இராசராசன் வந்து விட்டானாம். நம் விரதம் முடியும் நேரத்தில் நம் பிரார்த்தனை பலித்தது, சித்தர் வாக்கு பலித்தது” என்று நிறைந்த மனத்துடன் கூறியவாறு அரசர் எழுந்து வெளியே வந்தார்.

படைத்தலைவர் இராசராச அரையனைப் பார்த்தவுடனே மண்டபத்துப் படிக்கட்டுகளில் இளம் வயதினர் போல் துள்ளிக் குதித்து இராசேந்திரன் இறங்கி வந்தார்,“இராசராசா” எனக் கூவிக் கொண்டே அரையனை அவர் நெருங்கி அணைத்து மகிழ்ந்தார்.

இராசராச அரையன், அரசரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். அரசர் விழிகள் ஆனந்தத்தால் பொங்கிப் பிரவாகித்தன.

“அரையா – நலமா?” என்று அரசர் வினவினார்.

கீழே வணங்கி நின்றவனை இருகரங்களால் மீண்டும் தன் மார்புடன் இறுகத் தழுவினார். அரையன் இராச ராசனுக்குப் பேச நா எழவில்லை.

அவன் திரும்பி ஏதோ சைகை காட்டினான். வீரர்கள் மின்னல் விலகுவதுபோல் விலகி நின்றனர். கரிய குன்று நகர்ந்து வருவது போல் கம்பீரமான கலிங்க யானை ஆடி அசைந்து வந்து கொண்டிருந்தது. முகப் பதாகம் தங்கத்தால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதன் மீதிருந்த அம்பாரியில் பட்டாடை அணிந்த வீரன் அமர்ந்திருந்தான். அவன் கரத்தில் தங்கக் குடம் ஒன்றிருந்தது. பின்புறம், குடையொன்றைப் பிடித்தவாறு ஒருவன் அமர்ந்திருந்தான்.

அரசருக்குள்ள மரியாதை அந்தக் குடத்துக்கு அளிக்கப்பட்டது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

குடம் அழுத்தமாக மூடப்பட்டிருந்தது. மலரால் அலங்கரிக்கப்பட்டிருந்த குடத்திற்குப் பொட்டிடப்பட்டிருந்தது. குடத்தைச் சுமந்தவன் நெற்றியில் பளிச்சென்ற திருநீறும் அதன் நடுவே குங்குமமும் அழகுற விளங்கின.

அரசர் அருகே வந்தவுடன் யானை துதிக்கையைத் தூக்கிப் பிளிறி வணக்கம் தெரிவித்தது. பிறகு சற்றுக் குனிந்து குடத்துடனிருந்தவன் கீழே இறங்க உதவியது. அவன் பயபக்தியுடன் இறங்கினான்.

கீழே இருந்த அரையன் இராசராசன் இருகரங்களாலும் மிகுந்த மரியாதையுடன் ஒரு குழந்தையை அணைத்துப் பெறுவது போல் அவனிடமிருந்து பொற்குடத்தைப் பெற்றுக் கொண்டான்.

பிறகு குடத்தைத் தலைக்குமேல் தூக்கி இருகரங்களாலும் மிகவும் கவனத்துடன் பிடித்துக் கொண்டு மெல்ல அரசரை நோக்கி வந்தான்.

இராசேந்திர சோழன், நெடுநாள் பிரிந்திருந்த மகனைத் தாவி அணைப்பது போல் விரைந்து வந்து,“அரையா கங்கை நீரைக் கொண்டு வந்தாயா?” என்று கேட்டார்.

“புனித கங்கை நீரை, சக்கரவர்த்திகளின் பெருமைக்குச் சின்னமான கங்கை நீரைக் கொண்டு வந்துவிட்டேன். வெற்றிக் களிப்பால் எனக்குப் பேச நா எழவில்லை. கங்கை நீரைத் தங்களிடம் சமர்ப்பிக்க வடநாட்டு அரசர்கள் பலரும் வந்திருக்கிறார்கள்” என்றான்.

‘பரகேசரி இராசேந்திர சோழ தேவர் வாழ்க!’ என்ற வாழ்த்தொலி எழுந்ததும், தொடர்ந்து ‘வாழ்க் வாழ்க’ என்று ஆயிரமாயிரம் குரல் எதிரொலித்தன.

“தேவி! இதோ புனித கங்கை நீர்: நம் கனவு பலித்தது. இலட்சியம் நிறைவேறியது. கங்கை நீரைக் கொண்டு வந்துவிட்டோம்” என்று இராசேந்திரன் உணர்ச்சி மிகுதியால் பேசினார்.

பஞ்சவன்மாதேவி பொற்குடத்தைப் பெற்றுக் கொண்டாள். அவர்கள் இருவரும் கோதாவரிக் கரைக்குச் சென்றனர். படை வீரர்கள் களிப்புடன் ஆடிப்பாடிக் கொண்டு பின்தொடர்ந்தனர். தாரை தப்பட்டைகள் ஒலித்தன. சங்கம் முழங்கியது.

அரசரைப் பின் தொடர்ந்த அரையன் இராசராசன் நடந்துகொண்டே சொன்னார்: “சக்கரவர்த்திகளுக்கு மற்றொரு பரிசையும் கொண்டு வந்துள்ளேன். அந்தப் பரிசை வேங்கி மன்னர், தாமே தர வேண்டும் என்று துடிக்கிறார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“முதன் முதலில் நம் பலம் அறியாது பெருமையறியாது நம்மை எதிர்க்க முற்பட்டுப் பிறகு அடிபணிந்தவர் அவர். பிறகு அவர் மனம் மாறியது. கங்கை நீரைக் கொண்டு வருவதற்கு மிகவும் உதவியாக இருந்தார். நான் வேங்கியைச் சுற்றிப் பார்த்தபோது அங்கே அழகிய விநாயகர் சிற்பம் ஒன்றைக் கண்டேன். புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தலைநகரத்தில் அந்தச் சிலையை நிறுவ வேண்டும் என்றும் அதைச் சோழ நாட்டிற்கு எடுத்துச் செல்வதாகவும் வேங்கி மன்னரிடம் கூறினேன்.

அவர் சொன்னார்: “பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு பல்லவ தளபதி பரஞ்சோதி சாளுக்கிய நாட்டை வென்று திரும்பும் போது வாதாபியிலிருந்து பிள்ளையார் சிலை ஒன்றைப் பல்லவ நாட்டிற்குக் கொண்டு வந்தார். அந்தச் சிலை சிறுத் தொண்டராக மாறிய பரஞ்சோதியின் பிறந்த ஊருக்குக் கொண்டு செல்லப்பட்டது. இப்போது சோழர் தளபதியான நீங்கள் ஒரு விநாயகர் சிலையைக் கொண்டு செல்வது பொருத்தமே. ஆனால் என் கரத்தால் பிள்ளையார் சிலையைச் சோழச் சக்கரவர்த்திகளின் பாதத்தில் காணிக்கையாகப் படைக்கப் போகிறேன். ஓர் அதிசயமான செய்தி: வெண்தாடியுடன் சித்தர் ஒருவர் என் மாளிகைக்கு வந்தார். அவர்தான் பிள்ளையார் சிலையைச் சோழ அரசரிடம் சேர்க்கச் சொன்னார். தெரிந்தும் தெரியாமலும் இதுவரை சோழநாட்டை எதிர்த்ததற்குப் பிராயசித்தமாக நான் பிள்ளையாரைக் கொடுக்க அனுமதியுங்கள். அதற்கு நீங்கள் சம்மதிக்க வேண்டும்” என்றார். “கோதாவரிக் கரையில் பிள்ளையாருடன் அவர் காத்திருக்கிறார்” என்றான் அரையன் இராசராசன்.

“வேங்கி மன்னரா? அடாடா அவர் ஏன் அங்கேயே நிற்கிறார்? உன்னுடன் அழைத்து வந்திருக்கலாமே. என்ன இருந்தாலும் எங்களுடன் மணத் தொடர்பு கொண்டவராயிற்றே” என்று கூறி வேகமாக நடந்து, பிள்ளையார் சிலையுடன் இருக்கும் வேங்கி அரசர் இருப்பிடம் அடைந்தார். அரையன் இதை எதிர்பார்க்கவில்லை.

அழகாக அலங்கரிக்கப்பட்ட பீடத்தில் விநாயகர் சிலை வைக்கப்பட்டிருந்தது. சிற்பியின் கைவண்ணத்தால் அழகுடன் திகழ்ந்த விநாயகர் சிலை எதிரே, தன் மேலாடையை பயபக்தியுடன் இடுப்பில் அணிந்து சிறிது நேரம் மெய்மறந்து நின்று, பிறகு நெடுஞ்சாண் கிடையாக வீழ்ந்து வணங்கினார் இராசேந்திரன்.

“பிள்ளையாரப்பா! நீங்கள் தான் முதலில் புதிய நகரத்திற்குள் நுழைய வேண்டும். வடநாட்டு வெற்றியும், புதிய நகரும், புதிய கோயில் நிர்மாணமும் தங்கள் அருளின்றி நடந்திருக்குமா? வழிநடத்திச் செல்ல

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வந்து விட்டீர்கள். சோழ நாட்டிற்கு இனி எந்தவித இடர்ப்பாடும் இல்லை. வேழமுகத் தானே, ஐங்கரத்தானே, சிவபெருமானின் மூத்த பிள்ளையே, வினை தீர்ப்பவனே, இடர் ஒழிப்பவனே, வெற்றி தரும் ஞானக் கடவுளே! நீங்கள் சோழர் குலத்தை என்றும் காத்து இரட்சிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்து மீண்டும் அரசியுடன் சேர்ந்து விநாயகர் சிலையின் எதிரே கீழே வீழ்ந்து வணங்கினார்.

பிறகு அரையனை நோக்கி,“இராசராச! குடத்துக் கங்கை நீரை முதன் முதலில் விநாயகருக்கு அபிஷேகம் செய்வோம்” என்றார்.

அருகே இருந்த பஞ்சவன் மாதேவி” இந்தக் குடத்து நீரைப் பிள்ளையாருக்கு அபிஷேகம் செய்துவிட்டால், ஊர்சென்று கோயில் குடமுழுக்குக்கு என்ன செய்வது?” என்று மெல்லிய குரலில் கேட்டாள்.

அரையன் செவிகளில் அவை வீழ்ந்து விட்டன போலும்,“பேரரசியாரே! வணங்குகிறேன். இந்த ஒரு குடத்தில் மட்டும் கங்கை நீரைக் கொண்டு வரவில்லை. ஆயிரக்கணக்கான குடங்களில் கங்கை நீர் வந்து கொண்டிருக்கிறது. இன்னும் பல நூறாயிரம் குடங்களில் கங்கை நீர் வருவது தொடரும்” என்றான்.

விநாயகர் திருமேனிக்குக் கங்கை நீர் புனித அபிஷேகத்தை, அரசரும் அரசியும் செய்தனர்.

பிறகு இராசேந்திரன் கற்பக விநாயகர் சிலையின் பாதத்தில் அமர்ந்து, அரசியாரை நோக்கி,“நாம் இங்கேயே, இந்த இடத்திலேயே கங்கை நீரால் புனித நீராடுவோம்” என்றார்.

யானைமீது வந்து கொண்டிருந்த குடங்களிலிருந்து கங்கைநீர் கொண்டு அரசரும் அரசியும் அபிஷேகம் செய்யப்பட்டனர்.

இராசேந்திர சோழன் மகிழ்ச்சியோடு பீடத்தில் அமர்ந்து கொண்டிருந்தார்.

“தேவி! உனக்கு இப்போது மிகுந்த மனநிறைவு தானே? கங்கை நீராடிவிட்டோம். கற்பக விநாயகரைத் தரிசித்து விட்டோம். பெரிய கோயிலின் குடமுழுக்குக்கு வேண்டிய அளவு கங்கை நீர் வருகிறது. வேறு என்ன வேண்டும்?” என்று மகிழ்ச்சிக் களிப்போடு கூறினார்.

அருகே இருந்த அரையன் இராசராசன்,“ஆம் தேவி! கண்ணுக்கு எட்டிய தொலைவு வரையில் கரிமீது குடங்குடமாய் கங்கை நீருடன் பொற்குடங்கள் வந்து கொண்டிருக்கின்றன. எல்லாம்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பெருவுடையாருக்கே” என்று கூறிய அரையன் சுற்றுமுற்றும் பார்த்து, அரசரின் செவிகளுக்கு மட்டும் கேட்கும்படி,“வழிகாட்டிய சித்தரைக் காணவேண்டும். அவர் எங்களுக்கு யோசனை சொல்லி உதவியிராவிடில் கங்கை நீரைக் கொண்டு வர முடியாமல் தவித்திருப்போம்” என்றான்.

“கோதாவரிக் கரையிலேயே இருந்து கங்கை நீரில் நாள்தோறும் நீராடி மகிழ ஆசையாக இருக்கிறது. ஆகா, கங்கையின் புனித நீருக்குத் தனி மணம், தனி ருசி, மூலிகை கலந்த நீர், சங்கரன் சடை முடியிலிருந்து தவழ்ந்து வரும் நீர் ஆயிற்றே!” என்று பஞ்சவன் மாதேவி சிறு குழந்தை போல் குதூகலத்துடன் பேசினாள்.

இராசேந்திர சோழர் புன்முறுவலுடன்,“தேவி! நீ நாள்தோறும் கங்கை நீரில் நீராடி மகிழத் திட்டம் வகுத்து விட்டேன்” என்றார்.

“எப்படி?” ஆவலுடன் கேட்டாள் பஞ்சவன் மாதேவி.

“கங்கையின் பெருமையைக் கேட்டறிந்தவுடன் கங்கையைச் சோழ நாட்டிற்குக் கொண்டு வரவேண்டும் என்று முடிவு செய்தேன். கிருஷ்ணையும், கோதாவரியும் கங்கையும் காவிரியுடன் கலந்தால் எப்படி இருக்கும்? கங்கையையும், காவிரியையும் இணைக்க வேண்டும். சோழர் கொடி அந்த நாட்டில் பறந்தால்தான் என் இலட்சியம் நிறைவேறும். அதனால்தான் வடதிசைப் படையெடுப்புக்குத் திட்டமிட்டேன். அதைப் புனித யாத்திரையுடன் ஒன்று சேர்த்தேன்.

“வரிசை வரிசையாக சோழ நாட்டிற்குக் கங்கை நீருடன் யானைகள், நாம் புதிதாக அமைந்துள்ள ஏரியில் நீரைச் சேர்ப்பிக்கும். புனிதமான கங்கை நீரால் அந்த ஏரி பொன்போல் மிளிரும். ஏரியிலிருந்து வாய்க்கால் வெட்டி மாளிகைக்குக் கங்கை கலந்த நீரைக் கொண்டு வந்து தடாகத்தில் சேர்ப்போம். அல்லியும் தாமரையும் பூத்திருக்கும் அந்தத் தடாகத்தில் நீ நாள்தோறும் நீராடலாம். கேளிக்கையாக நீந்தி மகிழலாம்” என்றார்.

பஞ்சவன் மாதேவியின் மெய் சிலிர்த்தது. “கேளிக்கைக்கு ஏற்ற வயதா? அதற்காகப் பிறந்த வீரம்மாள் இருக்கிறாளே!” என்றாள்.

“தேவி அரிய பெரிய செயலைச் செய்த அரையன் இராசராசனை நாம் பாராட்ட வேண்டாமா? அரையன் சாதாரணமானவன் அல்லன். அவன் வீரன். என் தந்தையால் பாராட்டப் பெற்றவன். அவனுக்குள்ள புகழ்ப் பெயர்களைக் கேள்!

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“நால்மடி பீமன், எதிர்த்தவன் காலன், சயசிங்க குலகாலன், வீரபீமன், வீர பூஷணன்… இன்னும்” என்று அரையன் புகழ்பேச-

“அரசர்க்கரசே! போதும் போதும் என்னைப் புகழ்ந்து என்னை மூச்சுத் திணற வைக்காதீர்கள். என் பெருமையெல்லாம் உங்கள் பெருமையே. நான் என்றுமே தங்களுக்கு அடிமை. சோழர்குல அடிமை” என்றான். அவன் விழிகள் பனித்திருந்தன. அடக்கத்தால் அரையன் மேனி குறுகி நின்றான்.

பிறகு, சக்கரக்கோட்டத்து அரசரும், மதுரை மண்டலத்து மன்னரும், வத்ச நாட்டு அதிபதியும், மாசுணி மன்னரும், ஒட்டர நாட்டவரும் தங்களை வணங்கிப் பரிசுகள் தரக் காத்திருக்கின்றனர்” என்றான். பிறகு மெல்லிய குரலில்,“இவர்களெல்லாம், நம்மை எதிர்த்தவர்கள். கங்கை நீரை நாம் அடைவதில் விருப்பம் காட்டாதிருந்தவர்கள். ஆனால், அந்த பொல்லாத கஜினி முகமதுவை வென்று விரட்டியவுடன் நம் பலம் அறிந்தனர். நம் புகழ் அறிந்தனர். கங்கைக் கரைக்கு வந்து எனக்குக் கட்டளை இட்ட சித்தர் ஒவ்வோர் அரசரையும் சந்தித்துக் கட்டளையிட்ட அதிசயத்தை என்னவென்று புகழ்வேன்!”

இராசேந்திர சோழர் வடநாட்டு மன்னர்களை அழைத்து அவர்கள் அன்பினைப் பெற்று, பரிசுப் பொருள்களை ஏற்று,“என் அருமைச் சகோதர மன்னர்களே! நீங்கள் எல்லாரும், தெற்கே என்னுடன் வரவேண்டும். புதிய கோயிலுக்குக் குடமுழுக்கு நடத்தப் போகிறேன்” என்றார்.

கோதாவரிக் கரையினின்று, பரகேசரி இராசேந்திர சோழரும் பட்டத்தரசி பஞ்சவன் மாதேவியும் முன்னே நான்கு வகைப் படைவீரர்கள் செல்ல, தொடர்ந்து வண்டிகளும், பண்டங்கள் கொணர்ந்த வண்டிகளும், உதவியாளரும் வர, பழையாறை நோக்கிச் சென்றார்.

புறப்படும் முன்பு, ஒற்றர் படைத்தலைவரை அழைத்து,“நம் வருகையை வீரமாதேவியிடம் தெரிவித்து விடுங்கள்” என்றார்.

# 83

# என்ன பெயர் இடுவது?

ரிய கோயில் விமானம் கம்பீரமாக உயர்ந்து நின்றது. வானை

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பெ எட்டுமளவிற்கு அது வளர்ந்திருந்தது. கோயிலைச் சுற்றி மதில் அமைய வேண்டும். சக்கரவர்த்தி வந்த பிறகு, கோயில் விமானக் கலசத்திற்குக் குடமுழுக்கு நடைபெற்ற பிறகு அவற்றை எலலாம் முடிக்கலாம் என்ற முடிவுக்கு வந்தாள் வீரமாதேவி.

குடமுழுக்குக்கு முன்பு பூர்த்தியடைந்த திருப்பணிகளின் முழு வடிவத்தை மீண்டும் ஒருமுறை பார்த்து, நிறைகுறைகளைக் கண்டறிய சிற்பி மாணிக்க சேகரனும் சிற்பிகளும் கோயிலை ஒருமுறை சுற்றி வந்தனர். அவர்களுக்கே தங்கள் பணியின் சிறப்பு அப்போதுதான் புலப்பட்டது. தலைமைச் சிற்பி ஒவ்வொரு சிற்பியையும் அழைத்துப் பாராட்டினார். வீரமாதேவியும் அருகே இருந்தாள்.

தலைமைச் சிற்பி பாராட்டும்போது, சிற்பிகள் பெருமை தாங்காது நெளிந்தனர். சிலர் வெட்கத்தால் பெண்கள் போல் தலை குனிந்தனர். சிலர் அடக்கமாகப் பாராட்டுதலை ஏற்றனர். சிலர் பாராட்டுதலுக்கு நன்றி சொல்லத் தெரியாமல், விழிகளை நகர்த்தக்கூட முடியாமல் மாணிக்க சேகரனைப் பார்த்தவாறு திகைத்து நின்றனர்.

“தலைவர் சொற்படி செய்தோம். நமக்கு என்ன பாராட்டு? செய்ததற்குக் கூலி பெற்றுக் கொண்டோம்” என்று மெல்லப் பேசிக் கொண்டனர் சிலர்.

வீரமாதேவியைச் சுட்டிக் காட்டி,“இளவரசியார் நம்முடனே இருந்து, நமக்கு உற்சாகமூட்டியிராவிடில் கோயில் திருப்பணி முடிந்திருப்பதேது!” என்று வீரமாதேவியைப் புகழந்தனர் சிலர்.

தஞ்சைப் பெரிய கோயில் திருப்பணியில் ஈடுபட்ட சில முதிய சிற்பிகள் வீரமாதேவியின் அருகே சென்று வணக்கம் தெரிவித்தனர்.

கைகட்டி மிக மரியாதையுடன் நின்ற பெரியவர்களை நோக்கி, அவர்களை அமருமாறு சொல்லி அவர்களுடைய பணியைப் புகழ்ந்தாள் வீரமாதேவி.

“உங்கள் கருத்துகளை நீங்கள் இப்போது சொல்லலாம். சக்கரவர்த்திகள் வந்தவுடன் உங்கள் பணியை மிகவும் பாராட்டுவார். அவருடைய கனவை நிறைவேற்றியவர்கள் நீங்கள். இந்தக் கோயிலைப் பற்றிய உங்கள் கருத்துகளை, குறை நிறைகளை நீங்கள் ஒளிவு மறைவின்றிக் கூறலாம்” என்று வீரமாதேவி, முதிய சிற்பிகளைப் பார்த்துப் பேசுவது போல், அனைவரிடமும் கேட்டாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

மாணிக்க சேகரனை நோக்கி ஒருமுறை விழிமூலம் அனுமதி கேட்ட முதிய சிற்பி ஒருவர்,"எங்களுக்கெல்லாம் ஏற்பட்டிருக்கும் மகிழ்ச்சியைச் சொல்லி முடியாது. என்னைப் போன்று இங்குள்ள சிற்பிகளுக்கும் என்ன பேசுவதென்றே தெரியவில்லை. தங்களுடைய சலியாத உழைப்பை நாங்கள் பாராட்டுகிறோம்.அமரராகிவிட்ட பேரரசர் இராசராசருக்குப் பெரும் பெருமையை, அவர் புதல்வர் இராசேந்திர சோழ சக்கரவர்த்திகள் ஏற்படுத்திவிட்டார். இராசராசேச்சுரம் பெருவுடையார் கோயிலைவிட அளவில் குறைவுதான் இந்த பெருவுடையார் கோயில் என்றாலும் தஞ்சைக் கோயிலுக்கு இணையாக இந்தக் கோயில் அமைவதற்கு முக்கிய காரணம் சக்கரவர்த்திகள் மட்டுமல்லர். முகத்தெதிரே பாராட்டுகிறேன் என்று எண்ணி விடக்கூடாது. இந்த இளவயதில் தங்களுக்கு ஆர்வம், சலியாத உழைப்பு! காடாயிருந்த இந்த இடத்தைக் கந்தர்வ பூமியாக்கினீர்கள். நீங்கள் நீடுழிவாழ வேண்டும். அறிவாற்றலில் குறைந்தவர்கள் என்றாலும் வயது காரணமாக எங்கள் வாழ்த்தை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்றார். அவர் கூறும்போது கண்களில் நீர் மல்கியது.

மற்றொரு முதியவர் கூறினார்: "தஞ்சையில் பெரிய கோயில் கட்டி, குடமுழுக்கு நடைபெற்ற அன்றைய நாள் நிகழ்ச்சியை என்னால் இன்றளவும் மறக்க முடியவில்லை. அங்கு நடந்த அந்த வைபவம் - அப்பப்பா-அரச குடும்பத்தினர் அத்தனை பேரும் வந்திருந்தனர். குறிப்பாக சக்கரவர்த்திகளுக்குத் தம் அக்கை யாரிடம் அளவு கடந்த அன்பு, மதிப்பு, மரியாதை. இளைய பிராட்டியார் குந்தவ்வை தேவியார் வந்திருந்தார். அவரது கணவர் வல்லவரையர் வந்தியத்தேவன் வயது முதிர்ந்த நிலையிலும் அங்கே கம்பீரமாக நின்று கொண்டிருந்தார்.

இன்று இந்தக் கோலாகலமான விழாவைக் காண அவர்கள் இல்லை. இன்றும் அரச குடும்பத்தில் முக்கியமானவர்கள் இல்லை. சக்கரவர்த்திகளுடைய ஆற்றலும், வீரமும் போர்க்களங்களில் பிரதிபலித்தாலும் இந்தக் கோயில்தான் அவருக்கு அழியாத புகழை நிலைநாட்டப் போகிறது. தஞ்சைபுரியிலுள்ள பெருவுடையார் கோயிலுக்குச் சக்கரவர்த்தி இராசராசர் பெயர் சூட்டப்பட்டது போல, இந்தக் கோயிலுக்கும், சக்கரவர்த்தி இராசேந்திரர் பெயர் சூட்டப்பட வேண்டும் என்பது என் கோரிக்கை."

அங்கே ஒரு கணம் அமைதி நிலவியது. இராசேந்திர சோழரின் இளைய திருக்குமாரன் அங்கு வந்து, அவர்கள் உரையாடலில் கலந்து கொண்டார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அதுவரை பேசிக் கொண்டிருந்தவர்கள் திடீரென்று பேச்சை நிறுத்தி மௌனமானதைக் கண்ட இளவரசர்,“ஏன் திடீரெனப் பேச்சை நிறுத்தி விட்டீர்கள்? நானும் அதில் கலந்து கொள்ளலாம் அல்லவா? ரகசியம் என்றால் நான் இங்கிருந்து சென்று விடுகிறேன். பிறகு வருகிறேன். சக்கரவர்த்தியிடமிருந்து முக்கியமான செய்தி வந்திருக்கிறது. அதைத் தெரிவிக்க வந்தேன். பிறகு வருகிறேன்” என்று கூறி அங்கிருந்து புறப்பட எத்தனித்தார்.

வீரமாதேவி உட்பட அனைவரும் பரபரப்புடன் எழுந்து நின்று,“வாருங்கள் வாருங்கள். இங்கே உட்காருங்கள். அந்தரங்கமோ, ரகசியமோ ஏதுமில்லை. உங்களுக்குத் தெரியாதவற்றை நாங்கள் என்ன பேசி முடிவெடுக்கப் போகிறோம்?” என்று கூறி,“ஏதோ முக்கியமான செய்தி சக்கரவர்த்திகளிடமிருந்து வந்திருப்பதாகச் சொன்னீர்களே, அதைச் சொல்லுங்கள்” என்று ஆவலுடன் கேட்டாள் வீரமாதேவி.

“கோதாவரிக் கரையிலிருந்து கங்கை நீர்க் குடத்துடன் சக்கரவர்த்திகள் புறப்பட்டு விட்டார்கள். பரிவாரங்களுடன் அரசர் வந்து கொண்டிருக்கிறார். குடமுழுக்குக்கு ஏற்பாடுகளை விரைந்து செய்யுமாறு உத்தரவு வந்துள்ளது. சித்தரை உடனே சந்திக்க வேண்டும்: விரைவாகப் பணியாற்ற வேண்டும். குறுநில மன்னர்களுக்கும், அரச குடும்பத்தவர்களுக்கும், தாயாதிகளுக்கும், உறவின்முறையோர்களுக்கும், புலவர்களுக்கும், பஞ்சாயத்து தலைவர்களுக்கும் குடமுழுக்கு விழாச் செய்தியை அறிவிக்க வேண்டும். சக்கரவர்த்திகள் வரும்போது நகர எல்லையில் கோலாகலமாக வரவேற்க வேண்டும். பழையாறைக்கு வந்த பிறகே இங்கே வரப்போகிறார்களா அல்லது,கொள்ளிடம் தாண்டி இங்கே நேரே வரப்போகிறாரா, தெரியவில்லை” என்றார்.

சக்கரவர்த்தி, கங்கை நீருடன் வரும் செய்தி கிடைத்து விட்டது. செய்தியைக் காவலர்கள் இங்கு கொண்டு வராமல், பழையாறைக்கு ஏன் கொண்டு சென்றனர் என்று வீரமாதேவி எண்ணினாள். அதற்குக் காரணம் இருக்க வேண்டும் என்றும் சிந்தித்தாள்.

இளவரசர் கேட்ட கேள்விக்கு உடனே மறுமொழி கூற வேண்டும். ஏதோ ரகசியம் பேசுவதாகவும் அவர் வந்தவுடன் நிறுத்திவிட்டதாகவும் நினைத்த இளவரசரின் சந்தேகத்தைப் போக்க வேண்டும் என்று வீரமாதேவி முடிவு செய்தாள். மற்றவர்கள், இளவரசருடன் நேரே பேச சற்று அச்சங் கொண்டவர்கள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வீரமாதேவி சொன்னாள்: "குடமுழுக்குக்கு நாள் குறிப்பிட்டாகிவிட்டது. கங்கைப் புனித நீருடன் அரசர் எப்போது வருவார் என்ற கவலை எனக்கிருந்தது. அந்த ஐயமும் தீர்ந்துவிட்டது. பழையாறைக்குச் சென்று வருவதுதான் முறை. இங்கே உள்ளவர்கள் எல்லாரும், கோயிலுக்கு என்ன பெயர் சூட்டுவது என்பதைப் பற்றித் தங்கள் கருத்தை விவரித்தார்கள். அந்த வேளையில்தான் நீங்கள் வந்தீர்கள்" என்றாள்.

இளவரசர் அங்குள்ளவர்களை ஒருமுறை பார்த்தார்.

"பெயரிடும் பிரச்சனை இங்கும் தலை தூக்கி விட்டதா? கோயிலுக்கும், கோயிலுள்ள நகரத்திற்கும், நகரத்திற்கு அருகிலுள்ள ஏரிக்கும் என்ன பெயரிடுவது என்பதை அமைச்சர்கள் விவாதித்து வருகின்றனர். அரச சோதிடரும் அதுபற்றிச் சிந்தித்து வருகிறார். "பஞ்சவன் மாதேவீச்சுரம்" என்று பெயரிட வேண்டுமென்று சிலர் கருத்துத் தெரிவிக்கிறார்கள். லோகமாதீச்சுரம், செம்பியன் மாதேவீச்சுரம் என்றெல்லாம் பெயரிடப்பட்ட திருக்கோயில்கள் இருப்பன போன்று சோழ அரசியார் பெயரால் கோயில் அமைய வேண்டும் என்று அரசியார் விரும்புவதாகச் செய்தி ஒன்று கிடைத்தது. சக்கரவர்த்திகளும் அதை ஆமோதிக்கிறார் என்றும் கேள்வி. ஆனால், சற்று உடல்நிலையில் முன்னேற்றம் கண்ட பழையாறையிலுள்ள அரிந்தவன் மாதேவி தன் பெயர்தான் பெரிய கோயிலுக்கிடப்பட வேண்டும் என்று வற்புறுத்துகிறாள். என்ன செய்வதெனத் தெரியவில்லை. கல்தச்சர்களைக் கொண்டு கல்வெட்டுகளில் பெயர் பொறிக்கப்பட வேண்டும்…" என்று இளவரசர் கவலைப்படுபவர் போல் பேசினார்.

முதிய சிற்பி கூறினார்: "நான் என் கருத்தைச் சொல்வதில் பிழை இருந்தால் பொறுத்தருளுங்கள். நான் சொல்வது நியாயம் என்பதும் தங்களுக்குத் தெரியும். சோழர் குலத்தின் பிதாமகர் விஜயாலயசோழ தேவர், முதன்முதலில் சிவபெருமானுக்குக் கற்கோயில் எழுப்பினார். விஜயாலய சோழீச்சுரம் என்று அதற்குப் பெயர் சூட்டினார்கள். ஆதித்த சோழீச்சுரம் - இன்னும் பல உதாரணங்கள் கூற முடியும். தஞ்சாவூரில் மாமன்னர் இராசராசசோழ தேவர் எழுப்பிய கோயிலுக்கு இராசராசேச்சுரம் என்றே பெயர் சூட்டினார்கள். அதுபோல இந்தப் பெரிய கோயிலுக்கும் இராசேந்திர சோழீச்சுரம் என்று பெயர் சூட்டவேண்டும். அதுதான் முறை. என் சொல்லில் தவறிருந்தால் முதலிலேயே நான் வேண்டியது போல் பொறுத்தருள வேண்டும்."

முதிய சிற்பி கூறியதை மறுப்பதற்கு ஒருவரும் முன்வரவில்லை. ஆனால் மாணிக்க சேகரன் மட்டும் எழுந்து,"இந்தக் கோயில் உருவாவதில்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

எனக்கு முக்கியப் பங்குண்டு என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள்" என்று கூறத் தொடங்கியவுடன், இளவரசர் குறுக்கிட்டு,"மாணிக்க சேகரீச்சுரம் என்று பெயரிட வேண்டும் என்று விருப்பப்படுகிறீர்களா?" என்றான்.

அங்கே இருந்தவர்களிடையே அடக்கமான சிரிப்பு எழுந்து அடங்கிற்று. மாணிக்க சேகரன் முகம் சிவந்தது: நாணத்தால் அன்று: சினத்தால்.

"அந்த அளவுக்கு அறிவிலி என்றோ பேராசைக்காரன் என்றோ என்னை எண்ணிவிட்டாரா, சக்கரவர்த்திகளின் இளைய மகன்? எனக்கு அப்படிப்பட்ட ஆசையிருந்திருந்தால் இந்தக் கோயிலின் முக்கிய இடத்தில் இந்தக் கோயிலைக் கட்டுவித்தவர் மாணிக்கசேகரக் கல்தச்சர் என்று செதுக்கியிருப்பேன். உங்களுக்குத் தெரிந்திருக்குமோ – தெரியாதிருக்குமோ என்றாலும் நான் சொல்லத்தான் போகிறேன். ஒரு காலத்தில் - ஏன் நான் அறிந்து இந்த இடம் பெரிய காடாக இருந்தது. இந்த இடத்தில் ஒரு கோயில் எழுப்ப விரும்பினார் சக்கரவர்த்திகள். அப்போது அவர் சக்கரவர்த்தி பீடத்தில் அமரவில்லை. அவர் பிறவியிலேயே கலைஞர். அவர் உள்ளத்தில் கலை ஆர்வத்தை மேலும் வளர்க்க ஒருவர் தேவைப்பட்டார். எப்போதும் 'போர் போர்' என்று சோழ நாட்டின் பெருமையை யுத்த பூமியில் நிலை நாட்டிய இளவரசரின் கலைத் தாகத்தை ஒருவர் வளர்த்தார்: உருவம் கொடுத்தார். சிற்ப சௌந்தர்யங்கள் நிறைந்த கலைக் கோயில் உருவாக ஊக்கமளித்தார். பல எதிர்ப்புகள் ஏற்பட்டன. காட்டை அழித்துச் சமமாக்கி, இங்கே கோயில் கட்டும் பணியைத் தாமே ஏற்றுக் கொண்டார். கோயிலைச் சுற்றி நகரம் ஏற்பட வேண்டிய கட்டாயம் எழுந்தது. ஒன்றை நினைத்துப் பார்க்க வேண்டும், தஞ்சை மாநகரம், சோழ நாட்டின் தலைநகராக அமைந்த பிறகே அங்கே பெரிய கோயிலை எழுப்பினார், இராசகேசரி இராசராச சோழ தேவர். ஆனால் இங்கே கடுமையான கானகம். காடு திருத்திக் கோயில் கட்ட வழி வகுத்தார். சிற்பியைத் தேடி அழைத்து வருவதில் பெரும் பாடுபட்டார். நகரத்தின் அருகே ஒரு பெரிய ஏரியும் அமைந்தது. இதற்கெல்லாம் காரணம் யார்? யார் தெரியுமா?" என்று கூறிச் சற்று பேச்சை நிறுத்தினார்.

அனைவரும் யார் என ஆவலுடன் நோக்கினர். "அவர் தான் இதோ இங்கே அடக்கமாக நிற்கும் இளவரசி வீரமாதேவி. இவர் பெயரைக் கோயிலுக்குச் சூட்ட வேண்டும். இந்த நகரத்திற்கு இவர் பெயர் சூட்டப்பட வேண்டும். ஏரிக்கு எந்தப் பெயர் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள்."

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

மாணிக்க சேகரன் பேச்சைக் கேட்டு அங்கிருந்தவர்கள் திடுக்கிட்டார்கள். தலைமைச் சிற்பி என்ன சொல்கிறார்? தெரிந்துதான் சொல்கிறாரா? நிலைமையைப் புரிந்து தான் சொல்கிறாரா?

வீரமாதேவியின் பெயரால் கோயிலா, இது என்ன நியாயம்? ஊர் உலகம் சம்மதிக்குமா? அரசி பஞ்சவன் மாதேவி அறிந்தால் என்ன ஆவது?

சிற்பிக்கு என்ன நேர்ந்து விட்டது? வீரமாதேவியின் மீது முன்பே பொறாமை கொண்ட அரசியார், சிற்பியின் எண்ணத்தை அறிந்தால் யார்மீது சீற்றம் கொள்வாள்?

இளவரசருக்கே வியப்பாக இருந்தது. கோயில்-நகரம் இவற்றிற்குப் பெயர் சூட்டுவதைப் பற்றிய கருத்தைக் கூற சிற்பிக்கு என்ன உரிமை? ஒருவேளை வீரமாதேவியிடம் நற்பெயரைப் பெற இப்படிப் புகழ் வார்த்தை கூறுகிறாரா?

பழையாறையில் கடும் நோயிலிருந்து பிழைத்து எழுந்துள்ள அரிந்தவன்மாதேவி, தம் பெயரைக் கோயிலுக்குச் சூட்ட விரும்புவது நியாயமானது.

அரசியார் பஞ்சவன் மாதேவி தம் பெயரில் கோயில் அமைவதை விரும்புவது – உரிமையின் அடிப்படையில் எனலாம்.

எல்லாவற்றிற்கும் மேலாக, முதிய சிற்பி விரும்பியது தான் நாடே ஒப்புக் கொள்ளக்கூடியது. அப்படியெல்லாம் இருக்க, மாணிக்க சேகரன் வீரமாதேவியின் பெயரைச் சூட்ட விரும்புவதில் ஏதோ பின்னணி இருக்க வேண்டும்.

இளவரசர் ஏதும் பேசவில்லை. மௌனமாயிருந்தார்.

வீரமாதேவி தலை குனிந்து நின்று கொண்டிருந்தாள் அவள் என்ன சொல்லப்போகிறாள் என்று அனைவரும் எதிர்பார்த்தனர்.

“மாணிக்க சேகரரே! என்ன வார்த்தை கூறிவிட்டீர்கள்? என்னுடைய விருப்பத்தைக் கேட்டல்லவா நீங்கள் சொல்லியிருக்க வேண்டும்?” என்று கடினமான குரலில் கேட்டாள் வீரமாதேவி.

“தேவி! என்னைப் பொறுத்தருளுங்கள். தங்களைக் கேட்டுச் சொல்வதாக தங்கள் தூண்டுதலில் சொல்வதாக எல்லாரும் நினைப்பார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால், சக்கரவர்த்திகளின்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

உள்ளத்தை சரிவர நான் புரிந்து கொண்டிருக்கிறேன். அவரிடம் நான் சொன்னால் என்னைப் பாராட்டுவார். மேலும், தேவி! முன்பு ஒரு முறை நீங்கள் ஒரு சபதம் செய்திருக்கிறீர்கள் என்பது அரச குடும்பத்தவருக்குத் தெரியும். அரிந்தவன்மாதேவி அறிவார்கள். அரசி பஞ்சவன் மாதேவியாரும் அறிவார்கள்.

'என் பெயர் என்றென்றும் சந்திர சூரியர், உள்ளவரை நின்று நிலவுமாறு நான் செய்கிறேன்' என்று அவர்கள் எதிரே சூளுரைத்தீர்கள். உங்கள் பெயர் நிலைக்க அழியாத சின்னம் வேறு என்ன இருக்க முடியும், இந்தக் கோயிலைத் தவிர.

"நீங்கள் கோயில் கட்டும்போது அனைவரும் அப்படித்தான் நினைத்தார்கள். காட்டை அழித்துக் கோயில் கட்டத் தொடங்கியபோதே உங்கள் சபதம் உறுதியாகிவிட்டது. கோயில் கட்டுவதற்கு அவர்கள் எடுத்துக் கொண்ட தடை முயற்சிகளை மறந்து விட்டீர்களா? சக்கரவர்த்திகள் உங்களிடம் கோயில் கட்டும் பெரும் பொறுப்பை ஒப்படைத்ததிலிருந்து நீங்கள் அறிந்து கொள்ளவில்லையா? யார் என்ன வேண்டுமானாலும் நினைக்கட்டும். சக்கரவர்த்திகள் இங்கே வந்தவுடன் என் கருத்தை அழுத்தமாகச் சொல்லப் போகிறேன்" என்று கூறிவிட்டுப் புறப்பட ஆயத்தமானான்.

அங்கே ஒருவித அமைதி நிலவியது. ஒவ்வொருவராக அங்கிருந்து புறப்பட்டனர்.

வீரமாதேவி உரத்த குரலில் சொன்னாள்: "கோயிலுக்குப் பெயர் சூட்டுவதில் கடும் விவாதத்தில் இறங்கி நேரத்தைக் கழிப்பதைவிட பொறுப்பைச் சித்தரிடம் விட்டுவிடுவோம். அவர் என்ன சொல்கிறாரோ அதை ஏற்போம்."

இளவரசர், மாணிக்க சேகரன், சிற்பிகள் எல்லாரும் அங்கிருந்து சென்றுவிட்ட பிறகு வீரமாதேவி சோர்வுடனும், பெரும் கவலையுடனும் நின்று கொண்டிருந்தாள்.

'கோயிலுக்கு என் பெயரைச் சூட்டுவதா? என்ன நியாயம்? மாணிக்க சேகரனுக்கு இப்படி ஓர் எண்ணம் எப்படி ஏற்பட்டது?' என்று அவள் குழம்பினாள்.

"சித்தர் பிரானே! நீங்கள் தான் முடிவு செய்ய வேண்டும்" என்று கைகூப்பிப் பிரார்த்தித்தாள். அங்கே சித்தர் இல்லை. சித்தரைச் சந்திக்க வேண்டும் என்று வீரமாதேவி அப்போது மிகவும் விரும்பினாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தொலைவில் தெரிந்த கோயில் விமானத்தை ஒருமுறை பார்த்தாள். வேயப்பட்ட ஓலைகள் மறைக்க நின்ற விமானத்தின் கம்பீரத்தை ஒருமுறை நோக்கினாள்.

“வீரமாதேவி! என்ன பார்க்கிறாய்? தட்சிண மேருவின் கம்பீரத்தையா? உன் இலட்சியம் பூர்த்தியடைந்ததையா?” என்று கேட்டவாறு சித்தர் அங்கு வந்துகொண்டிருந்தார்.

‘ஆகா: தெய்வத்தின் கருணை என்பது இதுதான். உள்ளத் தூய்மையுடன் ஒன்றை நினைத்தால் நிச்சயம் நடக்கும் என்பதற்கு இந்தச் சம்பவமே சாட்சி’ என வீரமாதேவி நினைத்தாள்.

“சித்தர்பிரானே! நீங்கள் தான் எனக்கேற்பட்டிருக்கும் இக்கட்டிலிருந்து காப்பாற்ற வேண்டும்” என்று குரல் தழுதழுக்கக் கூறியவாறு, அவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கினாள்.

சித்தர் சிரித்தவாறு,“என்ன தொல்லை ஏற்பட்டு விட்டது? நீதான் எல்லாவற்றிலும் வென்று விட்டாய். கோயிலைக் கட்டிவிட்டாய்: நகரத்தை ஏற்படுத்தி விட்டாய்: ஏரியில் கங்கை நீரைச் சேர்க்கப் போகிறாய். விமானத்தையும் பெருவுடையாரையும் புனித நீரால் முழுக்காட்ட கங்கையின் புனித நீர் வந்து கொண்டிருக்கிறது.

“இந்தப் பெரிய கோயிலின் பெருவுடையார் அதிர்ஷ்டம் நிறைந்தவர். தஞ்சைப் பெருவுடையாருக்கு இல்லாத புகழ், பெருமை இந்தப் பெருவுடையாருக்கு ஏற்படப் போகிறது. வீரமாதேவி நகரத்தின் வீரமாதீச்சுரத்தில் வீற்றிருக்கும் பெருவுடையாருக்கு கங்கைப் புனித நீரால் திருமுழுக்கு ஏற்படப் போகிறது. பெருவுடையார் அதிர்ஷ்டசாலி” என்று கூறி வீரமாதேவியை உற்று நோக்கினார்.

“சித்தர் பெருமானே! என்ன வார்த்தை கூறிவிட்டீர்கள்? நீங்கள் எடுத்த முடிவான முடிவா? நீங்கள் அப்படி முடிவு செய்யலாமா? என் பெயரால் கோயிலோ, நகரமோ ஏற்படக் கூடாது. இது சத்தியம்” என்றாள்.

சித்தர் மீண்டும் சிரித்தார்.

## 84

# எனக்கு வேண்டாம் புகழ்

ங்கை நீரைக் குடங்களில் சுமந்து சென்ற யானைகள் தொடர்ந்து

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

க பயணம் செய்தன. வழிநடைக் களைப்பு தீர சிறிது நேரம் ஆங்காங்கே இளைப்பாறினார் இராசேந்திரன். விரைவில் கங்கை நீரைப் பெருவுடையாருக்குத் திருமுழுக்காட்டி வணங்க வேண்டும் என்ற பேரார்வம் அவருள்ளத்தில் இருந்தது. சோழ மன்னர் கங்கை நீருடன் வருகிறார் என்ற செய்தியறிந்து அவருக்கு வணக்கம் தெரிவித்து வரவேற்கக் கூடியிருந்தவர்களிடமும் அதிக நேரம் தங்கவில்லை. இடையே திருவொற்றியூரில் மட்டும் ஒரு பகல் தங்குவதற்கு அனுமதித்தார்.

மிகப் பழைமை வாய்ந்த திருவொற்றியூர்க் கோயிலை அடையும்போது அவர் வியப்படையும் வண்ணம் சதுரானன பண்டிதர் இராசேந்திரனை வரவேற்றார். சோழர்குலத்துக் குருவான அவரை வணங்கி அங்கே ஒருநாள் தங்கினார் அவர். திருவொற்றியூர்க் கோயிலின் பழம்பெருமையையும் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு சிவனடியார் சுந்தரர் அங்கு வந்து சென்றதையும் கூறி, சுந்தரரின் காதல் கதையையும் விவரித்தார்.

சுந்தரமூர்த்தி நாயனார், சங்கிலியார் என்ற பெண்ணின் மீது காதல் கொண்டார் என்ற செய்தியையும், திருவொற்றியூர்க் கோயிலிலுள்ள மகிழ மரத்தடியில்,"உன்னை என்றும் பிரியேன்" என்று உறுதியளித்ததையும் அவர் விவரித்தார்.

பிறகு, சுந்தரர் தன் உறுதியினின்று மாறியதால் விழிகள் இழந்ததையும் எடுத்துக் கூறினார்.

இந்த வரலாற்றைக் கேட்டிருந்த அரசியார் பஞ்சவன் மாதேவியார் சக்கரவர்த்திகளிடம் கேட்டாள்:

"சிவனடியார் தன் வாக்குறுதியிலிருந்து மீறலாமா?"

இராசேந்திரன் தேவியை உற்றுப் பார்த்து, அவர் கேள்விக்குள் புதைந்திருக்கும் பொருளைப் புரிந்து கொண்டு "சிவனடியார் மட்டுமா? யாருமே கொடுத்த வாக்குறுதியை மீறக்கூடாது?" என்று கூறினார். அவள் அடுத்துக் கேட்கவிருக்கும் கேள்வியை உணர்ந்து கொண்டவர்போல், புன்முறுவல் பூத்தார்.

"வாக்குறுதி கொடுத்து அதை மீறினால் தண்டனை உண்டு. அதுவும் அரசரென்றாலும் தப்ப முடியாது. தெய்வம் நின்று கொல்லும்" என்றார்.

தேவி அப்போதும் எதுவும் பேசவில்லை. மௌனமாக இருந்தாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

திருவொற்றியூர்க் கோயிலை விட்டுப் புறப்படும் முன்பு, சதுரானன பண்டிதரின் யோசனைப் படி திருவொற்றியூர்க் கோயிலைப் புதுப்பித்துக் கற்களைக் கொண்டு பெரிதாகக் கட்டித்தர இசைவு தந்தார். அப்போதே உத்தரவையும் பிறப்பித்தார்.

இரவு அங்கே தங்கியிருக்கும் போது தேவி கேட்டாள். “புதிதாகக் கட்டப்படும் பெருவுடையார் கோயில் முடிவடைந்தவுடனேயே சோழ நாட்டில் பல கோயில்கள் கட்டத் திட்டமிட்டிருக்கிறீர்கள் போலிருக்கிறதே!”

“ஆமாம்: அங்கே பெரிய கோயில் திருப்பணி முடிந்தவுடன், சிற்பிகளுக்குத் தொடர்ந்து பணி தரவேண்டும். என் தந்தை, அக்கையார், பாட்டனார், முப்பாட்டனார் செய்த கோயில் அறப்பணிகளைத் தொடர்ந்து பல கோயில்களைப் புதுப்பிக்க பேண்டும். பல ஊர்களில் புதிய கோயில்கள் கட்ட வேண்டும். சிற்பிகளின் திறமையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சோழ நாட்டில் தங்கள் புலமையைத் தெரிவிக்கக் கலைஞர்களுக்கு வாய்ப்பில்லாவிடில் அவர்கள் வேற்றிடங்களுக்குச் சென்று விடுவார்கள்” என்றார்.

பஞ்சவன் மாதேவி அரசரின் விழிகளை நேருக்கு நேர் பார்த்து,“அந்தக் கோயில்கள் கட்டப்படும்போது அருகிருந்து மேற்பார்வையிடத் தக்கவர்கள் வேண்டுமல்லவா?” என்று கேட்டாள்.

“ஆமாம், அதிலென்ன சந்தேகம்? கோயில் எழுப்புவது காலாகாலத்துக்கு அழியாத புகழைத் தரும் திருப்பணி. அவை செவ்வனே நடைபெற வேண்டும். பணியை மேற்பார்வையிட கலை உள்ளம்படைத்தவர் வேண்டும்.”

“ஆனால் இப்போது நீங்கள் இல்லாமலேயே, பெருவுடையார் கோயில் பணி செவ்வனே முடிவடைந்தது அல்லவா?”

“ஆமாம், எந்தப் பணியுமே அதில் ஈடுபாடு மிக்கவர் பார்வையில் நடைபெற வேண்டும். ஒரு போர்க்களம் போல என் தந்தையார் பல போர்களின் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார். நான் செவ்வனே முடித்தேன். அதுபோல நான் இல்லாமலேயே...”

“அதுபோல பெருவுடையார்க் கோயில் பணியை நம் இருபுதல்வர்களும் ஏற்றுக் கொண்டார்கள் அல்லவா?”

தேவியார் இப்படிக் கேட்டவுடன், இராசேந்திரன் அவளைத் திரும்பிப்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பார்த்து,“தேவி! உனக்குத் தெரியாதது போல் கேட்கிறாய். மூத்தவன் இராசாதிராசன் நம்முடன் வந்து, இப்போது சாளுக்கிய நாட்டிற்குச் சென்றிருக்கிறான். இளையவன் சுந்தரன் மதுரையில் இருக்கிறான். உனக்குத் தெரியும், நடுப்பிள்ளை ஆதித்தன் தஞ்சையிலும் பழையாறையிலுமாக இருந்து நாட்டு நடப்பைக் கவனிக்கிறான். வீரமாதேவி அங்கு இல்லாமலிருந்திருந்தால் கோயிலும், நகரமும் சிறப்பாகப் பூர்த்தியடைந்திருக்குமா?” என்று கூறிய அரசர் தன் விழிகளை மூடிச் சிறிது நேரமிருந்த பிறகு மெல்ல முணுமுணுத்தார்: “அவள் ஆர்வமும், உற்சாகமும் உழைப்புமே இப்பெரும் திருப்பணி நிறைவேறக் காரணம்”.

அதைக் கேட்ட பஞ்சவன் மாதேவி, அரசரின் கருத்தை ஏற்றுக் கொள்ளாதவள் போல முகத்தைச் சுளித்துக் கொண்டாள். அதையும் அரசர் கவனிக்கத் தவறவில்லை. தேவி, இந்தப் பேச்சைத் தொடங்கும்போதே, அவள் உள்ளத்தைப் புரிந்து கொண்டுவிட்டார் அரசர்.

பஞ்சவன்மாதேவி மேலும் பேச்சைத் தொடர்வதற்கு முன்பே,“கங்கை யாத்திரைக்கு வீரமாதேவியை அழைத்து வராததற்கு அதுதான் காரணம். பொறுப்புள்ளவர்கள் அங்கு இல்லாதிருந்திருந்தால் குறுகிய கால அளவில் அந்த மகத்தான கோயில் திருப்பணி நிறைவேறியிருக்காது.” என்றார்.

‘ஹும்’ என்ற பெருமூச்சுடன் “ஏரியை அந்த நகரத்துக்கு அருகே வெட்டச் சொன்னது நான்தான், தெரியுமா? குடிக்கத் தண்ணீர் இல்லாமல் என்ன கோயில், என்ன நகரம், ஹும்?”

பஞ்சவன் மாதேவியின் குரலில் இருந்தது பெருமையா – பொறாமையா அல்லது வெறுப்பா என்பதைப் புரிந்து கொள்ள முடியாத அரசர்,“தேவி! எல்லாம் உன் திட்டம்தான். அங்கே கட்டப்பட்டுள்ள பெரிய கோயிலின் பெருமை உனக்கும் சேர்ந்ததுதானே?” என்றார், மெல்லிய புன்னகையுடன், தேவியின் முக உணர்ச்சியைக் கவனமாக நோக்கியவாறு.

“அப்படி நீங்கள் நினைப்பது உண்மையானால் எனக்குப் பெருமையாக இருக்கிறது. இப்போது சொன்ன கருத்தை உறுதிப்படுத்தினால் நான் மிக மகிழ்வேன்!” என்றாள்.

“உறுதிப்படுத்த வேண்டுமா?” வியப்புடன் கேட்டார் அரசர்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“ஆமாம்: என்றென்றும் தங்கள் புகழ் நின்று நிலைத்திருக்கும் வகையில் கட்டப்பட்டிருக்கும் அந்தக் கோயிலுக்குள்ள பெருமை எனக்கும் சேரும் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.”

“ஓ! அதற்கென்ன தடை? உன் பெயரைக் கல் எழுத்தில் பொறித்து விடுகிறேன்.”

“போதாது...”

“என்ன செய்ய வேண்டும்?”

“அந்தக் கோயில் சாசனங்களில் என் பெயர் மட்டுமே இருக்க வேண்டும்”

ஒரு கணம் இராசேந்திரன் திடுக்கிட்டார். உணர்ச்சியை வெளியே புலப்படுத்திக் கொள்ளவில்லை. உடனே மறு மொழியும் கூறவில்லை.

“என்ன, மௌனமாகி விட்டீர்கள்? என் பெயர் மட்டுமே எப்படிக் கல்லில் எழுதமுடியும், விரமாதேவியின் பங்கும் அங்கு நிறைய இருக்கிறதே என்றுதானே நினைக்கிறீர்கள்?” என்றாள்.

‘இராசேந்திரன் தேவியைக் கூர்ந்து நோக்கினார். “நீயே எல்லாவற்றிற்கும் சமாதானமும், மறுமொழியும் வைத்திருக்கிறாயே. நீ கேட்டதற்கு சரியான மறுமொழியும் நல்ல வழியும் நீயே சொல்லு” என்றார்.

“ஆகாகா - இப்படிச் சொல்லித் தப்பப் பார்க்காதீர்கள். எனக்குத் தெரியும். அந்தக் கோயிலுக்கு வீரமாதேவியின் பெயரை வைக்கப் போகிறீர்கள்?”

இராசேந்திரன் தலையை அசைத்தார்.

“என் அருமை தேவி! நீ நினைப்பது தவறு. கோயிலுக்கும், நகரத்திற்கும் என்ன பெயரிடலாம் என்பதை முடிவு செய்யும் உரிமை என்னிடம் மட்டுமில்லை” என்று சொன்னபோது பஞ்சவன்மாதேவி அரசரை அதிர்ச்சியுடன் நோக்கி,“நீங்கள் இப்படிச் சொல்வீர்கள் என்று எனக்குத் தெரியும். சோழ நாட்டின் சக்கரவர்த்தி யாரிடம் கேட்க வேண்டும்? கோயிலுக்குப் பஞ்சவன் மாதேவீச்சுரம் என்று பெயர் சூட்டவேண்டும் என்ற என் கோரிக்கையை - இல்லை இல்லை என் உரிமையை – நிறைவேற்றுவதாக நீங்கள் உறுதிப்படுத்த வேண்டும். உறுதி தவறாதவர்கள் நீங்கள். சுந்தர மூர்த்தி சுவாமிகள் வரலாறு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அறிந்தவர்கள்” என்றாள்.

இராசேந்திர சோழ தேவர் முடிவு ஏதும் கூறவில்லை. தன்னை மிக இக்கட்டான நிலையில் நிறுத்தியிருக்கிறாள் என்று முடிவு செய்தார்.

“தேவி! நீ சொல்வது போல் என் தீர்ப்பை எதிர்ப்பவர் யாருமில்லை. ஆனால் முதல் அமைச்சரையும் மந்திரி மண்டலத்தாரையும் கேட்க வேண்டுமல்லவா? அவர்களுக்கும் மேலாக, நம் குருநாதர் கருவூர்த் தேவரைக் கேட்க வேண்டாமா? பெரிய கோயில் அவர் அருளாலும், ஆசியாலும் மட்டுமே உருவாகியிருக்கிறது என்பது உனக்குத் தெரியாதா?”

சக்கரவர்த்திகள் கூறியது கேட்டவுடன், பஞ்சவன் மாதேவி உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

‘கருவூர்த் தேவரிடம், நம் எண்ணத்தை எடுத்துச் சொல்லி நிறைவேற்றுவோம்’ எனத் தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டாள்.

இராசேந்திர சோழ சக்கரவர்த்திகளின் பரிவாரம் கங்கை நீர் சுமந்த குடங்களுடன் வந்து கொண்டிருக்கும் செய்தி சோழ நாடெங்கும் பரவியது.

தஞ்சாவூருக்கு வருகிறாரா, பழையாறைக்கு வருகிறாரா என்று தெரியாமல் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதச் செய்தியைப் பரப்பி வந்தனர்.

பழையாறையில் அரிந்தவன் மாதேவியின் மாளிகையில் அமைச்சர் பெருமக்கள், இளவரசர் அனைவரும் கூடினர். அரசர் வந்து கொண்டிருக்கும் செய்தி அரசரின் இளைய மகன் இராச மகேந்திரனுக்குத் தெரிவிக்கப்பட்டது. இராசமகேந்திரன் மிக வேகமாக இயங்கினார். அரசகுருவும், சோதிடரும் பழையாறைக்கு வந்து சேர்ந்தனர். பழையாறையில் நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்திற்கு வருமாறு, வீரமாதேவிக்கு அழைப்பு அனுப்பவில்லை. அரிந்தவன்மாதேவி தடுத்து விட்டாள்.

குடமுழுக்கு விழாவின் பணியில் ஈடுபட்டிருந்த வீரமாதேவி, சக்கரவர்த்திகள் முதலில் கோயில் குடமுழுக்கு விழாவிற்குத் தான் வரப்போவதாக எண்ணியிருந்த வீரமாதேவி, வரவேற்பிற்காக ஏற்பாடுகளைச் செய்வதில் முனைந்தாள். ஆனால், அவள் மனச்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சோர்வுடனிருந்தாள். கருவூர்ச் சித்தர் கூறிய வார்த்தைகள் கலக்கத்தை அளித்தன. கோயிலுக்கும் நகரத்திற்கும் தன் பெயரை சூட்டவேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பிய சிற்பி மாணிக்க சேகரனிடம் தன் மனவருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டாள்.

இருவருக்கும் விவாதம் முற்றியது. “உங்கள் நன்மைக்காகவே, நான் அவ்வாறு சொன்னேன்” என்று மாணிக்க சேகரன் கூறியவுடன், வீரமாதேவி சீற்றத்துடன் “சோழ அரசியும் இளவரசியும் கோயிலுக்கும், நகரத்திற்கும் தங்கள் பெயரிட வேண்டும் என்று போட்டியிடுகிறார்கள். இதற்கிடையே என் பெயரா? எனக்கென்ன தகுதி?” என்றாள்.

மாணிக்க சேகரன் சிரித்தவாறே,“தகுதியா? சக்கரவர்த்திகளின் அன்பை அதிகம் பெற்றிருக்கிறீர்கள். அது ஒன்றே தகுதி. மற்றவர்களிடமில்லாத மற்றொரு பெரும் தகுதியும் தங்களிடமிருக்கிறது” என்று கூறிச் சற்று நிறுத்தி வீரமாதேவியைக் கூர்ந்து நோக்கினான். ‘அதென்ன?’ என்று புருவம் உயர்த்திய வீரமாதேவியை நோக்கிக் கூறினான்.

“அதுதான் தங்கள் இளமை. தங்கள் அழகிலும் இளமையிலும் மயங்கித்தான் அரசர் இந்தக் கோயிலைக் கட்டினார். அதற்குப் பரிசாகத் தங்கள் பெயரைச் சூட்டுவதுதான் முறை: நியாயம்-.”

அழகு இளமை –

மாணிக்க சேகரனின் பேச்சைக் கேட்டு வீரமாதேவி சீறினாள். கடுஞ்சசொற்களை வீசினாள். மாணிக்க சேகரனை அந்த இடத்தை விட்டுச் செல்ல உத்தரவிட்டாள்.

சோழத் தலைநகர் தஞ்சைபுரிக்கு வந்து அரியணையில் அமர்ந்தபிறகே புதிய நகரத்திற்குள் செல்ல வேண்டும் என்று ஈசான சிவ பண்டிதர் சொல்லிவிட்டார்.

அரிந்தவன்மாதேவி அதற்குச் சம்மதிக்கவில்லை. “பழையாறைக்கு வந்து, என்னைப் பார்த்துவிட்டு என் உடல்நலம் கேட்டறிந்தே, அரசர் தஞ்சாவூருக்குச் செல்வார் என்ற செய்தி எனக்குக் கிடைத்து விட்டது. அதை மாற்றாதீர்கள்”என்று அரிந்தவன் மாதேவி கூறினாள்.

வீரமாதேவியிடம், இந்தச் செய்தி தெரிவிக்கப்பட்ட போது கருவூர்ச்சித்தர் அங்கு இருந்தார்.

“பழையாறைக்கு நாம் செல்வோம். சக்கரவர்த்திகள் கங்கை விநாயகர் சிலையைக் கொண்டு வருகிறார். அதைப் பழையாறையிலேயே

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

நிலைபெறச் செய்வோம்” என்றார் சித்தர். கருவூர்த் தேவர் வீரமாதேவியைத் தனியே சந்திக்கும் சிறிது நேரத்தில் அவர் புன்முறுவல் பூப்பார். வீரமாதேவி கவலை தோய்ந்த முகத்துடன் ‘இல்லை இல்லை’ என்று தலையை அசைப்பாள்.

“உங்கள் திருப்பாதம் பிடித்துக் கெஞ்சுகிறேன். கருணை கூர்ந்து கோயிலுக்கு என் பெயரை இடாதீர்கள்” என்று கண்ணீர் மல்கக் கூறுவாள்.

சித்தர் நகைத்தவாறு “வீரமாதேவி! பெயரிடுவது என் உரிமையா? சோழ சக்கரவர்த்திகள் என்ன சொல்கிறாரோ, அதுதான் இறுதி – உறுதி” என்று கூறுவார்.

“சக்கரவர்த்திகளிடம் உங்கள் கருத்தைச் சொல்லாமல் இருங்கள்: இதுவே நீங்கள் எனக்குச் செய்யம் பேருதவி” வீரமாதேவி மன்றாடுவாள்.

“நீ ஏன் மறுக்கிறாய்? அரிந்தவன்மாதேவியும், பஞ்சவன் மாதேவியும் தங்கள் பெயர் சூட்டப்பட வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். உனக்கு உரிமையில்லையா?” என்று சித்தர் கேட்டார்.

“அந்தப் பெருமை அவர்களுக்கே சேரட்டும்!”

“அரசர் வற்புறுத்தினால்?”

“மறுப்பேன், எதிர்ப்பேன்”

“நான் சொன்னால்?”

“சுவாமி! அதனால்தான் தங்களைப் பணிவுடன் வேண்டுகிறேன். என் பெயரிட வேண்டாம் என்று மன்றாடுகிறேன்.”

“தஞ்சாவூரில் இளவரசிகள், அரசியார் எதிரே ஒரு சபதம் செய்தாயே, நினைவிருக்கிறதா?”

“ஆமாம், என் பெயர் அழியாதிருக்கும் ஓர் அரிய செயல் புரிவேன் என்று சொன்னேன். கோயில் ஒன்று கட்ட வேண்டும் என்று எண்ணமிருந்ததைச் சொன்னேன். இப்போது என் அறிவு வளர்ந்து விட்டது. உங்கள் கருணைப் பார்வையினால் ஒரு முதிர்ச்சி ஏற்பட்டு விட்டது. சோழ சக்கரவர்த்தியின் பெயரோ, அரசியாரின் பெயரோ கோயிலுக்கு இடப்பட வேண்டுவதே நியாயம் என்று உணர்ந்து விட்டேன்.”

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

"ஒன்று செய்வோமா – அரிஞ்சயன் தேவியின் பெயரைச் சூட்டலாமா?"

"நான் கடுமையாக எதிர்ப்பேன்."

"சரி, சரி பெண்ணே! பழையாறையில் சக்கரவர்த்திகளைச் சந்திக்கும்போது முடிவு எடுப்போம். என் சொல்லைத் தட்டமாட்டான் இராசேந்திரன்."

"யார் சொன்னாலும் நான் மீறுவேன் - உறுதி."

வீரமாதேவியின் உறுதியான சொல்லைக் கேட்டுச் சிரித்தார் தனக்குள் நகைத்துக் கொண்டார்.

பழையாறை நகரம் விழாக் கோலம் பூண்டு திகழ்ந்தது. தில்லை அம்பலவாணரைத் தரிசித்து விட்டு இராசேந்திர சோழ தேவர் அங்கு வருகிறார் என்ற செய்தி எங்கும் பரவியது.

வீரமாதேவிக்கு வருத்தம், ஏமாற்றம். நேரே பெரிய கோயிலுக்கு வந்து, குடமுழுக்குச் செய்துவிட்டுப் பழையாறைக்குச் செல்வார் சக்கரவர்த்தி என எண்ணியிருந்தவள், சக்கரவர்த்தி பழையாறை சென்று, தஞ்சை சென்ற பிறகே இங்கு வருகிறார் என்று அறிந்தவுடன் ஏமாற்றத்தால் துடிதுடித்தாள்.

அரசர் அழைத்தாலும் பழையாறைக்குச் செல்வதில்லை என்று முடிவு கொண்டாள்.

'எனக்குப் பழையாறையில் என்ன வேலை? கோயில் திருப்பணி முடிந்து விட்டது. சித்தர் இருக்கிறார்: அரசி இருக்கிறார். உற்றார் உறவினர்கள் இருக்கின்றனர். அவர்கள் குடமுழுக்குப் பணியினைப் பார்த்துக் கொள்வார்கள்' என்று தனக்குள் பேசிக் கொண்டாள்.

அவள் ஓர் உறுதியான முடிவுக்கு வந்துவிட்டாள்.

# 85

## வீரமாதேவியின் எண்ண அலைகள்

மூங்கில்துறைக் கிராமத்திற்கு வீரமாதேவி வந்து இரண்டு நாள்காகி விட்டன. வந்தவுடனேயே கொள்ளிடக் கரைக்குச் சென்றாள். கரையோரமாக முன்பை விட மூங்கில் அதிகம் வளர்ந்து காற்றில் உராய்ந்து சரக் சரக் என்ற ஓசையை எழுப்பிக் கொண்டிருந்தது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பரிசல் துறையில் ஒரு பரிசல் மட்டும் மரக்கிளையில் கட்டப்பட்டு, ஆற்று நீரில் மெல்ல அசைந்து கொண்டிருந்தது. இரண்டு மூன்று பரிசல்கள் குப்புறப்படுத்துக் கிடந்தன. கண்ணுக்கெட்டிய தொலைவு வரை மக்கள் நடமாட்டமில்லை.

மூங்கில் துறைக் கிராமத்தில் வீடுகள் பொலிவிழந்திருந்தன. தெருக்களில் ஆள் நடமாட்டம் இல்லாததால் மண்மேடிட்டு புல்லும் முட்செடியும் முளைத்து நடப்பதற்கு ஓர் ஒற்றையடிப் பாதை மட்டும் நெளிந்து சென்றது.

மூன்று ஆண்டுகளில் மூங்கில் துறை பொலிவிழந்து விட்டதை எண்ணிப் பெருமூச்சு விட்டாள். சிதம்பரம் செல்பவர்கள், பரிசலில் இறங்கி அந்த வழியாகத்தானே சென்றிருக்க வேண்டும்?

தண்ணீர் பந்தல் இருந்த இடத்தில் உடைந்த பானைகள் மட்டுமே கிடந்தன. பரிசலிலிருந்து இறங்கி தண்ணீர்ப் பந்தலில் நீர் மோர் அருந்திச் செல்பவர்கள் யாருமில்லையா?

வீட்டு வாசலில் கோலமிட்ட நாள்களை நினைத்துக் கொண்டாள். அவளும் அவளுடைய இரு தோழிகள் முத்துவடிவும், கோதையும், வரைந்த கோலத்தின் நடுவே வைக்கப்பட்டிருந்த பூசணிப் பூவை அழகு பார்த்து, சுற்றி வந்து கை கொட்டிப் பாடுவார்கள். தானே இட்டுக்கட்டிய பாடலை இப்போது நினைத்துக் கொண்டாள்.

ஆடுங்கடி பள்ளுப் பாடுங்கடி

ஆதிரையான் பெயர் சொல்லுங்கடி

சூடுங்கடி மாலை சூடுங்கடி – அந்தத்

தூயோன் புகழ்பாடி ஆடுங்கடி.

“ஆகா – மனம் நிம்மதியாக இருந்தபோது பாடல்கள் தாமே கோவையாகத் துள்ளி வரும். அதற்கேற்ப மனத்திலே துள்ளிவரும் ஆசைகள், இலட்சியங்கள் வளரும்.

எவ்வளவோ கனவுகள்! வீட்டிலே அத்தையும், பாட்டனாரும் இருப்பார்கள். அவர்களின் அன்பு மழையில் நனைந்த காலம் இனி மீண்டும் வரப்போகிறதா? பாட்டனார் எவ்வளவு காலத்திற்குத் தான் இருக்க முடியும்? அவர் போய்ச் சேர்ந்தார். ஆனால், அத்தை…? அவர்கள் இன்னும் சில ஆண்டுகள் இருந்திருக்கலாம். பழையாறையில்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

எனக்காகக் கட்டப்பட்ட புதிய வீட்டில் என்னைப் பற்றி அவர்களுக்குக் கவலையுடன் காலங் கழித்தாள். அரண்மனை வாழ்க்கை அவர்களுக்குப் பிடிக்கவில்லை.

'பெண்ணே! பார்த்துப் பிழைத்துக் கொள். உன் நடனம் - நாட்டியம் - பாட்டு – கலை ஆசை எல்லாம் நிம்மதியான வாழ்க்கைக்கு உதவுமா என்பதை அமைதியாகச் சிந்தித்துப்பார்' என்று அடிக்கடி சொல்வாள். அவர்கள் கூறியதுதான் உண்மையா? எதை நம்பி கிராமத்தை விட்டுப் பிரிந்தோம். அரண்மனை வாழ்க்கை சுகபோகங்கள் எனும் மாயையில் சிக்கினோமா? இல்லை, இல்லவே இல்லை. என் அத்தைக்குத் தெரியும். அவர் இளவரசராயிருந்த போது சிதம்பரத்தில் சந்தித்ததை அத்தை அறிவார்கள். நான் அரண்மனைக்குள் நுழைந்தவுடனையே அங்கிருந்த சூழ்நிலையை அறிந்தேன், அத்தையிடம் சொல்லியிருக்கிறேன். என் கலைப் புலமைக்காக என்னை இளவரசர் தன்னுடன் சேர்த்துக் கொண்டாரா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அவர் ஓர் உயர்ந்த மனிதர். மன்னர்களுக்கும் மேற்பட்டவர். அவரை இராசேந்திரன் என்று அழைப்பது மிகமிகப் பொருத்தம்.

கலைக்காகவே வாழ்க்கையை அர்ப்பணிக்க முன் வந்தவன் நான் என்பதை அவர் உணர்ந்து கொண்டார். என் இளமைத் தாகத்தை அடக்கிக் கொண்டதற்குக் காரணத்தை அவர் உணர்ந்திருக்க வேண்டும். என் வேண்டுகோளை, சபதத்தை அவர் ஏற்றுத் தன் உணர்ச்சியை அடக்கிக் கொண்டு என் விருப்பப்படி நடக்க ஒப்புக் கொண்டாரே, அது மாபெரும் தியாகமல்லவா?

என் மூலம் வாரிசு உருவாகி வருங்காலத்தில் சோழ நாட்டிற்கு எந்தவிதத் தொல்லையையும் கொடுக்கக் கூடாது என்பதற்காக நான் அவருடன் ஒன்று சேர்வதைத் தவிர்த்தேன். அதற்காகவே சபதம் செய்தேன். அதை ஏற்றிருக்க வேண்டும் என்ற கட்டாயம் ஏதுமில்லை. அவர் சோழ நாட்டு மாமன்னராக மகுடம் சூட்டிக் கொண்ட பிறகும், அவர் என்னை ஒதுக்கியிருக்கலாம்: என்னைப் போன்ற இளமையும் அழகும் நிறைந்த மகளிர் அவருக்குக் கிடைக்காமலா போயிருப்பார்கள்? அதனால் தான் சொல்கிறேன்: அவர் ஒப்புயர்வற்ற மாமனிதர்: அரசர்களுக்குள் இந்திரன், இராசேந்திரன்!

வீரமாதேவி வாய்விட்டுப் பேசிக் கொண்டிருந்தாள். "சுற்றிலும் பல காத தூரத்துக்கு ஓர் உயிரினம் கூட இல்லை. மனத்திற்குள்ளே நினைத்து நினைத்து உருகிப் புதைத்து வைத்திருப்பதால் உள்ளத்துக்கும், உடலுக்கும் தான் வேதனை. மனம் விட்டுப் பேசுவோம்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

யாருடன் பேசுவது? அன்று என் அருமை நாகு இருந்தது. என்னிடம் அந்தக் கன்று எவ்வளவு பிரியம் வைத்திருந்தது? என் மனக் குறையை நான் நாகுவிடம் தான் கூறி ஆறுதல் பெறுவேன். என் ஆருயிர்த் தோழியாயிருந்த கோதை கல்யாணம் செய்து கொண்டு வேற்றூர் சென்றுவிட்டாள். முத்துவடிவு மட்டும் இருந்தாள். அவளும் இப்போது இங்கில்லை. அப்போதே அவளுக்கு இலேசான பொறாமை உதயமாயிருப்பதை அறிந்தேன். புழக்கடைக்குச் சென்று நாகுவிடம் மனம் விட்டு வாய் திறந்து பேசுவேன். அதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்?

"என் அருமை நாகு" என்று கன்றின் கழுத்தை மெல்ல வருடி,"நாகு, நாகு! எனக்கு ஏன் இப்படி ஒரு வேதனை ஏற்பட்டிருக்கிறது?" என்று கேட்டிருக்கிறேன். இராசேந்திர சோழ தேவரைச் சந்தித்த சில நாள்களிலேயே கேட்டிருக்கிறேன். அப்போது ஒருவித வேதனை. இப்போது ஒருவித வேதனை. காதல் முளைவிட்டு விரியும் சமயம் ஏற்பட்ட அந்த வேதனை பற்றி நான் நாகுவிடம் கேட்டபோது அது விழிசாய்ந்து என்னைப் பார்த்தது.

"நான் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறேன். முன்பு போல் நீ இல்லை!" என்றது. "என்னிடம் என்ன மாறுதலைக் கண்டாய்?" என்று நாகுவிடம் கேட்டது இப்போது நன்றாக நினைவிற்கு வருகிறது.

"இவ்வளவு நாள்களாக நீ என்னைக் கவனித்தாயா? சில நாள்களாக நீ யாருடனும் பேசாமல் உன்மத்தம் பிடித்தவள் போலிருக்கிறாயே?" என்று நாகு என்னைப் பார்த்துக் கேட்டது. இப்போது நாகு இருந்திருந்தால் என்ன கேட்டிருக்கும்?

"வீரம்மா – வீரம்மா! இளவரசரின் கருணை விழிப்பார்வை பெற்றுவிட்ட உனக்கு என்ன குறை?" என்று அன்று கேட்டேன். நீ இளவரசரின் கருணை விழிப்பார்வை பெற்று, அவர் இதய அரியணையில் ஏறி அமர்ந்து, மற்ற அரசிகள் பொறாமைப்படும் நிலையை அடைந்தாய். அரசர் உன்னிடம் மயங்கி, உன்னை விட்டுப் பிரியாமலே இருந்தது மற்றவர்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. அதற்காக நீ ஒரு சபதம் செய்தாய்" என்று நாகு கூறியிருக்கும்.

என் ஆசை நாகுவுக்கு அவ்வளவுதான் தெரியும். அந்தப்புரத்து மற்ற இளவரசிகளுக்கும், பட்டத்து அரசிக்கும் எந்தவிதத் தொல்லையும் கொடுக்காமல் நான் ஒதுங்கியது நாகுவுக்குத் தெரியாது.

மாளிகை வாழ்க்கையை உதறிப் பழையாறைக்கு வந்தது அதற்குத்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தெரியாது. இளவரசர் அரசரானார். அவர் இலட்சியத்தை நான் புரிந்து கொண்டேன். அழியா அற்புதக் கலைச் சின்னம் படைக்கும் பொறுப்பை நான் ஏற்றேன். அதற்கும் எவ்வளவு இடையூறு ஏற்பட்டது என்று நாகுவுக்குத் தெரியாது. “நாகு, நாகு! நீ இருந்திருந்தால், தஞ்சை புரியைவிட மிகவும் சிறந்த கோயிலை நான் தன்னந்தனியாளாய் படைத்ததைத் தெரிந்து கொண்டிருப்பாய். நாகு! நீ இங்கு இருந்திருந்தால் உன்னைத் தூக்கிச் சென்று, புதிதாகக் கட்டப்பட்ட பெரிய கோயிலில் விட்டிருப்பேன். துள்ளித் துள்ளி நீ திரிந்து திருச்சுற்றில் உள்ள சிற்பங்களைக் கண்டு வியந்திருப்பாய். இப்போது அங்கு படைக்கப்பட்டுள்ள சிற்ப அற்புதத்தை எப்படி நான் விளக்குவேன் நாகு?

நாகு, நாகு! சோழச் சக்கரவர்த்தி வடக்கே கங்கைக் கரைக்கச் சென்ற போது என்னை அழைத்துச் செல்லவில்லை. பட்டத்து அரசியைத்தானே அழைத்துச் சென்றார்? கங்கை நதியில் முறையாக, அரசியுடன் கை கோத்து நீராடினால் தானே புண்ணியம்? நான் என்ன முறையான உரிமை பெற்ற அரசியா? ஹூம் அது போகட்டும். நான் இரவு பகல் பாராமல் கோயில் கட்டும் பணியில் ஈடுபட்டிருந்தேன். தஞ்சைப் பெரிய கோயிலுக்கு இணையான ஒரு கோயிலை என் அன்பிற்குரிய அரசர் படைத்தார் என்ற பெருமையை நிலைநாட்ட விரும்பினேன். அந்தக் கோயிலின் விமானத்திலுள்ள கலசத்திற்குக்கங்கை நீரால் குடமுழுக்காட்ட விரும்பினேன். என் விருப்பமும், என்னவர் விருப்பமும் ஒன்றுபட்டது. அவர் வடக்கே புறப்பட்டார், கங்கை நீரைக் கொண்டு வர.

என் அருமை நாகு! இவையெல்லாம் உனக்குத் தெரியுமா? என் முயற்சியைத் தடுக்க இரண்டு பேரரசிகளும் திட்டமிட்டனர். அரிந்தவன் மாதேவிக்கு மட்டும் அதிகாரமிருந்தால் என்னை நாடு கடத்தியிருப்பாள். பட்டத்தரசிக்கு மட்டும் ஆணையிடும் ஆற்றலிருந்தால் என்னை மேலுலகுக்கே ஓட்டியிருப்பாள். எவ்வளவு இடையூறுகள்! ஆனால் எனக்குச் சித்தர் அருள் இருந்தது.

என் பிரியமான நாகுவே! தெய்வம் அனுப்பியது போன்று கருவூர்ச் சித்தர் வந்து சேர்ந்தார். அவர் தேவ தூதர்தான். அவர் அருள் ஆசி இல்லாவிடில் ஏதடி இந்தப் பெரிய கோயில்? எந்தவித இடையூறுமில்லாமல் முடிந்திருக்குமா?

என் உயிரான நாகு! எல்லாம் முடிந்து விட்டது. கோயில், நகரம், ஏரி எல்லாப் பணிகளும் வெற்றிகரமாக முடிந்துவிட்டன. என்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

உயிருக்குயிரான பேரரசர் வந்து கொண்டிருக்கிறார்: கங்கை நீரைக் கொண்டு குடமுழுக்கு நிகழ்த்த வந்து கொண்டிருக்கிறார்.

நாகு! இதைப் பார், இவ்வளவு பெரிய நகரமும், கோயிலும், ஏரியும் எற்பட யார் காரணம், சொல்லு?

நாகு! நீ இருந்திருந்தால், மாபெரும் வெற்றிக்கு நான்தான் காரணம் என்று என்மீதுள்ள தணியாத அன்பு காரணமாகக் கூறியிருப்பாய்!

நாகு! நான் காரணம் இல்லை. அடர்ந்த காட்டை அழித்து நகரமாக்கி, கோயில் கட்டவில்லை. கோயிலில் அற்புதச் சிற்பங்கள் அமைக்கவில்லை. கருவறையில் பெருவுடையாரை அமர்த்தவில்லை. தட்சிணமேரு போன்ற பெரும் விமானத்தைக் கருவறையின் மீது எழச் செய்யவில்லை.

நாகு! குறுகிய காலத்தில், வீதி, வீடுகள், என்று நகரம் பொலிவு பெற்றிருக்கிறது. அரண்மனை கட்டப்படுகிறது.

சோழ நாட்டின் தலைநகரத்தை இங்கே கொண்டு வந்துவிட வேண்டுமென்பது என் அரசரின் இலட்சியம். அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?

பெரிய கோயிலுக்கு அரிந்தவன்மாதேவீச்சரம், என்றும் அரிந்தவன் மாதேவிபுரம் என்றும் பெயர் சூட்ட வேண்டும் என்று பழையாறையிலிருந்து அரிந்தவன் மாதேவி ஆசைப்படுகிறாள். அதற்காகத் தன் சக்தி, அதிகாரம் முழுமையையும் பயன்படுத்துகிறாள். சக்கரவர்த்திகளுடனயே இருந்து வரும் அரசி பஞ்சவன் மாதேவி, பஞ்சவன் மாதேவீச்சரம் என்று கோயிலுக்குப் பெயரிடத் துடிக்கிறாள். அரசரிடம் வாக்குறுதி வாங்கி விடுவாள் போலிருக்கிறது.

ஆனால், நான் மதிக்கும் தேவதூதர் சித்தர் என் பெயரைச் சூட்ட முன் வந்திருப்பதை நான் ஏற்கவில்லை.

என்ன அப்படிப் பார்க்கிறாய், நாகு? வீரமாதேவீச்சரம் என்று பெயரிடுமாறு அரசரிடம் சொல்லப் போகிறாராம். வீரமாதேவிபுரம் என்று நகரத்திற்குப் பெயர் சூட்ட வேண்டுமாம்.

சோழநாட்டின்தலைநகரமாக வீரமாதேவிபுரம் விளங்க வேண்டுமாம்.

நாகு, என் அருமை நாகு! என் நெஞ்சை அடைக்கிறது. என் பெயரிலா? ஹூம் கூடவே கூடாது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

என் உள்ளத்தில் நிறைந்திருக்கும் என் ஆசை நாயகர், சோழச் சக்கரவர்த்தி இராசேந்திர சோழ தேவர் பெயரில் தான் நகரம்,ஏரி விளங்க வேண்டும். நான் சொல்வதை ஒருவரும் கேட்க மாட்டார்களே!

அதனால்தான் நாகு! நான் இரவோடு இரவாக அங்கிருந்து புறப்பட்டு விட்டேன். எங்கே செல்வது என்று ஒருகணம் யோசித்தேன். கண் காணாமல் போய்விடலாமா என்று நினைத்தேன்.

பழையாறைக்குச் சென்றுவிட்டு, சிதம்பரம் வந்து ஆடவல்லானைத் தரிசித்துவிட்டு பெரிய கோயிலுக்குக் குடமுழுக்கு செய்ய அரசர் வருவார். அப்போது நான் அங்கிருக்கக் கூடாது. தேடட்டும், என்னை நன்றாகத் தேடட்டும்.

குடமுழுக்குக்கு நாள் குறிப்பிட்ட சித்தர் என்னைத் தேடட்டும். அரச பரிவாரங்கள் அலையட்டும்.

முகூர்த்த வேளை தவறி விடக்கூடாது என்பதற்காக கோயில் விமானத்திற்குக் குடமுழுக்கும் பெருவுடையார்க்குச் சங்கு நீரால் புனித அபிஷேகமும் நடக்கட்டும்.

எந்தப் பெயரை வேண்டுமானாலும் சூட்டிக் கொள்ளட்டும். நான் யாருக்கும் போட்டியாக இல்லை என்பதை அப்போதாவது உணர்ந்து கொள்ளட்டும்.

வீரமாதேவிக்கு இட்ட பணி முடிந்து விட்டது என்ற மனநிறைவுடன் அரசர் மகிழ்வுடன் இருக்கட்டும்.

நான் நிம்மதியாக மூங்கில் துறையில் என் இறுதி நாளைக் கழிப்பேன்.

நாகு! நீ இப்போது இல்லை. உன்னைப் போல மற்றொரு கன்றைப் தேடிப் பிடிப்பேன்.

நந்தவனம் வைப்பேன். நாட்டியப் பணிக்கு என் வாழ்நாளை அர்ப்பணித்துக் கழிப்பேன். நாகு! இவைதான் நான் சொல்ல விரும்பியது. நீ இருந்திருந்தால் என்ன சொல்லியிருப்பாய்? கூடாது என்று தடுத்திருப்பாய். நீ யார் எனக்கு யோசனை கூற என்று உன்னை நான் கடிந்து கொண்டாலும் நீ என் உயிர்த் தோழி. நாகு! வரட்டுமா?”

வீரமாதேவி! கொள்ளிடக் கரையினின்று எழ முயன்றாள்.

“இன்னும் பேசு, தேவி! இன்னும் பேசு. உன் மனத்தில் உள்ளதையெல்லாம் கொட்டிவிட்டாய். அது நல்லதுதான். ஆனால், நீ

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

செய்தது சரியா என்று சற்று சிந்தித்துப்பார்!" என்ற குரல் கேட்டு வீரமாதேவி திடுக்கிட்டுத் திரும்பினாள்.

அமைதி மட்டுமே நிறைந்திருந்த, கொள்ளிடக் கரையில் காற்று வீசுவதால் எழும் பலவித ஓசைகள் மட்டும் நிறைந்த அந்தப் பகுதியில் யார் யார் என்னருகே?

வீரமாதேவி திரும்பிப் பார்த்தாள். அவள் அருமைத் தோழி முத்துவடிவு நின்றிருந்தாள்.

எழப்போன வீரமாதேவியை உட்கார வைத்து "உன்னை நான் இங்கே எதிர்பார்க்கவில்லை வீரம்மாள்! எப்போதோ ஒரு தடவை, மூங்கில் துறைக்கு வருவேன். நீ என்னை மறந்துவிட்டாய் என்று நான் வருத்தப்பட்டது உண்டு. ஆனால் காட்டுப் பகுதியைத் திருத்தி நகரமாக்கி கோயில் கட்டிப் பெரிய அற்புதம் செய்துவிட்ட உன் பெருமையைச் சோழ நாடே பேசுகிறது. குடமுழுக்கு நடைபெறும் நாளில் அங்கில்லாமல் நீ மூங்கில் துறைக்கு வந்துவிட்டாய். உன்னைத் தேடி அலைவார்களே – அதைப் பற்றிக் கவலைப்பட்டாயா? யாருடன் பேசிக் கொண்டிருந்தாய்? அருமை நாகுவுடனா? அத்துடன் நீ வாய்திறந்து பேசியதால் பல உண்மைகளை அறிந்தேன். வீரம்மா! வெண்ணெய் திரண்டு வரும் சமயம் தாழியை உடைக்கலாமா? உன் பெயரில் கோயில் நகரம் இவையெல்லாம் விளங்கினால் உனக்கென்ன இழப்பு? எங்களுக்கும் பெருமை இல்லையா? வா, போவோம். எழுந்திரு" என்று வற்புறுத்தினாள் முத்துவடிவு.

வீரமாள் தலையசைத்தாள். "நான் வரமாட்டேன். இங்கேயே இந்த ஊரிலேயே இருக்கப் போகிறேன். இனி எனக்கு அங்கு என்ன வேலை?" என்று சொன்னாள். அதில் வேதனை இல்லை. வீரமாதேவியின் தெளிவான உறுதியான குரல் கேட்டு முத்துவடிவு திகைத்தாள்.

## 86

# இனி அங்கே எனக்கென்ன வேலை?

வீரமாதேவியின் போக்கை மாற்ற முடியவில்லை. பகலெல்லாம் கொள்ளிடக் கரையில் வீற்றிருக்கிறாள். எப்போதாவது வரும் தோணியிலிருந்து இறங்குபவர்களைப் பார்த்தவாறு இருக்கிறாள். திடீரென்று சிரிக்கிறாள். கரை ஓரமாக நடந்துவிட்டு நீண்ட நேரம் கழித்துத் திரும்புகிறாள். வீட்டிற்கு வந்து, விளக்கேற்றி, நடுக்கூடத்தில்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அமர்ந்து, பாட்டனாரை, அத்தையை நினைத்துக் கொண்டு பிரார்த்தனை செய்கிறாள்.

முத்துவடிவு எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். வீரம்மாள் கேட்கவில்லை.

'நான் நிம்மதியாக இருப்பது உனக்குப் பிடிக்கவில்யா?" என்று வீரம்மாள் முத்துவடிவை நோக்கிக் கேட்டாள்.

"இது நிம்மதியா? மக்கள் நடமாட்டமில்லாத கிராமத்தில் இருப்பது நிம்மதியா? மணல் ஆற்றங்கரையில் வீற்றிருப்பது நிம்மதியா? நீ ஒருவருக்கு மட்டுமன்று: பலருக்கு மறுமொழி கூற வேண்டியவள்" முத்துவடிவு சற்று அழுத்தமாகப் பேசிப் பார்த்தாள். வீரம்மாளின் மனத்தை மாற்ற முடியவில்லை.

"மணல் ஆறா – முத்துவடிவு? நாளைக்கே இதில் சுழன்று சுழன்று வெள்ளம் பெருக்கெடுத்தோடும். அதற்கு என்ன செய்யப் போகிறாய்? நான் சுழன்றோடும் ளௌத்தைப் பார்த்தபடியே கோடானுகோடி ஆண்டுகளுக்கு வீற்றிருக்கப் போகிறேன். நான் யாருக்கும் கட்டுப்பட்டவளல்லள் முத்துவடிவு! ஒரே ஒருவருக்குத்தான்..." வீரம்மாள் எங்கோ பார்த்தவாறு பேசினாள்.

"அந்த ஒருவரைப் பற்றித்தான் நான் சொல்கிறேன். அவர் உன்னைத் தேடமாட்டாரா?" முத்துவடிவு அவள் அருகே நெருங்கி அமர்ந்து அவள் முகவாயைத் தொட்டுக் கேட்டாள்.

அவள் கரத்தை விலக்கி, அவளிடமிருந்து சற்று விலகி நகர்ந்து உட்கார்ந்து,"அவர் என்னைத் தேடட்டுமே. நன்றாகத் தேடட்டும். தேட வேண்டும் என்று தான் நான் இப்படி யாருக்கும் தெரியாத இடத்திற்கு வந்தேன்."

முத்துவடிவு சற்று நகைத்து,"மூங்கில்துறை யாருக்கும் தெரியாத இடமா? சோழச் சக்கரவர்த்திகளுக்குப் பட்டிதொட்டிகளிலெல்லாம் ஆள்கள் இருக்கிறார்கள். இவ்வளவு நேரம் செய்தி போயிருக்கும். கரி, பரி, தேர், ஆள்படைகளுடன் வந்து விடமாட்டாரா?" என்று பயமுறுத்துபவள் போல் பேசினாள்.

"வரட்டுமே! அவர் இப்போது வரமாட்டார். பௌர்ணமி அன்று பெரிய கோயில் குடமுழுக்கு நடைபெற்றாக வேண்டும். அதைக் கவனிப்பாரா? என்னைத் தேடுவாரா? அவர் என்னைத் தேடமாட்டார் என்று எனக்குத்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தெரியும்” சோர்வுடன் பேசினாள்.

“வீரம்மா! ஏன் இப்படித் தோல்வி மனப்பான்மையுடன் பேசுகிறாய்? நீ இல்லாமல் குடமுழுக்கு இல்லை: கோலாகலம் இல்லை: கொண்டாட்டம் இல்லை.”

“நானில்லாமலா?” வீரமாதேவி சிரிக்கிறாள். அதில் விரக்தி மேலிட்டிருந்தது,“முத்துவடிவு! உனக்குத் தெரியாது. இப்போது என்னை எல்லாரும் வெறுக்கிறார்கள். கோயிலுக்கு என் பெயர். நகரத்திற்கு என் பெயர்-ஏரிக்கு என் பெயர் சூட்டி மகிழப் போகிறேனாம் நான். அரசி பெயர் வருவதை நான் தடுக்கிறேனாம். பெரிய இளவரசியார் இருக்கிறாரே அரிந்தவன் மாதேவி, அவரே தன் பெயர்தான் சூட்டப்பட வேண்டும் என்று தன் முழு அதிகாரத்தையும் வெளிப்படுத்த முயல்கிறார்…”

“நீ என்ன சொல்கிறாய்?”

“சக்கரவர்த்திகள் பெயர்தான் சூட்டவேண்டும். அதுதான் நியாயம். நான் நினைப்பதும் சொல்வதும் யாருக்குத் தெரியும்? சித்தர் கூட எனக்கு விரோதமாகி விட்டார். அதனால் தான் நான் கண்காணா இடத்திற்கு வந்துவிட்டேன்”

“சித்தர் உனக்கு விரோதமாகவா பேசுகிறார்?”

“ஆமாம்.”

“என்ன சொல்லிவிட்டார்? என்ன செய்துவிட்டார்? கோயில் எழ, நகரம் எழ, ஏரி வெட்ட அவர்தானே உன்னைத் தூண்டி உனக்கு ஆசிவழங்கி, உனக்கு உறுதுணையாக இருந்தவர். அவர் எப்படி…”

“முத்து! என் பெயரைத்தான் இட வேண்டுமென ஒற்றைக் காலால் நிற்கிறார். வீரமாதேவீச்சுரம், வீரமாதேவிபுரம், வீரமாதேவி பேரேரி என்று பெயரிட வேண்டும் என்று சக்கரவர்த்திகளிடம் வற்புறுத்தப் போவதாகச் சொல்கிறார். சக்கரவர்த்திகள் சித்தர் சொற்படியே நடப்பார்.”

“என்னமோ ஏதோ என்று பயந்து விட்டேன்! இளவரசி வீரமாதேவி அவர்களே! உன் பெயர் என்றென்றும் நின்று நிலவ வேண்டாமா?”

“வேண்டாம். நான் என்ன செய்துவிட்டேன்? என் பெயர் காருள்ளளவும், கடல் நீருள்ளளவும் நின்று நிலவ?”

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“என்ன செய்யவில்லை, சோழச் சக்கரவர்த்தி எனும் மத களிற்றை உன்னிடம் பணிய வைத்து விட்டாயே, அது போதாதா? பெரும் கானகமாக இருந்த இடத்தைத் திருத்தி – அப்பப்பா! எவ்வளவு பெரிய கோயில்! அதைத் தன்னந்தனியாய்க் கட்டிமுடித்து விட்டாயே, அது போதாதா? தஞ்சைபுரியை விடப் பெரிய நகரத்தை உருவாக்கி விட்டாயே, அது போதாதா?” இவை எல்லாமே தன்னந்தனியாளாய் நின்று நீ நிகழ்த்திய சாதனைகள் தாமே!”

“ஏய் முத்துவடிவு! மேலும் பேசினால் கழுத்தைப் பிடித்து உன்னைக் காததூரம் தள்ளிவிடுவேன். கோயிலும், நகரமும், ஏரியும் என்னால் மட்டுமே எழுந்தனவா? எங்கள் பேரரசரின் சக்தியல்லவா?”

“இருக்கலாம்:அசட்டுப் பெண்ணே! நான் சொல்கிறேன், பேசாமல் சித்தர் சொற்படி கேள். காரணமாகத் தான் சொல்கிறேன். உன் பெயர் ஒன்றுதான் நிலைக்கும்”

“வேண்டாம்: என் பெயர் நின்று நிலைக்க வேண்டாம்”.

“ஏதோ சபதம் செய்ததாக முன்பு கூறினாயே?”

“பக்குவமற்ற பருவம். இளமையின் வேகம். சக்கரவர்த்திகள் என் ஒருத்திக்கு மட்டுமே சொந்தம் என்று நினைத்த இறுமாப்பு! பிறகு, அந்தச் சபதத்தை மாற்றிக் கொண்டேன். அதிசயம் வேறு ஒன்றும் செய்தேன் தெரியுமா?”

சொல்லி நிறுத்திய வீரமாதேவி அதிசயிக்கும்படி முத்துவடிவு சொன்னாள்: “உன் மூலம் வாரிசு ஏற்படாமல் இருக்க கடினமான முடிவு எடுத்தாயாமே! என்ன நியாயம்? உன்னுடைய இளமையை இப்படிப் பலி கொடுக்கலாமா? நான் ஒரு சமயம் நினைத்தேன், சக்கரவர்த்திக்கு சகலவிதத்திலும் இன்பம் தர ஏற்றவள் நீ என்று. ஓர் அற்புதமான குழந்தையைப் பெற்றெடுத்துத் தரப் போகிறாய் என்று. சோழ நாட்டில் பல ஆண்டுகளுக்குப் பிறகு சின்னஞ் சிறு குழந்தைக்குத் தொட்டிலிடுவிழா:பெயர் சூட்டுவிழா என்று கோலாகலமாக நடைபெறப் போகிறது என்று கனவு கண்டேன். என்னைப் போல் பல ஆயிரம் சோழ மக்கள் எதிர்பார்த்திருப்பார்கள். அரசரிடம் நீ சபதம் செய்தது அறிந்தவுடன் நான் மயங்கி விழாத நிலைதான்”.

“முத்து! இந்த உடல் அழகு, இளமை எல்லாவற்றையும் ஆண்பெண் சேர்க்கைக்காக மட்டுமா இறைவன் படைத்தான்? இந்த ஜீவன் அதற்கு மட்டும் ஏங்கவில்லை. இதயக் கூட்டிலுள்ள பறவை கேட்பது என்ன

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தெரியுமா? அது பெறவிரும்பும் அன்புப் பரிசு எது தெரியுமா?”

“வீரமாதேவி! பெரிய பெரிய தத்துவங்கள் பேசுகிறாய். எனக்கு அவை ஒன்றும் புரியாது. ஓர் ஆண் பிறந்தவுடன் அவனுக்காக ஒரு பெண்ணை ஆண்டவன் உடனே படைத்து விடுகிறான். இருவரும் எங்கோ வளர்கிறார்கள். பிறகு பக்குவமாக ஒன்று சேர்கிறார்கள். இன்பம் துய்க்கிறார்கள். சுகம் அனுபவிக்கிறார்கள். சந்ததியைப் பெருக்க ஒன்று கூடுகிறார்கள். மக்களைப் பெறுகிறார்கள். அவர்களைப் பாலூட்டித் தாலாட்டி வளர்க்கிறார்கள். வீரமாதேவி உடல் அவயவங்கள் எல்லாம் எதற்காகப் படைக்கப்பட்டன என்பது உனக்குத் தெரியாதா? சின்னஞ் சிறுவயதில் நாம் கொள்ளிட மணலில் விளையாடுவோம். நான் அப்பாவாக இருப்பேன். நீ அம்மாவாக இருப்பாய். மரப்பாவையை வைத்துக் கொண்டு நீ என்ன செய்வாய்?”

“சீ, அந்த விளையாட்டை எல்லாம் இப்போது நினைவுபடுத்துவதற்கு என்ன காரணம்? அப்படியே நினைவுபடுத்தினாலும் நான் இப்போது முற்றிலும் விவரம் அறிந்தவள்.”

“வீரம்மா! பெண்களுக்கு ஏற்பட்ட நகில்கள் யாருக்காக ஏற்பட்டன தெரியுமா? ரகசியமாக நான் அப்போது கேட்பேன், நினைவிருக்கிறதா? உன்னை மணக்கப் போகிற ஆணழகன் பாக்யசாலி. உன் அழகை அணு அணுவாக ரசிப்பான். கமலப்பூ விழிகளையும், எள்பூ நாசியையும், கோவைப்பழக் கன்னங்களையும், பவழ உதடுகளையும், யானைத் துதிக்கை போன்ற கரங்களையும், வாழைத் தண்டு போன்ற உன் சிவந்த அழகிய தொடைகளையும் கொள்ளிடச் சுழல் போன்ற உன் நாபிக்கமல அழகையும், செவ்விளநீர் போன்ற இரண்டு தனங்களையும், தோள்களையும், பொய்யோ என்று சொல்லும்படியான இடையையும், நடனமிடப் படைக்கப்பட்ட பொற்பாதங்களையும் உன்னை மணக்கப் போகும் ஆணழகன் எப்படி எல்லாம் வர்ணிப்பான்! தனக்கே சொந்தமென்று மார்பு நிமிர்ந்து நடப்பான். ஆனால் - ஆனால் - வீரம்மா – உலகத்தில் உள்ள ஆண்களில் எல்லாரையும் விட ஆணழகனான மதுரன் என்ற பெயருக்கேற்றவனான மன்மதனையும் தோற்கடிக்கக் கூடிய அழகு நிறைந்தவரான மனிதர்தான். உன் ‘அவருக்கு’ அவர்தான் ஈடு. ஆனால் - ஆனால்” முத்துவடிவின் குரல் சோகம் இழைந்தது.

வீரம்மாள் தன் விழிகளின் கடைக்கோடியில் துளிர்த்த நீர்த்துளிகளை மெல்லத் துடைத்தவாறே,“சொல்லு, வடிவு! நிறுத்தி விடாதே. முதலில் அழகையும், கம்பீரத்தையும் பார்த்து நெஞ்சை அவரிடம் நழுவவிட்டேன். இளவரசராக அவர் அப்போது இருந்தார். அவருடைய

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கலைப் புலமையை ஆர்வத்தை அறிந்தவுடன் அவர் உள்ளத்தின் மீது நேசங் கொண்டேன். அவருடைய கலையைக் காதலித்தேன். அதன் விளைவுதான் பெரிய கோயில். இதில் என் சாதனை கடுகளவே. அவருடைய சாதனை விமானம் அளவு. தன் தந்தை கட்டிய பெரிய கோயிலுக்கு இணையாக ஒரு கோயிலைக் கட்ட வேண்டும் என்ற இலட்சியம் உடையவராகத் திகழ்ந்தது என் தூண்டுதலாலா? இல்லையே. அவர் உள்ளத்தில் நீண்ட நெடுநாள்களாக அந்த எண்ணம் ஊறிக் கிடந்தது. கடல் கடந்த நாடுகளுக்குச் சென்று புலிக்கொடியை நிலைநாட்டியதும், எட்டுத் திக்குகளிலும், சோழரின் புகழைப் பரப்பியதும், மற்ற மன்னர்களை அடிபணிய வைத்ததும், அவர் வீரத்தால் விளைந்தவை. போரும், பூசலும் நிலையானவை அல்ல. கலை ஒன்றுதான் அழியாதது என்பதை இளம் வயது முதலே கற்றுக் கொண்ட என் அரசர், தன் பெயரை நிலைநாட்ட விரும்பினார்: அதன் விளைவுதான் இங்கு ஒரு பெரிய கோயில்."

முத்துவடிவு குறுக்கிட்டாள்: "நீ சொல்வதை அப்படியே ஒப்புக் கொள்கிறேன். ஆனால், எண்ணத்துக்கு வடிவம் கொடுத்தது யார்? காட்டுப் பகுதியைத் திருத்தியது யார்? சிற்பிகளை வரவழைத்து அவர்கள் பணி தொய்யாமல் நடைபெறச் செய்தது யார்? கங்கைக் கரைக்கு அவர் சென்றாலும் அவருடன் செல்ல நினைக்காமல் இங்கே தங்கியிருந்து அழகிய கோயிலை அமைத்தது யார்? வீரம்மா! எல்லாரும் சொல்கிறார்கள். உயிருள்ள சிற்பங்கள் புதிய கோயிலில் இருக்கின்றனவாம். பெரிய லிங்கமாம். மேலே விமானம், தஞ்சைக்கு இணையாக இருக்கிறதாம். சுற்று மதிலுக்குப் பாறைகளை எங்கிருந்து கொண்டு வந்தாய்? அதுபோகட்டும். கோயிலைச் சுற்றி வீதிகள், வீடுகள் மளமளவென்று ஏற்பட்டன. இவையெல்லாம் உன் தனிப்பட்ட சாதனை. அப்படியிருக்கும்போது சித்தர் சொல்வது சரி: நகரத்திற்காவது உன் பெயரைச் சூட்ட ஒப்புக் கொள் வீரம்மா!" என்று அவர் கரத்தைப் பிடித்துக் கெஞ்சுவது போல் கேட்டாள்.

"முத்துவடிவு! என்ன சொல்கிறாய்? கூடவே கூடாது. பெயரிடப்படுவது இருக்கட்டும்: என்னவர் என்ன செய்து விட்டார் தெரியுமா? காதல், அன்பு, பாசம் எல்லாவற்றையும் மறந்து விட்டார். யானைகள் மீது கங்கை நீரைக் கொண்டு வருகிறார். 'அவர் கோயில் இருக்குமிடம் வருவார்:எல்லையிலேயே வரவேற்போ' என்று எண்ணினேன். ஆனால் பழையாறைக்குப் போய்விட்டதாகச் செய்தி வந்தது. அரிந்தவன் மாதேவிச்சுரம் என்றோ பஞ்சவன் மாதேவிச்சுரம் என்றோ பெயர் வைப்பதில் ஏற்படும் சண்டையை அவரே தீர்க்கட்டும். எனக்கு என்ன

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வேலை இனி? இந்தக் கிராமம் உண்டு: நானுண்டு. என் வாழ்நாளை இங்கே அமைதியாகக் கழிப்பேன். வந்த இரண்டு நாள்கள் எனக்கு பிரமை பிடித்தது போலிருந்தன. சிற்றுளியின் ஓசை கேட்க வில்லை. கற்பாறைகளை ஏற்றி வரும் வண்டிகளின் ஓசை கேட்கவில்லை. மக்களின் பேச்சொலி கேட்கவில்லை. காற்றில் மூங்கில்கள் உராய்ந்து கொள்ளும் ‘சரக் சரக்’ என்ற ஓசை கேட்டுக் கொண்டிருக்கிறது. காற்று ‘விர்விர்’ரென எழுப்பும் ஓசை கேட்டுக் கொண்டிருக்கிறது. எனக்கு ஓர் உதவி செய். எங்கிருந்தாவது ஆசை நாகுவைப் போல் ஒரு பசுவையும் கன்றையும் விலைக்கு வாங்கிக் கொண்டு வந்து கொடு. அதன் துணையுடன் மகிழ்ச்சியுடன் வாழ்வேன். தினமும் நானே சோறாக்கி உண்டு மகிழ்வேன். என் பாதம் நோகுமளவுக்கு முடிந்த போதெல்லாம் நான் கற்ற பதிகங்களுக்கு ஏற்ப, ஆடி ஆடிக் களைத்து மகிழ்வேன். என் உடன்பிறந்தவர் அரசருடனே வருவார். என்னைத் தேடுவார். இந்த உலகில் பற்றும் பாசமும் மிக்கவர் அவரே. அவர் மனம் வருந்துவாரே, வேதனைப்படுவாரே என நினைக்கிறேன்” என்று கூறி விழிகளை மீண்டும் துடைத்துக் கொண்டாள்.

“முத்துவடிவு! மற்றோர் உதவியும் செய்ய வேண்டும். என் உடன்பிறந்தவரைப் பற்றி உனக்குத் தெரியுமல்லவா? மூவேந்த வேளார். இப்போது அரசரின் நம்பிக்கைக்கும் அபிமானத்திற்கும் உரியவர் - அவரைச் சந்தித்து நான் இங்கு இருக்கிறேன் என்று ரகசியமாகச் சொல்லிவிடு. வேறு யாரிடமாவது நான் இங்கிருப்பதைச் சொல்லி விட்டாய் என்றால், நான் இந்தக் கிராமத்திலேயே இருக்க மாட்டேன். கண்காணாத பூமிக்குச் சென்று விடுவேன். என்னை யாரும் கண்டுபிடிக்க முடியாது. அவரிடம் நான் கூறியவற்றை எல்லாம் சொல்லிவிடு.”

பிரிமிப்புடன் பார்த்தாள் முத்துவடிவு. “மூவேந்த வேளாரை எனக்குத் தெரியும். நான் உடனே செய்கிறேன். இப்போதே செல்கிறேன். உன் உடன்பிறந்தார் சொன்னால் நீ ஏற்றுக் கொள்வாயா?” என்றாள்.

முத்துவடிவு சென்ற சில நாழிகை கழித்து மூவேந்த வேளார், வீரம்மாவின் வீட்டிற்கு வந்து கதவை இலேசாகத் தட்டினார். கதவு திறந்து கொண்டது.

தூண் ஒன்றில் சாய்ந்து கொண்டு, விழிகளை மூடியவாறிருந்த வீரம்மாளின் அருகே அமர்ந்த அவள் உடன் பிறந்தான்,“வீரம்மா – வீரம்மா” என்றழைத்தான். வீரம்மாள் திடுக்கிட்டு விழித்தாள். எதிரே தன் அண்ணன் அமர்ந்திருப்பதைக் கண்டு வியப்படைந்தாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“இன்று தான் உங்களை நினைத்தேன். உங்களுக்குப் போனது போக நூறு வயது” என்றாள்.

தங்கையின் கூந்தலை மெல்ல வருடி,“வீரமாதேவி! உன்னை எங்கெல்லாம் தேடுவது? சோழச் சக்கரவர்த்திகள் உன்னைக் காணாமல் மிகவும் சோகமுடன் இருக்கிறார். நீ இங்குதான் இருப்பாய் என்று நான் உறுதியாக எண்ணி ஓடோடி வந்திருக்கிறேன். வா, வீரம்மா! இளவரசி வீரமாதேவியாயிற்றே! மிக மரியாதையுடன் அழைக்க வேண்டும், கிராமத்துக்கு வெளியே உனக்கென்று, ரதம் ஆயத்தமாயிருக்கிறது. வா, போவோம்” என்றார்.

வீரமாதேவி ‘முடியாது’ என்று தலையை அசைத்தாள்.

# 87

# இறைவனின் சித்தம்

பரகேசரி மதுராந்தக சோழ மூவேந்த வேளார் என்ற பெயருக்குள்ள மரியாதை சோழ நாட்டில் மட்டுமன்று: இராசேந்திர சோழ சக்கரவர்த்தி செல்லும் இடங்களில், வெல்லும் போர்க் களங்களிலெல்லாம்கூட, மிக அதிகம் உண்டு.

மூவேந்த வேளார் பிறவியிலேயே அறிவும், ஆற்றலும் மிக்கவர். ஓர் எளிய போர் வீரனாக, பெரிய சக்கரவர்த்தி காலத்தில், படைக் குழுவில் சேர்ந்தார். அவர் அதிர்ஷ்டம் இளம் வயதிலிருந்தே இளவரசராக அப்போதிருந்த இராசேந்திர சோழரின் மெய்க்காப்பாளராகத் திகழ்ந்தார். பதவியின் பெயர் காரணமாக இல்லாமல் மெய்யாகவே இராசேந்திரனின் எல்லாவித நலன்களைக் காப்பவராக இருந்தார். இராசேந்திரன் புகழ் ஓங்க, ஓங்க மூவேந்தரின் பெருமையும், வெளியே புலப்பட்டது. படைத் தலைவராகப் பதவி உயர்வு பெற்றார்.

இராசேந்திர சோழரின் அன்புக்கும், மதிப்புக்கும் பாத்திரமான மூவேந்த வேளாரின் செல்வாக்கைக் கண்டு சிலர் உள்ரப் பொறாமை கொண்டார்கள் என்றாலும்,வெளியே சொல்லப் பயந்து, மற்றவரிடம் பேசுவதைக் கூட உரக்கப் பேசாமல் செவிகளில் மட்டும் கேட்கும்படி பேசுவார்கள்.

“மூவேந்த வேளாரின் அறிவுக் கூர்மையைக் கவனித்தீர்களா? திட்டமிடுவதில் கூட தன் சுய நன்மையை வெளியே தெரியாமல்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

செயல்படுவதைச் சொல்கிறேன்” என்று ஒருவர் பீடிகையுடன் தொடர்வார். அவர் சொல்வதில்உள்ள உண்மையை மற்றவர் எளிதில் புரிந்து கொள்வர். “தன் தங்கையை அரசரிடம் பழகச் செய்து அவளை அந்தப்புரத்தில் சேர்த்ததைத்தானே சொல்கிறாய்?” என்று பேச்சு தொடரும்.

“சக்கரவர்த்திகள் வீரமாதேவி மீது மோகங் கொண்டார் என்று சொல்வதைவிட, பித்தனாக ஆகிவிட்டார் என்று சொல்லலாம்.”

“உண்மைதான். தன் தந்தை எதிர்த்தும், பட்டத்து அரசி எதிர்த்தும், உடன் பிறந்தவள் எதிர்த்தும் அவற்றிற்கெல்லாம் கவலைப்படாமல் கொள்ளிடக் கரைப் பெண்ணைத் தஞ்சை மாளிகையில் கொண்டு உட்கார வைக்கும் அளவுக்கு நம் அரசர் அவள் மோக வலையில் சிக்கிவிட்டாரே!”

“உம்: எவ்வளவோ செய்திகள்! அரண்மனைச் செய்திகள் நமக்கெதற்கு? அந்த வீரம்மாள் விரமாதேவியாகி, சக்கரவர்த்திகளுக்கு மிகவும் பிடித்தமான நாட்டியக் கலையைத் தானும் கற்றுக் கொண்டு அவரை ஆட்டி வைக்கிறாள்.”

“நடனக்கலை இருக்கட்டும். சக்கரவர்த்திகளுக்குச் சிற்பம், சித்திரம், கோயில் ஆகியவற்றில் ஈடுபாடு இருப்பதை மிக நுணுக்கமாக அறிந்த வீரம்மாள், சக்கரவர்த்திகளின் மனத்தை மெல்ல மெல்ல மாற்றினாள். போர்க்களம் செல்லாமல் வீரமாதேவியுடன் நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருப்பார். நான் கேட்கிறேன், நீ மறுமொழி கூறு பார்க்கலாம்: தஞ்சாவூரில் பெரிய கோயில் இருக்கிறது: பிறகு இங்கே காட்டுப் பகுதியில் அதைப் போலவே பெரிய கோயில் ஒன்று எதற்கு?”

“அதுதான் எனக்கும் புரியவில்லை.”

“உனக்கு மட்டுமா, எனக்கும் நாடு நகரத்திலுள்ளவர்களுக்கும் புரியவில்லை.”

“நான் சொல்லட்டுமா? சக்கரவர்த்திகளை நிரந்தரமாகத் தன் பிடியில் வைத்துக் கொள்வதற்காகத்தான்!”

“வைத்துக் கொண்டு....?”

“நாட்டை ஆள்வதையே தன்னுடைய பிடியில் வைத்துக் கொள்ளத்தான்.”

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“தலைநகரத்தைக்கூட தஞ்சாவூரிலிருந்து புதிய நகரத்திற்கு மாற்றிவிடுமாறு தன் யோசனையை அழுத்தமாகச் சொல்லிவிட்டாளாம்.”

“சக்கரவர்த்திகளுக்கு இவையெல்லாம் தெரியாதா? அவருடைய அத்தானும், அக்கையாரும் இல்லாதது சக்கரவர்த்திகளுக்கு மிகவும் உதவியாகி விட்டது. கேட்பவர்களுக்கெல்லாம் சிதம்பரம் சென்று நடராசப் பெருமானை நாள்தோறும் சேவிக்க வசதியாக இருக்கும், புதிய நகரம். விசாலமாக வசதியாக நகரம் அமையும் என்ற சமாதானம்!”

“நகரத்திற்கு என்ன பெயர் தெரியுமா?”

“கேள்விப்பட்டேன் - வீரமாதேவிபுரம், கோயிலுக்கு வீரமாதேவீச்சரம்.”

“அடடா - இதை யாரும் எதிர்க்கவில்லையா?”

“அரசியாரும், மூத்த இளவரசி அரிந்தவன் மாதேவியும் சக்ரவர்த்திகளின் புதல்வர் சிலரும் கடுமையாக எதிர்த்தார்கள். எதிர்த்து என்ன பயன்? நம் சக்ரவர்த்திகள் மிக மரியாதையுடனும், அச்சத்துடனும் வணங்கும் கருவூர்த் தேவர் வீரம்மாவை ஆதரிக்கிறாராம்.”

“போச்சுடா - இனி யாரும் வீரமாதேவியைத் தடுக்க முடியாது.”

“ஆனால், பழையாறையில் போர்க்கொடி உயர்ந்து விட்டது. சக்கரவர்த்திகளின் புதல்வர்கள் மூவரும் வீரம்மாளை எதிர்க்கிறார்கள். அரசியார் பஞ்சவன் மாதேவி, தன் பெயரைத் தான் கோயிலுக்கும், நகரத்திற்கும் இட வேண்டுமென்று அரசரை வற்புறுத்துகிறார்கள். விரம்மாளை சோழநாட்டை விட்டு விரட்டிவிடும் திட்டத்துடன் அனைவருமிருக்கிறார்களாம்.”

“அச்சோ – உனக்குத் தெரியாதா? இரண்டு நாள்களாக வீரம்மாளைக் காணவில்லை.”

“ஏன் காணவில்லை. எங்கே போயிருப்பாள்?”

இந்தப் பேச்சு மிகவும் ரகசியமாக, மெதுவாக மெல்ல மெல்லப் பரவியது. மூவேந்த வேளாரின் செவிக்கும் எட்டியது.

ஊர் அலர் எழுந்தால் அதைத் தடுப்பது அவ்வளவு எளிதன்று. இராசேந்திர சோழ தேவர் நேரே பழையாறைக்குச் சென்று என்னவோ உண்மை. நோய்வாய்ப்பட்டிருக்கும் அரிந்தவன் மாதேவியை முதலில் பார்க்க வேண்டுமென்று அவர் தன் பட்டத்தரசியுடன் சென்றார். கங்கை

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

நீர்க்குடம் சுமந்திருக்கும் யானைகளும், வெற்றிப் புகழைச் சுமந்து வந்திருக்கும் சோழ வீரர்களும் கங்கை விநாயகரும், நகரத்திற்கு வெளியே கொள்ளிடக் கரையில் அமைதியுடன் தங்கியிருந்தனர்.

வீரமாதேவியும் பழையாறைக்கு வந்திருப்பாள் என்று ஆவலுடன் உள்ர எதிர்பார்த்து வந்த இராசேந்திர சோழருக்கும் பெரும் ஏமாற்றம். யாரிடம் கேட்பார்? தன் நம்பிக்கைக்குரிய மூவேந்த வேளாரிடம் மெல்லக் கேட்பார்.

அப்போது தான் மூவேந்த வேளாரும், தன் தங்கையைக் காணவில்லை என்பதை உணர்ந்தார்.

தவித்தார். தடுமாறினார். ஏக்கமுடன் அலைந்தார். “வீரம்மா! எங்கே சென்றுவிட்டாய்? எங்கே உன்னைத் தேடுவது?” என்று புலம்பினார்.

கடைசியில் மூங்கில் துறையின் நினைவுவர அங்கு விரைந்தார்.

வீரமாதேவியைத் தேடி அலைந்தார்.

கொள்ளிடக் கரையோரமாக நடந்தார்.

கடைசியில் தங்கள் வீட்டை அடைந்தார். சோகமே உருவாக அமர்ந்திருந்த வீரம்மாளைக் கண்டார்.

“முடியாது” என்று அழுத்தமாகக் கூறிய தன் தங்கையின் கரத்தை மெல்லப் பிடித்து சோர்வுற்றிருந்த கன்னங்களை மெல்லத் தடவி,“என் கண்ணே, வீரம்மா! இல்லை இல்லை, இளவரசி வீரமாதேவி என்றல்லவா அழைக்க வேண்டும்? பொறுத்தருள் வீரமாதேவி? சக்கரவர்த்தியின் அபிமானம் மிகப்பெற்றவளல்லவா? உன் முடிவை மாற்றிக் கொள்ளம்மா. வெண்ணெய் திரண்டுவரும் போது தாழியை உடைத்த கதையாய் இருக்கிறதே – உன் போக்கு” என்று வாஞ்சையுடனும் உரிமையுடனும் கேட்டார்.

“வெண்ணெயாம் வெண்ணெய்! வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியை உடைத்தவர் யார் அண்ணா? நானா? அழகிய வண்ண விசித்திரமான மட்பானையைச் செய்தேன். அதில் பசும்பால் இட்டுப் பிறகு திரிந்து ஆனதயிரைக் கடைந்தேன். அதில் வரும் வெண்ணெயைத் திரட்டி என்னவருக்கு – அவருக்கு – மட்டுமே தர நினைத்தே இரவு பகல் பாராமல் கடைந்தேன். மோர்த்துமிகள் என் முகத்தில் தெறித்தன. மனத்திலிருக்கும் கற்பனைகளை ஆசையாய்க் கனவு கண்டு கொண்டே மத்துக் கயிற்றை இழுத்து இழுத்துக் கடைந்தேன். தாழியை நான்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

உடைக்கவில்லை அண்ணா! நான் உடைக்கவில்லை. உடைந்த பானையிலிருந்து வழிந்தோடும், சிந்திப் பெருகும் வெண்ணெய் கலந்த மோரை நாயும், நரியும், பூனையும் நக்கிக் குடிக்க நான் பார்த்திருப்பேனா? அதனால் நான் யாரும் அறியாமல் இங்கே வந்துவிட்டேன். அரசிக்கு, இளவரசிக்கு எனனைப் பிடிக்கவில்லை. கோயில் கட்டுவதைத் தடுத்தனர். கட்டி முடிந்த பிறகோ உரிமை கொண்டாட வந்து விட்டனர். என் அவரும் அதற்கு உடந்தை. நான் அங்கிருந்தால் என்னை நாட்டை விட்டே விரட்டி விடுவார்கள். அவர்கள் என்னை ஓட்டும் முன்பே நானே வெளியேறிவிட்டேன் அண்ணா!" என்று கூறும்போது வீரமாதேவியின் குரல் தழுதழுத்தது. கண்ணீர் பெருகியது.

“வீரமாதேவி! என் கண்ணே! உன்னை யார் விரட்ட முடியும்?" அவள் கூடப் பிறந்தவரான மூவேந்த வேளார் அவள் கூந்தலை மெல்லக் கோதினார்.

“யாருக்காக நான் கோயிலைக் கட்டினேனோ அவரே என்னை மறந்து விட்டார்."

“என்ன சொல்கிறாய் வீரம்மா? உன்னை மறக்க யாரால் முடியும்? இன்னும் இரண்டு நாள்கள் வரை நல்ல நாளில்லையாம். சோதிடர் சொல்லிவிட்டார். புதிய நகர எல்லைக்குள் காலெடுத்து வைக்கக்கூடாதாம். அதனால் பழையாறை சென்றார். உனக்குச் செய்தி சொல்லி அனுப்பினாரே? கிடைக்கவில்லையா? பழையாறைக்குள் நுழைந்தவுடனேயே அவர் விழிகள் நாற்புறமும் சுற்றி அலைந்தன. உன்னைத் தேடித்தான்.

“அப்பொழுதே அங்கே பேச்சு, உன்னைக் காணவில்லை என்று. அவர் யாரைக் கேட்பார்? நீ எங்கே சென்று விட்டாய் என்று யாரைக் கேட்பார்? என்னை அழைத்தார். “மூவேந்த வேளார் சொல்லச் சொல்ல, வீரமாதேவி சற்றுச் சமாதானமடைந்தவள் போல் தன் அண்ணனின் முகத்தைப் பார்த்தாள்.

“சித்தர் பழையாறைக்கு வந்தார். அவரும் உன்னைத் தேடினார்."

“தேடட்டும். அவரால் வந்த விளைவுதான். அவர் பெரிய சூழ்ச்சி செய்துவிட்டார் அண்ணா! கோயிலுக்கு என் பெயர், நகரத்துக்கு என் பெயர், ஏரிக்கு என் பெயர் என்று, அரசரிடம் அவர் வற்புறுத்தப் போவதாகச் சொன்னார் அண்ணா! இதென்ன நியாயம்? முன்பே என்னைக் கண்டால் பிடிக்காதவர்களுக்கு இந்தச் செய்தி எரிக்கும்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அண்ணா! நீங்களே சொல்லுங்கள் நான் யார்? நான் என்ன செய்து விட்டேன்? என் பெயரா? ஹும். நான் இங்கிருந்தால் தானே என் பெயரைச் சூட்டுவதற்கு? அண்ணா! இங்கிருந்து போய்விடுங்கள். கேட்பவர்களுக்கு என்னைப் பார்க்கவேயில்லை என்று சொல்லி விடுங்கள்.”

“என்ன பிடிவாதம் வீரம்மா? நீ சின்னக் குழந்தையா? நீ யார் தெரியுமா? சோழ நாட்டின் இளவரசி. மாபெரும் கலைக் கூடத்தைத்தன்னந்தனியாளாய்ப் படைத்த தேவ சிற்பி. யார் பெயரை இட்டால் என்ன? அரசரின் முடிவு என்ன என்று நீ அறிந்தாயா?”

“அரசரின் மனத்தில் என்ன இருக்கிறது என்று யாருக்குத் தெரியும்?”

மூவேந்த வேளார் மெல்லச் சிரித்து “அரசர் மனத்தில் நீதான் இருக்கிறாய். இதில் என்ன சந்தேகம்?” என்றார்.

“அரசரின் மனத்தில் நான்தான் இருக்கிறேன் என்பது உண்மையானால் அவர் கோயிலுக்கும் நகரத்திற்கும் என் பெயரைத்தான் சூட்டுவார். சித்தரின் யோசனை, வற்புறுத்தலும் உடன் சேரும். அது கூடவே கூடாது. எனக்கு ஓர் உறுதி தருவீர்களா? நான் இங்கிருந்து திரும்ப வேண்டுமென்றால் என் விருப்பப்படிதான் கோயில், நகரம், ஏரி இவற்றிற்குப் பெயரிட வேண்டும்.”

“ஓ! அதிலென்ன இடர்ப்பாடு? உன் விருப்பத்தை அரசர் நிறைவேற்றுவார். உன் விருப்பம் என்ன?”

“இராசேந்திர சோழீச்சரமுடையார் திருக்கோயில், இராசேந்திரபுரம், இராசேந்திர பேரேரி” என்று பெயர் சூட்டப்பட வேண்டும் என்பதே என் விருப்பம்.”

மூவேந்த வேளார் சற்று நேரம் மௌனமாயிருந்தார். பிறகு,“இவ்வளவுதானே! நான் அரசரிடம் சொல்கிறேன். புறப்படு” என்று வீரமாதேவியின் கரங்களைப் பற்றினார் எழச் செய்ய.

வீரமாதேவி அவர் கைகளை மெல்ல விலக்கினாள். “அண்ணா! என்னைப் பொறுத்தருளுங்கள். முத்துவடிவு இப்போதுதான் சென்றாள், அரசரை அழைத்துவர. அவர் வரட்டும்.

“வீரமாதேவி! அரசர் பழையாறையிலிருக்கிறார். அங்கே போவோம் புறப்படு.”

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“முடியாது. நான் பழையாறைக்கு வரமாட்டேன். என் இதய தெய்வத்தைச் சந்திக்கும் முன்பு, அரசியாரைச் சந்திக்கச் சொல்வார்கள். அரிந்தவன் மாதேவியாரைச் சந்திக்கச் சொல்வார்கள். என்னால் முடியாது. முதலில் என் இதய தெய்வத்தைத் தான் நான் சந்திப்பேன். அவரை அழைத்துக் கொண்டு புதிய கோயிலைச் சுற்றிக் காட்டுவேன். பெரிய திருச்சுற்றிலுள்ள மாடங்களில் கம்பீரமாக சிற்பிகளின் கைவண்ணத்தால் எழுந்தருளியிருக்கும் இசை வாணிதேவியையும்,விநாயகப் பெருமானையும், திருமகளையும் இன்னும் மிகமிக அற்புதச் சிற்பமொன்றையும் அவருக்குக் காட்டுவேன்.

என் இதயத்தில் இதுவரை அடக்கி வைத்திருந்த, அவருக்குப் பிடித்த பதிகத்தைப் பாடுவேன். ஆடுவேன். நான் பாடி ஆட – அவரும் ஆடுவார். அந்தக் கோலாகலமான இன்ப நிகழ்ச்சிக்குப் பிறகுதான் குடமுழுக்கு விழா. இதற்கு அவர் ஒப்புக் கொள்ள வேண்டும். அவர் சம்மதிப்பாரா?”

வீரமாதேவியின் தூய்மையான அசைக்க முடியாத அன்புடன் கூடிய மனத்தை அவள் சகோதரர் மூவேந்த வேளார் அறிந்து வியந்தார்.

“வீரமாதேவி! உன்னைத் தேடி வரும் என்னுடனேயே அவர் வரத் துடித்தார். நான்தான் தடுத்தேன். அவரை இங்கே அழைப்பது நியாயமில்லை. ரகசியம் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். சோழ சக்கரவர்த்திகள் பழையாறையை விட்டுச் சோகமாகப் புறப்பட்டு, சிதம்பரத்திற்கு வந்து கொண்டிருக்கிறார். கங்கையைக் கொண்டு வந்த வெற்றி வீரர் திருச்சிற்றம்பல முடையாரிடம் உன்னைப் பற்றிப் பிரார்த்தித்துக் கொள்ளப் போகிறார். அம்பலவாணனைத் தரிசித்த பிறகே புதிய கோயிலைக் காணச் செல்வார். உடனே புறப்படு. அரசரை அங்கே சென்று காண்போம்.”

தன் அண்ணன் சொல்வதை ஏற்கும் மனப்பக்குவம் சிறிது ஏற்பட்டது, வீரமாதேவிக்கு.

“சரி: எனக்கு ஓர் உறுதி கூறவேண்டும்.”

“என்ன?”

“புதிய நகரம், கோயிலுக்குச் சோழ சக்கரவர்த்திகளின் பெயரைத்தான் சூட்ட வேண்டும்.”

“உன் பெயரைச் சூட்ட நீ விரும்பாதது போல அவரும் விரும்பாமல் இருக்கலாம்.”

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“அவர் அரசர். அவர் எழுப்பிய கோயிலுக்கு அவர் பெயரைச் சூட்டுவதுதான் மரபு. நியாயம். ஆனால் அவர் மறுத்தால் அங்குதான் ஆபத்து இருக்கிறது. பஞ்சவன் மாதேவீச்சரம் என்றோ அரிந்தவன் மாதேவீச்சரம் என்றோ பெயரிடப்படுமானால் நான் இந்த உலகத்திலேயே இருக்கமாட்டேன்.”

மதுராந்தக மூவேந்த வேளாருக்குக் கடும் கோபம் வந்தது. “அன்புள்ள தங்கையே! அறிவாற்றலில் நீ வளர்ந்து சிறந்துள்ளதாக எண்ணியிருந்தேன். சோழ நாட்டரசிக்கு ஏற்ற அறிவுத் திறன் உன்னிடம் புகுந்திருக்குமென்று நினைத்தேன். நீ இன்னும் சிறு பெண். பச்சைக் குழந்தை. நான் அரசரிடம் சென்று சொல்லி விடுகிறேன்: உங்கள் பாடு, உங்கள் இதயத்து அரசி பாடு என்று. இந்த நாட்டுப் படைத்தலைவர் பதவி எனக்கு வேண்டாம் பிடிவாதம் மிக்க தங்கை எனக்கு இருப்பதற்காக நான் வெட்கப்படுகிறேன். நான் எங்காவது கண்காணாமல் போகிறேன். நீ இந்த கொள்ளிடக் கரையில் தனிமையில் பாடிப் பாடி சமாதியாகிவிடு. காற்றைக் குடி: மண்ணைத் தின்று பிச்சி போல் அலைந்து வேதனைப்படு” என்று கூறி மெய்யாகவே கோபத்துடன் மூவேந்த வேளார் புறப்பட்டார்.

வீரமாதேவி விம்மினாள். விம்மல் ஒலி பலத்தது. அவள்,“அண்ணா!” என்று கூவினாள். ஓடிச்சென்று அவர் கரத்தைப் பற்றினாள்.

“நானும் வருகிறேன் அண்ணா!” விம்மலுக்கிடையே சொன்னாள்.

“வீரமாதேவி! நான் ஒன்று சொல்கிறேன். நம் எண்ணத்திற்கும் முடிவுக்கும் மேல் இறைவனின் சித்தம் என்பது ஒன்று உண்டு. தில்லைக் கூத்தரசர் சபையில் புதிய கோயிலுக்கு இடவேண்டிய பெயர்களைத் திருவுளச் சீட்டெழுதிப் போடுவோம். அதனின்று தேர்ந்தெடுக்கப்படும் பெயரை நீ ஏற்பாயா?”

வீரமாதேவி ஏதும் மறுமொழி கூறவில்லை. அவருடன் மெல்ல நடந்தாள்.

“இறைவன் சித்தம் எதுவானாலும் நான் ஏற்கிறேன்” என்றாள்.

“அப்படிப்பட்ட எண்ணமுடைய நீ சித்தரின் சொல்லை ஏன் கேட்கவில்லை?”

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“சித்தர் - சித்தர்! சித்தர் எனக்குச் சாதகமாகப் பேசுவது எனக்கு ஏற்புடையதாக இல்லை.”

மௌனமாக இருவரும் நடந்தனர். சிவிகையில் ஏறி தில்லைச் சிற்றம்பலம் சென்றடைந்தனர்.

நுழைவாயிலிலேயே கருவூர்ச் சித்தர் நின்று கொண்டிருந்தார்.

அவரைக் கண்டவுடனேயே வீரமாதேவி திடுக்கிட்டாள்.

“அண்ணா! நமக்கு முன்பே இங்கே சித்தர் வந்து விட்டார். சக்கரவர்த்திகளிடம் தன் கருத்தைச் சொல்லியிருப்பார். சக்கரவர்த்திகள் பொல்லாதவர். சித்தர் பேச்சுப்படி நடப்பார். நீங்கள் சொல்வதுபோல் திருவுள நறுக்கெழுதிப் பெயரைத் தேர்ந்தெடுப்பதற்கு இசைவு தருவார். ஆனால் அவர் என்ன செய்வார் தெரியுமா? இரண்டு ஓலைகளிலும் என் பெயரை எழுதிப் போடுவார்” என்று கூறும்போது அவளுக்கு அழுகை அதிகமாக வந்தது.

“ஆமாம்: அப்படித்தான். இதோ பார்! இரண்டு நறுக்குகளிலும் உள்ள பெயரை” அன்று அங்கே திடீரென வந்த சித்தர் ஓலை நறுக்குளில் எழுதப்பட்டிருந்த பெயர்களைக் காட்டினார்.

அதைப் பார்த்த வீரமாதேவியும், மூவேந்த வேளாரும் திகைத்தனர். வியப்புற்றனர். மெய்சிலிர்க்க ஆனந்தக் கண்ணீர் பொங்க அவர்கள் சித்தரை நோக்கினர்.

# 88

# விருப்பு வெறுப்பற்றவன் விருப்பம்

பழையாறை நகரம் விழாக்கோலம் பூண்டிருந்தது. ஒவ்வொரு வீட்டிலும் தங்கள் வீட்டில் நடைபெறும் திருநாள் போன்ற மகிழ்ச்சிக் கொண்டாட்டம் நகர மக்களிடையே ஏற்பட்டுப் பல திங்கள் ஆகிவிட்டன. சக்கரவர்த்திகள் இராசேந்திர சோழ தேவர் வடக்கே சென்றபிறகு, பழையாறை மாளிகை கலகலப்புக் குறைந்து காணப்பட்டது. நகர மக்களிடையேயும் அப்படித்தான் சிறப்புக் குறைந்தது. பழையாறை மாளிகையில் அரச குடும்பத்தினர் வசிக்கத் தொடங்கினர்: அதிகாரிகள் பழையாறையிலிருந்தே ஆட்சிப் பொறுப்பைக் கவனித்தனர். இராசேந்திர சோழரும், வடநாட்டு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

விஜயத்தைப் பழையாறையிலிருந்தே தொடங்கினார்.

பழையாறைக்கு வடமேற்கே காடுகள் அழிக்கப்பட்டு அங்கே கோயில் கட்டப்பட்டு, புதிய நகரமே உருவாகத் தொடங்கியவுடன் மக்கள் புதிய நகரத்திற்குக் குடி புகத் திட்டமிட்டு அங்கே புதிய வீடு கட்ட முனைந்தனர். பழையாறையிலிருந்து பத்து, இருபது பேராக வண்டி கட்டிக்கொண்டு புறப்பட்டுப் புதிய கோயில் உருவாவதைக் காணச் சென்றனர். அகலமான வீதிகளின் இருபுறமும் புதிய வீடுகள் கட்டப்படுவதைக் கண்டனர்.

“நீங்கள் ஒரு தடவை போய்ப் பார்த்து வரவேண்டும். தஞ்சைப் பெரிய கோயிலைப் போலவே மற்றொரு பெரிய கோயிலைக் கட்டி முடித்து விட்டார்கள். சுற்றிலும் பெரிய மதில். பாறைகளையும் கற்களையும் எங்கிருந்து கொண்டு வந்தனர்: சிற்பிகள் எங்கிருந்து வந்தனர், ஏரி வெட்ட, சாலை போட தொழிலாளர்கள் எங்கிருந்து வந்தனர்: வேளாண்மை செய்ய ஆண்கள் சோழநாட்டிலிருக்கிறார்களா? கோயிலைச் சுற்றி வீதிகள். வீதியில் பெரிய, சிறிய மாளிகைகள்: அந்தப்புரங்கள், அரண்மனை யாவும் கட்டப்படுகின்றன” என்று, புதிய நகரத்தைப் போய்ப் பார்த்து வந்தவர்கள் வர்ணித்தார்கள். அவர்களுடைய வர்ணனை கேட்பவர்களையும் உடனே புதிய நகரத்திற்குச் சென்று பார்க்கத் தூண்டியது.

அகலமான வீதிகள்: அங்காடிகள். அயல்நாட்டு வணிகர்கள் இப்போதே பல்பொருள் அங்காடிகளைத் தொடங்கத் திட்டமிட்டனர். சீன நாட்டினர் புதிய புதிய பட்டுத் துணிகளைக் கொண்டு குவிக்கப் போகிறார்களாம். யவனர்கள், சோனகர்கள், காஷ்மீரத்து வணிகர்களும் புதிய நகரத்தில் தாங்களும் வாணிபம் தொடங்க அனுமதியைக் கேட்கப் பழையாறைக்கு வரத் தொடங்கி விட்டார்கள்.

அமைச்சர்களும், அதிகாரிகளும் புதிய நகரத்திற்குச் சென்று கோயில் குடமுழுக்குப் பணியைக் கவனிக்கத் தங்கள் பொழுதின் பெரும்பகுதியை அங்கேயே கழித்தார்கள். அந்த நகரத்திலிருந்து பழையாறை தஞ்சைக்குச் செல்ல சில நாள்கள் பிடித்தன. அதனால் அயல்நாட்டு வணிகர்கள் அதிகாரிகளையோ அமைச்சர் பிரதானிகளையோ குறித்த நேரத்தில் சந்திக்க முடியவில்லை. மூன்று இளவரசர்களும் பழையாறையில் தங்கியிருக்கிறார்கள் என்றறிந்த வணிகர்கள் பழையாறையை அடைந்தனர்.

பழையாறையில் பழைய மாளிகை ஒன்று: புதிதாகக் கட்டப்பட்ட

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

மாளிகை ஒன்று. பழைய மாளிகையில் இளவரசி அரிந்தவன் தேவி இருந்தாள். நோய்வாய்ப்பட்டு சில ஆண்டுகளாக வெளியே வராமல் இருந்தார்கள். அவர்களுக்குப் பூரண ஓய்வு தேவைப்பட்டது. அவரைத் தொந்தரவு செய்யக் கூடாது என்பதற்காக அயலார் ஒருவரையும் அங்கே அனுமதிப்பதில்லை.

கங்கை நீரைக் கொண்டு வந்த சக்கரவர்த்திகளும், அரசியாரும், பழைய மாளிகைக்கே வந்து தங்கினர்.

தந்தையை வரவேற்க இராசேந்திரனின் மூன்று புதல்வர்களும் பழையாறை புதிய மாளிகையில் தங்கினர். அரசி, புதிய மாளிகைக்கே சென்று தங்கினாள். பயணக் களைப்பு தீரப் பல நாள்கள் கழிந்தன.

வணிகர்கள் குழுவினர் புதிய மாளிகையில் இளவரசர்களைச் சந்திக்கக் காத்திருந்தனர். வணிகர்கள் வந்துள்ளனர் என்று அறிந்தவுடன், மூத்த இளவரசர் இராசாதிராசன் அவர்களைச் சந்தித்தார்.

புது நகரத்தில் பட்டுத் துணிகளும், தங்க ஆபரணங்களும் உயர்தர இரத்தினக் கம்பளங்களும் மற்றும் நூதனமாகத் தயாரிக்கப்பட்ட பொருள்களும் விற்கத் தக்க வீதிகளைக் குறிப்பிட்டு அதற்கான அனுமதிகளை வழங்குமாறு அயல்நாட்டு வணிகர்கள் கேட்டுக் கொண்டனர்.

பலமொழி பேசிய வணிகர்கள் கூறுவதை இராசாதிராசனுக்கு அம்மொழி அறிந்த அறிஞர்கள் தமிழில் எடுத்துக் கூறினர்.

அந்த உரையாடலின் போது மற்ற இளவரசர்களும் உடனிருந்தனர்.

இராசாதிராசன், தனக்கு அடுத்த சகோதரனைச் சுட்டிக்காட்டி அறிமுகப்படுத்தி,“சக்கரவர்த்திகளின் இரண்டாவது புதல்வர் இவர் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். இவர் இங்கேயே இருந்து நகர, ஏரி, நிர்மாணத்தைக் கவனித்துக் கொண்டார். நான் பல திங்கள் வடநாட்டில் கழித்து சில நாள்களுக்கு முன்பு திரும்பி வந்தேன். நகர அமைப்பைப் பற்றி எனக்குத் தெரியாது. என் இளவலிடம் தங்கள் வேண்டுகோளையும் யோசனைகளையும் கூறித் தெளிவு பெறுங்கள்” என்றான்.

இராசாதிராசன் பேசும்போது அவனையே இமை கொட்டாமல் சில வணிகர்களும் மற்றவர்களும் பார்த்துக் கொண்டிருந்தனர். இராசேந்திர சோழச் சக்கரவர்த்தியைப் பல ஆண்டுகளுக்கு முன்பு, அவர் இளம்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வயதினராயிருக்கும் போது அவர்கள் பார்த்திருக்கிறார்கள். “அதே தோற்றப் பொலிவு: அதே கம்பீரம். அதே பாவணைகள். குரலில் ஏற்றத் தாழ்வு. சக்கரவர்த்திகளுக்கு ஏற்ற வாரிசு” என்று அவர்கள் தங்கள் மொழியில் மெல்லிய குரலில் சொல்லிக் கொண்டனர்.

தன்னிடம் அனுமதி கேட்குமாறு மூத்தவர் கூறியதை இளையவன் முற்றிலும் எதிர்பார்க்கவில்லை. சற்றுத் தயக்கத்துடன் அனைவரையும் ஒரு முறை பார்த்து,“நகரம் இப்போதுதான் உருவாகிக் கொண்டிருக்கிறது. மக்கள் குடியேறத் தொடங்கியுள்ளனர். சாலைகள் அமைக்கப்படுகின்றன. கோயில் குடமுழுக்கு முடிந்த பின்தான், நகரத்தின் பல பகுதிகளைப் பிரிப்பது,இடஒதுக்கீடு பற்றி முடிவு எடுக்கப்படும். நாங்கள் எதிர்பார்த்ததற்கு மேல் நகரம் நான்கு திசைகளிலும் விரிவடையும் போலிருக்கிறது. சக்கரவர்த்திகள் இருக்கும் போது நாங்கள் முடிவு செய்வது முறையன்று. சக்கரவர்த்திகளைச் சந்தித்துத் தங்கள் கோரிக்கையை அவரிடம் தெரிவிப்பதுதான் முறை” என்றான்.

“சக்கரவர்த்திகள் வந்து விட்டாரா, எங்கே அவரைச் சந்திப்பது?” என்று வணிகர்கள் கேட்டனர்.

“சக்கரவர்த்திகள் பழைய அரண்மனையில் இருக்கிறார். கோயில் குடமுழுக்குத் தொடர்பான பணியில் அவர் ஈடுபட்டிருப்பதால், அவர் தங்களை எப்போது சந்திப்பார் என்பதை என்னால் உறுதி கூற முடியாது. மாளிகை அதிகாரிகளிடம் சென்று கேட்டு உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்” என்று கூறிவிட்டான். சக்கரவர்த்திகளைச் சந்திக்க வணிகர்கள் பழைய மாளிகையை நோக்கிச் சென்றனர்.

மாளிகையில் அரிந்தவன் தேவியார் இருக்குமிடத்திற்கு அரசி அப்போதுதான் வந்திருந்தார். அரிந்தவன் தேவியார் படுக்கையில் சற்றுச் சாய்ந்து உட்காரும் நிலையில் இருந்தார்.

உடல் நலம் குறித்துக் கேட்டறிந்த பிறகு, அரசியாரும் அரிந்தவன் தேவியாரும் சற்று நேரம் வடநாட்டு விஜயத்தைப் பற்றிப் பேசலாயினர். பிறகு பெரிய கோயில் குடமுழுக்குப் பற்றிப் பேசலாயினர்.

“தேதி குறிக்கப்பட்டு விட்டது. சக்கரவர்த்திகள் எங்கு சென்றார் என்று தெரியவில்லை” என்று அரசியார் அரிந்தவன் தேவியாரிடம் சொன்னார்.‘அரசியாருக்குத் தெரியாமல் சக்கரவர்த்தி எங்கு சென்றிருக்க முடியும்? அரசர் தன்னைச் சந்திக்காமல் இருக்கச் சூழ்ச்சி செய்துள்ளாள். ஏதோ தன்னிடம் மறைக்கப் பார்க்கிறாள்’ என்று முடிவு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

செய்த அரிந்தவன் தேவி சற்று ஏளனமான குரலில், அரசியைக் கூர்ந்து நோக்கியவாறு,“கங்கைக்கரை வரையில் சென்ற போதெல்லாம் உடனிருந்த அரசர், பழையாறை வந்தவுடன் ஒருவருக்கும் சொல்லாமல் எங்கே போயிருக்கப் போகிறார்? நீங்களும் அரசரும் ஒன்றாக இங்கே வந்தபிறகு உங்களுடன் தானே அவர்கள் இருந்தார்கள்?” என்று கேட்டாள். அவள் பார்வை கூர்மையாக, பஞ்சவன் மாதேவியரின் இதயத்தை ஆராய்வது போலிருந்தது.

அரிந்தவன் தேவியின் குரலில் இருந்த ஏளனத்தைப் புரிந்து கொண்ட அரசி, தானும் அதற்கு ஏற்பவே சூடாக மறுமொழி கூற விரும்பி,“பல நாள்களாக அரிந்தவன்தேவியைப் பார்க்கவில்லை. சில நாள்களாவது உடனிருப்போம் என்று அரசர் கூறினார். இங்கே இருப்பார் என்ற எண்ணத்துடன் பார்க்க வந்தேன்” என்றாள்.

“ஆங்”– எரிச்சலுடன்,“வடக்கிலிருந்து வந்தவுடன் இங்கே என் உடல் நலம் கேட்க வந்தது உண்மைதான். சிறிது நேரம் தங்கியிருந்தார். நான்கோயிலுக்கும் நகரத்திற்கும் என் பெயரைச் சூட்ட வற்புறுத்தி அவர் மனத்தை மாற்றி விடப் போகிறேன் என்ற எண்ணத்தில், நீங்கள் மிக முக்கிய பணி இருப்பதாக அதிகாரிகளை அனுப்பி அழைத்து வரச் சொல்லி விட்டீர்கள். மறந்து விட்டீர்களா? அவர்கள் என்ன சொன்னார்களோ, ஏது சொன்னார்களோ அப்போதே அரசர் புறப்பட்டு விட்டார். உங்களுக்குப் பயம். நீங்கள் என்ன சொல்லியனுப்பியிருப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும். பஞ்சவன் மாதீச்சரம் என்ற பெயர் இட்டுத்தானாக வேண்டும் என்று வற்புறுத்த அழைத்திருப்பீர்கள்.”

கோபமாகப் பார்த்த அரசி,“நான் ஏன் பயப்பட வேண்டும்? என் பெயரிடுவதாக அவர் எப்போதோ வாக்களித்து விட்டார். ஒருவேளை உன் பிடிவாதத்தால் அதை அவர் மாற்றப் பார்க்கலாம். சக்கரவர்த்திகள் உறுதியளிக்கும் வரை அவரை நகரவிடாமல் நீங்கள் சண்டித்தனம் செய்திருக்கலாம்” என்று சீறினாள்.

அரிந்தவன் மாதேவி விடவில்லை. “என்னிடம் சக்கரவர்த்தி வாக்களித்திருக்கிறார். என் பெயரைத்தான் கோயிலுக்குச் சூட்டப் போகிறார். எங்கள் குலம் சோழ நாட்டிற்கு அரும்பணிகள் செய்திருக்கிறது.”

“எங்கள் குலம் மட்டும் தாழ்ந்ததா? பழுவேட்டரையர்கள் இல்லையென்றால் சோழ வம்சம் ஏது? பெரிய கோயில் ஏது? மூத்த

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சக்கரவர்த்தி அரியணை ஏற எங்கள் முப்பாட்டன் செய்தி உதவியை யார் மறந்தாலும் மக்கள் மறக்க மாட்டார்கள். மூத்தவள் நானிருக்க கோயிலுக்கு உன் பெயரிடுவதா? அரசர் வாக்குறுதியா? ஒருபோதும் நடவாது. மனப்பால் குடிக்காதே.”

இருவரின் சொற்போர் உச்ச நிலையை அடைந்தது. வெளியே வணிகர்கள் காத்திருப்பதாக அதிகாரிச்சி வந்து கூறினாள். அரசி எரிச்சலும் கோபமும் சேர,“வணிகர்கள் என்னை எதற்காகச் சந்திக்க வேண்டும்? இந்த மாளிகையில் நான் இருப்பதாக அவர்களுக்கு எப்படித் தெரியும்? அரிந்தவன் தேவியைச் சந்திக்க வந்திருப்பார்கள். முத்து, பவழ, ரத்தின ஆபரணங்கள் மீது இவளுக்குத்தான் ஆசை. அதற்காக வணிகர்களை வரச் சொல்லியிருக்கலாம். படுத்த படுக்கையிலிருக்கும் இவள் உடுத்திக் கொள்ளப் பட்டாடைகள் தேவைப்பட்டிருக்கலாம்!”

இதைக் கேட்ட அரிந்தவன் தேவியின் கோபம் உச்ச நிலையடைந்தது.

“தேவி! சோழநாட்டு அரசி என்பதால் என்ன வேண்டுமானாலும் பேசலாமா? அதற்கும் எல்லை உண்டல்லவா? எனக்கெதற்குப் பட்டும், பவழமும், முத்தும், கோமேதகமும்? நீங்கள் வேண்டுமானால் வாங்கி அனுபவியுங்கள்” என்று கோபமாகப் பேசினாள்.

“எனக்கெதற்கு?” எங்கள் வடநாட்டு விஜயத்தின் போது அரசர்கள் அளித்த செல்வங்கள் பல பெட்டிகளில் வருகின்றன. அவற்றை அப்படியே பெரிய கோயிலுக்குக் கொடுத்துவிட வேண்டும் என்று அரசரிடம் சொல்லி விட்டேன். செல்வத்தின் மீது பற்று நீங்கிப் பல ஆண்டுகள் ஆகின்றன. எங்கள் பழுவேட்டரையர் குலம் சோழ நாட்டிற்குச் செய்துள்ள தொண்டின் பரிசாக, என்றும் நிலைத்திருக்க பெரிய கோயிலுக்கு, என் பெயர் சூட்டப்பட வேண்டும் என்பதே என் இலட்சியம்” என்று கூறியவள் சற்றுக் கோபம் தணிந்தவளாக,“அரிந்தவன் தேவி! உடல் நலம் குன்றியிருக்கும் உன் மனத்தை நோக வைப்பதில் எனக்கு ஆசை இல்லை. சக்கரவர்த்திகள் இரண்டு நாள்களாக எங்கு சென்றார் என்பது தெரியவில்லை. அவர் இருப்பிடம் அறிந்து செல்ல இங்கு வந்தேன். வீணே ஏன் விவாதம்?” என்று கூறி அமைதி அடைந்தாள்.

அப்போது இளவரசன் இராசாதிராசன் அங்கு வந்தான். வணிகர்கள் வெளியே காத்திருப்பதாகக் கூறினான். அவர்கள் காத்திருப்பதன் காரணத்தையும் தெரிவித்தான்.

“மகனே! நீயே அவர்களிடம் சொல்லி அனுப்பியிருக்கலாம். நகரம்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

முற்றிலும் முடியவில்லை. முடிந்த பிறகும் அங்கே அங்காடிகள் அமைவது, அமைப்பது நம் விருப்பமா? சக்கரவர்த்திகள் கருத்துக்கு மாறாக நாம் ஏதும் செய்ய முடியுமா! சக்கரவர்த்தியைச் சந்திக்குமாறு சொல்லி அனுப்பிவிடு" என்றாள்.

"சக்கரவர்த்திகளை எதிர்பார்த்தே நான் இங்கே வந்தேன்" என்று சொன்ன இராசாதிராசனிடம் அரசியார் தானும் அரசர் இருப்பிடம் அறிந்து கொள்ள வந்திருப்பதாகச் சொன்னாள். அரசர் எங்கு சென்றிருப்பார் என்பதை அறிய அவர்கள் ஆலோசிக்கிலாயினார்.

சோழ அரசி பஞ்சவன் மாதேவியின் எதிரே வந்து வணங்கி நின்றான் ஒரு வீரன். சோழ வீரர்களுக்கான உடையில் அவனில்லை. சோழ அரண்மனையைச் சேர்ந்த ஒற்றன் அவன். பஞ்சவன்மாதேவிக்கு உதவுவதற்கு நியமிக்கப்பட்டவன் அவன்.

அரசி வட திசைக்குச் சென்றிருந்தபோது சோழ நாட்டில் நடைபெறும் - குறிப்பாக புதிதாகக் கட்டப்படும் கோயில், அமைக்கப்படும் நகரம் - ஆகியவற்றில் நடைபெறுவனவற்றைச் சேகரிக்கும் வேலை அவனுடையது. வீரமாதேவியைப் பற்றி அறிந்து. அரசி தங்கியிருக்கும் இடத்திற்கு ரகசியமாகச் செய்தி அனுப்புவது அவன் பொறுப்பு.

சக்கரவர்த்திகள் திடீரென்று பழையாறையினின்று எங்கு சென்றிருக்கிறார் என்பதை அறிய அவனைத் தேடிக் கொண்டிருந்தாள் அரசி. அரசி சொல்வதற்கு முன்பே அவன் இயங்கினான்.

அவனைக் கண்டவுடன் தனியே அழைத்துச் சென்று நடந்தவற்றைக் கேட்டறியலானாள்.

சிதம்பரத்தில் நடைபெற்ற சம்பவத்தை அவன் விவரித்தான். வீரமாதேவியும் சக்கரவர்த்தியும், மூவேந்த வேளாளரும், கருவூர்த் தேவரும் நடராசர் சபையில் இருந்ததையும் ஏதோ ஓலை நறுக்குகளை நடராசர் திருப்பாதத்தில் வைத்து சித்தர் எடுத்ததையும் அவன் கூறினான். அதற்குப் பிறகு அவர்களிடையே மகிழ்ச்சி நிலவியதையும் அவன் தெரிவித்தான்.

"அதற்கு மேல் நான் அங்கே நிற்கவில்லை. என்ன நடந்ததென்று தெரியாது. ஓலை நறுக்கில் எழுதப்பட்டிருந்ததென்ன என்றும் தெரியாது. உடனே விரைந்து இங்கு வந்தேன்" என அவன் விவரித்தான்.

"புதிய கோயிலுக்குப் பெயர்: புதிய நகரத்திற்குப் பெயர் முடிவு செய்ய

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

அவர்கள் சிதம்பரத்தில் கூடியிருக்கிறார்களாம்” என்றும் தான் கேள்விபட்டதை தெரிவித்தான்.

“ஓ! வீரமாதேவி அரசரைச் சந்தித்துச் சிதம்பரத்திற்கு அழைத்துச் சென்று விட்டாளா? கைகாரி. தந்திரசாலி. தன் இளமையை, மயக்க மூலிகையாகப் பயன்படுத்துகிறாள். என்னிடம் தெரிவிக்காமல் அரசர் சென்றிருக்கிறார். பெயரைப் பற்றி அவர்கள் ஏதாவது பேசினார்களா?” அரசி ஒற்றனைக் கேட்டாள். தெரியாது என்பதற்கு அடையாளமாகத் தலையசைத்தான் ஒற்றன்.

“தேவி! அரசர் இருப்பிடம் அறிந்து விட்டேன். சிதம்பரத்தில் வீரமாதேவியுடன் இருக்கிறாராம். கோயிலுக்கும் இறைவனுக்கும் பெயர் சூட்டப்பட்டு விட்டதாம்” என்றான் இராசாதிராசன். கோபமும், ஆத்திரமும் குரலில் கலந்திருந்தன.

“என்ன?” என்ற அதிர்ச்சியுடன் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள் அரிந்தவன் தேவி.

“எனக்குத் தெரியும். அந்த மாயமந்திரக்காரி சித்தரின் உதவியுடன் தன் காரியத்தை நிறைவேற்றியிருப்பாள். இனி எனக்கு இந்த உலகில் என்ன வேலை? இறைவன் என்னை ஏன் இன்னும் வாழ வைத்திருக்க வேண்டும்? என் வாழ்நாளில் ஒரே ஓர் இலட்சியம், காலா காலத்திற்கு நினைவில் இருக்கும்படியாக, கட்டப்படும் புதிய கோயிலுக்கு என் பெயரைச் சூட்ட வேண்டுமென்பது தான் அது. என் ஆசை நிராசையானது”– அரிந்தவன் தேவியின் கண்களிலிருந்து நீர் அருவியாகப் பாய்ந்தது.

“அம்மா – அம்மா – தேவி – தேவி!” என்று இளவரசர்கள் அவளருகே சென்றனர்.

“தாங்கள் வருத்தப்படக்கூடாதம்மா. அரசியாரும் தன் பெயரிடப்படுவதை எதிர்பார்த்தார்கள். எண்ணம் நிறைவேறவில்லை. அதற்காக வருந்துகிறார்களா?” என்று கூறித்தேற்ற முயன்றனர்.

“என்ன சொன்னீர்கள்? நான் வருந்தவில்லை என்று யார் சொன்னது? நான் ஏன் வருந்த வேண்டும்? என் உள்ளம் எரிமலையாகக் கொதிக்கிறது. நான் சீறி எழப் போகிறேன். அரசர் வரட்டும்” என்றாள் கோபத்துடன்.

சுந்தரன் மெல்லக் கேட்டான்: “சோழ அரசி அவர்களே! இப்போது

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சொல்லப் போவதற்கும் பொறுத்தருள வேண்டும். பெரிய கோயிலைக் கட்டியவர் அரசர்,கோயிலைச் சுற்றி நகரத்தைப் படைத்தார் அரசர். அப்போது நீங்கள் எதிர்த்தீர்கள். சிற்றன்னை வீரமாதேவி கோயில் கட்டுவதற்கும் பல தடைகளை விதித்தீர்கள். எந்த உரிமையில் தாங்கள், தங்கள் பெயர் கோயிலுக்குச் சூட்டப்பட வேண்டும் என்று கேட்கிறீர்கள்? ஆசைப்படுகிறீர்கள்? முடிவு செய்ய வேண்டியவர் அரசர். அவர் விருப்பத்தை எதிர்க்க யாருக்கு உரிமை?”

சுந்தரனை எரித்து விடுபவனைப் போல் பார்த்த பஞ்சவன் மாதேவி சீறிப் பாய்பவள் போல் எழுந்து,“என்ன சொன்னாய்? வீரமாதேவி சிற்றன்னையா உனக்கு? அந்த மாயக்காரியின் அழகில் மயங்கி அவளிடம் தவறாக நடந்து கொண்டதற்காக உன் சகோதரனிடம் உதைபட்டு அவள் காலில் விழுந்தாயே, மறந்து விட்டாயா? அவள் உனக்குச் சிற்றன்னையா? கோயிலுக்கு அவள் பெயரைச் சூட்ட நான் சம்மதிக்க மாட்டேன்” என்றாள்.

“இராசாதிராசன் அரசியாரை அமைதிப்படுத்தி,“அரசியார் அவர்களே! அமைதி, அமைதி, நானறிந்த வரையில் தஞ்சையிலுள்ள பெரிய கோயிலுக்குப் பாட்டனார் இராசராசேச்சுரம் என்று பெயரிட்டது போல், இங்கு என் தந்தையால் கட்டி முடிக்கப்பட்ட பெரிய கோயிலுக்கும் இராசேந்திர சோழீச்சரம் என்றுதான் பெயர் சூட்டி அழைக்க வேண்டும். அம்மா! என்னைக் கோபிக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். என் தந்தையின் கரம்பிடித்து பல ஆண்டுகள் உயிர் வாழ்ந்து சொர்க்கம் புகுந்துள்ள முக்கோக்கிழானடிகள், திரிபுவன மாதேவி ஆகியவர்கள் நினைவாக அவர்கள் பெயர்களைச் சூட்டலாம் அல்லவா? யாராவது அதைப் பற்றி நினைத்தார்களா?” என்றான்.

“அப்படியா – தர்ம நியாயம் பேசுகிறாயா? நான்தான் உன் தந்தையுடன் சமமாக அரியணையில் அமர்ந்தவள். நான்தான் சோழநாட்டுச் சக்கரவர்த்தினி. நான்தான் சக்கரவர்த்தியுடன் வடதிசை சென்று, கங்கை நீரைக் கொண்டு வந்தவள். எனக்குள்ள உரிமை வேறு யாருக்கும் கிடையாது, நினைவிருக்கட்டும். சோழர் குடும்பத்தில் குழப்பத்தை ஏற்படுத்த முயலவேண்டாம். என்முன் நிற்காமல் உடனே போய்விடுங்கள்”– அரசியாரிடமிருந்து சொற்கள் கடுமையாகப் பாய்ந்து வந்தன.

அங்கு சிறிது நேரம் அமைதி நிலவியது. இராசாதிராசன் எழுந்தான்.

“அரசியார் அவர்களே! இளவரசியார் அரிந்தவன் தேவி அவர்களே!

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

என்னைப் பொறுத்தருளுங்கள். கங்கைக் கரைக்குச் சென்றவர்களுள் நானும் ஒருவன். தந்தை என்ன சொல்கிறாரோ – அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். வரம்பு மீறி நான் ஏதாவது சொல்லியிருந்தால், பேசியிருந்தால் என்னைப் பொறுத்தருளுங்கள். கோயில் குடமுழுக்குக்கு இன்னும் இரண்டு நாள்களே உள்ளன. அங்கே இன்னும் முடிக்க வேண்டிய பணிகள் பல உள்ளன. இதுவரையில் வீரமாதேவியவர்கள் இரவு பகலாகப் பணிகளை முடித்தார்கள். சில நாள்களாக அவர்களைக் காணவில்லை. எங்கு சென்றார்கள் என்று தெரியவில்லை. சிதம்பரம் சென்றிருப்பதாக இப்போது அறிகிறேன். அவர்கள் வருவார்களோ மாட்டார்களோ – சக்கரவர்த்திகளை நகர எல்லையில் வரவேற்க வேண்டும். வேதியர்களையும், சாத்திர விற்பன்னர்களையும் அமைச்சர் மண்டலத்தாரையும், படைத் தலைவர்களையும், குறுநில மன்னர்களையும், ஊர்ப் பெருங்குடி மக்களையும், வணிகர்களையும் அங்கே குழுமியிருக்கச் செய்ய வேண்டும். சித்தர் பெருமகனாரையும் காணவில்லை. என்ன செய்வதென்றே எனக்குத் தெரியவில்லை. எல்லாம் நல்லதாக முடியவேண்டுமே என்ற கவலை. நான் புறப்படுகிறேன். சக்கரவர்த்திகள் பழையாறைக்கு வந்த பிறகே குடமுழுக்குக்குப் புறப்படுவார்கள். கருணை கூர்ந்து கோபம் தணிந்து, எல்லாவற்றையும் மறந்து அரசருடன் புறப்பட்டு வாருங்கள்" என்று கூறிவிட்டு, இராசாதிராசன், தம்பியாரையும் அழைத்துக் கொண்டு புதிய நகரம் நோக்கிப் புறப்பட்டான்.

பஞ்சவன் மாதேவி அடுத்து என்ன செய்வது என்று புரியாமல் திகைத்தவாறு இருந்தாள்.

நடுப்பகல் தாண்டியவுடன், சோழச் சக்கரவர்த்திகள் இராசேந்திர சோழத் தேவரும், அவருடன் கருவூர்ச் சித்தரும் பழையாறைக்கு வந்தார்கள்.

பஞ்சவன் மாதேவியைச் சந்திக்க, அரசர் அந்தப்புரம் வந்தார். மஞ்சத்தில் கவலை தோய்ந்த முகத்துடன் சாய்ந்தவாறு உட்கார்ந்திருந்தார். பஞ்சவன் மாதேவிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

அரசரைக் கண்டவுடன் பரபரப்புடன் எழுந்து அவரை வரவேற்றாள். பஞ்சவன் மாதேவியையும் உட்காரச் சொன்ன அரசர்,"தேவி! கருவூர்த் தேவர் வெளியே மண்டபத்தில் வீற்றிருக்கிறார். உடனே புறப்படு. வணங்கி ஆசி பெறலாம்" என்றழைத்தார்.

பஞ்சவன் மாதேவி மறுமொழி கூறாமல், சென்றாள். அரசருடன் கருவூர் சித்தரை வணங்கினார்கள். தேவியை ஆசிகூறி வாழ்த்திய சித்தர்:

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“தேவி! உன் மனக் குறை, குழப்பம் எல்லாம் நானறிவேன். அவை உடனே தீர்ந்திருக்கும் என எண்ணுகிறேன். கோயிலுக்கு, பெருவுடையாருக்கு, நகரத்திற்கு – ஏரிக்கு – பெயரைச் சூட்டிவிட்டோம். சிதம்பரத்தில் இறைவன் திருச்சந்நிதியில் ஏற்பட்ட முடிவு. இறைவன் திருவுள்ளம் எப்படியோ அதை ஏற்றுக் கொண்டோம். நீயும் ஏற்றுக் கொண்டு மனநிம்மதியடைவாயாக” என்றார்.

“திருஉளம்தானே, இறைவன் திருவுளம்! ஏன் சுற்றி வளைக்கிறீர்கள் சித்தர் அவர்களே திருஉள நறுக்கை நீங்களே எடுத்திருப்பீர்கள். அதில் ஒன்று சக்கரவர்த்திகளின் பெயராய் இருக்கும் அல்லது வீரமாதேவியின் பெயராய் இருக்கும். அப்படித்தானே? என் பெயர் எழுதினீர்களா?” என்றாள் பஞ்சவன் மாதேவி, ஏமாற்றத்தால் குரல் தழுதழுக்க.

சித்தர் பெரிதாக நகைத்தார். “சோழ அரசியாரே! கலங்காதீர்கள். கவலைப்படாதீர்கள். ஆடவல்லான் திருஉளம் நம் போன்ற மனிதர் தம் எண்ணத்திற்கும் மேலானது. வெறுப்புக்கு அப்பாற்பட்டவன் இறைவன்” என்று கூறி, பெருவுடையாருக்கு, கோயிலுக்கு, நகரத்திற்கு, ஏரிக்கு இறைவன் திருவுளத்தால் இடப்பட்ட பெயரைத் தெரிவித்தார்.

சிறிது நேரம் மௌனமாயிருந்த பஞ்சவன் மாதேவியின் முகம் மலர்ந்தது. ஆனந்தக் கண்ணீருடன் “இறைவன் விருப்பத்தை நான் ஏற்கிறேன்” என்றாள்.

# 89

# இராசேந்திர சோழர் - வீரமாதேவி வாழ்க! வாழ்க!

பெருவுடையாருக்குக் கங்கை நீரைக் கொண்டு குடமுழுக்கு கோலாகலமாக நடைபெற்று பன்னிரண்டு நாள்களுக்கு மேலாகிவிட்டன.

புதிய நகரத்தில் புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் மாளிகையில், முன்னே விரிந்து பரவியிருந்த நந்தவனத்தில் இன்னும் பூஞ்செடிகளும், மரங்கொடிகளும் வளரவில்லை. தேன்னையும், மாவும், நெல்லியும் நடப்பட்டிருந்தன. புச்சைக் கம்பளம் விரித்தாற்போன்றுபசும்புல் வளர்ந்திருந்தது. புல் தரையில் கலைஞர்கள் பலர் ஆங்காங்கே கூடி அமர்ந்து மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டிருந்தனர். சுக்கரவர்த்திகளின்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

வருகையை அவர்கள் எதிர்பார்த்திருந்தனர். அனைவருடன் அமர்ந்து விருந்துண்ண அரசர் அழைத்திருந்தார்.

ஈசான சிவபண்டிதரும் இலகுளீச பண்டிதரும் இராசேந்திர சோழரின் இரண்டாவது திருக்குமாரர் ஆதித்தனும் சக்கரவர்த்திகள் வருகைக்காகக் காத்திருந்தனர். ஆவ்வப்போது நுழைவாயிலைப் பார்ப்பதும், பேச்சில் தாங்கள் விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து பேசுவதுமாக இருந்தனர்.

"திருச்சிற்றம்பல வாணனின் திருவருளை என்னவென்று சொல்லிப் புகழ்வது? புண்டிதரே! துங்களுக்கு நினைவிருக்கிறதா, பழையாறையில் நாம் கூடிப்பேசியது?" என்று ஈசான பண்டிதர் இலகுளீசரை நோக்கிக் கேட்டார்.

"பெரிய கோயில் திருப்பணி எந்தவித இடையூறுமின்றி நிறைவேறியதற்குக் காரணம் திருச்சிற்றம்பலவாணன் அருளல்லாமல் வேறென்ன? சக்கரவர்த்திகள் வீரநாராயண ஏரிக்கரையில் தங்களிடம் கூறியது அப்போது விளையாட்டுப் போலிருக்கிறது. ஆன்றைய நாள் கங்கைக் கரைக்கு யாத்திரை புறப்பட்ட நாள். குங்கை நீரைக் கொண்டு வந்து பெருவுடையாருக்குத் திருமஞ்சனம் செய்விக்கப் போவதாக அன்று கூறிப் புறப்பட்டார். சுக்கரவர்த்திகளால் முடியாதது ஒன்றுமில்லை என்பது எனக்குத் தெரியும். ஏண்ணியதுபோல் கங்கை நீரைக் கொண்டு வந்துவிட்ட அவர் ஆற்றலை என்ன கூறிப் புகழ்வது?"

"எல்லாம் திருச்சிற்றம்பலமுடையான் செயல். ஆவன் அருளில்லாவிட்டால் மாபெரும் செயல்கள் மூன்றும் எப்படி நிறைவேறியிருக்கும்?" என்றார் ஈசான பண்டிதர்.

"மூன்றா? பேரிய கோயில், பெரிய நகரம் - மூன்றாவது எது எனக்குப் புரியவில்லையே?" இலகுளீசர் கேட்டார்.

"பெரிய ஏரி வெட்டி அதில் கங்கை நீரை நிறைக்கப் போவதாக அவரின் திட்டம். இளவரசர் ஆதித்தனும் நானும் ஏரியை வெட்டுவதில் முனைந்திருந்ததை நீங்கள் மறந்துவிட்டீர்கள்" என்று ஈசானர் கூற, இலகுளீசர் "ஆமாம், ஆமாம் - இராசராசர் செய்யாத ஒன்றை அவர் திருமகன் இராசேந்திரன் செய்து விட்டார். முப்பாட்டனார் பராந்தகனைப் போல் அழியாப் பெயர் பெற்றுவிட்டார்" என்றார்.

"ஆனால்...."ஏன்று கூறிச் சற்று நிறுத்தினார் ஈசானர்.

"என்ன சொல்ல வருகிறீர்கள்?"

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“பராந்தக சோழ தேவருக்கு வீரநாராயணன் என்ற மற்றொரு பெயர் உண்டு. அந்தக் கடல் போன்ற ஏரிக்கு அந்தப் பெயரைச் சூட்டினார். புராந்தகர் மறைந்த பிறகும், வீரநாராயண ஏரி என்று இன்றும் அந்த ஏரி அழைக்கப்படும் போது அந்த மாபெரும் மன்னரின் திருப்பெயர் மக்கள் மனத்தில் அழியாத நினைவில் நிற்கிறதல்லவா? ஆனால்…”

“ஆனால் என்ன? சக்கரவர்த்திகள் அமைத்த புதிய ஏரிக்கு இராசேந்திர சோழப் பேரேரி என்றல்லவா பெயர் சூட்டியிருக்க வேண்டும்? ஆல்லது கண்ணும் கருத்துமாக இரவு பகலென்று பாராது ஏரித் திருப்பணியை முன்னின்று நடத்திய நம் இளவரசர் ஆதித்தன் பெயரை இட்டிருக்கலாமல்லவா?”

ஈசானர் இவ்வாறு கூறியதும் இலகுளீசர் மறுமொழி ஏதும் கூறவில்லை. ஆனால் மெல்ல நகைத்தார். “ஏன் நகைக்கிறீர்கள், இலகுளீசரே!”– கேட்டார்.

“ஈசானப் பேரேரி என்றும் பெயரிட்டிருக்கலாம்!”

ஈசானர் முகம் மாறியது.


சிறிது நேரம் அங்கே மௌனம் நிலவியது. ஆவர்கள் பேச்சில் கலந்து கொண்ட இளவரசர் ஆதித்தன்,“பண்டிதர்களே! நானும் அவ்வாறுதான் ஆசைப்பட்டேன். நீங்கள் சொன்னீர்களே இறைவன் திருவுள்ளம் என்று, அதை மாற்ற யாரால் முடியும்? முனிதர் ஒன்று நினைக்க, ஆண்டவன் ஒன்று முடிப்பார்!” என்றபோது, பண்டிதர்கள் இருவரும் திடுக்கிட்டுத் திரும்பினார்கள்.

“ஆமாம், ஆமாம். சிற்றம்பலவாணன் திருவருள் வேறு விதமாக இருக்கும்போது மனிதரின் சிறு ஆசைகள் எப்படி நிறைவேறும்?”என்றார் இலகுளீசர்.

“இளவரசரே! நீங்கள் ஆசைப்பட்டது பிள்ளைப் பிராய ஆசை என்று சொல்லிவிடலாம். நிறைவேறவில்லை என்பதைக் குறையாக ஒருவரும் நினைக்க மாட்டார்கள். ஆனால், அரசியார் பஞ்சவன் மாதீச்சுரம், பஞ்சவன் மாதேவிபுரம் என்று பெயரிட வேண்டும் என்று பஞ்சவன் மாதேவியார் விரும்பியதை என்னவென்று சொல்கிறீர்கள்?” என்று இலகுளீசர் கேட்டார். “அரசியார் தனக்குள்ள உரிமையை நிலைநாட்ட அவ்வாறு விரும்பியுள்ளார். ஆனால், அரிந்தவன்மாதேவி ஆசைப்பட்டதை என்னவென்று சொல்வது?” என்று கூறி மெல்ல நகைத்தார் ஈசானர்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books




Click Here to join our Telegram Group

For free eBooks, join us on Telegram

https://t.me/tamilbooksworld

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“அதுதான் நான் முன்பே சொன்னேனே, எல்லாம் திருச்சிற்றம்பல உடையான் திருவுளம் என்று. அவர்கள் அனைவரையும் விட பல விதங்களில் தகுதியுடைய வீரமாதேவியார் தன் பெயரைச் சூட்டவேண்டும் என்று வற்புறுத்தியதும் எடுபடவில்லை பார்த்தீர்களா?” என்று இளவரசர் ஆதித்தன் சொன்னபோது, அதற்கு மறுமொழி கூற இலகுளீசர் முயன்றபோது, அங்கே பரபரப்பு ஏற்பட்டது. அனைவரும் எழுந்து நின்றனர்.

சுக்கரவர்த்தி இராசேந்திர சோழர் அங்கே வந்து நின்றதை ஒரு கணம் ஒருவரும் கவனிக்கவில்லை. ஒளி கொடுக்கும் தீவர்த்தி தாங்கியவர்களை வாயிற்புறத்தே இருக்கச் செய்துவிட்டு வந்த அரசர் அனைவரையும் அமரச் சொன்னார்.

“ஆதித்தா! ஏன்ன சொன்னாய்? இன்னொரு முறை சொல்லு, உன் சிற்றன்னை வீரமாதேவி – தன் பெயரிட வேண்டும் என்று யாரிடம் வற்புறுத்தினார்கள்?” என்று அழுத்தமான குரலில் கேட்டார்.

“இளவரசர் ஆதித்தன் நடுக்கமுடன் கை கட்டி,“அப்படித்தான் மற்றவர்கள் சொல்லக் கேள்விப்பட்டேன்…” என்று தயக்கத்துடன் சொன்னான்.

இராசேந்திரன் பெரியதாகச் சிரித்தார். “பண்டிதர்களே! காதால் கேட்பதை மெய் போன்று கூறக்கூடாது என்பதை என் பாலகனுக்குக் கற்றுத்தாருங்கள். ஊங்களுக்குத் தெரியும், காட்டுப் பகுதியைத் திருத்தி அங்கே கோயில் எழச் செய்தவள் வீரமாதேவி. குங்கைக் கரைக்குத் தானும் வர ஆசைப்படாமல் தன்னந்தனியாளாக சிற்ப அற்புதங்கள் நிறைந்த பெரிய கோயிலைக் கட்டி முடித்தவள் வீரமாதேவி. கோயில் கட்டும் போதே, வீதிகள் அமைந்தன. வீடுகள் எழுந்தன. மாளிகைகள் கட்டப்பட்டன. ஆதற்கெல்லாம் காரணம் யார்? ஆதித்தன் சொன்னது போல் தன் பெயரிட வேண்டுமென என்னிடம் அவள் வற்புறுத்தியிருந்தால், அவளுடைய கோரிக்கையை, விருப்பத்தை உடனே நிறைவேற்றி இருப்பேன். புண்டிதர்களே! ஊங்களுக்குத் தெரியுமா? கோயிலுக்கும், நகரத்திற்கும், ஏரிக்கும் என் பெயர்தான் சூட்டப்படவேண்டும் என்று வற்புறுத்தியவள் வீரமாதேவி. ஆரசியார் தன் பெயரிட வற்புறுத்தியது உண்மை. ஆனால் திருச்சிற்றம்பலமுடையான் திருச்சந்நிதியில் கருவூர்ச் சித்தர், திருவுள ஓலையை இட்டுப் பார்த்தார். ஆகா – செழுநீர்ப் புனல் கங்கை செஞ்சடைமேல் வைத்த தீவண்ணனுடைய திருவுள்ளம் எவ்வாறு இருந்தது தெரியுமா?

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

“பெருவுடையாரின் திருப்பெயர் கங்கை கொண்ட சோளீசர். நுகரத்தின் பெயர் கங்கை கொண்ட சோழபுரம். ஏரிக்குச் சோழ கங்கம். இவ்வாறு ஓலையில் பெயர் எழுதி இட்டவர் சித்தர்.

“பண்டிதர்களே! ஏன் அருமை மகனே! நீங்கள் அனைவரும் கூறியதுபோல் காட்டைத் திருத்தி நகரமாக்கி, நகரத்தில் பெரிய கோயில் அமைக்க முதல் காரணம் யார் தெரியுமா?”

சக்கரவர்த்தி பண்டிதர்களை நோக்கி இவ்வாறு கேட்டு விட்டு பேச்சைச் சற்று நிறுத்தினார்.

“தஞ்சையில் என் தந்தை பேரரசர் இராசராசர் பெரிய கோயிலைக் கட்டினார். மேல் தளங்கள் இரண்டிலும் அழகிய சிற்பங்களையும், சித்திரங்களையும் படைத்தார். பேரிய லிங்கத்தையும் அமைத்தார். இராசராசேச்சரம் என்று கோயிலுக்குத் தன் பெயரைச் சூட்டினார். ஆதைப் போலவே மற்றொரு கோயிலைக் கட்டும் எண்ணம் அவர் திருக்குமாரனாகிய எனக்கு ஏன் ஏற்பட்டது?”

ஒவ்வொருவரும் வெளியே சொல்ல முடியாத முடிவினை மனத்தில் நினைத்திருந்தனர்.

“தந்தைக்கும் மகனுக்கும் கருத்து வேற்றுமை.”

“தந்தையின் புகழைக் கண்டு மகனுக்குப் பொறாமை. ஆதனால்தான் இராசராசேசரம் பெரிய கோயிலைப் போன்று மற்றொன்று கட்ட முடிவு செய்தார்” என்றெல்லாம் ரகசியமாக ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டனர்.

“கற்றறிந்தவர்களே ஏற்படுத்திக் கொண்ட முடிவு என் செவிகளிலும் வீழ்ந்தது. புட்டத்தரசியும், மற்ற இளவரசிகளும் வீரமாதேவியின் மீது பழியைச் சுமத்துவதற்காக, அவள் மீது அவப்பெயர் ஏற்படுத்துவற்காக, காரணத்தை வீரமாதேவியின் மீது சுமத்தி வாந்திகளைப் பரவ விட்டனர்.

“பண்டிதர்களே! தஞ்சையில் பெரிய கோயில் இருக்கும் போது மற்றொரு கோயில் எதற்கென்று நீங்கள் விவாதித்துக் கொண்டிருப்பது எனக்குத் தெரியும். தஞ்சை தலைநகராக இருக்கும்போது, மற்றொரு பெரிய நகரம் ஏன் என்ற கேள்விக்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான மறுமொழியைக் கூறுவார்கள். துந்தைக்கும் தனயனுக்கும் கடுமையான கருத்து வேற்றுமை என்ற முடிவுக்கே வருவர். ஏவ்வளவு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

தவறான கருத்து! என் தந்தை, சோழ நாட்டின் பொற்காலம் உதயமாகச் செய்தார். அவருடன் கருத்து மோதல் கொள்ளும் அளவுக்கு நானென்ன அவ்வளவு திறமைசாலியா, மேதையா? புண்டிதர்களே! சோழர் குல தெய்வம் திருச்சிற்றம்பலத்தில் நடனமிடும் நடராசப் பெருமான் என்பதை நீங்கள் அறிவீர்கள். நுடராசப் பெருமான் மீது என் தந்தைக்கு எவ்வளவு பக்தி என்பது எனக்குத் தெரியும். ஆடவல்லான் அருளால்தான் சோழநாடு மகோன்னத நிலைக்கு உயர்ந்திருக்கிறது என்பது அவர் திடமான நம்பிக்கை, மூவர் தேவாரப் பதிகங்கள் தில்லைச் சிற்றம்பலத்தில் கிடைத்த பிறகு ஆடவல்லான் மீதுள்ள பயபக்தி மிக அதிகமாகியது. ஓவ்வொரு நாளும் சிதம்பரம் சென்று வரவேண்டும் என்ற ஆவல் அதிகமாகியது.

“ஆனால் முக்கிய நாள்களில் கூட சிதம்பரம் சென்று தரிசனம் செய்வதற்குக் காவிரியும் மற்ற நான்கு கிளை நதிகளும் இடையூறாக இருந்தன. வேள்ளப் பெருக்கெடுத்தோடும் வேளைகளில் பரிவாரங்களுடன் சிதம்பரம் சென்றடைவதற்குப் படும் தொல்லையைச் சொல்லி முடியாது. கோள்ளிடத்தில் எப்போது வெள்ளம் வரும் என்பதே தெரியாது. வேள்ளம் என்றால் தோணிகளிலும், பெரிய படகுகளிலும், ஓடங்களிலும் கூட ஏறிக் கடக்க முடியாத பெரும் சுழிகளுடன் கூடிய வெள்ளம். ஆச்சமயம் ஆற்றைக் கடக்கக் கூடாது என்று சொல்வார்கள். அரசியுடன், என் குடும்பத்தார்களுடன் ஆற்றைக் கடக்க முடியாமல் எவ்வளவு காலம் மறுகரையில் தங்கியிருப்பது? சிதம்பரத்திற்கே தலைநகரத்தை மாற்றி விடலாம் என்று சிலர் யோசனை சொன்னார்கள். நூன் எவ்வளவு நாள்கள் சிந்தித்தேன் தெரியுமா? தஞ்சையிலிருந்து தலைநகரத்தை அங்கே மாற்றி, புதிய நகரம் ஏற்படுத்தி, புதிய நகரத்தின் நடுநாயகமாகக் கோயில் ஒன்று கட்டுவது என்ற முடிவுக்கு வந்தேன். ஆதற்கு மற்றொரு காரணமும் உண்டு. அதை வெளியே சொல்ல இப்போது விருப்பமில்லை. தில்லைச் சிற்றம்பலத்துக்குத் தடையின்றிச் செல்ல ஏற்ற நகரம் அமைக்க விரும்பினேன்.

“அதையும் விட நான் மற்றொரு முக்கிய உண்மையைக் குறிப்பிட்டாக வேண்டும். பெருவுடையார் கோயிலை, சிற்ப அற்புதங்களுடன் படைத்த சிற்பி மாணிக்க சேகரன் இங்கு வந்திருக்கிறார். ஆவரைப் பெரிதும் பாராட்ட வேண்டும். கோயிலிலுள்ள சிற்பங்களில் தெய்வீகத் தோற்றத்தையும் வடிவழகையும் பார்த்தீர்களா? சிற்பியின் கைவண்ணத்தையும் கலைத் திறமையையும் பாடிப் புகழ்ந்து எவ்வளவு பரிசுகள் தந்தாலும் போதா. ஏன் தந்தை சக்கரவர்த்தி கட்டிய இராசராசேச்சுரக் கோயில் சிற்பப் பணியை முடித்த பிறகு சிற்பக்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கலைஞர்களுக்குச் சோழ நாட்டில் வேலையில்லை. கலைஞர்கள் ஒரு கணம் கூட சும்மா இருக்க முடியாது. ஆவர்கள் மதுரையை நோக்கிச் சென்று விட்டனர். சித்தர் அருளால் அவர்கள் மீண்டும் சோழ நாடு திரும்பினர். ஆவர்களுடைய கலைத் தாகம் தீர்க்க ஏற்படுத்தப்பட்டதே இந்தப் பெரிய கோயில். இன்னும் இந்தக் கோயிலில் செய்ய வேண்டிய பணிகள் பல உள்ளன. இந்தப் பெரிய கோயில் கலைஞர்களுக்காகப் படைக்கப்பட்டதென்றும் கூறலாம்.”

இராசேந்திரனின் பக்திப்பூர்வமான இந்த விளக்கம் கேட்டு பண்டிதர்கள் இருவரும், இளவரசன் ஆதித்தனும் தங்கள் மகிழ்ச்சியை, மலர்ந்த முகங்களின் மூலமாக வெளிப்படுத்தினர்.

இளவரசன் ஆதித்தன், சக்கரவர்த்திகளின் காலில் வீழ்ந்து வணங்கினான். இலகுளீச பண்டிதரும்,ஈசானரும் மகிழ்ச்சியுடன் சக்கரவர்த்திக்கு வாழ்த்துக் கூறினர்.

“சக்கரவர்த்திகளே! ஊங்கள் உயர்ந்த உள்ளத்தை நாங்கள் அறிந்தோம். முயன்றிருந்தால் தங்கள் பெயரை ஊரக்கும், கோயிலுக்கும் இட்டிருக்கலாம். ஆதைத் தாங்கள் வற்புறுத்தாதது ஒன்றிற்காகவே தங்கள் பெருமையை இந்த உலகம் என்றும் போற்றும்” என்றனர்.

ஆவர்கள் கூறுவதை ஏற்றுக் கொண்டவர் போல், அரசர் பெருமிதத்துடன் புன்னகை பூத்தார்.

“நாம் பேசிக் கொண்டே இருந்து விட்டோம். நேரமாகிறது. ஊங்களை விருந்துக்கு அழைத்திருந்தேன். அதோ, சிற்பிகளும் மற்றும் கட்டடக் கலைஞர்களும் கூடியிருக்கின்றனர். துங்களையும் காக்க வைத்து விட்டேன்” என்று கூறி அரசர் அவர்களை விருந்து மண்டபத்திற்கு அழைத்தார்.

“இரவில் நாங்கள் ஆகாரம் ஒன்றும் ஏற்பதில்லை: சக்கரவர்த்திகளுடன் சிறிது நேரம் இருந்து அளவளாவி மகிழவே இங்குக் காத்திருந்தோம்” என்றனர்.

சுக்கரவர்த்திகள் யார் வருகையையோ எதிர்பார்த்தவர் போல் வெளிவாயிலைப் பார்த்தவாறு இருந்தார். மேய்க்காவலரை அழைத்து ஏதோ கூறினார்.

“கருவூர்ச் சித்தரைப் பெரிதும் இங்கே எதிர்பார்த்திருக்கிறேன். இன்னும் அரசியையும் இளவரசிகளையும் காணவில்லை” என்றார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சிறிது நேரத்தில் அரசி பஞ்சவன்மாதேவி பணிப் பெண்கள் சூழ அங்கு வந்தார். ஆரிந்தவன்மாதேவி வெளியே வரக்கூடிய நிலையில் இல்லாததால் மாளிகையை விட்டு வரவில்லை.

கருவூர்ச் சித்தரை அங்கே கண்டு வணங்க அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்தனர். வீரமாதேவியையும் எதிர்பார்த்தனர்.

ஆவர்கள் இருவரும் வரக் காணாததால் ஏற்பட்ட ஏமாற்றத்தைச் சக்கரவர்த்திகள் வெளியே புலப்படுத்திக் கொள்ளவில்லை.

அதே வேளையில், சோழ கங்கப் பொன் ஏரிக்கரையில் படகுத்துறையில் புதிதாகக் கட்டப்பட்டிருந்த சிறிய மண்டபத்தில், கருவூர்ச் சித்தர் எதிரே வீரமாதேவி கரங்கூப்பி பணிவுடன் நின்று கொண்டிருந்தாள்.

“தேவரீர்! நூன் முற்பிறவியில் செய்த புண்ணியம் தங்களை இங்கே தரிசித்தது. சுவாமிகள் இன்னும் சில காலம் கங்கை கொண்ட சோழபுரத்தில் தங்கியிருக்க வேண்டும். சுக்கரவர்த்திகளுடைய விருப்பமும் அதுவே” என்றாள் வீரமாதேவி. ஆவள் கண்கள் பனித்திருந்தன.

வீரமாதேவியின் வேண்டுகொளைக் கவனிக்காதவர் போன்று,“வீரமாதேவி! ஏன் பணி முடிந்து விட்டது. நூன் முன்பே கூறியபடி நான் போய் வருகிறேன். பெருவுடையார் கோயிலில் இன்னும் முடிக்க வேண்டியவை பல இருக்கின்றன. இனிமேல் தான் நீ அமைதியாகப் பணியாற்ற வேண்டும். சோளீசருக்கு ஆறகாலப் பூசையை முறையாக நடத்த வேண்டும். நுகர வளர்ச்சியையும் கவனிக்க வேண்டும். ஓவ்வோர் எல்லையிலும் கோயிலொன்றைக் கட்ட வேண்டும். தலைநகருக்கான எல்லாத் தகுதிகளையும் உண்டாக்க வேண்டும்” என்று சொல்லிக் கொண்டே தலையை அசைத்தவாறு எங்கோ பார்த்துத் தனக்குள் மெல்ல நகைத்துக் கொண்டார்.

“சுவாமி! துங்களுக்காக சக்கரவர்த்திகள் மாளிகையில் காத்திருப்பார். சிற்பிகளும், கலைஞர்களும் முக்கியமானவர்களும் தங்கள் ஆசிபெறக் காத்திருப்பார்கள். துங்களைத் தேடி சிற்பக் குடிலுக்கும், நடனப் பள்ளிக்கும் ஓடி ஓடி அலைந்தேன். ஏதோ உள்ளுணர்வு ஒன்று கூறியது, சோழகங்க ஏரிக் கரையில் நீங்கள் இருப்பீர்கள் என்று. தங்களைச் சந்தித்தது, நான் முற்பிறவியில் செய்த புண்ணியம்”– வீரமாதேவி உணர்ச்சி மிகுதியால் குரல் தழுதழுக்கப் பேசிக் கொண்டே நின்றாள்.

“வீரமாதேவி! இராசராசன் மிகுந்த பாக்கியசாலி. ஆவனைவிடப்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

பாக்கியசாலி கங்கை கொண்ட சோளீச்சரத்து சோளீசப் பெருவுடையார். ஏன்னிடமிருந்து பதினோரு பாடல்களைப் பரிசாகப் பெற்று விட்டார்!” என்று கூறிப் பெரிதாகச் சிரித்தார்.

“ஆமாம் சுவாமி! ஏன் கனவெல்லாம், தஞ்சைப் பெருவுடையாருக்குத் தாங்கள் அளித்த பாமாலை போல் கங்கை கொண்ட சோளீசருக்கும் இசைப்பாடல் அளிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டேன்” என்று கூறும்போது, சித்தர்,“யாரை வேண்டிக் கொண்டாய்? ஏன்னை வேண்டினாயா? யாரும் கேட்காமலே நான் பாடினேன்” என்றார். மீண்டும் பெருஞ் சிரிப்பு.

“சுவாமி, சுவாமி! நூள்தோறும் நான் இறைவனைத் துதித்தேன். ‘சிவபெருமானே! ஊன் கோயில் மிகப் பெரியதாக அமைய வேண்டும். ஊன் திருவுருவம் பெரிதாக அமைய வேண்டும். கருவறையின் மேல் விமானம் மேருவைப் போல் உயரமாக அமைய வேண்டும். ஏங்களுக்கு வழிகாட்டிய சித்தர் பெருமான் உன்னைப் புகழ்ந்து போற்றிப் பாட வேண்டும்” என்று வேண்டிக் கொண்டேன். சுவாமி! சோளீசரை வேண்டினால் என்ன, தங்களை வேண்டினால் என்ன?” வீரமாதேவி பணிவுடன் பேசினாள்.

“தஞ்சை இராசராசேச்சரத்துப் பெருவுடையாரைப் போற்றிப் பாடிய இசைப் பாவை நீ அறிவாயா, பெண்ணே? இந்தக் கங்காபுரிக்கில்லாத பெருமை இராசராசேச்சரத்துப் பெருவுடையாருக்குண்டு. அது என்ன தெரியுமா?”– சித்தர் வினவினார்.

வீரமாதேவி திகைத்து நின்றாள்.

“எங்கே அந்தப் பாடலைப் பாடு” சித்தர் குரலில் கட்டளையிருந்தது. ‘தஞ்சையில் பாடப்பெற்ற பதிகத்தை நீ அறிவாயா?’ என்று சோதிப்பது போலும் அவர் குரல் இருந்தது. கணமும் தாமதிக்காமல், முன்றானையை எடுத்துச் செருகிக் கொண்டு வீரமாதேவி பாடி ஆடினாள்.

“நெற்றியிற் கண் என் கண்ணின்நின் றகலா

செஞ்சினில் அஞ்சிலம்(பு) அலைக்கும்

பெற்றிரு வடிஎன் குடிமுழு தாளப்

புகந்தன போந்தன இல்லை

மற்றெனக்கு உறவேன் மறிதிரை வடவாற்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

றிடு புனல் மதகில்வாழ் முதலை

எற்றுநீர்க் கிடங்கில் இஞ்சிசூழ் தஞ்சை

இராசராச சேச்சரத் திவர்க்கே”

என்று திருவிசைப்பாவைப் பாடியவாறு, பாடலின் பொருளுக்கேற்ப விழிகளையும், கரங்களையும் குறிப்பால் உணர்த்தி ஆடினாள்.

வேண் தாடிக்குள், சித்தரின் புன்னகை பளிச்சிட்டது. குரலொலி எழுப்பிய சித்தர்,“பெண்ணே! பாடலின் பொருள் புரிந்ததா?” என்று கேட்டார்.

“எளியவளுக்குச் சிறிது சிறிது புரிந்ததால் என் விழிகளும், கரங்களும் குறிப்புணர்த்தின. தஞ்சை நகரத்தை ஒட்டிச் செல்லும் வடவாற்றின் மதகில் முதலைகள் நீரை வாரி இறைக்கின்றன. அகழிகளோடு கூடிய மதில்களை உடைய தஞ்சை மாநகரில் இருக்கிறது இராசராசேச்சுரம் எனும் கோயில். ஆங்கு எழுந்தருளியுள்ள பெருவுடையாரின் நெற்றியிலுள்ள கண்கள் என் விழிகளிலிருந்து நீங்கா. சிலம்புகள் ஒலிக்கின்ற அவர் பொன் திருவடிகள் என்னை ஆட்கொள்ள என் நெஞ்சினுள் புகந்தன. புகந்தவை மீண்டும் வெளியே வரவில்லை. ஆதலால் அவரைத் தவிர மற்ற உற்றார் உறவினர் எதற்கு?” என்று வீரமாதேவி சொன்னாள்.

கருவூர்ச் சித்தர், தஞ்சை இராசராசேச்சரத்துப் பெருவுடையார் மீது பாடிய பதினோரு பாடல்களையும் முற்றிலும் அவள் அறிவாள். இந்தப் பாடல்களைப் பலமுறை பாடி அரசர் முன் ஆடியிருக்கிறாள்

நாம் எழுப்பிவிருக்கும் கோயிலுக்கும் இதுபோன்று பல பாடல்கள் சித்தரின் பரிசாகக் கிடைக்க வேண்டும்” என்று சக்கரவர்த்திகளிடம் அவள் தன் விருப்பத்தை வெளிப்படுத்தியிருக்கிறாள். ஆதனால் கருவூராரின் சோதனையில் தேறி விட்டாள்.

“சுவாமிகளே! குங்கை கொண்ட சோளீச்சரருக்கு இல்லாத சிறப்பு தஞ்சைப் பெருவுடையார்க்கு உண்டு என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் கோட்டை மதிலை ஒட்டி வடவாறு செல்கிறது. ஆற்று மதகில் முதலைகள் உண்டு. ஆனால் இங்கே கோயிலுக்கு வெகு தொலைவில் தான் சோழ கங்க ஏரி இருக்கிறது. சோழ கங்கத்திலிருந்து வாய்க்கால் வெட்டி, ஏரி நீர் பாய்ந்துவர அகழியில் நீரைச் சேர்ப்போமா? ஆப்போது தஞ்சைக்கு இல்லாத பெருமை, கங்கை கொண்ட சோழபுரத்துக்கு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

ஏற்படும். குங்கை நீர் கோட்டை மதிலில் மோதும் அல்லவா?" என்று வீரமாதேவி கேட்டாள்.

"வீரமாதேவி! இராசராசேச்சரத்துக்கு இல்லாத பெருமையை கங்கை கொண்ட சோளீச்சரத்து விற்றிருக்கும் பெருவுடையாருக்கு நான் ஏற்றிப் பாடவில்லையா?" சித்தர் கேட்டார்.

வீரமாதேவி தலையசைத்தாள். "குடமுழுக்கு நாளிலிருந்து தொடர்ந்து தாங்கள் இசைத்த பாடல்கள் ஒவ்வொன்றும் கோடி பெறும். சோளீசர் பாக்கியசாலி. பதினோரு பாடல்களும் உலகம் உள்ளளவும் வாழும்."

சித்தர் வெளியே புலப்படாமல் புன்னகை புரிந்தார்.

"பாடல்கள் நினைவிருக்கின்றனவா?"

"ஆகா. ஓவ்வொரு நாள் ஒவ்வொரு பாடல். ஆன்று முழவதும் அதே சிந்தனை. இந்த நாள்களில் எவ்வளவு முறைப் பாடிவிட்டேன், ஆடிவிட்டேன்!"

"அப்படியா? ஊனக்குப் பிடித்த பாடலை இசையுடன் பாடு. ஆடிக் கொண்டே பாடு."

**"**குடமுழக்கு அன்று பாடிய பதிகம் பாடட்டுமா**?"**

**"**அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட

அங்ஙனே பெரியநீ சிறிய

என்னையாள் விரும்பி என்மனம் புகந்த

எளிமையை என்றும்நான் மறக்கேன்

முன்னம்மால் அறியா ஒருவனாம் இருவா

முக்கணா நாற்பெருந் தடந்தோள்

கன்னலே தேனே அமுதமே கங்கை

கொண்டசோ ளேச்சரத் தானே**."**

வானை எட்டும் அளவுக்கு உயர்ந்து நின்று சிவபெருமான் திருஉருவத்தை உருவகப்படுத்தினாள். வீரமாதேவி அந்தப் பாடலுடன் ஐக்கியமாகி விட்டாள். குரங்கள் குவிந்து நிற்க அவள் தன்னை மறந்து, சோளீச்சரக் கோயிலை நோக்கி நின்றாள்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சித்தரும் தம்மை மறந்து விழிகளை மூடியவண்ணம் யோக நிலையில் அமர்ந்து விட்டார்.

இராசேந்திர சோழ தேவர் மெய்க்காவலர் சூழ அங்கே வந்து நின்றார்.

வீரமாதேவி தன் நிலை உணர்ந்தாள். சுக்கரவர்த்திகளைப் பார்த்துப் பரபரப்புடன் வரவேற்று வணங்கினாள். ஆரசரிடம் என்ன கூறுவது – நா எழவில்லை.

“சித்தரைத் தேடி அலைந்தேன். நும்மிடமிருந்து விடைபெற்றுச் செல்ல அவர் முன்பே குறிப்பிட்ட நாளை நான் மறக்கவில்லை. இன்று அவர் நம்மை விட்டுப் பிரிந்து செல்லும் நாள். ஆவர் நம்முடனேயே எப்போதும் இருப்பார் என்று நான் நம்பினேன். நும்முடனிருந்து வழிகாட்டி வருவார் என்று எண்ணினேன். ஓவ்வொரு நாளும் அவர் பெருவுடையார் திருச்சந்நிதிக்கு வந்து பாடுவார். முதல் நாள் பாடலைத் தான் இப்போது நீங்கள் கேட்டீர்கள். நூன் ஒவ்வொரு பாடலாகக் கேட்டு மெய் மறந்தேன். பாடும்போது நான் மனத்தில் பதித்துக் கொண்டாலும் உடனே ஓலைச் சுவடியில் அதை எழுதிக் கொண்டேன். தனியே அமர்ந்து படித்துப் பாடுவேன்.”

சித்தர் அவளைப் பாராட்டுவது போல் தலையசைத்து, தன் கரங்களை ஆசி வழங்குவது போல் உயர்த்தினார்.

பிரமிப்புடன் இராசேந்திரன் வீரமாதேவி சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார். இறுதியில் சித்தர் தம்மிடம் விடை பெற்றுக் கொள்வார் என்று எண்ணியிருந்தவருக்கு ஓர் அதிர்ச்சிதான். மேய்க்காவலர்கள் சற்றுத் தொலைவில் நின்றனர்.

வேண்மதி வானின்று களங்கமில்லாமல் புன்னகை புரிந்து கொண்டிருந்தது. நிலவுக் கதிரை ஒட்டி வைத்தது போன்ற தன் தாடியை மெல்ல வருடியவாறு வீரமாதேவி சொல்லி வருவதைச் சித்தர் கூர்ந்து கவனித்து வந்தார்.

வீரமாதேவி தொடர்ந்தாள்: “சக்கரவர்த்திகளே! நீங்கள் பாக்கியசாலி. தில்லைப் பொன்னம்பலவாணனின் பூரண அருள் பெற்றவர். போர்க் களங்களில் பெற்ற வெற்றியின் புகழ் என்றும் நிலைத்து நிற்பதைவிட கங்கை நீரைச் சோழநாட்டிற்குக் கொண்டு வந்தீர்களே, அந்த நிகழ்ச்சி சந்திர, சூரியர் உள்ள அளவுக்கும் அழியாது.

“மற்றொன்று எனக்குத் தோன்றியது. தூங்கள் எழுப்பிய கோயில்,

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

நகரத்தை ஏரியைப் பற்றிய வெற்றிச் செய்தியைப் பட்டயத்தில் பொறித்து வைக்கலாம். ஆவைகூட அழிந்து விடலாம். ஆனால் என்றும் அழியாத சாசனத்தைத் திருச்சிற்றம்பலத்து எம்பெருமான் சித்தர் மூலம் அருளியிருக்கிறார். இசைப் பாடல்கள் ஒவ்வொன்றும் கங்கை கொண்ட செய்தியைச் சொல்கின்றன. ஆகா: நான்காவது நாள் அவர் திருவாய் மலர்ந்து இசைத்த பாடலைக் கேளுங்கள்.

“ஐயபொட் டிட்ட அழகுவாள் நுதலும்

அழகிய விழியும்வெண் ணீறும்

சைவம்விட் டிட்ட சடைகளும் சடைமேல்

தரங்கமும் சதங்கையும் சிலம்பும்

மொய்கொள்எண் திக்கும் கண்டநின் தொண்டர்

முகமலர்ந்(து) இருகணீர் அரும்பக்

கைகள்மொட் டிக்கும் என்கொலோ கங்கை

கொண்டசோ ளேச்சரத் தானே!”

சக்கரவர்த்திகளே! ஊங்களுடைய அன்புக்குரியவள் நான் என்பதைவிட, இளவரசி என்று மற்றவர் அழைப்பதை விட, கங்கை கொண்ட சோளீசர் ஆலயத்துள் என்றும் சிவத்தொண்டாற்றும் பேறு பெற்றேனே, அது அவன் கருணை. சித்தர் பெருமானே! ஏங்களை விட்டுப் பிரியக் கூடாது. ஊங்களை நாங்கள் விடமாட்டோம்” என்று கூறியவாறு, வீரமாதேவி சித்தர் பாதங்களில் வீழ்ந்து,அவர் திருப்பாதங்களைச் சிக்கெனப் பிடித்தாள். இராசேந்திர சோழரும், தன் அங்கங்கள் யாவும் பூமியில் பதியும்படி வீழ்ந்து வணங்கி,“அறியாமல் பிழையேதும் அடியேன் செய்திருந்தால் பொறுத்தருளுங்கள். வீரமாதேவி இங்கு உரிய நேரம் வராவிடில் நான் தங்களைச் சந்திக்க முடியாமல் போயிருக்கும். ஏங்கள் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரியக்கூடாது” என்று கூறி குழந்தை போல் விம்மி விம்மி அழுதார்.

சித்தர் குனிந்து இருவரையும் அன்புடன் தூக்கி,“என் அருமைச் செல்வங்களே! நீங்கள் நீடுவாழ அஞ்செழுத்துடையவன் அருள் உண்டு.

“இங்கு என் பணி முடிந்துவிட்டது. போதிகை மலையில் எனக்கு இறைவன் இட்ட பணி இருக்கிறது. மலையேறி, கானகத்தின் நடுவே மிக அமைதியாகத் தவம் செய்ய வேண்டும். பிறகு அங்கே வரும் மற்ற

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

சித்தர்களுடன் பரிபூரணானந்தத்தை அனுபவித்து மகிழ வேண்டும்.

“சோழ நாட்டிற்கு இனிவரும் பல ஆண்டுகளுக்கு எந்தவித இடர்ப்பாடும் இல்லை. சோழநாடு என்றில்லாமல் மற்ற நாடுகளுக்குச் செல்லும் போது இறைவன் திருப்பணியைச் செவ்வனே செய்து வரவேண்டும். புல ஆண்டுகள் கழிந்து திடீரென்று நான் சோழ நாட்டிற்கு வரக்கூடும். தஞ்சையிலோ, இங்கோ நான் நிரந்தரமாகத் தங்கி, பரிபூரண நிலையை அடையலாம். இப்போது உறுதியாகச் சொல்ல முடியாது. ஏப்போதுமே இன்பம் சூழ்ந்திருக்கும் என்று சொல்ல முடியாது. ஒளியுடன் நிழலுமிருக்க வேண்டும். பேண்களுள் சிறந்தவளாக உலகம் வீரமாதேவியைப் போற்றப் போகிறது.

“நாழிகை ஆகிக் கொண்டே போகிறது. ஊன்துணைவி வீரமாதேவி அபூர்வமானவள். ஊன்னை விட்டுப் பிரியமாட்டாள். மிகப் பெரிய கோயிலையும் நகரத்தையும் சிவபெருமான் அருளிவிட்டார். கோயிலில் தொண்டு செய்பவர்கள் நலனைப் பாதுகாத்து வரவேண்டும். யாருமே வராதபோது இந்தக் கானகப்பகுதியில் நாட்டியக் கலையைக் கற்றுத் தந்தாளே, அந்த மூதாட்டியை மேலும் ஊக்குவித்து, கலையை வளர்த்து வரும் அந்த நாட்டியக் கலைக் கூடத்திற்கு மேலும் ஆதரவு கொடு. இறைவன் முன் நாட்டியாஞ்சலி புரிய பலரை ஊக்குவிக்க உதவி செய். வீரமாதேவி உன்னுடனே இருந்து உற்றுழி உதவுவாள். நேரமாகிறது. நூன் வருகிறேன்” என்று கூறிக் கொண்டே ஏரிக்கரையை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

ஆரசர் அவர் பின் தொடர்ந்து ஓடினார். குரல் தழுதழுக்க,“சுவாமி, சுவாமி! வீரமாதேவி என்றும் என்னுடன் இருப்பாள் என்று ஆசி கூறிவிட்டீர்கள். ஆனால், அவள் எந்தவித சுகத்தையும் என்னிடம் விரும்பாமல் தபஸ்வினிபோல் இருக்கிறாளே! தூங்கள் அவளுக்கு அறிவுரை வழங்குங்கள். ஏன்னுடைய வாரிசை அவள் மூலம் நான் பெறவேண்டும் என்ற ஆசை உண்டு. வீரமாதேவியின் மனத்தை மாற்றிக் கொள்ளச் சொல்லுங்கள். அருள் புரியுங்கள்” என்று கூறும்போது அவர் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக உதிர்ந்தது.

சித்தர் திரும்பி நோக்கினார். ஆவர் பேசுவதற்குள் வீரமாதேவி முந்திக் கொண்டாள். “சுவாமி! ஆப்படியெல்லாம் உத்தரவிடாதீர்கள். நூன் எடுத்த முடிவிலிருந்து மாறிவிட உத்தரவிடாதீர்கள். முனித உடலே கோயில் என்று நீங்கள் அவ்வப்போது சொல்வீர்கள். ஏன் அன்பிற்குரிய சக்கரவர்த்தியின் திருமேனியைக் கோயிலாக எப்போதோ வரித்து விட்டேன். பேரின்ப சுகத்தை அனுபவிக்கும் பாதையில் நான் சென்று

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

கொண்டிருக்கும் போது, அழியக்கூடிய சிற்றின்ப மாயையில் என்னைத் தள்ளிவிடாதீர்கள். "புழவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே வழுவாதிருக்க வரம் வேண்டிய' சிவ பக்தர்களை விடவா நான் உயர்ந்துவிட்டேன்? ஏன் உயிர் மூச்சு உள்ளவரை கங்கை கொண்ட இந்த மாவீரருடனேயே இருந்து தொண்டு செய்து அவருடனேயே மாய்வேன். இது சத்தியம். ஏன் மனம் மாறிவிடச் செய்யாதீர்கள்." வீரமாதேவியும் ஓடிச்சென்று, சித்தர் பாதங்களை மீண்டும் பற்றிக் கொண்டு கதறினாள்.

இருகரங்களையும் தூக்கி சித்தர் ஆசி வழங்கினார்.

"வீரமாதேவி! ஊன் நல்லெண்ணத்துக்கு என்றும் ஊறு விளையாமல் சோழ பூபதி, கங்காபுரிக் காவலன், கங்கை கொண்டு சோளீசர் ஆலயத்தை எழுப்பியவன், இராச கேசரி இராசராசன் திருமகன், சோழ கங்கம் படைத்த பரகேசரி இராசேந்திர சோழ உடையார் நடந்து கொள்வார். ஏன் எதிரே இந்த நகரத்தின் புகழ்க்கொடி இன்னும் நூறு ஆண்டுகளுக்குக் குறையாமல் பறக்கப் போவது தெரிகிறது. ஏல்லாவித நலங்களும் பெற்று நீங்கள் இருவரும் நீடு வாழுங்கள்" என்று கூறித் திரும்பினார். நுடந்தார்.

துன்னை வீரமாதேவியும், இராசேந்திரனும் பின் தொடர்வதை அறிந்து விரைவாக நடந்தார். புயல் போல் நடந்தார். ஏரிக்கரையருகே வந்தார்.

"சுவாமி, சுவாமி! ஆக்கரைக்குக் கொண்டு சேர்க்க அரசுப் படகு ஆயத்தமாக இருக்கிறது" என்று கூறியவாறு ஓடி வந்தனர், அரசரும் வீரமாதேவியும்.

சித்தர் மீண்டும் திரும்பினார். ஆந்த வெண்ணிலவில் வெண்தாடியும், வெள்ளை உடையும் ஒளிவீசின.

குரம் தூக்கி ஆசி வழங்கினார்.

ஏரி நீரின் மேல் நடந்தார். நுடந்தார். நுடந்து கொண்டே இருந்தார்.

தோலைவில், இறுதியாக ஒளி சிறு புள்ளியாக மின் மினியாகத் தோன்றியது. குடைசியில் மறைந்தது.

"கருவூர்ச் சித்தர் புகழ் வாழ்க, சோழ நாட்டிற்கு விரைவில் நீங்கள் வருகைப் புரியப் பிரார்த்திக்கிறோம்." ஏன்று இராசேந்திரனும், வீரமாதேவியும் கரங் குவித்து வேண்டிக் கொண்டனர்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free e-Books

முங்கையோ டிருந்தே யோகுசெய் வானை

வளர்இளந் திங்களை முடிமேல்

கங்கையோ(டு) அணியும் கடவுளைக் கங்கை

கொண்டசோ ளேச்சரத் தானை

அங்கையோ டேந்திப் பலிதிரி கருவூர்

அறைந்தசொல் மலையால் ஆழிச்

செங்கையோ(டு) உலகில் அரசுவீற் றிருந்து

திளைப்பதும் சிவனருட் கடலே.

முற்றும்

Click & Join - https://t.me/tamilbooksworld